உ

கணபதி துணை.

பத்துப்பாட்டு மூலமும்

மதுரை யாசிரியர் டாரத்துவாசி

நச்சினார்க்கினியருரையும்.

இவை

சென்னை

பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய

உத்தமதானபுரம்

வே. சாமிநாதையரால்

பரிசோதித்து,

பலவகை ஆராய்ச்சிக குறிபபுக்களுடன்

சென்னை

கமர்ஷியல அச்சுக்கூடத்திற

பதிப்பிக்கப்பெற்றன.

1918.

(Copy Right Registered.)

இரண்டாம் பதிபபு] [விலை ரூபா. 4-8-0

Formes 1 to 52 Printed at The Presidency Press
and
The remaining portion Printed at the Commercial Press.

இப்புத்தகத்திலடங்கியவை

		பக்கம்.
க. இடம் விளங்காத மேற்கோள் முதலியவற்றின் அகராதி		
உ. இரண்டாம் பதிப்பின் முகவுரை	...	1
ங. முதற்பதிப்பின் முகவுரை	..	5
ச. பாடினோர் வரலாறு	..	15
ரு. பாடப்பட்டோர் வரலாறு	...	22
சு. நச்சினார்க் கினியர் வரலாறு	...	29
எ. இப்பதிப்பில் வந்துள்ள நூற் பெயர்கள் முதலியவற்றின் முதற் குறிப்பகராதி	...	35
அ. பத்துப்பாட்டு நச்சினார்க்கினியருடைய		க - ரு0ச
i திருமுரு காற்றுப்படை	...	க
ii பொருநராற்றுப்படை	...	ருகூ
iii சிறுபாணாற்றுப்படை	...	கூங
iv பெரும்பாணாற்றுப்படை	...	கஉகூ
v முல்லைப்பாட்டு	...	ககூங
vi மதுரைக்காஞ்சி	...	உகக
vii நெடுநல்வாடை	...	ஙஉக
viii குறிஞ்சிப்பாட்டு	...	ஙசரு
ix பட்டினப்பாலை	...	ஙஅக
x மலைபடுகடாம்	..	சகஎ
கூ. மூல அரும்பதவிளக்க அகராதி	...	ரு0ரு
க0. மூல அருந்தொடரகராதி	...	ரூஙங
கக. உரையிற்கண்ட சொற்கள் முதலியவற்றின் அகராதி		ரூசக
கஉ. பிழையும் திருத்தமும்.		ருஅங

இடம் விளங்காத மேற்கோள் முதலியவற்றின் அகராதி.

எண்கள் - பக்க எண்கள்.

அஞ்சுமுகந்தோன்றின், ௫௮.
அணியிழையார்க்கு, ௧௨௮.
அமைச்சர்புரோகிதர், ௨௬௦.
அரிமாசுமந்தவமளி, ௬௨.
ஆடழிக்க, ௨௬௧.
ஆற்றல்சால் கேள்வி, ௩௮௦.
ஆறுசென்றவியர், ௧௦௬.
இக்குதிரை, ௧௨௭.
இடக்கண், ௪௪௭.
இரும்பனைக்கொண்டு, ௮௩.
இன்னமொருகால், ௫௭.
உப்புறைப்ப, ௧௮௧.
உன்னையொழிய, ௫௭.
எண்கோவை, ௨௨.
ஏரியுமேற்றத்தினானும், ௬௨.
கங்குலுநண்பகலும், ௧௬௨.
களமடங்க, ௨௭.
காக்கக்கடவியநீ, ௫௮.
தூவையென்பது, ௪௫.
குன்றமெறிந்ததுவுங், ௫௭.
குன்றமெறிந்தாய், ௫௭.
கொன்றைகருங்காலி, ௭௨.
கோடேபத்தர், ௭௨.
சார்பினாற்றோன்றாது, ௫௬.
சிறுபூளை செம்பஞ்சு, ௩௪௦.
சொல்லென்னும் பூம்போது, ௧௬௩.
ஆயிறுபட, ௧௧௬.
தன்னையுன்னி, ௩௪.
தர்மமுகுடம், ௩௦.
திரைதவுள்வென்வாய், (பெரும்பொருள்விளக்கம்) ௨௦௦.
தூஉஉத்தீம்புகை, ௫௦௨, ௫௦௩.
நக்கீரர்தாமுரைத்த, ௫௮.
நல்லம்பர்நல்ல (ஔவையார் பாடல்,) ௪௧.
நால்விரின் முடக்கி, ௪௭.
நின்குற்றமில்லை, ௩௮௦.
நெடுவரைச்சந்தன, ௧௨௮.
பரங்குன்றிற், ௫௮.
பழுப்புடையிருகை, ௨௬. [௫), ௨௨.
பெரியவரைவயிரங், (அரியவரை கீண்
பைங்கணிளம்பகட்டின், ௩௧௬.
மண்டமரட்ட, ௧௮௦.
முச்சக்கரமும், ௮௩, ௬௨, ௪௧௬.
முருகனே, ௫௮.
முருகுபொருகாறு, ௫௦௪.
வஞ்சியுங்காஞ்சியுந் (பன்னிருபடலம்,) ௨௪௧.
வண்டடைந்த, ௨௧௦.
வாடைநலிய, ௩௪௪.
வீயாவீண்டும், ௪௫௫.
வீரவேல், ௫௭.

உ

கணபதி துணை.

இரண்டாம் பதிப்பின்

முகவுரை.

"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வையை யேட்டிலே தவழந்த பேதை
கருப்பிலே நின்று கீற்றோர் நினைவிலே கடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளரு கின்றாள்"

பத்துப்பாட்டு, பாட்டெனவும் வழங்கும்; (தொல். செய். சூ. ௫௦-பேர்.) இவற்றுள், ஆற்றுப்படைகளாகவுள்ளவை ஐந்து; அவற்றுள் திருமுருகாற்றுப்படையானது திருமுறைகளிற் பதினோராந் திருமுறைப்பிரபந்த வரிசையிற்சேர்க்கப் பெற்றுள்ளது; இது புலவராற்றுப்படையெனவும் கூறப்படும்.

ஆற்றுப்படையென்பது, ஒருவர் ஒருகொடையாளியின்பால் தாம்பெற்ற பெருஞ்செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவரும் அங்கேசென்று தாம் பெற்றவையெல்லாம் பெறுமாறு வழிப்படுத்தல்; ஆறு-வழி; படை-படுத்தல். ஒவ்வொருவரும் இங்ஙனங்கூறுதற்கு உரியோராயினும், கூத்தர்முதலியோரே எதிர்வந்த வறியவர்களாகிய கூத்தர்முதலியவர்களுக்குக்கூறி அவர்களை வழிப்படுத்தியதாகச் செய்யுள் செய்தல் மரபு; தொல்காப்பியப்புறத்திணையியலில், ௩௬-ஆம் சூத்திரத்திலுள்ள, "கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும், ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச், சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்" என்பது இதற்குவிதி; 'ஆடன்மாந்தரும் பாடற்பாணரும் கருவிப் பொருநரும் இவருட் பெண்பாலாராகிய விறலியுமென்னும் நாறபாலாரும் தாம்பெற்ற பெருஞ்செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவரும் ஆண்டுச்சென்று தாம் பெற்றவையெல்லாம் பெறுமாறு கூறிய கூறுபாடும்' என்பது இதன்பொருள். இங்ஙனம் இயறறப் பெற்றவைகள் கூத்தராற்றுப்படை, பாணராற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை எனப்பலவுள்ளன. பத்துப்பாட்டிலன்றி, பதிற்றுப்பத்து, புறநானூறு, புறப்பொருள்வெண்பாமாலைமுதலியவற்றிலும் பிற்காலத்து நூல்களாகிய கலம்பகங்களிலும் இவ்வாற்றுப்படைச்செய்யுட்கள் காணப்படுகின்றன. இவை தனிச்செய்யுளாகவே ஆக்கப்படும்.

பெரும்பாணிருக்கையும்" (மதுரை. ௩௪௨; சிலப. ௫: ௩௭) என்பவாதல், 'பெரும்பாணரென ஒருவகையினருளர்; அவரை ஆற்றுப்படுத்தியது பெரும்பாணாற்றுப்படை' எனவுங் கூறுவதுமுண்டு.

"ஆசிரியப் பாட்டி னளவிற் கெல்லை, ஆயிர மாகு மிழிபுமூன் றடியே" (தொல். செய்.) என்பதனுரையில், "ஆசிரியப்பாட்டின் அளவிற்கு எல்லையாவது சுருங்கினது மூன்றடி; பெருமை ஆயிர மடியாக, இடைப்பட்டன எல்லா அடியானும் வரப்பெறும் எ-று. சுருங்கினபாட்டிற்கு உதாரணம் மேற் காட்டப்பட்டது; பெரிய பாட்டுப் பத்துப்பாட்டுள்ளும் சிலப்பதிகாரத்துள்ளும் மணிமேகலை யுள்ளும் கண்டுகொள்க; 'ஆசிரிய நடைத்தே' என்றதனால் வஞ்சிப் பாவிற்கும் ஆயிரமடி பெருமையாக்கொள்ளப்படும்" என இளம் பூரணரும், "ஆசிரியப்பாவின் பெருக்கத்திற்கு எல்லை ஆயிரமாகும்; சுருக்கத்திற்கு எல்லை மூன்றடியாகும் எ-று. உ-ம்; 'நீலமேனி... முறையே' இது சுருக்கத்திற்கெல்லை: கூத்தராற்றுப்படை தலையள விற்கு எல்லை; மதுரைக்காஞ்சியும் பட்டினப்பாலையுமொழிந்த பாட் டேழும்.....இடையளவிற்கு எல்லை; பாட்டினெல்லையெனாது அளவென்றதனால், அதனியற்றாகிய வஞ்சிக்கும் இவ்வாறே கொள்க...* பட்டினப்பாலை இடையளவிற்கெல்லை; மதுரைக்காஞ்சி தலையளவிற்கெல்லை" என நச்சினார்க்கினியரும் எழுதியிருப்பவை இங்கே அறியற்பாலன.

பட்டினப்பாலை வஞ்சிநெடும்பாட்டென்றுங் கூறப்படும்; இப் புத்தகத்தின் ௩௮௧-ஆம் பக்கம்பார்க்க.

1889-ஆம் வருடத்தில், இந்நூலும் உரையும் முதன்முறை பதிப்பிக்கப்பெற்று நிறைவேறின; பின்பு, திருநெல்வேலியைச் சார்ந்த களக்காடென்னும் ஊரிலிருந்த ஸ்ரீமத் சாமிநாததேசிக ரவர்கள் உதவிய கையெழுத்துமூலப்பிரதியாலும், நாளடைவிற் கிடைத்த சில உரைப்பிரதிகளாலும், பலவகையான ஆராய்ச்சிக ளாலும் இவை சில சில திருத்தங்களையடைந்தன; முன்பு விளங் காமலிருந்தவற்றுட் சில சில விளங்கின.

அவற்றுடன், உரையாசிரியர்களால் இப்பாட்டுக்களிலிருந்து மேற்கோள்களாகஎடுத்தாளப்பட்டிருக்கும் பகுதிகளையும்இடங்களை யும் ஞாபகத்துக்குவந்த அளவு விளக்கியும், ஒத்த பகுதிகளைச் சங்கநூல்களிலிருந்தும் பிற்காலத்து நூல்களிலிருந்தும் மூல அடி யெண்களுடன் ஆங்காங்கு எடுத்துக்காட்டியும், திருமுருகாற்றுப் படைக்குமட்டும் வேறுரையொன்று கிடைத்தமையால அதிற் கண்ட விசேடமான வேறுபாடுள்ள பகுதிகளை அதனுரையில் அங்கங்கே கீழ்க்குறிப்பாகப் புலப்படுத்தியும், மூலத்திற்குரிய அடியெண்களை உரைப்பகுதியில் உரிய இடங்களில் அமைத்தும்; உரையிலுள்ள அருஞ்சொற்களுக்குப்பொருளும் விளக்கமும் எழு

* பத்துப்பாட்டினுள், உ,சு,௯-ஆம் பாட்டுக்களில வஞ்சியடிகள வந் திருப்பினும் உ-வது பாட்டில் அவ்வடிகள் சிலவாகவே வந்திருத்தல் பற்றி அது கூறப்பட்டிலது போலும்.

பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யகவ
விசும்பா றாக விரைசெலன் முன்னி
யுலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீ
ரலைவாய்ச் சேறலு நிலைஇய பண்பே யதாஅன்று

[௩.—திருவாவினன்குடி.]

சீரை தைஇய வுடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்
மாசற விமைக்கு முருவினர் மானி
னுரிவை தைஇய வூன்கெடு மார்பி
னென்பெழுந் தியங்கு மியாக்கையர் [illegible]
பலவுடன் கழிந்த வுண்டிய ரிகலொடு
செற்ற நீக்கிய மனத்தின ரியாவதுங்
கற்றோ ரறியா வறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சிய ரிடும்பை
யாவது மறியா வியல்பினர் மேவாத
துனியில் காட்சி முனிவர் முற்புகப்
புகைமுகந் தன்ன மாசி றாவுடை
முகைவா யவிழ்ந்த தகைசூ ழாகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவி
னல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவல ரின்னரம் புளர

[illegible] 2900); "கோல மார்முர சிடியுமிழ் கழங்கென முழங்க" (சீவக. 2392); இடியார் பணைதுவைப்ப" (பு - வெ உழிஞை 27.)

122. "மணிநிற மஞ்ஞை யோங்கிய புட்கொடி" (பரி. 17); "பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யுயரிய" (அகநா. 149); "மணிமயி லுயரிய மாறு வென்றிப், பிணிமுக வூர்தி யொண்செய் யோனும்" (புறநா. 56.)

125. "வரைவயிறு கிழித்த கிழறிகழ் நெடுவேற், றிகழ்பூண் முருகன் றீம்புன லலைவாய்", "திருமணி விளக்கி னலைவாயச் செருமிகுசேய்" (அகநா. 57, 266); "வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தீ, னெடுவே ணிலைஇய காமர் வியன்றுறை" (புறநா. 55)

127. புரையென்பது மரபுபற்றிவருமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; (தொல். உவம. சூ. 17. இள)

138. "புகைவிரிந் தன்ன பொங்குதுகில்" (புறநா. 398)

140 - 41: "குரலோர்த்துத் தொடுத்த சுகிர்புரி நரம்பு" (மலை. 23)

நோயின் றியன்ற யாக்கையர் மாவி
னவிர்தளிர் புரையு மேனிய ரவிர்தொறும்
பொன்னுரை கடுக்குந் திதலைய ரின்னகைப்
பருமந் தாங்கிய பணிந்தேந் தல்குன்
மாசின் மகளிரொடு மறுவின்றி விளங்கக்
கடுவொ டொடுங்கிய தூம்புடை வாலெயிற்
றழலென வுயிர்க்கு மஞ்சுவரு கடுந்திறற்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள்கொடிச் செல்வனும் வெள்ளேறு
வலவயி னுயரிய பலர்புகழ் திணிதோ
ளுமையமர்ந்து விளங்கு மிமையா முக்கண்
மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனு
நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்
தீரிரண் டேந்திய மருப்பி னெழினடைத்
தாழ்பெருந் தடக்கை யுயர்த்த யானை
யெருத்த மேறிய திருக்கிளர் செல்வனு
நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
வுலகங் காக்கு மொன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவருந் தலைவ ராக
வேமுறு ஞாலந் தன்னிற் றோன்றித்
தாமரை பயந்த நாவி னாழி
நான்முக வொருவற் கட்டிக் காண்வரப்

143-4. "தேமா மேனிச் சில்வளை யாயம்" (சிறுபாண். 176)

145. கடுக்குமென்பது உருவுவமத்தின்கண்வருமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; (தொல். உவம. சூ. 16. பேர்; இ - வி. சூ 642 - உரை)

150-51. "பூவைப்பூ மேனியான் பாம்புண் பறவைக் கொடி" (பு - வெ. பாடாண். 39)

151-2. "ஊர்தி வால்வெள் ளேறே சிறந்த, சீர்கெழு கொடியு மவ்வே றென்ப" (புறநா. 1.)

153-4. "எண்ணார் மும்மதி லெய்த விமையா முக்கண்..... ..பிஞ்ஞக னே" (தே. திருக்கள்ளில், 3), "இமையாத முக்கண் மூவரிற் பெற்றவர்" (த்ருச்சிற். 14)

164-5. "நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த், தாமரைப் பொகுட் டின்" (பெரும்பாண். 463 - 4)

பகலிற் றோன்று மிகலில் காட்சி
நால்வே றியற்கைப் பதினொரு மூவரொ
டொன்பதிற் றிரட்டி யுயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்
தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட
வுருமிடித் தன்ன குரலினர் விழுமிய
வுறுகுறை மருங்கிற்றம் பெறுமுறை கொண்மா
ரந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னா
ளாவி னன்குடி யசைதலு முரிய னதாஅன்

[ச.—திருவேரகம்.]

றிருமூன் றெய்திய வியல்பினின் வழாஅ
திருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
யறுநான் கிரட்டி யிளமை நல்லியாண்
டாறினிற் கழிப்பிய வறனவில் கொள்கை
மூன்றுவகைக் குறிந்த முத்தீச் செல்வத
திருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல
வொன்பது கொண்ட முன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர வுடீஇ
யுச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்
தாறெழுத் தடக்கிய வருமறைக் கேள்வி
நாவியன் மருங்கி னவிலப் பாடி
விரையுறு நறுமல ரேந்திப் பெரிதுவந்
தோகத் துறைதலு முரிய னதாஅன்று

169. "மீன்பூத்தன்னவான்கலம்"

170 - 71. "வளித்தலைஇயதீயும்" (புறநா. 2)

175. "தாவில்கொள்கைத் தந்தொழில்" (முருகு. 89)

177. "அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும்" (தொல். புறத். 20)

181 - 2. "அந்தண ரருங்கட னிறுக்கு முத்தீ", "ஒன்றுபுரிந் தடங்கிய விருபிறப் பாளர், முத்தீ" (புறநா. 2,367)

185 "அட்டானானே குட்டுவன், உச்சிக்கூப்பிய கையினரென்றாற் போல்வன கடைச்சங்கத்திற்கு ஆயினசொற்கள் இக்காலத்திற்கு ஆகாவாயின" (தொல். செய். சூ. 80. ந). வினைக்குறிப்புமுற்று வினையெச்சமாயிற்றென்பதற்கு இவ்வடி மேற்கோள்; (நன் - வி. சூ. 351.)

[நு.—குன்றுதொறாடல்.]

பைங்கொடி நறைக்கா யிடையிடு வேலை
னம்பொதிப் புட்டில் விரைஇக் குளகியொடு
வெண்கூ தாளந் தெரிடு்த கண்ணிய
னறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர் மார்பிற்
கொடுந்தொழில் வல்லிற் கொலைஇய கானவர்
நீடமை விளைந்த தேக்கட் டேறற்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை யயர
விரலுளர்ப் பணிந்த வேறுபடு நறுங்காற்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
யினைத்த கோதை யினைத்த கூந்தல
முடித்த குல்லை யிலையுடை நறும்பூச்
செங்கான் மராஅத்த வாலிணர் சிடையிடு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகா ழல்குல் நினைப்ப வுடீஇ

---

193. "நறுஞ்சாந் தணிந்த கேழ்கிள ரகலம்" (அகநா. 26)

195. "நிருத்தமைவிளைந்த தேக்கட் டேறல்" (மலை. 522), "தாம்பகம் பழுனிய தீம்பிழி" (பதிற். 81), "அம்பணைவிளைந்த தேக்கட்டேறல்" (அகநா. 368), "வாங்கமைப்பழுனியதேறல்" (புறநா. 129)

196 - 7. "தொண்டகப் பறைச்சீர் பெண்டிரொடு விரைஇ, மறுகிற்றூங் குஞ் சிறுகுடிப் பாக்கத்து" (அகநா. 118)

198 - 200. "தண்கயத் தமன்ற கொண்பூங் குவளை, யரும்பலைத்தியற்றிய சுரும்பார்கண்ணி, பின்னுப் புறத்தாழக் கொன்னே சூட்டி" (அகநா. 180), "கூருகிர் விடுத்ததோர் கோல மாலை" (சீவக. 1466)

199. "குண்டுசுனைபூத்த வண்டுபடுகண்ணி, நூலாக்கலிங்கம் வாலரைக் கொளீஇயென்பன, பூத்த பூவான் இயன்றகண்ணி நூலாதநூலான் இயன்ற கலிங்கமென ஒற்றுமையுபமம்பற்றிச் செயப்படு பொருண்மேல் நின்றன" (தொல். வினை. சூ. 37. உ.) இவ்வடி, பெயரெச்சம் செய்வதாதி அதுபொருட் பெயரன்றிப் பிறபெயரெஞ்சின்றதற்கு மேற்கோள்; (நன் - வி. சூ. 340) "தண்டுகில், குண்டு ..... கண்ணி என்றுற்போல ஒற்றுமை யுபமம்பற்றி, நண்ணிய நூலாற் செய்த துகிலென்று கொள்க" (நற்றை. 217 - உரை)

200. "இணைப்புறுபிணையல்" (முருகு. 30)

202. "செங்கான் மராஅத்து" (நற். 148; ஐங்குறு. 381), "மராத்த வாஅன் மெல்லினர்" (அகநா. 127; ஐங்குறு. 383.)

203. "சுரும்புணவிரிந்த பெருந்தண் கோதை" (அகநா. 131)

மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த வாடையன் செவ்வரைச்
செயலைத தண்டளிர் துயல்வருங் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறுமபல் லியததன்
றகரன் மஞ்ஞையன புகரில் சேவலங்
கொடிய னெடியன றொடியணி தோள
னரம்பார்த தன்ன வின்குரற் றொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயன்
மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன்
முழவுறழ் தடக்கையி னியல வேநதி

---

205 "பீலிமஞ்ஞையினியலி" (பெரும்பாண் 331), "நன்மாமயிலின் மென்மெல இயலி" (மது 608), "அணிமயிலனன வசைநடைக்கொடிச்சியை" (ஐங்குறு 258), "மணிமயிற்றொழில்" (பரி), "வருநல மயிலன மடநடை மலைமகள" (தே இடைமருது,), "மயிலெனப போநது" (திருச்சிற் 224), "நடைமயிலே" (பிர 42), "மயில் மகளிர" "கண்டன்ன" (இ-கொ சூ 86, 117 - உரை)

206 "பவழத தனன மேனித திகழொளிக, குனறியேய்க்கு முடுக்கை சேவலங கொடியோன" (குறுந் கடவுள), "உடையு மொலியலுஞ் செய்யை உருவமுருவததீ யொகதி" (பரி 19)

207 (முருகு 31 - ஆம அடிககுறிபபைப் பாாகக), "ஒணபூம பிண்டி யொருகாது செரீஇ" (குறிஞ் 119)

208 "கசசினன கழலினன றேந்தாா மாாபினன" (அகநா 76)

209 "வல்லானென்னும வினைக்குறிப்புமுற்று வினையெசசமாய் நின்றது, எனனை? திருமுருகாற்றுப்படையுள், குழலன் கோட்டன் குறும்பல்லியததனெனபதறகுக குழலையூதிக கோட்டைக குறிததுப் பலலியததை ஒலிப்பித்தென முற்றுவினையை எசசமாக நசசினாாகநினியா கூறியவுரையிற் கண்டு கொள்க" (தஞ்சை 8 - உரை)

210 - 11 "சேவலஙகொடியோன காபப" (குறுந கடவுள) "சேவற் கொடியன தொடியணிதோளன எனத தொடா மொழியீற்றின விகுதி பொருநதியது" (இ - கொ சூ 117 - உரை)

212 "நரம்புமீ திறவா துடனபுணாந தொனறிக, கடவ தறிந்த வின்குரல விறலியா" (மலை 535 - 6), "நரமபாாத தன்ன தீஙகினவியளே" (ஐங் குறு. 185)

215 உறழெனபது மெயயுவமவுருபாயவருமெனபதற்கு இவ்வடி மேற்கோள, (தொல். உவம. சூ. 15. போ)

மென்றோட் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதொ றாடலு நின்றதன் பண்பே யதாஅன்று

[௬.—பழ்முதிர்சோலை.]

சிறுதினை மலரொடு விரைஇ மறிபறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
யூரூர் கொண்ட சீர்கெழு விழவினு
மார்வல ரேத்த மேவரு நிலையினும்
வேலன் றைஇய வெறியயர் களனுங்
காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்புஞ்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பு

214-6. "மைந்த, ரெல்வளை மகளிர் தலைக்கை தரூஉந்து" (புற நா. 24.)

217. "குன்றுதொறு ..... பண்பேயெனத் தொறுவென்பது தான் சார்ந்த மொழிப்பொருட்குப் பன்மையும் இடமாதலும் உணர்த்திநிற்கும்" (தொல். இடை. சூ. 48. சே. ந; இ - வி. சூ. 279 - உரை)

208 - 17. "முருகாற்றுப்படையுள், கச்சினன்கழலினன்..... பண்பே யென்புழி வந்த வினையெச்ச வினைக்குறிப்புமுற்றுக்கள் ஆக்கம்பெற்றுப் பொருளுணர்த்துங்கால், கச்சைக்கட்டிக் கழலையணிந்து கண்ணியைச்சூடிக் குழலையூதிக் கோட்டைக்குறித்துப் பல்லியங்களையெழுப்பித் தகரைப்பின்னிட்டு மயிலையேறிக் கொடியை யுயர்த்து வளர்ந்து தோளிலே தொடியையணிந்து துகிலையுடுத்து எந்தித் தழீஇத்தலைக்கைகொடுத்து ஆடலும் அவற்கு நிலைநின்ற பண்பெனச் செய்தெனெச்சப்பொருளை உணர்த்தி நின்றவாறு காண்க" (தொல். எச்ச. சூ. 63. ந.)

218. "மறிக்குர லறுத்துத் தினைப்பிரப் பிரீஇ" (குறுந். 263), "உருவச் செந்தினை குருதியொடு தூஉய்" (அகநா. 22)

219. வாரணக்கொடி :(முருகு. 38,227). கோழியை வாரணமென்றற்கு இவ்வடிமேற்கோள் ; (தொல். மரபு. சூ. 68 - உரை)

222. "வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும்" (குறுந். 53) "கள நன் கிழைத்து" (அகநா. 22), "வெறியயர் வெங்களத்து வேன்மகன்" (நாலடி. இளமை. 6), "வேலனார் வந்து வெறியாடும் வெங்களத்து" (சில. குன்ற.)

224. "துறைமிசை நின திரு திருவடி தொடுநர்" (சில. குன்ற.) "துறை மிசை - நீர்த்துறையில்; நீர்த்துறையில் நின் திருவடியைச சூளுறுமவரென்க ; யாறுங் குளனுமென்றாராகலின்" (ஷை ஷை அரும்பத.)

225. கடம்பு முருகக்கடவுளுக்கு இடம் : "கடம்பமர் நெடுவேள்" (பெரும்பாண். 75); "கடம்பமர்ந்து.....கடம்பம ரணிநிலை" (பரி. 19), "செல்வக்

மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினு
மாண்டலைக் கொடியொடு மண்ணி யமைவர
நெய்யோ டையவி யப்பி யைதுரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொ ளுருவி னிரண்டுட னுடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதி யொடு விரைஇய நூவெள் ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையற வறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பி னன்னகர் வாழ்த்தி
நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி
யிமிழிசை யருவியொ டின்னியங் கறங்க
வுருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகண்
முருகிய நிறுத்து முரணின ருட்க
முருகாற்றுப் படுத்த வுருகெழு விபனக
ராடுகளஞ் சிலம்பப் பாடிப் பலவுடன்

கடம்பமர்ந்தான்" (ஐந் - ஐம். 1); "செவ்வேள்..... ..மாரஅத்தண் சாயை நின்றணங்கும்" (தஞ்சை. 132); "கடம்பமர் மன்றற் றொங்கற் கந்தனைச் சிந்தை செய்வாம்" (திருவால. கடவுள். 18)

228. நெய்யோ டையவி யப்பி: "ஐயவி யப்பிய நெய்யணி நெடுநிலை" (நெடு. 86); "நெய்யோ டிமைக்கு மையவித் திரள்காழ்" (நற். 370); "ஐயவி யப்பிய நெய்யணி முச்சி" (மணி. 3. 134)

229. "குடந்தம் பட்டுச் சூழ்போந்து குழைந்து வழுத்தி" (கூர்ம. தக்கன்வேள்வி. 52.)

233. "குருதிச்செந்தினைபரப்பி" (முருகு. 242)

232-3. "மல்லன் மன்றத்து மதவிடை கெண்டி" (பெரும்பாண். 143); "விடையும் வீழ்மின்" (புறநா. 262)

234. "அறிதல் வேண்டுமெனப் பல்பிரப் பிரீஇ" (அகநா. 242)

232-4. "பலிகொடுத் துருவச் செந்தினை குருதியொடு தூஉய்" (அகநா. 22); "கொழுவி டைக்கறை விராவிய பலிக்குறை நிரப்பி, வழுவில் பல்பிரப் பிரீஇவெறியாட்டயர் மன்றத்து" (தணிகை. நாடு. 46)

245. "வெறியயர் வியன்களம் பொலிய வேத்தி" (அகநா. 242.)

கோடுவாய் வைத்துக் கொடுமணி மியக்கி
போடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
வாண்டாண் டுறைதலுள் மறிந்த வாறே
யாண்டாண் டாயினு மாக காண்டக
முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
யைவரு ளொருவ னங்கை யேற்ப
வறுவர் பயந்த வாறமர் செல்வ
வால்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகண் மகனே மாற்றேர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ

236-45. "கனைஎரி யிழைத்துக் கண்ணி சூட்டி, வளைகர் நிலம்பப் பாடிப் பலிகொடுத், தருவ செய்தினை குருதியொடு தூஉய், முருகாற்றுப் படுத்த வுரு கெழு நடுகல்" (அகநா. 22.)

247. பிணிமுகம் - முருகக்கடவுளின்ஊர்தியாகிய யானை: "சேயுயர் பிணிமுக மூர்ந்து" (பரி. 5); "பிணிமுக வூர்தி யொண்செய் யோனும்" (புறநா. 56.); "பிணிமுக மஞ்ஞை செருமுகத் தேந்திய, மூவிரு திருமுகத் தொருவே லவற்கு" (கலி. 7. மயிலேறும்.)

246-7. "தழும்புகிள் ளியகறங்குக் கைதொழு, தருகெழு நெய்ப்பின் முருகு மணத்தரீஇக், கடம்புங் களிறும் பாடி" (அகநா. 138)

248. வேண்டுநர் வேண்டியாங் கெய்தல்: "வேண்டிய வேண்டியாங் கெய்தலால்" (குறள், 265); "வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்", "மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய் நீயே" (தே. மறைசை. ஐயாறு)

251. "முகனமர்ந் தின்சொலளைஇ" (குறள, 92) 'முகமலர்ந் தேத்தி' எனறும் பாடம்.

253. "சிவந்தோங் கிமயத்து நீலப் பைஞ்சுனை" (பரி. 5.)

256. ஆல்கெழு கடவுட் புதல்வ: "ஆலமர் செல்வ னணிசால் பெரு விறல்" (கலி. 81); "ஆலமர் செல்வன் புதல்வன்" (சில. குன்ற.) "ஆலமர் செல்வன் மகன்" (மணி. 3. 144).

257. மலைமகண்மகனே: "மலைமகண் மகனே" (சில. குன்ற.) "மலை மகண் மகனே மாற்றேர் கூற்றே யென்றற்றொடக்கத்தன காரணக்குறியாக் கொடர்ந்தன" (நன் - வி. சூ. 275)

258. கொற்றவை சிறுவ: "சேய் பயந்த மாமோட்டுத், தணங்கையஞ் செல்விக்கு" (பெரும்பாண். 158 - 9)

விழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவிற் றானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவி லொருவ பொருவிறன் மீள்ள
வந்தணர் வெறுக்கை யறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ மைந்த ரேறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
சூன்றங் கொன்ற சூன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே
யரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக
நசையுநர்க் கார்த்து மிசைபே ராள
வலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றா டகலத்துப்
பரிசிலர்த் தாங்கு முருகெழு நெடுவேளள்
பெரியோ ரேத்தும் பெரும்பெய ரியவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசி லெனப்பல
யானறி யளவையி னேத்தி யானாது
நின்னளந் தறிதன் மன்னுயிர்க் கருமையி
னின்னடி யுள்ளி வந்தனெ னின்னொடு
புரையுந ரில்லாப் புலமை போயெனக்

---

261. புலவ: "புலமையோய்" (முருகு. 280)

267. "விண்பொரு நெடுவரைப் பரிதியின்" (முருகு. 299). குறிஞ்சிக் கிழவ: "குறிஞ்சிக் கிழவனென் றோதுங் குவலயமே" (கந்தரலங்காரம், 5.)

269. பெரும்பெயர்: "பெரும்பெய ரியவுள்" (முருகு. 274); "பெரும் பெயர்ப் பிரமன்" (சீவக. 207), "பெரும்பெயர்க் கடவுளிற் கண்டு" (சிவ-போ. சிறப்பு.), "பெரும்பெய ரேபெய ராக வந்த, வொருவாய்மை தன்னை நினையினு முள்ள முருகுவதே" (பஞ்சாக்கர. 5)

271. அலந்து, இடுக்கண்பட்டென்பதற்கு இவ்வடி மேற்கோள்; (நஞ்சை. 352 - உரை)

272. "மண்டமர் பலகடந்து" (கலி. 1.)

275. "சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேற், சீர்மிகு முருகன்" (அகநா. 59)

279 - 80. நின்னொடு புரையுந ரில்லாப் புலமையோய்: "நின்னாவார் பிற ரின்றி நீயே யானாய்" (தே. தனித்திருத்தாண்டகம், 7.)

குறிக்கது மொழியா வனைவயிற் குறித்துடன்
வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர்
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி
யளியன் றானே முதுவா யிரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென
வினியவு நல்லவு ணினிபல வேத்தித்
தெய்வஞ் சான்ற திறல்விளங் குருவின்
வான்றோய் நிவப்பிற் றான்வந் தெய்தி
யணங்குசா லுயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் தினாலங் காட்டி
யஞ்ச லோம்புமதி யறிவனின் வரவென
வன்புடை நன்மொழி யளை இ விளிவின்
றிருணிற மூங்கீர் வளை இய வுலகத்
தொருநீ யாகித் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசி னல்குமதி பலவுடன்

---

281. "நிலை மொழியா வனைவ" (சிறுபாண். 235)

283. "சாறயர் களத்தின் வீறுபெறத் தோன்றி" (சில. 6. 162)

282 - 3. "சாறுகொண்ட களம்போல, வேறுவேற பொலிவு தோன்ற" (புறநா. 22).

284. "முதுவா யிரவல" (சிறுபாண். 40.), "செல்லு முதுவா யிரவல" (பதிற். 66.)

290. "பூவந்த வுண்கண் பொறிக்கென்று - மேவித்தன், மூவா வின லங் காட்டி" (சில. 9. 34 - 5.); "அறமுகமில்லே" என்றற் றொடக்கத் திற்கு இவ்வடி உதாரணமாகக் காட்டப்பெற்றது; (மேற். குன்ற. அரும்பத)

292. அன்புடை நன்மொழி: "ஈரன்மொழி", "ஓர்வ நன்மொழி" (சிறுபாண். 93, 99)

294. 'ஒருநீயாக' என்றும் பாடம்.

294 - 5. இவ்வடிகள், "இன்மை புரைத்தற் கதுநினைக்க லாற்றுக் காற், றன்மெய் துறப்பான் மலே" என்பதற்கு மேற்கோள்; (கலி. 43 - உரை.)

63 - 295. "முருகாற்றுப்படையுள், புலம்பிரிந்துறையும் சேயடி யெனக் கந்தழிகூறி நின்னெஞ்சத்து இன்னளை வாய்ப்பப் பெறுதியெனவும் கூறி அவனுறையுமிடங்களுங்கூறி ஆண்டுச் சென்றால் .அவன் விழுமிய பெற வரும் பரிசில் நல்குமெனவுங்கூறி ஆண்டுத் தான் பெற்ற பெருவளம் அவனும் பெறக் கூறியவாறு காண்க. இதனைப் புலவாற்றுப் படையென்ற உய்த்துணர்ந்து பெயர்கூறுவார்க்கு முருகாற்றுப்படையென்னும் பெயரன்றி அப்பெயர் வழக்காமையான் மறுக்க. இனி, முருகாற்றுப்படையென்பதற்கு முருகன்பால் வீடுபெறுதற்குச் சமைந்தானோர் இரவலனை ஆற்றுப்படுத்ததென்பது பொருளாகக்கொள்க" (தொல். புறத். சூ. 36. ந.)

வேறுபஃ றுகிலி னுடங்கி யகில்சுமந்
தார முழுமுத லுருட்டி வேரற்
பூவுடை யலங்குசினை புலம்ப வேர்கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியிற் றொடுத்த
தண்கம ழலரிறால் சிதைய நன்பல
வாசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமல ருதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுத
லிரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முததுடை வான்கோடு தழீஇத தத்துற்று
நீன்பொன் மணிநிறங் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமுத றுமியத் தாழை
யிளநீர் விழுக்குலை யுதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை யிரியக் கேழலொ
டிரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன
குரூஉமயி ரியாக்கைக் குடாவடி யுளியம்
பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்
டாமா நல்லேறு சிலைப்பச் சேணின்
றிழுமென விழிதரு மருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

---

296. அருவிக்குத் துகில் உவமை: "அறுவைத, தூவிரி கடுப்பத துவன்றி மீமிசைத், தண்பல விழிதரு மருவி" (புறநா. 154)

297. ஆரமுழுமுதல் : "வாழை முழுமுதல்" (முருகு. 307)

300. அலர்தல் - பரத்தலென்பதற்கு இவ்வடி மேற்கோள்; (தஞ்சை. 269 - உரை)

304 - 5. "யானை, முத்துடை மருப்பின்" (மலை. 517 - 8)

309. "கறிக் கருந்துண ருகுப்ப" (திருவிளை. நாடு. 35)

310. முருகு. 205 - ஆம் அடிக்குறிப்பைப்பார்க்க.

312 - 3. "இரும்பனை வெளிற்றின் புனசா யெனமலி மயிரி னாக்கைக், கரும்பெருங் கரடி" (விநாயக. நாடு. 26.)

315. சிலைத்தல், இசைப்பொருளை உணர்த்துமென்பதற்கு இவ்வடி மேற்கோள் (தொல். உரி. சூ. 62 - சே. ந; இ - வி. சூ. 285 - உரை)

316. "இழுமென்று வந்தீங் கிழிபு மலையருவி" (சில. குன்ற.), "இழுமெ னோதையி னிழிதரு மருவி" (ஆனைக்கா. நாடு. 14), "வெள்ளருவி யிழுமெ னோதையும்" (தணிகை. நாடு. 46)

317. மலைகிழவோனே: "ஒளிறிலங் கருவிய மலைகிழ வோனே" (பெரும்பாண். 500), "நிலைபெறு தணிகை மலைகிழ வோனே" (தணிகை. பூ. 417.) பெயரிடத்து னகர வீற்றயலகரம் ஓகாரமாமென்பதற்கு இவ்வடி மேற்கோள் (இ. வி. சூ. 326 - உரை; நன் - வி. சூ. 353.)

இதன்பொருள்.

க.—திருப்பரங்குன்றம்

1. உலகமென்பதுமுதற் கணவன் (6) என்னுந்தனையும் ஒருதொடர்.

1. உலகம் உவப்ப— சோன்மாக்கள் உவப்ப,

உலகமென்பது பலபொருளொருசொல்லாய் நிலத்தையும் உயிர்களையும் ஒழுக்கத்தையும் உணர்த்திநிற்குமேனும் சான்று உவப்பவென்றதனான், மண்ணிடத்துவாழும் சோன்மாக்களை உணர்த்திற்று.

[வலனேர்பு திரிதரு:] எற்பு வலன் திரிதரு— எழுத்து †மகாமேருவை வலமாகத்திரிதலெச்செய்யும்,

2. ‡பலர் புகழ் ஞாயிறு— எல்லாச்சமயத்தாரும் புகழும் ஞாயிற்றை,

கடற் கண்டாங்கு - கடலிடத்தே கண்டாற்போல,

இது வினையெச்சவுவமம்; §"விரவியும் வருஉ மரபின வென்ப" என்பதனால் தொழிலுவமமும் வண்ணவுவமமும் பற்றிவந்தது; என்னை? ஞாயிறு இருளைக்கெடுக்குமாறுபோலத் தன்னை மனத்தால் நோக்குவார்க்கு மாயையைக் கெடுத்தலிற் றொழிலுவமமும், தன்னைக் கட்புலனால் நோக்குவார்க்குக் ¶கடலிற் பசுமையும் ஞாயிற்றின் செம்மையும்போல மயிலிற் பசுமையும் திருமேனிச செம்மையும் தோன்றலின் வண்ணவுவமமும் கொள்ளக்கிடந்தமை காண்க.

3. [ஓவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி :]

‖ஓ அற இமைக்கும் அவிர் ஒளி— இருவகையிற்திரியங்களும் தாம் செல்லுதற்குரிய பொருள்கண்மேற் சென்றுதங்குதல் இல்லையாக இமைத்துப் பார்த்தற்குக் காரணமாகும், வினங்குகின்ற ஒளி,

ஓ என்பது ஒரெழுத்தொருமொழியாகிய தொழிற்பெயர். இமைத்தல் - கண்களின் இதழ்களிரண்டினையும் குவித்தல்; அது **"நூல நிமையா காட்டம்" என்பதனாலுணர்க.

சேண் விளங்கு ஒளி—கட்புலனால்நோக்குவார் கண்ணிடங்களெல்லாவற்றினும் சென்றுவினகுகின்ற ஒளியினையும்,

---

( ) இந்த இயைபிலிசைக்குறிக்குப்பட்ட எண்ணும், இப்படியே பின்னர் ஆங்காங்குப் பதிப்பிக்கப்படும் எண்களும் தந்தம் முன்புள்ள மொழிகளையேயும், அம்மொழிகளைப் பொருளாகப் பெற்ற மொழிகளையேயுமுடைய மூலத்தின் வரியைப் புலப்படுத்தும்.

† "ஞாயிறுபோற்றுதும் ..... மேருவலந்திரிதலான்" (சிலப். மங்கல)

‡ "பலர்புகழ் ஞாயிறு படரி னல்லதை" (சிவ - போ. பெரும்.)

§ தொல்காப்பியம், உவமவியல், 2.

¶ "மாக்கட னிவந்தெழுதரு, செஞ்ஞா யிற்றுக் கவினை" (புறநா. 4), "உதயிடை கடவுமர கதவருண குலதரக வுபலளித கனகத சதகோடி குளியர்கள், உதயமென வதிகவித கலபக மயிலின்மிசை யுகமுடிவி னிருளகல வொரு சோதி வீசுவதும்" (திருவகுப்பு, ஸ்ரீபாத.)

‖ ஓவற - ஒழிவற. இமைக்கும் - விட்டுவினங்கும். அவிர்தல் - பாடஞ் செய்தல் (சேனாவரை.)

உவப்ப எழுந்து திரியும் ஞாயிற்றைக் கடற்கண்டாங்கு அவிர்கின்ற ஒளியெனத் தொழிலுவமம் கொள்ளுங்கால் வினைமுடிக்க. இனி உவப்ப எழுந்து திரியுஞாயிற்றைக் கடற்கண்டாங்குச் சேண்விளங்கொளியென வண்ணவுவமங் கொள்ளுங்கால் வினைமுடிக்க.

4. உறுநர் தாங்கிய *மதன் உடை நோன் றாள்—தன்னைச்சேர்ந்தவர்கள் தீவினையைப்போக்கி அவரைத்தாங்கிய, அறியாமையை உடைத்தற்குக் காரணமாகிய வலியினையுடைய தாளினையும்,

5. செறுநர் தேய்த்த †செல் உறழ் தட கை — அழித்தற்குரியாரை அழித்த இடியைமாறுபட்ட பெருமையினையுடைய கையினையும்,

6. மறு இல் கற்பின் வாள் நுதல் கணவன்—மறக்கற்பில்லாத ‡அறக்கற்பினையும் ஒளிபொருந்திய நுதலினையுமுடைய இந்திரன்மகள் தெய்வயானையார் கணவன் ;

இப்பெயரை முற்கூறினார், படைத்தற்குங் காத்தற்கும் உரிமைதோன்ற.

கணவனென்பது ஈண்டு முருகனென்னுந் துணையாய்நின்றது.

ஒளியினையும் (3), தாளினையும் (4), கையினையும் (5) உடைய கணவனென முடிக்க.

7. கார்கோளென்பதுமுதல் மார்பினன் (11) என்னுந்துணையும் ஒரு தொடர்.

7 கார்கோள் முகந்த கமஞ்சூல் மா மழை—கடலிலே முகந்ததனாலுண்டாகிய நிறைவினையுடைத்தாகிய சூலினையுடைய பெருமையையுடைய மழை,

கார் முகக்கப்படுதலிற் கடல் கார்கோளென்று பெயர்பெற்றது ; ஆகுபெயர்.

8. §வாள் போழ் விசும்பில் வள் உறை சிதறி—திங்களும் ஞாயிறும் இருளை நீக்கும் ஆகாயத்தே பெருமையையுடைய துளியை முற்படச்சிதறி,

வாள், ஆகுபெயர்.

9. தலைப்பெயல் ¶தலைஇய தண் நறு கானத்து — கார்காலத்து முதற் பெயலைச் சொரிந்த தண்ணிய நறிய காட்டிடத்து,

10. இருள் பட||பொதுளிய பராரை மராத்து — இருட்சியுண்டாகத் தழைத்த பரிய அடியினையுடைய **செங்கடம்பினது,

பராரை, பண்புத்தொகைச்சந்திமுடிபு வேற்றுமையென்றுணர்க.

11. ††உருள் பூ தண் தார் புரளும் மார்பினன்— தேருருள்போலும் பூவாற்செய்யப்பட்ட குளிர்ந்த மாலையசையும் மார்பினையுடையவன் ;

---

* மதனுடை - அழகுடைய (வேறுரை)

† செல்உறழ் - மேகத்தைஒத்த (வேறுரை)

‡ அருட்கற்பென்றும் பிரதிவேறுபாடுண்டு.

§ வாள் போழ்-திங்களும் ஞாயிறும் அளவிடப்பட்டாற்போன்ற (வேறுரை.)

¶ தலைஇய - தழைத்த (வேறுரை)

|| பொதுளிய - நெருங்கிய (வேறுரை)

** வெண்கடம்பினதென்றும் பிரதிவேறுபாடுண்டு.

†† உருள்பூ - தேருருள்போன்ற வட்டப்பூ (வேறுரை.)

உருள்பூ உவமத்தொகையாகலின் உருள்பூ உருட்பூவென உறழ்ச்சிமுடிபெய்தும்; இனி உருளும்பூ உருண்டபூவென வினைத்தொகையுமாம்.

மழை சிதறித் தலைஇய கானத்து மராஅத்துத் தார் புரளும் மார்பினனென முடிக்க.

இது போகத்திற்குரிய தார்; இதனை முற்கூறினார், வாணுதல்கணவன் (6) என்றதனைநோக்கி.

12. மால்வரை என்பதுமுதற் சென்னியன் (44) என்னுந்துணையும் ஒருதொடர்.

12. மால் வரை நிவந்த சேண் உயர் வெற்பில்—பெருமையையுடைய மூங்கில்வளர்ந்த தேவருலகளவாகச் செல்லவுயர்ந்த மலையில்,

வரைகளை யுடைமையின், வரையாயிற்று; இஃது ஆகுபெயர்;* "பெரிய வரைவயிரங் கொண்டு" என்றார் பிறரும். இனித் திருமால்போலும் குவடுகளோங்கிய வெற்பென்றுமாம்; †"மாயோ னன்ன மால்வரைக் கவாஅன்" என்றார் பிறரும்.

13. கிண்கிணி ‡கவைஇய ஒள் செஞ்சீறடி—சிறுசதங்கைசூழ்ந்த ஒள்ளிதாகிய சிவந்த சிறிய அடியினையும்,

14. கணை கால்—திரண்ட காலினையும்,

வாங்கிய நுசுப்பின்—வளைந்து நுடங்கிய இடையினையும்,

பணை தோள்—பெருமையையுடைய தோளினையும்,

மூங்கில்போலும் தோளென்றுமாம்.

15. கோபத்து அன்ன தோயா பூ துகில் — இந்திரகோபத்தையொத்த நிறம்பிடியாத இயல்பான சிவப்பாகிய பூத்தொழிலினையுடைய துகிலினையும்,

தெய்வத்தின் ஆணையால் தானே சிவந்திருத்தலின், தோயாத்துகிலென்றார்.

16. பல் காசு நிரைத்த சில் காழ் அல்குல் — பலமணிகள்கோத்த ஏழுவடமாகிய மேகலையையணிந்த அல்குலினையும்,

அஃது, §"எண்கோவை காஞ்சி யெழுகோவை மேகலை - பண்கொள் கலாபம் பதினாறு - கண்கொள் - பருமம் பதினெட்டு முப்பத் திரண்டு - விரிசிகை யென்றுணரற் பாற்று" ¶என்பதனானுணர்க.

17. கை புனைந்து இயற்றா கவின் பெறு ||வனப்பின்—ஒருவர் கையாற் சிறப்பித்துப் பிறப்பியாத அழகைத் தமக்கு இயல்பாகப்பெறுகின்ற அழகினையும்,

---

* இஃது "அரியவரைகீண்டு" என்னும் வெண்பாவிலுள்ளது.

† நற்றிணை, 32.

‡ கவைஇய - கட்டிய (வேறுரை)

§ "எண்கோவை மேகலை காஞ்சி யிருகோவை, பண்கொள் கலாபமிருபத்தொன்று - கண்கொள் - பருமம் பதினான்கு முப்பத் திரண்டு - விரிசிகை யென்றுணரற் பாற்று" எனவும் பாடம்.

¶ இந்தச்செய்யுளின்பொருண்முறை திவாகரம், பிங்கலம், சூடாமணி என்பவற்றிலும், இதன் பாடபேதச்செய்யுளின்பொருண்முறை "எண்ணிரண்டிரட்டி" (திருவிளை. திருமண. 158) என்னும் செய்யுளிலும் காணப்படுகின்றன.

|| வனப்பு - இளமைநிறம் (வேறுரை)

என்றது : மானிடமகளிர்க்குத் தாயர்பலரும் கைசெய்து பிறப்பிக்கும் அழகன்றி இவர் தெய்வத்தன்மையான் இயல்பாகப்பெற்ற அழகினையுடைய ரென்றவாறு.

18. *நாவலொடு பெயரிய பொலம் புனை அவிர் இழை—சாம்பூநதமென்று நாவலோடடுத்துப் பெயர்பெற்ற பொன்னால் நிருமித்து விளங்குகின்ற பூணினையும்,

பொலம், †"பொன்னென் கிளவி" என்பதனான்முடிக்க.

19. சேண் இகந்து விளங்கும் செயிர் தீர் மேனி—சேய்நிலத்தைக் கடந்து விளங்குகின்ற குற்றந்தீர்ந்த நிறத்தினையுமுடைய சூரரமகளிர் (41) என்க.

20. துணையோர் ஆய்ந்த இணை ஈர் ஓதி—ஆயத்தார் நன்றென்று ஆராய்ந்த கடையொத்த நெய்ப்பினையுடைய மயிரிலே,

21-2. [செங்கால் வெட்சிச் சீறித ழிடையிடுபு, பைந்தாட் குவளைத் தூவி தழ் கிள்ளி :] செங்கால் வெட்சி சிறு இதழ் இடை பைந்தாள் குவளை தூ இதழ் கிள்ளி இடுபு—சிவந்தகாலையுடைய வெட்சியுடைய சிறிய பூக்களை விடுபூவாகத் தூவி அதற்குநடுவே பசுத்த தண்டினையுடைய குவளையினது தூய இதழ்களைக் கிள்ளியிட்டு,

23. தெய்வுத்தியொடு ‡வலம்புரி வயின் வைத்து—சீதேவியென்னும் தலைக்கோலத்துடனே வலம்புரிவடிவாகச் செய்த தலைக்கோலத்தையும் வைத்தற்குரிய இடத்தே வைத்து,

24-5. §திலகம் தைஇய தேம் கமழ் திரு நுதல் மகரப்பகுவாய் தாழ மண்ணுறுத்து—திலகமிட்ட மணநாறுகின்ற அழகினையுடைய நெற்றியின்கண்ணே சுறாவினது அங்காந்த வாயாகப்பண்ணின தலைக்கோலம் தங்கப்பண்ணி,

மகரப்பகுவாய், ஆகுபெயர். மண்ணுறுத்தலை, ¶"ஆவுதி மண்ணி" என்றாற்போலக்கொள்க. இனி மண்ணுறுத்துத் துவரமுடித்தவென மேலேகூட்டி, முழுவி முடித்தவென்றுமாம்.

26-7. துவர முடித்த துகள் அறும் முச்சி பெரு தண் சண்பகம் ஈஇ—வேண்டுவனகூட்டி முற்றமுடித்த குற்றமறுகின்ற கொண்டையிலே ரிய குளிர்ந்த சண்பகப்பூவைச் செருகி,

27-8. கரு தகடு ||உளை பூ மருதின் ஒள் இணர் அட்டி—கரிய புறவி ழினையும் மேலில் துய்யினையுமுடைய பூக்களையுடைய மருதினது ஒள்ளிய ற்கொத்துக்களை அதன் மேலேயிட்டு,

இது முதலாகிய பொருட்கேற்ற அடையடுத்துநின்றது.

---

* நாவற்பழத்துச்சாறுபட்டுப் பேதமானபொன்னால் (வேறுரை.)

† தொல்காப்பியம், புள்ளிமயங்கியல், 61.

‡ வலம்புரி-வலம்புரிச்சங்கீன்றமுத்தின்மாலை,நந்தியாவட்டப்பூ(வேறுரை.)

§ பொட்டு ஊன்றின (வேறுரை.)

¶ மதுரைக்காஞ்சி, 494.

|| உளைப்பூ - விரிந்தபூ (வேறுரை). "உளைப்பூ மருதத்து" (ஐங். 7)

29-30. கிளை கவின்று எழுதரு கீழ்நீர் செவ்வரும்பு இணைப்பு உறு பிணையல் வளைஇ—பச்சென்ற அரும்புகளினின்றும் மேலேபோந்து அழகுபெற்றுத் தோன்றுகின்ற நீர்க்கீழ் நின்ற சிவந்த அரும்பைக் கட்டுத்தலுறுகின்ற மாலையை வளையவைத்து,

கவினென்னும் பண்படியாகக் கவின்றென்னுந் தொழில் பிறந்தது. கீழ்நீர், நீர்க்கீழென்னும் இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ.

அது மிகச்சிவத்தலின் ஒப்பனைக்குக் கொள்வர்.

30-32. [துணைத்தக, வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர், நுண்பூணாகந் திளைப்ப:] வள் காது துணை தக நிறைந்த பிண்டி ஒள் தளிர் நுண் பூண் ஆகம் திளைப்ப—வளவிய காதிலே தம்மில் ஒத்தற்குப் பொருந்த இட்டு நிறைந்த பிண்டியினது ஒள்ளிய தளிர் நுண்ணிய பூணையுடைய மார்பிடத்தே அசையாநிற்க,

32-5. திண் காழ் நறு குறடு உரிஞ்சிய பூ கேழ் தேய்வை தே கமழ் மருது இணர் கடுப்ப கோங்கின் குவி முகிழ் இளமுலை கொட்டி—திண்ணிய வயிரத்தையுடைய நறிய சந்தனத்தையுரைத்த பொலிவினையுடைய நிறத்தையுடைத்தாகிய குழம்பை மணகாறுகின்ற மருதம்பூவை அப்பினாலொப்பக் கோங்கினது குவிந்த அரும்பையொத்த இளமுலையிலே யப்பி,

மருதிணர், நிறத்திற்குவமம்.

35-6. விரி மலர் வேங்கை நுண் தாது அப்பி—அவ்வீரம்புலர்வதற்கு முன்னே விரிந்த மலரையுடைய வேங்கைப்பூவினது நுண்ணிய தாதையும் அதன் மேலே அப்பி,

36-7. [காண்வர, வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியா:] வெள்ளில் குறுமுறி கிள்ளுபு காண் வர *தெறியா—விளவினது சிறிய தளிரைக்கிள்ளி அழகு வர ஒருவர்மேல் ஒருவர் தெறித்துத் தப்பாமற் பட்டபொழுது,

38-9. [கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி, வாழிய பெரிதென் றேத்தி:] வென்று அடு விறல் கோழி ஓங்கிய கொடி பெரிது வாழிய என்று எத்தி—வஞ்சியாது எதிர்நின்று அடுகின்ற வெற்றியையுடைய கோழிமேலாய் நின்றகொடி நெடுங்காலம் வாழ்வதாகவென்று வாழ்த்தி,

39-41. [பலருடன், சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச், சூரர மகளிராடுஞ் சோலை:] சூர் அரமகளிர் †பலருடன் சீர் திகழ் சிலம்பகம் சிலம்ப பாடி ஆடும் சோலை — கொடுமையையுடைய தெய்வமகளிர்பலருங்கூடிச சீர்மை விளங்குகின்ற மலையிடமெல்லாம் ஆரவாரிக்கப் பாடி ஆடும் சோலையினையுடைய,

42. ‡மந்தியும் அறியா மரன் பயில் அடுக்கத்து—மரமேறுதற்றொழிலிற் சிறப்புடைய மந்திகளும் மரங்களினீட்டத்தால் ஏறியறியாத மரநெருங்கின பக்க மலையிடத்து நின்ற,

உம்மை, சிறப்பும்மை.

---

* பிள்ளையார் சீபாதங்களை உள்ளித்தெறித்து (வேறுரை.)

† பலவுடன் - பலதோத்திரங்களினாலே (வேறுரை.)

‡ மந்தி - அருக்கன் (வேறுரை.)

43-4. சுரும்பும் மூசா சுடர் பூ காந்தள் பெரு தண் *கண்ணி மிலைந்த சென்னியன்—தான் விரும்புதலிற் சுரும்பினமும் மொய்யாத நெருப்புப்போலும் பூவினையுடைய செங்காந்தளினது பெரிய குளிர்ந்த கண்ணியைச் சூடிய திருமுடியையுடையவன்;

அடியினையும் (13) காலினையும் நுசுப்பினையும் தோளினையும் (14) துகிலினையும் (15) அல்குலினையும் (16) வனப்பினையும் (17) இழையினையும் (18) மேனியினையும் (19) உடைய சூரரமகளிர் (41) பலருங்கூடி (39) இடையிட்டு (21) வைத்துத் (23) தாழப்பண்ணிச் (25) செரீஇ (27) இணரட்டி (28) வனைஇத் (30) திளையாநிற்கக் (32) கொட்டி (35) அப்பித் (36) தெறித்து (37) ஏத்திப் (39) பாடி (40) ஆடுஞ்சோலையையுடைய (41) வெற்பில் (12) அடுக்கத்துக் (42) காந்தட் கண்ணிய ர்னியனென முடிக்க.

இதனான் அடையாளப்பூக் கூறினார். இது †"வெறியாட் டயர்ந்த காந்தளும்" என்பதனானுணர்க.

"‡ அகன்றுபொருள் கிடப்பினு மணுகிய நிலையினு, மியன்றுபொருண் முடியத் தந்தன ருணர்த்தன், மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்" என்னும் §மாட்டிலக்கணத்தான் இப்பாட்டுக்கள்பத்துஞ் செய்தார்களாதலின் இவ்வாறே மாட்டிமுடித்தல் யாண்டும் வருமென்றுணர்க.

45. பார் என்பதுமுதற் சேய் (61) என்னுந்துணையும் ஒருதொடர்.

45. || பார் முதிர் பனி கடல் கலங்க உள் புக்கு—பாராகிய நிலம் முற்றுப் பெற்ற குளிர்ச்சியையுடைய கடல் தன் நிலைகுலையும்படி உள்ளேசென்று,

பார் - பாறை; மண்ணிடத்தே முதிர்ந்த கடலென்றுமாம்.

46. சூர் முதல் தடிந்த சுடர் இலை நெடு வேல்—சூரபன்மாவாகிய தலைவனைக்கொன்ற எரிகின்ற இலைத்தொழிலையுடைய நெடிய வேலாலே,

47. உலறிய கதுப்பின்—காய்ந்த மயிரினையும்,

பிறழ் பல்—நிரை ஒவ்வாத பல்லினையும்,

பேழ் வாய்—பெருமையையுடைய வாயினையும்,

48. சுழல் விழி பசு கண்—கோபத்தாற் சுழலும் விழியையுடைய பசிய கண்ணினையும்,

¶ சூர்த்த நோக்கின்—கொடுமைசெய்த பார்வையினையும்,

---

* கண்ணி - சூடும்பூவென்றும் வழங்கும்; (தீவக. 208 - ந.)

† தொல்காப்பியம், புறத்திணையியல், 5. ‡ தொல். செய்யுளியல், 211

§ "அகன்றுவந்தமாட்டு முருகாற்றுப்படை முதலியவற்றுட்காண்க; மொழிமாற்றாவது கேட்டோர் கூட்டியுணருமாற்றான் ஈரடிக்கண்ணே வருவதென்றும், மாட்டென்னுமுறுப்பாவது இரண்டிறந்த பலவடிக்கண்ணும் பல செய்யுட்டொடரின்கண்ணும் அகன்றும் அணுகியும் வருமென்றுமுணர்க" (தொல் எச்ச. சூ. 13 - ந.)

|| "பாரிரும் பௌவத்தி னுள்புக்குப் பண்டொருநாட், சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே" (சில. குன்ற)

¶ சூர்த்தம் - நடுக்கம் (வேறுபை)

49 . 50. *கழல் கண் கூகையொடு கடு பாம்பு தூங்க பெரு முலை அலைக்கும் காதின்—பிதுங்கிய கண்ணையுடைய கூகையோடே கடிய பாம்பு தூங்குகையினாலே பெரிய முலையை வருத்துகின்ற காதினையும்,

பிணர் மோட்டு—சருச்சரையையுடைய பெரிய உடலினையும்,

மோடு - வயிறுமாம்.

51. உரு கெழு செலவின்—கண்டார் உட்குதல் பொருந்தும் நடையினையுமுடைய,

அஞ்சுவரு பேய்மகள் — கண்டார்க்கு அச்சம்தோன்றுகின்ற பேயாகிய மகள்,

52-3. குருதி ஆடிய கூர் உகிர் கொடு விரல் கண் தொட்டு உண்ட கழி முடை கரு தலை — உதிரத்தையுண்ட கூரிய உகிரினையுடைய கொடியவிரலாலே கண்களைத் தோண்டி உண்ணப்பட்ட மிக்க முடைநாற்றத்தையுடைய கரிய தலையை,

இனி, தொட்டென்பதனை வினையெச்சமாக்காது தொழிற்பெயராக்கிக் கண் தோண்டுதலுண்டவென்று கூறுதலுமாம்.

54. ஒள் தொடி தட கையின் ஏந்தி—ஒள்ளிய தொடியினையுடைய பெருமையையுடைய கையிலே எடுத்து,

54-5. வெரு வர வென்று அடு விறற்களம் பாடி— அவுணர்க்கு அச்சந் தோன்ற வஞ்சியாது எதிர்ந்து கொல்கின்ற வெற்றிக்களத்தைப் பாடி,

தோள் பெயரா—தோளையசைத்து,

56. கிணம் நின் வாயள்—கிணத்தைத் தின்கின்ற வாயினையுடையளாய்,

வாயள், வினையெச்சமுற்று.

† துணங்கை தூங்க—துணங்கைக்கூத்தாட,

‡ "பழுப்புடை யிருகை மூடக்கி யடிக்கத், துடக்கிய நடையது துணங்கையாகும்."

கருப்பு (17) முதலியவற்றையுடைய பேய்மகள் (51) தலையை (53) ஏந்தி (54) வாளாய்ப் (56) பாடி ஃ (55) தூங்கென முடிக்க.

57. §இரு போ உருவின் ஒரு பேர் யாக்கை—மக்கள்வடிவும் விலங்கின் வடிவுமாகிய ||இரண்டு பெரிய வடிவினையுடைய ஒன்றாகிய பெரிய உடல்,

---

* கழல்கண் - கழன்று விழுவதுபோலும் கண். கடும்பாம்பு - கோபத்தையுடைய பாம்பு. (வேறுரை)

† சினந்து கூத்து. (வேறுரை)

‡ "முடக்கிய விருகை பழுப்புடை யொற்றத் - துடக்கிய நடையது துணங்கை யாகும்" (தொ. பிங்கல.) எனவும் பாடம்.

§ இரு பேர் உரு - சூரனென்றும் பதுமனென்றும் இரண்டுபேரையுடைய வடிவம். (வேறுரை)

|| இரண்டு பெரிய வடிவினையுடைய ஒன்றாகிய பெரிய வுடலென்றது, முகம் குதிரைமுகமும், உடல் மக்களுடலுமாகிய சூரபன்மாவினது உடலத்தை. இதனைக் கல்லாடனாரும், "வண்டே சாந்தம்" என்னும் மருதக்கலியில் "சரணிக் கேற்ற வொடியாப் படிவத்துச், சூர்" என்பதற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையாலுணர்க.

58. அறு வேறு வகையின் அஞ்சுவர மீண்டி—ஆறாகிய வேறுபட்ட கூற்றாலே அச்சந்தோன்ற மிக்குச்சென்று,

என்றதனான், இறைவன் உமையை வதுவை செய்துகொண்டநாளிலே இந்திரன் சென்று நீ புணர்ச்சிதவிரவேண்டுமென்று வேண்டிக்கொள்ள அவனும் அதற்கு உடம்பட்டு அது தப்பானாகிப் புணர்ச்சிதவிர்ந்து கருப்பத்தை இந்திரன்கையிற் கொடுப்ப அதனை இருடிகளுணர்ந்து அவன்பக்கனின்றும் வாங்கித் தமக்குத்தரித்தல்அரிதாகையினாலே இறையவன்கூறாகிய முத்தீக்கட்பெய்து அதனைத் தம்மனைவியர்கையிற் கொடுப்ப அருந்ததியொழிந்த அறுவரும் வாங்கிக் கொண்டு விழுங்கிச் சூன்முதிர்ந்து சரவணப்பொய்கையிற் *பதுமப்பாயலிலே பயந்தாராக, ஆறுகூறாகி வளர்கின்றகாலத்து இந்திரன் தான் இருடிகளுக்குக் கொடுத்தலையை மறந்து ஆண்டுவந்து வச்சிரத்தான் எறிய அவ்வாறுவடிவும் ஒன்றாய் அவனுடனே பொருது அவனைக்கெடுத்துப் பின் சூரபனமாவைக் கொல்லுதற்கு அவ்வடிவம் ஆறாகிய வேறுபட்ட கூற்றாலே மண்டிச்சென்றதென்று புராணங்கூறிற்று. இதனைப் †"பாயிரும் பனிக்கடல்" என்னும் பரி பாடற்பாட்டானுணர்க. இவ்வாறன்றி வேறு வேறு புராணங் கூறுவாருமுளர்.

இனி அவனுடல் அற்று வேறுவேறாம் வகையாலென்றுமாம்.

59. அவுணர் நல் வலம் அடங்க—அவனையொழிந்த அவுணருடைய நல்லவெற்றி இல்லையாம்படி,

அடங்க என்றது, "களமடங்க" என்றாற்போலக் கொள்க.

59-60. ‡ கவிழ் இணர் மா முதல் தடிந்த—கீழ்நோக்கின பூங்கொத்துக்களையுடைய மாமரத்தை வெட்டின,

என்றது - அவுணரெல்லாருந் தம்முடனே எதிர்ந்தார்வலியிலே பாதி தங்கள்வலியிலே கூடும்படி மந்திரங்கொண்டிருந்து சாதித்ததொரு §மாவைவெட்டினானென்றவாறு.

மறு இல் கொற்றத்து—குற்றமில்லாத வெற்றியினையும்,

61. எய்யா நல் இசை — ஒருவராலும் அறிந்தறியவொண்ணாத நல்ல புகழினையுமுடைய,

செவேல் சேஎய்—செய்ய வேலையுடைய சேய்,

எக்காலமும் போர்செய்தலிற் செவ்வேலென்றார். செய்யவனென்பது சேயென விகாரத்தால் நீண்டதென்றுமாம்.

---

* "பயந்தோரென்ப பதுமத்துப்பாயல்" (பரி - 5.)

† செய்யுள், 5.

‡ மாயையினாலே கீழ்நோக்கிப் பூத்த மாவாய் நிற்கும் சூரபன்மனை முதலோடேதடிந்த. (வேறுரை)

§ "மாக்கடன் முன்னி, அணங்குடை யவுண ரேமம் புணர்க்குஞ், சூருடை முழுமுத றடிந்த பேரிசைக், கடுஞ்சின விறல்வேள்" என்பதும், சூரவன்மாத் தனக்கு அரணாகவுடைய மாவின்முதல்' என்னும் உரையும் இங்கே அறியற்பாலன; (பதிற். 11); "சூர் நிரந்து சுற்றிய மாதபுத்த வேலோய்" (பரி. 18), "உயிர்புகுஞ்சட்டகம்" (கல்.) என்பவற்றையும்பார்க்க.

கடல் கலங்க உள் புக்குச் (45) சூர்முதலின் (46) ஒருபேரியாக்கை (57) அறுவேறுவகையின் அஞ்சுவர மண்டிச்சென்று (58) பேய்மகள் (51) துணங்கை தூங்கும் படியாக (56) அச்சூர்முதல் தடிந்த வேலானே (46) பின்னும் அவுணர் நல்வலமடங்க (59) மாமுதல் தடிந்த கொற்றத்தினையும் (60) நல்லிசையினையுமுடைய சேயென முடிக்க.

கண்வன் (6) மார்பினன் (11) சென்னியனாகிய (44) சேயென ஒரு பொருள் குறித்த வேறுபெயராய் நின்றன.

62-3. [சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு, நலம்புரி கொள்கைப் புலம் பிரிந் துறையும்:]

* புலம் பிரிந்து உறையும் அடி—மெய்ஞ்ஞானத்தான் அறிதலைக் கைவிட்டுத் தங்குந் திருவடி,

திருவடியே வீடாயிருக்குமென்றார்; அது †"தென்னன் பெருந்துறையான், காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித், தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேனகாட்டி" என்பதனானும் பிறரும் திருவடியைக் கூறுமாற்றானு முணர்க

சேவடி படரும் நலம் புரி கொள்கை செம்மல் உள்ளமொடு—அத்திருவடியிற் செல்லுதற்குக் காரணமான நல்வினைகளைப் பலபிறப்புக்களிலும் விரும்பி நிகழ்த்தின கோட்பாட்டானே தலைமையினையுடைத்தாகிய உள்ளத்தோடே,

64. செலவு நீ நயந்தனை ஆயின்—செல்லுஞ்செலவை நீ விரும்பியேவிட்டாயாயின்,

64-6. [பலவுட, னன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப, வின்னே பெறுதி நீ முன்னிய வினையே:] நீ முன்னியவினை பலவுடன் நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப இன்னே பெறுதி—நீ முற்பிறப்பிற் கருதிச்செய்த நல்வினையாலே வீடுபெறுவார்க்கு உரியனவாகக்கூறிய நற்குணங்கள் பலவுஞ்சேர நன்றாகிய நெஞ்சத்திலுண்டாகிய இனிய வீடுபேற்றைத் தப்பாமல் இப்பொழுதே பெறுவை;

67. செரு புகன்று ஈடுத்த சேண் உயர் நெடு கொடி— போரைவென்று விரும்பிக் கட்டின சேய்நிலத்தே சென்றுயர்ந்த நெடிய கொடிக்கு அருகே,

68. வரி புனை பந்தொடு பாவை தூங்க—நூலால் வரிந்துபுனையப்பட்ட பந்தும் பாவையும் அறுப்பாரின்மையின் தூங்கியேவிடும்படி,

என்றது: ‡ பகைவரை மகளிராக்கி அவர் கொண்டுவினையாடுதற்குத் தூக்கின வென்றவாறு.

69. பொருநர் தேய்த்த போர் அரு வாயில்—பொருவாரை இல்லையாக்கு கையினாலே எக்காலமும் போர்த்தொழிலரிதாகிய வாயிலினையும்,

70. திரு வீற்றிருந்த தீது தீர் நியமத்து—திருமகள் வருத்தமின்றியிருந்த குற்றந்தீர்ந்த அங்காடித்தெருவினையும்,

---

* 'தேசத்தைவிட்டு' (வேறுரை) † திருவாசகம், திருவம்மானை, 6.

‡ பதிற். 53—ஆம் செய்யுளின் 6-ஆம் அடிமுதலியவற்றையும் அவற்றின் உரையையும், தணிகைப்புராணம், சீபரிபூரணநாமப்படலம், 52-ஆம் செய்யுளையும் பார்க்க.

71. மாடம் மலி மறுகில் கூடல் குடவயின்—மாடங்கள்மிக்க ஏனைத் தெருக்களையு முடைய மதுரையின் மேற்றிசையிடத்து,

அம் சிறை வண்டின் அரி கண்ம் (76)—அழகினையுடைத்தாகிய சிறகை யுடைய வண்டினுடைய அழகினையுடைய திரள்,

72. இரு சேறு அகல் வயல் விரிந்து வாய் அவிழ்ந்த—கரிய சேற்றி னையுடைய அகன்ற வயலிலே முறுக்குநெகிழ்ந்து பின்பு தாதும் அல்லியும் தோன்றமலர்ந்த,

73. முள் தாள் தாமரை துஞ்சி—முள்ளையுடைத்தாகிய தாளையுடைய தாமரைப்பூவிலே இராப்பொழுது துயில்கொண்டு,

73-4. வைகறை கள் கமழ் நெய்தல் ஊதி—விடியற்காலத்தே தேன் நாறு கின்ற நெய்தற்பூவை யூதி,

எல் பட—ஞாயிறு தோன்றின காலத்தே,

75-7. [கண்போன் மலர்ந்த காமர் சுனைமல, ரஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்கும், குன்றமர்ந் துறைதலு முரியன்.]

அஞ்சிறைவண்டி னரிக்கணமென்பது முன்னேகூட்டிற்று.

கண் போல் மலர்ந்த காமர் சுனை மலர் ஒலிக்கும் குன்று அமர்ந்து உறைத லும் உரியன்—*கண்ணையொக்க விரிந்த விருப்பமருவின சுனைப்பூக்களிலே சென்று ஆரவாரிக்குந் திருப்பரங்குன்றிலே நெஞ்சமர்ந்திருத்தலுமுரியன்;

உம்மை, எதிரதுதழீஇய எச்சவும்மை.

கூடற்குடவயிற் குன்று; வண்டின் அரிக்கணம் துஞ்சி ஊதி ஒலிக்குங் குன்று.

அதாஅன்று—அதுவன்றி,

அதாஅன்றென அகரமிட்டெழுக. இதனை †"அன்றுவரு காலை" என்ப தனாலும், ‡"இன்றி யென்னும் வினையெஞ் சிறுதி" என்பதனுள் "தொன்றியன் றுங்கின்" என்பதனாலு முடிக்க.

உ.—திருச்சீரலைவாய்.

78. வைந்நுதி யென்பது முதல் அலைவாய்ச்சேறல் (125) என்னுந்துணை யும் ஒரு தொடர்.

78. வை நுதி பொருத வடு ஆழ் வரி நுதல்—கூர்மையையுடைத்தாகிய தாட்டி வெட்டின வடுவழுந்தின புகரையுடைய மத்தகத்தே,

வைந்நுதி, ஆகுபெயர்.

79. வாடா மாலை ஓடையொடு துயல்வர—பொன்னரிமாலை பட்டத்தோ கிடந்து அசைய,

80 §படும் மணி இரட்டும் மருங்கின்—தாழ்கின்ற மணி மாறியொலிக் கின்ற பக்கத்தினையும்,

---

* "நீலங் கண்ணெனமலர்ந்த சுனையும்" (அகநா. 38.)

† தொல்காப்பியம், உயிர்மயங்கியல், ௫௬

‡ " " ௩௫.

§ ஓசைமணி. (வேறுரை)

கடு நடை—கடிய நடையினையும்,

81. கூற்றத்து அன்ன மாற்றரு மொய்ம்பின்—கூற்றுவனையொத்த பிறரால் தடுத்தற்கரிய வலியினையுமுடைய,

82. *கால் இளர்த்தன்ன வேழம் மேல்கொண்டு—ஓடுங்காற் காற்றெழுந்தாலொத்த களிற்றை யேறி,

மருங்கு (80) முதலியவற்றையுடைய வேழத்தை நுதலிலே மாலை பட்டத்தோடே யசைய எறியெனமுடிக்க.

83-4. ஐவேறு உருவின் செய் வினை முற்றிய முடியொடு விளங்கிய முரண் மிகு திருமணி—ஐந்தாகிய வேறுபட்ட வடிவினையுடைய (முடிக்குச்) செய்யுந் தொழிலெல்லாம் முற்றுப்பெற்ற முடியோடேகூடி விளங்கிய ஒன்றற்கொன்று மாறுபாடுமிகும் அழகினையுடைய மணி,

ஐவேறுருவு: "நாம முகுடம் பதுமம் இம்புரி, கோடக மிலைமுடிக் கைவேறுருவே"

85. மின் உறழ் இமைப்பின் சென்னி பொற்ப—மின்னலேடே மாறுபடுகின்ற விளக்கத்தோடே முடியிலே பொலிவுபெற,

86. நகை தாழ்பு துயல்வரூஉம் வகை அமை பொலங்குழை—ஒளி தவழ அசையும் தொழிற்கூறமைந்த பொன்னாற்செய்த மகரக்குழை,

87-8. சேண் விளங்கு இயற்கை வான் மதி கவைஇ அகலா மீனின் அவிர் வண இமைப்ப—சேய்மைவந்தேசென்று விளங்கும் இயல்பினையுடைய ஒளியையுடைய மதியைசூழ்ந்து நீங்காத மீன்கள்போல விளங்குவனவாய் ஒளியைக்கால,

மீன் - உரோகிணிமுதலியன; விசாழமும் வெள்ளியுமாம்.

89. தா இல் கொள்கை தம் தொழில் முடிமார்—வருத்தமில்லாத விரதங்களையுடைய தவத்தொழிலே முடிப்பாருடைய,

90. மனை சேர்பு எழுதரு †வான் நிறம் முகன்—மனத்திலே பொருந்தித் தோன்றுகின்ற ஒளியையுடைய நிறத்தையுடைய முகங்களிலே,

பொற்ப (85) இமைப்ப (88) எழுதருமுகனென்க.

முகனென்றது ஆறற்கும் பொது.

91-2. [மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப், பல்கதிர் விரிந்தன் றொரு முகம்:] ஒருமுகம் மா இருள் ஞாலம் மறு இன்றி விளங்க பல்கதிர் விரிந்தன்று - ஒருமுகம் பெருமையையுடைத்தாகிய இருட்சியையுடைய உலகம் குற்றமின்றி விளங்கும்படி பலகிரணங்களையும் தோற்றுவித்தது;

ஒருமுகமென்று முன்னே கூட்டிப் பொருள்கொள்க.

92-4. ஒருமுகம் ‡ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகி காதலின உவந்து வரம் கொடுத்தன்று—ஒருமுகம் தன்மேல் அன்புசெய்தவர்கள் துதிக்க அதற்குப் பொருந்தி அவர்க்கு இனிதாகவுடன்று அவர்மேற்சென்ற காதலாலே மகிழ்ந்து வேண்டும்பொருள்களை முடித்துக் கொடுத்தது.

---

* "கால் இளர்த்தன்னவூர்தி" (பதிற். "இருங்கண்யானை")

† ஒளி விடுகின்ற ஆறுதிருமுகங்களையுடையவன்; அந்தத்திருமுகங்களுடைய படிவஞ்சொல்லின். (வேறுரை)

‡ ஏழையர் இரந்துதுதிக்க. (வேறுரை)

94-6. ஒருமுகம் மந்திர விதியின் *மரபுளி வழாஅ அந்தணர் வேள்வி ஓர்க்கும்—ஒருமுகம் மந்திரத்தையுடைய வேதத்திற்கூறிய முறைமையிடத்துத் தப்பாத அந்தணருடைய யாகங்களில் தீங்குவாராதபடி நினையாநிற்கும்;

அந்தத்தை அணவுவார் அந்தணர்; என்றது, வேதாந்தத்தையே நோக்குவாரென்றவாறு.

96-8. [ஒருமுக, மெஞ்சிய பொருள்களை †எமுறநாடித், திங்கள்போலத் திசைவிளக் கும்மே:] ஒருமுகம் எஞ்சிய பொருள்களை நாடி ஏம் உற திங்கள் போல திசை விளக்கும்—ஒருமுகம் ஈண்டு வழங்காத வேதங்களினும் நூல்களினுமுள்ள பொருள்களை ஆராய்ந்து இருடிகள் எமுறும்படி உணர்த்தித் திங்கள் போலத் திசைகளெல்லாம் விளக்குவிக்கும்;

ஏமம்-இரட்சை. கலைநிறைதலிற் றிங்கள் உவமையாயிற்று.

98-100. [ஒருமுகஞ், செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக், கறுவுகொணெஞ்சமொடு களம்வேட் டன்றே:] ஒருமுகம் செல் சமம் முருக்கி கறுவுகொள் நெஞ்சமொடு செறுநர் தேய்த்து ‡களம் வேட்டன்று—ஒருமுகம் திருவுள்ளத்துச் செல்கின்ற நடுவுநிலைமையைக் கெடுத்து இவர்களைக் கொல்லவேண்டுமென்று கறுவுதல் கொண்ட திருவுள்ளத்தோடே செறப்படும் அசுரர்முதலியோரைப் பொன்றக் கெடுத்துக் களவேள்வியை வேட்டது;

சமம்-நடுவுநிலைமை; அதனைக் கெடுத்தலாவது, தேவரையும் அசுரரையும் ஒப்பக்கருதாது தேவரைக்காத்து அசுரரையழித்தல்.

100-102. [ஒருமுகங், குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின், §மடவல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே;]

ஒருமுகம் குறவர் மடமகள் ||கொடி போல் நுசுப்பின் வள்ளியொடு நகையமர்ந்தன்று—ஒருமுகம் குறவருடைய மடப்பத்தையுடையமகளாகிய வல்லி பாலும் இடையினையுடைய வள்ளியுடனே மகிழ்ச்சியைப் பொருந்திற்று;

மடவரல் நகையெனக் கூட்டித் தனக்கு ஓரறியாமைதோன்றுந் தன்மை டைத்தாகிய நகையென்று கூறுக.

அவளொடு ¶நகையமர்தலின் அறியாமை கூறினார். காமநுகர்ச்சி யில்லாத இறைவன் இங்ஙனம் நகையமர்ந்தான்; உலகில் இல்வாழ்க்கை நடத்தற்கென்றுணர்க. அது **"தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்" என்பதனுட் பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர், விண்பாலி யோகெய்தி வீடுபர்காண் சாழலோ" என்பதனானுணர்க.

---

* மரபுளி: உளி, மூன்றாவதன் பொருள்படுவதோரிடைச்சொல். அந்தணர் - அழகிய தட்பத்தினையுடையார். ஓர்க்கும் - திருவுள்ளத்து அடைக்கும். (வேறுரை)

† எமுறநாடி - இரக்கைபொருந்த ஆராய்ந்து; ஏமம் கடைக்குறைபட்டது. (வேறுரை)

‡ போர்க்களத்தை விரும்பாநிற்கும். (வேறுரை)

§ கற்பின் வரலாற்றினையுடைய வள்ளிநாய்ச்சியார். (வேறுரை)

|| வல்லிசாதக்கொடி. (வேறுரை)

¶ 'நகையமர்தல் இன்றி யமையாமை' எனவும் பிரதி வேறுபாடுண்டு.

** திருவாசகம், திருச்சாழல், ௯.

கடு நடை—கடிய நடையினையும்,

81. கூற்றத்து அன்ன மாற்றரு மொய்ம்பின்—கூற்றுவனையொத்த பிறரால் தடுத்தற்கரிய வலியினையுமுடைய,

82. *கால் கிளர்ந்தன்ன வேழம் மேல்கொண்டு—ஓடுங்காற் காற்றெழுந்தாலொத்த களிற்றை யேறி,

மருங்கு (80) முதலியவற்றையுடைய வேழத்தை நுதலிலே மாலை பட்டத்தோடே யசைய ஏறியெனமுடிக்க.

83-4. ஐ வேறு உருவின் செய் வினை முற்றிய முடியொடு விளங்கிய முரண் மிகு திருமணி—ஐந்தாகிய வேறுபட்ட வடிவினையுடைய (முடிக்குச) செய்யுந் தொழிலெல்லாம் முற்றுப்பெற்ற முடியோடேகூடி விளங்கிய ஒன்றற்கொன்று மாறுபாடுமிகும் அழகினையுடைய மணி,

ஐவேறுருவு: "தாம முகுடம் பதுமங் கிம்புரி, கோடக மிவைமுடிக் கைவேறுருவே"

85. மின் உறழ் இமைப்பின் சென்னி பொற்ப—மின்னோடே மாறுபடுகின்ற விளக்கத்தோடே முடியிலே பொலிவுபெற,

86 நகை தாழ்பு துயல்வரூஉம் வகை அமை பொலங்குழை—ஒளி தங்கி அசையும் தொழிற்கூறமைந்த பொன்னாற்செய்த மகரக்குழை,

87-8. சேண் விளங்கு இயற்கை வான் மதி கவைஇ அகலா மீனின் அவிர வன இமைப்ப—சேய்நிலத்தேசென்று விளங்கும் இயல்பினையுடைய ஒளியையுடைய மதியைசசூழ்ந்து நீங்காத மீன்கள்போல விளங்குவனவாய் ஒளியைக்கால,

மீன் - உரோகிணிமுதலியன; விமாழமும் வெள்ளியுமாம்.

89. தா இல் கொள்கை தம் தொழில் முடிமார்—வருத்தமில்லாத விரதங்களையுடைய தவத்தொழிலை முடிப்பாருடைய,

90. மனன் கேர்பு எழுதரு †வாள் நிறம் முகன்—மனத்திலே பொருந்தித் தோன்றுகின்ற ஒளியையுடைய நிறத்தையுடைய முகங்களிலே,

பொற்ப (85) இமைப்ப (88) எழுதருமுகனென்க.

முகனென்றது ஆறற்கும் பொது.

91-2. [மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப், பல்கதிர் விரிந்தன் றொருமுகம்] ஒருமுகம் மா இருள் ஞாலம் மறு இன்றி விளங்க பல்கதிர் விரிந்தன்று - ஒருமுகம் பெருமையை யுடைத்தாகிய இருட்சியையுடைய உலகம் குற்றமின்றாய் விளங்குமபடி பலகிரணங்களையும் தோற்றுவித்தது;

ஒருமுகமென்று முன்னே கூட்டிப் பொருள்கொள்க.

92-4. ஒருமுகம் ‡ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகி காதலின உவந்து வரம் கொடுத்தன்று—ஒருமுகம் தன்மேல் அனபுசெய்தவர்கள் துதிக்க அதற்குப் பொருந்தி அவர்க்கு இனிதாகநடந்து அவர்மேற்சென்ற காதலாலே மகிழ்ந்து வேண்டும்பொருள்களை முடித்துக் கொடுத்தது.

---

* "கால் கிளர்ந்தன்னவூர்தி" (பதிற். "இருங்கண்யானை")

† ஒளி விடுகின்ற ஆறுதிருமுகங்களை யுடையவன்; அந்தத்திருமுகங்களினுடைய படிவஞ்சொல்லின். (வேறுரை)

‡ ஏழையர் இரந்துதுதிக்க. (வேறுரை)

94-6. ஒருமுகம் மந்திர விதியின் *மரபுளி வழாஅ அந்தணர் வேள்வி க்கும்—ஒருமுகம் மந்திரத்தையுடைய வேதத்திற்கூறிய முறைமையிடத்துத் ப்பாத அந்தணருடைய யாகங்களில் தீங்குவாராதபடி நினையாநிற்கும்;

அந்தத்தை அணவுவார் அந்தணர்; என்றது, வேதாந்தத்தையே நோக்குவா ன்றவாறு.

96-8. [ஒருமுக, மெஞ்சிய பொருள்களை †ஏமுறநாடித், திங்கள்போலத் வெளிவிளக் கும்மே:] ஒருமுகம் எஞ்சிய பொருள்களை நாடி ஏம் உற திங்கள் போல திசை விளக்கும்—ஒருமுகம் ஈண்டு வழங்காத வேதங்களிலும் நூல்களி லுமுள்ள பொருள்களை ஆராய்ந்து இருடிகள் ஏமுறும்படி உணர்த்தித் திங்கள் போலத் திசைகளெல்லாம் விளக்குவிக்கும்;

ஏமம்-இரட்சை. கலைநிறைதலிற் றிங்கள் உவமையாயிற்று.

98-100. [ஒருமுகஞ், செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக், கறுவுகொ ணெஞ்சமொடு களம்வேட் டன்றே:] ஒருமுகம் செல் சமம் முருக்கி கறுவு கொள் நெஞ்சமொடு செறுநர் தேய்த்து ‡களம் வேட்டன்று—ஒருமுகம் திருவுள் ளத்துச் செல்கின்ற நடுவுநிலைமையைக் கெடுத்து இவர்களைக் கொல்லவேண்டு மென்று கறுவுதல் கொண்ட திருவுள்ளத்தோடே செறப்படும் அசுரர்முதலியோ ரைப் பொன்றக் கெடுத்துக் களவேள்வியை வேட்டது;

சமம்-நடுவுநிலைமை; அதனைக் கெடுத்தலாவது, தேவரையும் அசுரரையும் ஒப்பக்கருதாது தேவரைக்காத்து அசுரரையழித்தல்.

100-102. [ஒருமுகங், குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின், §மடவ ரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே;]

ஒருமுகம் குறவர் மடமகள் ||கொடி போல் நுசுப்பின் வள்ளியொடு நகை அமர்ந்தன்று—ஒருமுகம் குறவருடைய மடப்பத்தையுடையமகளாகிய வல்லி போலும் இடையினையுடைய வள்ளியுடனே மகிழ்ச்சியைப் பொருந்திற்று;

மடவரல் நகையெனக் கூட்டித் தனக்கு ஓரறியாமைதோன்றுந் தன்மை யுடைத்தாகிய நகையென்று கூறுக.

அவளொடு ¶நகையமர்தலின் அறியாமை கூறினார். காமநுகர்ச்சி யில்லாத இறைவன் இங்ஙனம் நகையமர்ந்தான்; உலகில் இல்வாழ்க்கை நடத்தற்கென் றுணர்க. அது **"தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்" என்பதனுட் "பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர், விண்பாலி யோகெய்தி விடு வர்காண் சாழலோ" என்பதனானுணர்க.

---

* மரபுளி: உளி, மூன்றாவதன் பொருள்படுவதோரிடைச்சொல். அந் தணர் - அழகிய தட்பத்தினையுடையார். ஓர்க்கும் - திருவுள்ளத்து அடைக்கும். (வேறுரை)

† ஏமுறநாடி - இரக்கைபொருந்த ஆராய்ந்து; ஏமம் கடைக்குறைபட் டது. (வேறுரை)

‡ போர்க்களத்தை விரும்பாநிற்கும். (வேறுரை)

§ கற்பின் வரலாற்றினையுடைய வள்ளிநாய்ச்சியார். (வேறுரை)

|| வல்லிசாதக்கொடி. (வேறுரை)

¶ 'நகையமர்தல் இன்றி யமையாமை' எனவும் பிரதி வேறுபாடுண்டு.

** திருவாசகம், திருச்சாழல், க.

விரிந்தன்று (92) கொடுத்தன்று (94) வேட்டன்று (100) நகையமர்ந்தன்று (102) ஓர்க்கும் ((96) விளக்கும் (98) என்பன முற்றுச்சொல்.

102-3. [ஆங்கம் மூவிரு முகனு முறைநவின் றொழுகலின்:]

அ மூவிரு முகனும்—அவ்வாறுமுகமும்,

ஆங்கு முறை நவின்று ஒழுகலின்—அத்தொழில்களிடத்துச செய்யும் முறைமைகளைப் பயின்று நடத்துகையினாலே அம்முகங்களுக்குப் பொருந்த,

104-6. [ஆரந் தாழ்ந்த வம்பகட்டு *மார்பிற், செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடுபு, வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்:]

ஆரம் தாழ்ந்த அம் பகட்டு மார்பின் செம்பொறி வாங்கியதோள்—பொன்னாற்செய்த ஆரந்தங்கிய அழகையுடைத்தாகிய பெருமையையுடைய மார்பிற் கிடக்கின்ற உத்தம இலக்கணமாகிய சிவந்த மூன்றுவரியினையும் தன்னிடத்தே வந்து விழும்படி வாங்கிக்கொண்ட தோள்,

வாங்கிய வென்றார், அவ்வரி தோளளவும் வந்துகிடந்தமை தோன்ற; †"வரையகன் மார்பிடை வரியு மூன்றுள" என்றார் பிறரும்.

மொய்ம்பின் வண்புகழ் நிறைந்து—தம்முடைய வலியினாலே பெரிய புகழ் நிறையப்பட்டு,

சுடர் விடுபு வசிந்து வாங்குதோள்—சுடரையுடைய படைக்கலங்களை யெறிந்து பகைவர்மார்பைப் பிளந்து அவற்றை வாங்குதோள்,

சுடரையுடைய படைக்கலங்களைச் சுடரென்றார்; அஃது ஆருபெயர்.

நிமிர் தோள்—பெருகு தோள்,

நிறைந்து நிமிர்தோளென்க.

வசிந்தென்பது பிளந்தென்னும் பொருட்டாதலின், செய்வதன் றொழிற்கும் செய்விப்பதன் றொழிற்கும் பொது. அசுரர்முதலியோரை அழிக்குங்காலத்துப் பன்னிருகையினும் படைக்கலமேந்துவனென்றுணர்க; அஃது அறுவேறுவகையினஞ்சுவர மண்டி (58) என்றதனானுணர்க.

இனி மொய்ம்பினையுடைத்தாய் ஒளிவிட்டு நிறைந்து வளையவேண்டுமிடம் வளைந்து நிமிரவேண்டுமிடம் நிமிருந் தோளென்று முரைப்பர். இதற்கு வசிந்தென்பதனைத் தொடியொடுகொட்ப (114) மணியிரட்ட (115) என மேலே கூட்டுக. வசிந்து - பகைவர்மார்பைப்பிளந்தென்க. வசிந்தென்பதற்குப் படைக்கலங்களால் வடுப்பட்டென்று பொருளுரைத்தல் இறைவனாதலிற் பொருந்தாது.

இனி, அவை போர்செய்யாக்காலத்து இங்ஙனமிருக்குமென்று அவற்றின் இயல்பு கூறுகின்றார்.

அத்தோள்களில் ஒருகை யென்க.

107. [விண்செலன் மரபினையர்க் கேந்திய தொருகை] ஒருகை ‡விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது—ஒருகை எக்காலமும் ஆகாயத்தே இயங்குதன் முறைமையினையுடைய தெய்வநிருடிகளுக்குப் பாதுகாவலாக வெடுத்தது:

---

* மார்பிலே சீதேவியைக் கைக்கொண்ட வலி, ஒளிவிட்டு வளவியபுகழ் நிறைந்து வளர்ந்து நீண்டுநிமிர்ந்ததோள்கள். (வேறுரை)

† சீவகசிந்தாமணி, 1462

‡ ஆகாயத்திலே இயக்கத்தை முறைமையாகவுடைய தேவர்க்கு. (வேறுரை) "சுடரொடு திரிதரு முனிவரு மமரரும்" (சில. வேட்டுவ)

108. [உக்கஞ் சேர்ந்திய தொருகை:] ஒருகை உக்கம் சேர்ந்தியது—எந்தியகைக்கு இணைத்தகை மருங்கிலேவைத்தது;

என்றது: ஞாயிற்றின்வெம்மையைப்* பல்லுயிரும் பொறுத்தனற்குவென்றகருணைத் தன்மைருளினுங் கூடாதொடுநிரிந்து, அவ்வெம்மையைப்பொறுக்கின்ற முனிவரைப்பாதுகாக்கவே உலகத்தைத்தாங்கிக் காத்ததாயிற்று. இதனானே இக்கை மாயிருஞ்ஞாலமதுவின்றி விளக்கப் பல்கதிர்விரித்த முகத்திற்கு ஏற்ற தொழில்செய்ததாயிற்று.* இது, "*"திலமிசை வாழ்வ ரலமர நீரத், தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கி, காலுண வாகக் கூடொடு கொட்கு, மலிர்சடை முனி வரு மருள்" என்ற †றப்பாட்டாலுணர்க.

மனமும் முகமும் கையும் ஒருதொழிலேச்செய்தலின், எனைக்கை தொழி லின்றி மருங்கிலே கிடந்தது.

109-110. [கலம்பெற கலிங்கத்துக் குறங்கின்மிசை யசைஇய தொரு கை, யங்குசங் கடாவொருகை] ஒருகை அங்குசம் கடாவ ஒருகை கலம் பெற †கலிங்கத்து குறங்கின்மிசை அசைஇயது—ஒருகை தோட்டியைச் செலுத்தா நிற்க மற்றைக்கை செம்மை நிறம்பெற்ற ஆடையையுடைத்தாகிய துடையின் மேலே கிடந்தது;

இஃது யானையேறுவார்க்கு இயல்பென்று கூறினார். தன்னை வழிபடுவாரி டத்து வருங்கால் யானைமேல்வந்து அருள்செய்தல் இயல்பாகலின், இக்கைகள் காதலினுவந்து வாங்கொடுத்த முகத்திற்கு ஏற்றவாறுணர்க.

110-11. இருகை ‡ஐ இரு வட்டமொடு எஃகு §வலம் திரிப்ப—இரண்டுகைகள் வியப்பையும் கருணையையுமுடைய பரிசையுடனே வேலையும் வலமாகச் சுழற்ற,

இதனானே, அசுரர்வந்து வேல்வினைக் கெடாமல் அவரை ஓட்டுதற்கு இவற்றைச் சுழற்றுதலில் வேல்நிழற்கும்முகத்திற்கு இக்கைகள் ஏற்றவாறுணர்க.

111-3. ஒருகை ||மார்பொடுவிளக்க ஒருகை ¶தாரொடு பொலிய—முனிவர்க்குத் தத்துவங்கோக்கறி உரையிற்றாதொருனை உணர்த்துங் காலத்து ஒருகை மார்போடே வினங்காகிற்க, ஒருகை மார்பின்மாலை தாழ்ந்ததனோடே சேர்ந்து அழகுபெற,

என்றது: இறைவன் மோனமுதநிலையத்தனாய்த் தானேயிருந்து காட்டா ரானமைந்தசம்புன் நீர்கிறைத்தாற்போல ஆனந்தமயமானவொளி மாணாக்கர்க்கு

---

* செய்யுள், ௫௬. † புடைவை (வேறுரை)

‡ ஐந்தாகிய பெருந்த பரிசை; பத்துத் திருமுகத்தினையுடைய கடவுண் மெனினுமமையும். (வேறுரை)

§ வெற்றிபெறச் சுழற்ற. (வேறுரை)

|| மார்பினிடத்தே மௌனமந்திரத்தைப் பேணுதிற்க. (வேறுரை.)

¶ தார் - மார்பிலுள்ளமாலை; "வண்ண மார்பிற் முருகு கொன்றை" (புற நா. கடவுள்.)

நிறைதலின், அதற்குரிய மோனமுத்திரைகூறிற்று ; *"தன்னை யுன்னி யென்னை யாக்கிய போழ்தே யானவ னாயினேன்" என்பதனானுணர்க.

இக்கைகள் எஞ்சியபொருள்களை விளக்குமுகத்திற்கு ஏற்றவாறுணர்க.

113-5. [ஒருகை, கீழ்வீழ் †தொடியொடு மீமிசைக் கொட்ப வொருகை, பாடின் படுமணி யிரட்ட:] ஒருகை தொடியொடு மீமிசை கொட்ப கீழ் வீழ் ஒருகை பாடு இன் படு மணி இரட்ட—ஒருகை தொடியொடு மேலே சுழன்று களவேள்விக்கு முத்திரைகொடுப்பக் கீழேவீழ்ந்த மற்றைக்கை ஓசையினிதாகிய ஒலிக்கின்றமணியை மாறியொலிக்கப்பண்ண,

இக்கை களவேள்வி வேட்கின்ற முகத்திற்கு ஏற்றவாறுணர்க.,

115-7. ஒருகை ‡நீல் நிற விசும்பின் மலி துளி பொழிய ஒருகை வான் அரமகளிர்க்கு வதுவை சூட்ட—ஒருகை நீல நிறத்தையுடைய மேகத்தாலே மிக்க மழையைப் பெய்வியாநிற்க, ஒருகை தெய்வமகளிர்க்கு மணமாலையைச் சூட்ட,

என்றது: வள்ளியொடு நகையமர்ந்தமுகம் உலகிற்கு இல்வாழ்க்கை நிகழ்த்துவித்ததாகலின், அவ்வில்வாழ்க்கை நிகழ்த்துதற்கு மழையைப் பெய்வித்தது ஒருகை; ஒருகை இல்வாழ்க்கை நிகழ்த்தற்பொருட்டு மணமாலையைச் சூட்டிற்றென்றவாறு.

117-8. ஆங்கு அ பன்னிருகையும் பால் பட இயற்றி—அப்படியே அந்தப்பன்னிரண்டுகையும் முகத்தின் பகுதியிலே படும்படி தொழில்செய்து,

முகங்களில் ஒருமுகம் ஓர்க்கும் (96) ஒருமுகம் விளக்கும் (98) ஒருமுகம் வேட்டன்று (100) ஒருமுகம் அமர்ந்தன்று (102) ஒருமுகம் விரிந்தன்று (92) ஒருமுகம் கொடுத்தன்று (94) அம்மூவிருமுகனும் அத்தொழில்களிடத்துச்செய்யும் முறைமைகளைப் பயின்றுநடத்துகையினாலே (103) அம்முகங்களுக்குப்பொருந்தத் தோள்களில் (106) இருகை (110) திரிப்ப (111) ஒருகை விளங்க (112) ஒருகை பொலிய (113) ஒருகை கொட்ப (114) ஒருகை இரட்ட (115) ஒருகை பொழிய (116) ஒருகை சூட்ட (117) ஒருகை ஐயர்க்கேந்தியது (107) ஒருகை உக்கஞ் சேர்த்தியது (108) ஒருகை கடாவ (110) ஒருகை அசைந்தது (109) அப்படியே பன்னிருகையும் முகத்தின்பகுதியிலே படும்படி தொழில்செய்தென இச்சொல்முடிபுக்கேற்பக் கைகளையும் முகங்களையும் மாட்டாக முடிக்க. திரிப்பவென்பதுமுதலிய நிகழ்காலச் செயவெனெச்சங்கள் ஏந்தியது சேர்த்தியதென முற்றுவினைகொண்டு முடிந்தன.

119. அந்தரம் பல்லியம் கறங்க—ஆகாயத்தினது துந்துமி ஒலிப்ப,

119-20. திண் §காழ் ||வயிர் எழுந்து இசைப்ப—திண்ணிய வயிரத்தையுடைய கொம்பு மிக்கொலிப்ப,

---

* (கலி. 43 - மேற்)

† பாராவனையோடே. (வேறுரை.) [(மலை. 1.)

‡ "நீனிறவிசும்பின்" (பெரும்பாண் 135), "இருணிறவிசும்பின்"

§ கரிய கொம்பு. (வேறுரை.)

|| "வயிரும் வளையு மார்ப்ப" (முல்லை..92.)

வால் வளை ஞரல—வெள்ளிய சங்கு முழங்க,

121. உரம் தலை கொண்ட *உரும் இடி முரசமொடு—வலியைத் தன்னிடத்தேகொண்ட உருமேற்றினது இடிப்புப்போலும் ஓசையையுடைய முரசுடனே,

122. பல் பொறி மஞ்ஞை வெல் கொடி அகவ—பலபீலியையுடைய மயில் அவனாணையினாலே வென்றெடுத்த கொடியிலேயிருந்து ஒலியாநிற்க,

பொறி, ஆகுபெயர்.

123. விசும்பு ஆறாக—ஆகாயமே வழியாக,

விரை செலல் முன்னி—விரைந்த செலவினை மேற்கொண்டு,

124. [உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீர் :] ஓங்கு உலகம் புகழ்ந்த உயர் †விழுச்சீர்—நன்மையோங்கும் நன்மக்கள் புகழ்ந்த உயரும் சீரினையுடைய புகழினையுடைய,

125. அலைவாய் சேறலும் நிலைஇய பண்பு—நாமனூரலைவா யென்னும் திருப்பதியேறஎழுந்தருளுதலும். அவற்கு நிலைபெற்றகுணம் ;

குன்றமர்ந்துறைதலுமுரியன் ; அதாஅன்று (77) வேழமேல்கொண்டு (82) இயற்றிக் (118) கறங்க (119) இசைப்ப ஞரல (120) அகவ (122) முன்னி (123) அலைவாய்ச்சேறலும் நிலைஇயபண்பென முடிக்க.

அதாஅன்று—அதுவன்றி,

- திருவாவினன்குடி.

126. சீரை தைஇய வென்பதுமுதல் முனிவர் முற்புக (137) என்னுந் துணையுமொருதொடர்.

சீரை ‡தைஇய உடுக்கையர்—மரவுரியை உடையாகச்செய்த உடையினையுடையர்,

இதற்குக் கற்றோய்த்தல் முதலியன செய்த உடுக்கையரென்பாருமுளர்.

126-7. சீரொடு வலம்புரி புரையும் வால் §நரை முடியினர்—அழகோடு வடிவாலும் நிறத்தாலும் வலம்புரிச்சங்கினை யொக்கும் வெள்ளிய நரைமுடியினையுடையர்,

128. மாசு அற இமைக்கும் உருவினர்—எக்காலத்தும் நீராடுதலின் அழுக்கற விளங்கும் வடிவினையுடையர்,

128-30. மானின் உரிவை தைஇய வான் கெடு மார்பின் என்பு எழுந்து இயங்கும் யாக்கையர்—திருட்டினாசினம் போர்த்த விரதங்களால் விட்ட பட்டினியால் தசைகெடுகின்ற மார்பினெலும்புகள் கோவைதோன்றி உலவும் உடம்பினை யுடையார்,

தைஇய மார்பென்க.

---

* "உருமினிடிமுரசார்ப்ப" (௫௧)

† விழுமிய அழகு (வேறுரை)

‡ தைத்த (வேறுரை)

§ நரைக்கொண்டையினை யுடையார். (வேறுரை)

130-31. *நன்பகல் பல உடை கழிந்த உண்டியர்—எப்பொருளுநுகர்தற்கு நன்றிய பகற்பொழுதுகள் புலவும் சோக்கழிந்த உணவினையுடையர்,*

இது மாதோபவாசங்கூறிற்று.

131-2. *இலைமொடு செற்றம் நீக்கிய மனத்தினர்—மாதுபாட்டோடே நெடுங்கால நிற்கும் செற்றத்தினையும் போக்கிய மனத்தினை யுடையர்,*

பகைமை நெடுங்காலம் நிகழ்வது செற்றம்.

132-3. [*யாவதும், கற்றோர் எதிரா வறிவினர்*] **கற்றோர் யாவதும் அறியா அறிவினர்—பலவற்றையும் கற்றோர் சிறிதும் அறியப்படாத இயல்பான அறி வினையுடையர்,*

133-4. *கற்றோர்க்கு தாம் வரம்பு ஆகிய தலைமையர்—பலவற்றையும் கற் றோர்க்குத் தாம் எல்லையாகிய தலைமையையுடையர்,*

என்றது கல்வியைக் கரைகண்டா ரென்றவாறு.

¶134-5. *காமமொடு கடு வினம் கடிந்த †காட்சியர்—ஆசையோடே கடிய வினத்தையும் போக்கின அறிவினையுடையர்,*

கோபத்தின்பின்னுச் சிறிதுபொழுது நிற்பது வினம்.

135-6. *இம்பை யாவதும் அறியா இயல்பினர்—தவத்தான் மெய்வருத் தம் உளவேனும் மனத்தான் வருத்தம் சிறிதுமறியப்படாத இயல்பினையுடையர்,*

மே வர—திருவுள்ளம் பொருந்துதல் வர,

137. ‡*துனி இல் காட்சி முனிவர் முன் புக*—ஒருவருடனும் வெறுப்பில் லாத நல்ல அறிவினையுடைய முனிவர் முன்னே செல்ல,

உடுக்கையர் மழியினர் உருவினர் யாக்கையர் உண்டியர் மனத்தினர் அறி வினர் தலைமையர் காட்சியர் இயல்பினராகிய முனிவர் மேவர முற்புகவென முடிக்க.

138. *புகைமுகந்தன்ன* என்பதுமுதல் மேவலர் (142) என்னுந்துணை யும் பாடொரைக் கூறிற்று.

138. §*புகை முகந்தன்ன மாசு இல் தூ உடை*—புகையை முகந்தாலொ த்த நெய்வத்தன்மையால் அழுக்கேறாத தூய உடையினையும்,

139. *முகை வாய் அவிழ்ந்த தகை சூழ் ஆகத்து* · ‖*முகை வாய்கொழிஞ்ச மலை சூழ்ந்த மார்பினையும்,*

கட்டுதலிற் றகையென்றார், மாலையை ; ஆருபெயர்.

---

* *யாவதும் கற்றோர்*—எவ்வகைப்பட்ட பொருளினையும் கற்று வல்லு ர். (வேறுரை)

† *தோற்றத்தினை யுடையர்.* (வேறுரை)

‡ *தயாமில்லாத தோற்றம்.* (வேறுரை)

§ *புகையைக் கையாலே முகந்தாற்போன்று* செய்யவாய. (வேறுரை)

‖ *மொட்டுப்பூக் கொண்டினிவாய்ச் சொண்ட.* (வேறுரை)

140-41. செவி சேர்பு வைத்த செய்வு உறு நிலவின் நல் யாழ் கவின்ற - *ஞ்சு செவியாலே சருநியையளாத் தாம்பைக்கட்டின சற்றதனது நம் வார்த் *னையுடைய நன்முகிய யாழின் இசையிலே பயின்ற,

141-2. *கயன் உடை நெஞ்சின் †மென்மொழி மேகலர் இன் சாம்பு ஸர - சாமுடைய நெஞ்சாலே எக்காலமும் மெல்லிய வார்த்தை சொல்லு *ம்பொருந்திய கந்தருவர் இனியாரம்பை வாசிக்க,

கவின்ற சயனென்க.

143. சோயின்றென்பது முதல் மகளிர் (147) என்னுந்துணையும் பாடு *களைக்கூறிற்று.

143. கோய் இன்று இயன்ற யாக்கையர் - மக்களுக்குரியநோய் இல்லே *ாக திருமித்த உடம்பினையுடையராய்,

143-4. மாவின் அவிர் தளிர் புரையும் மேனியர் - மாவினது விளங்கு இன்ற தளிரையொக்கும் நிறத்தினையுடையராய்,

144-5. அவிர்தொறும் பொன் உரை கடுக்கும் நிதலியர் - விளங்குர் தோறும் பொன்னுரை மினுங்கினாற்போலும் தூத்தியினையுடையராய்,

145-7. இன ரகை ‡பருமம் தாங்கிய பணிந்து எது அல்குல் §மாசு இல் மகளிரொடு - கட்டினிய ஒளியினையுடைய பதினெண்கோவையாகிய மேகலை யணிந்த தாழவேண்டிடவிடம் தாழ்த்து உயரவேண்டியவிடம் உயர்ந்த அல்குலை யுடைய குற்றமில்லாத கந்தருவமகளிரோடே,

மறு இன்றி விளக்க - குற்றமின்றாய் விளங்காகிற்க,

உடையினையும் (138) ஆகத்தினையுமுடைய (139) மெல்மொழிமேவலர் (112) யாகரை (143) முதலியவற்றையுடையராய், மாசில்லாத மகளிரோடே மறுவின்றி விளங்க (147) இன்னரம்புனர (142) வெனமுடிக்க.

148. கடுவோடு ஒடுங்கிய தூம்பு உடை வால் எயிறு - நஞ்சுடனே உறைத் தன்னே இடந்த நீளினையுடைய வெள்ளிய எயிற்றினையும்,

மிடற்றின் நஞ்சு நல்லிடத்தேதோன்றுதலின் 'கடுவோடு' என்றார். எயிறு காளி, காளாத்திரி, யமன், யமதூதியென கானகாம்.

149. அழலென உயிர்க்கும் அஞ்சவரு கடு நிறல் - நெருப்பென்னும் படி சுட்டுயிர்ப்புக்கொள்ளும் கண்டாாக்கு அசசந்தோன்றும் கடிய வலியினையு முடைய,

150. பாம்பு பட புடைக்கும் - பாம்பு படும்படி அடிக்கும்

150-51. பல் வரி கொடு சிறை புள் அணி *ன் கொடி செல்வனும் - பல வரியினையுடைத்தாகிய வளைந்த சிறகினையுடைய கருடனையணிந்த *ண்ட கொடி யினையுடைய திருமாலும்,

---

* எஃகுச் செவி - மூவகைச் செவியிலும் தலையான கூரிய செவி; "எஃகு நன் செவிகள் வீழ" (சீவக. 2718)

† மெத்தென்ற சொற்சேர்ந்தோராகிய கிந்நியாதரர் (வேறுரை)

‡ அரைப்பட்டிகை. (வேறுரை)

§ நெய்வக்குறத்திகளோடே, (வேறுரை)

151-4. [வெள்ளேறு, வலவயி னுயரிய பலர்புகழ் திணிதோ, ளுமை யமர்ந்து விளங்கு மிமையா முக்கண், மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனும்:]

*வலம் வயின் வெள்ளேறு உயரிய செல்வன் - வெற்றிக்களத்தே வெள்ளிய ஏற்றினை வெற்றிக்கொடியாக எடுத்த உருத்திரன்,

உமை அமர்ந்து விளங்கும் செல்வன் - இறைவி ஒருபாகத்தே பொருந்தி விளங்கும் செல்வன்,

பலர் புகழ் திணி தோள் - பலரும் புகழ்கின்ற சிக்கென்ற தோளினையும்,

இமையா முக்கண் செல்வன் - இதழ் குவியாத மூன்றுகண்ணினையு முடைய செல்வன்,

மூ எயில் முருக்கிய முரண் மிகு செல்வனும் - முப்புரத்தையெரித்த மாறு பாடு மிக்க செல்வனும்,

155. நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து - நூற்றைப்பத்தாகவடுக்கிய கண்ணினையும்,

என்றது ஆயிரங்கண்ணென்றவாறு.

155 - 6. நூறு பல் வேள்வி முற்றிய வென்று அடு கொற்றத்து — நூறென்னும் எண்ணாகிய பலவேள்விகளை வேட்டுமுடித்ததனாற்பெற்ற பகைவரை வென்றுகொல்கின்ற வெற்றியினையும்,

157. [ஈரிரண் டேந்திய மருப்பின்:] எந்திய ஈரிரண்டு மருப்பின் - தலைகள் எந்தியிருக்கின்ற நான்காகிய கொம்பினையும்,

எழில் நடை - அழகினையுடைய நடையினையும்,

158. தாழ் பெரு †தட கை - நிலத்தே கிடக்கின்ற பெரிய வளைவினையுடைய கையினையுமுடைய,

158-9. உயர்த்த யானை எருத்தம் ஏறிய திரு கிளர் செல்வனும் - எல்லாராலும் உயர்த்துச் சொல்லப்படுகின்ற யானையின் புறக்கழுத்திலே ஏறிய திருமகள் விளங்கும் இந்திரனும்,

உயர்த்த உயர்த்தவென விகாரமுமாம்.

நாட்டத்தினையும் (155) கொற்றத்தினையுமுடைய (156) செல்வனென்க.

மருப்பு (157) முதலியவற்றையுடைய யானையென்க.

160-61. நால் பெரு தெய்வத்து நல் நகர் நிலைஇய உலகம் காக்கும் ஒன்று புரி கொள்கை - நான்காகிய பெரிய தெய்வத்தையுடைய நன்றாகிய ஊர்கள் நிலைபெற்ற உலகத்தைக் காக்கும் ஒருதொழிலையே விரும்பிய கோட்பாட்டையுடைய செல்வன் (151) என முன்னேகூட்டித் திருமாலுக்கு அடையாக்குக.

---

* வலவயின உயரிய - வெற்றியினால் ஏறிய (வேறுரை.)

† "தடவென்கிளவி கோட்டமுஞ் செய்யும்" (தொல் உரி. 25)

*நாற்பெருந்தெய்வமாவன : இந்திரன், யமன, வருணன், சோமனென்னுந் தெய்வங்கள்.

162. பலர் புகழ் மூவரும் தலைவராக—பலரும் புகழ்கின்ற அயன் அரி அரனென்னு மூவரும் தத்தமக்குரிய தொழில்களை முன்புபோலே நிகழ்த்தித் தலைவராகவேண்டி,

என்றது : பிள்ளையார் அயனைச்சபித்தலின், அயன் படைத்தற்றொழிலைத் தவிரவே ஏனையிருவர்க்கும் காத்தற்றொழிலும் அழித்தற்றொழிலும் இன்றாமாகலின் மூவரும் தத்தமக்குரிய தொழில்களைப்பெற்றுத் தலைவராகவென்றார்.

[163-5. எமுறு ஞாலந் தன்னிற் றோன்றித், தாமரை பயந்த தாவி லூழி, நான்முக வொருவற் சுட்டி.]

ஞாலந்தன்னில் தோன்றி †ஏம் உறு நான்முக ஒருவன் சுட்டி—பிள்ளையார் சபித்தலாலே மண்ணிடத்தே தோன்றி மயக்கமுறுகின்ற நான்குமுகத்தையுடைய அயனைப் பழையநிலையிலே நிறுத்தக் கருதி,

தாமரை பயந்த ஊழி தா இல் ஒருவன்—திருமாலுடைய திருவுந்தித்தாமரை பெற்ற ஊழிகடோறும் தன் படைத்தற்றொழிலில் வருத்தமில்லாத ஒருவன் (165)

இனித் தாமரையென்னும் எண்ணைத்தந்த அழிவில்லாத ஊழிக்காலத்தையுடைய அயனுமாம்.

பயந்த ஒருவனென்க.

சாபமென்றது : பிள்ளையார் அசுரரையழித்துத் தேவரைக் காத்ததற்கு இந்திரன்மகள் தெய்வயானையாரை அவர்க்குக் கொடுத்தவிடத்தே, பிள்ளையார் தம்கையில் வேலைநோக்கி, "நமக்கு எல்லாந்தந்தது இவ்வேல்" என்ன, அருகிருந்த அயன் "இவ்வேலிற்கு இந்நிலை என்னால் வந்ததன்றோ" என்றானாக, "நங்கையில் வேலுக்கு நீ கொடுப்பதொரு சத்தியுண்டோ" என்று கோபித்து, "இங்ஙனங் கூறிய நீ மண்ணிடைச்செல்வாய்" என்ற சாபத்தை.

காண் வர—அழகு தோன்ற,

166. பகலில் தோன்றும் இகல் இல் காட்சி—ஒருபொருள் பலவாமாறு பகுத்துக்காண்டற்கண் வேறுபடத் தோன்றும் தம்முள் மாறுபாடில்லாத அறிவினையுடைய,

167. ‡நால் வேறு இயற்கை பதினொரு மூவரொடு—நான்காகிய வேறுபட்ட இயல்பினையுடைய முப்பத்துமூவரும்,

என்றது : ஆதித்தன், உருத்திரன், வசு, மருத்துவனென்னும் ஒரோவோர் பொருள்கள் பலவாகப் பகுக்குங்காற் பன்னிருவர் பதினொருவர் எண்மர் இருவராகப் பகுக்க நான்குகூறாய் முப்பத்துமூவராயினாரென்றவாறு; பதினொருவரா

---

* நாற்பெருந் தெய்வம் - அந்தணர் தெய்வம், அரயர்தெய்வம், வசியர் தெய்வம், சூத்திரர் தெய்வம்; என்பதைச் சிலப்பதிகாரத்தும் கண்டுகொள்க. (வேறுரை)

† "எமுறுகடுந்திண்டேர்" (கலி. 27)

‡ நால் வேறு இயற்கை - சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் (வேறுரை)

கிய மூவரென்க. அவர் ஆதித்தர் பன்னிருவரும், உருத்திரர் பதினொருவரும், வசுக்கள் எண்மரும், மருத்துவர் இருவருமாம்.

ஒடு, எண்ணொடு.

168. ஒன்பதிற்று இரட்டி உயர் நிலை பெறீஇயர்—பதினெண் வகையாகிய உயர்ந்த நிலையைப் பெற்றவரும்,

என்றது, பதினெண்கணங்களை. அவர்: தேவரும், அசுரரும், தைத்தியரும், கருடரும், கின்னரரும், கிம்புருடரும், இயக்கரும், விஞ்சையரும், இராக்கதரும், கந்தருவரும், சித்தரும், சாரணரும், பூதரும், பைசாசகணமும், தாராகணமும், நாகரும், ஆகாயவாசிகளும், போகபூமியோருமெனவிவர்; இதற்குப் *பிறவாறுமுரைப்பர். பெறீஇயர், தொழிற்பெயர்.

169. மீன் பூத்தன்ன தோன்றலர் - உடுக்கள் பொலிவுபெற்றுத் தோன்றினாலொத்த தோற்றத்தையுடையராய்,

169-70. மீன் சேர்பு வளி கிளர்ந்தன்ன செலவினர் - மீன்களுலாவுகின்றவிடத்தைச்சேர்ந்து காற்று எழுந்தாலொத்த செலவினை யுடையராய்,

170-71. வளி இடை தீ எழுந்தன்ன திறலினர் = †காற்றிடத்தே நெருப்பெழுந்தாலொத்த வலியினையுடையராய்,

171-2. தீ பட உரும் இடித்தன்ன குரலினர் - நெருப்புப்பிறக்க உருமேறு இடித்தாற் போன்ற குரலினையுடையராய்,

இவை வினையெச்சமுற்று.

172-3. [விழுமிய, வுறுகுறை மருங்கிற்றம் 'பெறுமுறை கொண்மார்:] தம் விழுமிய பெறுமுறை குறை உறு மருங்கில் கொண்மார் - தம்முடைய சீரிய படைத்தல் காத்தல் அழித்தலென்னுந் தொழில்களைப் பண்டுபோலப் பெறுமுறைமையினைக் குறைவேண்டி நின்று பெறுங்கூற்றாலே முடித்துக்கோடற்கு,

174. அந்தரம் கொட்பினர் - ஆகாயத்தே சுழற்சியினையுடையராய்,

[வந்துடன் காண:] உடன் வந்து காண—சேரவந்து காணும்படியாக,

175. தா இல் கொள்கை மடந்தையொடு—வருத்தமில்லாத அருட்கற்பினையுடைய தெய்வயானையாருடன்,

175-6. [சின்னாள், ஆவினன்குடி யசைதலும் உரியன்] ஆவினன்குடி சின்னாள் அசைதலும் உரியன் - ஆவினன்குடியென்னும் ஊரிலே சிலநாள் இருத்தலுமுரியன்;

பலர்புகழ்மூவரும் தலைவராகவேண்டி (162) அதற்குக் குறைபாடுண்டாக்கின நான்முகவொருவனைக்கருதி (165) ஒன்றுபுரிகொள்கைப் (161) புள்ளணி நீள்கொடிச்செல்வனும் (151) முரண்மிகு செல்வனும் (154) யானையெருத்தமேறிய செல்வனும் (159) முப்பத்துமூவரும் (167) பதினெண்கணங்களும் (168) தோன்றலர் (169) செலவினர் (170) திறலினர் (171) குரலினர்

---

* பிறவாறுரைத்தல், புறநானூறு, கடவுள்வாழ்த்தின் உரையிலும், சிலப்பதிகாரம், 5: 176 - ஆம் அடியுரையிலும், நிகண்டுகளிலும் காணலாகும்.

† "கான் முளையெரி நிகழ்ந்தன்ன நிறையருஞ் சீற்றம்" (பதிற். "இருங்கண்.")

(172) கொட்பினராய் உடன்வந்து (174) தம் (173) விழுமிய (172) பெறுமுறை குறையுறுமருங்கின் முடித்துக் கோடற்கு (173) மென்மொழிமேவலர் இன்னரம்புளர (142) முனிவர் (137) மேவர (166) முற்புகக் (137) காணத் (174) தான் ஆவினன்குடியிலே காண்வர (165) அசைதலுமுரியனென முடிக்க.

கந்தருவர் பாட்டான் முனிவுதீர்ப்பார்.

முனிவர் தம்மை மறாமைபற்றி முன்னேசென்றார்.

இனிச் சித்தன்வாழ்வென்று சொல்லுகின்றவூர் முற்காலத்து ஆவினன் குடியென்று பெயர்பெற்றதென்றுமாம். அது "நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன் வாழ் - வில்லந் தொறுமூன் றெரியுடைத்து - நல்லரவப், பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியநின் - னாட்டுடைத்து நல்ல தமிழ்" என்று ஔவையார் கூறியதனானுணர்க; *சித்தனென்பது பிள்ளையாருக்குத் திருநாமம்.

அதாஅன்று—அதுவன்றி,

௪.—திருவேரகம்.

177. இரு மூன்று எய்திய இயல்பினின் வழாஅது—†ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றலென்னும் ஆறாகிய நன்மைபொருந்திய இலக்கணத்தில் வழுவாமல்,

வழாமல், வழுவாமலெனத் திரிக்க.

178. இருவர் சுட்டிய பல் வேறு தொல் குடி—தாயும் தந்தையுமாகிய இருவர் குலத்தையும் உலகத்தார் நன்றென்றுமதித்த பலவாய் வேறுபட்ட பழையகுடியிற் பிறந்த இருபிறப்பாளர் (182)

குடி - ‡ குண்டினர், காசிபர் என்றாற்போல்வன.

179 - 80. [அறுநான் கிரட்டி யிளமை நல்லியாண், டாறினிற் கழிப்பிய:] அறுநான்கு இரட்டி ஆண்டு நல்லிளமை ஆறினில் கழிப்பிய—இருபத்துநான்கின் இரட்டியாகிய நாற்பத்தெட்டியாண்டு நல்லிளமையை வேதங்கூறிய நெறியிலே போக்கிய இருபிறப்பாளர் (182),

இவர் பிரமசரியங்காத்த அந்தணர்.

அறன் கூறில் கொள்கை—அறத்தை எப்பொழுதும் கூறுகின்ற கோட்பாட்டினையும்,

181. மூன்று வகை குறித்த முத்தீ செல்வத்து—நாற்சதுரமும் முச்சதுரமும் வில்வடிவுமாகிய §மூன்றுவகையைக் கருதின ஆகவனீயம் தக்கிணாக்கினி காருகபத்தியம் என்னும் மூன்று தீயானுண்டாகிய செல்வத்தினையுமுடைய,

---

* இது முருகக்கடவுள் ஆயிரநாமத்துள் ஒன்று.

† "ஓதல் வேட்ட லவைபிறர்ச் செய்த, லீத லேற்றலென் றாறுபுரிந் தொழுகு, மறம்புரி யந்தணர்" (பதிற். 24.)

‡ குண்டலரென்றும் பிரதிவேறுபாடுண்டு.

§ இவற்றுட் பின்னைய இரண்டன் வகையும் இக்காலத்து வழங்குவனவற்றிற்கு வேறுபட்டிருத்தலின், இம்மூன்று வகையும் சாகாபேதமாக இருத்தல் வேண்டுமெனக் கூறுகின்றனர்.

182. இருபிறப்பாளர்—உபாயனத்துக்கு முன்பு ஒருபிறப்பும் பின்பு ஒரு பிறப்புமாகிய இருபிறப்பினையுடைய அந்தணர்,

மொழுது அறிந்து நுவல—நாக்கள் வழிபடுங்காலமறிந்து தோத்திரங்களைக் கூற,

183. ஒன்பது கொண்ட மூன்று புரி நன் னூல்—மூன்றற்கொண்டு மும்புரியாக்குதலின், ஒன்பதாகியநூலைத் தன்னிடத்தே கொண்ட ஒருபுரி மூன்றாகிய தண்ணிய பூணுநூலையும்,

ஞாணினையும் (183) கொள்கையினையும் (180) செல்வத்தினையுமுடைய (181) இருபிறப்பாளரென்க.

184. புலரா காழகம் புரள உமிழ—சோடுங்கால் தோய்க்கப்பட்ட கலிங்கம் உடம்பிலே கிடந்துபுரள உமிழ்ந்து,

என்றது, சாத்துடனேயிருந்து வழிபடுதல் கூறிற்று.

185. உச்சி கூப்பிய கையினர் தன் புகழ்ந்து—தலைமேலே வைத்த கையினையுடையராய்த் தன்னைத் துதித்து,

186. ஆறெழுத்து அடக்கிய அரு மறை கேள்வி—ஆறெழுத்தினைத் தன்னிடத்தே அடக்கியிருக்கின்ற கேட்டற்கரிய, மறைய உச்சரிக்கப்படும் மந்திரத்தை,

அது, *"நமோகுமாராய" என்பதாம்.

187. நா இயல் மருங்கில் கவில பாடி—நாப் புடைபெயரும் அளவிலே பயில உச்சரித்து,

188. விரை உறு நறு மலர் ஏந்தி—மணமிக்க நறிய பூவை எடுத்து,

188-9. பெரிது உவந்து ஏகத்து உறைதலும் உரியன்—பெரிது மகிழ்ந்து ஏகமென்கின்றவூரிலே இருத்தலுமுரியன்;

இருபிறப்பாளர் (182) புலரவும் இத் (184) தற்புகழ்ந்து (185) நறுமலரேந்தி (188) கூப்பியகையராய் (185) கவிலப்பாடிப் (187) பொழுதறிந்து நுவல (182) அதற்குப் பெரிதுமகிழ்ந்து (188) ஏகத்துறைதலும் உரியனெனமுடிக்க.

ஏகம் - மலைநாட்டகத்தொருதிருப்பதி.

அதாஅன்று—அதுவன்றி,

ரு—தன்றுதோறாடல்.

190. பைங்கொடி—பச்சிலைக்கொடியாலே,

எல்லாவற்றினும் பசத்திருத்தலிற் பச்சிலையென்ற பெயர்பெற்றது; பச்சிலையென்னாது தினைவினைமுதன்மேலேற்றிப் பைங்கொடி யென்றார்.

கறை காய் - நறுநாற்றத்தையுடையகாயை,

அது சாதிக்காய்

இடை இடுபு—நடுவேயிட்டு,

வேலன்—பழமந்தான்,

---

* 'சமக்குமாராய' என்றும் பிரதிபேதமுண்டு.

191. அம் பொதி புட்டில்—அழகினையுடைத்தாகிய பொதிதலையுடைய தக்கோலமென்னும் முதலின்காய்,

அது புட்டில்போறலிற் புட்டிலென்றார்.

விரைஇ—கலந்து,

* குளவியொடு—காட்டுமல்லிகையுடனே,

192. †வெள் கூதாளம் தொடுத்த கண்ணியன் - வெண்டாளியையும் கட்டின கண்ணியையுடையனாய்,

193. நறு சாந்து அணிந்த கேழ் கிளர் மார்பின்—நறிய சந்தனத்தைப் பூசிய நிறம்விளங்கும் மார்பினையுடைய வேலன் (190),

வேலன் பைங்கொடியாலே (190) புட்டில்விரைஇ (191) நறைக்காய் இடையிடுபு (190) குளவியொடு (191) கூதாளத்தையுங் கட்டிய கண்ணியனாய் (192),

கண்ணியன், வினையெச்சவினைக்குறிப்புமுற்று.

194. கொடு தொழில் வல் வில் கொலைஇய கானவர்—கொடிய தொழிலையுடைய வலியவில்லாற் கொல்லுதலைச்செய்த குறவர்,

'குலைஇய' என்றபாடத்திற்கு வில்லைவளைத்த கானவரென்க. எனவே கோறல் பெற்றாம்.

195. நீடு அமை விளைந்த தேன் கள் தேறல்—நெடுகின மூங்கிலிலேயிருந்து முற்றின தேனாற்செய்த கட்டெளிவை,

196. குன்றகம் சிறுகுடி கிளையுடன் மகிழ்ந்து—மலையிடத்துச் சிறிய ஊரிலே இருக்கின்ற சுற்றத்தோடே உண்டுமகிழ்ந்து,

197. ‡தொண்டகம் சிறு பறை குரவை அயர — அந்நிலத்துக்குரிய தொண்டகமாகிய சிறுபறையினது தாளத்திற்குக் குரவையாட.

கானவர் தேறலைமகிழ்ந்து குரவையாடவென்க.

198 - 9. [விரலுளர்ப் பவிழ்ந்த வேறுபடு நறுங்காற், §குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி:]

விரல் உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறு கான் கண்ணி—விரலதலைப்பாலே வலிய அலர்த்தஅலர்ந்த பூவாகலின் வேறுபடுகின்ற நறியமணத்தினையுடைய தலையிற்சூடும் மாலையினையும்,

குண்டு சுனை பூத்த வண்டு படு கண்ணி—அதுதான் ஆழ்ந்த சுனையிற்பூத்த பூவாற்செய்த வண்டுவீழ்கின்ற கண்ணி.

இஃது ஒற்றுமை நயம்பற்றிச் செயப்படுபொருண்மேல் நின்றது.

'கார்க் குண்டுசுனை' என்று பாடமாயின், கரிய ஆழ்ந்த சுனையென்க.

200. இணைத்த கோதை—இதழ்பறித்துக்கட்டின மாலையினையும்,

---

* தாளியொடு (வேறுரை.)

† வெள்ளைக் கூதாளப்பூவையும். (வேறுரை.)

‡ "தொண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின்" (சிலப். குன்ற.)

§ "குண்டுசுனைக் குவளையொடு" (குறுந். 59.)

அனைத்த கூந்தல் - சேர்த்தின கூந்தலினையும்,
201. முடித்த குல்லை—இலையைத் தலையிலே யணிந்த கஞ்சங்குல்லையினை

இலை உடை நறு பூ—இலைகளையுடைய நறிய பூங்கொத்துக்களையும்,
202 - 3. செ கால் மராஅத்த வால் இணர் இடை இடுபு சுரும்பு உண
)த்த பெரு தண் மா தழை—செவ்விய காலினையுடைய மராத்திடத்தனவா
வெள்ளிய கொத்துக்களை நடுவேவைத்துச் சுரும்பு தேனை யுண்ணும்படி
)த்த பெரிய குளிர்ந்த அழகினையுடைய தழையை,
குல்லையையும் பூவையும் வாலிணர் இடையிட்டுத் தொடுத்த தன்மையென்க,
204. [நிருத்தள முல்கு நிலைப்ப வடி இ·] காழ் நிருத்து அல்குல் நிலைப்ப
ு—வடங்கள் நிருத்தும் அல்குலிடத்தே அசையும்படி உடுத்து,
அல்குற்நிலைப்பவென்னும் வல்லொற்று விகாரமாயிற்று,
205. [மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு:]
மயில் கண்டன்ன மகளிரொடு—சாயலுண்டமையான் மயிலைக் கண்டாற்
ன்ற மகளிரொடு,
மடநடை மகளிர்—மடப்பம்பொருந்திய ஒழுக்கத்தினையுமுடைய மகளிர்.
தழையை யுடுத்து மயில்கண்டன்ன மகளிரென்க.
உடுத்தென்னும் வினையெச்சம் அன்னவென்னும் பெயரெச்சமாகிய உவம
போடு முடிந்தது.
கண்ணியினையும் கோதையினையும் சேர்த்தின கூந்தலினையும் மடநடையி
முடைய மகளிரென்க.
இம்மகளிர் தன்னை சேவிக்கு மகளிர்.
206. செய்யன்—சிவந்தவன்,
206 - 7. சிவந்த ஆடையன் செ அரை செயலை தண் தளிர் துயல்வரும்
னன்—சிவந்த ஆடையுடுத்துச் சிவந்த அரையினையுடைய அசோகிற்
ர்ந்த தளிர் அசையுங்காது பொருந்தி,
208. கச்சினன் கழலினன் செச்சை கண்ணியன்—கசசைக் கட்டிக்
யணிந்து வெட்சிமாலையைச சூடி,
209. குழலன் கோட்டன் குறு பல்லியத்தன்— குழலூதிக் கொம்
குறித்துச் சிறிய பல்லியங்களை எழுப்பி,
210-11. தகரன் மஞ்ஞையன் புகர் இல் சேவலங்கொடியன்—இடா
ப் பின்னிட்டு மயிலேயேறிக் குற்றமில்லாத கோழிக்கொடியை உயர்த்து,
செடியன்—தான் வேண்டிய வடிவுகோடலிற் பின்னோயாயிராது நெடுக
ந்து,
தொடி அணி தோளன்—தோளிலே தொடியையணிந்து,
212. நரம்பு ஓர்த்தன்ன இன் குரல் தொகுதியொடு—நரம்பு ஆராயிந்தா
ந்த இனிய மிடற்றையுடைய பாடுமகளிரோடே,
இவர்கள் தன்னைச் சேவித்துப்பாடுமகளிர்.

3 - 4. [குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயன், மருங்கிற் கட்டிய
பு துகிலினன்:]
ருங்கில் கட்டிய குறும்பொறி கொண்ட—இடையிலே இறுகக் கட்டிய
தத்தின்மேலே உடுப்பதாக உட்கொண்ட,
ன் நேர்பு நறு தண் சாயல் துகிலினன்—நாவவிட்டமையால் நிலத்தைப்
தி நறிய குளிர்ந்த மென்மையை உடைத்தாகிய துகிலினையுடுத்து,
5-6. [முழவுறழ் தடக்கையி னியல வேந்தி, மென்றோட் பல்பிணை தழீ
பத்தந்து:]
ல் தோள் பல் பிணை இயல—மெல்லிய தோளினையுடைய பலவாகிய
ணையோலும் மகளிர் குரவையாடி அசைய,
வர்கள் மெய்தீண்டி விளையாடுதற்குரிய மகளிர்.
ழவு உறழ் தட கையின் தழீஇ ஏந்தி தலைத்தந்து—தன்னுடைய முழ
த்த பெருமையையுடைய கையினாலே அவர்கள்கையினைத் தழீஇ எடுத்
ண்டு முதற்கைகொடுத்து,
7. [குன்றுதொ றாடலு நின்றதன் பண்பே:] குன்றுதொறு ஆடலும்
ற பண்பு—மலைகடொறுஞ்சென்று விளையாடுதலும் தனக்கு நிலைநி
ளம்;
ணியன் ஆடையனென்பனமுதலியன விளையெச்ச விளைக்குறிப்பு
"முன்னத்தி னுணருங் கிளவியு முளவே" என்னுஞ் சூத்திரவிதியால்
னெச்சப்பொருளை உணர்த்தின.
ளவர் (194) குரவையயர (197) அதனைக்கண்டு மென்றோட் பல்பிணை
ரவையாடியசைய (215) அதனைப்பொறாதே செய்யன் (206) வேலன்
தாடுத்த கண்ணியைச்சூடி (192) உடுத்துப் (206) பொருந்திக் (207)
ணிந்து சூடி (208) ஊதிக் குறித்து எழுப்பிப் (209) பின்னிட்டு ஏறி
யர்த்து வளர்ந்து தொடியையணிந்து (211) துகிலையுடுத்துத் (214)
புடனே (212) மகளிரோடே(205) மலைகடொறுஞ் சென்று (217)தழீ
ஏந்தித் (215) தலைத்தந்து (216) ஆடலும் நின்றதன்பண்பென விளை

ரவை யென்பது கூறுங் காலைச், செய்தோர் செய்த காமமும் வென்
ய்தக் கூறு மியல்பிற் றாகும்" எனவரும்.
ாஅன்று—அதுவன்றி,

கூ.—பழமுதிர்சோலை.

சிறுதினை மலரொடு விரைஇ மறி அறுத்து—சிறிய தினையரிசி
களோடே கலந்து பிரப்பரிசியாகவைத்து மறியையறுத்து,

வாரணக்கொடியொடு வயின் பட நிறீஇ—கோழிக்கொடியோடே
விடத்[illegible]நிற்கும்படி நிறுத்தி,

தொல்காப்பியம், எச்சவியல், 63.

அனைத்த கூந்தல் - சேர்த்தின கூந்தலினையும்,

201. முடித்த குல்லை—இலையைத் தலையிலே யணிந்த கஞ்சங்குல்லையினையும்,

இலை உடை நறு பூ—இலையையுடைய நறிய பூங்கொத்துக்களையும்,

202 - 3. செ கால் மராஅத்த வால் இணர் இடை இடுபு சுரும்பு உண தொடுத்த பெரு தண் மா தழை—செவ்விய காவினையுடைய மராத்திடத்தனவாகிய வெள்ளிய கொத்துக்களை நடுவேவைத்துச் சுரும்பு தேனை யுண்ணும்படி தொடுத்த பெரிய குளிர்ந்த அழகினையுடைய தழையை,

குல்லையையும் பூவையும் வாலிணர் இடையிட்டுத் தொடுத்த தழையென்க,

204. [திருந்துகா ழல்கு றிளைப்ப வுடீஇ:] காழ் திருந்து அல்குல் திளைப்ப உடீஇ—வடங்கள் திருந்தும் அல்குலிடத்தே அசையும்படி உடுத்து,

அல்குற்றிளைப்பவென்னும் வல்லொற்று விகாரமாயிற்று,

205. [மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு:]

மயில் கண்டன்ன மகளிரொடு—சாயலுண்டமையான் மயிலைக் கண்டாற் போன்ற மகளிரொடு,

மடநடை மகளிர்—மடப்பம்பொருந்திய ஒழுக்கத்தினையுமுடைய மகளிர்.

தழையை யுடுத்து மயில்கண்டன்ன மகளிரென்க.

உடுத்தென்னும் வினையெச்சம் அன்னவென்னும் பெயரெச்சமாகிய உவம உருபோடு முடிந்தது.

கண்ணியினையும் கோதையினையும் சேர்த்தின கூந்தலினையும் மடநடையினையுமுடைய மகளிரென்க.

இம்மகளிர் தன்னைச் சேவிக்கு மகளிர்.

206. செய்யன்—சிவந்தவன்,

206 - 7. சிவந்த ஆடையன் செ அரை செயலை தண் தளிர் துயல்வரும் காதினன்—சிவந்த ஆடையுடுத்துச் சிவந்த அரையினையுடைய அசோகிற் குளிர்ந்த தளிர் அசையுங்காது பொருந்தி,

208. கச்சினன் கழலினன் செச்சை கண்ணியன்—கசசைக் கட்டிக் கழலையணிந்து வெட்சிமாலையைச் சூடி,

209. குழலன் கோட்டன் குறு பல்லியத்தன் — குழலையூதிக் கொம்பைக்குறித்துச் சிறிய பல்லியங்களை எழுப்பி,

210-11. தகரன் மஞ்ஞையன் புகர் இல் சேவலங்கொடியன்—கிடாயைப் பின்னிட்டு மயிலையேறிக் குற்றமில்லாத கோழிக்கொடியை உயர்த்து,

நெடியன்—தான் வேண்டிய வடிவுகோடலிற் பிள்ளையாயிராது நெடுக வளர்ந்து,

தொடி அணி தோளன்—தோளிலே தொடியையணிந்து,

212. நரம்பு ஆர்த்தன்ன இன் குரல் தொகுதியொடு—நரம்பு ஆரவாரித்தாலொத்த இனிய மிடற்றையுடைய பாடுமகளிரோடே,

இவர்கள் தன்னைச் சேவித்துப்பாடுமகளிர்.

213 - 4. [குரும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல், மருங்கிற் கட்டிய நிலனேர்பு திகிரினன்:]

மருங்கில் கட்டிய குரும்பொறி கொண்ட—இடையிலே இறுகக் கட்டிய உதரபந்தத்தின்மேலே உடுப்பதாக உட்கொண்ட,

நிலன் நேர்பு நறு தண் சாயல் திகிரினன்—நாணிட்டமையால் நிலத்தைப் பொருந்தி நறிய குளிர்ந்த மென்மையை உடைத்தாகிய திகிரினையுடைத்து,

215-6. [முழவுறழ் தடக்கையி னிபல வேந்தி, மென்றோட் பல்பிணை தழீஇத் தலைத்தந்து:]

மெல் தோள் பல் பிணை இயல—மெல்லிய தோளினையுடைய பலவாகிய மான்பிணையோலும் மகளிர் குரவையாடி அசைய,

இவர்கள் மெய்நின்றாடி வினையாடுதற்குரிய மகளிர்.

முழவு உறழ் தட கையின் தழீஇ ஏந்தி தலைத்தந்து—தன்னுடைய முழ வையொத்த பெருமையையுடைய கையிலுலே அவர்கள்கையினைத் தழீஇ எடுத் துக்கொண்டு முதற்கைகொடுத்து,*

217. [குன்றுதொ றாடலு நின்றதன் பண்பே:] குன்றுதொறு ஆடலும் தன் நின்ற பண்பு—மலைகடொறுஞ்சென்று வினையாடுதலும் தனக்கு நிலைநி ன்ற குணம்;

கண்ணியன் ஆடையனென்பனமுதலியன வினையெச்ச வினைக்குறிப்பு முற்று; *"முன்னத்தி னுணருங் கிளவியு முளவே" என்னுஞ் சூத்திரவிதியால் செய்தெனெச்சப்பொருளை உணர்த்தின.

கானவர் (194) குரவையயர (197) அதனைக்கண்டு மென்றோட் பல்பிணை (216) குரவையாடியசைய (215) அதனைப்பொருதே செய்யன் (206) வேலன் (190) தொடுத்த கண்ணியைச்சூடி (192) உடுத்துப் (206) பொருந்திக் (207) கட்டி அணிந்து சூடி (208) ஊதிக் குறித்து எழுப்பிப் (209) பின்னிட்டு எறி (210) உயர்த்து வளர்த்து தொடியையணிந்து (211) திகிரியுடுத்துத் (214) தொகுதியுடனே (212) மகளிரோடே(205) மலைகடொறுஞ் சென்று (217)தழீ இ (216) ஏந்தித் (215) தலைத்தந்து (216) ஆடலும் நின்றதன்பண்பென வினை முடிக்க.

"குரவை யென்பது கூறுங் காலைச், செய்தோர் செய்த காமமும் வென் றியு, மெய்தக் கூறு மியல்பிற் றாகும்" எனவரும்.

அதாஅன்று—அதுவன்றி,

கூ.—பழமுதிர்சோலை.

218. நெறிநினை மலரொடு விரைஇ மறி அறுத்து—நெறிய நினையரி யைப் பூக்களோடே கலந்து பிரப்பரிசொகவைத்து மறியையறுத்து,

219. வாரணக்கொடியொடு வயின் பட நிரீஇ—கோழிக்கொடியோடே தான் அவ்விடத்[illegible] நிற்கும்படி நிறுத்தி,

---

* தொல்காப்பியம், எச்சவியல், 63.

220. *ஊர் ஊர் கொண்ட சீர் கெழு விழவினும்—ஊர்தோறும் ஊர்தோறும் எடுத்துக்கொண்ட தலைமைபொருந்தின விழாவின்கண்ணும்,

221. ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்—தன்மேல் அன்புடையார் எத்துதலாலே தன்மனம் பொருந்துதல் வருகின்ற இடத்தினும்,

222. வேலன் தைஇய வெறி அயர் களனும்—படிமதானை இழைத்த வெறியாடுகளத்தினும்,

பின்னையார்வேலைத் தனக்கு அடையாளமாகக் கொண்டு நிரிதலின், வேலனென்றார்; இது †"வெறியறி சிறப்பின் வெல்வாய் வேலன்" எனப் புறத்திற்கும் கூறியது.

223. காடும் காவும் கவின் பெறு தருவினும்—காட்டினும்பொழிலினும் அழகுபெறுகின்ற ஆற்றிடைக்குறையினும்,

224. யாறும் குளனும்—ஆறுகளினும் குளங்களினும்,

வேறு பல் வைப்பும்—முற்கூறிய ஊர்களன்றி வேறுபட்ட பலவாகிய ஊர்களினும்,

225. சதுக்கமும்—நாற்சந்தியினும்,

சந்தியும்—முச்சந்தியினும் ஐஞ்சந்தியினும்,

புது பூ கடம்பும்—புதிய பூக்களோடுடைய கடம்பினும்,

226. ‡மன்றமும்—ஊர்க்குநடுவாய் எல்லாருமிருக்கும் மரத்தடியினும்,

பொதியிலும்—அம்பலத்தினும்,

§சுற்று உடை நிலையினும்—ஆயிண்டு குற்றியையுடைய இடத்தினும்,

227. [மாண்டலைக் கொடியொடு மண்ணி யமைவர] மாண் தலை கொடியொடு உரு கெழு வியனகர் (211) அமைவர மண்ணி—மாட்சிமைப்பட்ட தலைமையினையுடைய சோழிக்கொடியோடே உருகெழு வியனகரை அமைவரப் பண்ணி,

ஒடு, வேறுவினை யொடு.

இனி, 'ஆண்டலைக்கொடி' எனற பாடமாயின், பேய்முதலியன பலியை நுகராமல் தலை ஆண்மகன்றலையும், உடல் புள்ளின்வடிவுமாக எழுதின கொடியென்க.

228. நெய்யோடு இயலி அப்பி - நெய்யோடே வெண்சிறு எடுகையும் அப்பி,

‖ இது உரைத்தது—தான் வழிபடுதற்குரிய மந்திரத்தைத் தோன்றுமல் உச்சரித்து,

---

* அடுக்கு, பன்மை. (வேறுரை.)

† தொல்காப்பியம், புறத்திணையியல், 5.

‡ "மன்றம் பொதியிலு மாமயில் சேர்" (கந்தரை. 34).

§ யானைத் தறியிடத்தினும் பகுமுலானைவை உரிஞ்சுதறி யெனினுமமையும். (வேறுரை).

‖ சிறிது மந்திரஞ்சொலியுமோதி (வேறுரை.)

229. குடந்தம்பட்டு—வழிபட்டு,

ணக்கம் பட்டென்றும் உரைப்பர்; குடவென்பது தடவென்பதுபோல விலை உணர்த்துவதோர் உரிச்சொல்லாதலின், அதனடியாகப் பிறந்த பெயரும். *

கொழு மலர் நெறி – அழகியமலர்களைத் தூவி,

230. முரண் கொள் உருவின் இரண்டு உடன் உடீஇ—தம்மிற் பகைத் தொன்ற வடிவினையுடைய இரண்டு அறுவையை உள்ளொன்றும் புறம் என்றுமாக உடுத்து,

231. †செ தூல் யாத்து—சிவந்தநூலைக் கையிலே காப்புக்கட்டி,

நூலொழுக்கி எல்லிப்படுத்தெனலுமாம்.

வெள் பொரி நெறி—வெள்ளிய பொரியைத்தூவி,

232. மத வலி கிலேஇய மா தாள் ‡கொழு விடை—மிகுதியையுடைய வலி கிலேபெற்ற பெருமையையுடைத்தாகிய காலையுடைய கொழுவிய இடபனை,

233. குருதியொடு விரைஇய நறு வெள் அரிசி—உதிரத்தோடே பிசைந்த நாய வெள்ளரிசியை,

234. நில் பலி செய்து—நிறுபலியாக இட்டு,

பல் பிரப்பு இசீஇ—பலபிரப்பும் வைத்து,

இனிப் பிரப்புக்கடையென்பாருமுளர்.

235. ‡சிறு பசுமஞ்சளொடு நறு விரை தெளித்து—சிறிய பசுமஞ்சளோடே நறிய சந்தனமுதலியவற்றையும் தெளித்து,

இனிச் சிறுபசுமஞ்சள் மஞ்சளில் ஒரு சாதிவிசேடமுமாம்.

விரை, ஆருபெயர்.

236 . 7. [பெருத்தண் கணவீர நறுந்தண் மாலை, தினையற வறுத்துத் §தினை காற்றி:]

பெரு தண் கணவீரம் மாலை—பெரிய குளிர்ந்த செவ்வலிமாலையையும்,

நறு தண் மாலை—ஒழிந்த நறிய குளிர்ந்த மாலைகளையும்,

அறுத்து—தலையொக்க அறுத்து,

§தினை அற தூங்க காற்றி – தமக்கு ஒப்பில்லாதபடி அசையத்தூக்கி,

இனித் தம்மில் இணையொத்த அறுப்பாக அறுத்தென்றுமாம்.

---

* இதன்பின்னே, குடந்தமாவது: "கால்விரன் மூடக்கிப் பெருவிர னிறு னி - நெஞ்சிடை வைப்பது குடந்த மாகும்" என்பது ஒரு பிரதியிலுள்ளது.

† யானைத்திரள். (வேறுரை.)

‡ காட்டு மஞ்சள். (வேறுரை.)

§ தினை உற அறுத்து - இணையொக்க நறுக்கி, தூங்காற்றி - அசைதரப் பற்கோயிலாகத் தூக்கி. (வேறுரை.)

238. நளி மலை சிலம்பில் நல் நகர் வாழ்த்தி - செறிந்த மலைப்பக்கத்தி லுள்ள நல்ல ஊர்களைப் *பசியும் பிணியும் பகையும் நீங்குகவென்று வாழ்த்தி,

நகர் - பிள்ளையார்கோயிலென்றுமாம்.

239. †நறு புகை எடுத்து—நறிய தூபங்கொடுத்து,

குறிஞ்சி பாடி – அந்நிலத்திற்கு அடைத்த குறிஞ்சிப்பண்ணைப் பாடி,

240. இமிழ் இசை அருவியோடு இன் இயம் கறங்க - முழங்குகின்ற ஓசையினையுடைய அருவியோடே இனிய பல்லியங்களும் ஒலியாநிற்க,

241-2. உருவம் பல் பூ தூஉய் வெருவர ‡குருதி செந்தினை பரப்பி— சிவந்த நிறத்தினையுடைய பலபூக்களையும் தூஇ அச்சம்வரும்படி உதிரமளைந்த சிவந்த தினையினையும் பரப்பி,

242 - 4. குறமகள் §முருகு இயம் நிறுத்து முரணினர் உட்க ||முருகு ஆற்றுப்படுத்த உரு கெழு வியன் நகர்—குறச்சாதியாகிய மகள் முருகனுவக்கும் வாச்சியங்களை வாசிக்கப்பண்ணித் தெய்வமின்றென்பார் அஞ்சும்படியாகப் பிள்ளையார் வரும்படி வழிப்படுத்தின அச்சம் பொருந்தின அகற்சியையுடைய நகரின்கண்ணே,

¶"வேலன் வெறியாட் டயர்ந்த" என்புழிச் சிறுபான்மை ஏனையோரும் ஆடுவாரென்றலின், குறமகள் வெறியாட்டுக் கூறினார்.

குறமகள் (242) மண்ணி (227) அப்பி உரைத்துப் (228) பட்டுச் சிதறி உடீஇ யாத்துச் சிதறிச் செய்து இரீஇத் தெளித்து நாற்றி வாழ்த்தி எடுத்துப் பாடிக் கறங்காநிற்கத் தூஉய்ப் பரப்பி நிறுத்து ஆற்றுப்படுத்த நகரென வினை முடிக்க.

சாந்திசெய்ய ஆற்றுப்படுத்தாள்.

245. ஆடு களம் சிலம்ப பாடி—அவ்வெறியாடுகின்ற களம் ஆரவாரிப்ப அதற்கு எற்பனவற்றைப் பாடி,

245 - 6. [பலவுடன் ❀கோடுவாய் வைத்து:] கோடு பல உடன் வாய் வைத்து – கொம்புகள் பலவற்றையும் சேரவூதி,

கொடு மணி இயக்கி —கொடிய மணியையும் ஒலிப்பித்து,

247. ஓடா பூட்கை **பிணிமுகம் வாழ்த்தி—கெடாத வலியினையுடைய பிணிமுகமென்னும் பட்டத்தினையுடைய யானையை வாழ்த்தி,

---

* "பசியும் பிணியும் பகையு நீங்கி, வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி" (சிலப். 5 : 72 - 3 ; மணி. 1 : 70 - 71.)

† "குறிஞ்சிபாடுமி னறும்புகை யெடுமின்" (சிலப. குன்ற.)

‡ உதிரம் போன்ற செந்தினை (வேறுரை.)

§ முருகியம் - துடி; தொண்டகப்பறை யெனினு மமையும். (வேறுரை.)

|| பிள்ளையாரைத் தம்வழிப்படுத்தின. (வேறுரை.)

¶ தொல்காப்பியம், புறத்திணையியல், 5.

❀ "கோடுவாய் வைம்மின் கொடுமணி யியக்குமின்" (சிலப. குன்ற.)

** பிணிமுகமென்பது பிள்ளையார் பவனிவரும் யானை. (வேறுரை.)

பிணிமுகம் - மயிலுமாம்.

248. வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட—காரியங்களை விரு யுவோர் தாங்கள் விரும்பினகாரியங்களை விரும்பினாற்போலப் பெற்றுநின்று வழிபட,

நகரிலே (244) பாடி வைத்து இயக்கி வாழத்தி வழிபட உறைதலுமுரியன் (189) என்க.

விழவின்கண்ணும் (220) நிலையின்கண்ணும் (221) கந்துடைநிலையின்கண்ணும் (226) உறைதலுமுரியன் (189) என்க.

249. ஆண்டு ஆண்டு உறைதலும்—களனும் (222) காடும் காவும் துருத்தியும் யாறும் குளனும் வைப்பும் சதுக்கமும் சந்தியும் கடம்பும் மன்றமும் பொதியிலுமாகிய அவ்வவ்விடங்களிலே உறைதலுமுரியனென்க.

அறிந்தவாறே - யான் அறிந்தபடியே கூறினேன்;

250. ஆண்டு ஆண்டு ஆயினும் ஆக—யான் முற்கூறிய அவ்வவ்விடங்களிலேயாயினுமாக, பிறவிடங்களிலே யாயினுமாக,

உம்மை, ஐயவும்மை.

250 - 51. [காண்டக, முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்தி:] முந்து கண்டுழி காண் தக முகன் அமர்ந்து ஏத்தி—முற்பட நீ கண்டபொழுது அழகு தக்கிருக்கும்படி முகம்விரும்பித் துதித்து,

முகனமர்ந்தென்றார், அவன் தெய்வத்தன்மையைக் கண்டபொழுது அசசம்பிறவாது நிற்கவேண்டுமென்றற்கு.

252. கை தொழூஉ பரவி—முன்னர்க் கையைத் தலைமேலேவைத்து வாழ்த்தி,

கால் உற வணங்கி—பின்னர்த் திருவடி தலையிலேயுறும்படி தண்டனிட்டு,

253. நெடு பெரு சிமயத்து *நீலம் பைஞ்சுனை—நெடிய பெரிய இமவானுச்சியில் தருப்பைவளர்ந்த பசிய சுனையிடத்தே,

நீலமென்றார், அதினின்ற நீலநிறத்தையுடைய தருப்பையை. அஃது ஆகுபெயர்; என்றது சரவணப் பொய்கையென்றவாறு.

254. ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப—விசும்பும் வளியும் தீயும் நீரும் நிலனுமாகிய ஐவருள் தீத் தன்அங்கையிலே ஏற்ப,

சதாசிவனும் மயேச்சுரனும் உருத்திரனும் அரியும் அயனும் பூதங்கட்குத் தெய்வமாகலின், ஐவரென்றார்; ஐவருளொருவனென்றது உருத்திரன் தெய்வமாகிய தீயை

அவன் அங்கையேற்பவென்றது இறைவனிடத்தினின்றும் இந்திரன் வாங்கிய ஏருப்பத்தினை முனிவர் வாங்கித் தமக்குத் தரிக்கலாகாமையின் இறைவன்கூறாகிய முத்தீக்குண்டத்திட்டதனைக் கூறிற்று.

---

* "லோற்பல முதலாவுள்ள பூக்கள் மிடைந்து கிடக்கின்ற சரவணப் பொய்கையில். (வேறுவா.)

238. ளி மலை லெம்பில் ல் ள் வாழ்த்தி - செறிந்த மலை ணர்ை ல்ை ஊர்களைப் பகையும் பிணியும் பசையும் நீங்குகென்று ஏ ஊர் - பின்னையார்கோயிலென்றுமாம்.

239. †ாறு புகை எடுத்து—ாறிய தூபங்கொடுத்து,

குறிஞ்சி பாடி – அக்கிலத்திற்கு அடைத்த குறிஞ்சிப்பண்களைப் ட

240. இமிழ் இசை அருவியோடு இன் இயம் கறங்க - முழ ஓசையினையுடைய அருவியோடே இனிய பல்லியங்களும் ஒலியாநிற்க,

241-2. உருவம் பல் பூ தூஉய் வெரூவர ‡குருதி செந்தினை வெந்த நிறத்தினையுடைய பலபூக்களையும் தூவி அச்சம்வரும்படி உ வெந்த தினையினையும் பரப்பி,

242 - 4. குறமகள் §முருகு இயம் நிறுத்து முரணினர் உட்க ஆற்றுப்படுத்த உரு கெழு வியன் ஞர்—குறச்சாதியாகிய மகள் முரு வாச்சியங்களை வாசிக்கப்பண்ணித் தெய்வமின்றென்பார் அஞ்சம்படிய னையார் வரும்படி வழிப்படுத்தின அச்சம் பொருந்தின அதற்கையைய் ரின்கண்ணே,

¶"வேலன் வெறியாட் டயர்ந்த" என்புழிச் சிறபான்மை எ ஆடுவாரென்றலின், குறமகள் வெறியாட்டுக் கூறினர்.

குறமகள் (242) மண்ணி (227) அப்பி உரைத்துப் (228) பட் உடை இ யாத்துச் சிதறிச் செய்து இரீஇத் தெளித்து நாற்றி வாழ்த்தி பாடிக் கறங்காநிற்கத் தூஉய்ப் பரப்பி நிறுத்து ஆற்றுப்படுத்த ஈரை முடிக்க.

சாந்திசெய்ய ஆற்றுப்படுத்தாள்.

245. ஆடு களம் நிலம்ப பாடி—அவ்வெறியாடுகின்ற களம் அதற்கு எற்பனவற்றைப் பாடி,

245 - 6. [பலவுடன் ‡‡கோடுவாய் வைத்து:] கோடு பல உடன் த்து – கொம்புகள் பலவற்றையும் சேரவூதி,

கொடு மணி இயக்கி – கொடிய மணியையும் ஒலிப்பித்து,

247. ஓடா பூட்கை **பிணிமுகம் வாழ்த்தி – கெடாத வலியி பிணிமுகமென்னும் பட்டத்தினையுடைய யானையை வாழ்த்தி,

---

* "பசியும் பிணியும் பகையு நீங்கி, வியும் வளனுஞ் சாக்கென (சிலப். 5 : 72 - 3 ; மணி. 1 : 70 - 71.)

† "குறிஞ்சிபாடுமி னலம்புகை யெடுமின்" (சிலப. குன்ற.)

‡ உதிரம் போன்ற செந்தினை (வேங்கை.)

§ முருகியம் - தழி; தொண்டகப்பறை யெனினு மமையும். (

|| பின்னையாரைத் தம்வழிப்படுத்தின. (வேங்கை.)

¶ தொல்காப்பியம், புறத்திணையியல், 5.

‡‡ "கோடுவாய் வைம்மின் கொடுமணி யியக்குமின்" (சிலப. ஏ

** பிணிமுகமென்பது பின்னையார் பலனிவரும் யானை. (வேங

பிணிமுகம் - மயிலுமாம்.

248. வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட—காரியங்களை வி
மபுவோர் தாங்கள் விரும்பினகாரியங்களை விரும்பினாற்போலப் பெற்றுநின்
வழிபட,

நகரிலே (244) பாடி வைத்து இயக்கி வாழ்த்தி வழிபட உறைதலுமுரிய
(189) என்க.

விழவின்கண்ணும் (220) நிலையின்கண்ணும் (221) கந்துடைநிலையின்க
ணும் (226) உறைதலுமுரியன் (189) என்க.

249. ஆண்டு ஆண்டு உறைதலும்—களனும் (222) காடும் காவும் துருத
யும் யாறும் குளனும் வைப்பும் சதுக்கமும் சந்தியும் கடம்பும் மன்றமும் பொ
யிலுமாகிய அவ்வவ்விடங்களிலே உறைதலுமுரியனென்க.

அறிந்தவாறே—யான் அறிந்தபடியே கூறினேன்:

250. ஆண்டு ஆண்டு ஆயினும் ஆக—யான் முற்கூறிய அவ்வவ்விட
ளிலேயாயினுமாக, பிறவிடங்களிலே யாயினுமாக,

உம்மை, ஐயவும்மை.

250-51. [காண்டக, முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்தி:] முந்து
கண்டுழி காண் தக முகன் அமர்ந்து ஏத்தி—முற்பட நீ கண்டபொழுது அழ
தக்கிருக்கும்படி முகம்விரும்பித் துதித்து,

முகனமர்ந்தென்றார், அவன் தெய்வத்தன்மையைக் கண்டபொழுது அ
ம்பிறவாது நிற்கவேண்டுமென்றற்கு.

252. கை தொழூஉ பரவி—முன்னர்க் கையைத் தலைமேலேவைத்து
ழ்த்தி,

கால் உற வணங்கி—பின்னர்த் திருவடி தலையிலேயுறும்படி தண்டனிட்

253. நெடு பெரு சிமயத்து *நீலம் பைஞ்சனை—நெடிய பெரிய இம
னுச்சியில் தருப்பைவளர்ந்த பசிய சுனையிடத்தே,

நீலமென்றார், அதினின்ற நீலநிறத்தையுடைய தருப்பையை. அஃது ஆ
பெயர்; என்றது சரவணப் பொய்கையென்றவாறு.

254. ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப—விசும்பும் வளியும் தீயும் நீரு
நிலனுமாகிய ஐவருள் தீத் தன்அங்கையிலே ஏற்ப,

சதாசிவனும் மயேச்சுரனும் உருத்திரனும் அரியும் அயனும் பூதங்கட்கு
தெய்வமாகலின், ஐவரென்றார்; ஐவருளொருவனென்றது உருத்திரன் தெய்
மாகிய தீயை.

அவன் அங்கையேற்பவென்றது: இறைவனிடத்தினின்றும் இந்திர
வாங்கிய தருப்பத்தினை முனிவர் வாங்கித் தமக்குத் தரிக்கலாகாமையின் இ
வன்கூறாகிய முத்தீக்குண்டத்திட்டதனைக் கூறிற்று.

---

* "லோற்பல முதலாவன்ன பூக்கள் மிடைந்து கிடக்கின்ற சரவண
பொய்கையில். (வேறுவா.)

238. நளி மலை சிலம்பில் நல் நகர் வாழ்த்தி - செறிந்த மலைப்பக்கத்தி னுள்ள நல்ல ஊர்களைப் *பசியும் பிணியும் பகையும் நீங்குகவென்று வாழ்த்தி,

நகர் - பிள்ளையார்கோயிலென்றுமாம்.

239. †நறு புகை எடுத்து—நறிய தூபங்கொடுத்து,

குறிஞ்சி பாடி – அந்நிலத்திற்கு அடைத்த குறிஞ்சிப்பண்ணைப் பாடி,

240. இமிழ் இசை அருவியோடு இன் இயம் கறங்க - முழங்குகின்ற ஓசையினையுடைய அருவியோடே இனிய பல்லியங்களும் ஒலியாநிற்க,

241-2. உருவம் பல் பூ தூஉய் வெருவர ‡குருதி செந்தினை பரப்பி— சிவந்த நிறத்தினையுடைய பலபூக்களையும் தூவி அச்சம்வரும்படி உதிரமளைந்த சிவந்த தினையினையும் பரப்பி,

242 - 4. குறமகள் §முருகு இயம் நிறுத்து முரணினர் உடக ||முருகு ஆற்றுப்படுத்த உரு கெழு வியன் நகர்—குறச்சாதியாகிய மகள் முருகனுவக்கும் வாச்சியங்களை வாசிக்கப்பண்ணித் தெய்வமின்றென்பார் அஞ்சும்படியாகப் பிள்ளையார் வரும்படி வழிப்படுத்தின அச்சம் பெருந்தின அகற்சியையுடைய நகரின்கண்ணே,

¶"வேலன் வெறியாட் டயர்ந்த" என்புழிச் சிறுபான்மை ஏனையோரும் ஆடுவாரென்றலின், குறமகள் வெறியாட்டுக் கூறினார்.

குறமகள் (242) மண்ணி (227) அப்பி உரைத்துப் (228) பட்டுச் சிதறி உமஇ யாத்துச் சிதறிச் செய்து இரீஇத் தெளித்து நாற்றி வாழ்த்தி எடுத்துப் பாடிக் கறங்காநிற்கத் தூஉய்ப் பரப்பி நிறுத்து ஆற்றுப்படுத்த நகரென விலை முடிக்க.

சாந்திசெய்ய ஆற்றுப்படுத்தாள்.

245. ஆடு களம் சிலம்ப பாடி—அவ்வெறியாடுகின்ற களம் ஆரவாரிப்ப அதற்கு எற்பனவற்றைப் பாடி,

245 - 6. [பலவுடன் ❀கோடுவாய் வைத்து:] கோடு பல உடன் வாய் வைத்து – கொம்புகள் பலவற்றையும் சேரவூதி,

கொடு மணி இயக்கி –கொடிய மணியையும் ஒலிப்பித்து,

247. ஓடா பூட்கை **பிணிமுகம் வாழ்த்தி—கெடாத வலியினையுடைய பிணிமுகமென்னும் பட்டத்தினையுடைய யானையை வாழ்த்தி,

---

* "பசியும் பிணியும் பகையு நீங்கி, வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி" (சிலப். 5 : 72 - 3 ; மணி. 1 : 70 - 71.)

† "குறிஞ்சிபாடுமி னறும்புகை யெடுமின்" (சிலப. குன்ற.)

‡ உதிரம் போன்ற செந்தினை (வேறுரை.)

§ முருகியம் - துடி; தொண்டகப்பறை யெனினு மமையும். (வேறுரை.)

|| பிள்ளையாரைத் தம்வழிப்படுத்தின. (வேறுரை.)

¶ தொல்காப்பியம், புறத்திணையியல், 5.

❀ "கோடுவாய் வைம்மின் கொடுமணி யியக்குமின்" (சிலப. குன்ற.)

** பிணிமுகமென்பது பிள்ளையார் பவனிவரும் யானை. (வேறுரை.)

பிணிமுகம் - மயிலுமாம்.

248. வேண்டுவர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட—காரியங்களை விரும்புவோர் தங்கள் விரும்பினகாரியங்களை விரும்பினதற்போலப் பெற்றுநின்று வழிபட,

நகரிலே (214) பாடி வைகுது இயக்கி வாழ்த்தி வழிபட உறைதலுமுரியன் (189) என்க.

விழவின்கண்ணும் (220) கிலையின்கண்ணும் (221) கந்துடைநிலையின்கண்ணும் (226) உறைதலுமுரியன் (189) என்க.

249. ஆண்டு ஆண்டு உறைதலும்—எனவும் (222) காடும் காவும் தருத்தியும் யாறும் குளனும் வைப்பும் சதுக்கமும் சந்தியும் கடம்பும் மன்றமும் பொதியிலுமாகிய அவ்வவ்விடங்களிலே உறைதலுமுரியனென்க.

அறிக்கலாதே - யான் அறிந்தபடியே கூறினேன்;

250 ஆண்டு ஆண்டு ஆயினும் ஆக—யான் முற்கூறிய அவ்வவ்விடத்தலோயினுமாக, பிறவிடங்களிலே யாயினுமாக,

உம்மை, ஐயவும்மை.

250-51 [காண்டக, முத்தி கண்டுழி முனைமர்க் கேத்தி:] முத்தி கண்டுழி காண்தக முகன் அமர்ந்து எதிர்—முற்பட நீ கண்டபொழுது அழகு உள்ளிருக்கும்படி முகம்விரும்பித் துதித்து,

முனைமர்த்தென்றார், அவன் தெய்வத்தன்மையைக் கண்டபொழுது அசைந்பிறவாது நிற்கவேண்டுமென்றற்கு.

252. கை தொழூஉ பரவி—முன்னர்க் கையைத் தலைமேலேவைத்து வாழ்த்தி,

கால் உற வணங்கி—பின்னர்த் திருவடி தலையிலேயுறும்படி தண்டனிட்டு,

253. ஒடு பெரு சிறப்பு *ஏலம் பெறுகவென—ஒடிய பெரிய இமவானுசரியில் தருப்பையைவளர்த்த பரிய தலையிடத்தே,

ஏலமென்றார், அதனின்ற சிலதிறத்தையுடைய தருப்பையை. அஃது ஆகு பெயர்; என்றது சரவணப் பொய்கையென்றவாறு.

254 ஐவருள் ஒருவன் அகை எற்ப—விசும்பும் வளியும் தியும் நீரும் நிலனுமாகிய ஐவருள் நீத் தன்அகையிலே எற்ப,

சதாவெனும் மயேச்சரனும் உருத்திரனும் அரியும் அயனும் பூதகட்டருத் தெய்வமாகலின், ஐவரென்றார்; ஐவருளொருவனென்றது உருத்திரன் தெய்வமாகிய நிலை

அவன் அங்கையேற்பினென்றது இறைவனிடத்தினின்றும் இந்திரன் முதலிய தருப்பத்தினை முனிவர் வாங்கித் தமக்குத் தரிக்கலாமையின் இறைவன் கருணைய முத்திக்குண்டாகிட்டதனைக் கூறிற்று.

* "லோத்பல முதலாவுள்ள பூக்கள் மிடைந்து கிடக்கின்ற சரவணப் பொய்கையில். (வேங்கடா)

255. அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ — அருந்ததியொழிந்த அறுவராலே பெறப்பட்ட ஆறுவடிவுபொருந்திய செல்வ,

என்றது: *அங்ஙனம் அங்கியின்கணிட்டுச் சத்திகுறைந்த கருப்பத்தை முனிவரெழுவரும் வாங்கித் தம்மனைவியர்க்குக்கொடுப்ப அருந்ததியொழிந்தோர் விழுங்கிச் சூன்முதிர்ந்து, சரவணப்பொய்கையிற் பதுமப்பாயலிலே பெற ஆறுவடிவாக வளர்ந்தமை கூறிற்று.

ஏற்கையினாலே அறுவராற் பைஞ்சுனையிலே பயக்கப்பட்ட செல்வவென்க; இது பரிபாடலிற் †"பாயிரும் பனிக்கடல்" என்னும் பாட்டானுணர்க.

256. ஆல் கெழு கடவுள் புதல்வ — கல்லாலின் கீழிருந்த தடவுளினுடைய புதல்வ,

கடவுளரென உயர்திணையாய் நில்லாது கடவுளென்பது தெய்வமென்னும் பொருட்டாய் அஃறிணைமுடிபுகொள்ளும் உயர்திணையாய் நிற்றலின், அஃறிணைப்பாற் பட்டு ‡"உணரக்கூறிய" என்னும் புறனடையான் முடிந்தது.

256-7. §மால் வரை மலை மகள் மகனே — பெருமையையுடைய மலையாகிய மலையரையன் மகளுடைய மகனே,

வரை - மூங்கிலுமாம்.

மாற்றோர் கூற்றே — பகைவர்க்குக் கூற்றுவனே,

258. [வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ:]

வெற்றி கொற்றவை சிறுவ — வெற்றியை உலகத்திற்குக் கொடுக்கும் வனதுர்க்கையினுடைய புதல்வ,

வெல் போர் கொற்றவை — தான் வெல்லும்போரைச் செய்யுங் கொற்றவை,

என்றது: மகிடனைச் செற்றதனை.

259. இழை அணி சிறப்பிற் பழையோள் குழவி — பூணணிந்த தலைமையினையுடைய காடுகாளுடைய குழவி,

காடுகிழாளென்பது இக்காலத்துக் காடுகாளென மருவிற்று. அவளும் இறைவனுடைய சத்தியாகலின், அவளுடைய குழவியென்றார்.

260. [வானோர் வணங்குவிற் றானைத் தலைவ:]

வானோர் தானை தலைவ—தேவர்கள் படைத்தலைவ,

என்றது: தேவசேனாபதி என்றதாம்.

வணங்கு வில்—வளையும் வில்லையும்,

வில்லையும், தேவராகிய தானையையுமுடைய தலைவவென்க.

261. மாலை மார்ப—இன்பத்திற்குரிய மாலையணிந்த மார்ப,

---

* 58 - ஆம் அடியின் விசேடவுரையாலும் இது விளங்குகின்றது.

† பாட்டு, 5 ‡ தொல்காப்பியம். புள்ளிமயங்கியல், 110.

§ மால்போலும் வரையினையுடைய மலையரையன் திருமகளார் மகனே. (வேறுரை)

நூல் அறி புலவ—எல்லா நூல்களையும் அறியும் புலவ,

புலவன் - அறிவுடையவன்.

262. செருவில் ஒருவ—போர்த்தொழிலில் ஒருவனாகி நிற்பாய்,

பொரு விறல் மள்ள—பொருகின்ற வெற்றியினையுடைய மள்ள,

மள்ளன் - இளமைப்பருவத்தோன்.

263. அந்தணர் வெறுக்கை—அந்தணருடைய செல்வமாயிருப்பாய்,

அறிந்தோர் சொல் மலை—சான்றோர் புகழ்ந்து சொல்லப்படும் சொற்களின் ஈட்டமாயிருப்பாய்,

264. மங்கையர் கணவ—தெய்வயானையாரும், வள்ளிநாய்ச்சியாருமாகிய மகளிர்க்குக் கணவ,

மைந்தர் ஏறே—வீரர்க்கு இடபமே,

265. வேல் கெழு தட கை சால் பெரு செல்வ—வேல்பொருந்தின பெருமையையுடைய கையானமைந்த பெரிய செல்வ,

என்றது: வேல் வெற்றியாற்பெற்ற அச்செல்வத்தை.

266-7. [குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து, விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ:]

குன்றம் கொன்ற குன்றா கொற்றத்து கிழவ—குருகாற் பெயர்பெற்ற மலையைப்பிளந்த குறையாத வெற்றியையுடைய கிழவ,

விண் பொரு நெடுவரை குறிஞ்சி கிழவ—தேவருலகைத் தீண்டும் நெடிய வரைகளையுடைய குறிஞ்சிநிலத்துக்கு உரிமையுடையாய்,

அதற்கு உரியனாதல் *"சேயோன் மேய மைவரை யுலகமும்" என்பதனாணர்க.

268. பலர் புகழ் நல் மொழி புலவர் ஏறே—பலரும் புகழ்ந்துசொல்லும் நன்றாகிய சொற்களையுடைய பரசமயத்தினுள்ளார்க்கு ஏற்றின்றன்மையையுடையவனே,

என்றது: கல்விமதத்தையுடைய யானைபோல்வார்க்கு சிங்கவேறு போல்வாயென்றதாம்.

269. [அரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக.] பெறல் அரு மரபின் பெரும்பெயர் முருக—பிறர்க்குப் பெறலரிய முறைமையினையுடைய பெரும் பொருளையுடைய முருக,

பெயர் - பொருள். †"பெற்ற பெரும்பெயர் பலர்கை யிரீஇய" எனவும், ‡"சொற்பெயர் நாட்டம்" எனவும் வரும், பெரும்பொருளென்றது - வீட்டினை.

270. [நசையுநர்க் கார்த்து மிசைபே ராள:] நசையுநர்க்கு ஆர்த்தும் பேர் இசை ஆள—அவ்வீட்டைப் பெறவேண்டுமென்று நசசிவந்தார்க்கு அதனை நகர்விக்கும் பெரியபுகழை ஆளுதலையுடையாய்,

பேரிசையென்று மாறுக.

---

* தொல்காப்பியம், அகத்திணையியல், 5.

† பதிற்றுப்பத்து, 90. ‡ பதிற்றுப்பத்து, 21.

271-2. [அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய், மண்டமர் கடந்த நின் வென்றா டகலத்து:]

அலந்தோர்க்கு அளிக்கும் சேஎய்—பிறரால் இடுக்கட்பட்டு வந்தோர்க்கு அருள்பண்ணும் சேய்,

மண்டு அமர் கடந்த வென்று ஆடு நின் அகலத்து பொலம் பூண் சேஎய் மிக்குச்செல்கின்ற போர்களைமுடித்த வென்றடுகின்ற நினதுமார்பிடத்தே பொன்னாற்செய்த பேரணிகலங்களையணிந்த சேயென்க.

273. பரிசிலர் தாங்கும் உரு கெழு நெடு வேள்—இரந்துவந்தோரை வேண்டுவன கொடுத்துப் பாதுகாக்கும் உட்குதல் பொருந்திய நெடியவேளே,

274. பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்—தேவரும் முனிவரு ஏத்தும் பெரிய திருநாமத்தையுடைய தலைவனே,

இயவுள்-கடவுளுமாம்.

275-6. [சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி, போர்மிகு:] போர் மிகு மொய்ம்பின் சூர் மருங்கு அறுத்த மதவலி—போர்த்தொழிலிலே மிகுகின்ற மொய்ம்பாலே சூரபன்மாவின்குலத்தை இல்லையாக்கின மதவலியென்னும் பெரையுடையாய்,

பொருந—உவமிக்கப்படுவாய்,

பொருவப்படுமவன், பொருநனென நினறது.

குரிசில்—தலைவன்,

276-7. [எனப்பல, யானறி யளவையி னேத்தி யானாது] என யான அறி அளவையின் ஆனாது பல எத்தி—என்று யானறிந்து நினக்குக்கூறிய அவாலே நீயும் அமையாதே பலவற்றையும் கூறிப் புகழ்ந்து,

278. நின் அளந்து அறிதல் மன் உயிர்க்கு அருமையின—நின் தன்னையெல்லாம் முற்ற அளவிட்டறிதல் பல்லுயிர்க்கும் அரிதாகையினாலே,

279. நின் அடி உள்ளி வந்தனென்—நின் திருவடியைப் பெறவேண்டுமென்று நினைந்துவந்தேன்;

279-80. நின்னொடு புரையுநர் இல்லா புலமையோய்—நின்னோடு ஒப்பாரில்லாத மெய்ஞ்ஞானத்தை உடையோய்,

280-81. என குறித்தது மொழியா அளவையில்—என்றுசொல்லி கருதிய வீடுபேற்றினை விண்ணப்பஞ் செய்வதற்கு முன்னே,

முந்துநீகண்டுழி முகனமர்ந்து (251) மகனே கூற்றே (257) குழ (259) வெறுக்கை சொன்மலையாயிருப்பாய் (263) மைந்தரேறே (264) புல ரேறே (268) சேஎய் (271) வேளன் (273) இயவுளே (274) மதவலி (27 புலமையோய் (280) என்றுமுன்னர் எதிர்முகமாக்கி எத்தி (251) யென மைவிளியல்லாதனவற்றை முன்னர்க்கூட்டிமுடிக்க. அங்ஙனம் எதிர்முகமா யேத்திப் பின்னர்ப்பரவி வணங்கிச் (252) செல்வ (255) புதல்வ (256) சிறு (258) தலைவ (260) மார்ப புலவ (261) ஒருவ மன்ன (262) கணவ (26 செல்வ (265) கிழவ (267) முருக (269) இசைபேராள (270) பொரு

76) என்று அண்மையாகவிளித்து, மன்னுயிர்க்கருமையின் (278) யானறி னவையினேத்தி (277) நின்னடியுள்ளிவந்தனென் (279) என்று நீ குறித்தது மாழியாவனவையினென முடிக்

281.2. [குறித்துடன், வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர்:] வேறு ம் உருவில் குறு பல் கூளியர் உடன் குறித்து—வேறுவேறாகிய பலவடிவினை ய சிறிய பலராகிய சேவித்துநிற்பார் சேரக்கருதி,

*"நின், கூர்நல் லம்பிற் கொடுவிற் கூளியர்" என்றார் பிறரும்.

283. சாறு அயர் களத்து வீறு பெற தோன்றி—விழாவெடுத்தகளத்தே வாங்கள் பொலிவுபெறத் தோன்றி,

284. [அளியன் றானே முதுவா யிரவலன்:] முது வாய் இரவலன் தான் அளியன்—அறிவுமுதிர்ந்த வாய்மையையுடைய புலவன்றான் அளிக்கத்தக்கான்.

285-6. [வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென, வினியவு நல்லவு நனிபல வேத்தி:] பெரும நின் வள் புகழ் நயந்து இனியவும் நல்லவும் நனி பல ஏத்தி வந்தோன் என—பெரும, நினது வளவிய புகழினைக்கூற விரும்பிக் கேட்டோர்க்கு இனியனவும் உறுதிபயப்பனவுமாக மிக்க பலவற்றை வாழ்த்தி வந்தோனென்றுகூற,

கூளியர் (282) குறித்துத் (281) தோன்றி (283) அளியன் (284) பெரும நின் வண்புகழைக் கூறநயந்து (285) இனியவும் நல்லவுமாக ஏத்தி (286) வந்தோன் (285) என்று கூறவென முடிக்க.

287. தெய்வம் சான்ற திறல் விளங்கு உருவின்—தெய்வத்தன்மையமைந்த வலிவிளங்கும் வடிவினையும்,

288. வான் தோய் நிவப்பின் தான் வந்து எய்தி—வானைத்தீண்டும் வளர்ச்சியினையுமுடைய தான் அவையை வந்தணுகி,

289. அணங்கு சால் உயர் நிலை தழீஇ—வருத்தமமைந்த தெய்வத்தன்மையை உள்ளடக்கிக்கொண்டு,

289-90. [பண்டைத்தன், மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி:] மணம் கமழ் தெய்வத்து பண்டை தன் இளநலம் காட்டி—மணம் நாறுகின்ற தெய்வத்தன்மையையுடைய முன்புண்டாகிய தன் இளையவடிவைக்காட்டி,

291. [அஞ்ச லோம்புமதி யறிவனின் வரவென:] நின் வரவு அறிவல் அஞ்சல் ஓம்புமதி என—நீ வீடுபெற நினைத்துவந்த வரவை யான் முன்னேயறிவேன்; அது நினக்கு எய்துதலரிதென்று அஞ்சுதலைப் பரிகரியென்று,

292. அன்புடை நன்மொழி அளைஇ—நின்மேல் அன்புடைத்தாகிய நல்ல வார்த்தைகளைப் பலகாலும் அருளிச்செய்து,

292-4. [விளிவின்று, இருணிற முந்நீர் வளைஇய வுலகத், தொருநீ யாகி தோன்ற:] இருள் நிற முந்நீர் வளைஇய உலகத்து ஒருநீயாகி விளிவு இன்றி தோன்ற—இருண்ட நிறத்தையுடைய கடல் சூழ்ந்த உலகத்திடத்தே நீ வணுமே பிறர்க்கு வீடளித்தற்கு உரியையாய்க் கேடின்றித் தோன்றும்படி,

* புறநானூறு, 23.

294-5. விழுமிய பெறல் அரு பரிசில் நல்கு மதி—சீரிய பிறராற் பெறுதற்கரிய வீடுபேற்றினைத் தருவன்;

*"இருமுஞ் சின்னு மேனை யிடத்தொடுந், தகுநிலை யுடைய வென்மனார் புலவர்" என்றதனானாதல் †"அவ்வச் சொல்லிற்கு" என்னும் புறனடையதனானாதல் மதி படர்க்கைக்கண்வருதல் கொள்க.

இனி மதிபலவுடனெனக் கூட்டி, அறிவுகள்பலவுடனே பரிசில் நல்குமென்று கூறுவாருமுளர்.

295-6. [பலவுடன், வேறுபஃ றுகிலி னுடங்கி:] வேறு பல் துகிலின் பல உடன் நுடங்கி—வேறுபட்ட பலவாகிய துகிற்கொடிகளைப்போலத் தாம் பலவும் கூடவசைந்து,

296-7. அகில் சுமந்து ஆரம் முழு முதல் உருட்டி—அகிலை மேற்கொண்டு சந்தனமாகிய பெரிய மரத்தைத் தள்ளி,

297-8. வேரல் பூ உடை அலங்கு சினை புலம்ப வேர் கீண்டு—சிறுமூங்கிலினது பூவுடைத்தான அசைகின்ற கொம்பு தனிப்ப வேரைப்பிளந்து,

299-300. விண் பொரு நெடு வரை பரிதியின் தொடுத்த தண் கமழ் அலர் இறால் சிதைய—தேவருலகத்தைத் தீண்டுகின்ற நெடிய மலையிடத்தே ஞாயிற்றின் மண்டிலத்தைப்போல ஈ வைக்கப்பட்ட தண்ணியவாய் மணக்கின்ற விரிந்த தேன்கூடு கெட,

300-301. நல் பல ஆசினி முது சுளை கலாவ—நன்றாகிய பல ஆசினிகளினுடைய முற்றிய சுளை தன்னிடத்தே கலக்க,

301-2. மீ மிசை நாக நறு மலர் உதிர—மலையினுச்சியிலுண்டான சுரபுன்னையின் நறிய மலர்கள் உதிர,

302-3. யூசமொடு மா முக முசு கலை பனிப்ப—கருங்குரங்கோடே கரிய முகத்தையுடைய முசுக்கலைகளும் நடுங்க,

‡"கலையென் காட்சி யுழைக்கு முரித்தே." §"கலையிற் றப்பெயர் முகவின்கண்ணும்" என்றார்.

303-4. பூ நுதல் இரு பிடி குளிர்ப்ப வீசி—புகரையணிந்த மத்தகத்தையுடைய பெரிய பிடி குளிரும்படி வீசி,

304-5. பெரு களிறு முத்து உடை வான் கோடு தழீஇ—பெரிய யானையினுடைய முத்தையுடையவாகிய வெள்ளிய கொம்புகளை உள்ளடக்கி,

305-6. [தத்துற்று, நன்பொன் மணிகிறங் கிளர:] நல் பொன் மணிகிறங் கிளர தத்துற்று—நல்ல பொன்னும் மணியும் கிறம்விளங்கும்படி மேலே கொண்டுகுதித்து,

தத்துற்று - தத்துதலையுற்று.

---

* தொல்காப்பியம், இடைச்சொல்லியல், 27.

† ,, ,, 47.

‡ ,, மரபியல், 45.

§ ,, ,, 46.

பொன் கொழியா—பொடியான பொன்னைத் தெள்ளி,

307-8. வாழை முழு முதல் தமிய தாழை இளநீர் விழு குலை உதிர நாக்கி—வாழையினது பெரிய முதல் தனியத் தென்னை இளநீரைபுடைய சிய குலை உதிர அவ்விரண்டினையும் மோதி,

309. கதி கொடி கரு தணர் சாய—மின்னினது கொடியின் கரியகொத் தக்கள்சாய,

309-11. [பொதிப்புற, மடாஅ மஞ்ஞை பலவுடன் வீழிக், கோழி வயப்பெடை யிரிய:] பொதி புற மட ாடை மஞ்ஞை கோழி வயம் பெடை வீழி பலவுடன் இரிய—நீலியையுடைத்தாகிய இடத்தினையும் மடப்பத்தை புடைத்தாகிய,ஒழுக்கத்தினையுமுடைய மயில்களோடே கோழியினுடைய வலி யையுடைய பெடை வெருவிப் பலவும் சேக்கெட,

311-4. [கேழலொ, டிரும்பிணை வெளிற்றின் புல்சா யன்ன, குருஉமயிர் ாக்கைக் குடாவடி யுளியம், பெருங்கல் விடரளை செறிய:] கேழலொடு வெளிற்றின் இரு பிணை புல்சாய் அன்ன குருஉ மயிர் யாக்கை *குடாவடி ளியம் பெரு கல் விடர் அளை செறிய—ஆண்பன்றியுடனே உள்ளே வெளிற் பினையுடைத்தாகிய கரிய பிணையினது புல்லிய செறும்பையொத்த கரியநிறத்தை டைத்தாகிய மயிரினையுடைய உடம்பினையும், வினைந்த அடியினையுமுடைய ரடி பெரிய கல்விண்ட முழைஞ்சிலே சேர,

314-5. ஈரு கோடு ஆ ல் ஏறு சிலைப்ப—கரிய கொம்பினையுடைய ஆனிலுடைய ன்முகிய ஏறுகள் முழக்க,

315-6. சேண் சென்ற இழுமென இழிதரும் அருவி—மலையின் உச்சி சின்றும் இழுமென்னும் ஓசைபடக் குதிக்கும் அருவியையுடைய,

317. பழம் முதிர் சோலை †மலை கிழவோனே—பழம் முற்றின சோலை னையுடைய மலைக்கு உரிமையையுடையோனே.

நடங்கிச் சுமந்து உருட்டிக் கொடு கிளைபக் கலாஅ உரைப் பனிப்ப வீசித் ரீஇத் தத்துறுத் தொழியாத் தமிய உரைத்தூங்கி காய் இரியச் செறிய லைப்ப இழிதரும் அருவியைமுழக்க.

கிழவோனென்றபெயர், உடம்பொடுபுணர்த்தலாற் கொள்க

ணைவன் (6) மார்பினன் (11) சென்னிபுனைய (44) சேயவாய (61) ாடிபடரும் உள்ளத்தோடே (62) செல்லுஞ்சேலை சுவர்த்தினாயின்(64) ஊர் கெழுசுற்ற இன்னகைவாய்ப்ப (65) இன்னேபெறுதி (66); அது பெற ற்கு அவ்வாண்டுளையுமென்னிற் குன்றமர்த்துறைந்துமுரிபன்; அதுவன்றி 77) அலைவாய்சேரலும் கிடையுயர்பு அதுவன்றி (125) ஆவினன்குடி அசை ழுமுரியன்: அதுவன்றி (176) வரைத்துறைந்துமுரிபன்; அதுவன்றிக் (189) ற்றொருபாலும் மன்றத் பண்பு; அதுவன்றி (217) விழவின்கண்ணும் 220) மலியின்கண்ணும் (221) கற்றலிலியின்கண்ணும் (226) உறைதலு

* குடமுழவுபோன்ற அடி. (வேறை) † (202 . 317 : (நச்சி ட. ரு - 27 - 2; 317 · நச். ரு. 164. மயிலை சேர்)

முரியன்; (183) களனும் (222) காடு (223) முதலியன ஆண்டாண்டுறைதலும் (249) உரியன்; (189) சுளிலே (214) பாடி (245) வைத்து இயக்கி (246) வாழ்த்தி (247) வழிபட (248) உறைதலுமுரியன்; (183) இஃதியானறிந்தபடியே கூறினேன் (249); இனி ஆண்டாண்டாயினுமாக, பிறவிடங்களிலே யாயினுமாக (250) மூன்றாண்டுழிமுகனமர்ந்து முன்னர் எதிர்முகமாக்கி எத்திப் (251) பரவி வணக்கிப் (252) பின்னர் அன்மையாகவிளித்து யானறியாவையினேத்தி (277) கின்னடி புள்ளி வல்லேனென்று (279) * குறித்தது மொழிவதற்குமுன்னே (281) கூனியர் (282) குறித்துத் (291) தோன்றிப் (283) பெரும (285) இரவலன் †அளிக்கத்தக்கான் (284) வல்லோனென்றுகூற (285) மலைமிழலோனிய (317) குரிசிலும் (276) தான்கற்றெய்தித் (288) தழீஇக் (289) காட்டி (290) அஞ்சலோம்புமதியென்று (291) அன்புடை நன்மொழி யினிது (292) ஒரு யோகித்தோன்றும்படி (294) பெறலரு மரபில் சால்புடனென (295) வீடு பெறக் கருதிய இரவலனோக்கி வீடுபெற்றவொருவன் ஆற்றுப்படுத்தது விளைமுடிக்க.

இது புறத்திணையியலுள் *"தாவினல்லிசை" என்னுஞ் சூத்திரத்துள் "ஆற்றிடைக் காட்சி புறமுத்தோன்றிப், பெற்ற பெருவளம் பெறுஅர்க் கறிஃ நீஇச், சென்றபய னெரிரச் சொன்ன பக்கமும்" என்பதனுள் முற்கூறிய காழியைப் பெற்றவொருவன் அதனைப் பெறாதவொருவனுக்குப் பெறுமாறு கூறி அவனை வழிப்படுத்துக் கூறுவானென்பது பற்றிச் செய்யுள் செய்தாராயிற்று.

சுத்தழியாவது ஒருபுறமற்ற அருவாய்த் தானேயிற்கும் சுத்தவஸ்துப்பொருள்: அது †"சார்பினற் றேன்றாது தானருவாய் ** மைதீர் சுடர்" என்பதாம்: இதனை ‡"உற்றவாக்கையி னுறுபொரு ணறுமல ரெழுதரு நற்போற்பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்" என அதனை யுணர்ந்தோ கூறியவாற்றானுணர்க.

முருகாற்றுப்படையென்றதற்கு வீடுபெறுதற்குச் சமைந்தவோர் இரவலனை வீடுபெற்றவொருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்தலென்று பொருள் கூறுக.

தமாவேலோ மதுரைக் கணக்காயனாரகனார் கற்றுணர்ந்தபடிய செய்து கற்றுபடைத்த மதுரை ஆசிரியர் நல்லந்துவனார் செய்யுளை முற்றிற்று.

---

* தொல்காப்பியம், புறத்திணையியல், 31.

† வெண்பா. "சார்பினற் றேன்றாது தானருவா யெப்பொருட்குஞ் சார்பெனின் றெஞ்ஞான்று மீச்சர் தகைத்தோ - வாய்மொழியான் மெய்யாக் மனத்தா னறிவிறந்த - தாயையதா மைதீர் சுடர்." (தொகை. புறத்திணை சூ. 33 - உ. மேற்.)

‡ திருவாசகம், அதிசயப்பத்து, 9.

வேலுமயிலுத்துணை.

அடியிலுள்ள பாடல்கள், பத்துப்பாட்டும் சேர்ந்துள்ள பழைய எட்டுப்பிரதி களிலில்லாமல் திருமுருகாற்றுப்படைமட்டுமுள்ள புதிய எட்டுப்பிரதிகளிலும் வந்தப் பிரதிகளிலும் இருந்தமையால் தனியே பதிப்பிக்கப்பெற்றன; திருவால வாயுடையார் திருவிளையாடற் புராணம் 44 - ஆம் திருவிளையாடல் 27 - ஆம் திருவிருத்தம் முதலியவற்றை நோக்குங்கால், "குன்ற மெறிந்தாய்" என்னும் வெண்பா அத்தலவரியர் காலத்தே வழங்கிவந்ததாகத் தெரிகின்றது.

சேரிசைவெண்பா.

1. குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்னிலை பூதப் பொருபடையா—யென்று
மினையா யழுவா யேறார்ந்தா னேறே
யிளையாயென் னுள்ளத் துறை.

2. குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவு
மன்றல் கமரிடர் தீர்த்ததுவு—மின்றெனக்கை
விடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காந்ததுவு
மெய்விடா வீரன்கை வேல்.

3. வீரவே ரூரவேல் விண்ணோர் சிறைமீட்ட
நீரவேல் செவ்வே டிருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்தவே தூண்டே துணை.

4. இன்ன மொருநா லெனதிடும்பைக் குன்றுக்கும்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா—முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுநவத் தொட்ட
தனிவேலே வாங்கத் தகும்.

5. உன்னை யொழிய வொருவரையு நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியபினை நீர்த்தருளும்
வேலப்பா செந்திலுறை வே.

6. அஞ்சு முகந்தோன்றி னாறு முகந்தோன்றும்
வெஞ்சமரி லஞ்சலென வேறோன்று—நெஞ்சி
லொருகா னினைக்கி லிருகாலுந் தோன்று
முருகாவென் றோதுவார் முன்.

7. முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே—யொருகைமுகன்
றம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுது
நம்பியே கைதொழுவே னான்.

8. காக்கக் கடவியரீ காவா திருந்தக்கா
லார்க்குப் பரமா மறுமுகவா—பூக்குங்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
விடங்கா ணிரங்கா யினி.

9. பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்றன் பாதங்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு—சுருங்காம
லாசையா னெஞ்சே யணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல்.

10. நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத
தற்கோல நாடோறுஞ் சாற்றினான்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைத்த வெல்லாந் தரும்.

---

8. 'கடன்காணி' 'பயங்கா ணறுமுகவா' 'குமரா கதிர்வேலா' எனவும பாடம்.

இரண்டாவது

பொருநாற்றுப்படை.

அரசு பாண ரகன்றலைப் பேரூர்ச்
சாறுகழி வழிநாட் சோறுநசை யுறுது
வேறுபுல முள்ளிய விரகறி பொருந
குளப்புவழி பன்ன கவுட்படு பத்தல்
விளக்கழ நுரைத்த விலியுறு பச்சை
பெய்யா விளஞ்சூற் செய்போ ளல்லிற்
றைதமலி சொழுகிய தோற்றம் போலப்
பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை
யகலா முலையன் கண்கள் டன்ன
தளாவாய் தார்த்த தரபாமை யாணி
பெண்ணுட் டிங்கள் வடிகிற் றுகி
யண்ணு விலா வமைவரு வறுவாப்ப்
பாம்பணைத் தன்ன சோல்கிரு மருப்பின்
ராயோன் முன்கை பாய்தொடி கடுக்குள்
நல்கு டிருக்கைத் திண்பிணிக் திவலி
ரைதினை யரிசி யலைய லன்ன
வேப்பை போகிய விரலுளர் நரம்பிற்

1-248. பொருநாற்றுப்படைக்கு இச்சூலை மேற்கோளைக் காட்டுவர்; தொல். புறத்திணையியல், சூ. 30 - உ.)

1-2. "கல்லெனக் கனிபெற்ற விழவாற்றுப் படுத்தபிற், புல்லென்ற வோலப் புலம்புகொண்டு" (கலி. 5.)

5. "விளக்கழ நுரைத்த போலும் விலியுறு போர்வை" (சீவக. 559.) வள்—தோல்; விளக்கழ ல .... ..பச்சை' (நச். "வள்ளுறை" யிலுரை.)

7. 'ஒழுகிய' என்றும் பாடம்.

8. "பழையதோர் பொல்லம் பொத்திய" (திருவிளை. விறகு. 13.)

10-11. "கொளுத்தரு நிலைய நிகட் சோணிலைத் தினைய வாணி" சீவக. 559.)

11. "பிறைபிறந் தன்ன பின்னோக்கு வலைக்கை" (பெரும்பாண். 11.)

12. "சினைவறந் தன்ன கிருங்கை வறவாய்" (பெரும்பாண். 10.)

14-5. "தெடுங்கினைத் திரடோள் மடந்தை முன்கைக், குறுந்தொடி மருங்கு மெலிந்த வீங்கு நிலை" (பெரும்பாண். 123.)

கேள்வி போகிய நீள்விசித் தொடையன்
மணங்கமழ் மாதரை மண்ணி யன்ன
வணங்குமெய்ந் நின்ற வமைவரு காட்சி
யாறலை கள்வர் படைவிட வருளின்
மாறுதலை பெயர்க்கு மருவின் பாலை
வாரியும் வடித்து முந்தியு முறழ்ந்துஞ்
சீருடை நன்மொழி நீரொடு சிதறி
யறல்போற் கூந்தற் பிறைபோற் றிருநுதற்
கொலைவிற் புருவத்துக் கொழுங்கடை மழைக்கு
னிலவிதழ் புரையு மின்மொழித் துவர்வாய்ப்
பலவுறு முத்திற் பழிதீர் வெண்பன்
மயிர்குறை கருவி மாண்கடை யன்ன
பூங்குழை யூசற் பொறைசால் காதி
னாண்டச் சாய்ந்த நலங்கிள ரெருத்தி
னாடமைப் பணைத்தோ ளரிமயிர் முன்கை
நெடுவரை மிசைஇய காந்தண் மெல்விரற்
கிளிவா யொப்பி னொளிவிடு வள்ளுகி
ரணங்கென வுருத்த சுணங்கணி யாகத்
தீர்க்கிடைப் போகா வேரிள வனமுலை
நீர்ப்பெயர்ச் சுழியி னிறைந்த கொப்பூ
ழுண்டென வுணரா வுயவு நடுவின்

19-20. "மைத்தடங்கண் மணமகளிர் கோலம்போல் வனப்பெய்தி" (சிலப். கானல்)

21. 'படைவிட' என்றும் பாடம்.

23. "வார்தல் வடித்த லூந்த லூறழ்தல்" (சிலப். கானல்.)

16-24. "ஆய்தினை யவைய லனையவா நரம்பாங் கணிபெற வாரியும் வடித்து, மேயுற முறையே யுந்தியு முறழ்ந்து மியைந்தநீ ரோடுநன் மொழிக, டேய்வற வெடுத்துச் சிதறியும் பலகாற் றேனுற ழின்னிசை யெழுப்பி" (இலிங்க. காரதர்கடகை. 24.)

29-30. "மயிரெறி கத்திரிகை யனையவாய்" (சீவக. 168); "மயிரெறி கருவி வள்ளை" (கந்த. மாயை. 46); "மயிரெறி கருவி தனதிழி தொழிலை மதித்துமஞ் சிகனுறை தூங்க" (ஆனைக்கா. அகிலாண்ட. 38.)

36. "இடையீர் போகா விளமுலை யாளை." (தே. திருவோத். 2); "ஈர்க்கிடை போகா விளமுலை மாதர்" (திருவா. போற்றி. 34.); "ஈர்க்கிடை புகாம லடிபரர் தோங்கு மேரிள வனமுலை" (நைடதம். சுயம்வரப். 77.)

வண்டிருப் பன்ன பல்கா ழல்கு
லிரும்பிடித் தடக்கையிற் செறிந்துதிரள் குறங்கிற்
பொருந்துமயி ரொழுகிய திருந்துதாட் கொப்ப
வ்ருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி
யரக்குருக் கன்ன செந்நில னொதுங்கலிற்
பரற்பகை யுழந்த நோயொடு சிவணி
மரற்பழுத் தன்ன மறுகுநீர் மொக்கு
ணன்பக லந்தி நடையிடை விலங்கலிற்
பெடைமயி லுருவிற் பெருந்தகு பாடினி
பாடின பாணிக் கேற்ப நாடொறுங்
களிறு வழங்கதர்க் கானத் தல்கி
யிலையின் மராத்த வெவ்வந் தாங்கி
வலைவலந் தன்ன மென்னிழன் மருங்கிற்
காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றைப்
பீடுகெழு திருவிற் பெரும்பெயர் நோன்றாண்
முரசுமுழங்கு தானை மூவருங் கூடி
யரசவை யிருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை யெழாஅற்
கோடியர் தலைவ கொண்ட தறிந

---

39. "பாடுவண்டிருந்தவன்ன பல்கலையகலல்குல்" (சீவக. 1996)

42. "உயங்குநாய் நாவி னல்லெழி லசைஇ, வயங்கிழை யுலறியவடி" (சிறுபாண். 17-8); "மதந்தபு ஞமலி நாவினன்ன, துளங்கியன் மெலிந்த கல்பொரு சீறடி" (மலைபடு. 42-3); "முயல்வேட் டெழுந்த முடுகுவிசைக் கதநாய், நன்னாப்புரையுஞ் சீறடி" (நற். 252); "நாய்நாச் சீறடி" (சீவக. 2694); வருந்துநாய் நாவி னணிகொள் சீறடி", "வருந்துநாய் நாவினன்ன மலரடி" கூர்ம. இராமன்வனம். 15; ஷை இராமன்வைகுந்த. 28); "வருந்து பயினது நாவினை வாட்டித், திருந்து வெண்மை யெழில் சேர்ந்த மலர்த்தாள்" (இலிங்க. அம்பரீடனை. 37.)

43. "அரக்கு விரித்தன்ன செந்நிலம்" (மலைபடு. 507); "அரக்கத் தன்ன செந்நிலப் பெருவழி" (அகநா. 14.)

44-5. இஃது இடத்திற்கு ஏற்ற உவமைக்கு மேற்கோள்; (இ-வி. சூ. 39 - உரை.)

47. செய்யுட்கண் பலதொகையும் விராய் வந்து ஒருசொல் நடையதற்கு இது மேற்கோள். (தொல். எச்ச. சூ. 24 - ச.)

54. "முரசு முழங்கு தானை மூவருள்ளும்" (பெரும்பாண். 33; புறநா. (தொல். கிளவி. சூ. 33 - சே. ச.)

54-5. முரசடுத்தற்கு மேற்கோள். (தொல். புறத்திணை. சூ. 31 - ச.)

54-7. இவை சிறப்புப்பற்றிவந்த உவமத்திற்கு மேற்கோள். (தொல். வம. சூ. 4 - இளம். ச; இ - வி. சூ. 639)

கேள்வி போகிய சீர்வினைத் தொடையன்
மணங்கமழ் மார்தரை மன்னி யன்ன
வணங்குமெய்ந் நின்ற வமைவரு காட்சி
பாறலை கள்வர் படைதிடை வருளின்
மாதுதலை பெயர்க்கு மருளின் பாலை
வாரியும் வடித்து மூன்றியு முறழ்ந்தன்ன
சிருடை நன்மொழி நீகொடு சிதறி
பறல்போற் கூந்தற் பிறைபோற் றிருநுதற்
கொலிவிற் புருவத்துக் கொழுங்கடை மழைகண்
ணிலவிதழ் புரையு மின்மொழித் துவர்வாய்ப்
பலவுறு முத்திற் பழிதீர் வெண்பன்
மயிர்குறை கருவி மாண்கடை பன்ன
பூங்குழை யூசற் பொறைசால் காதி
னுண்டச் சாய்ந்த நலங்கிள ரொருத்தி
னுடைமைப் பிணைத்தோ ளரிமதிர் முன்கை
நெடுவரை மிசையிய காந்தண் மெல்விரற்
கினிவா யொப்பி னெளிவிடு வள்ளகி
ரணங்கென வருத்த சணங்கணி யாகத்
தீர்க்கைடைப் போகா வேரிள வனமுலை
சீர்ப்பெயர்ச் சுழியி னிறைந்த கொப்பூழ்
முண்டென வுணரா வுபவு நடுவின்

19-20. "மைத்தடங்கண் மணமகளிர் கோலம்போல் வனப்பெய்தி" (சிலப். காடல்)

21. 'படைமிடை' என்றும் பாடம்.

23. "வார்தல் வடித்த லூர்த லுறழ்தல்" (சிலப். காடல்.)

16-24. "ஆய்நினை யமைய லினியவா கரம்பாக வணிபெற வாரியும் வடித்து, மேயுற முறையே யுள்ளிய முறழ்ந்து மிலைச்சி சோதன் மொழிக, பேய்மகள் வெறித்துச் சிதறியும் பலவாற் றேனுற ழின்னிசை யெழுப்பி" (ஜீவக. சரற்கூகை. 24.)

29-30. "மயிரெறி கத்திரிகை யினையவாய்" (சீவக. 168); "மயிரெறி கருவி வல்லே" (கந்த. மாலை. 46); "மயிரெறி கருவி தனிநிழி தொழிலே மறித்தமஞ் செலுமறை தன்ன" (ஜூலக்கா. அதிலண்ட. 38.)

38. "இடைமீர் போகா விளமுலை யானே." (தே. திருவாத். 2); "சாக் போகா விளமுலை மாதர்" (திருவா. போற்றி. 34.); "சார்கிடை புகாம லஞ் சோற்கு மேனி வளமுலை" (நைடதம். சுயம்வரப். 77.)

வண்டிருப் பன்ன பல்கா ழல்கு
லிரும்பிடித் தடக்கையிற் செறிந்துதிரள் குறங்கிற்
பொருந்துமயி ரொழுகிய திருந்துதாட் கொப்ப
வருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி
யரக்குருக் கன்ன செந்நில னொதுங்கலிற்
பரற்பகை யுழந்த நோயொடு சிவணி
மரற்பழுத் தன்ன மறுகுநீர் மொக்கு
ணன்பக லந்தி நடையிடை விலங்கலிற்
பெடைமயி லுருவிற் பெருந்தகு பாடினி
பாடின பாணிக் கேற்ப நாடொறுங்
களிறு வழங்கதர்க் கானத் தல்கி
யிலையின் மராத்த வெவ்வந் தாங்கி
வலைவலந் தன்ன மென்னிழன் மருங்கிற்
காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றைப்
பீடுகெழு திருவிற் பெரும்பெயர் நோன்றாண்
முரசுமுழங்கு தானை மூவருங் கூடி
யரசவை யிருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை யெழாஅற்
கோடியர் தலைவ கொண்ட தறிந

---

39. "பாடுவண்டிருந்தவன்ன பல்கலையகலல்குல்" (சீவக. 1996)

42. "உயங்குநாய் நாவி னல்லெழி லசைஇ, வயங்கிழை யுலறியவடி" (பெரும்பாண். 17-8); "மதந்தபு ளுமலி நாவினன்ன, துளங்கியன் மெலிந்த கல்லாரு சீறடி" (மலைபடு. 42-3); "முயல்வேட் டெழுந்த முடுகுவிசைக் கதவாய், நன்னாப்புரையுஞ் சீறடி" (நற். 252); "நாய்நாச் சீறடி" (சீவக. 2694); "வருந்துநாய் நாவி னணிகொள் சீறடி", "வருந்துநாய் நாவினன்ன மலரடி" (ஈம். இராமன்வனம். 15; ஷை இராமன்வைகுந்த. 28); "வருந்து பயினது நாவினை வாட்டித், திருந்து வெண்மை யெழில் சேர்ந்த மலர்த்தாள்" (விங்க. அம்பரீடனை. 37.)

43. "அரக்கு விரித்தன்ன செந்நிலம்" (மலைபடு. 507); "அரக்கத் = செந்நிலப் பெருவழி" (அகநா. 14.)

44-5. இஃது இடத்திற்கு ஏற்ற உவமைக்கு மேற்கோள்; (இ-வி. சூ. 39 - உரை.)

47. செய்யுட்கண் பலதொகையும் விராய் வந்து ஒருசொல் நடையதற்கு இது மேற்கோள். (தொல். எச்ச. சூ. 24 - ச.)

54. "முரசு முழங்கு தானை மூவருள்ளும்" (பெரும்பாண். 33; புறநா. (தொல். கிளவி. சூ. 33 - சே. ச.)

54-5. முரசடுத்தற்கு மேற்கோள். (தொல். புறத்திணை. சூ. 31 - ச.)

54-7. இவை சிறப்புப்பற்றிவந்த உவமத்திற்கு மேற்கோள். (தொல். வம. சூ. 4 - இளம். ச; இ - வி. சூ. 639)

வறியா மையி னெறிதிரிந் தொராஅ
தாற்றெதிர்ப் படுதலு நோற்றதன் பயனே
போற்றிக் கேண்மதி புகழ்மேம் படுந
வாடுபசி யுழந்தநின் னிரும்பே ரொக்கலொடு
நீடுபசி யொராஅல் வேண்டி னீடின்
றெழுமதி வாழி யேழின் கிழவ
பழுமர முள்ளிய பறவையின் யானுமவ
னிழுமென் சும்மை யிடனுடை வரைப்பி
னசையுநர்த் தடையா நன்பெரு வாயி
லிசையேன் புக்கென் னிடும்பை தீர
வெப்த்த மெய்யே னெய்யே னாகிப்
பைத்த பாம்பின் றுத்தி யேப்பக்
கைக்கச டிருந்தவென் கண்ணகன் றடாரி
யிருசீர்ப் பாணிக் கேற்ப விரிகதிர்
வெள்ளி முளைத்த நள்ளிருள் விடிய
லொன்றியான் பெட்டா வளவையி னொன்றிய
கேளிர் போலக் கேள்கொளல் வேண்டி
வேளாண் வாயில் வேட்பக் கூறிக்

---

59 : மலைபடு. 65 - 6.

61. நன். சூ. 397-மயிலை; நன் - வி. சூ. 398. மேற்.

64. "பழந்தேர் வாழ்க்கைப் பறவைபோல" (மதுரை. 576); "பழுமரந் தேரும் பறவைபோல" (பெரும்பாண். 20); "தாஅவஞ்சிறை நொப்பறை வாவல், பழுமரம் படரும்" (குறுந். 172); "யாணர்ப் பழுமரம் புள்ளி மிர்ந் தன்ன" (புறநா. 173); "மாக்களாற், புட்பயில் பழுமரப் பொலிவிற்று", "பார்கெழு பழுமரப் பறவை" (சீவக. 93, 828); "மரஞ்சேர் பறவையுந், தொக்குட னீண்டிச் சூழ்ந்தன விடாஅ, பழுமரத் தீண்டிய பறவையி னெழூஉம்" (மணி. 14: 24-7); "பாயதொன்மரப் பறவைபோல்" (திருவிளை. திருநகரப். 67.)

66-7. 'நசையுநர்க் கடையா.....இசையெனப் புக்கு' என்றும் பாடம். "பொருநர்க் காயினும் புலவர்க் காயினு, மருமறை நாவி னந்தணர்க் காயினும் .....அடையாவாயில்" (சிறுபாண். 203-6); "நசையுநர்க் கடையா நன்பெரு வாயில்" (கூர்ம. சூரியன்மரபு. 13; நன். சூ. 457 - மயிலை; நன். வி. சூ. 458. மேற்.)

68. நன். சூ. 451 - மயிலை மேற்.

72. "வெள்ளி முளைத்த விடியல்" (பு - வெ பாடாண். 18)

73. "ஒன்றியான் பெட்டா வளவை யன்றே." (புறநா. 399)

கண்ணிற் காண நண்ணுவழி யிரீஇப்
பருகு வன்ன வருகா நோக்கமோ
டுருகு பவைபோ லென்பு குளிர்கொளீஇ
யீரும் பேனு மிருந்திறை கூடி,
வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னற் சிதாஅர் துவர நீக்கி
நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்
தரவுரி யன்ன வறுவை நல்கி
மழையென மருளு மகிழ்செய் மாடத்
திழையணி வனப்பி னின்னகை மகளிர்
போக்கில் பொலங்கல நிறையப் பல்கால்
வாக்குபு தரத்தர வருத்தம் வீட
வார வுண்டு பேரஞர் போக்கிச்

---

76. "கண்ணிற் காண நண்ணுவழி யிருந்து" (குறுந். 203)

77. "பருகு வன்ன காத லுள்ள மொடு" (அகநா. 399); "பருகுவான் போல நோக்கும்", "பருகுவனன் போனோக்கி" (பாக. 4: துருவன்பதம். 35; ஷை 10: சகடமுதைத்த. 21); "மலர்த்தடங் கண்ணே வாயாப், பருகுவான் போல நோக்கி" (கூர்ம. திருக்கல்யாண. 61.)

79. 'இமிர்ந்திறைகூடி' என்றும் பாடம்.

80. "தொன்றுபடு துளையொடு பருவிழை போகி" (புறநா. 376.)

81. "துன்னற் சிதாஅர் நீக்கி" (பொருந. 154)

80-81. "அரையது, வேற்றிழை நுழைந்த வேர்நனை சிதாஅ ரோம்பி" (புறநா. 69.)

82. 'நோக்குநுழைவேலா' என்றும் பாடம்.

83. "குரவ மெல்லரும் பன்னவெங் கூரெயிற் றரவின், உரிவை யன்னவா னுண்டுகில்" (பாக. 10: கோவியர்துகில். 9); "பாழிவா யரவி னுரிநிக ராடை" (இலிங்க.- அம்பரீடனை. 56); "பையர வுரியி னன்ன நடைப் படாம்" (திருவிளை. திருமண. 147.)

84. "மலையென மழையென மாட மோங்கி" (மலைபடு. 484); "சேறு செய் மாரியி னளிக்குநின் சாறுபடு திருவி னனைமகி ழானே" (பதிற். 65.)

85. "இன்னகை யாயமோ டிருந்தோற் குறுகி" (சிறுபாண். 220.)

84-8. "விளங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய, மணங்கமழ் தேறன் மடுப்ப நாளு, மகிழ்ந்தினி துறைமதி பெரும" (மதுரை. 779-81); "தண் கமழ் தேறல், பொன்செய் புனைகலத் தேந்தி நாளு, மொண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து" (புறநா. 56)

86-8. பகரவுகரம் இறந்தகால வினையெச்சமாக வருமென்பதற்கு இவ் வடிகள் மேற்கோள்; (தொல். வினை. சூ. 31-ந; இ-வி. சூ. 246)

செருக்கொடு நின்ற காலை மற்றவன்
90 றிருக்கிளர் கோயி லொருசிறைத் தங்கித்
தவஞ்செய் மாக்க டம்முடம் பிடாஅ
த்தன்பய மெய்திய வளவை மான
வாறுசெல் வருத்த மகல நீக்கி
யனந்தர் நடுக்க மல்ல தியாவது
95 மனங்கவல் பின்றி மாழாந் தெழுந்து
மாலை யன்னதோர் புன்மையுங் காலைக்
கண்டோர் மருளும் வண்டுசூழ் நிலையுங்
கனவென மருண்டவென் னெஞ்சே மாப்ப
வல்லஞர் பொத்திய மனமகிழ் சிறப்பக்
100 கல்லா விளைஞர் சொல்லிக் காட்டக்
கதுமெனக் கரைந்து வம்மெனக் கூஉ
யதன்முறை கழிப்பிய பின்றைப் பதனறிந்து
துராஅய் துற்றிய துருவையம் புழுக்கின்
பராரை வேவை பருகெனத் தண்டிக்
105 காழிற் சுட்ட கோழூன் கொழுங்குறை
யூழி னூழின் வாய்வெப் தொற்றி
யவையவை முனிகுவ மெனினே சுவைப
வேறுபல் லுருவின் விரகு தந்திரீ இ

91-2. "இடம்படு புகழ்ச்சனகர் கோனினிது பேண .....உடம்பெ துறக்கநக ருற்றவரை யொத்தார்", "இறைவன் சொல்லெனு மின்ன வருந்தினர் யாரும்.....உறையும் விண்ணக முடலொடு மெய்தின ரொத்தார் (கம்ப. கடிமண. 1; ஷை மந்திர. 75)

94. "துழந்தடு கள்ளின் றோப்பியுண் டயர்ந்து, பழஞ்செருக் குற் வனந்தர்ப் பாணியும்" (மணி. 7: 71-2); "அரிய லார்ந்த வனந்தர்" (தணி நாடு. 100.)

96. "ஆடரவக் கிண்கிணிக்கா லன்னானோர் சேடனை" (தே. ஆ திருநா.)

96-7. "பண்டறி வாரா வுருவோடு" (புறநா. 376.)

98. "கனவிற் கண்டாங்கு வருந்தாது நிற்ப, நனவி னல்கியோ னை றோன்றல்", "கனவென மருள வல்லே நனவி, னல்கி யோனே றோன்றல்" (புறநா. 356, 387.)

107-8. "ஊனு மூணு முனையி னினிதெனப், பாலிற் பெய்தவும் கொண்டவும், மனவுபு கலந்து மெல்லியது பருகி" (புறநா. 381.)

மண்ணமை முழவின் பண்ணமை சிறியா
தொண்ணுதல் விறலியர் பாணி தூங்க
மிழிப்பதம் பண்ணட் கழிப்பி யொருநா
ளளிழ்ப்பதங் கொள்கென் றிரப்ப முழிழ்த்தகை
முரவை போகிய முரியா வரிசி
னிரலென நிமிர்ந்த நிரலமை புழுக்கல்
பால்வறைக் கருணை காடியின் மிதப்ப
வயின்ற காலைப் பயின்றினி திருந்து
கொல்லே யுழுகொழு வேப்பப் பல்லே
யெல்லியு மிரவு மூன்றின்று மழுங்கி
யுயிர்ப்பிடம் பெறூஅ தூண்முனிக் தொருநாட்
செயிர்த்தெழு தெல்லர் திறைதுறை போகிய
செல்வ சேறுமெக் தொல்பதிப் பொயர்ந்தென
மெல்லெனக் கிளந்தன மாக வல்லே
யகறி ரோவெம் மாயம் விட்டெனச்
சிரறிய வன்போற் செயிர்த்த நோக்கமொடு
துடியடி யன்ன தூங்குநடைக் குழவியொடு
பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்கெனத்
தன்னறி யளவையிற் நரத்தர பாலு
மென்னறி யளவையின் வேண்டுவ முகந்துகொண்
டின்மை நீர வந்தனென் வெல்வே
னருவப் பஃறே ரினியோன் சிறுவன்

113-5. "முரவை போகிய முரிவில்வான் மூரல்பால் வறையல், கருணை" (திருவிளை. குண்டோதரனுக்கு. 14.)

121-2. "செல்லேம் நில்லலெம் தொல்பதிப் பெயர்ந்தென, மெல்லெனக் கூறி விடுப்பின்" (மலைபடு. 567-8.)

125. 'துடிபுரையடிய' என்றும் பாடம். "துடியடிக் கயந்தலே" (கலி.11).

126-7. யானைகொடுக்கப்படுதலைப் புறநானூறு. 129, 130, 131, 135, 151-ஆம் பாட்டுக்கள் முதலியவற்றாலுணர்க; "குவ்வுயிர பொன்னும் வேழக் குழாமுங் கொடை புகழ்ந்து, சென்றூர் முகக்கும்" (தஞ்சை. 149.)

129. 'வென்வேல்' என்றும் பாடம்.

119-129. பரிசிலன் யான் போதல் வேண்டுவனாக் கூறி, விடுத்தபின் அவன் தந்த வளனே உயர்த்துக் கூறியதற்கு இது மேற்கோள்; (தொல். புறத். சினை. சூ. 36 - உ.)

130. 'உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி அழுந்தூர்வேளிடை மகட் கோடலும், அவன் மகளாகிய கரிகாற் பெருவளத்தான் நாங்கூர்வேளிடை மகட் கோடலும்' (தொல். அகத்திணை. சூ. 30 - உ.)

முருகற் சிற்றத் தருகெழு குருசி
முப்வயிற் றிருந்து தாய மெய்தி
யெய்யாத் தெவ்வ ரேவல் கேட்பச்
செய்யார் தேளக் தெநுமரல் களிப்பப்
பௌவ மீமிசைப் பகற்கதிர் பரப்பி
வெவ்வெஞ் செல்வன் விசும்புபடர்ந் தாங்குப்
பிறந்துதவழ் கற்றதற் றொட்டுச் சிறந்தநன்
னுடுசெகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப
வாளி நன்மா ணணங்குடைக் குருளை
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி
முலைக்கோள் விடாஅ மாந்திரை ஞெரேரெனத்
தலைக்கோள் வேட்டங் களிறட் டாஅங்
கிரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை
யரவாய் வேம்பி னங்குழைத் தெரிபூ
மோங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
விருபெரு வேந்தரு மொருதனைத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்முட்
கண்ணுர் கண்ணிக் கரிகால் வளவன்
முணிமுன் மருங்கி லணுகுபு குறுகித்
தொழுதுமுன் னிற்குவி ராயிற் பழுதின்
றீற்ற விருப்பிற் போற்றுபு நோக்கிநின்

131. "முருனென்னசிற்றத்து" (அகநா. 158); "முருகற் சிற்றத் தருகெழு குருசில்" (புறநா. 16.)

132. "உருகெழுதாய மூழினெய்தி" (பட்டினப். 227.)

137. 'கற்றது தொட்டுஞ் சிறந்த' என்றும் பாடம். "கரியவன்றவழ் கற்றனன்" (பாக. 10: சகடமுறைத்த. 11.)

141. "அரவாய்க் கடிப்பகை" (மணி. 7: 73.); "அரசுகரிலை நிம்பத் தார்" (திருவிளை. அன்னக்குழியும். 21.)

147. 'வெண்ணிற்றுக்கிய' என்றும் பாடம்; (புறநா. 66.)

137-48: "முலைமுத றுறந்த வன்றே மூரித்தா ளாளி யானைத், தலையிலம் புர வெண்கோ டுண்டதே போன்று தன்கைச், சிலையிடம் பிடித்த ஞான்றே தெவ்வரைச் செருத்த நம்பி, நிலவுமிழ் குடையி னீழற் றுஞ்சுக வையை மென்பார்." (சீவக. 2554.)

148. "கண்ணுர் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்" (சிறுபாண். 65.)

149. 'மருங்கினணுகுபு' என்றும் பாடம்.

151. 'போற்றுவனலேந்தி' என்றும் பாடம்.

கையது கேளா வளவை யொயியெனப்
பாசி வேரின் மாசொடு குறைந்த
துன்னற் சிதாஅர் நீக்கித் தூய
கொட்டைக் கரைய பட்டுடை நல்கிப்
பெறலருங் கலத்திற் பெட்டாங் குண்கெனப்
பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர
வைகல் வைகல் வைகவி பருகி
யெரியகைந் தன்ன வேடி றாமரை
சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி
நூலின் வலவா நுணங்கரின் மாலை
வாலொளி முத்தமொடு பாடினி யணியக்
கோட்டிற் செய்த கொடிஞ்சி நெடுந்தே
ரூட்டுளை துயல்வர வோரி நடங்கப்
பால்புரை புரவி நால்குடன் பூட்டிக்
காலி னேழடிப் பின்சென்று கோலின்
றாறுகளைந் தேறென் றேற்றி வீறுபெறு
பேர்யாழ் முறையுளிக் கழிப்பி நீர்வாய்த்
தண்பணை தழீஇய தளரா விருக்கை
நன்பல் லூர நாட்டொடு நன்பல்

152. 'கையதுகொள்ளா' என்றும் பாடம்.

153. 'மாசொடுமிடைந்த' என்றும் பாடம்.

153-4. "பாசியன்ன சிதர்வை" (பெரும்பாண். 168); "முதுசீர்ப்பாசி யன்னவுடை", "பகட்டிலைப்பாசி, வேர்புரை சிதாஅர்" (புறநா. 390, 392.)

159. "எரியகைந்தன்ன தாமரை" (அகநா. 106, 116)

159-62. "ஒள்ளழற் புரிந்த தாமரை, வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே", "அழல்புரிந்த வடர்தாமரை, யைதடர்ந்த நூற்பெய்து, புனைவினைப் பொலிந்த பொலனறுந் தெரியல், பாறுமயி ரிருந்தலை பொலியச் சூடி", "கிள்ளிவளவற் படர்குவையாயின் .. .. . ஆடும்வண் டிமிராத தாமரை, சூடா யாத லதனினு மிலையே", "பாடினி மாலையணிய, வாடாத தாமரை சூட்டுவ னினக்கே", 'வாடாமாலை பாடினி யணியப், பாணன் சென்னிக் கேணி பூவா, வெரிமரு டாமரைப் பெருமலர்தயங்க" (புறநா. 11, 29, 69, 319, 364.)

163. "கோட்டினிற்புரி கொடிஞ்சியந்தேர்", "யானைக்கோட்டினிலிய ற்றுதிண்டேர்" (பாக. 1· தன்மபுத்திரன்அரசு. 18; ஷை 10· திருவவதார. 18.); (தொல். வேற்றுமை. சூ. 17 ந. மேற்.)

165. "நால்கு பண்ணினர் நால்வரு மேறினார்" (சீவக. 1774. மேற்.)

168. 'முறையுளிகழிப்பி' என்றும் பாடம்.

வெரூஉப்பறை துவலும் பரூஉப்பெருந் தடக்கை
வெருவரு செலவின் வெகுளி வேழம்
தாவிடைத் தங்கலோ விலனே வாவிடைப்
பெற்றவை பிறர்பிறர்க் கார்த்திக் தெற்றெனச்
செலவுதடைக் கூட்டுஇ ராயிற் பலபுலந்து
நில்லா வுலகத்து நிலைமை தூக்கிச்
செல்கென விடுக்குவ னல்ல னெல்லெனத்
திரைபிறழிய விரும்பௌவத்துக்
கரைசூழ்ந்த வகன்கிடக்கை
மாமாவின் வயின்வயினெற்
றுழ்தாழைத் தண்டண்டலைக்
கூடுகெழீஇய குடிவயினுற்
செஞ்சோற்ற பலிமாந்திய
கருங்காக்கை கவவுமுனையின்
மனைகொச்சி நிழலாங்க
ணீற்றி யாமை தன்பார்ப் போம்பவு
மீளோர் வண்ட லயாவு முதியோர்
ரலைபுகு பொழுதிற்றம் பகைமுரண் செலவு
முடக்காஞ்சிச் செம்மருதின்
மடக்கண்ண மயிலாலப்
பைம்பாகற் பழந்துணரிய
செஞ்சுளாய கனிமாந்தி
யறைக்கரும்பி னரிநெல்லி

---

172. 'வெருவருஞ்செலவின்' என்றும் பாடம்.

171-2. "கிறையழி கொல்யானை நீர்க்குஇட் டாங்குப், பறையறைந் தல்லது செல்லற்க." (கலி. 56.); "பறைகிறை கொல்யானை", "அறைபறை யானை" (முத்.); "முரசதிர்ந் தனைமுன் னேட முன்பனிச் தன்பார்களேத்த" (தே. ஆநூ.)

176. 'நிலைமைதூக்கி' என்றும் பாடம். "நில்லாவுலகத்து நிலைமை தூக்கி" (பெரும்பாண். 466.)

180. 'வயின்வயினின்' என்றும் பாடம்.

181. வெண்பாவுரிச்சீரால் தாங்கலோசை பிறந்ததற்கு இவ்வடிமேற் கோள்; (தொல். செய். சூ. 22.)

182. 'கூடு குழீஇய' என்றும் பாடம்.

183-4. கருத்து: குறுந். 210; திருக்கிற் 235.

188. 'பகைமுரண் சொலவும்' என்றும் பாடம்.

191-2. (சிலப். 16 : 24. மேற்.)

னினக்களம ரிசைபெருக
வறளடும்பி னிவர்பகன்றைத் .
தளிர்ப்புன்கின் றாழ்காவி
னனைஞாழலொடு மரங்குழீ இய
வவண்முனையி னகன்றுமாறி
யவிழ்தளவி னகன்றோன்றி
நகுமுல்லை யுகுதேறுவீப்
பொற்கொன்றை மணிக்காயா
நற்புறவி னடைமுனையிற்
சுறவழங்கு மிரும்பௌவத்
திறவருந்திய வினநாரை
பூம்புன்னைச் சினைச்சேப்பி
னோங்குதிரை யொலிவெரீ இத்
தீம்பெண்ணை மடற்சேப்பவுங்
கோட்டெங்கின் குலைவாழைக்
கொழுங்காந்தண் மலர்நாகத்துத்
துடிக்குடிஞைக் குடிப்பாக்கத்
தியாழ்வண்டின் கொளைக்கேற்பக்
கலவம்விரித்த மடமஞ்ஞை
நிலவெக்கர்ப் பலபெயரத்
தேனெய்யொடு கிழங்குமாறியோர்
மீனெய்யொடு நறவுமறுகவுந்
தீங்கரும்போ டவல்வகுத்தோர்
மான்குறையொடு மதுமறுகவுங்
குறிஞ்சி பாதவர் பாட நெய்த
னறும்பூங் கண்ணி குறவர் சூடக்
கானவர் மருதம் பாட வகவர்
நீனிற முல்லைப் பஃறிணை நுவலக்
கானக்கோழி கதிர்குத்த
மனைக்கோழி தினைக்கவர

202. 'முனையின்' என்றும் பாடம்.

210. "உருமிடி மகுளியிற் பொருடெரிந் திசைக்குங், கடுங்குரற் குடி ஞய நெடும்பெருங் குன்றம்" (அகநா. 19); "கடுந்துடி, புலிதுஞ்சு நெடு ரக் குடிஞையோ டிரட்டு மலை" (புறநா. 179.)

213. "நிலவுமணல் வியன்கானல்" (புறநா. 17.)

வரைமக்கி கழிமூழ்கக்
கழிநாரை வரையிறுப்பத்
தண்வைப்பிற் றுடிகுழீஇ
மண்மருங்கினன் மறுவின்றி
யொருகுடையா னென்றுகூறப்
பெரிதாண்ட பெருங்கேண்மை
யறனெடு புணர்ந்த திறனறி செங்கோ
லன்னேன் வாழி வெல்வேற் குருசின்
மன்னர் கடுங்கத் தோன்றிப் பன்மா
னெல்லி தருநன் பல்கதிர் பரப்பிக்
குல்லை கரியவுங் கோடெரி கைப்பவு
மருவி மாமலை நிழத்தவு மற்றக்
கருவி வானங் கடற்கோண் மறப்பவும்
பெருவற னுகிய பண்பில் காலையு
நறையு நாந்தமு மகிலு மாரமுந்
துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி
நுரைத்தலைக் குரைப்புனல் வரைப்பகம் புகுதொ றும்
புனலாடு மகளிர் கதுமெனக் குடைபக்
கூனிக் குபத்தின் வாய்நெல் லரிந்து
சூடுகோ டாகப் பிறக்கி நாடொறுங்
குன்றெனக் குவைஇய குன்றுக் குப்பை
கடுந்தெற்று மூடையி னிடங்கெடக் கிடக்குஞ்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
யாயிரம் விளையுட் டாகக்
காணிரி புரக்கு நாடுகிழ வோனே.

---

226. 'நாடு கெழீஇ' என்னும் பாடம்.
234. "பரக்குபடு கூரெரி கானைப்ப, மரந்தியுற்ற" (நற். 177.)
238. "நறவு நாகமு மகிலு மாரமும்" (சிறுபாண். 116.)
242. (சிலப். 16: 30 - மேற்)
244. "குடாஅற்றெறிந்த குப்பை கடாஅத், செம்பொன் மலையிற் றெப்பத் தோன்றும்" (பெரும்பாண். 240-41.)
246-7. "வேலியாயிரம் விளைசுனை வயலே" (புறநா. 391; சிலப். 6: 30 - மேற்.); "வாலிதாமுனை யொருபுறம் வளர் செறு வொருசார், பாலி னெல்லொரு சாரொரு சாரரிப் பதம்பு, சாலிவேலி யோர் சாரிவைதலி மயக்குற லால், வேலியாயிரம் விளையு ளென்பது மிதன்மேற்றே" (சீகாழித்-திருநாகர். 9.) (தொல். மரபு. சூ. 21. உ. மேற்.)
248. (நன். சூ. 182 - மயிலை. மேற்; நன் - வி. சூ. 183 - மேற்)
246-8. (இ - வி. சூ. 102 - மேற்)

இதன்பொருள்.

1. அருஅ யாணர் அகல் நலே பேர் ஊர்—இடையருத செல்வ வரு வாயினையுடைய அகன்ற இடத்தையுடைய பெரிய ஊர்களிடத்து,

2. சாறு கழி வழி நான் சோறு கை உருது—விழாக்கழிந்த பின்ஞ ஞில் ஆண்டுப் பெறுகின்ற சோற்றை விரும்புதல் செய்யாது,

3. வேறு புலம் முன்னிய வீரகு அறி பொருந—விழாக்கொண்டாடும் வேற்றுப்புலத்தைக் கருதிய * விரகுகயறிந்த பொருந,

இஃது அண்ண ஙவிளி.

4. குளப்பு வழி அன்ன கவடு படு பத்தல்—மான்குளம்பழுத்திய இடத் தையொத்த இரண்டருகும்தாழ்ந்து நடுவுயர்ந்த பத்தலினையும்,

5. விளக்கு அழல் உருவின் விசி உறு பச்சை—விளக்கினது எரிகின்ற நிறத்தையுடைய விசித்துப் போர்த்தலுற்ற தோல்,

6. எய்யா இன சூல் செய்யோள் அ வயிறு—மிக அறியப்படாத இனிய சூலையுடைய சிவந்த நிறத்தையுடையோனது அழகினையுடைய வயிற்றின்,

செய்யோளென்றார், மயிரொழுக்கு விளங்கித் தோற்றுதற்கு.

7. ஐது மயிர் ஒழுகிய தோற்றம் போல—ஐதாகிய மயிர் ஒழுங்குபடக் கிடந்த தோற்றரவுபோல,

8. பொல்லம் பொத்திய பொதி உறு போர்வை—இரண்டுதலையும் கூட்டி நுதைத்த மாத்தைப்பொதிதலுறும் போர்வையினையும்,

9-10. அகல் வாழ் அலவன் கண் கண்டன்ன துகள் வாய் தார்ந்த துரப்பு அமை ஆணி—முழையிலே வாழ்கின்ற ஞெண்டின்கண்ணைக் கண்டாலொத்த பத்தலிரண்டுஞ்சேர்த்தற்குத் திறந்த துளைகளின் வாய் மறைதற்குக்காரண மாகிய மூடுக்குதலமைந்த ஆணியினையும்,

தோல் ஞெகிழாமல் மூடுக்கின ஆணியென்றுமுரைப்பர்; அன்ன ஆணி யென்க.

11-2. எண்ணல் திங்கள் வடிவிற்று ஆகி அண்ணு இவ்வா அமை வரு வதுவாய்—உவாவிற்கு எட்டாகாளில் திங்களின்வடிவை உடைத்தாய் உண் ணுக்கில்லாத பொருத்துதல்வந்த வறிய வாயினையும்,

13. பாம்பு அணந்தன்ன ஒங்கு இரு மருப்பின—பாம்பு தலையெடுத்தா லொத்த ஓங்கின கரிய தண்டினையும்,

14. மாயோன் முன்கை ஆய் தொடி கடுக்கும் நிவவின (15)—கரிய நிறத்தையுடையோனுடைய முன்கையில் அழகினையுடைய சேர்ந்த தொடியை யொக்கும் வார்க்கட்டினையும்,

15. கண்கூடு இருக்கை நிண் பிணி நிவவு—ஒன்றோடொன்று நெருங் கின இருப்பையுடைத்தாகிய நிண்பிணிப்பினையுடைய நிவவு.

இது காம்புதுவக்கப்படுவது.

---

* விரகு - உபாயம்.

16-8. ஆய் தினை அரிசி அவையல் அன்ன வேய்வை போகிய உளர் நரம்பின் கேள்வி போகிய நீள் விசி தொடையல்—அழகினையுடைய யரிசியிற் குத்தலரிசியைபொத்த குற்றம்போகிய விரலாலசைக்கும் நரம்பி யுடைய இசைமுற்றுப்பெற்ற நீண்ட விசித்தலையுடைய தொடர்ச்சியினையும்,

19. மணம் கமழ் மாதரை மண்ணி அன்ன காட்சி (20)—[illegible] செய்தமை தோற்றுகின்ற மாதரை ஒப்பித்தாலொத்த அழகினையுமுடைய,

20. அணங்கு மெய் நின்ற அமை வரு காட்சி—* யாழிற்குரியதெய்வ தன்னிடத்தேநின்ற இலக்கணம் அமைதல்வரும் அழகு.

21. ஆறு அலை கள்வர் படைவிட—வழியைஅலைக்கின்ற கள்வர் கையிற் படைக்கலங்களைக் கைவிடும்படி,

21-2. அருளின் மாறு தலை பெயர்க்கும் மருவு இன் பாலை—அருளின மாறாகிய மறத்தினை அவர்களிடத்துநின்று பெயர்க்கும் மருவுதலினிய பா யாழை,

பாலை, ஆகுபெயர்.

"கோடே பத்த ராணி நரம்பே, மாடக மெனவரும் வகையின தாகும் என்றதனால் மாடகமொழிந்தன கூறினார்

பத்தலினையும் (4), பொல்லம்பொத்திய (8) பசசையாகிய (5) பேய் யினையும் (8), ஆணியினையும் (11), வறுவாயினையும் (12), மருப்பினை (13), வார்க்கட்டினையும் (15), நரம்பின்றொடர்ச்சியினையும் (18), கா[illegible] யும் (20) உடைய பாலையாழென முடிக்க.

"கொன்றை கருங்காலி குமிழ்முருககுத தணக்கே" எனபதனால் கோ டிற்கு மரம் கொன்றையும கருங்காலியுமாம்; குமிழும், முருக்கும், [illegible] பத்தற்குமரம்.

23. வாரியும—நரமபுகளைக் கூடத் தழுவியும,

வடித்தும்—உருவியும்,

உந்தியும்—தெறித்தும்,

உறழ்ந்தும்—ஒன்றைவிட்டு ஒன்றைத்தெறிததும்,

வடித்தல்—நரம்பெறிதலென்றுமுரைப்பர்.

24. சீர் உடை நல்மொழி நீரொடு சிதறி—சீரையுடைத்தாகிய † தே பாணிகளை நீர்மையுடன் பரக்கப்பாடி,

‡ சீரெனவே பாணியும் தூக்கும் உளவாயின.

25. அறல் போல் கூந்தல்—ஆற்றறல்போலும் கூந்தலினையும,

பிறை போல் திரு நுதல்—பிறைபோல அழகினையுடைய § நுதலினையும்

---

* யாழிற்குரிய தெய்வம் மாதங்கி; (சீவக. 411, 550 - ந.)

† தேவபாணி - தெய்வங்களைத் துதிக்கும்பாட்டு; (சிலப். கடலாடு. 35 [illegible]

‡ சீர் முதலியவை தாளவிசேடங்கள்; சீர் முடியுங்காலத்தைத் தன்னி தே உடையது; பாணி எடுக்குங்காலத்தைத் தன்னிடத்தே உடையது நிகழுங் காலத்தைத் தன்னிடத்தே உடையது; (கலி. கடவுள். ந.)

§ நுதல் - நெற்றி.

26. **கொலை வில் புருவத்து**—கொலைத்தொழிலையுடைய வித்போலும் புருவத்தினையும்,

கொழு கடை மழை கண்—அழகிய கடையினையுடைய குளிர்ச்சியை யுடைய **கண்ணினை**யும்,

27. **இலவு இதழ் புரையும் இன் மொழி துவர் வாய்**— இலவினது இதழையொக்கும் இனிய சொல்லையுடைய செம்மையுடைத்தாகிய வாயினையும்,

28. **பல உறு முத்தின் பழி தீர் வெள் பல்**—பலவுஞ்சேர்ந்த முத்துக்கள் போற் குற்றந்தீர்ந்த வெள்ளிய பல்லினையும்,

பலரும் தேரன்மார், ஒருகொலையாயிருத்தலின்; இனிப் பலவினையுற்ற முத் தென்றுமாம்.

29-30. [**மயிர்குறை கருவி மாண்கடை யன்ன, பூங்குழையூசற் பொறை சால் காதின்:**]

மயிர் குறை கருவி மாண் கடை அன்ன காதின்—மயிரைவெட்டுகின்ற கத்தரிகையினுடைய மாட்சிமைப்பட்ட குழைச்சையொத்த காதினையும்,

பூ குழை ஊசல் பொறை சால் காது—பொலிவினையுடைய மகரக்குழையி னுடைய அசைவினைப் பொறுத்தலமைந்த காது.

31. **நாண் அட சாய்ந்த நலம் கொள் எருத்தின்**—நாணம் வருத்தலாற் பிற வரைநோக்காதுகவிழ்ந்த நன்மையினைக்கின்ற கழுத்தினையும்,

32. **ஆடு அமை பணை தோள்**—அசைகின்ற மூங்கில்போலும் பெருத்த லையுடைய தோளினையும்,

அரி மயிர் முன்கை—ஐம்மைமயிரினையுடைய முன்கையினையும்,

33. **நெடு வரை மிசைஇய காந்தள் மெல் விரல்**—நெடிய மலையின் உச்சி யிடத்தனவாகிய காந்தள்போலும் மெல்லிதாகிய விரலினையும்,

34. **ஒளி வாய் ஒப்பின் ஒளி விடு வள் உகிர்**—ஒளியினது வாயோடு ஒப் பினையுடைய ஒளிவிடுகின்ற பெருமையையுடைத்தாகிய உகிரினையும்,

35. **அணங்கு என உருத்த சுணங்கு அணி ஆகத்து முலை**(36)—பிறர்க் குவருத்தமெனத் தோற்றின சுணங்கணிந்த மார்பிடத்து முலையினையும்,

36. **சுர்க்கு இடை போகா எழ் இள வனம் முலை**—சுர்க்கும் கடுகெனோ காத வெழுச்சியையுடைய இளைய அழகினையுடைய முலை.

37. **நீர் பெயர் கழியின் நிறைந்த கொப்பூழ்**—நீரிடத்துப் பெயர்தலை யுடைய கழிபோல உத்தமலக்கணங்கள் நிறைந்த கொப்பூழினையும்,

38. **உண்டென உணரா உயவும் நடுவின்**—உண்டென்ற பிறருணரப் படாத வருத்தமினையினையும்,

உயவினென்ற பாடமாயின், வருத்தத்தையுடையவென்க.

39. **வண்டு இருப்பு அன்ன பல் காழ் அல்குல்**—பல வண்டினங்களின் இருப்பையொத்த பல மணிகோத்த வடங்களையுடைய * மேகலையணிந்த அல் குலையும்,

---

* "எண்கோவை மேகலை" (பக். 22.)

காழ், ஆகுபெயர்.

40. இரு பிடி தட கையின் செறிந்து திரள் குறங்கின்—பெரிய பி
னுடைய பெருமையையுடைய கைபோல ஒழுகவந்து மெல்லிதாகத் தம்
நெருங்கி ஒன்றித்திரண்ட * குறங்கினையும்,

41. பொருந்து மயிர் ஒழுகிய திருந்து தாட்கு ஒப்ப — கணைக்கா
இலக்கணமென்றற்குப் பொருந்தின மயிர் ஒழுங்குபட்ட ஏனையிலக்கணங்
திருந்தின கணைக்காலுக்குப் பொருந்த,

42. [வருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி :]

வருந்து நாய் நாவின் சிறு அடி—ஓடியினைத்த நாயினது நாப்போலச் சி
அடியினையும்,

41-2. தாட்கு ஒப்ப பெரு தகு அடி—தாளுக்குப்பொருந்தப் பெரு
தக்கிருக்குமடியென்க.

† பெருவென்னுமுதனிலை பெருமையுணர்த்திநின்றது.

43. அரக்கு உருக்கு அன்ன செ நிலன் ஒதுங்கலின்—சாதிலிங்கத்
உருக்கினதன்மையொத்த செய்யநிலத்தே நடக்கையினாலே,

44. பரல் பகை உழந்த நோயொடு சிவணி—சுக்கான்கல்லாகிய ப
யாலே வருந்தின நோயோடேபொருந்தி,

45. மரல் பழுத்தன்ன மறுகு சீர் மொக்குள்—மரற்பழுத்தாற்போன்
துளும்புநீரையுடைய கொப்புளம்,

46. நல் பகல் அந்தி நடை இடை விலங்கலின்—நன்றாகிய உச்சிக்கா
மான சந்தியிலே நடத்தலை நடுவே தவிர்தலாலே,

47. பெடை மயில் உருவின் பெரு தகு பாடினி—பெடைமயிலருகுநின்
மயில்போலும் சாயலினையுமுடைய கல்விப்பெருமை தக்கிருக்கின்ற பாடினி,

கூந்தலினையும் நுதலினையும் (25) புருவத்தினையும் கண்ணினையும் (26
வாயினையும் (27) பல்லினையும (28) காதினையும் (30) எருத்தினையும் (31
தோளினையும் கையினையும் (32) விரலினையும் (33) உகிரினையும் (34
முலையினையும் (36) கொப்பூழினையும் (37) நடுவினையும் (38) அல்குலினை
யும் (39) குறங்கினையும் (40) சீறடியினையும் (42) உருவினையுமுடை
பாடினியென்க.

இங்ஙனம் சீறடியுங்கூட்டி எண்ணாக்கால் தலைமுதல் அடியீறின்றாகக் கூ
ற்றாம்.

48. பாடின பாணிக்கு ஏற்ப—பாடின தாளத்திற்குப் பொருந்த,

48-9. நாள் தொறும் களிறு வழங்கு அதர் கானத்து அல்கி—நாடோறு
யானையுலாவரும் வழியையுடைய காட்டிடத்தே தங்கி,

---

* குறங்கு - துடை.

† "கருவார் பொழில்" (தே. பிரமபுரம்), "கருக்கொள் சோலை" (தே
ஆரூர்) என்பவற்றில், கருவென்னுமுதனிலை கருமையையுணர்த்தி நின்றமை
காண்க.

50-51. [இலையின் மராத்த வெல்வர் தாங்கி, வலிவலர் தன்ன மெ னிழல் மருங்கின்:]

இலை இல் மராத்த வலை வலர்தன்ன மெல் கிழல் மருங்கில்—இலையி லாத மராத்திட்டத்தனவாகிய வலிலை மேலெடட்டினலொத்த மெல்லியகிழ னிடத்தே,

எவ்வம் தாங்கி—கொப்புளால்வந்த வருத்தந்தாங்கி,

இனி ஞாயிற்றின் வெம்மையால் தனக்குவந்த எவ்வத்தைத்தாங்கி இலை பில்லாத மராமரமென மராமரத்தின்மேல் ஏற்றதலுமாம்.

52. காடு உறை கடவுள் கடன் கழிப்பிய பின்றை—காட்டின்கண்ணே தங்குகின்ற தெய்வத்திற்கு மனமகிழ்ச்சியாகச்செய்யும் முறைமைகளைச் செய்து விட்டபின்பு,

பொருந (3), பாடினி (47) செம்பிலனெறுக்கலின் (43) அவனடிகள் (42) பரற்பலையுழுத்த சோயொடுகிவணிந் (44) தம்மிடந்தேகொண்ட மொக்குளால் (45) தனக்குவந்த வருத்தத்தைத் தாங்கித் (50) தால் கடலையத்தவிர்தலாலே (46) கானத்தின் (49) மெண்ணிழன் மருங்கிற் (51) றங்கிப் (49) பாலையாழை (22) வாரியும் வடித்தும் உந்தியும் உறழ்த்தும் (23) வாசித்து, பாடின பாணிக்கேற்பச் (48) சிருடைகள்மொழி நிரொடுதெறிக் (24) காடுறைகடவுட் கடன் கழிப்பியபின்றையெனமுடிக்க.

கடன்கழித்தல் - தடாரியைவாசித்தல்.

53-4. பீடு கெழு நிருவின் பெரு பெயர் சோன் தான் முரச முழங்கு தானை மூவரும் கூடி—பெருமைபொருந்தின செல்வத்தையும் பெரிய பெயர்களை யும் வலியையுடைய முயற்சியையும் வெற்றிமுரசுமுழங்கும் படையினையு முடைய சேர சோழபாண்டியர் தம்மிற் பகைமைநீங்கிச் சேர்ந்து,

55. அரசு அவை இருந்த தோற்றம் போல செல்வக்குறைபாடின்றி அரசிருந்தற்குரிய அவையாகவிருந்த தோற்றவுபோல,

தோற்றம்போல இன்மைதீரவந்தனென் (129) என மேலேகூட்டுக.

இனி அரசவையிருந்த தோற்றம்போல வலிவும் மெலிவும் சமனுமாகப் பாடுதலைப் பற்றியவென்று பாட்டின்மேலேற்றிப் பொருள்கூறின், குலமும் செல்வமும் வீரமுமுதலியவற்றாற் றம்மில்லத்தாரை உவமித்தலின், அவர்க் கும் வலிவும் மெலிவும் சமனுமென்னுங்குணங்கள் எய்துமாதலின், அங்ஙனம் கூறல் பொருத்தமையுணர்க; அன்றியும் பயனே சண்டு உவமை யென்று உணர்க.

இனிப் பாட்டு கருதுதகிதுவாச்சியத்தை யுடைமையின், அரசோடு உவ மித்தாரென்பாருமுளர்.

56-7. பாடல் பற்றிய பயன் உடை யெழாஅல் கோடியர் தலைவ—மிடற் றப்பாடலைத் தொடங்கியெழுந்திருந்த பயன்களைத் தன்னிடத்தேயுடைத்தாகிய யாழையுடைய கூத்தர்க்குத் தலைவனே,

காழ், ஆகுபெயர்.

40. இரு பிடி தட கையின் செறிந்து திரள் குறங்கின்—பெரிய பிடியினுடைய பெருமையையுடைய கைபோல ஒழுகவந்து மெல்லிதாகத் தம்மில் நெருங்கி ஒன்றித்திரண்ட * குறங்கினையும்,

41. பொருந்து மயிர் ஒழுகிய திருந்து தாட்கு ஒப்ப — கணைக்காற்கு இலக்கணமென்றற்குப் பொருந்தின மயிர் ஒழுங்குபட்ட ஏனையிலக்கணங்கள் திருந்தின கணைக்காலுக்குப் பொருந்த,

42. [வருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி :]

வருந்து நாய் நாவின் சிறு அடி—ஓடியினைத்த நாயினது நாப்போலச் சிறிய அடியினையும்,

41-2. தாட்கு ஒப்ப பெரு தகு அடி—தாளுக்குப்பொருந்தப் பெருமை தக்கிருக்குமடியென்க.

† பெருவென்னுமுதனிலை பெருமையுணர்த்திநின்றது.

43. அரக்கு உருக்கு அன்ன செ நிலன் ஒதுங்கலின்—சாதிலிங்கத்தை உருக்கினதன்மையொத்த செய்யநிலத்தே நடக்கையினாலே,

44. பரல் பகை உழந்த நோயொடு சிவணி—சுக்கான்கல்லாகிய பகையாலே வருந்தின நோயோடேபொருந்தி,

45. மரல் பழுத்தன்ன மறுகு நீர் மொக்குள்—மரற்பழுத்தாற்போன்ற துளும்புநீரையுடைய கொப்புளம்,

46. நல் பகல் அந்தி நடை இடை விலங்கலின்—நன்றாகிய உச்சிக்காலமான சந்தியிலே நடத்தலை நடுவே தவிர்தலாலே,

47. பெடை மயில் உருவின் பெரு தகு பாடினி—பெடைமயிலருகுநின்ற மயில்போலும் சாயலினையுமுடைய கல்விப்பெருமை தக்கிருக்கின்ற பாடினி,

கூந்தலினையும் நுதலினையும் (25) புருவத்தினையும் கண்ணினையும் (26) வாயினையும் (27) பல்லினையும் (28) காதினையும் (30) எருத்தினையும் (31) தோளினையும் கையினையும் (32) விரலினையும் (33) உகிரினையும் (34) முலையினையும் (36) கொப்பூழினையும் (37) நடுவினையும் (38) அல்குலினையும் (39) குறங்கினையும் (40) சீறடியினையும் (42) உருவினையுமுடைய பாடினியென்க.

இங்ஙனம் சீறடியுங்கூட்டி எண்ணாக்கால் தலைமுதல் அடியீறின்றாகக் கூறிற்றாம்.

48. பாடின பாணிக்கு ஏற்ப—பாடின தாளத்திற்குப் பொருந்த,

48-9. நான் தொறும் களிறு வழங்கு அதர் கானத்து அல்கி—நாடோறும் யானையுலாவரும் வழியையுடைய காட்டிடத்தே தங்கி,

---

* குறங்கு - துடை.

† "கருவார் பொழில்" (தே. பிரமபுரம்), "கருக்கொள் சோலை" (தே. ஆரூர்) என்பவற்றில், கருவென்னுமுதனிலை கருமையையுணர்த்தி நின்றமை காண்க.

50-51. [இலையின் மராத்த வெல்வர் தாங்கி, வலைவலர் தன்ன மென் னிழன் மருங்கின்:]

இலை இல் மராத்த வலை வலத்தன்ன மெல் னிழல் மருங்கில்—இலையில் லாத மராத்திட்டத்தனவாகிய வலையை மேலேகட்டினாலொத்த மெல்லியனிழலி னிடத்தே,

எவ்வம் தாங்கி—கொப்புளால்வந்த வருத்தந்தாங்கி,

இனி ஞமிற்றின் வெம்மையால் தனக்குவந்த எவ்வத்தைத்தாங்கி இலை யில்லாத மராமரமென மராமரத்தின்மேல் ஏற்றுதலுமாம்.

52. காடு உறை கடவுள் கடன் கழிப்பிய பின்றை—காட்டின்கண்ணே தங்குகின்ற தெய்வத்திற்கு மனமகிழ்ச்சியாகச்செய்யும் முறைமைகளைச் செய்து விட்டபின்பு,

பொருந (3), பாடினி (47) சேர்விலனெனுங்கலின் (43) அவனடிகள் (42) பரற்பகையுழந்த சோயொடுவெணிற் (44) தம்மிடத்தேகொண்ட மொக்குளால் (45) தனக்குவந்த வருத்தத்தைத் தாங்கித் (50) தான் நடையைத்தவிர்தலாலே (46) கானத்தின் (49) மென்னிழன் மருங்கிற் (51) றங்கிப் (49) பாலையாழை (22) வாரியும் வடித்தும் உரிஞியும் உறழ்த்தும் (23) வாசித்து, பாடின பாணிக்கேற்பச் (48) சிருடைநன்மொழி சிரொடுசிதறிக் (24) காடுறைகடவுட் கடன் கழிப்பியபின்றையெனமுடிக்க.

கடன்கழித்தல் - தடாரியையவாசித்தல்.

53-4. பீடு கெழு நிருவின் பெரு பெயர் சோன் தான் மூசு முழங்கு தானை மூவரும் கூடி—பெருமைபொருந்தின செல்வத்தையும் பெரிய பெயர்களை யும் வலியையுடைய முயற்சியையும் வெற்றிமாசுமுழங்கும் படையினையு முடைய சேர சோழபாண்டியர் தம்மிற் பகைமைநீக்கிச் சேர்ந்து,

55. அரசு அலை இருந்த தோற்றம் போல செல்வக்குறைபாடின்றி அரசிருத்தற்குரிய அலையாகவிருந்த தோற்றரவுபோல,

தோற்றம்போல இன்மைநிரவந்தனென் (129) என மேலேகூட்டுக.

இனி அரசலையிருந்த தோற்றம்போல வலிவும் மெலிவும் சமனுமாகப் பாடுதலைப் பற்றியவென்று பாட்டின்மேலேற்றிப் பொருள்கூறின், குலமும் செல்வமும் வீரமுமுதலியவற்றாற் றம்மில்லத்தாரை உவமித்தலின், அவர்க் கும் வலிவும் மெலிவும் சமனுமென்னுங்குணங்கள் எய்துமாதலின், அங்ஙனங் கூறல் பொருத்தமையுணர்க; அன்றியும் பயனே சான்று உவமை யென்று உணர்க.

இனிப் பாட்டு கிருத்தினீதவாச்சியத்தை யுடைமையின், அரசரோடு உவ மித்தாரென்பாருமுளர்.

56-7. பாடல் பற்றிய பயன் உடை யெழாஅல் கோடியர் தலைவ—மிடற் றுப்பாடலைத் தொடங்கியெழுந்திருந்த பயன்களைத் தன்னிடத்தேயுடைத்தாகிய பாழையுடைய கூத்தர்க்குந் தலைவனே,

இவன் போர்க்களம்பாடும் பொருநனுதலானும், *கூத்தரில் இவனிற்சிறந்த கூத்தர் இன்மையானும் இங்ஙனம் கூறினர்.

57. கொண்டது அறிா—பிறர் மனத்துக்கொண்டதனைக் குறிப்பால்அறியவல்லாய்,

58. அறியாமையின் வேறு நிரித்து ஓராஅது—வழியறியாமையினாலே இவ்வழியைத்தப்பி வேறொருவழியிற் போகாதே,

59. ஆறு எதிர் படுதலும் தோற்றுதன் பயனே—இவ்வழியிலே என்னைக்காண்டலும் நீ முற்பிறப்பிற்செய்த நல்வினைப்பயன்,

60. [போற்றிக் கேண்மதி புகழ்மேம் வடுா:] புகழ் மேம்படுா போற்றிகேண்மதி—புறத்தார்புகழை அரசவைகளிலே மேம்படுத்தவல்லீர், யான்கூறுகின்றவற்றை விரும்பிக்கேட்பாயாக;

61-2. ஆடு பரி உழந்தகின் இரு பேர் ஒக்கலொடு நீடு பரி ஓராஅல் வேண்டின்—அடுகின்ற பரியாலேவருந்தின கின்னுடைய கரிய பெரியசுற்றத்தோடே தொன்றுதொட்டுவந்தபரி கின்னைக் கைவிடுதல் விரும்புவையாயின்,

62-3. நீடு இன்று எழுமதி—நீட்டித்தலின்றி எழுந்திருப்பாயாக;

வாழி—நீவாழ்வாயாக;

63. எழின் மிழவ—குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தார மென்னும்ஏழ்பு எழின்கண்ணும் உரிமையுடையாய்,

64. [பழுமர முள்ளிய பறவையின் யாணும்:

யாணும் பழுமரம் உள்ளியபறவையின்—செல்வமெய்தியயாணும் முன்பழுத்தமரத்தை நினைத்துச் செல்கின்ற புட்போல.

64-5. அவன் இழுமென் சுற்றம இடன் உடை வரைப்பின்—அவனுடைய இழுமென்றெழும் ஓசையினையுடைய அகலமுடைத்தாகிய மனையில்,

66. கசையுநர் நடையா நல் பெரு வாயில்—கச்சிவந்தார்க்குத் தடையில்லாத நன்றாகிய பெரிய கோபுரவாயிலின் கண்ணே,

67. இசையேன் புக்கு—வாயிலோனுக்குக் கூறுமற்புகுந்து,

என் இடும்பை நீர—என்னுடைய மிடிதீர்தல் காரணமாக,

68. எய்த்த மெய்யேன் எய்யெனெ—முன்பு இளைத்தஉடம்பையுடையேன் அவ்வாயிற்குள்ளேசென்ற உவகையாலே பின்பு இளைப்புத்தீர்ந்து,

69-70. பைத்த பாம்பின் துத்தி எய்ப்ப கை கவடு இருந்த என் கண் அகல் நெடாரி—படம்விரித்த பாம்பினது பொறியையொப்பக் கையினது வடுப்பட்டுக்கிடந்த எனது கண்ணகன்ற உடுக்கையிற் சேற்றுவித்த,

71-3. [இருசிற்ப் பாணிக்கேற்ப விரிகதிர், வெள்ளி முளைத்த நள்ளிருள் விடிய, லொன்றியான் பெட்டா வளவையின்:]

இருசிர் பாணிக்கு ஏற்ப ஒன்று யான் பெட்டா அளவையின்—இரட்டைதானத்திற்குப் பொருந்த ஒருபாட்டினை யான் பேணிப்பாடுவதற்கு முன்னே,

---

* 'பொருகரும் எர்க்களம்பாடுநரும் போர்க்களம்பாடுநரும் பாணிபாடு நருமெனப் பலராம்' (தொல். புறத்திணை. சூ. 36-ா)

விரி கதிர் வெள்ளி முளைத்த நள் இருள் விடியல்—விரிகின்ற கிரணங்களை யுடைய வெள்ளியெழுந்த செறிந்த இருளையுடைய விடியற்காலத்தே,

73-4. ஒன்றிய கேளிர் போல கேள் கொளல் வேண்டி—முன்பே தன்னோடுபொருந்திய நட்டாரைப்போல என்னுடன் உறவுகொள்ளுதலைவிரும்பி,

75. வேளாண் வாயில் வேட்ப கூறி—தான் உபகரித்தற்கு வழியாகிய இரப்பினையே யான் எப்பொழுதும் விரும்பும்படி உபசாரங்களைக்கூறி,

76. கண்ணில் காண நண்ணு வழி இரீஇ—தன்கண்ணிலேகாணும்படி தனக்குஅண்ணிதானஇடத்திலே என்னைஇருத்தி,

77. பருகு அன்ன அருகா நோக்கமோடு—தன்னைக் கண்ணாற்பருகுந் தன்மையையொத்த கெடாத பார்வையாலே,

78. [உருகு பவைபோ லென்பு குளிர்கொளீஇ:] என்பு உருகுபவைபோல் குளிர்கொளீஇ—என்பை உருகும் மெழுகுமுதலியனபோல் நெகிழும்படி குளிர்ச்சியைக்கொளுத்தி,

நோக்கத்தாலே (77) கொளுத்தியென்க.

79. ஈரும் பேனும் இருந்து இறைகூடி—ஈரும்பேனும் கூடியிருந்து அரசாண்டு,

80-81. [வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த, துன்னற் சிதாஅர் துவர நீக்கி:]

வேரொடு நனைந்து வேறு இழை நுழைந்த துன்னல் சிதாஅர் நீக்கி—வேர்ப்பாலேநனைந்து சறடுகள் உள்ளேஓடுதற்குக் காரணமாகிய தைத்தற்றொழிலையுடையனவாகிய சீலையை என்னிடத்தினின்றும் போக்கி,

82-3. நோக்கு நுழைகல்லா நுண்மைய பூ கனிந்து அரவு உரி அன்ன அறுவை துவர (81) நல்கி—கண்ணிற்பார்வை இஃது இழைபோனவழியென்று குறித்துப்பார்க்கவாராத நுண்மையையுடையவாய்ப் பூத்தொழில் முற்றுப் பெற்றதன்மையாற் பாம்பினது தோலையொத்த துகிலை மிகநல்கி,

துவரவென்பதனைஇதனொடுகூட்டுக.

84-5. [மழையென மருளும் மகிழ்செய் மாடத், திழையணி வனப்பி னின்னகை மகளிர்:]

இழை அணி வனப்பின் இன் நகை மகளிர்—இழைகளையணிந்த அழகினையுடைய பாட்டாலும்கூத்தாலும்வார்த்தையாலும் அரசனுக்கு இனியமகிழ்ச்சியைச்செய்யுமகளிர்,

இதனை, "இன்னகை யாயமோ டிருந்தோற் குறுகி" (220) என்றார், சிறுபாணாற்றிலும்.

86-7. [போக்கில் பொலங்கல நிறையப் பல்கால், வாக்குபு தரத்தர:]

84-7. மருள் செய்யும் மகிழ் மழையென மாடத்து பல்கால் வாக்குபு—உண்டார் மயங்குதலைச்செய்யுங் கள்ளை மழையென்னும்படி மாடத்திடத்தே பல்காலும் வார்த்து,

மகிழ், ஆகுபெயர்.

86-7. போக்கு இல் பொலங்கலம் நிறைய தரத்தர—ஓட்டமற்ற பொன்னாற்செய்த வட்டில்நிறையத் தரத்தர,

87-8. வருத்தம் வீட் ஆர உண்டு பெரு அஞர் போக்கி—வழிபோன வருத்தம் போம்படி நிறையவுண்டு கள்ளுண்ணப்பெறுகிலேமென்று நெஞ்சிற் கிடந்த பெரிய வருத்தத்தையும்போக்கி,

89. செருக்கொடு நின்ற காலை—மகிழ்ச்சியுடனே நான்நின்ற அந்திக் காலத்தே,

89-90. மற்று அவன் திரு கிளர் கோயில் ஒருசிறை தங்கி—இங்ஙனம் மிடிதீர்ந்தபின்பு அவனுடைய செல்வம்விளங்குகின்ற கோயிலில் ஒருபக்கத்தே கிடந்து,

அவனைச் சேவித்துநிற்கின்ற நங்குலத்திலுள்ள மகளிர் (85) பொலங்கல நிறைய (86) மகிழை (84) வார்த்துத் தரத்தர (87) உண்டு போக்கிக் (88) கோயிலில் ஒருசிறைத் தங்கியென முடிக்க.

91-2. தவம் செய் மாக்கள் தம் உடம்பு இடாஅது அதன் பயம் எய்திய அளவை மான—மிக்க தவத்தைச்செய்கின்ற மாக்கள் தம்முடைய தவஞ்செய்த உடம்பைப் போகடாதேயிருந்து அத்தவத்தாற்பெறும் பயனைப்பெற்ற தன்மையையொப்ப,

மக்களென்னாது மாக்களென்றார், வீடுபேறு குறியாது செல்வத்தைக் குறித்தலின்.

93. ஆறு செல் வருத்தம் அகல நீக்கி—வழிபோனவருத்தத்தை என்னிடத்துச் சிறிதும் நில்லாமற்போக்கி,

94-5. [அனந்தர் நடுக்க மல்ல தியாவது, மனங்கவல் பின்றி மாழாந்தெழுந்து:]

அனந்தர் நடுக்கம் அல்லது மனம் கவல்பு யாவதும் இன்றி எழுந்து—கள்ளின் செருக்காலுண்டான மெய்ந்நடுக்கமல்லது வேறுமனக்கவற்சி சிறிதுமின்றித் துயிலுணர்ந்து,

கவல்பு, கவற்சியெனப் பெயராய் நின்றது.

96. மாலை அன்னதோர் புன்மையும்—யான் அவனைக் காணபதற்கு முன்னாளின் மாலைக்காலத்தில் என்னிடத்தில்நின்ற சொல்லிற்கெட்டாத மிடியையும்,

அன்னது, நெஞ்சறிசுட்டு.

96-7. காலை கண்டோர் மருளும் வண்டு சூழ் நிலையும் மாழாந்து (95)—அவனைக்கண்டமற்றைநாட்காலத்தில் என்னைக்கண்டவர் நெருநல்வந்தவனல்லனென்று மருளுதற்குக் காரணமான வண்டுகள் இடையறாதுமொய்க்கின்ற தன்மையையும் யான்கண்டுமயங்கி,

மாழாந்தென்பதனை இதனொடு கூட்டுக.

பல நறுநாற்றங்களும் தானுடைமையின், வண்டுசூழ்நிலையென்றான்.

98. கனவு என மருண்ட என் நெஞ்சு ஏமாப்ப—இது கனவாயிருக்குமென்று கலங்கிய என்னுடையநெஞ்சு நனவென்று துணிய,

99. வல் அஞர் பொத்திய மனம் மகிழ் சிறப்ப—வலிய மிடியாலுண்டாகிய வருத்தம் பொதிந்த கூட்டத்தார் மனம் மகிழ்ச்சி மிக,

100. கல்லா இளைஞர் சொல்லி காட்ட—அவற்குரியபுகழ்களைத் தாங்கள் முற்றக்கற்று என்பின்னின்ற இளையவர் அவற்றைச் சொல்லிக்காட்ட,

கல்லாவென்பது, செய்யாவென்னுமெச்சம். இனித் தத்தம் சிறுதொழிலன்றி வேறொன்றுங்கல்லாத இளைஞர் நெருநல்வந்தவன் இவனென்று அரசனுக்குச் சொல்லிக்காட்ட வென்றுமாம். என்றது - இவன்வேறுபாடுகூறிற்றாம்.

101. கதுமென கரைந்து வம்மென கூஉய்—அதுகேட்டு அவர்களைக் கடுகவழைத்துவாருமென்று வாயிலோர்க்குக்கூறி யாங்கள்சென்றபின் தான் அணுகவாருமென்று அழைக்கையினாலே,

*" ஏனோருந் தம்மென " என்புழித் தம்மென்பது தாருமெனநின்றாற் போல வம்மென்பது வாருமென்னும் பொருட்டாய்நின்றது.

102. அதன் முறை கழிப்பிய பின்றை—அக்காட்சியிடத்துச் செய்யும் முறைமைகளை யாங்கள் செய்து முடித்தபின்பு,

பதன் அறிந்து—காலமறிந்து,

103-4. துராஅய் துற்றிய துருவை அம் புழுக்கின் பராரை வேவை பருகு என தண்டி—அறுகம்புல்லாற்றிரித்த பழுதையைத்தின்ற செம்மறிக்கிடாயினது அழகினையுடைய புழுக்கினதிற் பரிய மேற்குறங்கு நெகிழவெந்ததனை விழுங்கென்று பலகாலலைத்து,

105-6. [காழிற் சுட்ட கோழூன் கொழுங்குறை, யூழி னூழின் வாய்வெய்தொற்றி:] காழின் கொழு ஊன் சுட்ட கொழு குறை வெய்து வாய் ஊழின் ஊழின் ஒற்றி—இருப்பு நாராசத்தே கொழுத்த இறைச்சிகளைக் கோத்துச் சுட்ட கொழுவிய பெரியதசைகளின் வெம்மையை வாயிடத்தே இடத்தினும் வலத்தினும் சேர்த்தி ஆற்றித்தின்று,

107. அவை அவை முனிகுவம் எனினே—புழுக்கின இறைச்சியையும் சூட்டிறைசசியையும் யாங்கள் இனி வேண்டேமென்கையினாலே,

107-8. சுவைய வேறு பல் உருவின் விரகு தந்து இரீஇ—இனிமையுடையவாய் வெவ்வேறாகிய பலவடிவினையுடைய †பண்ணியாரங் கொண்டுவந்து அவற்றைத் தின்னும்படி எங்களையிருத்தி,

உபாயங்களாற் பண்ணுதலின், விரகென்றார்; ஆகுபெயர்.

109-10. [மண்ணமை முழவின் பண்ணமை சீறியா, ழொண்ணுதல் விறலியர் பாணிதூங்க:] பண் அமை சிறு யாழ் ஒள் நுதல் விறலியர் மண் அமை முழவின் பாணிதூங்க - பண்குறைவற்ற சிறிய யாழையுடைய ஒள்ளிய நுதலினையுடைய ‡விறல்படப் பாடியாடுவார் மார்ச்சனையமைந்த முழவினது தாளத்திற்கு ஆடும்படி,

---

* மதுரைக்காஞ்சி, 747.

† பண்ணிகார மென்றும் பிரதிபேத முண்டு.

‡ விறலை வடநூலார் சத்துவமென்பர்.

111. மகிழ் பதம் பல் நாள் கழிப்பி—மகிழ்ச்சியையுடைய கள்ளுண்டலிலே பலநாள் போக்கி,

இனிப் பதம், காலமுமாம்.

111-2. ஒருநாள் அவிழ் பதம் கொள்க என்று இரப்ப—ஒருநாள் சோறாகியஉணவையும் கொள்வாயாகவென்று வேண்டிக்கொள்கையினாலே,

112-4. முகிழ் தகை முரவை போகிய முரியா அரிசி விரலென நிமிர்ந்த நிரல் அமை புழுக்கல்—முல்லைமுகையின் தகைமையினையுடைய வரியற்ற இடைமுறியாத அரிசி விரலென்னும்படி நெடுகின ஒன்றோடொன்றுசேராத சோற்றையும்,

பழுத்தவரிசியை ஆக்கினமைதோன்ற நிரலமை புழுக்கலென்றார்.

115-6. பால் வறை கருனை *காடியின் மிதப்ப அயின்ற காலை - பாலைப் பொரித்ததனோடேகூட்டிய பொரிக்கறிகளையும் கழுத்திடத்தேவந்து நிரம்பும்படி விழுங்கினகாலத்தே,

இனிக் காடியைப் புளிங்கறியாக்கிப் புளிங்கறியோடே நிரம்ப விழுங்கின காலையென்றுமுரைப்பர்.

116. பயின்று இனிது இருந்து—அவனைவிடாதே இனிதாகவிருந்து,

117-8. [கொல்லை யுழுகொழு வேய்ப்பப் பல்லே, யெல்லையு மிரவு மூன்றின்று மழுங்கி:] பல்லே கொல்லை உழு கொழு ஏய்ப்ப எல்லையும் இரவும் ஊன்றின்று மழுங்கி—எம்முடையபற்கள் கொல்லைநிலத்தேயுழுத † கொழுவையொப்பப் பகலும்இரவும் இறைச்சியைத்தின்று முனைமழுங்கி,

119. உயிர்ப்ப இடம் பெறாஅது ஊண் முனிந்து—இளைப்பாற இடம் பெறாதே இவ்வுணவுகளை வெறுத்து,

முற்கூறியனவெல்லாம் உண்டற்றொழிற்கு உரிமையுடைமையின், ஊண் முனிந்தென்றார்.

119-22. [ஒருநாட், செயிர்த்தெழு தெவ்வர் திறைதுறை போகிய, செல்வ சேறுமெந் தொல்பதிப் பெயர்ந்தென, மெல்லெனக் கிளந்தன மாக:]

செயிர்த்து எழு தெவ்வர் திறை துறை போகிய செல்வ - குற்றத்தைச செய்தெழுந்த பகைவரைத் திறைகொள்ளும் கூறுபாடுகளெல்லாம் முடியப் போன செல்வா,

பெயர்ந்து எம் தொல் பதி சேறும் என மெல்லென ஒருநாள் கிளந்தனமாக—இனி மீண்டு எம்முடைய பழைய ஊரிடத்தே செல்வேமென்று மெத்தென ஒருநாளிலே சொன்னேமாக,

தொல்பதியென்றார், இதுவும் தமக்குப்பதியென்பது தோன்ற.

122-4. [வல்லே, யகறி ரோவெம் மாயம் விட்டெனச், சிரறிய வன்போற் செயிர்த்த நோக்கமொடு:] சிரறியவன்போல் செயிர்த்த நோக்கமொடு எம் ஆயம்

---

* காடி கழுத்தென்பதை, ' காடியிழந்துகவந்தமதாய் " என்பதனாலு முணர்க; (கந்த. சூரபன்மன்வதை. 136)

† " முரம்புழுவார் நாஞ்சிற்கொழுவெனத்தேய்ந்து " (குற்றாலப்பு. கவுற் சன. 28.)

விழ்ந்ததுபோல அதிரோ எனஅதுகேட்டுக் கோபித்தான்போல எமக்குவருந் துன்னத்தைச்செய்த பரிசையுடனே எம்இரண்டைக் கைவிட்டு விசைத்துபோகின்றீ ரோவெனச் சொல்லி,

125-6. [தூஉடி யன்ன தூங்குகடைக் குழவியொடு, பிடிபுணர் வேழம் பெட்டலை தொலைக்கென]

கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி
யூர்ந்துபெயர் பெற்ற வெழினடைப் பாகரொடு
மாசெல வொழிக்கு மதனுடை நோன்றாள்
வாண்முகப் பாண்டில் வலவனொடு தரீஇ
யன்றே விடுக்குமவன் பரிசின் மென்றோட்
டுகிலணி யல்குற் றுளங்கியன் மகளி
ரகிலுண விரித்த வம்மென் கூந்தலின்
மணிமயிற் கலாப மஞ்சிடைப் பரப்பித
துணிமழை தவழுந் துயல்கழை நெடுங்கோட
டெறிந்துரு மிறந்த வேற்றருஞ் சென்னிக்
குறிஞ்சிக் கோமான் கொய்தனிர்க் கண்ணிச்
செல்லிசை நிலைஇய பண்பி
னல்லியக் கோடனை நயந்தனிர் செலினே.

இதன்பொருள்.

1-2. [மணிமலைப் பணைத்தோண் மாநில மடந்தை, பணிமுலைத் துயல்வரூஉ மாரம் போல:] பணை தோள் மா நிலமடந்தை மணி மலை அணி முலை துயல்வரூஉ ஆரம் போல—மூங்கிலாகிய தோளையுடைய பெருமையினையுடைய மணமகளுடைய மணிகள்தங்கின மலையாகிய அழகினையுடைய முலையிற் கிடந்தசையும் முத்துவடம்போல,

3-4. [செல்புன லுழந்த சேய்வரற் கான்யாற்றுக், கொல்கரை நறும்பொழில்:] சேய் வரல் கரை கொல் கான்யாறு செல் புனல் உழந்த நறு பொழில்—*மலைத்தலையினின்றும் வருதலையுடைய கரையைக் குத்துகின்ற காட்டாற்றிடத்து ஓடுகின்ற புனலாலே வருந்தின நறிய பொழிலிடத்து,

இரண்டுமலையினின்றும் வீழ்ந்து இரண்டு ஆற்றிடைக்குறையைச் சூழ்வந்து பின்னர்க் கூடுதலின், முத்துவடம் உவமையாயிற்று; இது மெய்யுவமம், பெருக்காற் கோடுகள் வருந்துதலின், உழந்தவென்றார். இதனாற்பயன்: †ஆற்றிடைக்குறையில் நின்றமரம் இளவேனிற்காலத்து மிகவும் பூத்ததாயிற்று.

263-4: இப்பாட்டின், 14 - 15 ஆம் அடிக்குறிப்பைப் பார்க்க.

268. "சல்லிசை தம்வயி னிறுமார் வல்வேல், வானவரம்ப னண்ணாட்டும்பர்" (அகநா. 389.)

* "மலைத்தலைய கடற்காவிரி" (பட். 6.)

† "நிலம்பூத்த மரம்" (கலி. 27.)

4-8. [குயில்குடைந் துதிர்த்த, புதுப்பூஞ் செம்மல் சூடிப் புடைநெறித்துக், கதுப்பு விரித் தன்ன காழக நுணங்கற, லயிலுருப் பனைய வாகி யைது நடந்து, வெயிலுருப் புற்ற வெம்பரல் கிழிப்ப:]

காழ் அகம் நுணங்கு அறல் குயில் குடைந்து உதிர்த்த புது பூ செம்மல் சூடி புடை நெறித்து கதுப்பு விரித்தன்ன வேனில் நின்ற (9)—கருமையை இடத்தேயுடைய நுண்மையையுடைய அறல் குயில்கள் அலகாலுளர்ந்து உதிர்த்த புதியபூக்களாகிய வாடலைச்சூடித் தம்மிடமெல்லாம் அறல்பட்டு மயிரை விரித்தாலொத்த தன்மையவாக இளவேனில்நின்றவென்க.

பொழிலிடத்தறவென்க.

வெயில் உருப்பு உற்ற வெம்பரல்—வெயிலால் வெம்மையுற்ற வெவ்விய பருக்கை,

அயில் உருப்பு அனைய ஆகி கிழிப்ப சுரன் மராத்த வரி நிழல் முதல் அசைஇ (12) ஐது நடந்து—வேல் காய்ந்த தன்மையவாய் அடியைக் கிழிக்கையினாலே அருங்கானகத்துநின்ற கடம்பினுடைய செறியாத நிழலைஉடைத்தாகிய அடியிலே இளைப்பாறிப் பின்பு போகவேண்டுதலின் மெத்தென நடந்து,

9-11. [வேனி னின்ற வெம்பத வழிநாட், காலைஞா யிற்றுக் கதிர்கடாவுறுப்பப், பாலை நின்ற பாலை நெடுவழி:] வேனில் நின்ற காலை வழிநாள் ஞாயிறு கதிர் கடாவுறுப்ப வெம்பதம் பாலை நின்ற பாலை நெடு வழி—இளவேனில் நிலைபெற்ற காலத்திற்குப் பின்னாகிய நாளிலே ஞாயிற்றினுடைய கதிர் வெம்மையைச் செலுத்தலைச் செய்கையினாலே வெய்ய செவ்வியையுடைய *பாலைத் தன்மை நிலைபெற்றமையாற் பிறந்த பாலைநிலமாகிய தொலையாத வழியினையுடைய சுரனென்க; (12)

† "நடுவுநிலைத்திணையே" என்னுஞ் சூத்திரத்துரையாற் பாலைத்தன்மை கூறினாம்; அதுகொண்டு உணர்க. பாலைநின்ற பாலைவழி, "ஆறுசென்றவியர்" போல்நின்றது.

12. [சுரன்முதன் மராஅதத வரிநிழ லசைஇ] என்பதனை முன்னே கூட்டுக.

13-4. [ஐதுவீ ழிகுபெய லழகுகொண் டருளி, நெய்கனிந் திருளிய கதுப்பின்:] அருளி ஐது வீழ் இகு பெயல் அழகு கொண்டு நெய் கனிந்து இருளிய கதுப்பின்—உலகிற்கு அருளுதலைச்செய்து மெல்லிதாய் வீழ்ந்து தாழ்கின்ற மழையினது அழகைத் தன்னிடத்தே கொண்டு ‡எண்ணெயிலே முற்றுப்பெற்று இருண்ட மயிரினையும்,

14-6. [கதுப்பென, மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன், மயின்மயிற் குளிக்குஞ் சாயல்:] மயில் பலவுடன் மணி வயின் கலாபம் கதுப்பு என பரப்பி

---

* பாலைத்தன்மையாவது காலையும்மாலையும் நண்பகலன்ன கடுமைகூரச் சோலைதேம்பிக் கூவல்மாறி நீரும்நிழலுமின்றி நிலம்பயந்துறந்து புள்ளும் மாவும் புலம்புற்று இன்பமின்றித் துன்பம்பெறுவதொருகாலம். (தொல். அகத். 9 - ந.)

† தொல்காப்பியம், அகத்திணையியல், 9.

‡ "எண்ணெயு நானமு மிவைமூழ்கி" (சீவக. 164)

மயில் குளிக்கும் சாயல்—மயில்கள் பலவுங்கூடி நீலமணிபோலுங் *கண்ணினை யுடைய தோகைகளை மகளிர் மயிரைவிரித்தாற்போல விரித்துப்பார்த்து இவர் கன்சாயற்கு ஒவ்வேமென்று பேட்டிற்குள்ளே சென்று மறைதற்குக் காரண மாகிய †கட்புலனாகிய மென்மையினையும்,

16-8. சாஅய் உயங்கு நாய் நாவின் நல் எழில் அசைஇ வயங்கு இழை உலறிய அடியின்—ஓடியினைத்து வருந்துகின்ற நாயினது நாக்கினுடைய நல்ல அழகைவருத்தி வறுமையாலே விளங்குகின்ற சிலம்புமுதலியனவின்றிப் பொலி வழிந்த அடியினையும்,

18-9. [அடிதொடர்ந், தீர்ந்துநிலந் தோயு மிரும்பிடித் தடக்கையின் :] ஈர்ந்து நிலம் தோயும் இரு பிடி தட கையின் அடி தொடர்ந்து—இழுக்கப்பட்டு நிலத்தேசெறியும் கரிய பிடியினது பெருமையையுடைய கைபோலத் தாமும் அடியோடே தொடர்புபட்டு முறையாற் பருத்து,

20-21. [சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென, மால்வரை யொழு கிய வாழை :]

மால் வரை ஒழுகிய வாழை என சேர்ந்து—பெருமையையுடையமலையிலே ஒழுங்குபடவளர்ந்த வாழையெனத் திரண்டு,

‡ சேரென்னு முரிச்சொல் முதனிலையாகச் சேர்ந்தென்னும் வினையெச்சம் வந்தது.

குறங்குடன் செறிந்த குறங்கின்—ஒருகுறங்குடனே ஒருகுறங்கு நெருங்கி யிருக்கின்ற குறங்கினையும்,

21-2. வாழை பூ என பொலிந்த ஓதி—வாழையினது பூவென்னும்படி அழகு பெற்ற §பனிச்சையினையும்,

22-4. [ஓதி, நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சிக், களிச்சுரும் பரற் றஞ் சுணங்கிற் சுணங்குபிதிர்ந்து] களி சுரும்பு நளி சினை வேங்கை நாள் மலர் நாரி ஓதி அரற்றும் சுணங்கின் சுணங்கு பிதிர்ந்து—களிப்பினையுடைய சுரும்பு நன் செறிவினையுடைத்தாகிய கொம்பினையுடைய வேங்கையினது நாட்காலத்து மலரென்று விரும்பிப்பாடி ஆரவாரிக்கும் ஓரிடத்திற்றோன்றிய சுணங்குடனே ஓரிடத்திற்றோன்றிய சுணங்கு பிதிர்பட்டு,

25-6. யாணர் கோங்கின் அவிர் முகை எள்ளி பூண் அகத்து ஒடுங்கிய வேம்முலை—புதிதாகப் பூத்தலையுடைய கோங்கினது விளங்குகின்ற முகையை இகழ்ந்து மெல்லிய பணிகள் இடையிலேகிடக்கின்ற விருப்பத்தையுடைய முலை யினையும்,

---

* கண் - பீலியிடத்ததாகியகண்.

† 'சாயலென்னுஞ்சொல், மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் ஐம் பொறியானு நுகரும் மென்மையை உணர்த்தும்.' (தொல். உரி. சூ. 27. ந); 'சாயல் மென்மை" என்று பொதுப்படச் சூத்திரஞ்செய்தது ஐம்பொறியானு நுகருமென்மையெல்லாம் அடங்குதற்கு; (சீவக. 8. ந.)

‡ "சேரேதிரட்சி" (தொல். உரி. சூ. 65.)

§ பனிச்சை - மகளிர்கூந்தலின் ஐம்பால்களுள் ஒன்று.

26-8. [முலையென, வண்கோட் பெண்ணை வளர்த்த நங்கி, னின்சே றிகுதரு மெயிற்றின்:] வன் கோள் பெண்ணை முலையென வளர்த்த நங்கின் இன் சேறு இகுதரும் எயிற்றின்—பெரிய குலையினையுடைய பனை முலையென்னும்படி வளர்த்த நங்கினது இனிய செறிந்தநீர் தன்னீர்மையாற் றாழும் எயிற்றினையும்,

28-30. [எயிறெனக், குல்லையம் புறவிற் குவிமுகை யவிழ்ந்த, முல்லை சான்ற கற்பின்:] குல்லை அம் புறவில் குவி முகை எயிறென அவிழ்ந்த முல்லை சான்ற கற்பின் — கஞ்சங்குல்லையையுடைய அழகிய காட்டகத்தே குவிந்த அரும்பு எயிறென்னும்படி நெகிழ்ந்த முல்லை சூடுதற்கமைந்த கற்பினையும்,

கற்பின் மிகுதிதோன்ற *முல்லை சூடுதல் இயல்பு. கதுப்பிற் கதுப்பென் பதுமுதல் இத்துணையும் இயைபுத்தொடை திரிந்து வந்ததென்றறிக. †"இறுவாயொன்றல்" என்னுஞ் சூத்திரத்துட் கூறினாம்.

30-31. மெல்லியல் மடம் மான் நோக்கின் வாள் நுதல் விறலியர்—மெல்லிய இயல்பினையும், மடப்பத்தினையுடைய மான்போலும் பார்வையினையும், ஒளியையுடைத்தாகிய நுதலினையுமுடைய ‡விறல்பட ஆடுமகளிர்,

கதுப்பினையும் (14) ஓதியினையும் (22) நுதலினையும் நோக்கினையும் (31) எயிற்றினையும் (28) முலையினையும் (26) குறங்கினையும் (20) அடியினையும் (18) சாயலினையும் (16) மெல்லிய இயல்பினையும் கற்பினையு (30) முடைய விறலியரென்க.

32-3. நடை மெலிந்து அசைஇய நல் மெல் சிறு அடி கல்லா இளையர் மெல்ல தைவர—நடையால் இளைத்து ஓய்ந்த நன்மையையுடைய மெல்லிய சிறிய அடியைத் தம்தொழிலையொழிய வேறுகல்லாத இளையர் மெத்தென்று வருட,

34-5. பொன் வார்ந்தன்ன புரி அடங்கு நரம்பின் இன் குரல் சிறு யாழ் இடம் வயின் தழீஇ—பொற்கம்பியினையொத்த முறுக்கடங்கின நரம்பினது இனிய ஓசையையுடைய சிறிய யாழை இடப்பக்கத்தே தழுவி,

36-7. நைவளம் §பழுநிய நயம் தெரி பாலை கை வல் பாண்மகன் கடன் அறிந்து இயக்க சட்டபாடையென்னும் பண் முற்றுப்பெற்ற இனிமை தெரிகின்றபாலையாழை வாசித்தலைவல்ல பாணனாகியமகன் வாசிக்குமுறைமையை அறிந்து வாசிக்க,

38. இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇ—வள்ளியோரின்மையின் பரிசிலர் செல்லாத உலகத்தே பரிசில்தருவாரை விரும்பி,

இனி இயங்கும்வையம் சகடமாகலின், உலகத்திற்கு இயங்காவையமென வெளிப்படை கூறிற்றுமாம்.

---

* "முல்லையந்தொடை யருந்ததி" (பிரபு. கைலாய. 27.); "முல்லைசான் மனையுலோபா முத்திசை" (சீகாளத்தி. பொன்முகரி. 21.)

† தொல்காப்பியம், செய்யுளியல், 96.

‡ விறல் - சத்துவம்; வேம்புதின்றார்க்குத் தலைநடுங்குவதுபோல அஞ்சு, தக்கது முதலியவற்றைக்கேட்டவிடத்துப் பிறந்த உள்ளநிகழ்ச்சியால் தாமே தோன்று நடுக்கமுதலாயின.

§ 'பழுனிய' என்றும் பிரதிபேதமுண்டு.

39. நுனி கூர் எல்வமொடு துயர் ஆற்றுப்படுப்ப—தன்னை வெறுத்தல் மிக்க வருத்தத்தோடே கூடின வறுமை நின்னைக் கொண்டுபோகையினாலே,

40. முனிவு இகந்து இருந்த முதுவாய் இரவல—வழிவருத்தந் தீர்ந்திருந்த பேரறிவுவாய்த்தற்றொழிலையுடையையாய இரவல,

துயர் ஆற்றுப்படுக்கையினாலே போந்து (39) விறலியர் தம்முடைய (31) சீறடியை (32) வெம்பரல் (8) அயிலுருப்பனையவாகிக் (7) கிழிக்கையினாலே(8) வரிநிழலசைஇப் (12) பின்னும் ஆற்றுந்தகைபெற ஐதுநடந்து (7) அந்நடையால் இனைத்து ஓய்ந்த அடியை (32) இளையர் தைவரப் (33) பாண்மகன் (37) பாலையை (36) இயக்க (37) வள்ளியோர் நசைஇச் (38) சீறியாழ் இடவயிற்ற ழீஇ (35) முனிவிகந்திருந்த இரவலவென முடிக்க.

41-2. கொழு மீன் குறைய ஒதுங்கி வள் இதழ் கழுநீர் மேய்ந்த கய வாய் எருமை—கொழுவிய மீன் துணியநடந்து வளவிய இதழையுடைத்தாகிய செங் கழுநீர்ப்பூவைத் தின்ற பெரிய வாயையுடைய எருமை,

43-4. பைங்கறி நிவந்த பலவின் நீழல் மஞ்சள் மெல் இலை மயிர் புறம் தைவர—பசிய மிளகுகொடி படர்ந்த பலாவின் நீழலிலே மஞ்சளினது மெல்லிய இலை தனது மயிரையுடைய முதுகைத்தடவ,

45. வினையா இன கள் நாற மெல்குபு பெயரா—முற்றாத இனையதேன் நாற மென்று அசையிட்டு,

46. குளவி பள்ளி பாயல் கொள்ளும்—காட்டுமல்லிகையாகிய படுக்கையிலே துயில்கொள்ளும்,

47. குட புலம் காவலர் மருமான்—மேற்றிசைக்கணுள்ள நிலத்தைக் காத்தற்றொழிலையுடைய சேரர் குடியிலுள்ளோன்,

எருமை, நீழலிலே தைவரப் பெயராக் கொள்ளும் குடபுலமென முடிக்க.

47-9. ஒன்னார் வடபுலம் இமயத்து வாங்கு வில் பொறித்த எழு உறழ் திணி தோள் இயல் தேர் குட்டுவன்—பகைவருடைய வடக்கின்கண் உள்ளதாகிய நிலத்திடத்தே நிற்கும் இமவானின்கண்ணே வளையும் வில்லைவைத்த கணையத்தைமாறுபடும் திணிந்த தோளினையும் நடக்கின்ற தேரினையுமுடைய குட்டநாட்டை யுடையோன்,

50. வரு புனல் வாயில் வஞ்சியும் வறிது—பெருகுகின்ற நீரையும், கோபுரவாயிலையுமுடைய வஞ்சியென்னுமூரும் தரும்பரிசில் சிறிதாயிருக்கும்;

மருமான் (47) குட்டுவன் (49) அவனுடைய வஞ்சியும் வறிதெனமுடிக்க.

50. அதாஅன்று—அவ்வூரன்றி,

51-2. நறவு வாய் உறைக்கும் நாகு முதிர் நுணவத்து அறை வாய் குறு துணி—தேனைப் பூக்கள் தம்மிடத்தினின்று துளிக்கும் இளமைமுதிர்ந்த நுணாமரத்தினது வெட்டின வாயையுடைய குறியகுறட்டை,

52-3. [அயிலுளி பொருத, கைபுனை செப்பங் கடைந்த மார்பின்:] அயில் உளி கடைந்த கை புனை செப்பம் பொருத மார்பின் மந்தி (56)—கூர்மையையு

டைய உளிகள் உள்ளேசென்றுகடைந்த சாதிலிங்கந் தோய்ந்த *சேப்புச்சேர்ந்த மார்பின் மந்தி,

54. செய் பூ கண்ணி செவி முதல் திருத்தி—கிடேச்சையாற்செய்த பூவினையுடைய மாலையைச் செவியடியிலே நெற்றிமாலையாகக் கட்டி,

55. நோன் பகடு உமணர் ஒழுகையொடு வந்த மந்தி (56)—வலியினையுடைத்தாகிய எருத்தினையுடைய உப்புவாணிகருடைய சகடவொழுங்கோடே கூடவந்த மந்தி,

56. மகாஅர் அன்ன மந்தி—அவர்கள் வளர்த்தலின் அவர்கள் பிள்ளைகளையொத்த மந்தி,

56-8. மடவோர் நகாஅர் அன்ன நளி நீர் முத்தம் வாள் வாய் எருந்தின் வயிற்றகத்து அடக்கி—அவ்விடத்து மடப்பத்தையுடைய மகளிருடைய எயிற்றையொத்த செறிந்த நீர்மையையுடைய முத்தை வாள்வாய்போலும் வாயையுடைய கிளிஞ்சிலின் வயிற்றிடத்தே இட்டுப் பொதிந்து,

59-60. [தோள்புற மறைக்கு நல்கூர் நுசுப்பி, னுளரிய லைம்பா லுமட்டிய ரீன்ற:]

நுசுப்பின் நல்கூர் புறம் தோள் மறைக்கும் உமட்டியர்—நுசுப்பினது நல்கூர்ந்த †புறத்தைத் தோள் மறைக்கும் உமட்டியர்,

என்றது:—இடை தனது நுண்மையால் நெகிழமுயங்குங்காலத்து ஊற்றின்பம்பெறாது மிடிப்பட்ட புறத்தினைத் தோள் இறுகமுயங்கி அவ்வின்பத்தைக் கொடுத்தற்குக் காரணமான உமட்டியரென்றவாறு.

ஊற்றின்பம் பெற்றறியாதென்னும் புறங்கூற்றையென்றுமாம்.

உளர் இயல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற—அசைகின்ற இயல்பினையுடைய ஐந்துபகுதியாகிய மயிரினையுடைய உப்புவாணிகத்தியர்பெற்ற,

61. கிளர் பூண் புதல்வரொடு கிலுகிலி ஆடும்—விளங்குகின்ற பூணையுடைய பிள்ளைகளுடனே தானும் கிலுகிலுப்பை கொண்டு விளையாடும்,

62. தத்து நீர் வரைப்பின் கொற்கை கோமான்—முறிகின்ற நீரைத் தனக்கு எல்லையாகவுடைய கொற்கையென்னும் ஊர்க்கு அரசன்,

மந்தி முத்தையடக்கி உமட்டியரீன்ற புதல்வரோடே ஆடுங் கொற்கையென முடிக்க.

63. தென் புலம் காவலர் மருமான்—தெற்கின் கண்ணதாகிய நிலத்தைக் காத்தற் றொழிலையுடையார் குடியிலுள்ளோன்,

63-5. [ஒன்னார், மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக், கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்:]

ஒன்னார் மண் மாறு கொண்ட செழியன்—பகைவர்நிலத்தை மாறுபாட்டாலே கைக்கொண்ட பாண்டியன்,

மாலை வெண்குடை கண் ஆர் கண்ணி கடு தேர் செழியன்—முத்தமாலையையுடைய கொற்றக்குடையினையும் கண்ணிற்கு அழகு நிறைந்த கண்ணியினையும் கடிய தேரினையுமுடைய செழியன்,

---

* சேப்பு - செம்மைநிறம்; "கழற்கால் சேக்குஞ், சேப்புடையார்" (திருவரப்பனூர்ப்புராணம், பாயிரம், 3.) † புறம் - இடம்.

66-7. [தமிழ்நிலைபெற்ற தாங்கரு மரபின், மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே:] நனை மகிழ் தாங்கரு மரபின் தமிழ் நிலைபெற்ற மறுகின் மதுரையும் வறிது—தன்னிடத்துத் தோன்றிய மனமகிழ்ச்சி பொறுத்தற்கரிய முறைமையினையுடைய தமிழ் வீற்றிருந்த தெருவினையுடைய மதுரையும் வறிது;

நனைமகிழ்—வினைத்தொகை.

கோமான் (62) மருமான் (63) செழியன் (65) அவனுடைய மதுரையும் தரும் பரிசில் சிறிதாயிருக்கும்.

67. அதாஅன்று—அவ்வூரன்றி,

68. *[நறுநீர்ப் பொய்கை யடைகரை நிவந்த:] பொய்கை நறு நீர் அடைகரை நிவந்த— *பொய்கையிடத்து நறிய நீரடைகரையிலே நின்று வளர்ந்த,

69. துறு நீர் கடம்பின் துணை ஆர் கோதை—நெருங்குகின்ற தன்மையையுடைய கடம்பினுடைய இணைதல்நிறைந்த மாலை,

கோதைபோலப் பூத்தலிற் கோதையென்றார்.

70-71. [ஓவத் தன்ன வுண்டுறை மருங்கிற், கோவத் தன்ன கொங்குசேர் புறைத்தலின்:] கோவத்து அன்ன கொங்கு உறைத்தலின் சேர்பு ஓவத்து அன்ன உண் துறை மருங்கின்—தன்னிடத்து இந்திரகோபத்தையொத்த தாதையுதிர்த்தலின் அத்தாதுசேர்ந்து சித்திரத்தையொத்த உண்ணும் துறையிடத்தே நின்ற,

72-3. வரு முலை அன்ன வள் முகை உடைந்து திரு முகம் அவிழ்ந்த தெய்வம் தாமரை—எழுகின்ற பெரியமுலையையொத்த பெரிய முகைநெகிழ்ந்து அழகினையுடைய முகம்போல மலர்ந்த தெய்வத்தன்மையையுடைய தாமரையிடத்து,

† "பொருளே யுவமஞ் செய்தனர்" என்னுஞ் குத்திரத்தாற் பொருளை உவமஞ்செய்தார்.

74-6. ஆசு இல் அகம் கை அரக்கு தோய்ந்தன்ன செ இதழ் பொதிந்த செ பொன்கொட்டை ஏமம் இன் துணை தழீஇ—குற்றமில்லாத அங்கையைச் சாதிலிங்கந்தோய்ந்தாலொத்த சிவந்த இதழ்சூழ்ந்த செம்பொன்னாற் செய்தாலொத்த ‡ பீடத்திலே தன்னுயிர்க்குக் காவலாகிய இனிய பெடையைத் தழுவித்துயில்கொண்டு,

76-8. இறகு உளர்ந்து காமர் தும்பி காமரம் செப்பும் §தண் பணை தழீஇய தளரா இருக்கை—அத்துயிலெழுந்து விருப்பமருவினதும்பி சீகாமரமென்னும்பண்ணைப்பாடும் மருதநிலஞ் சூழ்ந்த அசையாத குடியிருப்பினையுடைய,

---

* பொய்கை—மானிட ராக்காத நீர் நிலை. (சீவக. 337-ந.)

† தொல்காப்பியம், உவமவியல், 9.

‡ "பதுமபீடத் தன்னகர்" (கம்ப. கையடை.

§ இதுபோன்றஅடி, பெரும்பாணாறு, 242 - ஆம் அடியாகவும் காணப்படுகின்றது; "தண் பணை தழீஇய விருக்கை": "சுறமறிவன", "குருகுநாரையொடு", என்னுஞ்செய்யுட்களிலுள்ளது; (யா-வி. மேற்)

79. குணபுலம் காவலர் மருமான்—இழக்கின்கண்ணதாகிய நிலத்தைக் காத்தற்பொருட்டே புடையார் குடியிலுள்ளோன்,

79-81. [ஒன்னார், ஒல்லெயிற் கதவ முருமுச் சுவல் சொறியுந், தாக்கெயி லெறிந்த தொடியினைக்கு உடன்றை:] கதவம் ஒக்கு எயில் உருமுச் சுவல் சொறியும் *ஒன்னார் தாக்கு எயில் எறிந்த தொடி விளங்கு புட னை—கதவத்தை யுடைய உயர்ந்த மதிற்றலையிலே உருமேறு தன்கழுத்தைத் தினவாற்றேய்க்கும் பகைவர் தாக்கெயிலை அழித்த தொடி விளங்கும் பெருமையையுடைய கையினையும்,

82. காடா நல் இசை நல் தேர் செம்பியன்—ஐயுற்று ஆராயப்படாத உல கறிந்த நல்லபுகழினையும் நல்ல தேரினையுமுடைய சோழனது,

83. ஓடா பூட்கை உறத்தையும் வறிது—தன்னிடத்திருந்தோர் ஓடா மைக்குக் காரணமாகிய மேற்கோளினையுடைய உறந்தையென்னும் ஊரும் தரும்பரிசில் நிறைவாயிருக்கும்;

அது †"முறஞ்செவி வாரண முன்சம முருக்கிய, புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென" என்பதனாலுணர்க.

அதாஅன்று—அவ்வூரன்றி,

84-5. வானம் வாய்த்த வளம் மலி கவாஅன் காணம் மஞ்ஞைக்கு கலிங் கம் கல்கிய—மழை பருவம்பொய்யாமற் பெய்கையினாலே உண்டான செல்வத் தையுடைய மலைப்பக்கத்திற் காட்டிடத்தேதிரியுமயில் கூடியதற்குக் குளிர்ந்து கூதிற்றென்று அருள்மிகுதியாற் போர்வையைக்கொடுத்த,

86. அரு நிறல் அணங்கின் ஆவியர் பெருமகன்—பெறுதற்கரிய வலி யையுடைத்தாகிய வடிவினையுடைய ‡ஆவியர்குடியிற் பிறந்த பெரியமகன்,

87. §பெரு கல் காடன் பேகனும்—பெரிய மலைநாட்டையுடைய பே னென்னும் வள்ளலும்

கல்கிய பெருமனெனிய பேனுமெனமுடிக்க.

87-8. சரும்பு உண நறு வீ உறைக்கும் காகம் நெடுவழிசுரும்புண்ணும் படி கறியூறுந் தேனைத் துளிக்கும் சாயன்னையை யுடைத்தாகிய நெடிய வழியி னின்ற,

89. ஈறு வீ முல்லைக்கு பெரு தேர் கல்கிய—நிறைய பூக்களையுடைய முல் லைக்கொடி தடுத்தற்கு அது வேண்டிற்றுக்கருதிப் பெரிய தேரைக்கொடுத்த,

---

* செம்பியன் பகைவருடைய தாக்கெயிலெறிந்தமை பின்வருவனவற் றாலும் விளங்கும்: "ஒன்னருட்கூர் தன்னருங் கடிநிறற், தாக்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்" (புறநா. 34); "வீங்குதோட் செம்பியன் சிற்றம் பி விசம்பிற், தாங்கு மெயிலுந் தொலைத்தலால்" (பழ. 1); "தாக்கெயின் மூ றெறிந்த சோழன்கா ணம்மானே" (சில. வாழ்த்து); "தாகெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்" (மணி. 1: 4.)

† சிலப்பதிகாரம், காடுகாண்காதை, 247-8.

‡ "அதமனெம் பரிசி லாவியர் கோவே" (புறநா. 147)

§ ஔவையாரிடங்களில், பெருக்கடலுட னென ஏழுவள்ளலும் பெரிய கடலு னென உரையிலும் வேறுபாடுண்டு.

90-91. பிறக்கு வெள் அருவி வீழும் சாரல் பறம்பின் கோமான் பாரி யும்—மிகுகின்ற வெள்ளிய அருவிகுதிக்கும் பக்கத்தினையுடைய பறம்பென் னும் மலைக்காசனைய *பாரியென்னும் வள்ளலும்,

91-3. தறங்கும் மணி வால் உளை புரவியொடு வையகம் சகம் கல் மொழி மருள இரவலர்க்கு சுற்ற காரி (95)—ஒலிக்கும் மணியினையும் வெள்ளிய தலை யாட்டத்தினையுமுடைய குதிரையோடே தனது காட்டினையும், அருளினையு டைய சன்மையுடைய மொழியினையும் ஏனையோர்கேட்டு வியக்கும்படி இரவலர்க்குக் கொடுத்த காரி,

சகரச்மொழிமருள வென்றுமாறுக.

94-5. அழல் நிகழ்த்து இமைக்கும் அஞ்ச வரு செடு வேல் கழல் தொடி தட கை காரியும்—†தன்னிடத்திறையும் கொற்றவையுடைய கோபத்தின்மிகு தியினாலே தான்விளங்கும் அச்சந்தோன்றும் செயவேலினையும் உழவர்தொ டியினை யணிந்த பெருமையையுடைய கையினையுமுடைய காரியென்னும் வள்ளலும்,

95-7. [கிழதிகழ், சில காக கல்கிய கலிங்க, மாலமர் செல்வற் கமர்த்தனன் கொடுத்த:] காகம் கல்கிய கிழல் நிகழ் சீலம் கலிங்கம் ஆல் அமர் செல்வற்கு அமர்த்தனன் கொடுத்த ஆய் (99)—பாம்பு சன்றுகொடுத்த ஒளிவிளங்கும் சீலநிறத்தையுடைய உடையினை ஆலின்கிழிருந்த இறைவனுக்கு செஞ்சொருக் கிக் கொடுத்தஆய்,

98-9. சாவம் தாங்கிய சாந்து புலர் இணி தோள் ஆர்வம் கல் மொழி ஆயும்—வில்லையெடுத்த சந்தனம் பூசிப்புலரும் இண்ணிய தோளினையும் ‡கேட் டோர்க்கு விருப்பக்கைச்செய்யும் சன்மையுடைய சொல்லினையுமுடைய ஆயென் னும் வள்ளலும்,

99-101. மால் வரை கமழ் பூ சாரல் சனிய செல்லி அமிழ்து விளை தீ கனி§ஒளவைக்கு சுற்ற அதிகன் (103)— பெருமையையுடைய மலையிற் கம முள்பூக்களையுடைய பக்கமலையிலேன்று அழகுபெற்ற கருநெல்லியினது அமிழ் தின் சன்மை தன்னிடத்தேயுண்டான இனிய பழத்தைத் தான் நுகர்ந்து உடம் பிபெருகே ஒளவைக்குக்கொடுத்த அதிகன்,

---

* "கொடுக்கிலாளனைப் பாரியேயென்றகூறினுங்கொடுப் பாரிலே" (கந. புகழூர். சுற்தர)

† 'அழல்' என்பதற்கு சண்டு உரை எழுதப்பட்டிருத்தல்போல, இந்நூல் 102 - ஆம் அடியிலுள்ள 'கினம்' என்பதற்கும் பொருன் எழுதப்பெற்றுள்ளது.

‡ திருக்குறள், 643 - ஆம் செய்யுளையும் அதனுரையையும் பார்க்க.

§ 100 - ஆம் திருக்குறளின் விசேடவுரையைப்பார்க்க. ஒளவை அதிக மானிடத்து செல்விக்களி பெற்றமையைப் பின்வருஞ்செய்யுளாலுமுணர்க. "வலம்படு வாய்வா னேந்தி யொன்னர், களம்படக் கடந்த கழறொடித் தடக்கை, யார்கலி கறவி னதிகர் கோமான், போரடு நிருவிற் பொலந்தா ரஞ்சி, பால் புரை பிறைநுதற் பொலிந்த சென்னி, சே மணிமிடற் றொருவன் போல, மண் ணுக பெரும நீயே தொன்னிலைப், பெருமலை விடாகத் தருமிசைக் கொண்ட, நெறியிலே செல்லித் திங்களி குறியா, தாதனின்னகைத் தடக்கிச், சாத வீங்க மெய்த்தி னனையே" (புறநானூறு. 91.)

102-3. உரவு சினம் கனலும் ஒளி திகழ் நெடு வேல் அரவம் கடல் தானை அதிகனும்—தன்னிடத்துறையும் கொற்றவையது வலியினையுடைய சினம் நின்றெரியும் ஒளிவிளங்கும் நெடிய வேலினையும் ஆரவாரத்தையுடைய கடல்போலும் படையினையுமுடைய அதிகமானென்னும் வள்ளலும்,

103-5. கரவாது நட்டோர் உவப்ப நடை பரிகாரம் முட்டாது கொடுத்த நள்ளியும் (107)—தன்மனத்து நிகழ்கின்றனவற்றை மறையாதுகூறி நட்புச் செய்தோர் மனமகிழும்படி அவர்கள் இல்லறம் நடத்துதற்கு வேண்டும்பொருள்களை நாடோறும் கொடுத்த நள்ளியும்,

105-7. முனை விளங்கு தட கை துளி மழை பொழியும் வளி துஞ்சு நெடு கோடு நளி மலைநாடன் நள்ளியும்—பகைப்புலத்தே கொலைத்தொழிலான் விளங்கும்பெருமையையுடைய கையினையும் துளியையுடையமழை பருவம் பொய்யாது பெய்யும் உயர்ச்சியாற் காற்றுத்தங்கும் நெடிய சிகரங்களையுடைய செறிந்த மலைநாட்டையுமுடையனாகிய நள்ளியென்னும் வள்ளலும்,

107-9. நளி சினை நறு போது கஞலிய நாகு முதிர் நாகத்து குறு பொறை நல் நாடு கோடியர்க்கு ஈந்த ஓரி (111)—செறிந்த கொம்புகளிடத்தே நறிய பூக்கள் நெருங்கின இளமையையுடைய முதிர்ந்த சுரபுன்னையையும், குறிய மலைகளையுமுடைய நன்றாகிய நாடுகளைக் கூத்தாடுவோர்க்குக்கொடுத்த ஓரி,

110-11. காரி குதிரை காரியொடு மலைந்த ஓரி குதிரை ஓரியும்—காரியென்னும் பெயரையுடைத்தாகிய குதிரையையுடைய காரியென்னும் பெயரையுடையவனுடனே போர்செய்த ஓரியென்னும் பெயரையுடைத்தாகிய குதிரையையுடைய ஓரியென்னும் வள்ளலும்,

காரி கரியகுதிரையென்றும் ஓரி பிடரிமயிரென்றும் கூறுவாருமுளர்.

111-13. [எனவாங், கெழுசமங் கடந்த வெழுவுறழ் திணிதோ, ளெழுவர் பூண்ட வீகைச் செந்நுகம்:]

என எழுவர் ஆங்கு பூண்ட ஈகை செந்நுகம்—என்றுசொல்லப்பட்ட எழுவரும் அக்காலத்தே மேற்கொண்ட கொடையாகிய செவ்விய பாரத்தை,

எழு சமம் கடந்த எழு உறழ் திணி தோள் எழுவர்—தம்மேலே வருகின்ற போர்களைக்கடந்த கணையத்தோடு மாறுபடுகின்ற திணிந்த தோளினையுடைய எழுவர்,

114-26. [விரிகடல் வேலி வியலகம் விளங்க, வொருதான் றாங்கிய வுரனுடை நோன்றா, ணறுவீ நாகமு மகிலு மாரமுந், துறையாடு மகளிர்க்குத் தோட்புணை யாகிய, பொருபுன றரூஉம் போக்கரு மரபிற், றொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய, நன்மா விலங்கை மன்ன ருள்ளும், மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வா, ளுறுபுலித் துப்பி னோவியர் பெருமகன், களிற்றுத்தழும் பிருந்த கழறயங்கு திருந்தடிப், பிடிக்கணஞ் சிதறும் பெயன்மழைத் தடக்கைப், பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை, நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு:]

விரி கடல் வேலி வியலகம் விளங்க ஒரு தான் தாங்கிய நல்லியக்கோடனை நயந்தனிர் செலின் (263)—பரந்த கடலாகிய வேலியையுடைய உலகமெல்லாம்

விளங்கும்படி ஒருவனாகியதானே பொறுத்த நல்லியக்கோடனை விரும்பிச் செல்லின்,

மறு இன்றி விளங்கிய உரன் உடை நோன்றாள் வடு இல் வாய் வாள் உறு புலி துப்பின் ஓவியர் பெருமகன்—குற்றமின்றி விளங்கிய அறிவையுடைத்தாகிய வலியையுடைய முயற்சியினையும் பகைவர்முகத்தினும் மார்பினும்வெட்டின வாய்த்தவாளையும் மிக்க புலிபோலும் வலியினையுமுடைய ஓவியருடைய குடியிலுள்ளோன்,

நறு வீ நாகமும் அகிலும் ஆரமும் துறை ஆடும் மகளிர்க்கு தோள் புணை ஆகிய பொரு புனல் தரூஉம் இலங்கை—நறிய பூக்களையுடைய சுரபுன்னையையும் அகிலையும் சந்தனத்தையும் குளிக்குந்துறையிலே புனலாடுமகளிருடைய தோள்களுக்குத் தெப்பமாகக் கரையைக்குத்துகின்ற நீர்தரு இலங்கை,

கருவொடு போக்கரு மரபின் இலங்கை—*கருப்பதித்த முகூர்த்தத்தாலே ஒருவராலும் அழித்தற்கரிய முறைமையினையுடைய இலங்கை,

†தொல் மா இலங்கை பெயரிய நல் மா இலங்கை—பழையதாகிய பெருமையினையுடைய இலங்கையினது பெயரைப்பெற்ற நன்றாகிய பெருமையையுடைய இலங்கை,

மன்னருள்ளும் ஓவியர் பெருமகன்—அவ்விலங்கைக்குரிய அரசர் பலருள்ளும் ஓவியர்குடியிற் பிறந்தோன்,

களிறு தழும்பு இருந்த கழல் தயங்கு திருந்து அடி—யானையைச்செலுத்துதலாலுளதாகிய தழும்புகிடந்த வீரக்கழல் கிடந்தசையும் பிறக்கிடாத அடியினையும்,

பிடி கணம் சிதறும் கை—பிடித்திரளைப் பலர்க்குங் கொடுக்குங்கை,

பெயல் மழை தட கை—பெய்தற்றொழிலையுடைய மழைபோன்ற பயனையுடைய பெரியகையினையுமுடைய,

பல் இயம் கோடியர் புரவலன்—பல வாச்சியங்களையுடைய கூத்தரைப் புரத்தலை வல்லவன்,

பெரு இசை நல்லியக்கோடனை நயந்த கொள்கையொடு—பெரிய புகழையுடைய நல்லியக்கோடனைக் காண்டற்குவிரும்பிய கோட்பாட்டுடனே,

பெருமகன் புரவலனாகிய நல்லியக்கோடனெனமுடிக்க.

127. தாங்கரு மரபின் தன்னும்—பிறராற் பொறுத்தற்கரிய குடிப்பிறந்தோர்க்குரிய முறைமைகளையுடைய தன்னையும்,

127-8. தந்தை வான் பொரு நெடு வரை வளனும் பாடி—அவன்றந்தையுடைய தேவருலகத்தைத்தீண்டும் நெடிய மலையிற் செல்வத்தையும்பாடி,

129. முன் நாள் சென்றனம் ஆக— ‡நாலுபத்துநாளைக்குமுன்னே போனேமாக,

---

* கருப்பதித்தமுகூர்த்தம் - இந்நகரை அமைக்கத்தொடங்கியகாலம்.

† தொன்மாவிலங்கையென்றது இராவணனது இராசதானியாகிய இலங்கையை.

‡ நாலுபத்துநாள் - சிலநாள்.

இந்நாள்—இற்றைநாள்,

130. திறவா கண்ண சாய் செவி குருளை—விழியாத கண்ணையுடைய வாகிய வளைந்த செவியினையுடையகுட்டி,

*"நாயே பன்றி புலிமுய னான்கு, மாயுங் காலைக் குருளை யென்ப."

131. கறவா பால் முலை கவர்தல் நோனாது—பிறராற் கறக்கப்படாத பாலினையுடைய முலையையுண்ணுதலைத் தன்பசிமிகுதியாற் பொறுத்தலாற்றாது,

132. புனிறு நாய் குரைக்கும் புல்லென் அட்டில்—ஈன்றணிமையை யுடைய நாய்கூப்பிடும் பொலிவழிந்த அடுக்களையில்,

133. காழ் சோர் அட்டில் (132)—கழிகள் †ஆக்கையற்று விழுகின்ற அட்டில்,

முது சுவர் கணம் சிதல் அரித்த அட்டில் (132)—பழைய சுவரிடத்தெழுந்த திரண்ட கறையான்தின்ற அட்டில்,

134. [பூழி பூத்த புழற்கா ளாம்பி:] பூழி புழல் ‡காளாம்பி பூத்த அட்டில்—(132) நனைந்தபுழுதி உட்பொய்யாகிய காளானைப் பூத்த அட்டில்,

135-6. [ஒல்குபசி யுழந்த வொடுங்குநுண் மருங்குல், வளைக்கைக் கிணை மகள்:] ஒடுங்கு பசி உழந்த ஒல்கு நுண் மருங்குல் வளை கை கிணைமகள்—ஒடுங்குதற்குக் காரணமான பசியாலே வருந்திய நுடங்கும் நுண்ணிய இடையினையும் வளையலையணிந்த கையினையுமுடைய §கிணைவனுடையமகள்,

136-7. வள் உகிர் குறைத்த குப்பை வேளை உப்பிலி வெந்ததை—பெரிய உகிராற்கிள்ளின குப்பையினின்ற வேளை உப்பின்றாய் அட்டிலிலே (132) வெந்ததனை,

138-9. மடவோர் காட்சி நாணி கடை அடைத்து இரு பெரு ஒக்கலொடு ஒருங்கு உடன் மிசையும்—வறுமையுறுதலும் இயல்பென்றறியாது புறங்கூறுவோர் காண்டற்கு நாணித் தலைவாசலையடைத்து மிடியாற் கரிய பெரிய சுற்றத்தோடே கூடவிருந்து அடையத்தின்னும்,

140. அழி பசி வருத்தம் வீட— ‖அறிவுமுதலியன அழிதற்குக் காரணமான பசியாலுளதாகிய வருத்தங்கள் விட்டுப்போம்படி,

---

* தொல்காப்பியம், மரபியல், 8.

† ஆக்கை - கழிகளைக்கட்டும் கயிறுமுதலியன.

‡ "ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பி, னாம்பி பூப்ப" (புறநா. 164); "சாம்பல் கண் டறியா வாம்பி பூத்த, வெலிதுயி லடுப்பு" (காசிக்கலம்பகம்,57.)

§ கிணைவன்மகள் - கிணைப்பறைகொட்டுவோனுடைய மனைவி; மகள் மனைவி; (மணி, 21: 30)

‖ பசி அறிவுமுதலியவற்றை அழிக்குமென்பதை, "அறிவுகெடவந்த நல்கூர்மையே" (புறநா. 266), "தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக, நல்குர வென்னு நசை" (குறள், 1043), "குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும், பிடித்த கல்விப் பெருப்புணை விடூஉம், நாணனி களையு மாணெழில் சிதைக்கும், ... பசிப்பிணி யென்னும் பாவி" (மணி. 11: 76 - 80) என்பவற்றாலும், "மானங் குலங்கல்வி" என்னும் நல்வழிச்செய்யுளாலும் உணர்க.

140-43. பொழி கவுள் தறுகண் பூட்கை மணி நயக்கும் மருப்பின் தெ கண் யானையொடு பெரு தேர் எய்தி யாம் அவண் நின்றும் வருதும்—மதம் வீழ்ந்தின்ற கதுப்பினையும் கடுக்கொல்லுதலையே மேற்கோளினையும் மணியசை யும் பக்கத்தினையும் நெடியகண்ணையுமுடைய யானையுடனே பெரியதேரையும் பெற்று யாம் அவ்விடத்தினின்றும் வாராநின்றேம்,

இது நிகழ்காலத்து வருதல், *"உம்மொடு வருஉங் கடதற" என்புழிக் கூறினும்.

143-5. நீயிரும் நயந்து இவண இருந்த இரு பெரு ஒக்கல் செம்மல் உள்ளமொடு செல்குவிர் ஆயின் — நீங்களும் ஏவேந்தர்பாற்பெறும் பரிசில் விரும்பி இவ்விடத்திருந்த வறுமையாற் கரியவாகிய பெரிய சுற்றத்தினது தலை மையையுடைத்தாகிய நெஞ்சுடனே அவனிடத்தே போவீராயின்,

146-50. [அலைநீர்த் தாழை யன்னம் பூப்பவுந், தலைநாட் செருந்தி தம னிய மருட்டவுங், கடுஞ்சூன் முண்டகங் கதிர்மணி கழாஅலவு, நெடுங்கால் புன்னை நித்திலம் வைப்பவுங், கானல் வெண்மணல் கடலுலாய் நிமிர்தர:]

கடல் உலாய் நிமிர்தர அலை நீர் கானல் வெண் மணல்—கடல்பரந்து எற்றிப் பொருதலாலே அலையுநீரையுடையகரையில் வெள்ளிய மணலிடத்தினின்ற,

தாழை அன்னம் பூப்பவும் - தாழை அன்னம்போலப் பூக்கையினாலும்,

தலை நாள் செருந்தி தமனியம் மருட்டவும்—இளவேனிற்காலத் தொடங் குகின்ற காலிலே †செருந்தி தன்னைக்கண்டாரைப் பொன்னென்று மருளப் பண்ணுகையினாலும்,

கடு சூல் முண்டகம் கதிர் மணி கழாஅலவும்—முதற் சூலையுடைய கழி முள்ளி ஒளியையுடைய நீலமணிபோலப் பூக்கையினாலும்,

‡கன்னியாய்நின்ற அரும்புதலிற் கடுஞ்சூல்.

கழாஅல—கழற்ற,

நெடு கால் புன்னை நித்திலம் வைப்பவும்—நெடிய தாளினையுடைய புன்னை முத்திலம்போல அரும்புகையினாலும்,

151. பாடல் சான்ற செய்தல் நெடு வழி பட்டினம் (153) -புகழ்தலமை ந்த செய்தனிலத்து நெடியவழியிற் பட்டினம்,

152. மணி நீர் வைப்பு பட்டினம் (153)—நீலமணிபோலும் கழிசூழ்ந்த ஊர்களையுடைய பட்டினம்,

மதிலொடு பெயரிய பட்டினம் (153)—மதிலோடே பெயர் பெற்ற பட் டினம்,

என்றது எயிற்பட்டின மென்றதாம்.

153. பனி நீர் படுவின் பட்டினம் படரின்—குளிர்ச்சியையுடைய நீரை புடைய குளங்களையுடைத்தாகிய எயிற்பட்டினத்தே செல்வீராயின்,

---

* தொல்காப்பியம், வினையியல், 5.

† "செருந்திபொன்சொரிதருந்திருச்செல்வேலியுறைசெல்வர்" (தே. திரு ஞான)

‡ 'கன்னியாய்' என்றும் பிரதிபேதமுண்டு.

படு - மடுவுமாம்.

154. ஓங்கு நிலை ஒட்டகம் துயில் மடிந்தன்ன—உயர்ந்த தன்மையை யுடைய ஒட்டகம் உறக்கத்தேகிடந்தாலொத்த,

155. வீங்கு திரை கொணர்ந்த விரை மரம் விறகின்—மிக்குகின்ற திரை கொண்டுவந்த மணத்தையுடைய அகிலாகிய விறகாலே,

156. கரு புகை செ தீ மாட்டி—கரிய புகையையுடைய சிவந்த நெருப்பை யெரித்து,

156-8. பெரு தோள் மதி *ஏக்கறூஉம் மாசு அறு திரு முகத்து நுதி வேல் நோக்கின் நுளைமகள் அரித்த—பெரிய தோளினையும் மதி இத்தன்மை பெற்றிலேமேயென்று விரும்புதற்குக் காரணமான மறுவறுகின்ற அமைதியினை யுடைய முகத்தினையும் முனையினையுடைததாகிய வேல்போலும் பார்வையினை யுமுடைய நுளைச்சாதியிற்பிறந்த மகளாலே அரிக்கப்பட்ட,

159. பழ படு தேறல் பரதவர் மடுப்ப—பழைதாகிய களிப்புமிகுகின்ற கட்டெளிவைப் பரதவர் எடுத்துவந்து வாயிடத்தே வைக்க,

160-61. கிளை மலர் படப்பை கிடங்கில் கோமான் தளை அவிழ் தெரியல் தகையோன் பாடி—கொத்திலெழுந்த பூக்களையுடையவாகிய தோட்டங்களையுடைய கிடங்கிலென்னும் ஊர்க்கரசனாகிய அரும்புநெகிழ்ந்த மாலையினை யுடைய அழகையுடையோனைப் பாடி,

162. அறல் குழல் பாணி தூங்கியவரொடு—தாளவறுதியையுடைய குழலோசையின் தாளத்திற்கொப்ப ஆடின மகளிரோடே,

163. வறல் குழல் சூட்டின்—உலர்தலையுடைய குழன்மீனைச் சுட்டதனோடே,

வயின் வயின் பெறுகுவிர்—மனைதோறும் மனைதோறும் பெறுகுவிர் ;

பட்டினம் படரிற் (153) கிடங்கிற்கோமானாகிய (160) தகையோனைப் பாடி (161) ஆடினமகளிரோடே (162) நீங்களும் சூட்டோடே (163) தேறலைப் பரதவர்மடுப்ப (159) அவற்றை வயின்வயிற் பெறுகுவிரென முடிக்க.

164. பை நனை அவரை பவழம் கோப்பவும்—பசுத்த அரும்புகளையுடைய அவரை பவழம்போலப் பூக்களை முறையே தொடாநிற்கவும்,

165. கரு நனை காயா கணம் மயில் அவிழவும்—கரிய அரும்பினையுடைய காயாக்கள் திரண்ட மயிலின் கழுத்துப்போலப் பூவாநிற்கவும்,

166. கொழு கொடி முசுண்டை கொட்டம் கொள்ளவும்—கொழுவிய கொடியினையுடைய முசுண்டை †கொட்டம்போலும் பூவைத் தன்னிடத்தே கொள்ளாநிற்கவும்,

கொட்டை நூற்கின்ற கொட்டையுமாம்.

167. செழு குலை காந்தள் கைவிரல் பூப்பவும் — வளவிய குலையினை யுடைய காந்தள் கைவிரல்போலப் பூவாநிற்கவும்,

---

* "கடைக்க ணேக்கற" (சீவந. 1622)

† கொட்டம் - பனங்குருத்தாற்செய்விக்கப்படும் சிறியபெட்டி.

168. கொல்லை நெடு வழி கோபம் ஊரவும்—கொல்லையிடத்து நெடிய வழிகளிலே இந்திரகோபம ஊராநிற்கவும,

இச் செயவெனெச்சமெல்லாம் ஈண்டு நிகழ்கால முணாததியே நின்றன; ஞாயிறுபட வந்தானென்றாற்போல.

169. முல்லை சானற *முல்லை அம புறவின—இவைகாலமுணாததி இங்ஙனம் நிகழ்ததாநிற்கவும கணவன கூறிய சொற்பிழையாது இல்லிருந்து நல்ல றஞ்செய்து ஆற்றியிருந்த தனமையமைந்த முல்லைகொடிபடாந்த அழகினையுடைய காட்டிடத்து,

இது, †"மாயோன மேய" எனனும சூத்திரத்தானுணாக

170-71. விடா கால அருவி வியல மலை கடா மூழகி கானமாறிய செவ்வி நோககி—முழைஞசுகளிலே குதிககும அருவியினையுடைய பெரிய அத்தகிரியிலே ஞாயிறுமறைநது அவன கிரணஙகளபோன அநதிககாலததைப் பார்த்து,

172-3 [திறல்வே னுதியிற பூத்த கேணி, விறலவேல வெனறி வேலூரெயதின] திறல வேல நுதியின கேணி பூத்த திறல் வேல வெனறி வேலூர எயதின—முருகனகையில வலியினையுடைததாகிய வேலினுதிபோலே கேணி பூக்கப்பட்ட வெற்றியையுடைய வேலாலே வெறறியையுடைய வேலூரைச சேரின,

எனறது நலலியககோடன தனபகைமிகுதிககு அஞசி முருகனைவழிபட்ட வழி அவன இககேணியிறபூவைவாஙகிப பகைவரையெறியெனறு கனவிறகூறி அதிற பூவைத தனவேலாக நிருமிததொரு கதைகூறிறறு. இதனானே வேலூரெனறு பெயராயிறறு.

174. உறு வெயிறகு உலைஇய உருப்பு அவிர குரமபை—மிகுகினற வெயிலுககு உளளுறைகினறோ வருநதபபட்ட வெபபம விளஙகுகினற குடிலிலிருககினற,

175 எயிறறியா அட்ட இன புளி வெ சோறு — எயினககுலததின மகளிராலே அடபபட்ட இனிய புளிஙகறியிடபபட்ட வெவவியசோறறை,

புளி - திததிபபுமாம.

176. தேமா மேனி சிலவளை ஆயமொடு—தேமாவின தளிரபோலும மேனியையும ‡சிலவாகிய வளையினையுமுடைய நுமமகளிருடைய திரளுடனே

177. ஆமான சூட்டின—ஆமானினது சூட்டினறசசியையுடைய,

அமைவர பெறுகுவிர—பசிபெடப பெறுகுவிர,

வேலூரெயதிற (173) சூட்டினையுடைய (177) சோறறை (175) ஆயததோடே (176) அமைவரப பெறுகுவிரெனமுடிக

---

* "முலலைசானறபுறவு" (மதுரை 285) எனபதும அதனுரையும இஙகே அறிதறபாலன.

† தொல்காப்பியம், அகததிணையியல,

‡ 'சிலவளைவிறலியெனறது பலவளையிடுவது பெதுமபைப பருவததாகலின, அஃதனறிச சிலவளையிடும பருவததாளென அவன ஆடலமுதலியதுறை ககுரியனாதல கூறியவாறு' (பத்ற். 57 - 6 உரை)

முல்லையும் குறிஞ்சியும் சேர்ந்திருத்தலிற் சேரக்கூறினர்; *இரண்டுங்கூடியல்லது பாலைத்தன்மை பிறவாமையின்.

178-9. [நறும்பூங்கோதை தொடுத்த நாட்சினைக், குறுங்காற் காஞ்சிக் கொம்ப ரேறி :] நாள் கோதை தொடுத்த நறு பூ சினை குறு கால் காஞ்சி கொம்பர் ஏறி—நாட்காலத்தே மாலைகட்டினாற்போல இடையறாமற் றொடுத்த நறிய பூக்களையுடைய சிறிய கொம்புகளையும் குறிய தாளினையுமுடைய காஞ்சிமரத்தின் பெரியகொம்பரிலேயேறி,

180. நிலை அரு குட்டம் நோக்கி நெடிது இருந்து — ஒருகாலத்தும் நிலைப்படுதல் அரிதாகிய ஆழத்திற்றிரிகின்ற மீன்களை எடுக்குங் காலத்தைக் கருதி நெடும்பொழுதிருந்து,

181-2. புலவு கயல் எடுத்த பொன் வாய் மணி சிரல் வள் உகிர் கிழித்த வடு ஆழ் பசு அடை—புலானாற்றத்தையுடைய கயலை முழுகியெடுத்த பொன்னிறம்போலும் வாயையுடைய நீலமணிபோன்ற சிச்சிலியினது பெரிய உகிர் கிழித்த வடுவழுந்தின பசிய இலையினையுடைய,

183. முள் அரை தாமரை முகிழ் விரி நாள் போது—முள்ளையுடைத்தாகிய தண்டினையுடைய வெண்டாமரையினது அரும்புவிரிந்த நாட்காலத்திற் பூவை,

184. கொங்கு கவர் நீலம் செ கண் சேவல்—தேனை நுகர்கின்ற நீலநிறத்தினையும் சிவந்த கண்ணினையுமுடைய வண்டொழுங்கு,

பூவைத் தேனையென்றது, †"தெள்ளிது" என்றதனான் முடிக்க.

185. மதி சேர் அரவின் மான தோன்றும் — திங்களைச் சேர்கின்ற கரும்பாம்பை யொப்பத் தோன்றும்,

186. மருதம் சான்ற மருதம் தண் பனை—ஊடியுங்கூடியும் போகநுகருந்தன்மை யமைந்த மருதநிலத்திற் குளிர்ந்த வயலிடத்து,

187-8. [அந்தண ரருகா வருங்கடி வியனக, ரந்தண் கிடங்கினவ னாமூ ரெய்தின்:] அம் தண் கிடங்கின் அரு கடி வியன் நகர் அந்தணர் அருகா அவன் ஆமூர் எய்தின்—அழகினையுடைய குளிர்ந்த கிடங்கினையும் அரியகாவலையும் அகற்சியையுடைய அகங்களையுமுடைய அந்தணர்சுருங்காக அவனுடைய ஆமூரைச் சேர்வீராயின்,

189-90. [வலம்பட நடக்கும் வலிபுண ரெருத்தி, னுரன்கெழு நோன் பகட் டுழவர் தங்கை:] வலி புணர் எருத்தின் வலம் பட நடக்கும் நோன் பகடு உரன் கெழும் உழவர் தங்கை—இழுத்தற்குரிய வலிபொருந்தின கழுத்தினாலே வெற்றியுண்டாக நடக்கும் மெய்வலியினையுடைத்தாகிய எருத்தினையுடைய அறிவுபொருந்தின உழவருடைய தங்கையாகிய,

---

* "முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து, நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப், பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்" (சிலப. காடுகாண். 64 - 6.)

† "முதன்மு னைவரிற் கண்ணென் வேற்றுமை, சினைமுன் வருத் தெள்ளி தென்ப" என்பது தொல்காப்பியம், வேற்றுமைமயங்கியல், 5.

உரன் - அறிவு; *"உரவோ ரெண்ணினும் மடவோ ரெண்ணினும்" என்றாற்போல.

191-2. பிடி கை அன்ன பின்னு வீழ் சிறு புறத்து தொடி கை மகடூஉ—பிடியினது கையை யொத்த பின்னினமயிர் வீழ்ந்து கிடக்கின்ற சிறிய முதுகினையும் தொடியணிந்த கையினையுமுடைய மகள்,

192. மக முறை தடுப்ப—உழவர் தங்கையாகிய (190) மகடூஉ (192) தான் உள்ளே யிருந்து தன்பிள்ளைகளைக்கொண்டு நம்மை அடைவே எல்லாரையும் போகாது விலக்குகையினாலே,

இனிய பிள்ளைகளை உபசரிக்குமாறுபோல உபசரித்து விலக்கவென்றுமாம்.

193-4. இரு காழ் உலக்கை இரும்பு முகம் தேய்த்த அவைப்பு மாண் அரிசி அமலை வெள் சோறு - கரிய வயிரத்தையுடைய உலக்கையினது பூணினையுடைய முகத்தைத் தேயப்பண்ணின குற்றுதல்மாட்சிமைப்பட்ட அரிசியாலாக்கின் கட்டியாகிய வெள்ளியசோற்றை,

195. கவை தாள் அலவன் கலவையொடு பெறுகுவிர்—கவைத்த காலினையுடைய ஞெண்டும் பீர்க்கங்காயுங்கலந்த கலப்புடனே பெறுகுவிர்;

தண்பணையின் (186) ஆமூரெய்தின் (188) உழவர் தங்கையாகிய (190) மகடூஉத் தடுக்கையினாலே (192) சோற்றைக் (194) கலவையொடு பெறுகுவிரெனமுடிக்க.,

196-201. [எரிமறிந் தன்ன நாவி னிலங்கெயிற்றுக், கருமறிக் காதிற் கவையடிப் பேய்மக, ணிணனுண்டு சிரித்த தோற்றம் போலப், பிணனுகைத்துச் சிவந்த பேருகிர்ப் பணைத்தா, ளண்ணல் யானை யகுவிதுக ளவிப்ப, கீறடங்கு தெருவினவன் சாறயர் மூதூர்:]

எரி மறிந்தன்ன நாவின்—மேனோக்கியெரிகின்ற நெருப்புச் சாய்ந்தாலொத்த நாவினையும்,

கரு மறி காதின் - வெள்யாட்டுமறிகளை அணிந்த காதினையும்,

† கவை அடி பேய் மகள்—கவைத்த அடியினையுமுடைய பேய்மகள்,

நிணன் உண்டு சிரித்த இலங்கு எயிறு தோற்றம் போல—நிணத்தைத் தின்று சிரித்த விளங்குகின்ற எயிற்றினது தோற்றரவு போல,

பிணன் உகைத்து சிவந்த பெரு உகிர் பணை தாள் அண்ணல் யானை அருவிதுகள் அவிப்ப நீறு அடங்கு தெருவின் ஊர்—தாம் கொன்ற பிணங்களின் தலைகளைக் காலாலேதள்ளிச் சிவந்த பெரிய உகிரினையும் பெருமையையுடைய கால்களையுமுடைய தலைமையையுடையவாகிய யானைகளின் மதவருவி எழுந்ததுகளை அவிக்கையினாலே புழுதியடங்கின தெருவினையுடைய ஊர்,

அவன் சாறு அயர் மூதூர்—அவனுடைய விழாநடக்கின்ற பழைய ஊர்.

202. சேய்த்தும் அன்று சிறிது நணியதுவே—தூரிய இடத்ததுமன்று; சிறிதாக அண்ணிய இடத்ததே.

மூதூர் நணியதென்க.

---

* பதிற்றுப்பத்து, 73.

† "இரும்பே ருவகையி னெழுந்தோர் பேய்மகள், *** கண்டொட் டுண்டு கவையடி பெயர்த்துத், தண்டாக் களிப்பி னாடுங் கூத்துக், கண்டனன்" (மணி. 6: 121-7.)

203-6. [பொருநர்க் காயினும் புலவர்க் காயினு, மருமறை நாவி னந்தணர்க் காயினுங், கடவுண் மால்வரை கண்விடுத் தன்ன, வடையா வாயிலவ னருங் கடை குறுகி:]

பொருநர்க்கு அடையாஆயினும் புலவர்க்கு அடையாஆயினும் அரு மறை நாவின் அந்தணர்க்கு அடையாஆயினும் அரு கடை வாயில் குறுகி—கிணைப் பொருநர்க்கு அடைக்கப்படாவாயினும், அறிவுடையோர்க்கு அடைக்கப்படாவாயினும், அரியவேதத்தை யுடைத்தாகிய நாவினையுடைய அந்தணர்க்கு அடைக்கப்படாவாயினும் ஏனையோர்க்கு உள்ளே சேறற்கரிய தலைவாயிலையணுகி,

அடையாவென்றபன்மை நான்குவாயிலையுங்கருதியது.

கடவுள் மால் வரை கண் விடுத்தன்ன அவன் வாயில்—அதுதான் தெய்வங்களிருக்கின்ற பெருமையையுடைய மேரு ஒரு கண்ணை விழித்துப்பார்த்தாலொத்த அவனுடைய கோபுரவாசல்.

அன்றிப் பொருநர்க்காயினும் புலவர்க்காயினும் அருமறைநாவி னந்தணர்க்காயினும் அடையாவாயிலென்றாற் பொருளின்மையுணர்க.

207. செய் நன்றி அறிதலும்—பிறர் தனக்குசசெய்த நன்றியை யறிந்து அவர்க்குத் தானும் நன்மைசெய்தலையும்,

*சிற்றினம் இன்மையும் — அறிவும் ஒழுக்கமுமில்லாத மாக்கள் திரள் தனக்கு இல்லாமையையும்,

208. இன் முகம் உடைமையும்—நோக்கினார்க்கு இனியமுகத்தை எக்காலமும் உடையனாதலையும்,

இனியன் ஆதலும்—†முகத்தி னினிய நகாஅ அகத்து இன்னாதவனாகாமல் நெஞ்சு முகத்திற்கேற்ப இனியனாதலையும்,

209. செறிந்து விளங்கு சிறப்பின் அறிந்தோர் எத்த—எக்காலமுந் தன்னுடனே செறிந்து விளங்குகின்ற தலைமையினையுடைய பலகலைகளையுணர்ந்தோர் புகழ,

210. அஞ்சினர்க்கு அளித்தலும்—தன்வீரத்தைக்கண்டு அஞ்சிவந்து ‡அடிவீழ்ந்தார்க்கு அருள்செய்தலையும்,

வெ சினம் இன்மையும்—கொடிய சினமில்லாமையையும்,

கோபம் நீட்டித்து நிற்கின்றது சினம்.

211. ஆண் அணி புகுதலும்—வீரர் நின்ற அணியிலேசென்று அவ்வணியைக் குலைத்தலையும்,

§ "ஆண்பா லெல்லா மாணெனற் குரிய" என்றுகூறி, ||"பெண்ணு மாணும் பிள்ளையு மவையே" என்றதனால் ஆணென்றது ஆண்பாலையே யுணர்த்துமேனும் அணி புகுதலென்றதனால் ஈண்டு வீரரையுணர்த்திற்று.

---

* 'சிறியவினமாவது நல்லதன்நலனும் தீயதன்தீமையும் இல்லென்போரும் விடரும்தூர்த்தரும் நடருமுள்ளிட்டகுழு; அறிவைத்திரித்து இருமையுங் கெடுக்குமியல்பிற்று' என்பர் பரிமேலழகர்; திருக்குறள், 46 - ஆம் அதி. அவ.)

† "முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா, வஞ்சனா யஞ்சப் படும்." (திருக்குறள், 824.)

‡ புறநானூறு, 10, 73 - ஆம் பாட்டுக்களைப்பார்க்க.

§ தொல்காப்பியம், மரபியல், 50.

|| " " 69.

அழி படை தாங்கலும் — தனது கெட்ட படையிடத்தே தான்சென்று பகை வரைப் பொறுத்தலையும்,

212. வாள் மீ கூற்றத்து வயவர் ஏத்த — வாள்வலியாலே மேலாகிய சொல்லையுடைய வீரர் புகழ,

213. கருதியது முடித்தலும் — தன்னெஞ்சு கருதிய புணர்ச்சியைக் குறைகிடவாமல் முடிக்கவல்ல தன்மையையும்,

நுகர்தற்குரிய மகளிரை நுகர்ந்து பற்றறாக்காற் பிறப்பறாமையிற் கருதியது முடிக்கவேண்டுமென்றார்.

காமுறு படுதலும் — அங்ஙனம் தானே இன்பமுறாதே அம்மகளிரும் தம்மாலே மிக்கவின்பத்தைப்பெறும் தன்னை விரும்பப்பட்டிருத்தலையும்,

214. ஒரு வழி படாமையும் — அவர்கள் அங்ஙனம் விரும்பினார்களென்று அவர்கள் வசத்தனாகாமையும்,

ஓடியது உணர்தலும் — தான் அவர்வசத்தனாகாமையின் அவர் வருந்திய தன்மையையுணர்ந்து அவரைப்பாதுகாத்தலையும்,

இனி அவர்கள் நெஞ்சில் நிகழ்ந்ததனையுணர்ந்து அவர் குறைமுடித்தலென்றுமாம்.

215. அரி ஏர் உண் கண் அரிவையர் ஏத்த — செவ்வரிபொருந்தின மையுண்கண்ணினையுடைய மகளிர்புகழ,

216. அறிவு மடம் படுதலும் — தான்கூறுகின்றவற்றையுணரும் அறிவில்லாதார்மாட்டுத் தான் அறியாமைப்பட்டிருத்தலையும்,

அறிவு நன்கு உடைமையும் — தன்னைப்போல அறிவுடையார்மாட்டு நன்றாக அறிவுடையனாயிருத்தலையும்,

*"ஒளியார்முன் னொள்ளிய ராதல் வெளியார்முன், வான்சுதை வண்ணங் கொளல்" என்றார்பிறரும்.

217. வரிசை அறிதலும் — பரிசிலருடைய தரமறிந்து அவர்பெறுமுறைமையே கொடுத்தலையும்,

கொடுத்தல் இதற்குங்கூட்டுக.

வரையாது கொடுத்தலும் — அங்ஙனம் கல்விமிகுதியில்லாத பரிசிலர்க்குக் கொடாதிருத்தலை மேற்கொள்ளாதே அவர்களளவிற்குத் தக்கனவற்றைக் கொடுத்தலையும்,

இனித் தனக்கென ஒன்றும் வரைந்துவையாமற் கொடுத்தலென்றுமாம்.

218. பரிசில் வாழ்க்கை பரிசிலர் ஏத்த — பிறர்கையிலேற்ற பொருளால் இல்வாழ்க்கை நடத்துதலையுடைய பாணர் கூத்தர் முதலியோர் புகழ,

219. பல் மீன் நடுவண் பால் மதிபோல பலமீன்களுக்கு நடுவிருந்த பால் போலும் ஒளியையுடைய கலைநிறைந்த மதிபோல,

220. இன் நகை ஆயமோடு இருந்தோன் குறுகி — இயலிசைநாடகத்தாலும் இனிய மொழிகளாலும் இனியமகிழ்ச்சியைச் செய்யும் திரளோடே இருந்தவனையணுகி,

கலைகள் நிறைந்திருந்தமைபற்றித் தலைவற்கு ஈண்டு மத உவமையாயிற்று.

221-2. பைங்கண் ஊகம் பாம்பு பிடித்தன்ன அம் கோடு செறிந்த அவிழ்ந்து வீங்கு திவவின் — பசியகண்களையுடைய கரியகுரங்கு பாம்பின்றலை

* திருக்குறள், 714.

யைப் பிடித்தகாலத்து அப்பாம்பு ஒருகாலிறுகவும் ஒருகால் நெகிழவும் அதன் கையைச் சுற்றுமாறுபோன்ற அழகினையுடைய தண்டிடத்தே செறியச் சுற்றின நெகிழவேண்டுமிடத்து நெகிழ்ந்தும் இறுகவேண்டுமிடத்து இறுகியும் நரம்பு துவக்கும் வார்க்கட்டினையும்,

223. [மணிநிரைத் தன்ன வனப்பின்வா யமைத்து:]

மணி நிரைத்தன்ன வனப்பின்—இரண்டுவிளிம்புஞ் சேரத்தைத்துமுடுக்கின ஆணிகளாலே மணியை நிரைத்துவைத்தாலொத்த அழகினையும்,

வாயமைத்து—பொருந்தப்பண்ணி,

224. வயிறு சேர்பு ஒழுகிய வகை அமை அகளத்து—வயிறுவேர்ந்து ஒழுங்குபட்ட தொழில்வகை யமைந்த பத்தரினையும்,

வயிறு - பத்தரினடு. தாழிபோலப் புடைபட்டிருத்தலின், அகளமென்றார்.

225-6. கானம் குமிழின் கனி நிறம் கடுப்ப புகழ் வினை பொலிந்த பச்சையொடு—காட்டிடத்துக் குமிழினுடைய பழத்தினது நிறத்தையொப்பப் புகழப்படுந் துவரூட்டின கைத்தொழிலாற் பொலிவுபெற்ற போர்வையோடே,

226-7. [தேம்பெய், தமிழ்துபொதிந் திலிற்று மடங்குபுரி நரம்பின்:]

தேம் பெய்து புரி அடங்கு நரம்பின்—தேனொழுகுகின்ற தன்மையைத் தன்னிடத்தே பெய்துகொண்டு முறுக்கடங்கின நரம்பினையுமுடைய,

அமிழ்து பொதிந்து இலிற்றும் நரம்பு—அமிழ்தத்தைத் தன்னிடத்தே பொதிந்து துளிக்கும் நரம்பு,

இஃது ஓசையினிமைக்குக் கூறிற்று. *"தீந்தே, னணிபெற வொழுகி யன்ன வமிழ்துறழ் நரம்பி னல்யாழ்" என்றார் பிறரும்.

228. பாடு துறை முற்றிய—நீர் பாடுந்துறைகளெல்லாம் முடியப்பாடுதற்கு,

முற்றிய - செய்யியவென்னும் வினையெச்சம்

228-9. பயன் தெரி கேள்வி கூடு கொள் இன் இயம்—தனது பயன் விளங்குகின்ற இசைகளைத் தான் கூடுதல்கொண்ட இனியயாழை,

பச்சையோடே (226) வாயமைக்கப்பட்டு வனப்பினையும் (223) நிவவினையும் (222) அகளத்தினையும் (224) நரம்பினையுமுடைய (227) இன்னியமென முடிக்க.

229-30. [குரல்குர லாக, நூனெறி மரபிற் பண்ணி:] நூல் நெறி மரபின் குரல் குரல் ஆக பண்ணி—இசைநூல் கூறுகின்ற முறைமையாலே செம்பாலையாக வாசித்து,

பாடு துறை முற்றுதற்கு இன்னியத்தைக் குரல் குரலாகப் பண்ணியென முடிக்க.

230-31. [ஆனாது, முதுவோர்க்கு முகிழ்த்த கையினை யெனவும்:] முதுவோர்க்கு ஆனாது முகிழ்த்த கையினை எனவும்— †அரசன் உவாத்தியாயன்

---

* சீவகசிந்தாமணி, 722.

† அரச னுவாத்தியான் றாய்தந்தை தம்மு, னிகரில் குரவ ரிவரிவரைத், தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே, யாவருங் கண்ட நெறி." (ஆசாரக்கோவை, 17)

தாய் தந்தை தம்முன்முதலியோர்க்குப் பலகாலுங் குவித்த கைகளையுடையை யென்றும்,

232. இளையோர்க்கு மலர்ந்த மார்பினை எனவும்—வீரரெறிதற்கு மன மகிழ்ந்து கொடுத்த மார்பினையுடையையென்றும்,

*"விருந்தாயினை யெறிநீயென விரைமார்பகங் கொடுத்தாற், கரும்பூணற வெறிந்தாங்கவ னினதூழினி யெனவே" என்றார் பிறரும்.

இளையோர் மகளிருமாம்.

†"வணங்குசிலை பொருதநின் மணங்கம ழகல, மகளிர்க் கல்லது மலர்ப் பறி யலைவே", ‡"மகளிர் மலைத்த லல்லது மள்ளர், மலைத்தல் போகிய சிலைத் தார் மார்ப" என்றார்.

233. ஏரோர்க்கு நிழன்ற கோலினை எனவும்—ஏரினையுடைய குடிமக்க ளுக்கு நிழல் செய்த செங்கோலையுடையையென்றும்,

234. தேரோர்க்கு அழன்ற வேலினை எனவும்—தேரினையுடைய அரசர் க்கு வெம்மை செய்த வேலையுடையை யென்றும்,

235. நீ சில மொழியா அளவை—° சிலபுகழினைக் கூறுதற்கு முன்னே,

235-6. [மாசில், காம்புசொலித் தன்ன வறுவை யுடீஇ.] காம்பு சொலி த்தன்ன மாசு இல் அறுவை உடீஇ—மூங்கில் ஆடையையுரித்தாலொத்த மாசில் லாத உடையினை உடுக்கப்பண்ணி,

இனி மூங்கின்முளையிற் பட்டையுமாம்.

237. பாம்பு வெகுண்டு அன்ன தேறல் நல்கி—§பாம்பேறி மயக்கினாற் போல மயக்கின கட்டெளிவைத் தந்து,

238-10. [காவெரி யூட்டிய கவர்கணை தூணிப், பூவிரி கச்சைப் புக ழோன் றன்முன், பனிவரை மார்பன் பயந்த:] கா எரி ஊட்டிய கணை கவர் தூணி பூ விரி கச்சை புகழோன் தன்முன் பனிவரை மார்பன் பயந்த—சாண்டவ வனத்தை நெருப்புண்ணும்படியெய்த கணையை உள்ளடக்கின ஆவநாழிகை யினையும் பூத்தொழில் பரந்த கச்சையினையுமுடைய அருச்சுனன் தமையனாகிய இமவான்போலுமார்பனான வீமசேனன் கண்ட,

240-41. நுண் பொருள் பனுவலின் வழாஅ பல் வேறு அடிசில்—கூரியபொருளையுடைய மடைநூனெறியிற் றப்பாத பலவேறுபாட்டையுடைய அடிசிலை,

242-4. [வாணிற விசும்பிற் கோண்மீன் சூழ்ந்த, விளங்கதிர் ஞாயி றெள் ளுந் தோற்றத்து, விளங்குபொற் கலத்தில்:] விசும்பில் வாள் நிறம் கோள் மீன் சூழ்ந்த இள கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து விளங்கு பொன் கலத்தில்—ஆகாயத்தில் ஒளியையுடைத்தாகிய நிறத்தினையுடைய கோளாகிய மீன்கள் சூழ்ந்த இளைய கிரணங்களையுடைய ஞாயிற்றை இகழுந் தோற்றரவையுடைய விளங்குகின்ற பொற்கலத்திடத்தே,

விரும்புவன பேணி—நீவிரும்புவனவற்றை விரும்பியுட்கொண்டு,

245. ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டி—நும்மிடத்து மிகுகின்ற விருப்பத்தாலே தான் நின்று உண்ணப்பண்ணி,

---

* சீவகசிந்தாமணி, 2265. † பதிற்றுப்பத்து, 63.
‡ புறநானூறு, 10. § பாம்பு - பாம்பின்விடம்.

ஆனாமரபினென்றும் பாடம்.

நீ சிலமொழியாவளவை(235) விரும்புவன பேணி(244) உடீஇ (236) நல்கி (237) அடிசிலைக் (241) கலத்தேயிட்டுத் (214) தான்நின்று ஊட்டியென்க.

246. திறல் சால் வென்றியொடு தெவ்வு புலம் அகற்றி—வலியமைந்த வெற்றியோடே பகையைத் தத்தம் நிலத்தைக் கைவிட்டுப் போகப்பண்ணி,

247. விறல் வேல் மன்னர் மன் எயில் முருக்கி – வெற்றியையுடைத் தாகிய வேலினையுடைய முடிவேந்தர்மன்னும் அரண்களை யழித்து,

248. நயவர் பாணர் புன்கண் தீர்த்தபின் — அவ்விடங்களிற்பெற்ற பொருளாலே விரும்பிவந்தவர் புன்கண்மையையும், பாணர் புன்கண்மையையும் போக்கினபின்பு,

249. வயவர் தந்த வான் கேழ் நிதியமொடு – தன்படைத்தலைவர் மிக்கன வாய்க் கொண்டுவந்துதந்த நன்றாகிய நிறத்தினையுடைய பொருட்டிரளுடனே,

தன்படைத்தலைவர், குறுநிலமன்னரையும் அரசரையுமழித்து நயவர்க்கும் பாணர்க்குங்கொடுத்து மிக்குக்கொண்டுவந்த நிதியமென்க.

250-51. [பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி, யுருவ வான்மதி யூர்கொண்டாங்கு:] பருவ வானத்து உருவ வான் மதி பால் கதிர் பரப்பி ஊர்கொண்டாங்கு—கூதிர்க்காலத்தையுடைய வானிடத்தே வடிவுநிறைதலையுடைய வெள்ளிய மதி பால்போலுங்கிரணங்களைப் பரப்பிப் பரத்தலைக் கொண்டாற்போல,

252-3. கூர் உளி பொருத வடு ஆழ் நோன் குறடு ஆரம் சூழ்ந்த அயில்வாய் நேமியொடு - கூரிய சிற்றுளிகள் சென்று செத்தின உருக்களழுந்தின வலியினையுடைய குறட்டிடத்திற்றைத்த ஆர்களைச்சூழ்ந்த சூட்டினையுடைய உருளையோடே,

குறடு - அச்சுக்கோக்குமிடம். அயில்வாய் - கூரியவாய்; என்றது சூட்டிற்கு ஆகுபெயர்.

254-5. [சிதர்நனை முருக்கின் சேணோங்கு நெடுஞ்சினைத், ததர்பிணியவிழ்ந்த தோற்றம்போல:] முருக்கின் சேண் ஓங்கு நெடு சினை ததர் நனை சிதர் பிணி அவிழ்ந்த தோற்றம் போல—முருக்கினுடைய விசும்பிலே செல்ல வளர்ந்த நெடியகொம்பிற் செறிந்த அரும்புகள் வண்டிற்குப் பிணியவிழ்ந்த தோற்றரவுபோல,

ததர் - கொத்துமாம். சிதர் - சிந்துதலுமாம்; சிச்சிலியுமாம்.

256-8. [உள்ளரக் கெறிந்த வுருக்குறு போர்வைக், கருந்தொழில் வினைஞர் கைவினைமுற்றி, யூர்ந்துபெயர் பெற்ற வெழினடைப் பாகரொடு:]

கரு தொழில் வினைஞர் கை வினை முற்றி உருக்குறு அரக்கு உள் எறிந்த போர்வை பாகர்—வலிய தொழிலைச்செய்யுந் தச்சருடைய கையாற்செய்யும் உருக்களெல்லாம் முற்றுப்பெற்று உருக்கப்படுஞ் சாதிலிங்கம் உள்ளேநிரம்ப வழித்த பலகையையுடைய பாகர்,

தேர்த்தட்டுவெளி மறையப் பாவின பலகையைப் போர்வையென்றார். அதன் மேலே சுற்றுச்சுவராகப் பலகையாற்செய்த சுவரைப் பாகரென்றார். பாகரையுடையதேரைப் பாகரென்றார், ஆகுபெயரால்.

ஊர்த்து பெயர் பெற்ற எழில் நடை பாகரொடு—எறிப்பார்த்து உண்மை யாக ஓட்டமுண்டென்று பெயர்பெற்ற அழகினையுடைத்தாகிய நடையினை யுடைய தேரோடே,

மேமியேடே (253) போர்வையையுடைய (256)) பாகரெனமுடிக்க.

259-60. மா செலவு ஒழிக்கும் மதன் உடை கோன்முன் வான் முகம் பாண்டில்—தன்செலுமையாற் குதிரையின்செலவைப் பின்னேகிறுத்தும் வனப் புடைத்தாகிய வலியினையுடைய தாளினையும், ஒளியினையுடைத்தாகிய முகத் தினையுமுடைய தாரையெருத்தையும்,

260. வலவனெடு—அதன்மீச்செலுத்தும் பாகனோடு,

260-61. [தரீஇ, யன்றே விடுக்குமவன பரிசில்] பரிசில் தரீஇ அவன் அன்றே விடுக்கும — யானை குதிரை அணிகலமுநலியபரிசில்கொடுத்து அவன் அன்றேவிடுக்கும்.

திதியத்தோடே (249) பாகரோடே (258) வலவனோடே பாண்டிலையும் (260) பரிசிலையுச் (261)தரீஇ (260) அவன் அன்றேவிடுக்குமென முடிக்க.

261-3. மெல் தோள் துயில் அணி அல்குல் துளகரு இயல் மகளிர் அகில் உண விரிந்த அம மெல் கூந்தலின—மெல்லிய தோளினையும், துகில் சூழ்ந்த அல்குலினையும், அசைந்த இயல்பினையுமுடைய மகளிர் அகிற்புகையை உண்ணும்படியாக விரிந்த அழகையுடைய மெல்லிய கூந்தல்போலே,

264-5. [மணிமயிற் கலாப மஞ்சிடைப் பரப்பிய, துணிமழை வெழுச் துயல்கழை நெடுங்கோட்டு]

துணி மழை மணி மயில் கலாபம் இடை மஞ்சு பரப்பி தவழும் கோடு— தெளிந்தமேகம் நீலமணிபோலும் மயிலினுடைய விரிந்த தோகைக்கு நடுவே தனது மஞ்சைப்பரப்பி தவழுமலை,

சிறிதுநீர் உட்கொண்டு பக்கம் வெள்ளியமாசாயிருந்தலின், மேகம் மஞ் சைப்பரப்பியென்றார்.

இனி 'மணிமயில் கலாபம்' என்று பாடமாயின, மயில் தன்கலாபத்தை மஞ்சிடையிலே பரப்புதலைச்செய்து துயல்கோடெனக. துயலல் - ஆடுதல்.

துயல் கழை நெடு கோடு—அசைகின்ற மூங்கிலையுடைய நெடிய மலை யிடத்தையுடைய குறிஞ்சி (267)

266. [எறிந்துரு மிறந்த வேற்றருஞ் சென்னி] ஏற்ற அரு உரும் எறிந்து இறந்த சென்னி கோடு (267)—ஏறுதற்கெழில் அரிதாகிய உருமேறு தான் ஏறுதற்காக இடித்து வழிபாக்கிப்போன சிகரத்தையுடையமலை

இக்குறிஞ்சியேற்றரிதெனப.

267. குறிஞ்சி கோமான்—குறிஞ்சியாகிய ஒழுக்கத்தையுடைய நில தலைவற்கு அரசன்,

267-9. கொய் தளிர் கண்ணி செல் இசை நிலைஇய பண்பின் கல்லியக் கோடனை—கொய்யப்பட்ட தளிர்விரவின மாலையினையும, பிறரிடத்து நில்லாமற் போன்ற புகழ் தன்னிடத்தே நிற்றற்குக் காரணமான குணத்தினையுமுடைய கல்லியக்கோடனை,

269. நயந்தனிர் செலின் —விரும்பிச்செல்லின்,

முதுவாயிரவல (40) பெருமகன் (122) புரவலனாகிய (125) நல்லியக்கோடனை நயந்தகொள்கையோடே (126) முன்னாட்சென்றனமாக, இந்நாள் (129) அழிபசிவருத்தம்வீட (140) யானையோடே தேரெய்தி (142) யாம் அவணின்றும்வருகின்றேம்; இனி நீயிரும் (143) மூவேந்தரிடத்துச் செல்குவிராயின் (145) வஞ்சியும் வறிது; அதுவன்றி (50) மதுரையும்வறிது; அதுவன்றி (67) உறந்தையும் வறிது; அதுவன்றி (83) எழுவர்பூண்ட ஈகைச்செந்நுகம் (113) ஒருதான்றாங்கிய (115) குறிஞ்சிக் கோமானாகிய (267) நல்லியக்கோடனை நயந்தனிர்செலின் (269) வழியிற் பெறுமவற்றை யாங்கூறக்கேண்மின்; பட்டினம்படரின் (153) வயின் வயிற்பெறுகுவிர் (163); அதன்பின்னர் வேலூரெய்தின் (173) அமைவரப் பெறுகுவிர் (177); அதன்பின்னர் அவன் ஆமூரெய்திற் (188) கலவையொடுபெறுகுவிர் (195); அவற்றைப்பெற்றபின், அவன் மூதூர் (201) சேய்த்துமன்று; சிறிது நணியதுவேயாயிருக்கும் (202); ஆண்டுச்சென்று முன்னர் அவன் கடைவாயிலைக்குறுகிப் (206) பின் அறிந்தோரேத்த (209) வயவரேத்த (212) அரிவையரேத்தப் (215) பரிசிலரேத்த (218) இருந்தோனையணுகிப் (220) பாடுதுறைமுற்றுதற்கு (228) இன்னியத்தைப் (229) பண்ணிக் (230) கையினையென்றும் (231) மார்பினையென்றும் (232) கோலினையென்றும் (233) வேலினையென்றும் (234) சீலமொழியா அளவை (235) அவன் (261) நீவிரும்புவனபேணி (244) உடீஇ (236) நல்கி (237) அடிசிலைக் (241) கலத்தேயிட்டுத் (244) தான்நின்று ஊட்டி (245) நிதியத்தோடே (249) பாகரோடே (258) வலவனோடே பாண்டிலையும் (260) பரிசிலையும் (261) தரீஇ (260) அன்றேவிடுக்கும் (261) என வினைமுடிவுசெய்க.

*ஓய்மாநாட்டு நல்லியக்கோடனை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார்பாடிய சிறுபாணாற்றுப்படைக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்தவுரை முற்றிற்று.

வெண்பா.

1 அணியிழையார்க் காரணங் காகிமற் றந்நோய்
தணிமருந்துந் தாமேயா மென்ப—மணிமிடைபூ
ணிம்மென் முழவி னெயிற்பட் டினநாடன்
செம்மல் சிலைபொருத தோள்.

2 நெடுவரைச் சந்தன நெஞ்சங் குளிர்ப்பப்
படுமடும் பாம்பேர் மருங்கு—*விடுகொடி
யோடிய †மார்ப னுயர்நல் லியக்கோடன்
சூடிய கண்ணி சுடும்.

* 'ஏறுமாநாடு' என்றும் பிரதிபேதமுண்டு.

† 'இடுகிடையாய்' என்றும் பாடம். ‡ 'மார்பின்' என்றும் பாடம்.

பெரும்பாணாற்றுப்படை



இலைவிரி மிசும்பிற் பாயிருள் பருகிப்
பனைகான் றெழுதரு பலகதிர்ப் பருதி
காய்கின நிருகிய கடுக்திறல் வேனிற்
பாலில் பொழிதக பரா அரைப் பாதிரி
வள்ளிதழ் மாமலர் வயிற்றிடை வகுத்தன
னுள்ளகம் புரையு மூட்டுறு பச்சைப்

---

* பெரும்பாணர் - குழலர் பாணர்முதலாய பெரிய இசைக்காரர்; (சில. 5 37. அடியார்.); "பெரும்பாணிருக்கையும்" (மது 342.)

1. சுற்சிடி பதின்மூன்றெழுதலில்லாததற்கும் (தொல் செய். சூ 50 - இள), சேரும் கிரையுமொன்றி லேரொன்றரியத்தினை கிரைபொன்றரி யத்தினையுதற்கும் (ஷெ ஷெ ஷெ 56 - பேர். உ) இவ்வடி மேற்கோள்.

2. "பகலுங்கியதுபோலப் படுகுடர் கல்சேர" (கலி. 119 - உ.) என்பதற் கும், 'கதிர் சுற்றியும் - சேணகலினைக் கக்கியும்' (கல். செய் "கண்ணியபாதி" யியலை.) எ - ம், 'கான்று என்னுமிடக்கர் அணிருறிதலுப் பிறிதொரு பொருண்மேல் கிற்றலின் மறைக்கப்படாது; தன்பொருண்மேல் சின்றுழி மறைக்கப்படும்' (தொல். எச்ச. சூ. 47 - சே. உ, நன் - வி சூ 267; இ - வி. சூ. 168; நன். சூ. 267 - இராமானுச) எ - ம் இது மேற்கோள்

1 - 2. அடியெதுகைக்கும் வழக்கொடுபட்ட மரபு பிறழவும் செய்யுளின் பம்படின் அவ்வாறு செய்க (தொல். செய். சூ 93, ஷெ மர சூ 1 - உரை.) எ - ம், செய்தென்னும்வாய்பாடு செய்யாவினவெனச சிறபான்மை கிழ்காலப் பொருளிலும் வரும் (தொல். வினை சூ 31 - உ; இ - வி. சூ 246· கல். செய். "பாய்மிசை", "கண்டகாட்சி" யியலைறும்.) எ - ம், கட்டளையடிச்சிர்வஞ்சியடி தொடுத்த அடியெதுகைக்கும் (தொல். செய் சூ. 93 - உ.) சமநிலையென்னுமலங் காரத்திற்கும் (தண்டி. பொது. 25; இ - வி சூ. 635) இவ்வடிகள் மேற் கோள். "வெயில்கான்றிருஞ்சிந்தெழுவெங்கதிர்ச்செல்வன்" (கூ. சீம. இராவண வதை. 17) விட்டுவிளாதனிலக்கணக்கு இவ்வடிகள் உதாரணமாகக்காட்டப் படும்; (நன்.சூ.269 - இராமானுச.)

[illegible]

பரியரைக் கமுகின் பாளையம் பசும்பூக்
கருவிருந் தன்ன கண்கூடு செறிதுளை
யுருக்கி யன்ன பொருத்துறு போர்வைச்
சுனைவறந் தன்ன விருடூங்கு வறுவாய்ப்
பிறைபிறந் தன்ன பின்னேந்து கவைக்கடை
நெடும்பணைத் திரடோண் மடந்தை முன்கைக்
குறுந்தொடி யேய்க்கு மெலிந்துவீங்கு திவவின்
மணிவார்ந் தன்ன மாயிரு மருப்பிற்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
றொடையமை கேள்வி யிடவயிற் றழீஇ
வெந்தெறற் கனலியொடு மதிவலந் திரிதருந்
தண்கடல் வரைப்பிற் றாங்குநர்ப் பெறாது
பொழிமழை துறந்த புகைவேப் குன்றத்துப்
பழுமரந் தேரும் பறவை போலக்
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண
பெருவறங் கூர்ந்த கானங் கல்லெனக்
கருவி வானந் துளிசொரிந் தாங்குப்

---

7. பா. பாளையின்பசும்பூ, பாளையின்பசுங்காய்.

8. பா. சிறுதுளை.

7 - 8. அன்ன, மெய்யுவமவுருபு; (தொல். உவம. சூ. 13 - இள. மேற்.)

9. 'விசியுறுபோர்வை' என்பதற்குத் தெரியாமற் போர்த்தபோர்வை யெனப் பொருள்கூறி இவ்வடியைமேற்கோள்காட்டினர்; (சீவக. 559 - ந.)

10. வறுவாய்: பொருந. 12.

13. ஏய்க்குமென்பது, உவமவுருபு (தொல். உவம. சூ. 17 - இள) எ - ம், வினையுவமவுருபு (ஷை. ஷை. ஷை. 12 - பேர்.) எ - ம் இது மேற்கோள்.

12 - 3. பொருந. 14 - 5; மலை. 21.

15 - 6. சிறுபாண். 34 - 5 ஆம் அடிகளின்குறிப்பைப்பார்க்க.

17. பா. வெங்கதிர்க்கனலி, வெந்திறற்கனலி.

18. பா. தண்கடல்வையத்து.

17 - 8. முக்காலத்துமுள்ள இயல்பையுடையபொருளை நிகழுங்காலத்து மெய்ந்நிலைப்பொதுச்சொல்லாற்சொல்லவேண்டும் (தொல். வினை. சூ. 43 - ந; இ - வி. சூ. 303.) என்பதற்கு இவை மேற்கோள்.

20. பொருந. 64 - ஆம் அடிக்குறிப்பைப்பார்க்க.

24. பா. தளிசொரிந்தாங்கு.

பழம்பசி கூர்ந்தவெம் மிரும்பே ரொக்கலொடு
வழங்கத் தவாஅப் பெருவள னெய்தி
வாலுளைப் புரவியொடு வயக்களிறு முகந்துகொண்
டியாமவ ணின்றும் வருது நீயிரு
மிருநிலங் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறங்கடை யந்நீர்த்
திரைதரு மரபி னுரவோ னும்பன்
மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கு
முரசுமுழங்கு தானை மூவ ருள்ளு
மிலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பி
னல்லது கடிந்த வறம்புரி செங்கோற்
பல்வேற் றிரையற் படர்குவி ராயிற்
கேளவ னிலையே கெடுகநின் னவல
மத்தஞ் செல்வோ ரலறத் தாக்கிக்
கைப்பொருள் வெளவுங் களவோர் வாழ்க்கைக
கொடியோ ரின்றவன் கடியுடை வியன்புல
முருமு முரறு தரவுந் தப்பா
காட்டுமாவு முறுகண் செய்யா வேட்டாங்
கசைவுழி யசைஇ நசைவுழித் தங்கிச்
சென்மோ விரவல சிறக்கநின் னுள்ளங்
கொழுஞ்சூட் டருந்திய திருந்துநிலை யாரத்து
முழவி னன்ன முழுமர வுருளி
யெழூஉப்புணர்ந் தன்ன பரூஉக்கை நோன்பார்
மாரிக் குன்ற மழைசுமந் தன்ன
வாரை வேய்ந்த வறைவாய்ச் சகடம்

---

25. பா. என்னிரும்பேர்.
28. மு. சிறுபாண். 143; மலை. 53.
27 - 8. சிறுபாண். 142 - 3 ஆம் அடிகளின்குறிப்பைப்பார்க்க.
30. பா. புறங்கடை.
33=பொருந. 54; மு. புறநா. 35 - அடி 4.
36. பா. அல்லவை.
38=மது. 208.
39 - 44. சருத்து: மலை. 17 - 8; சில. 12. 5 - 13.
50=மு. அகநா. 301 - அடி. 7. பா. வார்வைவேய்ந்த.

வேழங் காவலர் குரம்பை யேய்ப்பக்
கோழி சேக்குங் கூடுடைப் புதவின்
முனையெயிற் றிரும்பிடி முழந்தா ளேய்க்குந்
துளையரைச் சீறுர றாங்கத் தூக்கி
நாடக மகளி ராடுகளத் தெடுத்த
விசிவீங் கின்னியங கடுபபக் கயிறுபிணித்துக்
காடி வைதத கலனுடை மூக்கின்
மகவுடை மகடூஉப் பகடுபுறந் துரப்பக்
கோட்டிணர் வேம்பி னேட்டிலை மிடைந்த
படலைக் கண்ணிப் பரேரெறுழ்த திணிதோண்
முடலை பாகதை முழுவலி மாக்கள
சிறுதுளைக கொடுதுக நெறிபட நிரைதத
பெருங்கயிற் றொழுகை மருங்கிற் காப்பச்
சில்பத வுணவின் கொள்ளை சாற்றிப்
பல்லெருத துமணர் பதிபோகு நெடுநெறி
யெலலிடைக கழியுநர்க் கேம மாக
மலையவுங் கடலவு மாண்பயந தரூஉ
மரும்பொரு ளருததுந் திருநதுதொடை நோன்றா
ளடிபுதை யரண மெப்திப படம்புக்குப்
பொருகணை தொலைசசிப புண்டீர் மார்பின்
விரவுவரிக் கச்சின் வெண்கை யொள்வாள்
வரையூர பாம்பிற் பூண்டுபுடை தூங்கச
சுரிகை நுழைநத சுற்றுவீங்கு செறிவுடைக
கருவி லோசசிய கண்ணக னெறுழ்ததோட்
கடம்பமா நெடுவே ளன்ன மீளி
யுடம்பிடித தடககை யோடா வம்பலா
தடவுநிலைப் பலவின் முழுமுதற் கொண்ட

---

52. பா. கூட்டுடை.

60 - 61. மு நெடுநல். 31 - 2.

63 - 5. ஒழுகையும் உமணரும் · சிறுபாண். 55.

69. படம்புகுதல். முல்லை. 66.

73. "சுரிகையம்பூங்கசசிடைக்கோததுவாங்கி" (சீவக. 698. மேற்.)

75. கடம்பமர்நெடுவேள்: முருகு. 225 - ஆம அடிக்குறிப்பைப்பார்க்க.

75 - 6. உவமையிற் பால்மயங்கியதற்கு இவை மேற்கோள் (நொல் உவம. சூ. 6 · பேர்.)

சிறுகளைப் பெரும்பழங் கடுப்ப நெரியற்
புனர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறக்
தனார்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கு
முல்குடைப் பெருவழிக் கவலைக் காக்கும்
வில்லுடை வைப்பின் வியன்காட் டியவி
னீளரை யிலவத் தலங்குசினை பயந்த
பூளையம் பசுங் [illegible]ரிக் தன்ன
ணிப்புற வணிலொடு கருப்பை யாடா
தியாற்றறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல்
வேற்றலை யன்ன வைந்நுதி நெடுந்தக
ரீத்திலை வேய்ந்த வெப்புறக் குரம்பை
மான்றோற் பள்ளி மகவொடு முடங்கி
யீன்பிண வொழியப் போகி நோன்கா
ழிரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோ
லுளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி
யிருநிலக் கரம்பைப் படுநீ ருடி
நுண்பு லடக்கிய வெண்ப லெயிற்றியர்

---

78. பா. கடுப்பநெறியல், கடுப்பமிரியல்.

79 - 80. பா. நோன்புறக்கணர்ச்செவி.

83. பா. நீள்வரை.

83 - 5. இலவங்காய் அணிலுக்கு உவமை (சீவக. 1701.)

87. "கருவிநுதிகொணெறியிலையீந்து" (கல். செய். "பொருப்பு")

88. தொல். மரபு. சூ. 87 - உரை, மேற்.

87 - 8. பா. நெடுந்தோட்டீந்திலை, நெடுந்திடரீத்திலை

85 - 8. "ஈந்துமேய்ந்திடைக், கருப்பையாடாக்குடில்களுல்வ" (ஆனைக் காப்பு. நாடு 102.)

83 - 8. (தொல். உவம. சூ. 34 - உரை, மேற்.)

89. மான்றோற்பள்ளி: "வரியதட் படுத்த சேக்கைத் தெரியிழை" (அகநா. 58 - 4.) மகவென்பது மக்களில் ஆண்பாலினமைப்பெயர்: (தொல் மரபு. சூ. 23 - உரை, மேற்.)

88 - 9. ஈத்திலைவேய்ந்தகுரம்பை, தோற்பள்ளி: (மது. 310.)

90. பிணா உயர்திணைப்பெண்பான்மரபுப்பெயர்: (தொல். மரபு. சூ. 61 உரை, மேற்.)

93. பா. இருநிலக்கரம்பை.

94. பா. நுண்புலடுக்கிய.

பார்வை யாத்த பறைதான் வினவி
னீழன் மூன்றி னிலவுரற் பெய்து
குறுங்கா ழுலக்கை யோச்சி நெடுங்கணைத்து
வல்லுரற் றுவரி தோண்டித் தொல்லை
மூவுவாய்க் குழிசி முரியடுப் பேற்றி
வாரு தட்ட வாடுன் புழுக்கல்
வாடாத் தும்பை வயவர் பெருமக
னேடாத் தானை யொண்டொழிற் கழற்காற்
செவ்வரை நாடன் சென்னிய மெனினே
தெய்வ மடையிற் றேக்கிலைக் குவையிறும்
பைதீர் கடும்பொடு பதமிகப் பெறுகுவிர்
மானடி பொறித்த மயங்கதர் மருங்கின்
வான்மடி பொழுதி னீர்நசைஇக் குழித்த
வகழ்சூழ் பயம்பி னகத்தொளித் தொடுங்கிப்
புகழா வாகைப் பூவி னன்ன
வினைமருப் பேனம் வரவுபார்த் திருக்கு
மரைகாள் வேட்ட மழுங்கிற் பகனட் .
பகுவாய் ஞமலியொடு பைம்புத லெருக்கித்
தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி
மூள்ளரைத் தாமரைப் புல்லிதழ் புரையு
நெடுஞ்செவிக் குறுமுயல் போக்கற வினைஇக்
கடுங்கட் கானவர் கடறுகூட் டுண்ணு
மருஞ்சுர மிறந்த வம்பர்ப் பருக்குபட

---

95. பா. பறைத்தான்.

89 - 96. தொழிற்றன்மையணி : (தண்டி. பொருளணி. சூ. 3 மேற்.)

97. ஒச்சி - குத்தி; (பெரும்பாண். 118.)

100. பா. ஆருதட்ட.

102. ஒடாத்தானை : "ஒடாததானையுருமுக்குரலோடையானை" (சீவக. 7); "ஒடாததானை ரனனென் றனனெருவன்" (நள. சுயம். 18.) பா. ஒண் பொறிச்.

104. இலை - மரத்தறப்பினைச்சொல்லும்வாய்பாடு; (தொல். மரபு. சூ. 87 - உரை. ஈ. மேற்.)

103 - 5. ஒத்தகருத்து : மலை. 164 - 9.

107. பா. 'வானமடி' என்றும் கொள்ள இடமுண்டு:

110. பா. வினையெயிற்றேனவரவு.

117. பா. இதற்றவும்பர்.

வொன்னாத் தெவ்வர் நடுங்க வோச்சி
வைந்நுதி மழுங்கிய புலவுவா யெஃகம்
வடிமணிப் பலகையொடு நிரைஇ முடிநாட்
சாபஞ் சார்த்திய கணைதுஞ்சு வியனக
ரூகம் வேய்ந்த வுபர்நிலை வரைப்பின்
வரைத்தேன் புரையுங் கவைக்கடைப் புதையொடு
கடுந்துடி தூங்குங் கணைக்காற் பந்தர்த்
தொடர்நா யாத்த துன்னருங் கடிநகர்
வாழ்முள் வேலிச் சூழ்மிளைப் படப்பைக்
கொடுநுகந் தழீஇய புதவிற் செந்நிலை
நெடுநுதி வயக்கழு நிரைத்த வாயிற்
கொடுவி லெயினர் குறும்பிற் சேப்பிற்
களர்வள ரீந்தின் காழ்கண் டன்ன
சுவல்விளை நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி
ஞமலி தந்த மனவுச்சூ லுடும்பின்
வறைகால் யாத்தது வயின்றொறும் பெறுகுவிர்
யானை தாக்கினு மரவுமேற் செலினு
நீனிற விசும்பின் வல்லேறு சிலைப்பினுஞ்
சூன்மகண் மாறா மறம்பூண் வாழ்க்கை
வலிக்கூட் டுணவின் வாட்குடிப் பிறந்த
புலிப்போத் தன்ன புல்லணற் காளை
சென்னா யன்ன கருவிற் சுற்றமொடு
கேளா மன்னர் கடிபுலம் புக்கு
நாளா தந்து நறவுநொடை தொலைச்சி

---

121. பா. சாத்திய.

132. "மனாவனைய மென்சூன் மடவுடும்பு" (சீவக. 2781.) ஞமலி, திசைச்சொல் : (தொல். மொழி. சூ. 31 - ந ; இ - ௰. சூ. 27 - மேற்.)

135. நீனிறவிசும்பு : (முருகு. 116 ; மலை. 1.)

134 - 6 அணங்கும் விலங்கும் பொருளாக அச்சம்பிறத்தல் இயல்பென்பதற்கு இவ்வடிகள்மேற்கோள் ; (தொல். மெய்ப்பாடு. சூ. 8 - உரை.)

138. போத்தென்னும்பெயர் இளமைக்கும் ஆண்பாற்கும்முறையேயுரித்து: (தொல். மரபு. சூ. 24, 41 - உரை, மேற்.) பா. அணர்க்காளை.

139. பா. செந்நாய்.

141, நாளா : "தாளித்தண்பவர் நாளாமேயும்" (குறுந். 104.)

வில்லறி கள்ளின் வேம்பி பருகி
மல்லல் மன்றத்து மதவிடை கெண்டி
மடிவாய்த் தண்ணுமை கடுவட் டிலிம்பச்
சிலைகெழு வெறுழ்த்தோ ளோச்சி வலன்வினூஉப்
பகன்மழிந் தாங்குந் தூங்கா வீந்தக்கை
முரண்டலை கழித்த பின்றை மிசைய
குணகரை யாத்த குறுங்காற் குரம்பைச்
செற்றை வாயிற் செறிகழிக் கதவிற்
கற்றை வேய்க்க கழிதலைச் சாம்பி
னதனோன் றுஞ்சுங் காப்பி னுதள
நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றிற்
கொடுமுகந் தூநுரைபொடு வெள்ளை சேக்கு
மிடுமுள் வேலி யொருப்படு வரைப்பி
னள்ளிருள் விடியற் புள்ளெழப் போகிப்
புலிக்குரன் மதத மொலிப்ப வாங்கி
யாம்9 வான்முகி முன்ன கூம்புமுகை
யுறையமை நீர்த்தயிர் கலக்கி தரைதெரிந்து
புகாவாய்க் குழிசி பூநுகமட் டிரீஇ

---

142. தோப்பி "தோப்பிக்கள்ளொடுவறுவுப்பலி கொடுக்கும்" (அகநா. 35 - அடி 9.) பா தொப்பியென்றுகொள்ள இடமுண்டு

143 மத (இ - வி. சூ 282 - மேற்) விடை (முருகு. 232.) பா விடைதெண்டி.

142 - 3. "நரவுத் தொடுமின விடையும் வீழ்மின" (புறநா. 262, 1). செங்கண் மழவிடை கெண்டிச சிலைமதர். வெகுண்ண மிழ்த்த விழவய" (பெரும்பொருள்.)

146. பா. முனைதலையிருகை.

134 - 46 மறக்கடைகூட்டிய குடிநிலையென்னும் புறத்திணைத்துறை க்கு இலை மேற்கோள்; (தொல் புறத்திணை. சூ. 4 - இள.)

151 - 2. உதன் (தொல் மரபு சூ. 47 - உரை, மேற்.)

155. "புலி விடியற் புள்ளோர்த்துக் கழிமின்" (மதை. 448.)

156. "கடையலகு குரல வான்ணி யுழுவை" (அகநா. 277 - 5); "இரும் புலிக் கிரிக்க கருங்கட் செந்தாரு, காட்டியர் கடைருரல் கேட்டொறும் வெரூஉம்" (தொல். அகத் சூ. 41 - உ; நம்பி. சூ 182 - மேற்.); "நல்லைட்டியோரை, கொல்புலிமுழக்கமென்னவவிந்தொறுங்குளிறும்" (நைடதம், காட்டிய 15.)

157 - 8. நவிர்க்குரும்பி: "அரைதெறியபோத், திடர்தனவாழ்பி" (கல். செய். "கலியாப்பாலை")

160 [illegible]மார் மாறு நன்மா மேனிச்
சிறுகுழை துயல்வரும் காதிற் பணைத்தோட்
குறுநெறிக் கொண்ட கூந்த லாய்மக
ளளைவிலை யுணவிற் கிளையுட னருத்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளா
165 னெருமை நல்லான் கருநாகு பெறூஉ
மடிவாய்க் கோவலர் குடிவயிற் செப்பி
னிருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப் பன்ன
பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்
தொடுதோன் மரீஇய வடிவாழ் நோனடி
170 விழுத்தண் டூன்றிய மழுத்தின் வன்கை
யுறிக்கா வூர்ந்த மறுப்படு மயிர்ச்சுவன்
மேம்பா லுரைத்த வோரி யோங்குமிசைக்
கோட்டவுங் கொடியவும் விரைஇக் காட்ட
பல்பூ மிடைந்த படலைக் கண்ணி
175 யொன்றம ருடுக்கைக் கூழா ரிடையன்
கன்றமர் நிரையொடு கானத் தல்கி
யந்து ணவிர்புகை கமழக் கைம்முயன்று
ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெகிழிச்
செந்தீத் தொட்ட கருந்துளைக் குழலி
180 னின்றீம் பாலை முனையிற் குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சிப்
பல்காற் பறவை கிளைசெத் தோர்க்கும்
புல்லார் வியன்புலம் போகி முள்ளுடுத்
185 தெழுகா டோங்கிய தொழுவுடை வரைப்பிற்
பிடிக்கணத் தன்ன குதிருடை முன்றிற்
களிற்றுத்தாள் புரையுந் திரிமரப் பந்தர்க்

---

164. "நெய்விலைப்பசும்பொற்றோடும்" (சீவக. 488.)
165. நாகு : தொல். மரபு. சூ. 26, 62 - உரை, மேற்.
166. அகநா. 274; சீவக. 120.
174. பா. பன்மலரடுக்கிய, பன்மலர்மிடைந்த.
177. பா. புகைபிறப்ப.
179. 'தோட்ட' என்றும் கொள்ள இடமுண்டு.
183. பல்காற்பறவை: "மழலைப்பல்காற்பறவை" (பதக. கோவியரை. 28.)

குறுஞ்சாட் டெருமொடு கலப்பை சாத்தி
கெடுஞ்சுவர் பறைந்த புன்கரும் கொட்டில்
பருவ வானத்துப் பரமழை கடுப்பக்
கருவை வேய்ந்த கவின்குடிச் சிறார்
கெடுங்குரற் பூசைப் பூவி னன்ன
குறுந்தாள் வரகின் குரலுதிர்ச் சொன்றிப்
புகரினர் வேங்கை விகன் டன்ன
வவரை வான்புழுக் கட்டிப் பயில்வுற்
றின்சுவை மூரற் பெறுகுநர் ஞாங்கர்க்
குடிநிறை வல்சிச் செஞ்சா லுழவர்
நடைகவில் பெரும்பகடு புதவிற் பூட்டிப்
பிடிவா யன்ன மடிவாய் நாஞ்சி
நடுப்புமுக முழுக்கொழு மூழ்க வுன்றித்
தொடுப்பெறிந் தழுத துளர்படு தடவை
யரிபுகு பொழுதி னிரியல் போகி
வண்ணக் கடம்பி னறுமல ரன்ன
வளரிளம் பிள்ளை தழீஇக் குறுங்காற்
கறையணற் குறும்பூழ் கட்சி சேக்கும்
வன்புல மிறந்த பின்றை மென்றோன்
மிதியுலக் கொல்லன் முறிகொடிற் றன்ன
கவைத்தா ளலவ னளற்றள சிதையப்
பைபஞ்சாய் னென்ற மண்படு மருப்பிற்
காரேறு பொருத கண்ணகன் செறுவி
னுழாஅ துண்டொளி நிரவிய வினைஞர்

---

188. பா. சாட்டுருளி.
190. பா. பாயமழை.
192. பா. செடுகோற்.
194 - 5. மலை. 434 - 6.
195 - 6. பா. அட்டிப் பயற்றின் நீஞ்சுவை மூரற்.
199. "வேழம், வறனுழாஞ்சில்போன் மருப்பூன்றிலஞ்சோ" (கலி. 8); "தம்முடைத நடக்கை வாயொடு தமிர்த்து, நாஞ்சி லொப்ப நிலமிசைப் புர" (புறநா. 19.)
200. "உடுப்புமுகத்த கூர்ங்கொழுவி னுழாற்செயல்" (கூர்ம. வருஷ. 15.)
209. பா. பைஞ்சாய்.
211. பா. உழவுதண்.

முடிகா றழுத்திய கெடுகேச் செதுவிற்
கினைநர் தந்த கிணைக்கா னெப்பற்
கட்டமழ் புதுப்பூ முனையின் முட்டின
முகைசூழ் தகட்ட பிறழ்வாய் முள்ளிற்
கொடுங்கான் மாமலர் கொய்துகொண் டவண
பஞ்சாய்க் கோரை பல்லிற் சவட்டிப்
புணர்கார்ப் பெய்த புனைகின் கண்ணி
மிருடை யிருந்தலை யாரச் சூடிப்
பொன்கான் கட்டின கடுப்பக் கண்பின்
புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பி
னிரும்புவடித் தன்ன மடியா மென்றோற்
கருங்கை வினைநர் காதலஞ் சிறுசுர்
பழஞ்சோற் றமலை முனை இ வரம்பிற்
புதுவை வேய்ந்த கனிகுடின் முன்றி
லவலெறி யுலக்கைப் பாடுவிறற் றயல
கொடுவாய்க் கிள்ளை படுபசை வெரூஉ
நீங்கா யாணர் வாங்குகதிர்க் கழனிக்
கடுப்புடைப் பறவைச் சாதி யன்ன
பைதற வினைந்த பெருஞ்செங் கெல்லின்
றாம்புடைத் திரடா டுமித்த வினைநர்
பாம்புறை மருதி னேங்குகிளை நீழற்
பலிபெறு வியன்களம் மலிய வேற்றிக்
கணக்கொள் சுற்றமொடு கைபுணர்ந் தாடுக்
துணங்கையம் பூதந் துகிலுடுத் தவைபோற்
சிலம்பி வாலூல் வலந்த மருங்கிற்

---

220. கண்பு : மது. 172. பா. சண்பின்.

220 - 21. இரட்டைக்கிளவி இரட்டைவழித்தாவதற்கு மேற்கோள்; (தொல். உவம. சூ. 22 - உரை)

226. விறற்த : (தொல். உரி. சூ. 50 - சே. ர; இ-வி. சூ. 283 - மேற்.)

226 - 7. உலக்கையிடிக்குப் பறவைகள் அஞ்சல்; "பாசவலிடித்த பெரு ங்காழுலக்கைக், கடிதிடிவோ இய கமஞ்சூல்வெண்குருகு" (அகநா. 141.)

230. பா. வெஞ்செல்லின்.

229 - 30. "மென்செஞ்செல்லி, னம்பணவனை யுதைகுவித்தன்ன, வெண்தலைவினை வெரிந்வை யஞ்சம்" (பதிற். 71)

234. பா. தலைவினைந்து.

குழுமுகிலைப் போரின் முழுமுத றொலைச்சிப்
பகடூர் பிழிந்த பின்றைத் துகடப
வையுந் துரும்பு நீக்கிப் பைதறக்
குடகாற் றெறிந்த குப்பை வடபாற்
செம்பொன் மலையிற் சிறப்பத் தோன்றுந்
தண்பணை தழீஇய தளரா விருக்கைப்
பகட்டா வீன்ற கொடுநடைக் குழவிக்
கவைத்தாம்பு தொடுத்த காழூன் றல்கு
லேணி யெய்தா நீணெடு மார்பின்
முகடுதுமித் தடுக்கிய பழம்பல் நுணவிற்
குமரி மூத்த கூடோங்கு நல்லிற்
றச்சச் சிறாஅர் நச்சப் புனைந்த
ஊரா நற்றே றுருட்டிய புதல்வர்
தளர்நடை வருத்தம் வீட வலர்முலைச்
செவிலியம் பெண்டிர்த் தழீஇப் பாலார்ந்
தமளித் துஞ்சு மழகுடை நல்லிற்
றொல்பசி யறியாத் துளங்கா விருக்கை
மல்லற் பேரூர் மடியின் மடியா
வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி
மனைவா ழளகின் வாட்டொடும் பெறுகுவிர்
மழைவிளை யாடுங் கழைவள ரடுக்கத்
தணங்குடை யாளி தாக்கலிற் பலவுடன்
கணஞ்சால் வேழங் கதழ்வுற் றாஅங்
கெந்திரஞ் சிலைக்குந் துஞ்சாக் கம்பலை

---

239. பா. துரும்பும்போக்கி.

240 - 41. பொருந. 244.

242. மு. பொருந. 169.

243. பா. தளர்நடை.

243 - 4. முல்லை, 12.

248 - 9. "தச்சன்செய்த சிறுமாவைய, மூர்ந்தின்புறாஅ ர
னீர்த்தின்புறாஉ மினையோர்" (குறுந். 61.)

256. அளகு - கோழி: (நொல். மரபு. சூ. 56 - உரை, மேற்.) பா. மனை
யுறை.

259 - 60. "கரும்பினெந்திரங்களிற்றெதிர்பிளிற்றும்" (ஐங்குறு. 55),
இரும்பினன்ன ..... ஆலையெந்திரங்கள்" (திருவிளை. திருநகர. 11.)

விசய மடூஉம் புகைசூ ழாலைதொறுங்
கரும்பின் றீஞ்சாறு விரும்பினிர் மிசைமின்
வேழ நிரைத்து வெண்கோடு விரைஇத்
தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த
குறியிறைக் குரம்பைப் பறியுடை முன்றிற்
கொடுங்காற் புன்னைக் கோடுதுமித் தியற்றிய
பைங்காய் தூங்கும் பாய்மணற் பந்த
ரினையரு முதியருங் கிளையுடன் றுவன்றிப்
புலவுநுனைப் பகழியுஞ் சிலையு மானச்
செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழு
மையிருங் குட்டத்து மகவொடு வழங்கிக்
கோடை நீடினுங் குறைபட லறியாத்
தோடாழ் குளத்த கோடுகாத் திருக்குங்
கொடுமுடி வலைஞர் குடிவயிற் சேப்பி
னவையா வரிசி யங்களித் துழவை
மலர்வாய்ப் பிழாவிற் புலா வாற்றிப்
பாம்புறை புற்றிற் குரும்பி யேய்க்கும்
பூம்புற நல்லடை யளைஇத் தேம்பட
வெல்லையு மிரவு மிருமுறை கழிப்பி
வல்வாய்ச் சாடியின் வழைச்சற விளைந்த
வெந்நீ ரரியல் விரலலை நறும்பிழி
தண்மீன் சூட்டொடு தளர்தலும் பெறுகுவிர்
பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோற்
கோள்வல் பாண்மகன் றலைவலித் தியாத்த
நெடுங்கழைத் துண்டி னடுங்க நாண்கொளீஇக்
கொடுவா யிரும்பின் மடிதலை புலம்பப்
பொதியிரை கதுவிய போழ்வாய் வாளை
நீர்நணிப் பிரம்பி னடுங்குநிழல் வெரூஉ
நீத்துடை நெடுங்கயந் தீப்பட மலர்ந்த
கடவு ளொண்பூ வடைத லோம்பி
யுறைகான் மாறிய வோங்குயர் நனந்தலை

---

268. பா. கிளையுடன்குழீஇ.

286. பா. வடிதலை.

290. சிவக. 51 - க. மேற்.

யகலிரு வானத்துக் குறைவி லேய்ப்ப
வரக்கிதழ்க் குவளையொடு நீல நீடி
முரட்பூ மலிந்த முதுநீர்ப் பொய்கைக்
குறுந ரிட்ட கூம்புவிடு பன்மலர்
பெருநா ளமயத்துப் பிணையினிர் கழிமின்
செழுங்கன் றியாத்த சிறுதாட் பந்தர்ப்
பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்
மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது
வளைவாய்க் கிள்ளை மறைவினி பயிற்று
மறைகாப் பாள ருறைபதிச் சேப்பிற்
பெருநல் வானத்து வடவயின் விளங்குஞ்
சிறுமீன் புரையுங் கற்பி னறுநுதல்
வளைக்கை மகடூஉ வயினறிந் தட்ட
சுடர்க்கடைப் பறவைப் பெயர்ப்படு வத்தஞ்
சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்
துருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமுறி யளைஇப் பைந்துணர்
நெடுமரக் கொக்கி னறுவடி விதிர்த்த
தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவிர்
வண்ட லாயமொ டுண்டுறைத் தலைஇப்
புனலாடு மகளி ரிட்ட பொலங்குழை
யிரைதேர் மணிச்சிர லிரைசெத் தெறிந்தெனப்
புள்ளார் பெண்ணைப் புலம்புமடற் செல்லாது
கேள்வி யந்தண ரருங்கட னிறுத்த
வேள்வித் தூணத் தசைஇ யவன
ரோதிம விளக்கி னுயர்மிசைக் கொண்ட
வைகுறு மீனிற் பைபயத் தோன்று
நீர்ப்பெயற் றெல்லைப் போகிப் பாற்கேழ்
வாலுளைப் புரவியொடு வடவளந் தரூஉ
நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை
மாட மோங்கிய மணன்மலி மறுகிற்
பரதர் மலிந்த பல்வேறு தெருவிற்

292 - 4. பலநிறமலர்களுக்கு இந்திரவில்; "சிலைத்தார்" (புறநா.10, 36.)
305. பா. பெயர்ப்படுபத்தம்.
318. பா. பையத்தோன்றும்.
319. பா. நீர்ப்பெயர்த்தெல்லை போகிப்பொற்கேழ்.

சிலதர் காக்குஞ் சேணுயர் வரைப்பி
னெல்லுழு பகட்டொடு கறவை துன்னா
மேழகத் தகரோ டெகினங் கொட்குங்
கூழுடை நல்லிற் கொடும்பூண் மகளிர்
கொன்றை மென்சினைப் பனிதவழ் பவைபோற்
பைங்கா ழல்கு னுண்டுகி னுடங்க
மால்வரைச் சிலம்பின் மகிழ்சிறந் தாலும்
பீலி மஞ்ஞையி னியலிக் கால
தமனியப் பொற்சிலம் பொலிப்ப வுயர்நிலை
வான்றோய் மாடத்து வரிப்பந் தசைஇக்
கைபுனை குறுந்தொடி தத்தப் பைபய
முத்த வார்மணற் பொற்கழங் காடும்
பட்டின மருங்கி னசையின் முட்டில்
பைங்கொடி நுடங்கும் பலர்புகு வாயிற்
செம்பூத் தூய செதுக்குடை முன்றிற்
கள்ளடு மகளிர் வள்ள நுடக்கிய
வார்ந்துகு சின்னீர் வழிந்த குழம்பி
னீர்ஞ்சே றாடிய விரும்பல் குட்டிப்
பன்மயிர்ப் பிணவொடு பாயம் போகாது
நெல்மா வல்சி தீற்றிப் பன்னாட்
குழிநிறுத் தோம்பிய குறுந்தா ளேற்றைக்
கொழுநிணத் தடியொடு கூர்நறாப் பெறுகுவிர்
வான மூன்றிய மதலை போல
வேணி சாத்திய வேற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்
திரவின் மாட்டிய விலங்குசுடர் ஞெகிழி
யுரவுநீ ரழுவத் தோடுகலங் கரையுந்
துறைபிறக் கொழியப் போகிக் கறையடிக்

---

325. பா. துன்னாது.

331. மகளிர் நடைக்கு மயில்நடை. முருகு. 205 - ஆம் அடிக்குறிப் பைப்பார்க்க.

334. பா. கைப்புனை. பைப்பய.

335. "மகளிர், பொலஞ்செய் கழங்கிற் றெற்றி யாடும்" (புறநா. 36.)

346. சிவக 1895 - மேற்.

349 - 51. "இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்" (சிலப். 6. 141.)

குன்றுறழ் யானை மருங்கு லேய்க்கும்
வண்டோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த
மஞ்சண் முன்றின் மணநாறு படப்பைத்
தண்டலை யுழவர் தனிமனைச் சேப்பிற்
றாழ்கோட் பலவின் சூழ்சுளைப் பெரும் பழம்
வீழி றாழைக் குழவித் தீநீர்க்
கவைமுலை யிரும்பிடிக் கவுண்மருப் பேய்க்குங்
குலைமுதிர் வாழைக் கூனி வெண்பழந்
திரளரைப் பெண்ணை நுங்கொடு பிறவுந்
தீம்பஃ றார முனையிற் சேம்பின்
முளைப்புற முதிர்கிழங் கார்குவிர் பகற்பெயன்
மழைவீழ்ந் தன்ன மாத்தாட் கமுகின்
புடைசூழ் தெங்கின் முப்புடைத் திரள்கா
யாறுசெல் வம்பலர் காய்பசி தீரச்
சோறடு குழிசி யிளக விழூஉம்
வீயா யாணர் வளங்கெழு பாக்கத்துப்
பன்மர நீளிடைப் போகி நன்னகர்
விண்டோய் மாடத்து விளங்குசுவ ருடுத்த
வாடா வள்ளியின் வளம்பல தரூஉ
நாடுபல கழிந்த பின்றை நீடுகுலைக்
காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னாங்கண்
வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்க்
குறுங்காற் காஞ்சி சுற்றிய நெடுங்கொடிப்
பாசிலைக் குருகின் புன்புற வரிப்பூக்
காரகற் கூவியன் பாகொடு பிடித்த

---

357. குழவி ஓரறிவுயிரின் இளமைப்பெயர். (தொல். மரபு. ரூ. 24 - உரை, மேற்.)

363. "மேகமேய்க்கு மிளங்கமுகம்பொழில்" (தே. பிரமபுரம், செய். "விளங்கயனூர்")

370. "வாடாவள்ளியங்காடு" (குறுந். 216); "வாடாவள்ளிவயவர்" (தொல். புறத்திணை. 5.)

374. (மு. மணி. 4 : 5); "கதிர்நுழைகல்லா மரம்பயில்கடிமீனை" (புறநா. 21.)

377. சிலப். 5 : 24 - அடியார். மேற்.

விழைசூழ் வட்டம் பால்கலந் தவைபோ
னிழறாழ் வார்மண னீர்முகத் துறைப்பப்
புனல்கால் கழீஇய பொழிறொறுந் திரள்காற்
சோலைக் கமுகின் சூல்வயிற் றன்ன
நீலப் பைங்குடந் தொலைச்சி நாளும்
பெருமகி ழிருக்கை மரீஇச் சிறுகோட்டுக்
குழவித் திங்கட் கோணேர்ந் தாங்குச்*
சீறவுவா யமைதத சுரும்பு சூழ் சுடர்நுத
னறவுபெயர்த் தமைத்த நல்லெழின் மழைக்கண்
மடவரன் மகளிரொடு பகல்விளை யாடிப்
பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைச்
செவ்விகொள் பவரோ டசைஇ யவ்வயி
னருந்திறற் கடவுள் வாழ்த்திச் சிறிதுநுங்
கருங்கோட் டின்னிய மியாகினிர் கழிமின்
காழோ ரிகழ்பத நோக்கிக கீழ
நெடுங்கை யானை நெய்ம்மிதி கவளங்
கடுஞ்சூன் மந்தி கவருங் காவிற
களிறுகத னடக்கிய வெளிறில கந்திற்
றிண்டேர் குழித்த குண்டுநெடுந் தெருவிற்
படைதொலை பறியா மைநதுமலி பெரும்புரழ்க்
கடைகால் யாத்த பல்குடி கெழீஇக்
கொடையுங் கோளும் வழங்குநர்த தடுத்த
வடையா வாயின் மிளைசூழ் படப்பை
நீனிற வுருவி னெடிபோன் கொப்பூழ
நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த
தாமரைப் பொகுட்டிற் காண்வரத தோன்றிச

380. "புனல்கால் கழீஇய மணல்வார் புறவு" (மலை. 48.)
390. பா. கொள்பவரொடும்
392. நன். சூ. 350 - மயிலை; நன் - வி சூ 351 - மேற்.
394. "நெய்ம்மலி கவளங்கொள்ளா" (சீவக 1076.); "நெய்ம்மிதி கவளந் தெவிட்டிநின் றடாக்கு நிழல்களி தறுகண்மால் யானை". "கைம்முகந் தெடுத்த நெய்ம்மிதி கவளங் களித்தெறி மும்மதக் களிறு" (கூர்ம. சூரியன் மரபு. 8, 22) பா. நெய்மிதி.
402. "நீனிறவுருவினேமியோனும்" (புறநா. 58 - 15.)
402 - 4. முருகு. 164 - 5.

சுடும ணோங்கிய நெடுநகர் வரைப்பி
னிழுமென் புள்ளி னீண்டுகிளைத் தொழுதிக்
கொழுமென் சினைய கோளி யுள்ளும்
பழமீக் கூறும் பலாஅப் போலப்
புலவுக் கடலுடுத்த வானஞ் சூடிய
மலர்தலை யுலகத் துள்ளும் பலர்தொழ
விழவுமேம் பட்ட பழவிறன் மூதூ-
ரவ்வாய் வளர்பிறை சூடிச் செவ்வா
யந்தி வானத் தாடுமழை கடுப்ப
வெண்கோட் டிரும்பிணங் குருதி யீர்ப்ப
வீரைம் பதின்மரும் பொருதுகளத் தவியப்
பேரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தே
ராராச் செருவி னைவர் போல
வடங்காத தானையோ டுடன்றுமேல் வந்த
வொன்னாத் தெவ்வ ருலைவிடத் தார்த்துக்
கசசி யோனே கைவண் டோன்ற
னச்சிச் சென்றோர்க் கேம மாகிய
வளியுந் தெறலு மெளிய வாகலின்
மலைந்தோர் தேஎ மன்றம் பாழ்பட
நயந்தோர் தேஎ நன்பொன் பூப்ப
நட்புக்கொளல் வேண்டி நயந்திசி னோருந்
துப்புக்கொளல் வேண்டிய துணையி லோருங்

405. பா. நெடுமதில்வரைப்பு.

402 - 5. "மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப், பூவொடு புரையுஞ் சீறூர் பூவி, னிதழகத் தனைய தெருவே யிதழகத், தரும்பொகுட் டனையதே யண்ணல் கோயில்" (பரிபாடல்); இராசகிரியநகரத்தைத் தாமரைமலராகவும் அந்நகரின் உறுப்புக்களை அம்மலரின் உறுப்புக்களாகவும் (பெருங்கதையில் 50 - அடிகளாற் கூறியிருத்தல் இங்கே அறிந்து மகிழத்தக்கது; (3 - மகத காண்டம், 3 - இராசகிரியம்புக்கது.)

407. பா. சினைஇய.

415. "ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழிய" (புறநா. 2.)

419. மு. மலை. 386.

421. பா. ஏமமாக.

422. பா. அளியுந்தெறலுந்தனக்கெளிய.

423 - 4. கருத்து: "நீ உடன்றுநோக்கும் வாயெரிதவழ, நீ நயந்து நோக்கும் வாய்பொன்பூப்ப" (புறநா. 38.)

கல்வி முருகி கடற்படர்ந் தாங்குப்
பல்வேறு வகையிற் பணிந்த மன்ன
ரிமையவ ருறையுஞ் சிமையச் செவ்வரை
வெண்டிரை கிழித்த விளங்குகடர் கெடுங்கோட்டுப்
பொன்கொழித் திழிதரும் போக்கருங் கங்கைப்
பெருநீர் போகு மிரியன் மாக்க
ளொருமரப் பாணியிற் றூங்கி யாங்குத்
தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு குழீஇச்
செவ்வி பார்க்குஞ் செழுநகர் முற்றத்துப்
பெருங்கை யானைக் கொடுந்தாடி படுக்குங்
கருங்கைக் கொல்ல னிரும்புவிசைத் தெறிந்த
கூடத் திண்ணிசை வெரீஇ மாடத்
திறையுறை புறவின் செங்காற் சேவல்
வின்றுயி லிரியும் பொன்றுஞ் விளைகர்க்
குணகடல் வரைப்பின் முந்நீர் காப்பட்
பகல்செய் மண்டிலம் பரிதித் தாங்கு
முறைவேண்டு நர்க்குங் குறைவேண்டு கர்க்குர்
வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி
யிடைத்தெரிக் துணரு மிருமுர் காட்சிக்
கொடைக்கட னிறுத்த கூம்பா வுள்ளத்
துரும்பில் சுற்றமோ டிருந்தோற் குறுகிப்
பொறிவரிப் புகர்முகந் தாக்கிய வயமான்
கொடுவரிக் குருளை கொளவேட் டாங்குப்
புலவர் பூண்கட னுற்றிப் பகைவர்
கடிமதி லெறிந்து குடுமி கொள்ளும்

428. மலை. 52.

429. பா. இமையோர்.

432. பா. கீர்ப்போகும்.

443 - 5. 'முறைவேண்டினர்க்கும் குறைவேண்டினர்க்கும் காண்டற் கெளியனுய்' (குறள், 386 - பரி); "முறைவேண்டுபொழுதிற் பதனெளியோர்" (புறநா. 35 - 15.)

445. பா. இடைதெரிந்த.

446. "கொடைக்கடனிறுத்தசெம்மலோய்" (மலை. 543); "கொடைக் கடனிறுக்குமிக்குவாகுப்பெயர்ப்பெரியோன்" (கூர்ம. குரியன்மரபு. 8.)

447. "உரும்பில்சுற்றத்தன்ன" (பதிற். 26 - 13.)

வென்றி யல்லது வினையுடம் படினு
மொன்றல் செல்லா வுரவுவாட் டடக்கைக்
கொண்டி யுண்டித் தொண்டையோர் மருக
மன்னர் மன்ன மறவர் மறவ
செல்வர் செல்வ செருமேம் படுந
வெண்டிரைப் பரப்பிற் கடுஞ்சூர் கொன்ற
பைம்பூட் சேஎய் பயந்தமா மோட்டுத்
துணங்கையஞ் செல்விக் கணங்குநொடித் தாங்குத்
தண்டா வீகைநின் பெரும்பெய ரேத்தி
வந்தேன் பெரும வாழிய நெடிதென
விடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பிக்
கடனறி மரபிற் கைதொழுடப் பழிச்சி
நின்னிலை தெரியா வளவை யந்நிலை
நாவலந் தண்பொழில் வீவின்று விளங்க
நில்லா வுலகதது நிலைமை தூக்கி
யந்நிலை யணுகல் வேண்டி நின்னரைப்
பாசி யன்ன சிதர்வை நீக்கி
யாவி யன்ன வவிர்நூற் கலிங்க
மிரும்பே ரொக்கலொ டொருங்குட னுடீஇக்
கொடுவாள் கதுவிய வடுவாழ் நோன்கை
வல்லோ னட்ட பல்லூன் கொழுங்குறை
யரிசெத் துணங்கிய பெருஞ்செந் நெல்லின்
றெரிகொ ளரிசித் திரணெடும் புழுக்க
லருங்கடித் தீஞ்சுவை யமுதொடு பிறவும்
விருப்புடை மரபிற் கரப்புடை யடிசின்

---

455 - 6. இடையினவெதுகை: (தொல். செய். சூ 63 - உரை, மேற்.)

457. கடலிற்சூர்கொன்றமை: (பதிற். 11 - பார்க்க.)

454 - 8. 'தொண்டையோர்மருக ..... சேஎய்' என்றாற்போல்வன ஏகாரத்தாற்பொருள்கூறுமாறு உணர்க; (தொல். விளி. சூ. 34 - ந. மேற்.)

459. "பெருங்காட்டுக்கொற்றிக்குப் பேய்நொடித்தாங்கு" (கலி. 89.) பா. நொடித்தாங்கு.

458 - 9. முருகு. 259.

461 முருகு. 285. பா. வாழியபெரிதென.

466. மு. பொருந. 176. பா. நிலைமைநோக்கி.

468 - 70. பொருந. 153 - 5.

475. பா. அயிரொடுபிறவும்.

மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி
மகமுறை மகமுறை கோக்கி முகனமர்ந்
தானா விருப்பிற் றானின் றாட்டி
மங்குல் வானத்துத் திங்க ளேய்க்கு
மாடுவண் டிமிரா வழலவிர் தாமரை
நீடிரும் பித்தை பொலியச் சூட்டி
யுரவுக்கடன் முகந்த பருவ வானத்துப்
புகற்பெயற் றுளியின் மின்னுநிமிர்ந் தாங்குப்
புணயிருங் கதுப்பகம் பொலியப் பொன்னின்
றொடையமை மாலை விறலியர் மலைய
நாலோர் புகழ்ந்த மாட்சிய மால்கடல்
வளைக்கண் டன்ன வாலுளைப் புரவி
துணைபுணர் தொழில நால்குடன் பூட்டி
யரித்தேர் நல்கியு மமையான் செருத்தொலைத்
தொன்னாத் தெவ்வ ருலைவிடத் தொழித்த
விசும்புசெ லிவுளியொடு பசும்படை தரீஇ
யன்றே விடுக்குமவன் பரிசி லின்சீர்க்
கின்னர முரலு மணங்குடைச் சாரன்
மஞ்ஞை யாலு மரம்பயி லிறும்பிற்
கலைபாய்ந் துதிர்த்த மலர்வீழ் புறவின்

---

478 - 9. மகமுறை · சிறுபாண். 192 மலைபடு. 185.

479. மு சிறுபாண். 245.

481. "ஆடும்வண் டிமிராத் தாமரை" (புறநா. 69.)

481 - 2. "வாடாமிஞிறிமிராமுடிமாலை" (தக்க. 557) எனபதற்கு இவை மேற்கோள். பா அழலிவர். பித்திகைநிவப்பசசூடி

483. பா. புலவுக்கடல்.

486. பா. விறலியர்வேய.

485 - 6. "வாடாமாலை பாடினியணிய" (புறநா. 364 - 1.)

489. நால்கு - நான்கு; "நால்குபண்ணினார்" (சீவக. 1774.)

491. பா. ஒழிந்த.

492. பா. விசும்புதோயிவுளி.

490 - 92. சிறுபாண். 246 - 8.

494. "பாடுகின்றனகின்னரமிதுனங்கள்பாராய்" (கம்ப. சித்திரகூட. 12.)

496. பா. மலர்வீழ்.

மந்தி சீக்கு மாதுஞ்சு முன்றிற்
செந்தீப் பேணிய முனிவர் வெண்கோட்டுக்
களிறுதரு விறகின் வேட்கு
மொளிறிலங் கருவிய மலைகிழ வோனே.

இதன்பொருள்.

1. அகல் இரு விசும்பில் பாய் இருள் பருகி—தன்னையொழிந்த நான்கு பூதமும் தன்னிடத்தே அகன்று விரிதற்குக் காரணமாகிய பெரிய ஆகாயத்திடத்தே தோன்றிப் பரந்த *இருளை விழுங்காநின்று,

அகலிருவிசும்பென்பது. †"நோய்தீருமருந்து" போனின்றது. பருகியென்னுஞ் செய்தெனெச்சம் நிகழ்காலம் உணர்த்திநின்றது.

2. பகல் கான்று எழுதரு பல் கதிர் பருதி—மறைந்த பகற்பொழுதை உலகத்தேதோற்றுவித்து எழுதலைசசெய்யும் பலகிரணங்களையுடைய கனலி.

3. காய் சினம் திருகிய கடு திறல் வேனில்—கோபிக்கின்ற சினமுறுகிய கடிய வலியையுடைய முதுவேனிற்காலத்தே,

4. பசு இலை ஒழித்த பரு அரை பாதிரி—பின்பனிக்காலத்தே பசிய இலைகளையுதிர்த்த பரிய தாளினையுடைய பாதிரியினது,

5 - 6. வள் இதழ் மா மலர் வயிறு இடை வகுத்ததன் உள் அகம் புரையும் ஊட்டுறு பச்சை—பெருமையையுடைய இதழையுடைத்தாகிய வண்டையுடைய பூவினுடைய வயிற்றிடத்தைப்பிளந்த ‡புலாவினுடைய உள்ளிடத்தையொக்கும் நிறமூட்டுதலுற்ற தோல்.

7 - 8. பரிய அரை கமுகின் பாளை அம் பசு பூ கரு இருந்தனன கண் கூடு செறி துளை—பரிய தாளினையுடைய கமுகினது பாளையாகிய அழகினையுடைய பசியபூ விரியாமற் கருவாயிருந்தாலொத்த இரண்டுகண்ணுங்கூடின செறிந்த துளை,

9. உருக்கி அன்ன பொருத்துறு போர்வை—உருக்கி ஒன்றாக வார்த்தாற்போன்ற தோல்களின் வேறுபாடுதெரியாமல் இசைத்தலுறும் போர்வையினையும்,

பச்சைப்போர்வை; பொருத்துறுபோர்வை; துளையினையுடையபோர்வை.

---

500. மலைகிழவோன்: முருகு. 317 - ஆம் அடிக்குறிப்பைப்பார்க்க நன். சூ. 104 - மயிலை. மேற்.

497 - 500. "யானை தந்த முளிமர விறகிற், கானவர் பொத்திய ஞெலிதி விளக்கத்து, மடமான் பெருநிரை வைகுதுயி லெடுப்பி, மந்தி சீக்கு மணங்குடை முன்றில்", "கானயானை தந்தவிறகின், கடுந்தெறற் செந்தீவேட்டு" (புறநா. 247. 251.)

* பி - ம். இருளைமறைத்து.

† கலித்தொகை, 60.

‡ பி - ம். பூவினுடைய.

10. சுனை வறந்தன்ன இருள் தூங்கு வறு வாய்—சுனை வற்றி உள்இருண்டாலொத்த இருள்செறிந்த உண்ணாக்கினையில்லாத வாயினையும்,

11. பிறை பிறந்தன்ன பின் ஏந்து கவை கடை—முதற்பிறை பிறந்து ஏந்தியிருந்தாற்போன்ற பின்பு ஏந்தியிருக்கின்ற கவைத்தலையுடைய கடையினையும்,

12 - 13. நெடு பணை திரள் தோள் மடந்தை முன் கை குறு தொடி எய்க்கும் மெலிந்து வீங்கு திவலின்—நெடிய மூங்கிலையொத்த திரண்ட தோளினையுடைய மகளுடைய முன்கையிற் குறிய தொடியையொக்கும் நெகிழ வேண்டியவழிநெகிழ்ந்து இறுகவேண்டியவழியிறுகும் வார்க்கட்டினையும்,

14. மணி வார்ந்தன்ன மா இரு மருப்பின்—நீலமணி ஒழுகினாலொத்த மருமைநிறத்தையுடைய பெரிய தண்டினையுமுடைய,

15 - 6. பொன் வார்ந்து அன்ன புரி அடங்கு நரம்பின் தொடை அமை கேள்வி—பொன் கம்பியாய் ஒழுகினாலொத்த முறுக்கடங்கின நரம்பின் கட்டமைந்த யாழை,

கேள்வி, ஆகுபெயர்.

போர்வையினையும் (9) வாயினையும் (10) கடையினையும் (11) திவவினையும் (13) மருப்பினையுமுடைய யாழையெனமுடிக்க.

16. இடம் வயின் தழீஇ—இடத்தோட்பக்கத்தே அணைத்து,

17. வெ தெறல் கனலியொடு மதி வலம் திரிதரும்—வெய்ய தெறுதற்றொழிலையுடைய ஞாயிற்றோடே திங்களும் மேருவை வலமாகத் திரிதலைச் செய்யும்,

18. தண் கடல் வரைப்பில் தாங்குநர் பெறாது—குளிர்ந்த கடல்சூழ்ந்த உலகில் நின்னைப் புரப்பாரைப் பெறாமல்,

19. பொழி மழை துறந்த புறை வேய் குன்றத்து—பெய்கின்ற மழை துறத்தலால் நிலத்தின்கண்ணெழுந்த ஆவிசூழ்ந்த மலையிடத்தே,

20. *பழு மரம் தேரும் பறவை போல—பழுத்த மரத்தைத் தேடித் திரியும்பறவைகளைப்போல,

21. கல்லென் சுற்றமொடு கால் கிளர்ந்து திரிதரும்—பசிமிகுதியால் அழுகின்ற சுற்றத்தாருடனே ஓரிடத்திராமற் பயனின்றி ஓடித் திரிதலைச் செய்யும்,

22. புல்லென் யாக்கை புலவு வாய் பாண—பொலிவழிந்த வடிவினையும் தற்ற கல்லியை வெறுத்துக்கூறுகின்ற வாயினையுமுடைய பாண,

† "சில்செவித் தாகிய கேள்வி நொந்து" என்றார் பிறரும்; புலால் நாறுகின்ற வாயுமாம்.

கேள்வியைத்தழீஇத் (16) தாங்குநர்ப்பெறாது (18) குன்றத்தே (19) நடுந்திறல் வேனிற்காலத்தே (3) பறவைபோலத் (20) திரிதரும் பாணவென முடிக்க.

---

* "புட்பயில் பழுமரப் பொலிவிற்று" (சீவக. 93.)

† புறநானூறு, 68.

23 - 4. பெரு வறம் கூர்ந்த கானம் கல்லென கருவி வானம் துளி சொரிந்தாங்கு — பெரிய *வற்கடமிக்க காடு உழவுத்தொழில் முதலியவற்றால் ஆரவாரமிகும்படி தொகுதியையுடைய மேகம் துளியைச் சொரிந்தாற் போல,

25 - 6. பழ பசி கூர்ந்த ஏம் இரு பெரு ஒக்கலொடு வழங்க தவாஅ பெரு வளன் ஏய்தி—தொன்றுதொட்ட பசிமிக்க ஏம்முடைய கரிய பெரிய சுற்றத்தோடே யாங்கள் பிறர்க்குக்கொடுக்கவும் மாளாத பெரிய செல்வத்தைப் பெற்று,

27 - 8. வரல் உளை புரவியொடு வய களிறு முகந்துகொண்டு யாம் அவனின்றும் வருதும்—வெள்ளிய தலையாட்டத்தையுடைய குதிரையோடே வலியினையுடைய யானைகளையும் வாரிக்கொண்டு யாம் அவனூரினின்றும் வாரா நின்றேம்;

28. நீயிரும்—நீங்களும்,

29 - 37. [இருநிலம் கடந்த திருமறு மார்பின், முந்நீர் வண்ணன் பிறங்கடை யந்நீர்த், திரைதரு மரபி னுரவோ னும்பல், மலர்தலை யுலகத்து மன னுயிர் காக்கு, முரசுமுழங்கு தானை மூவ ருள்ளு, மிலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும், வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பி, னல்லது கடிந்த வறம்புரி செங்கோற், பல்வேற் றிரையற் படர்குவி ராயின் :]

மலர் தலை உலகத்து மன் உயிர் காக்கும் முரசு முழங்கு தானை மூவருள்ளும்—அகன்ற இடத்தையுடைய உலகத்தில் நிலைபெற்ற உயிர்களைப்புரக்கும் முரசுமுழங்குகின்ற நாற்படையினையுமுடைய சேரசோழபாண்டியரென்னுமூவரிலும்,

இலங்கு நீர் பரப்பின் வளை மீ கூறும் வலம்புரி அன்ன வசை நீங்கு சிறப்பின்—விளங்குகின்ற நீரையுடைய கடலிடத்துப்பிறந்த சங்கில் மேலாக உலகங்கூறும் வலம்புரிச்சங்கையொத்த குற்றநீங்குந் தலைமையினையும்,

அல்லது கடிந்த அறம் புரி செங்கோல்—மறத்தைப்போக்கின அறத்தை விரும்பின செங்கோலினையுமுடைய,

இரு நிலம் கடந்த †திரு மறு மார்பின் முந்நீர் வண்ணன் பிறங்கடை உரவோன் உம்பல்—பெரிய நிலத்தையளந்த திருவாகிய மறுவையணிந்த மார்பினையுடைய கடல்போலுநிறத்தையுடையவன் பின்னிடத்தோனாகிய சோழன் குடியிற்பிறந்தோன்,

மூவருள்ளுஞ் சிறப்பினையும் செங்கோலினையுமுடைய உரவோனென்க.

‡ திருமால்குடியிற்றோன்றிய உரவோன்.

அ நீர் திரை தரு மரபின் பல் வேல் திரையன் — அக்கடலின் திரை கொண்டுவந்து ஏறவிட்டமரபாற் பலவேற்படையினையுடைய திரையனென்னும் பெயரையுடையவன்,

---

* பி - ம். வறட்காலமிக்க.

† "திருமறுமார்பநீ யருளல்வேண்டும்" (பரிபாடல், 1.)

‡ திருமாலென்றது, இராமபிரானை.

என்றதனால், நாகபட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று நாககன்னியைப்புணர்ந்தகாலத்து அவள் யான்பெற்றபுதல்வனை என்செய்வேனென்றபொழுது, தொண்டையை அடையாளமாகக்கட்டிக் கடலிலேவிட அவன்வந்து கரையேறின் அவற்கு யான் அரசவுரிமையை எய்துவித்து நாடாட்சி கொடுப்பலென்று அவன்கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிடத் திரைதருதலின், திரையனென்று பெயர்பெற்றகதை கூறினார்.

திரையன் படர்குவிராயின் நின் உள்ளம் சிறக்க—திரையனை நினைப்பீராயின் அவனைநினைத்தலின், நின் நெஞ்சு சிறப்புக்களைப்பெறுக;

சிறக்கநின்னுள்ள (45) மென் மேல்வருவதனை இதனோடுங்கூட்டுக.

38. [கேளவ னிலையே கெடுகநின் னவலம்:]

நின் அவலம் கெடுக—நினதுமிடி கெடுவதாக;

அவன் நிலை கேள்—அங்ஙனம் அவனை நினைத்துப்போகின்றநீ *அவன் தன்மையைக் கேட்பாயாக;

39 - 41. [அத்தஞ் செல்வோ ரலறத் தாக்கிக், கைப்பொருள் வௌவுங் களவோர் வாழ்க்கைக், கொடியோ ரின்றவன் கடியுடை வியன்புலம்:] அவன் கடி உடை வியல் புலம் அத்தம் செல்வோர் அலற தாக்கி கை பொருள் வௌவும் களவு ஏர் வாழ்க்கை கொடியோர் இன்று—அவனுடைய காவலையுடைத்தாகிய அகலத்தையுடைய நிலம், வழிப்போவாரைக் கூப்பிடும்படி வெட்டி அவர்கள் கையிலுள்ள பொருள்களைக் கைக்கொள்ளும் களவே உழவு போலும் இல்வாழ்க்கைப் பொருளாகவுடைய கொடுமையையுடையோரில்லை;

42 - 3. உருமும் உரறாது அரவும் தப்பா காடு மாவும் உறுகண் செய்யா—உருமேறும் இடியாது; பாம்புகளும் கொல்லுதலைச்செய்யா; காட்டிடத்துப் புலிமுதலியனவும் வருத்தஞ்செய்யா; ஆகலின்,

இஃது அவனாணை †கூறிற்று.

43 - 5. [வேட்டாங், கசைவுழி யசைஇ நசைவுழித் தங்கிச் சென்மோ:]

ஆங்கு அசைவுழி அசைஇ—அக்காட்டின்கண் இளைத்தவிடத்தே இளைப்பாறி.

நசைவுழி வேட்டு தங்கி சென்மோ — எங்களிடத்தே ?தங்கிப்போக வேண்டுமென்று நச்சினவிடத்தே நீயும் அதற்கு விரும்பித் தங்கிச் செல்வாயாக.

45. இரவல—இரத்தற்றொழிலை வல்லோய்.

45 - 7. [சிறக்கநின் னுள்ளம், கொழுஞ்சூட் டருந்திய திருந்துநிலை யாரத்து, முழவி னன்ன முழுமர வுருளி:]

---

* பி - ம். அவ்வழியை அவன் தன்மையை.

† பி - ம். கூறினான்.

முழவின் அன்ன முழுமரம் திருத்தி மேல் ஊன்ற கொழு குடிஇ அருகிய உருளி—மத்தளத்தையொத்த குறட்டிடத்தேறுதற்கு மெல்லென்ற தன்மையையுடைய ஓரிடத்தே என்றும் வினைத்தமரம் குழ்ந்து கிடக்கப்பட்ட உருளையையும்,

அச்சுக்கோக்கின்ற இடமுமாம். அக்குறட்டிலே தைத்துக்கிடக்கின்றது ஓர் சூட்டு - விளிம்பில் வைத்த வினைத்த மரம்.

48. எழுஉ புணர்த்தன்ன பருஉ கை நோன் பார்—கனையமரம் இரண்டு சேர்த்தாலொத்த பருத்த கைகளையுடைய வலிய பாரையுமுடைய,

அச்சுமரத்தின்மேலே நெடியவாய் இரண்டு பக்கத்தும் நெடுக்கிடக்கின்ற பருமரங்களைப் பருஉக்கை யென்றார். அம்மரங்களிரண்டினையும் ஒருங்கத் தினைத்தச் குறுக்கே ஏணிபோலக் கோத்ததனைப் பாரென்றார்.

49 - 50. [மாரிக் குன்ற மழை சுமந்தன்ன, வானை வேய்ந்த வரை வாய்ச் சகடம்;]

குன்றம் மாரி மழை சுமந்தன்ன ஆனை வேய்ந்த அறை வாய் சகடம்—மலை மாரிக்காலத்து மேகத்தைச் சுமந்துநின்றுற் போன்ற *தொத்துளிப்பாயாலே வேய்ந்த ஒலிக்கின்ற வாயையுடைய சகடம்,

'ஓர்வை வேய்ந்த' என்று பாடமாயின் கிறைந்த வரகுவைக்கோலாலே வேய்ந்த வென்க.

அந்த இரண்டு மரத்திலும் கால்களைக்கட்டிக் குடிலாகக்கட்டி மேலே மசம்பு முதலியனவற்றைக் கயிற்றாலே கோத்தபாயெடுத்தலெக்கூறினார்.

உருளியையும், பாரையுமுடைய சகடமென்க.

51 - 52. வேழம் காவலர் குரம்பை வய்ப்ப கோழி சேக்கும் கூடு உடை புதவின்—யானையைப் புனத்தில் நின்னுமற் காக்கின்ற தொழிலையுடையார் இதண்மேலே கட்டின குடிலையொப்பச் செறுக்கட்டின கோழிகடக்கும் கூட்டையுடைத்தாகிய குடிலின் வாசலிலே.

53 - 4. முளை எயிறு இரு பிடி முழுத்தாள் வய்க்கும் தினை அரை சிறு உரல் தாக தூங்கி—மூங்கில் முளைபோலும் கொம்பினையுடைய களிய பிடியினது முழுத்தாளையொக்கும் தினையைத் தன்னிடத்தேயுடைய சிறிய உரலை அசையும்படி தூக்கி,

கோத்து காற்றுதற்குத் தினையிடுதலின், 'தினையரைச் சிறுல்' என்றார்

55 - 6. காடகம் மகளிர் ஆடு களத்து எடுத்த விசி வீற்று இன் இயம் எடுப்ப—காடகமாடுமகளிர் ஆடுங்களத்தே கொண்டுவந்த வாளாற்பிணித்தலிறந்த இனிய முழவை யொப்ப,

56 - 7. கயிறு பிணித்து காடி வைத்த கலன் உடை மூக்கின்—தகராதபடி கயிற்றாலே வளர்த்து காடிவைத்த மிடாவையுடைய அப்பாரித்தலையுடைய,

---

* பி - ம். தொத்தளி, கொத்தளி.

புளியங்காய் நெல்லிக்காய் முதலியன ஊறவிட்டு வைத்தநீரைக் காடி யென்றார்; இனிக்காடி நெய்யென்பாருமுளர், இனிப் பாரிற் கழுத்தானவிடத் தேவைத்த மிடாவென்றுமாம்.

58. மக உடை மகடூஉ பகடு புறம் துரப்ப—குழவியைக் கைக்கொண்ட மகளிருந்து பூண்ட எருத்தை முதுகிலேஅடிப்ப,

சகடப் (50) புதவின் (52) மூக்கின்கண்ணே (57) வேப்பிலைமிடைந்த (59) மகடூஉ இருந்து துரப்பவெனமுடிக்க.

59. கோடு இணர் வேம்பின் ஏடு இலை மிடைந்த மகடூஉ (58)—கொம்பிடத்தே பூங்கொத்தையுடைய வேம்பினுடைய மேன்மையையுடைய இலையைப் பிள்ளைக்குக் காவலாகக்கொண்டிருக்கின்ற மகடூஉ,

60. *படலை கண்ணி—தழைவிரவின மாலையையும்,

பரு ஏர் எறுழ் திணி தோள்—பரிய அழகினையும் வலியினையுமுடைய இறுகின தோளினையும்,

61. முடலை யாக்கை—முறுகுண்ட உடம்பினையும்,

முழு வலி மாக்கள்—நிரம்பிய மெய்வலியினையுமுடையமாக்கள்,

62 - 3 [சிறு துளைக் கொடுநுக நெறிபட நிரைத்த பெருங்கயிற் றொழுகை.] சிறு துளை கொடு நுகம் பெரு கயிறு நெறிபட நிரைத்த ஒழுகை—சிறிய துளையினையுடைய கொடிய நுகத்தின்கண்ணே பெரியகயிற்றாலே எருதுகளை ஒருவழிப்பட நிரைத்துக்கட்டின சகடவொழுங்கினை,

துளைகளிற் செருகினகழிகள் கழுத்தசையப் பட்டுநிற்றலின, கொடுநுக மென்றார். ஒருசகடத்திற் பலபூட்டுதல் கூறினார்

63. மருங்கில் காப்ப—எருதுகள் திருகாமல் அச்சமுறியாமற் பக்கத்தே சாத்துச்செல்ல,

64. சில் பத உணவின்—இடப்படும் பொருள்களுக்குச் சிறியவாக இடப்படுமுணவினது.

என்றது உப்பை. பதம் - பக்குவம்.

கொள்ளை சாற்றி—விலைசொல்லி,

65. பல் எருது உமணர் பதி போகு நெடு நெறி—இனைத்தாற்பூட்டுதற்குப் பல எருத்தையும்அடித்துக்கொண்டுபோம் உப்புவாணிகா ஊர்களதோறும் செல்லும் நெடிய வழியினையும்,

பதிபோலப் போகுமென்றுமாம்.

மகடூஉத்துரப்ப மாக்கள்காப்பச சாற்றிப்போம் நெடுநெறியையுமென்க.

66. ஏல் இடை சழியுநர்க்கு ஏமம் ஆக—பகற்பொழுதுபோவார்க்கு இளைப்புத்தீர,

---

* "முறி மிடை படலை மாலை" (சீவக. 1889.)

67 - 76. [மலையவும் கடலவு மாண்பயன் தரூஉ, மரும்பொரு ளருத் துந் திருந்துதொடை சோன்ரு, எடிபுதை யரண மெய்திப் படம்புக்குப், பொருகணை தொலைச்சிய புண்ணர் மார்பின், விரவுவரிக் கச்சின் வெண்கை யொள்வாள், வரையூர் பாம்பிற் பூண்டுபுடை தாங்கச், சுரிகை நுழைந்த சுற்று வீங்கு செறிவுடைக், கருவி லோச்சிய கண்ணக னெறுழ்த்தோட், கடம்பமர் செருவே னன்ன மீளி, யுடம்பிடித் தடக்கை யோடா வம்பலர்:]

மலையவும் கடலவும் மாண் பயன் தரூஉம் அரு பொருள் அருத்தும் ஓடா வம்பலர்—மலையிலுள்ளனவும் கடலிலுள்ளனவுமாகிய மாட்சிமையையுடைய பயனைக் கொடுக்கும் பெறுதற்கரிய பொருள்களை உலகத்தாரெல்லாரையும் நகரப்பண்ணும் பிறக்கிடாத புதியோர்,

என்றது - மாணிக்கமும், முத்தும், சந்தனமுமுதலியன கொண்டுபோய் விற்றுத் திரிவாரைக்கூறிற்று.

பொரு கணை தொலைச்சிய புண் தீர் மார்பின்—பொருகின்ற அம்புகள் நசையைப்போக்கின புண்கள்தீர்ந்த மார்பினையும்,

சுரிகை நுழைந்த சுற்று வீங்கு செறிவு உடை—பத்திரம் செருகப்பட்ட கட்டுதலிறுகும் சேலையினையும்,

கரு வில் திருத்து தொடை ஒச்சிய கண் அகல் எறுழ் தோள்—கொடிய வில்லைத் தப்பாததொடையிலே நிரம்பவாங்கின இடமகன்ற வலியினையுடைத் தாகிய தோளினையுமுடைய,

கடம்பு அமர் செரு வேல் அன்ன வம்பலர்—கடம்பிடத்தேயிருந்த கொடிய முருகனையொத்த வம்பலர்.

மீளி உடம்பிடி தட கை ஓடா வம்பலர்—கூற்றுவனையொத்த வேலைப் பெருமையையுடைய கையிலேயுடைய பிறக்கிடாதவம்பலர்,

மார்பினையும், உடையினையும், தோளினையுமுடைய வம்பலர்.

வரை வாழ் பாம்பின் வெள் கை ஒள் வாள் நிரவு வரி கச்சில் பூண்டு புடை தாங்க—மலையிடத்தே வாழ்கின்ற பாம்புபோலே யானைக்கொம்பாற் கடைத்திட்ட வெள்ளிய நிணத்தையுடைய ஒள்ளியவாள் தன்னிடத்தில்நிரவின வரியை யுடைய கச்சினுலே தோளிலேகோக்கப்பட்டு ஒருபக்கத்தே தூங்காநிற்க,

சோன் தாள் அடி புதை அரணம் எய்தி—நடந்து வலியையுடையவாகிய காலில் அடியையமைத்தின்ற செருப்பைக்கோத்து,

படம் புக்கு—சட்டையிட்டு,

வம்பலர் (75) தாங்க (72) எய்தி புக்கு (69) வழங்கும் (80) பெரிய வழி (81) என்க.

77 - 8. தடவு கிளை பலவின் முழுமுதல் கொண்ட நெ கனி பெரு பழம் கடுப்ப—பெருமையையுடைய கிளையினையுடைய பலாவினடியிலே குலை கொண்ட *நிலவாகிய கனியினையுடைய பெரிய பழத்தையொப்ப,

* பி - ம். நிறவாகிய.

நல்லபழம் சளைமிக இராதென்றார்.

78 - 80. [நெரியற், புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத், தணர்ச்செவித் கழுதை:]

நெரியல் புணர் பொறை தாங்கிய கழுதை மிளகினது ஒத்தகனமாகச் சேர்த்த பாரத்தைத் தாங்கிய கழுதை,

வடு ஆழ் நோன் புறத்து அணர் செவி கழுதை - வடுவழுந்தின வலியினை யுடைய முதுகினையும் எடுத்தசெவியினையுமுடைய கழுதை,

80 - 81. கழுதை சாத்தொடு வழங்கும் உல்கு உடை பெரு வழி கவலை காக்கும்—கழுதையிலே மிளகெடுத்துக் கொண்டுபோகின்ற திரளோடே வம் பலர் (76) வழங்கும் பெரியவழியில் கவர்த்தவழிகளையும் காத்திருக்கும்,

உல்கு - சுங்கம்.

82. வில்லுடை வைப்பின்—விற்படையிருக்கின்ற ஊர்களில்,

வியல் காடு இயவின் —அகன்ற காட்டுவழிகளில்.

83 - 5. நீர் அரை இலவத்து அலங்கு சினை பயந்த பூளை அம் பசு காய் புடை விரிந்தன்ன வரி புற அணிலொடு—நீண்ட காளினையுடைய இலவத் தினது அசைகின்ற கொம்பு காய்த்த பஞ்சியினையுடைய அழகினையுடைத் தாகிய பசிய காயினது முதுகு விரிந்து பஞ்சுதோன்றினாலொத்த வரியை முதுகிலேயுடைய அணிலோடே,

85. கருப்பை ஆடாது—எலியும் திரியாதபடி,

86 - 8. [யாற்றறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல், வேற்றலை யன்ன வைந்நுதி நெடுந்தக, ரீத்திலை வேய்ந்த வெய்ப்புறக் குரம்பை:]

யாறு அறல் புரையும் வெரிந் கொழு மடல் உடை நெடு தகர் ஈந்து—யாற்றினது அறலையொக்கும் முதுகினையும் கொழுவிய மடலினையுமுடைய நெடிய மேட்டு நிலத்தினின்ற ஈந்து,

மடலினடி தன்னிடத்தேநிற்க மேலறுப்புண்டஈந்து அறல் போன்றிருக்கு மாறு உணர்க.

வேல் தலை அன்ன வை நுதி ஈந்து இலை வேய்ந்த எய் புறம் குரம்பை—வேலின்முனையையொத்த கூர்மையினையுடைய முனையினையுடைய ஈந்தினு டைய இலையாலேவேய்ந்த *எய்ப்பன்றிமுதுகுபோலும் புறத்தினையுடைய குடிலில்,

89 - 90. [மான்றோற் பள்ளி மகவொடு முடங்கி, யீன்பிண வொழியப் போகி:] ஈன் பிணவு மான் தோல் பள்ளி மகவொடு முடங்கி ஒழிய போகி—பிள்ளையைப்பெற்றஎயிற்றி மான்றோலாகிய படுக்கையிலே அப்பிள்ளையோடே முடங்கிக்கிடக்க ஒழிந்தோர் போய்,

---

* பி - ம். எய்ப்பன்றிபோலும்.

* பெண்ணும் பிறவு மக்கட் குரிய?' என்பதனுள் 'ஒத்த பிறவெல்லும் ஆராரீ தன்னுழிக்கண் வந்ததாமன்மையிற் †ஆயிதன் இறந்சினை கெட்டு உகரம் பெருதின்றது.

90 - 92 [சேன்சாழ், இரும்புதலை யாத்த நிருத்துசினை விழுச்சோ, நுனிவாய்ச் சுரையின் மிளிர மின்டி ;] இரும்பு தலை யாத்த நிருத்து சினை சோன்சாழ் விழு சோல் உளி வாய் சுரையின் மிளிர மின்டி—பூன் தலையிலே அழுத்தின சன்முகிய நிரட்டையும் வலியையுமுடைத்தாகிய வயிரத்தினையு முடைய சிரிய சோல்செருகின உளிபோலும் வாயினையுடைய பாரைகளாலே சட்டதன் மேற்மேலாகக் குத்துதையிலுலே.

சோல்செருகப்படுகின்ற சுரையையுடைமையிற் சுரையென்றார்; ஆகு பெயர். சுரை - குழைச்ச.

98. இரு நிலம் கமழ்பு படு சீறு குடி—கருகிலமாகிய சரம்பைநிலத்தி லுண்டாகிய புழுதியையளைத்து,

94. தண் புல் அடக்கிய வெள் பல் எயிற்றிப் - மெல்லிய புல்லரிசியை வாரிவெடுத்துக்கொண்ட வெள்ளிய பல்லையுடைய எயிற்குடியிற்பிறந்த மகளிர்,

போகி மிண்டுகையிலுலே குடி அடக்கிய எயிற்றியரென்க.

மிகவிளைந்து உதிர்ந்தபுல்லி எறும்பிழுத்துச் சேகரிட்டுவைதத இடமறிச் தெடுத்தல் அரிவைப்பண்பு.

95 - 6. பார்வை யாதத பறை தான் கினவின் கீழல் முன்றில் நிலவு உரல் பெய்து பார்வைமான்கட்டினைத தேய்த்தாளினையுடைய கினவினது விழவையுடைய முற்றதநிடத்தத தோண்டின நிலவரலிலே அப்புல்லரிசியைச் சொரிந்து,

97. குறு காழ் உலக்கை ஓசை—குறிய வயிரமாகிய உலக்கையாலே ‡குதநி,

97 - 8. செடு கினற வல் ஊற்று உவரி தோண்டி—ஆழ்ந்த கினற்றிற் சில்லூற்றாகிய உவரிநீரை முகந்துகொண்டு,

98 - 9. தொல்லை முரவு வாய் குழிசி முரி அடுப்பு எற்றி - பழைய §ஒறவாய்போன பானையிலே வார்த்தவுலையை முரிந்த அடுப்பிலேவைதது,

100. [வாரு நட்ட வாகை புழுக்கல்.]

வாரது அட்ட புழுக்கல்—அரியாதவாக்கின சோற்றை,

எயிற்றிப் (94) பெய்து (96) ஓசை (97) தோண்டி (98) எற்றி (99) அட்ட புழுக்கலெனமுடிக்க.

வாகை னன்—உப்புச்சண்டத்தோடே,

---

* தொல்காப்பியம், மரபியல், 61.

† " எயிர்ணவம்பியல். 32.

‡ பி - ம். குத்து.

§ பி - ம். வெறவாய்.

101 - 2. [ஓடாத் தும்பை வேலர் பெருமக, வேடத் தானை] ஓடா நானை வாடா தும்பை ஒய்யன் பெருமகன்—முதுகிடாதபடையினையுடைய செ டாத தும்பைமாலை சோழனல்ல வீரருடைய தலைவனுமிய

102 - 3. ஒன் தொழில் கழல் கால் செ வரைமாடன் சென்னியம் எனின்—ஒள்ளிய தொழில்களையுடைத்தாகிய வீரக்கழலணிந்த காலினையுடைய செவ்விய மலைநாட்டையுடையவனுடைய *பாணச்சாதியேமென்று கூறுவீராயின்,

104. தெய்வம் மடையின் தேக்கிலை குவைஇ - தெய்வங்களுக்குச் சோ இட்டுவைத்த பலிபோலே புழுக்கலையும் வாடலையும் (106) தேக்கிலையிலே குவிக்கையினாலே,

104 - 5. [நும் பைதீர் கடும்பொடு பதமிகப் பெறுகுவிர் :] பதம் நும் பைதீர் கடும்பொடு மிக பெறுகுவிர்—அவ்வுணவை நும்முடைய பசமையீர்ந்த சுற்றத்தோடே மிகப்பெறுகுவிர்;

வியன்காட்டியவுகளில் (82) உல்குடைத்தாகிய (81) நெடுநெறியையும் (65) வம்பலர் (76) கழுதைச்சாத்தொடுவழங்கும் (80) உல்குடைப்பெருவழிக் கவலையையும் காத்திருக்கும் (81) வில்லுடைவைப்பின் (82) குரம்பையில் (88) எயிற்றியர் (94) தாங்களட்டபுழுக்கலையும் வாடலையும் (100) எல்லிடைக்கழியு சர்க்கு எமமாகத் (66) தேக்கிலையிலே குவிக்கையினாலே (104) அப்பதத்தைப் (105) பெருமகனுகிய (101) வரைமாடன் சென்னியமெனின் (103) நும் (104) கடும்பொடு மிகப்பெறுகுவிர் (105) எனமுடிக்க.

உல்கு - இரண்டுவழிக்குங்கொள்க. குவைஇயென்னுஞ் செய்தெனெச்சம் காரணகாரியப்பொருட்டு.

106. [மானடி பொறித்த மயக்தர் மருங்கின் :] மயங்கு மான் அடி பொறித்த அதர் மருங்கின்—மின்னையின் மயங்கித்திரியும் மானடி அழுந்திக் கிடக்கின்ற வழியிடத்திலே,

107 - 8. வான் மடி பொழுதில் நீர் கலைஇ குழிந்த அகழ்—மழை பெய் நின்றுதவிர்ந்த காலத்தே நீர்நிற்கவேண்டுமென்று வெட்டுதலாலே குழிந்தகழும்,

அகழப்படுதலின் அகழென்றது ஆகுபெயர்.

108. சூழ் பலம்பின் அகத்து ஒளித்து ஒடுக்கி—அதனைச் சூழப்பதித் துக்கிடக்கின்ற மட்டுக்குழிகளினுள்ளே மறைத்தொதுக்கி,

நன்னீர்குடிக்கவருமென்று ஊரைச்சூழப்பதித்தகுழி.

109 - 10. புகழா வாகை பூவின் அன்ன வினை மருப்பு எனம் வரவு பார்த்து இருக்கும்—அகத்திப்பூவினையொத்த வினைத்த கொம்பினையுடைய பன்றி யினது கிருள்ளைகளும் வரவைப்பார்த்திருக்கும்.

111. அரை சான் வேட்டம் அழுங்கின் - கடுவியாமத்து வேட்டை ஒழிர் கார்களையின்,

---

* பி - ம். பர்ணசாலியேம்.

பகல் காள்—அதன் பிற்றைஞாளிலே,

112 - 5. [பகுவாய் ஞமலியொடு பைம்புத லெருக்கித், தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி, முள்ளரைத் தாமரைப் புல்லிதழ் புரையு, செடுஞ் செவிக் குறுமுயல் போக்கற வினை இ :]

முன் அரை தாமரை புல் இதழ் புரையும் செடு செவி குற முயல் போக்கு அற — முன்னைத் தண்டிலேயுடைய தாமரையினது புறவிதழையொக்கும் செடிய செவியினையுடைய குறிய முயல்களை ஓரிடத்தும்போக்கில்லாதபடி,

தொகு வாய் வேலி தொடர் வலை மாட்டி வினை இ — குறித்த இடத்தை புடைய வேலியிடத்தே ஒன்றோடொன்றுபினைந்த வலைகளை *மாட்டிவினைத்து,

பகு வாய் ஞமலியொடு பைம்புதல் எருக்கி — அங்காந்த வாயையுடைய நாய்களுடனேசென்று பசிய தழைகளையடித்து அவற்றிற்கிடமாமாறோட்டி,

116 - 7. [கடுங்கட் கானவர் கடறுகூட் டுண்ணு, மருஞ்சுரம் :]

கடறு கூட்டுண்ணும் அரு சுரம்—காட்டிலுள்ள முயல்களைக் கொன்னே கொண்டுண்ணும் அரிய பாலைநிலம்.

கடுங்கண் கானவர்—தறுகண்மையையுடைய கானவர்,

கானவர் (116) பயம்பின் ஒடுங்கிப் (108) பார்த்திருக்கும் (110) இரை வேட்டமழுங்கிற் பகுளியிலே (111) முயலைப் போக்கறவினைத்து (115) எருக்கி (112) கூட்டுண்ணும் (116) அருஞ்சுரமெனமுடிக்க.

117. அரு சுரம் இறந்த †அம்பர் குறும்பில் சேப்பின்—இவ்வரியநிலத்தைக் கைவிட்ட மற்றைநிலத்திற் குறும்பிற்றங்கில்,

குறும்பிற்சேப்பின் (129) என்பதனை இவ்விடத்துக்கூட்டுக.

இதனால் கண்பகலும் வெளிலுமாகிய பாலைநிலங்கூறி அதனைக்கலந்தில மும் கூறினர்.

இனி நீங்கள் அருஞ்சுரத்தைக்கடந்தபின்னரென்றமுரைப்பர்.

117 - 8. [பருத்துபட, வொன்னுத் தெவ்வர் கடுங்க வோச்சி :] ஒன்னு தெவ்வர் கடுங்க பருத்து பட ஓச்சி —பொருந்தாதபகைவர் அஞ்சப் பருத்தகள் ‡படியக் குத்தி,

119 - 20. வை நுதி மழுங்கிய புலவு வாய் எஃகம் வடி மணி பலை யொடு கிளைஇ—கூர்மையையுடைய முனைமழுங்கின புலாலுறும் வாயையுடைய வேலை வடித்த மணிகட்டின பலகைகளோடே கிளைத்துலவித்து,

120 - 21. முடி காண் சாபம் சார்த்திய கணை திருந்து வியல் நகர்—தலையிலே முடிந்த காணையுடைய வில்லைச்சார்த்திவைத்த அம்புதங்கும் அகற்சியையுடைய வீடுகளையும்,

---

* பி - ம். மூட்டிவினைத்து.

† பி - ம். உம்பர், அம்பல்.

‡ பி - ம். மடிய.

122. ஊகம் வேய்ந்த உயர் நிலை வரைப்பின்—ஊகம்புல்லாலேவேய்ந்த உயர்ந்த நிலைமையினையுடைய மனையும்,

123 - 4. வரை தேன் புரையும் கலை கடை புதையொடு கடு தறி தாங்கும் கணை கால் பந்தர்—மலையிற்றேனிருலேயொக்கும் குதையினையுடைத் தாகிய அடியினையுடைய அம்புக்கட்டுகளுடனே ஓசைகடிய தறியுந்தாங்கும் நிரண்ட காலையுடைய பந்தரினையும்,

125. தொடர் காய் யாத்த துன் அரு கடி நகர்—சங்கிலிகளாலே காய் களைக்கட்டிவைத்த விட்டுதற்கரிய காவலையுடைய வீட்டினையும்,

126. [வாழ்முன் வேலிச் சூழ்மினைப் படப்பை:] முன் வாழ் வேலி சூழ் மினை படப்பை—முன்னையுடைய வாழ்வேலியினையும் அதனைச்சூழ்ந்த காவற் காட்டினையுடைத்தாகிய பக்கத்தினையும்,

127. கொடு நுகம் தழீஇய புதவின்—கொடிய கணையமரம் எதட்ட உட் கதவையுடைய வாயிலினையும்,

127 - 8. செ நிலை செடு நடி வய கழு நிரைத்த வாயில்—செவ்விய நிலை யினையும் செடிய முனையினையுமுடைய வலியையுடைய கழுக்கள் நிரைத்த ஊர் வாசலினையுமுடைய.

பகைவரைக்குத்துதற்குக் கழுவைத்தார்.

129. கொடு வில் எயினர் குறும்பில் சேப்பின்—கொடிய வில்லையுடைய எயினச்சாதியிலுள்ளாருடைய அரணிலேதங்கின்,

கணை துஞ்சுவியனகர் (121) முதலியவற்றையுடைய குறும்பென்க.

130 - 31. களர் வளர் சுரத்தின் காழ் கண்டன்ன சுவல் மிசை செல்லின் செ அவிழ் சொன்றி—களர்நிலத்தேவளர்ந்த சுரத்தினதுவிதையைக் கண்டாற் போன்ற மேட்டுநிலத்தேவிளைந்த செல்லினது சிவந்த அவிழ்கிய சோற்றை,

132 - 3. ஞமலி தந்த பனவு சுல் உடும்பின் வறை கால்பாத்தது வயின் தொறும் பெறுகுவிர்—காய்கடித்துக்கொண்டுவந்த அக்குமணிபோலும் முட்டை களையுடைய உடும்பினது பொரியலாலே மறைத்தனை மனைதோறும் பெறு குவிர்;

சேப்பிற் பெறுகுவிரென்க.

134 - 6. யானை தாக்கினும் அரவு மேல் செலினும் நீல் நிறம் விசும்பின் வல் ஏறு சிலைப்பினும் சுல் மகன் மாறு மறம் பூண் வாழ்க்கை—யானை தன் மிசை செல்லினும் பாம்பு தன்மேலே செல்லினும் நீலநிறத்தையுடைய மேகத் தினிடத்தே வலிய உருமேறு இடிப்பினும் சூழ்கொண்டமகள் அவையிற்றிற்கு ஞ்சி மீளா மறத்தைப்பூண்ட வாழ்வினையும்,

137. வலி கூட்டுணவின் வாள் குடி பிறந்த—தமது வலியாற் கொள்ளை கொண்டுண்ணும் உணவினையுமுடைய வாட்டொழிலேசெய்யுங் குடியிற்பிறந்த,

138. புலி போத்து அன்ன புல் அணல் காளை—புலியினது போத்தை யொத்த புல்லென்ற தாடியையுடைய அச்சிலத்தத்தலைவன்,

பகல் சான்—அதன் பிற்றைஞாளிலே,

112 - 5. [பருவாய் ஞமலியொடு பைம்புத லெருக்கித், தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி, முள்ளரைத் தாமரைப் புல்லிதழ் புரையு, செடுஞ் செவிக் குறுமுயல் போக்கற வினை இ :]

முன் அரை தாமரை புல் இதழ் புரையும் செடு செவி குற முயல் போக்கு அற — முள்ளைத் தண்டிலேயுடைய தாமரையினது புறவிதழையொக்கும் செடிய செவியினையுடைய குறிய முயல்களை ஓரிடத்தும்போக்கில்லாதபடி,

தொகு வாய் வேலி தொடர் வலை மாட்டி வினை இ — குறித்த இடத்தை யுடைய வேலியிடத்தே ஒன்றோடொன்றுபின்னைந்த வலைகளை *மாட்டிவினைத்து,

பரு வாய் ஞமலியொடு பைம்புதல் எருக்கி — அங்காந்த வாயையுடைய நாய்களுடனேசென்று பசிய தழைகளையடித்து அவற்றிற்கிடமாமலோட்டி,

116 - 7. [கடுங்கட் கானவர் கடறுகூட் டெண்ணு, மருஞ்சுரம் :]

கடறு கூட்டெண்ணும் அரு சுரம்—காட்டிலுள்ள முயல்களைக் கொல்லை கொண்டெண்ணும் அரிய பாலைநிலம்.

கடுங்கண் கானவர்—தறுகண்மையையுடைய கானவர்,

கானவர் (116) பயம்பின் ஒடுங்கிப் (108) பார்த்திருக்கும் (110) இரா வேட்டமழுங்கிற் பகலளிலே (111) முயலைப் போக்கறவினைத்து (115) எருக் கிக் (112) கூட்டெண்ணும் (116) அருஞ்சுரமெனமுடிக்க.

117. அரு சுரம் இறந்த †அம்பர் குறும்பில் சேப்பின்—இவ்வரியநிலத் தைக் கைவிட்ட மற்றைநிலத்திற் குறும்பிற்றங்கில்,

குறும்பிற்சேப்பின் (129) என்பதனை இவ்விடத்துக்கூட்டுக.

இதனால் கண்பகலும் வேனிலுமாகிய பாலைநிலக்கூறி அதனைக்கலத்தல மும் கூறினர்.

இனி நீங்கள் அருஞ்சுரத்தைக்கடத்தபின்னரென்றுமுரைப்பர்.

117 - 8. [பருத்துபட, வொன்னத் தெவ்வர் கடுங்க வோச்சி :] ஒன்ன தெவ்வர் கடுங்க பருத்து பட ஓச்சி —பொருந்தாதபகைவர் அஞ்சப் பருத்தகள் ‡படியச் குத்தி,

119 - 20. வை நுதி மழுங்கிய புலவு வாய் எஃகம் வடி மணி பலை யொடு திரைஇ—கூர்மையையுடைய முனைமழுங்கின புலாலுறும் வாயையுடைய வேலை வடித்த மணிகட்டின பலகைகளோடே திரைத்துவைத்து,

120 - 21. முடி நாண் சாபம் சார்த்திய கணை துஞ்சு வியல் நகர்—தலை யிலே முடித்த நாணையுடைய வில்லைச்சார்த்திவைத்த அம்புதங்கும் அகற்சியை யுடைய வீடுகளையும்,

---

* பி - ம். மூட்டிவினைத்து.

† பி - ம். உம்பர், அம்பல்.

‡ பி - ம். மடிய.

122. ஊகம் வேய்ந்த உயர் நிலை வரைப்பின்—ஊகம்புல்லாலேவேய்ந்த உயர்ந்த நிலைமையினையுடைய மதிலையும்,

123 - 4. வரை தேன் புரையும் கலை கடை புதையொடு கடு தடி தூங்கும் கணை கால் பந்தர்—மலையிற்றேனிறாலேபொக்கும் குதையினையுடைத் தாகிய அடியினையுடைய அம்புக்கட்டுகளுடனே ஒசைகடிய தடியுற்றூங்கும் நிரண்ட காலையுடைய பந்தரினையும்,

125. தொடர் காய் யாத்த துன் அரு கடி நகர்—சங்கிலிகளாலே காய் களைக்கட்டிவைத்த கிட்டுதற்கரிய காவலையுடைய வீட்டினையும்,

126. [வாழ்முன் வேலிச் சூழ்மினைப் படப்பை:] முன் வாழ் வேலி சூழ் மினை படப்பை—முன்னையுடைய வாழ்வேலியினையும் அதனைச்சூழ்ந்த காவற் காட்டினையுடைத்தாகிய பக்கத்தினையும்,

127. கொடு நகம் தழீஇய புதவின்—கொடிய கணையமரம் ஏறட்ட உட் கதவையுடைய வாயிலினையும்,

127 - 8. செ நிலை செடு நுதி வய கழு ஞரைத்த வாயில்—செவ்விய நிலை யினையும் செடிய முனையினையுமுடைய வலியையுடைய கழுக்கள் நிரைத்த ஊர் வாசலினையுமுடைய.

பகைவரைக்குத்துதற்குக் கழுவைத்தார்.

129. கொடு வில் எயினர் குறும்பில் சேப்பின்—கொடிய வில்லையுடைய எயினசாதியிலுள்ளாருடைய அரணிலேதங்கின்,

கணை துஞ்சுவியனகர் (121) முதலியவற்றையுடைய குறும்பென்க.

130 - 31. கனர் வளர் ஈந்தின் காழ் கண்டன்ன சுவல் மினை செல்லின் செ அவிழ் சொன்றி—கனர்நிலத்தேவளர்ந்த ஈந்தினதுவிதையைக் கண்டாற் போன்ற மேட்டுநிலத்தேவிளைந்த நெல்லினது சிவந்த அவிழாகியசோற்றை,

132 - 3. ஞமலி தந்த பனவு சூல் உடும்பின் வறை கால்பாத்தது வயின் தொறும் பெறுகுவிர்—காய்கடித்துக்கொண்டுவந்த அக்குமணிபோலும் முட்டை களையுடைய உடும்பினது பொரியலாலே மறைத்தனை மினைதோறும் பெறு குவிர்;

சேப்பிற் பெறுகுவிரென்க.

134 - 6. யானை தாக்கினும் அரவு மேல் செலினும் சீல் நிறம் விசும்பின் மல் ஏறு சிலைப்பினும் சூல் மகள் மாறு மறம் பூண் வாழ்க்கை—யானை தன் எதிரே செல்லினும் பாம்பு தன்மேலே செல்லினும் சீலநிறத்தையுடைய மேகத் திடத்தே வலிய உருமேறு இடிப்பினும் சூற்கொண்டமகள் அலையிற்றிற்கு அஞ்சி மீளா மறத்தைப்பூண்ட வாழ்வினையும்,

137. வலி கூட்டுணவின் வாள் குடி பிறந்த—தமது வலியாற் கொள்ளை கொண்டுண்ணும் உணவினையுமுடைய வாட்டொழிலேசெய்புங் குடியிற்பிறந்த,

138. புலி போத்து அன்ன புல் அணல் காளை—புலியினது போத்தை போத்த புல்லென்ற தாடியையுடைய அரிலத்தத்தலைவன்,

139 - 40. செல்காய் அன்ன கரு வில் சுற்றமொடு கேளா மன்னர் கடி புலம் புக்கு—தான் குறித்தவிலங்கின்மேலே செல்கின்றகாய் அதனைத் தப்பாமற் கொள்ளுமாறுபோன்ற கொடியவில்லையெடுத்த காவலாளருடனே தன் வார்த்தைகேளாத பகைவருடைய காவலையுடைய நிலத்தேசென்று,

141. நாள் ஆ தந்து நறவு நொடை தொலைச்சி—விடியற்காலையிலே அவர்கள்பசுக்களை அடித்துக்கொண்டுபோந்து அவற்றைக் கள்ளுக்கு விலையாகப் போக்கி,

142. இல் அடு கள் இன் தோப்பி பருகி—அதற்குப் பின்பாகத் தமது இல்லிலே சமைத்த கள்ளுக்களில் இனிதாகிய நெல்லாற்செய்த கள்ளையுண்டு,

143. மல்லல் மன்றத்து மத விடை கெண்டி—வளப்பத்தினையுடைய நன்றிலே வலியையுடைய ஏற்றை அறுத்துத்தின்று,

144. மடி வாய் தண்ணுமை நடுவண் சிலைப்ப—தோலை மடித்துப் போர்த்த வாயையுடைய மத்தளம் தங்களுக்குநடுவே முழங்காநிற்ப,

145 - 7. [சிலைநவி லெறுழ்த்தோ ளோச்சிவலன் வளையூஉப், பகன் மகிழ் தூங்குந் தூங்கா விருக்கை, முரண்டலை கழிந்த பின்றை:] சிலை நவில் எறுழ் தோள் ஓச்சி வலன் வளையூஉ பகல் மகிழ்தூங்கும் தூங்கா முரண் தலை இருக்கை கழிந்த பின்றை—வில்லுப்பயின்ற வலியையுடைய இடத்தோளை யெடுத்து வலப்பக்கத்திலேவளைந்து பகற் பொழுதிலே மகிழ்ச்சியுடனே யாடும் அசையாப்பொருதலையுடைய குடியிருப்பினைக் கடந்தபின்பு,

இதனாற் குறிஞ்சிநிலம் முற்கூறி அதன்பரைப்புலமும் பிற்கூறினார்.

147 - 8. மறிய குளகு அரை யாத்த குறு கால்—ஆட்டுமறிகள் நின்று தின்னுந் தன்மையையுடைய தழைகளைத் தம்மிடத்தேகட்டின குறிய கால்களையும்,

148 - 9. [குரம்பைச், செற்றை வாயிற் செறிகழிக் கதவின்:]

செற்றை வாயில்—சிறுதூற்றையுடைய வாயிலினையும்,

குரம்பை—குரம்பையினையும்,

கழி செறி கதவின்—கழிகளாற் கட்டப்பட்ட கதவினையும்,

150. [கற்றை வேய்ந்த கழித்தலைச்சாம்பின்:]. கழித்தலை கற்றை வேய்ந்த சாம்பின்—வரிந்த கழிகளிடத்தே வரகுகற்றைகளாலே வேய்ந்த சேக்கையையும்,

151. [அதளோன் றுஞ்சுங் காப்பி னுதள:] உதள அதளோன் றுஞ்சும் காப்பின்—கிடாயினுடைய தோல்களைப் பாயலாகவுடைய முதியோன் துயில் கொள்ளுங் காவலையுமுடைய,

* "மோத்தையுந் தகரு முதளு மப்பரும், யாத்த வென்ப யாட்டின் கண்ணே" என்றார்மரபியலில்.

---

* தொல்காப்பியம், மரபியல், 47.

காலினையும் (148) வாயிலினையும் கதவினையும் (149) சாம்பினையும் (150) காப்பினையு (151) முடைய குரம்பை (148) யென்க.

152. நெடு தாம்பு தொடுத்த குறு தறி முன்றில்—தாமணிதொடுத்த நெடிய தாம்புகள்கட்டின குறியமுளைகளையுடைய முற்றத்தினையும்,

153 - 4. கொடு முகம் துருவையொடு வெள்ளை சேக்கும் இடு முள் வேலி எரு படு வரைப்பின்—வளைந்த முகத்தினையுடைய செம்மறியாட்டுடனே வெள்ளாடுங்கிடக்கும் கட்டுமுள்ளாகிய வேலியினையுமுடைய எருமிகுகின்ற ஊரிடத்து,

குரம்பையினையும் (148) முன்றிலினையும் (152) வேலியினையுமுடைய வரைப்பென்க.

155. [நள்ளிருள் விடியற் புள்ளெழப் போகி :]

நள் இருள் விடியல் புள் எழ—செறிந்த இருள்போகின்ற காலத்தே பறவைகள் துயிலெழாநிற்ப,

போகியென்பதனை மேலேகூட்டுக.

156. புலி குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி—புலியினது முழக்கமபோலும் முழக்கத்தையுடைய மத்தை ஆரவாரிக்கும்படி கயிற்றைவலித்து,

157 - 8. ஆம்பி வால் முகிழ் அன்ன கூம்பு முகை உறை அமை தீ தயிர் கலக்கி—குடைக்காளானுடைய வெள்ளிய முகைகளையொத்த குவிந்த முகிழ்களையுடைய உறையாலே இறுகததோய்ந்த இனிய தயிரைக்கடைந்து,

முகை - மொட்டு. முகிழ் - ஆடையின்மேல் புடைத்துநிற்பது.

158. நுரை தெரிந்து—வெண்ணெயையெடுத்து,

159. புகர் வாய் குழிசி பூ சுமடு இரீஇ போகி (155)—தயிர் புள்ளியாகத்தெறித்த *வாயையுடைய மோர்ப்பானையைப் பூவாற்செய்த சுமட்டைத் தலையிலேவைத்து முற்கூறிய குறிஞ்சிநிலத்தேறப்போய்,

160. நாள் மோர் மாறும்—காலையிலே மோரைவிற்கும்,

நல் மா மேனி—நன்றாகிய மாமையாகிய நிறத்தினையும்,

161. சிறுகுழை துயல்வரும் காதின்—தாளுருவியசையும காதினையும

பணை தோள்—மூங்கில்போலும் தோளினையும்,

162. குறு நெறி கொண்ட கூந்தல்—குறிதாகிய அறலைத தன்னிடததே கொண்ட மயிரினையுமுடைய,

ஆய் மகள்—ஆய்ச்சாதியிற்பிறந்தமகள்,

மேனி முதலியவற்றையுடையமகள்.

163. அளை விலை உணவின் கிளை உடன அருததி - மோர்விற்றதனாலுண்டாகிய நெல் முதலியவற்றாலே சுற்றத்தாரெல்லாரையும் உண்ணப் பண்ணி;

---

* பி-ம். நிறத்தையுடைய.

164. செய் வினை கட்டி பசு பொன் கொள்ளான்—பின்பு தான் செய்யை விற்கின்றவினைக்குக் கட்டியாகப் பசும்பொன்னை வாங்காளாய்,

165. எருமை கல் ஆன் கரு ஈகு பெறூஉம் குடி (166)—பாலெருமையையும், கல்லபசுவையும், கரிய எருமைசாதினையும் செய்க்கு ஒப்பாகச்சொல்லி வாங்குங்குடி,

* அட்டியென்றுபாடமோதி வார்த்தென்றுகூறுதலுமாம்.

குறிஞ்சிநிலத்தே செய்யையிற்று அவர்கள் அடித்துக்கொண்ட எருமை முதலாயவற்றை விலையாகவாங்கிஞரென்க.

166. மடி வாய் கோவலர்—சிக்கையிடித்தலாலே மடித்த வாயையுடைய இடையர்.

குடி வயின் சேப்பின்—குடியிருப்பிலே தங்குவீராயின்,

167 - 8. [இருவினை ஞெண்டின் சிறுபார்ப் பன்ன, பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர் :] ஞெண்டின் இரு வினை சிறு பார்ப்பு அன்ன பசு தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்—கண்டினது பெரிய சற்றமாகிய சிறிய பார்ப்பை யொத்த செவ்வித்தினையரிசியொலாக்கின சிலுத்தசோற்றைப் பாலுடனேபெறுகுவிர் ;

புன்னெழாகிற்க (155) வாங்கி (156) கலக்கித் தெரிந்து (158) இரீஇப் (159) போகி (155) மறும் (160) ஆய்மகள் (162) என்க.

மடிவாய்க்கோவலர் (166) வரைப்பிடத்து (154) ஆய்மகள் (162) அருத்திக் (163) கொள்ளாளாய்ப் (164) பெறூஉம் (165) குடிவயிற்சேப்பின் (166) மூரல் பாலொடும்பெறுகுவிரெனமுடிக்க.

169. தொடுதோல் மரீஇய வடு ஆழ் சோன் அடி—செருப்புவிடாமற் கிடந்த வடுவழுந்தின வலியையுடைய அடியினையும்,

170. விழு தண்டு ஊன்றிய கை—பசுக்களுக்கு வருத்தஞ்செய்யும் தடியையூன்றின கை,

மழு நின் வல் கை—மரங்களை ஒடியெறிந்து கொடுக்கும் கோடாரியால் தழும்பிருந்த வலிய கையினையும்,

171. உறி கா ஊர்ந்த மறு படு மயிர் கவல்—இரண்டுதலைகளிலும் உறியினையுடைய காக்கள் மேலேயிருந்ததனால் உண்டாகிய தழும்புமிக்க மயிர் செழுந்த தோட்கட்டினையும்,

172. மேம் பால் உரைத்த ஓரி—எல்லாமணமும் பொருந்தும் பசுக்கறந்த பாற்கையைத் தடவின மயிரையும்,

172 - 4. [ஓங்குமிசைக், கோட்டவும் கொடியவும் விசையிற் காட்ட, பல்பூ மிடைந்த படலைக் கண்ணி :] காட்ட ஓங்கு மிசை கோட்டவும் கொடியவும் பல் பூ விசையி மிடைந்த படலை கண்ணி—காட்டிடத்தனவாகிய உயர்

* 'செய்வினைக்கட்டி' (164) என்பதை செய்வினைக்கு அட்டியெனப்பிரிக்க.

கின்ற உச்சியினையுடைய கொம்புகளிலுள்ளவும் கொடிகளிலுள்ளவுமாகிய பல பூக்கள் கலந்துநெருங்கிய கலம்பகமாகிய மாலையினையும்.

175. ஒன்று அமர் உடுக்கை—ஒன்றாய்ப்பொருந்திய உடையினையு முடைய,

கூழ் ஆர் இடையன்—பாற்சோற்றையுண்கின்ற இடையன்,

அடிமுதலியவற்றையுடையஇடையன்.

176. கன்று அமர் நிரையொடு கானத்து அல்கி—கன்றுகள்பொருந்தின பசத்திரளோடே காட்டிலேதங்கி

177 - 9. [அந்து ணவிர்புகை கமழக் கைம்முயன்று, ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெகிழிச், செந்தீத் தொட்ட கருந்துளைக் குழலின் :]

ஞெலிகோல் அம் நுண் அவிர் புகை கமழ கை முயன்று கொண்ட செ தீ ஞெகிழி தொட்ட கரு துளை குழலின்—தீக்கடைகோலாலே அழகிய நு ணியதாய்விளங்கும் புகை முற்படப்பிறக்கும்படி கையாலேகடைந்துகொண்ட சிவந்த நெருப்பினையுடைய கடைக்கொள்ளியால் துளையிட்ட கரிய துளையினை யுடைய குழலாலெழுப்பின,

பெருவிறலென்பதனை இடையனென்பதனொடு முன்னேகூட்டியெண் ணுக.

இனி, ஞெலிகோல் படுத்தகோல், ஞெகிழி கடைகின்றகோலென்று முரைப்பர்.

180. இன் தீ பாலை முனையின்—மிகவுமினிய பாலையென்கின்ற பண் ணைத் தான் வெறுக்கில்,

180 - 82 [குமிழின், புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின், வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சி :] குமிழின் புழல் கோடு தொடுத்த மரல் புரி விரல் எறி நரம்பின் வில் யாழ் இசைக்கும் குறிஞ்சி—குமிழினது உட் பொய்யாகிய கொம்பிடத்தே வளைத்துக்கட்டின மரற்கயிறாகிய விரலாலேதெறி த்துவாசிக்கும் நரம்பினையுடைய வில்லாகிய யாழொலிக்குங் குறிஞ்சியென்கின்ற பண்ணை,

183. பல் கால் பறவை கிளை செத்து ஓர்க்கும்—பலகாலினையுடைய வண்டுகள் தம் சுற்றத்தினோசையாகக்கருதிச் செவிகொடுத்துக்கேட்கும்.

* "நண்டுந்தும்பியும்" என்னுஞ் சூத்திரத்திற் செவிப்பொறியான் இவை யுணர்தல்கூறினாம்.

184. புல் ஆர் வியல் புலம் போகி—புல்லுநிறைந்த அகற்சியையுடைய நிலத்தைக்கடந்துபோய்,

முன்னர் இடையர்குடியிருப்புக்கூறிப் பின்னர் அவர்பசுக்கள்முதலியன நிற்கின்ற முல்லைநிலமுங்கூறினார்.

---

* தொல்காப்பியம், மரபியல், 31.

184 - 5. முள் உடுத்து எழு காடு ஓங்கிய தொழு உடை வரைப்பின்—முள்ளுத் தன்னிடத்தேசூழ்ந்து எழுகின்ற * விடத்தேதொடரி முதலிய காடு கள்சூழவளர்ந்த தொழுக்களையுடைய ஊர்களில்,

இது, பசுக்கள்முதலியனமேயாமற் காக்கின்ற இளங்காட்டையுடைய படைத்தலைவரிருப்புக்கூறிற்று.

186. பிடி கணத்து அன்ன சூதிர் உடை முன்றில்—பிடித்திரள்கின்றாற் போன்ற வரகுமுதலியனநிற்கும் குதிர்களையுடைய முன்றிலினையும்,

187. களிறு தாள் புரையும் திரிமரம் பந்தர் — யானையினது காலை யொக்கும் வரகுதிரிகை நட்டுநிற்கும் பந்தரினையும்,

188 - 9. குறு சாடு உருளையொடு கலப்பை †சாரத்தி நெடு சுவர் பலறந்த புகை சூழ் கொட்டில்—குறிய சகடத்திலுருளைகளோடே கலப்பையையும் சார்த்திவைக்கையினாலே நெடிய சுவரிடத்தில் தேய்ந்த புகைசூழ்ந்த கொட்டி வினையுமுடைய,

நெடுகக்கட்டி ஒருபக்கததிலே அடுப்பெரிதது ஒருபக்கததிலே தொழிலொழிந்த நாளில் சகடையிலுருளையையும கலபபையையுஞ்சார்த்தி எருதுகளுங் கட்டிநிற்றலிற் கொட்டிலெனறா.

190 - 91. பருவ வானத்து பா மழை கடுப்ப கரு வை வேய்ந்த கவின குடி சிறு ஊா—மாரிக்காலததையுடைய விசும்பிடததே பரந்த மேகத்தையொப்ப வரகுவைக்கோலாலேவேய்ந்த அழகினையுடைய குடியிருப்பினையுடைய சிறிய ஊர்களிலே,

சிறூர். அம்முல்லைநிலதது உழுதுணபாரிருப்பு.

192 - 3. நெடு குரல் பூனை பூவின அன்ன குறு தாள் வரகின குறள அவிழ் சொன்றி—நெடிய கொத்தினையுடைய சிறுபூனையினது பூவையொதத குறிய தாளினையுடைய வரகினது சிறிய அவிழ்களாகிய சோற்றை

194 - 5. புகர் இணர் வேங்கை வீ கண்டன்ன அவரை வால் புழுக்கு அட்டி—நிறததையுடைய கொததினையுடைய வேங்கைப்பூவைக் கண்டாலொதத அவரைவிதையினது நன்றாகியபருப்பை மிகவிட்டு,

வேங்கைப்பூ வரிகளையுடைய விதைககு உவமை புழுக்கு - புழுங்கவெந்தது; கும்மாயமுமாம்; பருப்புச்சோறுமென்ப.

195 - 6. ‡ [பயில்வுற், றின்சுவை மூரற் பெறுகுமிா ·]

இடையன் (175) அல்கிப் (176) பாலையைத தான்முனையின் (180) அதனைக் கைவிட்டு விரலாலே வாசிக்குங்குறிஞ்சியைப் (182) பறவையோர்க்கும்

---

* விடத்தே தொடரி - ஒருவகை முள் மரம்; விடத்தர், விடத்தேரை, விடத்தேரென இப்பெயா வழங்கும்,

† பி - ம். சாத்தி.

‡ இதற்கு ஒருபிரதியிலும் உரைகிடைததிலது. கலத்தலினாலே இனிய சுவையினையுடைத்தாகிய மூரலோடே பெறுகுமிரென்க.

(183) புலத்தைப் போகி (184) வரைப்புக்களின் (185) முன்றில் (186) முதலியவற்றையுடைய சீறூர்களிலே (191) வரகின்சொன்றியைப் (193) புழுக்கையட்டி (195) மூரலோடே பெறுகுவிரெனமுடிக்க.

196. ஞாங்கர்—அந்நிலத்திற்குமேல்,

197. குடி நிறை வல்சி செ சால் உழவர்—அக்குடியிருப்புநிறைந்த உணவினையுடைய செவ்விய சாலாகவுழுகின்ற உழவுத்தொழிலையுடையோர்,

ஒருசால் இருசாலென்றல் உழவுத்தொழிற்குமரபு.

198. நடை நவில் பெரு பகடு புதவில் பூட்டி—உழவுத்தொழிலிலே பயின்ற பெரிய எருதுகளை வாயிலிலே நகத்தைப் பூட்டிக் கொண்டுசென்று,

199 - 200. பிடி வாய் அன்ன மடி வாய் நாஞ்சில் உடும்பு முகம் முழு கொழு மூழ்க ஊன்றி—பிடியினது வாயையொத்த வளைந்தவாயையுடைய கலப்பையினுடைய உடும்பினது முகத்தையொத்த பெருங்கொழு மறைய அமுக்கி

201. தொடுப்பு எறிந்து உழுத துவர் படு துடவை—முற்பட வளைய வுழுது விதைத்தபின்னர் இடையே உழுத களைகளைக் களைக்கொட்டுச்செத்திய தோட்டத்தை,

202. அரி புகு பொழுதின—அறுக்கும்பருவம் வருங்காலத்தே,

202 - 5. [இரியல் போகி, வண்ணக் கடம்பி னறுமல ரன்ன, வளரிளம் பிள்ளை தழீஇக் குறுங்காற். கறையணற் குறும்பூழ் கட்சி சேக்கும்:]

குறு கால் கறை அணல் குறும்பூழ்—அதன்கட்டங்கும் குறுங்காலினையும் கருமையையுடையகழுத்தினையுமுடைய குறும்பூழ்,

வண்ணம் கடம்பின் நறு மலர் அன்ன வளர் இள பிள்ளை தழீஇ—வெள்ளிய நிறத்தையுடைய கடம்பினது நறுநாற்றத்தினையுடைய பூவையொத்த வளருகின்ற இளையபிள்ளைகள் மிகவும் பறததலாற்றாதனவற்றையும் கூட்டிக் கொண்டு,

*"பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை" என்றார்.

இரியல் போகி கட்சி சேக்கும்—அவர்களாரவாரத்திற்கஞ்சிக் கெடுதற்றன்மையையுடையவாய் ஆண்டுநின்றும்போய்க் காட்டிலேதங்கும்,

206. வல் புலம் இறந்த பின்றை—முல்லைநிலத்தைப் போனபின்பு,

இதனால், முற்றுங்குடிச்சீறூருழவரால் உழுதற்குரிய முல்லைநிலமுங்கூறினார். இது மருதநிலத்தைச்சேர்ந்த முல்லைநிலம்.

உழவர் பூட்டி ஊன்றி உழுததுடவை அரிபுகுபொழுதில் குறும்பூழ் பிள்ளை தழீஇப் போகிச் சேக்கும் வன்புலமென்க.

206 - 7. மெல் தோல் மிதி உலை கொல்லன் முறி கொடிறு அன்ன மெத்தென்ற துருத்தியை அமுக்கி ஊதுகின்ற உலையில் கொற்றொழில்செய்கின்றவனுடைய முறிந்த கொடிற்றையொத்த,

* தொல்காப்பியம், மரபியல், 4.

208. வை தாள் அலவன் அளறு அலை கிளைய—கப்பித்த காலையுடைய ஞெண்டினது சேற்றின்கண்உண்டாகிய முழைதொறும்படி,

209 - 10. பை சாய் கொன்ற மண் படு மருப்பின் கார் ஏறு பொருத கண் அகல் செறுவின்—பரியகோரையை அடியிலே குத்தியெடுத்த மண்ணிடத்தின்ற கொம்பையுடைய கரிய கடாக்கள் தம்மிற்பொருத இடமகன்ற செய்யின்கண்,

211. உழாஅ நண் தொளி கிரவிய வினைஞர்—தாம் உழப்படாத அந்த நண்ணிய சேற்றை ஒக்கமிதித்தஉழவர்,

212. முடி சாறு அழுத்திய தொடு நீர் செறுவில் — முடியாகக்கிடக்கின்ற சாற்றைநட்ட செடியினரையுடைய செய்களில்,

கிளையக் கொன்ற மருப்பின் ஏறுபொருத செறுவில் தொளிலையிரங்கிய வினைஞர் சாற்றையழுத்திய செறுவென்க.

213 - 4. கனைஞர் தந்த கனை கால் செம்தல் கள் கமழ் புது பூ முனையின்—அச்செய்யில் கனைகளைப்பறிப்பார் பறித்து ஏறட்ட நிரண்டதாளினையுடைய செந்தலினது தேனுறுகின்ற புதியபூவை வெறுத்தாராயின்,

214 - 6. [முட்சினை, முகைசூழ் தகட்ட பிறழ்வாய் முள்ளிச், கொடுங் கான் மாமலர் கொய்து கொண்டு:] முகை சூழ் முள் சினை முள்ளி தகட்ட கொடு கால் பிறழ் வாய் மா மலர் கொய்து கொண்டு—அரும்புகள் சூழ்ந்த முள்ளையுடைய கொம்புகளையுடைய முள்ளியின் இதழையுடையவாகிய வளைந்த காலையும் மறிந்தவாயையும் கருமையையுமுடைய பூவைப்பறித்துக்கொண்டு,

216 - 8. அவண பஞ்சாய் கோரை பல்லின் சவட்டி புணர் கார் பெய்த புனவு இன் கண்ணி—அவ்விடத்திலுண்டாகிய தண்டாலையிய கோரையைப் பல்லாலே மென்றுமென்று கிழித்து முடித்த காரற்கட்டின புனத்தினிய மாலையை,

219. சுர் உடை இரு தலை ஓர குடி—சுருடைத்தாகிய கரிய தலையினையும்படி குடி,

220. பொன் காண் கட்டளை கடுப்ப *சண்பின்—பொன்னையுரைத்து மாற்றுக்காணும் உரைகல்லையொப்பச் சண்பினது,

221. புல் காய் சண்ணம் புடைத்த மார்பின்—புல்லிய காயிற்றோன்றின காதை அக்கினரைமுறித்து அடித்துக்கொண்ட மார்பினையும்,

தாதுரீனக்கிடத்தது உரைத்தாற்போன்றது.

222. இருப்பு வடித்தன்ன மடியா மெல் தோல்—இரும்பைத் தகடாக் கினலொத்த நிரையாத மெல்லிய தோலினையுமுடைய,

223. கரு கை வினைஞர் காதல் அம் சிறுஅர்—வலிய கையால் தொழில் செய்வாருடைய விருப்பத்தையுடைய அழகிய தெயின்னைகள்,

* பி - ம். கணப்பின், சணப்பின்.

224. பழ சோறு அமலை முனைஇ — பழைய சோற்றினது கட்டியை வெறுத்து,

224 - 6. வரம்பில் புது வை வேய்ந்த கவி குடில் முன்றில் அவல் எறி உலக்கை பாடு விறந்து — வரம்பிடத்துப் புதிய வைக்கோலாலே வேய்ந்த கவிந்த குடிலினுடைய முற்றத்தே அவலையிடிக்கும் உலக்கையினது ஓசை செறிகை யினாலே,

குடில்கள், பன்றிமுதலியனவற்றைக் காத்தற்குக் கட்டினவை.

226 - 7. அயல கொடு வாய் கிள்ளை படு பகை வெரூஉம் — அதற்கு அய லிடத்தனவாகிய வளைந்த வாயையுடைய கிளிகள் தமக்குண்டாகின்ற பகையாக நினைத்து அஞ்சும்,

228. நீங்கா யாணர் வாங்கு கதிர் கழனி — இடையறாத புதுவருவாயினை யுடைய வளையுங்கதிரினையுடைத்தாகிய கழனியிடத்து.

229. கடுப்பு உடை பறவை சாதி அன்ன — எறியப்பட்டார்க்குக் கடுக்குந் தன்மையைக் கொடுத்தலை யுடைய குளவித்திரளையொத்த,

230. பைது அற விளைந்த பெரு செ நெல்லின் — பசுமையறும்படி முற்றின பெரிய செந்நெல்லினுடைய,

231. தூம்பு உடை திரள் தாள் துமித்த வினைஞர் — உள்ளுப்பொய்யை யுடைத்தாகிய திரண்டதாளையறுத்த தொழில்செய்வார்,

232. பாம்பு உறை மருதின் ஓங்கு சினை நீழல் — பாம்புகிடக்கின்ற மரு தினது உயர்ந்த கொம்பாலுண்டாகிய நிழலிலே,

பழையமரமாதலிற் பாம்புகிடக்குமென்றார்.

233. பலி பெறு வியல் களம் மலிய ஏற்றி — ஆண்டுறையுந்தெய்வங்கள் பலிபெறுகின்ற அகன்ற களங்களிலே மிகவுநிறையப் போராகவிட்டு.

234 - 5. [கணங்கொள் சுற்றமொடு கைபுணர்ந் தாடுந், துணங்கையம் பூதந் துகிலுடுத்தவைபோல்:] கணம் கொள் சுற்றமொடு கை புணர்ந்து துணங் கை ஆடும் அம் பூதம் துகில் உடுத்தவைபோல் — திரட்சிகொண்ட தம்முடைய சுற்றத்தோடே ஒழுங்காகச்செறிந்துநின்று துணங்கைக்கூத்தாடுகின்ற அழகினை யுடையபூதங்கள் வெள்ளிய துகிலையுடுத்துநின்றவைபோல,

என்றது, தமமில் விளையாடுவதற்குத்திரண்ட பூதமென்றவாறு.

236 - 7. சிலம்பி வால் நூல் வலந்த மருங்கின் குழுமு நிலை *போரின் முழு முதல் தொலைச்சி — சிலந்தியினது வெள்ளியநூல்சூழ்ந்த பக்கத்தினை யுடைய பலவாகத்திரண்ட தன்மையினையுடைய போர்களினுடைய பெரிய அடியை வாங்கிவிரித்து.

238. பகடு ஊர்பு இழிந்த பின்றை — ஏர்கள் கடாவிட்டுப் போனபின்பு,

238 - 9. துகள் தப வையும் துரும்பும் நீக்கி — குற்றமறும்படி வைக் கோலையும் கூளத்தையும் அதனிடத்துநின்றுநீக்கி,

---

* பி - ம். போர்பின்.

239. ஏழை அறிவு—ஆசை உலராதிருத்தல்.

240. கூடாற்று எறிந்த குப்பை—மேல்காற்றாலே கையாலே அறிக்கூர்த் தீற்ற மொழி.

249-43. ஊபால் வெம்பொன் மலையின் நிறம்போல் தோன்றும்—நட நெகக்கனுனதாகிய மேருவாகிய மலைபோலே மிகும்படி தோன்றும்,

242. தன் பிணை தழீஇய தனா இருக்கை—மருதநிலத்தூர்ந்த அசை யாத குடியிருப்புக்களில்,

மார்பினையும் (221) தோளினையுமுடைய (222) வினைஞர்சிலர் (223) முனைஇ (224) அவலெறிபுலக்கைப்பாடுவிதக்கையாலே (226) கின்னை வெருவு (227) கழனிகளில் (228) விளைந்த செல்லினைத் (230) தமித்த வினைஞர் (231) ஏற்றித் (233) தொலைச்சி (237) சீக்கி (239) எறிந்தகுப்பை (240) தோன்றும இருக்கை யெனக்கூட்டுக.

243-4. பகடு ஆ ன்ற கொடு கடை குழவி கவை தாம்பு தொடுத்த காழ் ஊன்று அல்குல்—பெருமையையுடைய பகக்களீன்ற வினைந்த அடியை யுடைய ன்றுகளைக் கட்டின தாமணியையுடைய செடியதாம்புகள் கட்டிக கிடக்கின்ற தறிகள்சூட்ட பக்கத்தினையும்,

முழவுவலி தழங்கும் கோப்புக் கொள்ளுடை, நன்கொடி புழிஞரு வெல்போ ரதுகை" என்றுரைப்பதும். கதை-ஆருளர்.

245. [எனி யெய்தா நினைஇ மார்பின்:] நின் எனி எய்தா செடு மார் பின்—நீண்ட எணிக்கு எட்டாத செடிய வடிவினையும்,

246. முகடு தமித்து அடுக்கிய பழ பல் உணவின்—தலையத்திறந்து உள்ளே சொரியப்பட்ட பழையவாகிய பல செல்லினையுமுடைய,

பல்லுணவென்றூர், செல்லென்முதலிய சாதிப்பன்மைகருதி.

247. குமரி மூதத கடு ஒங்கு கல் இல்—அழியாத்தன்மையவாய் முதிர்ந்த கூடுகள் வளர்ந்த கல்ல இல்லினையும்.

அல்குலினையும், மார்பினையும், உணவினையுமுடைய கூடென்க.

248-9. தச்சச்சிறுஅர் கச்ச புனைந்த ஊரா கல் தேர் உருட்டிய புதல வர்—தச்சச்சாதியிற்பிறந்த தொழில்செய்தற்குரிய இளையோர் பிறர்விரும்படி பண்ணின பிறராலே எறப்படாத கல்ல சிறுதேரை உருட்டிக்கொண்டுதிரிந்த பிள்ளைகள்,

250. தளர் கடை ஒருத்தம் வீட மகன தனர்கடையாலுண்டானவருத் தம் தம்மைவிட்டு நீங்கும்படி,

250-52. அஞர் முலை செவிலி அம் பெண்டிர் தழீஇ பால் ஊர்ந்த அமளி தழங்கும் அழகு உடை கல் இல்—பால்சார்ந்த முலையினையுடைய செவிலித தாயாகிய அழகினையுடைய மகளிரைத் தழுவிக்கொண்டு அம்மூலையிற் பால

* பதிற்றுப்பத்து, 44.

[illegible] [illegible] [illegible] [

மும் காஞ்சிமரமுமாகிய வெள்ளிய கொம்புகளைக் கைகளுக்குடுவே கலந்து காற்றி வேழக்கோலை வரிச்சாகவிரைத்துத் தாழைதாளாற்கட்டித் தருப்பைப் புல்லாலே வேயப்பட்ட குறிய இறப்பையுடைய குடிலினையும்,

முடிதற்து முடித்தெனவிகாரம். குறியிறை பண்புத்தொகையாதலின், மரு வின்பாத்தியதாய் நின்றது.

265. பறி உடை முன்றில்—மீனைவாரியெடுக்கும் பறிகளையுடைய முற் றத்தினையுமுடைய,

266 - 7. கொடு கால் புன்னை கோடு துமித்து இயற்றிய பைஞ்சாய் தாக் கும் பாய் மணல் பந்தர்—வளைத்த காலையுடைய புன்னைகளினது கொம்புகளை வெட்டியிட்ட பசியகாய்கள்தாலும் பரந்த மணலையுடைய பந்தரிலே,

பைஞ்சாய் - சுரைக்காய்முதலியன ; புன்னைக்காயுமாம்.

268. இளையரும் முதியரும் இனையுடன் குவன்றி—இளையவர்களும் முதிர்ந்தவர்களும் சுற்றத்துடனே மிதைந்திருந்து பின்பு,

269 - 71. புலவு நனை பகழியும் சிலையும் மான செவி கயிலொடு பசு இரு பிறழும் மை இரு குட்டத்து மகவொடு வழங்கி—புலாலுறுமுனையினை யுடைய அம்பையும்வில்லையுமொப்பச் சிவந்தவரியினையுடைய கயல்களோடே பசியிருப் பிறழும் கருமையையுடைய பெரிய ஆழ்ந்த குளங்களைப் பின்னை நோடேயுளாவி மீனைப்பிடித்து,

272 - 3. கோடை நீடினும் குறைபடல் அறியா தோன் தாழ் குளத்த கோடு காத்திருக்கும்—கோடைக்காலம் நீட்டித்துநின்றதாயினும் வற்றுதலையறி யாத தையை மேலே கூப்பிமுழுகி நீர்மிலைகாட்டுங்காலத்துக் கையமிழ்த்துக குளங்களினுடைய கரையைக்காத்திருக்கும்,

* "வெளிற்றுடற் குருதிவெள்ள நிலையிய வெண்ப வேபோற், களிற் றுரிப் பிறழ்பற் பேய்கள் கைகளை யுச்சிக் கூப்பி, யளித்தலை பாடி யாட" என்னுர்பிறரும்.

274. கொடு முடி வலைஞர் குடி வயின் சேப்பின்—வளைத்த முடியினை யுடைய வலையை வீசுவாருடைய குடியிருப்பிலே தங்குவராயின்,

பந்தரிலே (267) குவன்றி (268) வழங்கிக் (271) காத்திருக்கும் (273) வலைஞரென முடிக்க.

குரம்பையினையும், முன்றிலினையு (265) முடைய குடி (274) யென்க.

275. அவையா அரிசி அம் களி துழவை—குற்றாத கொழியலரிசியை அழகினையுடைய களியாகத் துழாவி யட்ட கூழை,

276. மலர் வாய் பிழாவில் புலர ஆற்றி - அகன்ற வாயையுடைய தட்டுப் பிழாவிலே உலரவாற்றி,

277 - 8. பாம்பு உறை புற்றின் குரும்பி வய்க்கும் பூ புறம் கல் அடை அனை இ—பாம்புகிடக்கின்ற புற்றின்கட்கிடக்கும் புற்றும்பழஞ்சோற்றையொக்

* சீவகசிந்தாமணி, 804.

கும பொலிவுபெற்ற புறததினையுடைய நல்ல முளையையிடிததுச் சேரஅதனை அதிலேகலந்து,

நெல்லடையும பாடம

278 - 9 [தேமபட, எல்லையும இரவும இருமுறை கழிப்பி] தேம பட இரு எல்லையும இரு இரவும முறை கழிப்பி—இனிமைபிறக்குமபடி இரணடு பகலும இரணடிரவும அரியாமல் வைதது,

280 - 81 [வல்வாயச சாடியின வழைசசற விளைநத, வெந்நீ ரரியல் விரலலை நறுமபிழி]

வல வாய சாடியின வழைசசு அற விளைநத—வலியவாயினையுடைய சாடியினகண்ணே இளமையறுமபடி முறறின,

விரல் அலை அரியல் வெ நீர நறு பிழி—விரலாலே அலைதது அரிக்குந் தனமையையுடைததாகிய வெவவிய நீரமையையுடைய நறியகள்ளை,

282 தண மீன சூடடொடு ஞாதலும பெறுகுவிர—மிகவும உலராத மீனைசசுடடதனோடே இளை தவளவிலே பெறுகுவிர,

ஆறறி (276) அளைஇக (278) கழிப்பி (279) விளைநத (280) பிழியெனக குடிவயிற சேபபின (271) பிழி யப பெறுகுவிரெனமுடிக்க

283 பசுமான பெயத சுவல பிணி பைநதோல—செவவியான இறைசசியிடடுவைதத தோளிடததே சோதது நாறறின பசியதோலினையுடைய,

எனறது தூணடிலிருகோககு இரையிடடுவைககுந தோறபையை

284 கோள வல பாண மன மீனைத தபபாமறபிடிககவலல பாணசாதியிறபிறநதவன,

281 7 [தலைவலித தியாதத, நெடுஙகழைத தூணடி னடுஙக நாண கொளீஇக, கொடுவா யிருமபின மடிதலை புலமபப, பொதியிரை கதுவிய போழ வாய வாளை]

நெடு கழை தலை வலிதது யாதத நாண தூணடில கொளீஇ பொதி இரை—நெடிய மூஙகிறகோலைத தலையிலேவலிததுககடடின கயிறறிடததே தூணடிலைக கொளுததி அதனை மறையப பொதிநத இரையை

கொடு வாய இருமபின மடி தலை புலமப நடுஙக கதுவிய போழ வாய வாளை—வளைந்த வாயினையுடைய தூணடிலினது மடிததலை இரையினறித தனிககுமபடியாகக கயிறநடுஙக அவவிரையைக கௌவிஅதபபடாதுபோன அங்காந்தவாயையுடையவாளைமீன,

288 - 9 நீர நணி பிரமபின நடுஙகு நிழல வெரூஉம நீதது உடை நெடு கயம—நீரககுஅணித்தாயநினற பிரமபினது காறறாலசையுநிழலை நீரிற்கணடஞ சும பெருககினையுடைய நெடியகுளததிலே,

289 - 90 தீ பட மலாந்த கடவுள ஒள பூ அடைதல ஓமபி—நெருப்பின நனமை நீரிலே யுணடாகபபூதத கடவுள்சூடுதற்குரிய ஒள்ளிய தாமரைப் பூவைப்பறித்துமுடித்தலைப் பரிகரித்து,

291 - 2. [உறைகால் மாறிய கோக்குரல் எண்தலை, யவிரு வளந்தக் குறையி லேய்ப்ப :]

ஒரு உறை கால் மாறிய உயர் அகல் இரு வாளத்து குறை வில் ஏய்ப்ப— ஒருவின்ற துளி சான்றிழுதல்தவிர்ந்த உயர்ச்சியையுடைய அகன்ற பெரிய வளந்திடத்துக் குறைவில்லாத இந்திரவில்லையொப்ப,

293 - 4. [அரக்கிதழ்க் குவளையொடு நீல நீடி. முரட்டு மலர்ந்த முதுநீர்ப் பொய்கை :] அரக்கு இதழ் குவளையொடு நீலம் நீடி முரண் பூ மலர்ந்த முதுநீர் வள தலை (291) பொய்கை—சாதிலிங்கம்போன்ற இதழையுடைய குவளை யோடே நீலப்பூவும்வளர்ந்து ஒன்றற்கொன்று நிறம் மாறுபடுதலையுடைய வெண் பூக்களுமிக்க முதிய நீரையுடைத்தாகிய அகன்ற இடத்தையுடைய பொய்கை களிடத்தே,

295 - 6. குறவர் இட்ட கூம்பு விடு பல் மலர் பெரு நள் அமயத்து பிணையினிர் கழிமின்—பறிப்பார் தங்களுக்கிட்ட குவிதல்செறிந்த பலவாய் வெண் பெரிதாகிய காட்சாலத்தேருதப் போமின் ;

வாளை (287) வெருஉம் (288) யத்திலே மலர்ந்த (289) பூவை தும்பி (290) குறையிலேய்ப்பப் (292) பூமலர்ந்த பொய்கைகளிடத்தே (294) குற சிட்டமலரைப் (295) பிணையினிர்கழிமினெனமுடிக்க.

297. செழு கன்ற யாத்த நிறு தான் பத்தர்—வளைய கன்றைக்கட்டின நிறியகால்களையுடைய பத்திரினையும்,

298. [பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர் :]

பைஞ்சேறு மெழுகிய நல் நகர்—ஆப்பியான் மெழுகிய நன்முகிய அகங் களையும்,

படிவம்—தாம் வழிபடுத்தெய்வங்களையுமுடைய உறைபதி (301) யென்க.

299. மனை உறை கோழியொடு ஞமலி துன்னுதல்—மனைகளிலேதங்கும் கோழிகளுடனே சாயுஞ்சேராமல்,

300. வினை வாய் இன்னா மறை தெளி பயிற்றும்—வினைத்தலையினையுடைய வினிக்கு வேதத்தின் ஓசையைக் கற்பிக்கும்.

301. மறை காப்பாளர் உறை பதி சேப்பின்—வேதத்தைக் காத்தற் றொழிலைச் செய்வார் இருக்கின்ற ஊரிடத்தே தங்குவீராயின்,

துன்னுமல் (299) உறையும்பதியென்க.

302. பெரு கல் வானத்து வடவயின் விளங்கும்—பெரிய வளமுடைய விசும்பிடத்து வடதிசைக்கண்ணே நின்றுவினங்கும்.

303. சிறுமீன் புரையும் கற்பின்—அருந்ததியையொக்கும் கற்பினையும்,

நறு நுதல்—நறிய நுதலினையுமுடைய,

304. வினை மலர் வயின் அறிந்து அட்ட—வினையையுடையவாகிய கையையுடைய பார்ப்பினி பதமறிந்தட்டனவற்றை,

என்றது பாற்சோறு பருப்புச்சோறுமுதலியவற்றை.

305. சுடர் கடை—ஞாயிறுபட்ட காலத்தே,

பறவை பெயர் படு வத்தம்—பறவையினது பெயரைப்பெறுநெல்லு,

என்றது-இராசான்னமென்னும் பெயர்பெறுகின்ற நெல்லென்றவாறு. ஆகுதி பண்ணுதற்கு இந்தநெல்லுச்சோறே சிறந்ததென்று இதனைக்கூறினார். இனி மின்மினி நெல்லென்பாருமுளர்; இப்பெயர் வழக்கின்மையும் ஆகுதிக்குச் சிறவாமையுமுணர்க.

306 - 8 [சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத், துருப்புறு பசுங் காய்ப் போழொடு கறிகலந்து, கஞ்சக நறுமுறி யளைஇ:] மாதுளத்து பசு காய் கறி கலந்து கஞ்சகம் நறு முறி அளைஇ சேதா நறு மோர் வெண்ணெயின் உருப்பு உறு போழொடு—கொம்மட்டிமாதுளையினுடைய பசியகாய் மிளகு பொடிகலக்கப்பட்டுக் கருவேம்பினது நறியஇலை அளாவப்பட்டுச் சிவந்தபசுவினது நறியமோரின்கண்டெடுத்த வெண்ணெயின்கண்ணேகிடந்து வேகலின் வெம்மையுறுகின்ற வகிரோடே,

308 - 10. [பைந்துணர். நெடுமரக் கொக்கி னறுவடி விதிர்த்த. தகை மாண் காடியின்:] நெடு மரம் கொக்கின் பைந்துணர் நறு வடி விதிர்த்த தகை மாண் காடியின்—நெடிய மரமாகிய மாவினது பசியகொத்திடத்து நறிய வடுவினைப் பலவாகப்போகட்ட அழகுமாட்சிமைப்பட்ட ஊறுகறியோடே.

310. வகைபட பெறுகுவிர்—சோற்றின்கூறுகளுண்டாகப் பெறுகுவிர்;

பேப்பின் (301) மகடூஉ (304) வத்தத்தானுண்டான அரிசியை (305) அட்டனவற்றைச் (304) சுடர்க்கடையிலே (305) போழோடே (307) காடியோடே பெறுகுவிரென்க.

311 - 2. வண்டல் ஆயமொடு உண்துறை தலைஇ புனல் ஆடும் மகளிர் இட்ட பொலங்குழை—விளையாட்டினையுடைய திரள்களோடே நீருண்ணுந் துறையிலேகூடி நீராடுகின்றமகளிர் போகட்டுப்போன பொன்னாற்செய்த மகரக்குழையினை,

313. இரை தேர் மணி சிரல் இரை செத்து எறிந்தென—இரையைத் தேடுகின்ற நீலமணிபோலும் சிச்சிலி தனக்கு இரையாகத்துணிந்தெடுத்ததாக,

314. புள் ஆர் பெண்ணை புலம்பு மடல் செல்லாது—பறவைகள் நிறைந்திருக்கின்ற பனையில் தனித்தமடலிற்போகாமல்,

315 - 6. கேள்வி அந்தணர் அரு கடன் இறுத்த வேள்வி தூணத்து அசைஇ—நூற் கேள்வியையுடைய அந்தணர் செய்தற்கரிய கடனாகச் செய்து முடித்த யாகசாலையிடத்துநட்ட யூபத்தின்மேலேயிருந்து.

316 - 7. [யவன, ரோதிம விளக்கி னுயர்மிசைக் கொண்ட:] யவனர் உயர்மிசை கொண்ட ஓதிம விளக்கின்—சோனகர் கூம்பின்மேலிட்ட அன்ன விளக்குப்போல,

ஈண்டுக் *காரன்னமென்றுணர்க.

---

* காரன்னம் இனஞ்சுட்டியபண்பென்பர்; (சீவக. 930 - உரை.)

318. வைகுறும் மீனின்—இராக்காலம் விடிதற்குக்காரணமான *வெள்ளியாகிய மீன்போல,

பைபய தோன்றும்—ஒளி விட்டுவிளங்காது தோன்றும்,

319. நீர்ப்பெயற்று எல்லை போகி—நீர்ப்பெயற்றென்னும் ஊரினெல்லையிலேபோய்,

அசைஇ விளக்கின் மீனிற்றோன்றும் நீர்ப்பெயற்றென்க.

319 - 21. பால் கேழ் வால் உளை புரவியொடு வடவளம் தரூஉம் நாவாய் சூழ்ந்த நளி நீர் படப்பை—பால்போலும் வெள்ளியநிறத்தினையும் வெள்ளிதாகிய தலையாட்டத்தினையுமுடைய மேற்றிசைக்கணுளவாகிய குதிரைகளுடனே வடதிசைக்கணுளவாகிய நுகரப்படும்பொருள்களைக் கொண்டுவந்துதரும் மரக்கலங்கள்சூழ்ந்துகிடக்கப்பட்ட பெருமையையுடைய கடற்பக்கத்தினையும்,

322 - 4. [மாடமோங்கிய மணன்மலி மறுகிற், பரதர் மலிந்த பல்வேறு தெருவிற். சிலதர் காக்குஞ் சேணுயர் வரைப்பின் :]

மணல் மலி மறுகின் சிலதர் காக்கும் சேண் உயர் வரைப்பின்—மணல் மிக்க தெருவுகளில் தொழில்செய்வார்காக்கப்படும் மிகவுமுயர்ந்த பண்டசாலைகளையும்,

தொழில்செய்வார் - கம்மகாரர்.

பரதர் மலிந்த மாடம் ஓங்கிய பல் வேறு தெருவின்—பரதவர்மிக்க மாடங்களுயர்ந்த பலவாய்வேறுபட்ட தெருக்களையும்,

325 - 7. நெல் உழு பகட்டொடு கறவை †துன்னா மேழகம் தகரோடு எகினம் கொட்கும் கூழ் உடை நல் இல்—நெல்லினைப் பெறுதற்குஉழுகின்ற எருதுகளுடனே பசுக்கள்நெருங்காவாய் மேழகக்கிடாயோடே நாயும் சுழன்று திரியும் சோறுடைய நன்றான அகங்களையுமுடைய பட்டினம் (336).

இது திமிலர்முதலியோரிருப்புக்கூறிற்று.

327. [கொடும்பூண் மகளிர் :]

உயர் நிலை (332) வான் தோய் மாடத்து (333) கொடு பூண் மகளிர்—உயர்ந்தநிலைமையையுடைய தேவருலகத்தைத்தீண்டும் மாடத்துறையும் வளைந்த பேரணிகலங்களையுடைய மகளிர்.

328 - 9. கொன்றை மெல் சினை பனி தவழ்பவை போல் பைங்காழ் அல்குல் நுண்துகில் நடங்க—கொன்றையிடத்து அரும்புகளையுடைய மெல்லிய கொம்புகளிலே பனிமாசுகிடந்து தவழ்கின்றவைபோலப் பசிய மணிகள்கோத்த வடங்களையுடைய அல்குலிற்கிடக்கின்ற மெல்லியதுகிலசைய.

330 - 31. மால் வரை சிலம்பின் மகிழ்சிறந்து ஆலும் பீலி மஞ்ஞையின் இயலி—பெருமையையுடைய பக்கமலையிலே மனவெழுச்சிமிக்கு ஆரவாரிக்கும் தோகையையுடையமயில்போலே உலாவி,

---

* வெள்ளிதாகிய மீனென்றும் பிரதிபேதமுண்டு.

† பி - ம். துன்னா தேழகத் தகரோடு.

331 - 3. [கால, தமனியப் பொற்சிலம் பொலிப்ப வுயர்நிலை, வான்றோய் மாடத்து *வரிப்பந் தசைஇ:]

தமனியம் கால பொன் சிலம்பு ஒலிப்ப வரி பந்து அசைஇ—பொற்பூண் களையுடைய கால்களிடத்தனவாகிய பொன்னாற்செய்த சிலம்புகளாரவாரிப்ப நூலால்வரிதலையுடைய பந்தையடித்து இளைத்து,

334 - 5. [கைபுனை குறுந்தொடி தத்தப் பைபய, முத்த வார்மணற் பொற்கழங் காடும்:] முத்தம் வார் மணல் பைபய கை புனை குறு தொடி தத்த பொன் கழங்கு ஆடும்—முத்தையொத்த வார்ந்தமணலிலே மெத்தென மெத்தெனக் கையிற்புனைந்த குறுந்தொடியசையப் பொன்னாற்செய்த கழலைக்கொண்டு விளையாடும்,

மாடத்து (333) மகளிர் (327) நடங்க (329) இயலி (331) ஒலிப்ப (332) அசைஇப் (333) பின்னர்க் கழங்காடும் (335) பட்டின (336) மென்க.

இது வணிகரிருப்பைக்கூறிற்று.

படப்பையினையும் (321) வரைப்பினையும் (324) தெருவினையும் (322) இல்லினையு (327) முடைய பட்டின (336) மென்க.

336. பட்டினமருங்கின் அசையின்—பட்டினத்திடத்தே இளைப்பாறுவீராயின்,

முட்டு இல்—முட்டில்லையாகப் பெறுகுவி (315) ரெனமேலே கூட்டுக.

337. †பைங்கொடி நடங்கும் பலர் புகு வாயில்—பசியகொடிகளசையும் கள்ளுண்பார்பலரும் புகுகின்ற வாயிலிடத்து,

338. [செம்பூத் தூய செதுக்குடை முன்றில்:] தூய செ பூ ‡செதுக்கு உடை முன்றில்—தெய்வத்திற்குத்தூவின செய்யபூவாடலையுடைய முற்றத்தில்,

339 - 40. கள் அடு மகளிர் வள்ளம் நடக்கிய வார்ந்து உகு சில் நீர் வழிந்த குழம்பின்—கள்ளைச்சமைக்கின்றமகளிர் வட்டில்கழுவின வடிந்துசிந்தும் சிலநீர் பலகால்வடிதலின் நிறைந்துவழிந்த குழம்பிடத்து,

341 - 2. ஈர்ஞ்சேறு ஆடிய இரு பல் குட்டி பல் மயிர் பிணவொடு—ஈரத்தையுடைய சேற்றையளைந்த கரிய பலவாகிய குட்டிகளையுடைய பலவாகிய மயிர்களையுடைய பெண்பன்றிகளுடனே,

வாயிலிடத்து (337) முற்றத்துக் (338) குழம்பிடத்துச் (340) சேறு (341)

342. §பாயம் போகாது—புணர்ச்சியைக் கருதுங்கருத்தாற் போகாமல்.

---

* "வரிப்பந்துகொண்டோடி" (கலி. 51.)

† கள்விற்போர் கடைவாயிலிற் செம்பூச்சிதறிக் கொடிகட்டுதல், பட்டினப்பாலையின் 178 - ஆம் அடிமுதலியவற்றாலும், "கட்கொடி நடங்கு மாவணம் புக்கு" (பதிற். 68) என்பதனாலும் அறியலாகும்; மதுரை. 372.

‡ "செதுகறாமனத்தார்" (தே. திருப்பூந்துருத்தி.)

§ பாயம் - மனத்திற்கு விருப்பமானதென்று பொருளெழுதுவர்; (குறி. 58.)

என்றது புணரிற் கொழுப்பின்றாமென்றவாறு.

343. நெல் மா வல்சி தீற்றி—நெல்லையிடித்த மாவாகிய உணவைத் தின்னப்பண்ணி,

343 - 5. பல் நாள் குழி நிறுத்து ஓம்பிய குறு தாள் ஏற்றை கொழு நிணம் தடியொடு – பலநாள் குழியிலேநிறுத்திப் பாதுகாத்த குறியகாலையுடைய ஆண்பன்றியின் கொழுவிய நிணத்தையுடைய தசையோடே,

*"ஆற்றலொடு புணர்ந்த வாண்பால்" ஆதலின் ஏற்றையென்றார்.

345. கூர் நறா பெறுகுவிர்—களிப்புமிக்க கள்ளைப் பெறுகுவிர்;

போகாமற் (342) குழிநிறுத்து (344) என்க.

அசையிற் (336) பெறுகுவிரென்க.

346 - 8. [வான மூன்றிய மதலை போல. வேணி சாத்திய வேற்றருஞ் சென்னி, விண்பொர நிவந்த வேயா மாடத்து:]

வானம் ஊன்றிய மதலை போல விண் பொர நிவந்த மாடம்—ஆகாயத்தே திரிகின்ற தேவருலகுக்கு முட்டுக்காலாக ஊன்றிவைத்த ஒருபற்றுக்கோடு போல விண்ணைத்தீண்டும்படி ஓங்கினமாடம்,

சாத்திய ஏணி ஏற்று அரு சென்னி மாடம்—தன்னிடத்துச்சாத்திய ஏணியால் ஏறுதற்கரிய தலையினையுடையமாடம்,

வேயா மாடத்து—கற்றைமுதலியவற்றால் வேயாது சாந்திட்ட மாடத்திடத்தே.

349. இரவில் மாட்டிய இலங்கு சுடர்—இராக்காலத்தேகொளுத்தின விளங்குகின்ற விளக்கு.

349 - 51. [ஞெகிழி. புரவுநீ ரழுவத் தோடு†கலங் கரையுந், துறை:] உரவு நீர் அழுவத்து ஞெகிழி ஓடு கலம் கரையும் துறை—உலாவுகின்ற கடற்பரப்பிலேவந்து நாம்சேரும் துறையன்றென்று நெகிழ்ந்து வேறொருதுறைக் கண் ஓடுங்கலங்களை இது நம்துறையென்று அழைக்குந் துறை.

இனி, ஞெகிழியைக் கடைக்கொள்ளியாக்கி அதனைஎரித்துக்கொளுத்தின இலங்குசுடரென்றுமுரைப்பர்.

351. பிறக்கு ஒழிய போகி—பின்னேகிடக்கப்போய்,

351 - 3. [கறையடிக். குன்றுறழ் யானை மருங்கு லேய்க்கும், வண்டோட்டுத் தெங்கின்:]

குன்று உறழ் கறை அடி யானை மருங்குல் ஏய்க்கும் தெங்கின்—மலையோடு மாறுபடுகின்ற உரல்போன்ற அடியினையுடைய யானையினுடம்பையொக்கும் சருச்சரையையுடைத்தாகிய தெங்கினுடைய,

353. [வாடுமடல் வேய்ந்த:]

---

* தொல்காப்பியம், மரபியல், 49.

† கலங்கரைவிளக்கமென்னும்பெயர் ஈண்டு அறியற்பாலது.

வள் தோட்டு (353) வாடு மடல் வேய்ந்த—வளவிய இலையினையுடைய உலர்ந்த *பழுததலை முடைந்துவேய்ந்த தனிமனை (355) யெனக.

354. மஞ்சள் முன்றில்—மஞ்சளையுடைய முற்றததினையும,

மணம் நாறு படப்பை—மணநாறுகின்ற பூந்தோட்டங்களையுமுடைய,

355. தண்டலை உழவா தனி மனை சேப்பின—தோப்புக்குடிகளுடைய ஒப்பில்லாத மனைகளிலேதங்கின

356. [தாழ்கோட் பலவின் சூழ்சுளைப் பெருமபழம]

தாழ் கோள் பலவின் பழம—தாழந்த குலைகளையுடைய பலாவினதுபழம்,

சூழ் சுளை பெரு பழம—தினபார விரும்பிசசூழும சுளையையுடைய பெரிய பழததையும,

357. †வீழ் இல் தாழை ‡குழவி தீ ரீர—விழுதில்லாத தாழையாகிய தெங்கின இளைதாய இனியநீரையும,

§"பிளளை குழவி சனறே போததெனக கொளளவு மமையு மோரறி வுயிரக்கே" எனறதனாற் குழவிததீரீரெனறார.

358 கவை முலை இரு பிடி கவுள மருபபு எய்க்கும—கவைதத முலையையுடைய பெரிய பிடியினுடைய கவுளிடததுக கொமபுகளையொக்கும்,

359 [குலைமுதிர வாழைக கூனி வெண்பழம] குலை கூனி முதிர் வாழை வெள் பழம்—குலைகள தமபெருமையாலே நிலததே தாழவளைந்து முற்றின வாழையினது வெள்ளிய பழததையும

360 - 61 திரள அரை பெண்ணை நுங்கொடு பிறவும தீ பல் தாரம முனையின்—திரண்ட அடியையுடைய பனையினது நுங்கோடே வேறு இனிய பலபண்டங்களையும வெறுக்கின்.

361 - 2. [சேமபின் முளைப்புறம] முளை புறம சேமபின—முளையை இடததேயுடைய சேமபினது இலையோடே

362 முதிர கிழங்கு ஆகுவிர—முற்றின வளளிமுதலிய கிழங்குகளைத சினபீர,

சேப்பிற் (355) பழததையும (356) ரீரையும (357) பழததையும (359) நுங்கோடே (360) பலபண்டங்களையுமுனையிற் (361) கிழங்காகுவிரெனக

362 - 4. பகல் பெயல் மழை வீழநதன்ன மா தாள் கமுகின புடை சூழ் தெங்கின்—பகற்பொழுதிலே பெய்தலையுடைய மழை கால்விழுந்தாலொத்த பெரிய தண்டினையுடைய கமுகுகளின் பககததேசூழ்ந்த தெங்கினுடைய,

---

* பழுததல் - பழுபபு; கீழ்ந்து இதனால் முடையப்பட்டது கீற்று

† வீழில்தாழையெனபது தென்னைககுவெளிப்படை, மற்றொனறு "வீழ் தாட் டாழை" (நற் 78) "வீழ்தாழ் தாழை யூழுறு கொழுமுகை" (குறு 228), "தாழை வீழகயிற்றூசல்" (அகநா 20) எனக் கூறப்படுதல்காண்க

‡ குழவித்தீரீர - இளரீர.

§ தொல்காப்பியம், மரபியல், 24.

364. மூப்புடை திரள் காய்—மூன்றுபுடைப்பினையுடைய திரண்டகாய், பழுத்தால் அடி மூன்றாகப்புடைத்தல் அதற்கியல்பு. இனி மூப்புடை திரள் காயும் பாடம்.

365 - 6. ஆறு செல் வம்பலர் காய் பசி தீர சோறு அடு குழிசி இளக விழூஉம்—வழிச்செல்கின்றபுதியோர் தமது மிக்கபசிதீரும்படி சோற்றை ஆக்குகின்றபானை அடுப்பினின்றும் அசைந்துவிழும்படி நிலத்தேவிழும்,

367. வீயா யாணர் வளம் கெழு பாக்கத்து—விடாத புதுவருவாயினையுடைய செல்வம்பொருந்தின பாக்கத்திடத்து,

368. பல் மரம் நீள் இடை போகி—பலமரங்கள்வளர்ந்த இடத்திலேபோய்,

368 - 9. [நன்னகர், விண்டோய் மாடத்து விளங்குசுவ ருடுத்த] விளங்கு சுவர் உடுத்த விண் தோய் மாடத்து நல் நகர்—விளங்குகின்ற மதில் சூழ்ந்த விண்ணைத்தீண்டும் மாடங்களையுடைய நன்றாகிய ஊர்களிலே,

370 - 71. வாடா வள்ளியின் வளம் பல தரூஉம் நாடு பல கழிந்த பின்றை—வாடுங்கொடியினையுடைய வள்ளியல்லாத வள்ளிக்கூத்தின் வளப்பம்பலவற்றையுந் தருதற்குக்காரணமாகிய புறநாடுபலவற்றையும் போனபின்பு.

வளம்பலவென்றார், இக்கூத்து ஆண்பாற்கும்பெண்பாற்கும் பொதுவாய் வருதலின்.

என்றது-சிறப்புடையநாடுகளைப்பாடித் தாழ்ச்சிபெற்ற இழிகுலத்தோருறையும் புறநாடுகளைப் பாடாமல்தொகுக்கின்றார், அவைபுறநாடென்பதுதோன்ற அவர்கள் காண்டற்குரிய வள்ளிக்கூத்தினைக்கூறி அதனைவெளிப்படுத்தினார் இது. புறத்திணையியலில் * "வெறியறிசிறப்பு" எனனுஞ்சூத்திரத்து. 'வாடாவள்ளி' என்பதனாலும். †"மண்டம ரட்ட மறவர் குழாத்திடை" என்னு முதாரணத்தானும உணர்க.

371 - 2. நீடு குலை காந்தள் அம் சிலம்பில் களிறு படிந்தாங்கு—நீண்ட பூங்கொத்துக்களையுடைய காந்தளையுடைய அழகிய பக்கமலையிலே யானைகிடந்தாற்போல.

373. பாம்பு அணை பள்ளி அமர்ந்தோன ஆங்கண்—பாம்பணையாகிய படுக்கையிலே துயில்கொண்டோனுடைய ‡திருவெஃகாவிடத்து.

காந்தளென்றதற்கேற்பப் பாம்பணையென மெலித்தார்.

374. [வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்:]

வெயில் நுழைபு அறியா பொதும்பர்—ஞாயிற்றின்கதிர் தோன்றியகாலத்தும் படுகின்றகாலத்துமுட்படச் சிறிதும் செல்லுதலறியாத பொதும்பர்,

---

* தொல்காப்பியம், புறத்திணையியல், 5.

† "மண்டம ரட்ட மறவர் குழாத்திடைக் - கண்ட முருகனுங் கண்களிக்தான் - பண்டே - குறமகள் வள்ளிதன் கோலங்கொண் டாடப் - பிறமகள் சோற்றாள் பெரிது."

‡ திருவெஃகாவென்பது திருமாலினுடைய நூற்றெட்டுத் திருப்பதியுளொன்று. இது காஞ்சிப்பதியிலுள்ளது.

குயில் நழை பொதும்பர்—இலைநெருக்கத்தாலே குயில்கள் நழைந்துசெல்லும் இளமரக்காவில்,

375 - 6. குறு கால் காஞ்சி சுற்றிய நெடு கொடி பசு இலை குருகின் புன்புறம் வரி பூ—குறிய காலினையுடைய காஞ்சிமரத்தைச்சூழ்ந்த நெடியகொடியினையும் பசிய இலையினையுமுடைய குருக்கத்தியினுடைய *புற்கென்றபுறத்தினையும் வரிகளையுமுடைய பூக்கள் உறைப்ப (379) வென்க.

377 - 8. கார் அகல் கூவியன் பாகொடு பிடித்த இழை சூழ் வட்டம் பால் கலந்தவை போல்—கரிதாகியசட்டியிலே அப்பவாணிகன் பாகுடனே வேண்டுவனகூட்டிச் சேர்க்கப்பட்ட நூல்போலச் சூழ்ந்துகிடக்கின்ற அப்பம் பாலிலே கிடந்தவைபோல,

சட்டியிலே கிடந்த அப்பம் பின்பு பாலிலேகிடந்தவைபோலவென்க.

பிடித்தவட்டமென்க.

379. நிழல் தாழ் வார் மணல் நீர்முகத்து உறைப்ப—நிறங்கிளர்கின்ற வார்ந்த மணலிடத்துக் குழிகளினின்றநீரிடத்தே மிகவிழும்படி,

உறைப்பவென்றதனைத் துளிப்பவென்றால் ஈண்டு ஒப்பன்மையான், உப்புறைப்ப என்றாற்போலக்கொள்க.

380. புனல் கால் கழீஇய பொழில் தொறும்—நீர் பெருகியகாலத்தே ஏறிய இடத்தைத் தூய்தாக்கிப்போன பொழில்கடோறும்,

என்பதனால், முன்பு நீர்நின்றுபோகலிற் பூத்தவென்றார்.

380 - 82. திரள் கால் சோலை கமுகின் சூல் வயிறு அன்ன நீலம் பைங்குடம் தொலைச்சி—திரண்ட தண்டினையுடைய சோலையிடத்துநிற்குங் கமுகினுடைய சூற்கொண்ட வயிற்றையொத்த பச்சைக்குப்பிகளை உண்டு போக்கி,

382 - 3. நாளும் பெரு மகிழ் இருக்கை மரீஇ நாடோறும் பெரிய மகிழ்ச்சியையுடைய இருப்பைமருவி,

383 - 4. சிறு கோடு குழவி திங்கள் கோள் நேர்ந்தாங்கு—சிறிய கோட்டையுடைய †இளைதாகிய பிறையைச் செம்பாம்பு தீண்டினாற்போல,

இஃது இல்பொருளுவமை.

385. சுறவுவாய் அமைத்த சுரும்பு சூழ் சுடர் நுதல் ‡மகரவாயாகிய தலைக்கோலத்தைச் சேர்த்தின சுரும்புகள்சூழும் ஒளியையுடைய நுதலினையும்,

386. நறவு பெயர்த்து அமைத்த நல் எழில் மழை கண் கள்ளினை உண்டுபொருந்திய கன்றாகிய அழகினையுடைய குளிர்ச்சியையுடைத்தாகிய கண்ணையுமுடைய,

---

* புற்கென்ற - அழகில்லாத; (சீவக. 2823.)

† இளைதாகிய - இளையதாகிய; "இளைதாக முண்மரங் கொல்க" (திருக்குறள், 879.)

‡ "மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்து" (முருகு. 25.)

வள்ளத்தினறவைத் தம்முள்ளே ஆகினமையிற் பெயர்த்தென்றார்.

387. *மடவரல் மகளிரொடு பகல் விளையாடி—மடப்பம் தோற்றுதலை யுடைய மகளிரோடே பகற்பொழுது விளையாடி,

388 - 9. பெறற்கு அரு தொல் சீர் துறக்கம் ஏய்க்கும் பொய்யா மரபின் பூ மலி பெரு துறை—பெறுதற்கரிய பழமையையுடைத்தாகிய புகழினையுடைய துறக்கத்தையொக்கும் தப்பாமல் நீர்வருமுறைமையினையுடைய பூ மிகுகின்ற பெரிய துறையிடத்தே,

துறை, நகர்பொருள்குறைவின்மையின், துறக்கமேய்க்குமென்றார்.

390. செவ்வி கொள்பவரோடு அசைஇ—இளவேனிற்செவ்வியை நுகர் வாரோடு இளைப்பாறி,

390 - 91. அவ்வயின் அரு திறல் கடவுள் வாழ்த்தி—அத்திருவெஃகா வணையில் அரியதிறலினையுடைய திருமாலைவாழ்த்தி,

391 - 2. [சிறிது நங், கருங்கோட் டின்னிய மியக்கினிர் கழிமின்:] நம் கரு கோடு இன் இயம் சிறிது இயக்கினிர் கழிமின்—நம்முடைய கரிய தண் டினையுடைய இனியயாழைச் சிறிதுவாசித்து அவ்விடத்துநின்றும் போமின்;

ஆங்கட் (373) பொதும்பர்க் (374) குருகின்பூ (376) உறைப்பக் (379) கழீஇயபொழிறொறும் (380) மகளிரோடேபகல்விளையாடிப் (387) பெருந் துறைச் (389) செவ்விகொள்பவரோடசைஇ (390) லைப்பைங்குடந் தொலைச்சி (382) மரீஇக் (383) கடவுள்வாழ்த்தி (391) இயக்கினிர்கழிமினெனமுடிக்க.

393 - 6. [காழோ ரிகழ்பத நோக்கிக் கீழ, நெடுங்கை யானை நெய்ம்மிதி கவளங், கடுஞ்சூன் மந்தி கவரும் காவிற், களிறுகத னடக்கிய வெளிறில் கந்தின்:]

†வெளிறு இல் கந்தின் சதன் அடக்கிய களிறு கீழ நெடு கை யானை * * * களுந்தின்கின்ற:

நெய் மிதி கவளம்—நெய்யைவார்த்து மிதித்த கவளங்களை,

‡கடு சூல் மந்தி காழோர் இகழ் பதம் நோக்கி கவரும் காவின்—முற்பட்ட சூலையுடைய மந்தி பரிக்கோலையுடையோர் நெகிழ்ந்தசெவ்வியைப்பார்த்து எடுத் துக்கொண்டுபோய்த்தின்னும் சோலையினையும்,

397. திண் தேர் குழித்த குண்டு நெடு தெருவின் திண்ணியதேர்கள் பலகால் ஓடிக்குழித்த தாழ்ச்சியையுடைய நெடியதெருவினையும்,

---

* "மடவரல்வள்ளியொடு" (முரு. 102); மடவரலென்பதற்கு மடப்ப மென்று பொருள்கூறுவாருமுண்டு; (புறநா. 89.)

† இந்தப்பாகத்துக்கு எந்தப்பிரதிகளிலும் உரைகிடைத்திலது. வயிர முள்ளகந்தினார் கோபத்தையடக்கிய ஆண்யானைகளும், கீழேதாழ்ந்த நெடிய கையையுடைய பெண்யானைகளுந்தின்கின்றவென்க.

‡ "கடுஞ்சூன் மகளே" (ஐங்குறு. 386.)

398 - 400. [படை தொலை பறியா மைந்துமலி பெரும்புகழ்க், கடை கால் யாத்த பல்குடி கெழீஇக், கொடையுங் கோளும்:]

தொலைபு அறியா மைந்து மலி பெரு புகழ் படை—கெடுதலறியாத வலி மிகுகின்ற பெரிய புகழினையுடைய படையினையும்,

*கொடையும் கோளும் கெழீஇ கால் யாத்த பல் குடி கடை—பண்டங்களை விற்றலும் கொள்ளலும்பொருந்தி அவ்விடத்து நெருங்கின பலகுடிகளையுடைய கடையினையுமுடைய மூதூர் (111.)

400 - 401. †வழங்குநர் தடுத்த அடையா வாயில்—உலகத்துக் கொடுப்பாரைக் கொடாமல் தடுத்த பரிசிலர்க்குஅடையாத வாசலினையும்,

இவன் கொடைப்பெருமையாற் பிறர்தவிர்ந்தாரென்றார்.

401. மிளை சூழ் படப்பை—காவற்காடுசூழ்ந்த பக்கத்தினையும்.

402 - 4. [நீனிற வுருவி னெடியோன் கொப்பூழ். நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த், தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றி:] நான்முக ஒருவன் பயந்த நீல் நிற உருவின் நெடியோன் கொப்பூழ் பல் இதழ் தாமரை பொகுட்டின் காண் வர தோன்றி—நான்குமுகத்தையுடைய ஒருவனைப்பெற்ற நீலநிறத்தையுடைத்தாகிய வடிவினையுடைய திருமாலுடைய திருவுந்தியாகிய பலஇதழையுடைய தாமரையினது கொட்டைபோலே அழகுவிளங்கத்தோன்றி,

இதனாற் ‡பழமையும் சிறப்பும் தூய்மையுங் கூறினார்.

405. §சுடுமண் ஓங்கிய நெடு நகர் வரைப்பின்—செங்கலாற்செய்யப்பட்டு உயர்ந்த புறப்படைவீட்டைச்சூழ்ந்த மதிலினையும்,

406 - 7. [இழுமென் புள்ளி ஈண்டுகிளைத் தொழுதிக், கொழுமென் சினைய கோளியுள்ளும்:] கொழு மெல் சினைய இழுமென் புள்ளின் ஈண்டு கிளை தொழுதி கோளியுள்ளும்—கொழுவிய மெல்லிய கொம்புகளிடத்தனவாகிய இழுமென்னும் ஓசையையுடைய புறவினுடைய சிரளுகின்ற சுற்றத்திரட்சியையுடைய பூவாமற் காய்க்கு மரங்களில் விசேடித்தும்.

408. பழம் மீ கூறும் பலா போல—பழத்தின் இனிமையால் மேலாகச்சொல்லும் பலாமரத்தையொக்க,

409 - 10. புலவு கடல் உடுத்த வானம் சூடிய மலர் தலை உலகத்துள்ளும்—புலால்நாற்றத்தையுடைய கடல்சூழ்ந்த ||ஆகாயங்கவிந்த அகன்ற இடத்தையுடைய உலகத்து நகரில் விசேடித்தும்,

---

* "கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறைபடாது" (பட். 210.)

† இதன் பொருள்நயம்பாராட்டத்தக்கது.

‡ பெருமையுமென்றும் பிரதிபேதமுண்டு.

§ "சுடுமணோங்கியநெடுநிலைமனை" (மணி. 3. 127.)

|| "வான்கவிந்த வையகமெல்லாம்" (நாலடி. பொறை. 10.)

410 - 11. *கயல் தொடி விழவு மேம்படு பழன விதன் முதல்ப பகைவரைத் தாரும் தொழும்படி எடுத்த விழாக்களாலே எவரானவர்களின் மேலான பழைய வெற்றியினையுடைய பழைய ஊரான,*

412 - 3. *அ வாய் வளர் பிறை குடை செ வானத்து அந்தி வாய் அகில் மழை கடுப்ப — அழகிய இடத்தையுடைய வளரும்பிறையைத் தன்மேலெழுந்த செக்கர்வானமாகிய அந்திக்காலத்தே உலாவுகின்ற மேகத்தை யொப்ப,*

கொம்பும் யானையும் குருதியும் உவமிக்கப்படும்பொருள்.

414 - 7. [*வெண்கோட் டிரும்பினங் குருதி சீர்ப்ப, வீரைம்புதின் மரும் பொருதனைத் தலியப், பேரமர்க் கடந்த கொடுஞ்சி செழுந்தே, ராஅச செருவினெவர் போல :*]

வெள் கோடு இரு பினம் குருதி சீர்ப்ப பொருது—வெள்ளிய கொம்பினையுடைய எரியாளைப்பினத்தைக் குருதியாகிய ஆறு இழுத்துக்கொண்டுபோம் பொருது,

சரம்பதின்மரும் களத்த அவிய பெரு அமர் கடந்த ஐவர் போல—தரி யோதனன் முதலிய நூற்றுவரும் களத்திலே படும்படி பெரியபோரைவென்ற தருமன் முதலியோரைப்போல,

கொடுஞ்சி செடு தேர் ஆரா செருவின் ஐவர்—முன்னே தாமரை முகையினையுடைய செடியதேரினையும் தொலையாத போரினையுமுடைய ஐவர்,

418. *அடங்கா தானையோடு உடன்று மேல் வந்த—ஒருசெண்ணின்கண் அடங்காத படையுடனே கோபித்துத் தன்மேல்வந்த,*

419. *ஒன்னா தெவ்வர் உலவிடத்து ஓர்த்து—தன்னைவெல்லப் பொருந் தாத பகைவர் தோற்றவிடத்தே வெற்றிக்களிப்புத்தோன்ற ஆராய்ந்து,*

420 - 21. [*கச்சி யோனே கைவண் டோன்ற. வச்சிச் சென்றோர்க் கேம மாகிய :*] *கை வள் தோன்றல் கச்சி சென்றோர்க்கு ஏமம் ஆகிய கச்சி யோனே—கைவளப்பத்தையுடைய தலைவன் தன்னிலைவிருப்பித் தன்பாற் சென்றோர்க்குப் பாதுகாவலாகிய காஞ்சிபுரத்தேயிருக்கின்றோன்,*

படப்பையினையும் (401) சாலினையும் (395) வளப்பினையும் (405) அடையாவாலினையும் (401) தெருவினையும் (397) கடையினையும் (399) படையினையு (398) முடைய ஊரன் (411) என்க.

கான்வரத்தோன்றிப் (404) பலஅப்போல (408) விழவுமேம்பட்ட (411) ஊரனென்க.

கைவண்டோன்றல் (420) ஐவர்போலக் (417) குருதிசீர்ப்பப் (414) பொருது (415) ஓர்த்து (419) ஏமமாகிய (421) ஊரானிய (411) கச்சியிடத் தேயிருக்கின்றோனென்க.

---

* பலசமயதெய்வங்களுக்கும் காஞ்சி இடமாகவிருத்தலின், பலதெய்வத்திற் குப் பலசமயத்தானென்று பொருள் செய்தனர்; "பலதெய்வ வுத்தி குமரர்மால் புறத்தோர் பலரும்வீற் றிருப்பவப் பதியே" (*கந்த. வரை.* 90.)

423 - 3. [அளியுந் தெறலு மெளிய வாகலின், மலைந்தோர் தேஎ மன்றம் பாழ்பட:]

மலைந்தோர் தேஎம் மன்றம் பாழ்பட தெறலும்—தன்னுடனே பொருதார் தேயத்திலுள்ளின்மன்றுகள் மக்களின்றாய்ப் பாழரம்படி அழித்தலும்,

424. [நயந்தோர் தேஎ நன்பொன் பூப்ப:] நயந்தோர் தேஎம் நன்பொன் பூப்ப அளியும் (422)—தன்னை விரும்பியிருந்தோர் தேயம் திருமடந்தை பொலிவுபெற்றிருப்ப அளித்தலும்,

422. எளிய ஆதலின்—தனக்கு எளியவாய் நடக்கையினாலே,

425. நட்பு கொளல் வேண்டி நயந்திசினோரும்—மலையலாகாதென்று உறவுகொள்ளுதலைவேண்டி அவன்றாளை விரும்பினவர்களும்,

426. துப்பு கொளல் வேண்டிய துணையிலோரும்—அவன் பகையைத் தெறும் வலியைத் தமக்குப்பெறவேண்டின வேறோர் உதவியில்லாதவர்களுமாய்,

427. கல் வீழ் அருவி கடல் படர்ந்தாங்கு—மலையினின்றும்விழுகின்ற அருவி அம்மலையிலுள்ளபண்டங்களை வாங்கிக்கொண்டு கடலுக்குக்கொடுப்பதாகச் சென்றாற் போல,

428. பல் வேறு வகையின் பணிந்த மன்னர்—பலவாகிய வேறுபட்ட சிறைகளின் கூறுபாட்டோடே சென்று வணங்கின அரசர்,

429 - 31. [இமையவ ருறையுஞ் சிமையச் செவ்வரை. வெண்டிரை கிழித்த விளங்குசுடர் நெடுங்கோட்டுப். பொன்கொழித் திழிதரும் போக்கருங் கங்கை:]

இமையவர் உறையும் சிமையம் செ வரை விளங்கு சுடர் நெடு கோடு—தேவர்களிருக்கும் உச்சியையுடைய சிவந்த மேருவினது விளங்குகின்ற ஒளியையுடைய நெடிய சிகரத்தினின்றும்,

பொன் கொழித்து இழிதரும் போக்கு அரு கங்கை—பொன்னைக்கொழித்துக் குதிக்கும் மாக்கட்குக் கடத்தலரிதாகிய கங்கையாகிய ஆற்றிலே,

வெள் திரை கிழித்த கங்கை—நடலிடத்து வெள்ளியதிரையைக் கிழித்துச்சென்ற கங்கை,

432. பெரு நீர் போகும் இரியல் மாக்கள்—பெரிய நீரைக்கடந்துபோம் நெடுதலையுடையமாக்கள்,

நெடுபட்டுப்போவார் ஒருவர்க்குமுன்னே ஒருவர் விரைந்துபோதலைக் கருதுவர்.

433. ஒருமரம் பாணியில் தூங்கியாங்கு—விடுகின்ற தோணியாகையினாலே அது வருங்காலம் பார்த்திருந்து தூங்கினாற்போல,

434 - 5. தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு குழீஇ செவ்வி பார்க்கும் செழு நகர் முற்றத்து—கெடாத யானைமுதலிய செல்வங்களோடே நெருங்காகின்ற நிரண்டு காலம்பார்த்திருக்கும் வளவிய நகரின்முற்றத்தினையுடைய வியனகர் (440),

எளியவாகலின் (422), நயந்திசினோரும் (425) துணையிலோருமாய்ப் (426) பணிந்தமன்னர் (428) தூங்கியாங்குச் (433) செவ்விபார்க்குமுற்றமென்க,

436 - 7. பெரு கை யானை கொடு தொடி படுக்கும் கரு கை கொல்லன் — பெரிய கையினையுடைய யானைக்கு வளைந்துகிடக்கும் பூணைச்சேர்க்கும் வலிய கையினையுடைய கொல்லன்,

437 - 8. இரும்பு விசைத்து எறிந்த கூடம் திண் இசை வெரீஇ—இரும்பைக் கையை உரத்துக்கொட்டின கூடத்தெழுந்த திண்ணியஓசையை வெருவி,

438 - 10 [மாடத், திறையுறை புறவின் செங்காற் சேவ. லின்றுயி லிரியும் பொன்றுஞ்சு வியனகர் :]

மாடத்து புறவின் செ காற் சேவல் இன் துயில் இரியும் நகர்—மாடத்திடத்துப் புறவினுடைய சிவந்த காலையுடையசேவல் இனிய துயிலை நீங்குநகர்,

இறை உறை நகர்—இறைவனிருக்கு நகர்,

பொன் துஞ்சு வியல் நகர்—திருத்தங்குகின்ற அகலத்தையுடைய கோயிற் கண்ணே இருந்தோன் (447)

441 - 2. குணகடல் வரைப்பில் முந்நீர் நாப்பண் பகல் செய் மண்டிலம் பாரித்தாங்கு—கீழ்கடலாகிய எல்லையிடத்து நிலத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலுமாகிய மூன்றுதொழிலையுடைய நீர்க்குறாவே *பகற்பொழுதைச் செய்யுஞாயிறு தன்கிரணங்களைப்பரப்பித் தோன்றினாற்போல,

443 - 50. [முறைவேண்டு நர்க்குங் குறைவேண்டு நர்க்கும், வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி, யிடைத்தெரிந் துணரு மிருமர் காட்சிக், கொடைக்கட னிறுத்த கூம்பாவுள்ளத், துரும்பில் சுற்றமோ டிருந்தோற் குறுகிப். பொறிவரிப் புகர்முகந் தாக்கிய வயமான், கொடுவரிக் குருளை கொளவேட் டாங்குப். புலவர் பூண்கட னாற்றி :]

இடை தெரிந்து உணரும் இருள் தீர் காட்சி—நடுவுநிலையை ஆராய்ந்தறியும் மயக்கந்தீர்ந்த அறிவாலே,

†முறை வேண்டுநர்க்கும் குறை வேண்டுநர்க்கும் வேண்டுப வேண்டுப அருளி—முறைப்பாட்டைவிரும்புவார்க்கும் காரியங்களைவிரும்புவார்க்கும் அவரவர் விரும்புவனவற்றை விரும்புவனவற்றை அருளிச்செய்து.

புலவர் பூண் கடன் ஆற்றி—புலவர்க்குப் பேரணிகலங்களையும் கொடுத்தற்குரிய பிறகலங்களையுங் கொடுத்து,

வேண்டினர்க்கு கொடை கடன் இறுத்த கூம்பா உள்ளத்து உரும்பு இல் சுற்றமோடு இருந்தோன் குறுகி—வேண்டிவந்த பரிசிலர்க்குக் கொடையாகிய கடனை முடித்த குவியாத நெஞ்சத்தோடே கொடுமையில்லாத ‡மந்திரச்சுற்றத்தோடே இருந்தோனையணுகி,

---

* "பகற்செய்யுஞ்செஞ்ஞாயிறும்" (மதுரை. 7.)

† முறைவேண்டுநர் - வறியரால் நலிவெய்தினார்; குறைவேண்டுநர் - வறுமையுற்றிரந்தார்; 386 - ஆம் திருக்குறளுரையைப்பார்க்க.

‡ "மந்திரச் சுற்றத்தாரும்" (கம்ப. கும்ப. 5.)

ஞாயிறுபோல இருளோக்கடிந்து முறைவேண்டுவார்க்கும் குறைவேண்டுவார்க்கும் வேண்டுவன வேண்டுவன முடித்துக்கொடுத்தலின், அதனை உவமித்தார்.

கடலைச் சுற்றத்திரட்சிக்கு உவமையாக்கலுமொன்று.

*பொறி வரி புகர்முகம் தாக்கிய வயமான் கொடுவரி குருளை கொள கேட்டாங்கு—ஒளியினையும் வரியினையுமுடைய யானையைப்பாய்ந்த வலியையுடைய சிங்கத்தினுடைய வலிதவரியினையுடைய குருளை அவ்வியானையின் மத்தகத்தைத் கொள்ளவிரும்பினற்போல,

450 - 52. பகைவர் கடி மதில் எறிந்து குடுமி கொள்ளும் வென்றி அல்லது—பகைவரது காவலையுடைய மதில்களையழித்து ஆண்டிருந்த அரசருடைய முடிக்கலமுதலியவற்றை வாங்கிக்கொண்டு வீரமுடியினையும் வெற்றியினை விரும்புதலல்லது,

இதனால் †"இகன்மதிற் குடுமி கொண்ட மண்ணுமங்கலம்" என்னுந்தலை கூறினர்; ‡குடுமிகொள்ளும் வென்றியெனவே மண்ணுமங்கலமாயிற்று

452 - 4 வினை உடம்படினும் ஒன்றல் செல்லா உரவு வாள் தட கை கொண்டி உண்டி தொண்டையோர் மருக—அம்மதிலரசர் §சந்துசெய்தற்கு உடம்பட்டாராயினும் அதற்கு மனம்பொருந்துதல் கிழாமைக்குக்காரணமாகிய உலகெங்கும்பரக்கும் வானையுடைத்தாகிய பெருமையையுடைய கையினையும் பகைப்புலத்துக் கொள்ளையாகிய உணவினையுமுடைய தொண்டையைச்சூழ்ந்தோருடைய குடியிலுள்ளவனே,

455. மன்னர் மன்ன—வீரர்க்கு வீரதனைகொடுக்கின்றவனே,

மறவர் மறவ—கொடியோர்க்குக் கொடியவனே.

456. செல்வர் செல்வ—செல்வமுடையோர்க்கு கொடுத்தலிலிருப்பவனே,

செரு மேம்படுத—போர்தொழிலிலே மிக்கவனே.

பெரும (461)—பெருமானே,

457 - 8. வென் திரை பரப்பில் கடு சூர் சொன்ற பைம்பூண சேஎய் பயந்த மா மோடு—வென்ற திரையினையுடைய கடலிலேசென்று கடியசூரனைக்கொன்ற பசிய பூணினையுடைய முருகனைப்பெற்ற பெருமையையுடைய வயிற்றினையும்,

459. துணங்கை அம் செல்விக்கு அணங்கு கொடித்தாங்கு—பேய்மகளாகிய ||துணங்கைக்கூத்தினையும் அழகினையுமுடைய இறைவிக்குப பேய்மகளெ கொடிசொன்னற்போல,

* பொறி - ஒளி; (புறநா. 161)

† "தொல்லிலங்கை குடுமிகொண்டு" (கூர்ம. சுவேத. 5.)

‡ "குடுமிகொள்ளு மண்ணுமங்கலம்" (கூர்ம 27 - 5.)

§ சந்துசெய்தல் - பொருத்துதல்.

|| துணங்கை: (முருத. 56.)

மாட்டிய தினை புனர் தொழில் மால் கடல் வினை கண்டன்ன *வால் உளை புரவி சான்ற உடன் பூட்டி—குதிரைதூல்கற்றோர்புகழ்ந்த அழகினையுடையவாய்த் தனித்துத்தொழில்செய்யாமல் இனங்களோடுகூடுந் தொழிலையுடையவாய்க் கருமையையுடையகடலிற் சங்கைக்கண்டாற்போன்ற வெள்ளிய †கழுத்தின் மயிரையுடைய குதிரைகள்சான்றைச் சேரப்பூட்டி.

சான்ற சால்பெனப்பெயர்த்திரிசொல்.

490. அரி தேர் எல்லியும் அமையான்—பொன்னுற்செய்த தேரைத்தரும் கொடை மேல் விருப்பத்தவிராலும்,

490 - 92. செரு தொலைத்து ஒன்னு தெவ்வர் உலவிடத்து ஒழிந்த விசும்பு செல் இவுளியொடு பல படை தரீஇ—தர்முடன்வத்து பொருதோருடைய போர்களை மாளப்பண்ணித் தன்னேவலைப்பொருந்தாத பகைவர்முதுகிட்டவிடத்து விட்டுப்போன ஆகாயத்தேசெல்கின்ற குதிரைகளுடனே பரிய பொன்னுற்செய்த ‡பக்கரைகளைபுர்ந்து,

493. [அன்றே வீடுக்குமவன் பரிசில்:] அவன் அன்றே பரிசில் விடுகும்—அவன் நீசென்ற அற்றைநாளே இவையெழுந்த பரிசில்களைபுர்தரும்;

493 - 4. இன் சீர் இன்னரம் முரலும் அணங்குடை சாரல்—இனியதாளத்திலே இன்னரமென்னும் பறவைகள்பாடுந் தெய்வங்களையுடைய சாரலிடத்து,

495. மஞ்ஞை ஆலும் மரம் பயில் இறும்பின்—மயில்களாரவாரிக்கு மரம்செருங்கின இளமரக்காட்டினையுமுடைய,

496. கலை பாய்ந்து உதிர்ந்த மலர் ஏழ் புறவின்—முசக்கலைகள்பாய்ந்து உதிர்த்த மலர்கள்சிந்தின காட்டினையும்,

497. மந்தி சேக்கும் மா தண்சுனை முன்றில்—மந்திகள் அவ்விடத்துக் கிடந்த §தாலைவாரும் மாலும்புலியுந் துயில்கொள்ளும் முற்றத்தே,

புறவினையும் (496) இறும்பினையு (495) முடைய சாரலிடத்து (494) முன்றிலிலே (497) கேட்கு (493) மென்க.

498. செ நீ பேணிய முனிவர்—சிவந்தநீயைக் கைவிடாமற்காத்துப் போந்த இருடிகள்,

498 - 9. வெள் கோடு எனிறு தரு விறலின் வேட்கும்—வெள்ளிய கொம்பினையுடைய களிறு முறித்துக்கொண்டுவந்த சமிதையாலே வேள்வியைச்செய்யும்.

மந்தி சேக்கும், மா தண்சுனையும், களிறு கிறகுதருதலும் இருடிகளாலேயால் கிழக்கினவென்றுணர்க.

500. [ஒளிறிலங் கருவிய மலைழ கோனே:]

ஒளிறு மலை—இவற்றுல்விளங்குமலை.

இலங்கு அருவிய மலை—விளங்குகின்ற அருவிகளையுடையமலை.

மலை ழவோன்—இச் சொல்ல மலையையாளும் உரிமையையுடையோன்.

---

* பொருந. 165.

† கழுத்தின்மயிர் தலைபாட்டமெனவும்வழங்கும்.

‡ பக்கரை - சேணம்.

§ தால் - செத்தை.

புலவுவாய்ப்பாண (22), பெருவளனெய்தி (26) முகந்துகொண்டு (27) யாம் அவனூரினின்றும் வருகின்றேம்; நீயிரும் (28) திரையற்படர்குவிராயின் (37) நின்னுள்ளஞ்சிறக்க (45); நின்னவலங்கெடுக (38); இரவல (45). அவனிலைகேள் (38); அவன்புலம் கொடியோரின்று (41); அதுவேயன்றி அப்புலத்தில் உருமுமுரறாது; அரவுந் தப்பா (42); மாவும் உறுகண்செய்யா ஆகலின், ஆங்கு (43) அசைவுழி அசைஇத் தங்கிச் (44) சென்மோ (45); அங்ஙனஞ்செல்லுங்கால் வில்லுடைவைப்பிற் (82) குரம்பையில் (88) எயிற்றியர் (94) தாங்களட்ட புழுக்கலையும் வாடுனையும் (100) எல்லிடைக்கழியுநர்க்கு எமமாகத் (66) தேக்கிலையிலேகுவிக்கையினாலே (104) அப்பதத்தைப் (105) பெருமகனாகிய (101) வரைநாடன் சென்னியமெனிற் (103) கடும்போடே மிகப்பெறுகுவிர் (105); பின்னர் அருஞ்சுரமிறந்த அம்பர்க் (117) குறும்பிற் சேப்பின் (129) சொன்றியை (131) வறைகால்யாத்ததுவயின்றொறும்பெறுகுவிர் (133); பின்னர்த் தூங்கா (146) முரண்டலை (117) யிருக்கை (146) கழிந்தபின்றைக் (147) குடிவயிற்சேப்பின் (166) மூரல் பாலொடும்பெறுகுவிர் (168); பின்னர்ப் பறவையோர்க்கும் (183) புலத்தைப்போய்ச் (184) சீறூர்களிலே (191) வரகின் சொன்றியைப் (193) புழுக்கையட்டி (195) மூரலோடேபெறுகுவிர் (196); பின்னர் ஞாங்கர் (196) வன்புலமிறந்தபின்றை (206) மல்லற்பேரூர்மடியின் (254) வல்சியை (255) வாட்டொடும் பெறுகுவிர் (256); பின்னர்க் கரும்பின்றீஞ்சாறு விரும்பினிர் மிசைமின் (262); பின்னர் வலைஞர் குடிவயிற் சேப்பின் (274) பிழியைச் (281) சூட்டொடும் பெறுகுவிர் (282); பின்னர்த் தீப்பட மலர்ந்த (289) பூவையோம்பிக் (290) குறுநரிட்டமலரைப் (295) பிணையினிர் கழிமின் (296); பின்னர் மறைகாப்பாளர் உறைபதிச்சேப்பின் (301) வத்தத்தாலுண்டான அரிசியை (305) வளைக்கைமகடூஉ வயினறிந்தட்டனவற்றைச் (304) சுடர்க்கடையிலே (305) போழோடே (307) காடியோடே பெறுகுவிர் (310); பின்னர் நீர்ப்பெயற்றெல்லை போகிப் (319) பட்டினமருங்கி னசையின், முட்டுப்பாடின்றாகக் (336) கொழுநிணத்தடியொடு கூர்நறாப்பெறுகுவிர் (345); பின்னர்த் துறைபிறக்கொழியப்போகி (351) தனிமனைச்சேப்பின் (355), ஆண்டைத் தீம்பஃறாரமுனையிற் சேம்பிலையோடே (361) முதிர்கிழங்கார்குவிர் (362); இவற்றை இவ்வழியின் கண்ணே பெற்றுப் பின்னர்ப் பன்மரநீளிடைப்போய் (368) நாடுபலகழிந்தபின்றைப் (371) பள்ளியமர்ந்தோன் ஆங்கட் (373) பொழிறொறும் (380) ஆடி (387) அசைஇத் (390) தொலைச்சி (382) மரீஇக் (383) கடவுள்வாழ்த்தி (391) இயக்கினிர் கழிமின் (392); இங்ஙனஞ்சென்று கைவண்டோன்றல் (420) இப்பொழுது ஐவர்போலக் (417) குருதியீர்ப்பப் (414) பொருது (415) ஆர்த்துப் (419) பகைமேற் செல்லுதலின்றி நச்சிச்சென்றோர்க்கு எமமாகிய (421) படப்பை முதலியவற்றையுடைய (401) விழவு மேம்பட்ட மூதூராகிய (411) கச்சியிடத்தே யிருந்தோன் (420); அவ்வூரிற் பணிந்த மன்னர் (428) செவ்விபார்க்கும் முற்றத்தினையுடைய (435) பொன்றுஞ்சு வியனகர்க்கண்ணே (440) பகல்செய் மண்டிலம் பாரித்தாங்கு (442) மிக்ககாட்சியாலே (445) அருளிப்

மாட்டிய தூணை புணர் தொழில் மால் கடல் வினை கண்டன்ன *வால் உளை புரவி சான்ற உடன் பூட்டி—குதிரைதூல்கற்றோர்புகழ்ந்த அழகினையுடையவாய்த் தனித்துத்தொழில்செய்யாமல் இனங்களோடுகூடுந் தொழிலையுடையவாய்க் கருமையையுடையகடலிற் சங்கைக்கண்டாற்போன்ற வெள்ளிய †கழுத்தின் மயிரையுடைய குதிரைகள்சான்றைச் சேரப்பூட்டி.

சான்ற சால்களைப்பெயர்த்திரிசொல்.

490. அரி தேர் கல்லியும் அமையான்—பொன்னுற்செய்த தேரைத்தரும் கொடை மேல் விருப்பத்தவிராஞய்,

490 - 92. செரு தொலைத்து ஒன்னு தெவ்வர் உலவிடத்து ஒழிந்த விசும்பு செல் இவுளியொடு பல படை தரீஇ—தர்முடன்வந்து பொருதோருடைய போர்வினை மாளப்பண்ணித் தன்னேவலைப்பொருந்தாத பகைவர்முதிட்டவிடத்து விட்டுப்போன ஆகாயத்தேசெல்கின்ற குதிரைகளுடனே பல பொன்னுச்செய்த ‡பக்கரைகளையுத்தந்து,

493. [அன்றே விடுக்குமவன் பரிசில்:] அவன் அன்றே பரிசில் விடுக்கும்—அவன் நீசென்ற அத்தைனாளே இவைதொழிந்த பரிசில்களையுத்தரும்;

493 - 4. இன் சீர் இன்னரம் முரலும் அணங்குடை சாரல்—இனியதானத்திலே இன்னரமென்னும் பறவைகள்பாடுந் தெய்வகங்களையுடைய சாரலிடத்து,

495. மஞ்ஞை ஆலும் மரம் பயில் இறும்பின்—மயில்களாரவாரிக்கும் மரம்செருங்கின இளமரக்காட்டினையுமுடைய,

496. கலை பாய்ந்து உதிர்ந்த மலர் ஏழ் புறவின்—முசக்கலைகள்பாய்ந்து உதிர்ந்த மலர்களெங்கின காட்டினையும்,

497. மந்தி சேக்கும் மா தூங்கும் முன்றில்—மந்திகள் அவ்விடத்துக் கிடந்த §தூரலேவாரும் மானும்புலியுந் துயில்கொள்ளும் முற்றத்தே,

புறவினையும் (496) இறும்பினையு (495) முடைய சாரலிடத்து (494) முன்றிலிலே (497) வேட்கு (499) மென்க.

498. செ நீ பேணிய முனிவர்—செவ்தநீயைக் கைவிடாமற்காத்துப் போந்த இருடிகள்,

498 - 9. வெண் கோடு எனிறு தரு விறகின் வேட்கும்—வெள்ளிய கொம்பினையுடைய களிறு முறித்துக்கொண்டுவந்த சமிதையாலே வேள்வியைச்செய்யும்.

மந்தி சேக்கும், மா தூங்கும், களிறு விறகுதருதலும் இருடிகளாலேயால் கிழ்த்தனவென்றுணர்க.

500. [ஒளிறிலங் கருவிய மலிழ கோனே:]

ஒளிறு மலை—இவற்றுல்மினுங்குமலை.

இலங்கு அருவி மலை—விளங்குகின்ற அருவிகளையுடையமலை.

மலை கிழவோன்—இச் சொன்ன மலையையாளும் உரிமையையுடையோன்.

---

* பொருந. 165.

† கழுத்தின்மயிர் தலைபாட்டமெனவும்வழங்கும்.

‡ பக்கரை - சேணம்.

§ தூரல் - செந்தை.

புலவுவாய்ப்பாண (22), பெருவளனெய்தி (26) முகந்துகொண்டு (27) யாம் அவனூரினின்றும் வருகின்றேம்; நீயிரும் (28) திரையற்படர்குவிராயின் (37) நின்னுள்ளஞ்சிறக்க (45); நின்னவலங்கெடுக (38); இரவல (45). அவனிலைகேள் (38); அவன்புலம் கொடியோரின்று (41); அதுவேயன்றி அப்புலத்தில் உருமுமுரறாது; அரவுந் தப்பா (42); மாவும் உறுகண்செய்யா ஆகலின், ஆங்கு (43) அசைவுழி அசைஇத் தங்கிச் (44) சென்மோ (45); அங்ஙனஞ்செல்லுங்கால் வில்லுடைவைப்பிற் (82) குரம்பையில் (88) எயிற்றியர் (94) தாங்களட்ட புழுக்கலையும் வாடுனையும் (100) எல்லிடைக்கழியுநர்க்கு எமமாகத் (66) தேக்கிலையிலேகுவிக்கையினாலே (101) அப்பதத்தைப் (105) பெருமகனாகிய (101) வரைநாடன் சென்னியமெனிற் (103) கடும்போடே மிகப்பெறுகுவிர் (105); பின்னர் அருஞ்சுரமிறந்த அம்பர்க் (117) குறும்பிற் சேப்பின் (129) சொன்றியை (131) வறைகால்யாத்ததுவயின்றொறும்பெறுகுவிர் (133); பின்னர்த் தூங்கா (146) முரண்டலை (147) யிருக்கை (146) கழிந்தபின்றைக் (147) குடிவயிற்சேப்பின் (166) மூரல் பாலொடும்பெறுகுவிர் (168); பின்னர்ப் பறவையோர்க்கும் (183) புலத்தைப்போய்ச் (184) சீறூர்களிலே (191) வரகின் சொன்றியைப் (193) புழுக்கையட்டி (195) மூரலோடேபெறுகுவிர் (196); பின்னர் ஞாங்கர் (196) வன்புலமிறந்தபின்றை (206) மல்லற்பேரூர்மடியின் (254) வல்சியை (255) வாட்டொடும் பெறுகுவிர் (256); பின்னர்க் கரும்பின்றீஞ்சாறு விரும்பினிர் மிசைமின் (262); பின்னர் வலைஞர் குடிவயிற் சேப்பின் (274) பிழியைச (281) சூட்டொடும் பெறுகுவிர் (282); பின்னர்த் தீப்பட மலர்ந்த (289) பூவையோம்பிக் (290) குறுநரிட்டமலரைப் (295) பிணையினிர் கழிமின் (296); பின்னர் மறைகாப்பாளர் உறைபதிச்சேப்பின் (301) வத்தத்தாலுண்டான அரிசியை (305) வளைக்கைமகடூஉ வயினறிந் தட்டனவற்றைச் (304) சுடர்க்கடையிலே (305) போழோடே (307) காடியோடே பெறுகுவிர் (310); பின்னர் நீர்ப்பெயற்றெல்லை போகிப் (319) பட்டினமருங்கி னசையின், முட்டுப்பாடின்றாகக் (336) கொழுநிணத்தடியொடு கூர்நறாப்பெறுகுவிர் (345); பின்னர்த் துறைபிறக்கொழியப்போகி (351) தனிமனைச்சேப்பின் (355), ஆண்டைத் தீம்பஃறாரமுனையிற் சேம்பிலையோடே (361) முதிர்கிழங்கார்குவிர் (362); இவற்றை இவ்வழியின் கண்ணே பெற்றுப் பின்னர்ப் பன்மரநீளிடைப்போய் (368) நாடுபலகழிந்தபின்றைப் (371) பள்ளியமர்ந்தோன் ஆங்கட் (373) பொழிறொறும் (380) ஆடி (387) அசைஇத் (390) தொலைச்சி (382) மரீஇக் (383) கடவுள்வாழ்த்தி (391) இயக்கினிர் [illegible]ழிமின் (392); இங்ஙனஞ்சென்று கைவண்டோன்றல் (420) இப்பொழுது [illegible]போலக் (417) குருதியீர்ப்பப் (414) பொருது (415) ஆர்த்துப் (419) [illegible]கைமேற் செல்லுதலின்றி நச்சிச்சென்றோர்க்கு எமமாகிய (421) படப்பை [illegible]தலியவற்றையுடைய (401) விழவு மேம்பட்ட மூதூராகிய (411) கச்சி [illegible]க்தே யிருந்தோன் (420); அவ்வூரிற் பணிந்த மன்னர் (428) செவ்விபார்க் [illegible] முற்றத்தினையுடைய (435) பொன்றுஞ்சு வியனகர்க்கண்ணே (440) [illegible]ல்செய் மண்டிலம் பாரித்தாங்கு (442) மிக்ககாட்சியாலே (445) அருளிப்

(444) பூண்கடனாற்றிக் (450) கடனிறுத்த உள்ளத்தோடே (446) சுற்றத்தோடேயிருந்தோனைக் குறுகித் (447) தொண்டையோர் மருகனே (454), மன்னனே, மறவனே (455), செல்வனே, செருமேம்படுநனே (456), பெருமானே (461), செல்விக்கு அணங்கு நொடித்தாங்கு (459) நின் பெயருட்சிலவற்றைச் சொல்லிப் புகழ்ந்து (460) வந்தேன்; வாழியவெனச்சொல்லிக் (461) கழிப்பிப் (462) பழிச்சி (463) நின்னுடைய கலைகளெல்லாந் தனக்குத்தெரிவதற்கு முன்னே (464) மலைகிழவோன் (500) நில்லாவுலகத்துநிலைமை தூக்கி (466) அந்நிலையணுகல் வேண்டி அழைத்துச் (467) சிதர்வைநீக்கி (468) ௨௨இ (470) அமுதோடே (475) குறையும் (472) புழுக்கலும் (474) பிறவுமாகிய (475) அடிசிலைக் (476) கலங்களைப் பரப்பித் (477) தான் (479) முகனமர்ந்து மகமுறைநோக்கி (478) முன்னின்றூட்டி (479) விறலியர் மாலை வேயாநிற்க (486) நுமக்குத் தாமரை (481) பொலியச்சூட்டி (482) அரித்தேர் நல்கியும் அமையானாய் (490) இவுளியொடு பசும்படைதரீஇ (492) அவன் அன்றே (493) அந்நிலையிலே (464) நாவலந்தண்பொழில் வீவின்றுவிளங்கும்படி (465) இவையொழிந்த பரிசில்களையும் தரு (493) மெனவினைமுடிவு செய்க.

இப்பாட்டில் ஒருமைபன்மை மயக்கம், "முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி * * * போற்றல் வேண்டும்" (தொல். எச்ச. 66.) என்பதனாற்கொள்க.

தொண்டைமானிளந்திரையனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடிய பெரும்பாணாற்றுப்படைக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்தவுரைமுற்றிற்று.

வெண்பா.

கங்குலு நண்பகலுந் துஞ்சா வியல்பிற்றாய்
மங்குல்சூழ் மாக்கட லார்ப்பதூஉம்—வெஞ்சினவேற்
கான்பயந்த கண்ணிக் கடுமான் றிரையனை
யான்பயந்தே னென்னுஞ் செருக்கு.

ஐந்தாவது

முல்லைப்பாட்டு.



நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
யருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
யரும்பவி ழலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றி
னுறுதுய ரலமர னோக்கி யாய்மக
ணடுங்குசுவ லசைத்த கையள் கைய

---

1. "நனந்தலை யுலகம்" (பதிற். 63 - 18); 'நன' என்னும் அகர வீற்றுரிச் சொல், அகலமென்னுங் குறிப்புப்பொருளை யுணர்த்துதற்கும் உரிச் சொல் எழுத்துத்திரிந்திசைத்தற்கும் இவ்வடி மேற்கோள்; (தொல். உரி. 78 ந; இ - வி. சூ. 282, 289.)

2 - 3. "நீர்விரி கமலச் செங்கை நீர்செல நிவந்த மாயோன்" (பாக. வாமனாவதார. 64.) கம்ப. வேள்வி. 35 - ஆம் பாடலையும்பார்க்க.

4. 'வல னேர்பு' (முருகு. 1; முல்லை. 91; நெடுநல். 1).

7. மு. "வாள் போழ்" (நாற். சூ. 147 - உரை) என்னுஞ் செய்யு ளும் ஓரடி இப்படி வந்துள்ளது.

8 - 10. "நெல்லு மலருந் தூஉய்க்கை தொழுது" (நெடுநல். 43). அரும்பவிழ் முல்லை, நிகர்மலர் நெல்லொடு தூஉய்" (சிலப. 9 : 1 - 2); தொல். அகத். சூ. 5 - இள. மேற்.

11. பெருமுது பெண்டிர் : குறுந். 181.

8 - 11. "நென்னீ ரெறிந்து விரிச்சி யோர்க்குஞ், செம்முது பெண் டின் சொல்லு நிரம்பா" (புறநா. 280.)

12 - 4. இவ்வடிகளுடன், "எம்மனை மாரினி" (சீவக. 425) என்னும் செய்யுளை ஒப்பிடுக.

கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
வின்னே வருகுவர் தாய ரென்போ
ணன்னர் நன்மொழி கேட்டன மதனை
னல்ல நல்லோர் வாய்ப்புட் டெல்வர்
முன்னகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருத நலிவர் வார்வது நீயின்
பருவர லெவ்வங் களைமா யோவெனக்
காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந்து
நுரைபோ லுண்கண் புலம்புமுத் துறைப்பக்
கான்யாறு தழீஇய வகனெடும் புறவிற்
சேணுறு பிடவமொடு பைம்புத லெருக்கி
வேட்டுப்புனை யுருப்ப மாட்டிக் காட்ட
விடுமுட் புரிசை யேமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி
யுவலெக் கூரை யொழுகிய தெருவிற்
கவலை முற்றங் காவ னின்ற
தேம்படு கவுள சிறுகண் யானை
யோங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந் தியாத்த
வயல்வினை யின்குள குண்ணை நாகறுடைத்

---

16. இன்னே வருகுவர் (நெடுநல் 155.)

15 - 6. காதல் பற்றியும், உவப்புப்பற்றியும் அகிறினை உயர்திணை மயங்கியதற்கு இவ்வடிகள் மேற்கோள்; (தொல் இளவி. சூ. 27 - உ; இ - சூ 299.)

20 - 21. "பொய்ம்மை யுடன் புணராச் மேலவர் பொய்ம்மையு, மெ மைசூழ் மேலவரை மேவாவாம் - இம்முறையால், பூவலருந் தாரார் பிரிச் பொலவ குழையார். காவலர்சொற் போற்றல் கடன்" (இ - வி- சூ. 658-மே பா. வருவ ராதல் வாய்வது.

21. பா. மாயோனெ.

20 - 22. "இன்னே வருகுவ ரின்றினை யோரென, முகத்தவை கெ யவு மொல்லாண் மிகக்கலுழ்த்து" (நெடுநல். 155 - 6)

24 - 8. தொல். புறத. சூ 6. இள உ. மேற்.

28. பா. பரந்த பாசறை.

29. உவலை தழையென்னும் பொருளையுணர்த்து மென்பதற்கு இ மேற்கோள். (நற்றை. 363.)

30 - 31 "எல்லை நின்ற வெண்மி யானை யென்ன நின்ற...வாயி (கம்ப. சுக. 22.)

தயினுனை மருப்பிற்றங் கையிடைக் கொண்டெனக்
கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா விளைஞர் கவளங் கைப்பக்
கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோ லசைநிலை கடுப்ப நற்போ
ரோடா வல்விற் றூணி நாற்றிக்
கூடங் குத்திக் கயிறுவாங் கிருக்கைப்
பூந்தலைக் குந்தங் குத்திக் கிடுகுநிரைத்து
வாங்குவி லரண மரண மாக
வேறுபல் பெரும்படை நாப்பண் வேறோர்
நெடுங்காழ்க் கண்டங் கோலி யகநேர்பு
குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத
திரவுபகற் செய்யுந் திண்பிடி யொள்வாள்
விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்
நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக
கையமை விளக்க நந்துதொறு மாட்ட
நெடுநா வொண்மணி நிழற்றிய நடுநா
ளதிரல் பூத்த வாடுகொடிப் படாஅர்
சிதர்வர லசைவளிக் கசைவந் தாங்குத்
துகின்முடித்துப் போர்த்த தூங்க லோங்குநடைப்
பெருமூ தாள ரேமஞ் சூழப்
பொழுதளந் தறியும் பொய்யா மாக்க
டொழுது காண்கையர் தோன்ற வாழ்த்தி
யெறிநீர் வையகம் வெளீஇய செல்வோய்நின்

---

35. "கவை முட் கருவியு மாகிக் கடிகொள" (மணி. 18 164.)

36. "காழோர் கடுங்களிறு கவளங் கைப்ப" (மதுரை. 658 - 9.)

41. "கிடுகுநிரைத் தெஃகூன்றி" (பட. 78.)

43. வேறுபல் பெரும்படை "பன்னூ றடுக்கிய வேறுபடு பஞில, மிடங் கெட வீண்டிய லியன்கட் பாசறை" (புறநா. 62).)

44. "நெடுங்காழ்க் கண்ட நிரல்பட நிரைத்த, கொடும்பட நெடுமதில்" (சிலப். 27 : 151 - 2.)

48. "சொரிசுரை கவரு நெய்வழி புராலில்" (பதிற். 47. அடி - 5.)

49. பா. மாட்டி.

50. "நெடுநா வொண்மணி கடிமனை யிரட்ட", "யாமங் கொள்பவர் நெடுநா வொண்மணி, யொன்றெறி பாணியி னிரட்டும்" (நற். 40, 132.)

குறுநீர்க் கன்ன லினைத்தென் றிசைப்ப
மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமா ணல்லிற்
றிருமணி விளக்கங் காட்டித் திண்ஞா
ணெழினி ாங்கிய வீரறைப் பள்ளியு
ளுடம்பி ுரைக்கு முரையா நாவிற்
படம்புகு மிலேச்ச ருழைய ராக
மண்டமர் நசையொடு கண்படை பெறாஅ
தெடுத்தெறி யெஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து
பிடிக்கண மறந்த வேழம் வேழத்துப்
பாம்புபதைப் பன்ன பரூஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்திச்
சோறுவாய்த் தொழிந்தோ ருள்ளியுந் தோறுமிபு

---

58. "சூதர் வாழ்த்த யாகதர் நுவல, வேதா ளிகரொடு நாழிகை யிசைப்ப", (மதுரை. 670 - 71); "குறுநீர்க் கன்ன லெண்ணூ ரல்லது, கதிர்மருங் கறியா தஞ்சுவரப் பாஅய்" (அகநா. 43 - 6); "குறுநீர்க் கன்னலின் யாமங் கொள் பவர்" (மணி. 7 : 64 - 5); "புனலுற் றுருவு செப்பின், காலமறி வுற்றுணர்தல் கன்னலளவல்லான், மாலைபக லுற்றதென வோர்வரிது மாதோ" (கம்ப. கார் காலப். 73); இவ்வடி, சிலப். 5 : 49 - அடியார் மேற்கோள்.

66. படம் புகும்: (பெரும்பாண். 69.) "செங்கட் புன்மயிர்த் தோறிரை செம்முக, வெங்க ணோக்கிற்குப் பாயமி லேச்சனைச். செங்கட் டீவிழி யாத் தெழித்தான்" (சீவக. 431.)

67. "போரெனிற் புகலும் புனைகழன் மறவர்", "பொதுவிற் றூங்கும விசியுறு தண்ணுமை, வளிபொரு தெண்கண் கேட்பி, னதுபோரென்னு மென்னையு முளனே", "வாள்வடு விளங்கிய சென்னிச், செருவெங்குரிசில்" (புறநா. 31, 89, 321.) பா. மிலைச்சர்.

69. பா. வேழமும்.

70. "யானைதன், வாய்நிறை கொண்ட வலிதேம்பு தடக்கை, குன்றுபுகு பாம்பிற் றோன்றும்" (அகநா. 391: அடி. 11 - 2); "நிரைகதிர் நீளெஃக நீட்டி வயவர், வரைபுரை யானைக்கைந் நூற - வரைமே, லுருமெறி பாம்பிற் புரளுஞ் செருமொய்ம்பிற், சேய் பொரு தட்ட களத்து" (களவழி. 13.)

71 - 72. "புரந்தார்கண் ணீர்மல்கச் சாகற்பிற் சாக்கா, டிரந்துகோட் டக்க துடைத்து" (குறள். 780); "குஞ்சரந் தலையடுத்துக் கூர்தன்மாக் காலனையாச், செஞ்சோற்றுக் கடனீங்கிச் சினவுவாள் பிடித்துடுத்த, பஞ்சிமேற்

வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்
துண்ணா துயங்கு மாசிந் தித்து
ழொருகை பள்ளி யொற்றி யொருகை
முடியொடு கடகஞ் சேர்த்தி நெடிதுநினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொ ணோன்விர
னகைதாழ் கண்ணி நல்வலந் திருத்தி
யரசிருந்து பனிக்கு முரசுமுழங்கு பாசறை
யின்றுயில் வதியுநற் காணா டுயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியு மோடுவளை திருத்தியு
மையல் கொண்டு மொப்பென வுயிர்த்து
மேவுறு மஞ்ஞையி னடுங்கி யிழைநெகிழ்ந்து
பாவை விளக்கிற் பரூஉச்சுட ரழல
விடஞ்சிறந் துயரிய வெழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி
யின்ப லிமிழிசை யோர்ப்பனள் கிடந்தோ
ளஞ்செவி நிறைய வாலின வென்றுபிறர்

கிடந்துடைஞாண் பதைத்திலங்கக் கிடந்தாரை" (சீவக. 2240); "செஞ்சோற்றுக் கடனின்றே கழியே னாயிற் றிண்டோள்கள் வளர்த்ததனாற் செயல்வே றுண்டோ" (பாரதம். 17 - ஆம போர். 20.)

73. "வேனிறத் தீர்க்க வயவரா லேறுண்டு, மானிலங் கொள்ளக் கலங்கிச் செவிசாய்த்து, மாநிலங் கூறு மறைகேட்ப" (களவழி. 11); வை கூர்மையாகிய குறிப்புப்பொருளையுணர்த்துமென்றற்கு இவ்வடி மேற்கோள்; (தொல். உரி. சூ. 91 - சே; 89. ந.)

74. பா. மாவுஞ் சிந்திதது.

76. நெடிதுநினைந்து · முல்லை. 82.

75 - 6. (தொல். கற்பியல். சூ. 34. ந. மேற்)

83. ஒருபிரதியில் இவ்வடியின்பின் "அஞ்சி லோதி யாய்கவி னசைஇ, யேவுறு" என்னும்பகுதி காணப்படுகின்றது.

85. "யவன ரியற்றிய வினைமாண் பாவை, கையேந் தையக னிறைய நெய் சொரிந்து, பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிரெரி". "பாண்டில் விளக்கிற் பரூஉச்சுட ரழல" (நெடுநல். 101 - 3, 175); "பாண்டில் விளக்குப் பரூஉச்சுட ரழல" (பதிற். 47. அடி - 6.)

86. "எழுநிலை மாடஞ் சேர்ந்தும்" (சீவக. 2840.)

89. அல்வழிக்கட் கரமும் அகரமுங்கெடுதற்கு இது மேற்கோள்; (தொல். குற். சூ. 78 - ந.)

வேண்டுபுலங் கவர்ந்த வீண்டுபெருந் தானையொடு
விசயம் வெல்கொடி யுயரி வலனேர்பு
வயிரும் வளையு மார்ப்ப வயிர
செறியிலைக் காயா வஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை யங்கை யவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கான நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற்
றிரிமருப் பிரலையொடு மடமா னுகள
வெதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின்
முதிர்காய் வள்ளியங் காடுபிறக் கொழியத்
துனைபரி துரக்குஞ் செலவினர்
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே.

இதன்பொருள்.

இப்பாட்டிற்கு முல்லையென்று பெயர்கூறினார்; முல்லைசான்ற கற்புப்பொருந்தியதனால். இல்லறநிகழ்த்துதற்குப் பிரிந்துவருந்துணையும் ஆற்றியிருவென்று கணவன் கூறிய சொல்லைப் பிழையாமல ஆற்றியிருந்து இல்லறநிகழ்த்திய இயற்கை முல்லையாமென்றுகருதி இருத்தலென்னும்பொருடர முல்லை

---

90 - 91. "நீரொலித் தன்ன நிலவுவேற் றானையொடு. புலவுப்படக் கொன்று மிடைதோ லோட்டிப், புகழ்செய் தெடுத்த விறல்சா னன்கொடி" (மதுரை. 369 - 371.)

91. "வென்றெழு கொடியொடு வேழஞ் சென்றுபுக" (நெடுநல். 87.)

94. "கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்" (அகநா. கடவுள்); "கொன்றைகள் பொன்சொரிய" (தேவாரம், திருப்புகலி.)

95. சிறுபாண். 167. "கைவிரிந்தனகாந்தளும்" (சூளா. நாட்டு. 11.)

96. "குருதிப் பூவின் குலைக்காந் தட்டே" (குறுந். 1.)

99. "பெருங்கவின் பெற்ற சிறுதலை நெளவி. மடக்கட் பிணையொடு மறுகுவன வுகள" (மதுரை. 275 - 6), "அறுகோட் டிரலையொடு மான்பிணை யுகளவும்" (பட். 245); "மறியுடை மடப்பிணை தழீஇப் புறவிற். றிரிமருப் பிரலை பைப்பயி ருகள" (அகநா. 314 - அடிகள் 5 - 6.)

100. வெண்மழை (நெடுநல். 19)

102. 'துனை' என்னுஞ்சொல் விரைவென்னும் பொருளை யுணர்த்துமென்பதற்கு இவ்வடி மேற்கோள், (நொல். உரி. சூ. 17 - ந.)

யென்று இச்செய்யுட்கு நப்பூதனார் பெயர்கூறினமையிற் கணவன் வருந்துணையும் ஆற்றியிருந்தாளாகப் பொருள்கூறலே அவர்கருத்தாயிற்று. *"தானே சேறல்" என்னும்விதியால், அரசன் தானே சென்றது இப்பாட்டு.

இது, தலைவன் வினைவயிற் பிரியக்கருதியதனை அவன்குறிப்பானுணர்ந்து ஆற்றாளாய தலைவியது நிலைமைகண்டு அவன் வற்புறுப்பவும் உடம்படாதவளைப் பெருமுதுபெண்டிர் அவன் வினைமுடித்துவருதல் வாய்வது. நீவருத்தநீங்குவதெனக்கூற, அதுகேட்டு அவள் நீடுநினைந்து ஆற்றியிருந்தவழித் தலைவன் அக்காலத்தே வந்ததனைக் கண்டு வாயில்கள் தம்முட்கூறியது. இது, †"வாயிலுசாவே தம்முளு முரிய" ‡"எல்லா வாயிலு மிருவர் தேஎத்தும் - புல்லிய மகிழ்ச்சிப் பொருள வென்ப" என்பனவற்றாற் கூறினார்.

1. நன தலை உலகம் வளைஇ—அகலத்தை இடத்தேயுடைய உலகத்தை வளைத்து,

1 - 2. [நேமியொடு, வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை :]

நேமியொடு வலம்புரி தாங்கு தட கை மால் (3) —சக்கரத்தோடே வலம்புரியைத்தாங்கும் பெரியகைகளையுடையமால்.

மா § பொறித்த மால் (3) —திருமார்பிடத்தே திருமகளைவைத்த மால்,

3. நீர் செல நிமிர்ந்த மாஅல் போல மாவலிவார்த்த நீர் தன்கையிலே சென்றதாக உயர்ந்த திருமாலைப்போல,

இனி, நேமியோடே வலம்புரியையுமுடைய உத்தம விலக்கணங்களைப் பெற்றிருக்கின்ற திருமகளையணைத்தகையிலே நீர்செல்லவென்றுமாம்.

இதனானே முல்லைக்குரிய தெய்வங்கூறினார்.

4 - 5. [பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு, கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி :]

பாடு இமிழ் பனி கடல் பருகி வலன் ஏர்பு கோடு கொண்டு—ஒலிமுழங்குகின்ற குளிர்ச்சியையுடைய கடலைக்குடித்து வலமாகவெழுந்து மலைகளை இருப்பிடமாகக்கொண்டு,

உலகம் வளைஇ (1) எழுந்த கொடு செலவு எழிலி—பெய்யுங்காலத்தே உலகத்தைவளைத்தெழுந்த நடிய செலவினையுடைய மேகம்.

மால் நீர் செல நிமிர்ந்தாற்போல மேகமும் நீர்செலநிமிர்ந்த தென்றார்

இனி, உலகத்தைத் திருவடிகளிலே அணைத்துக்கொண்டுநிமிர்ந்த மாலென்று முரைப்பர்.

6. பெரு பெயல் பொழிந்த சிறு புல் மாலை - பெரிய மழையைப்பெய்த சிறுபொழுதாகிய வருத்தஞ்செய்கின்ற மாலைக்காலத்துப் பாவைவிளக்கு (85) எனக்கூட்டுக.

---

* தொல்காப்பியம் : அகத்திணையியல், 27.

† ,, செய்யுளியல், 201

‡ ,, கற்பியல், 37.

§ பொறித்தல்-வைத்தல். இதனைச் சிறுபாணாற்றுப்படை, "வடபுல விமயத்து வாங்குவிற் பொறித்த" (48) என்பதனுரையானுமுணர்க.

இதனானே முல்லைக்குரிய *காரும் மாலையுங் கூறினார்.

மால்போலெழுந்த எழிலிபொழிந்த மாலையென்க.

7. [அருங்கடி மூ, ருங்கிற் போகி :] அரு கடி முது ஊர் மருங்கில் நல்லோர் (18) போகி யகாவலையுடைய பழைய ஊர்ப்பக்கத்துப் பாக்கத்தே படைத்தலைவரே. ல நற்சொற்கோடற்குரியோர்போய்,

8 - 11. [யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு, நாழி கொண்ட நறுவீ முல்லை, யரும்பவி ழலரி தூஉய்க்கை தொழுது, †பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப:]

நறு வீ முல்லை அரும்பு யாழ் இசை இனம் வண்டு ஆர்ப்ப அவிழ் அலரி நாழி கொண்ட நெல்லொடு தூஉய் – நறியபூக்களையுடைய முல்லையினது அரும்புகள் யாழினது ஓசையினையுடைய இனமானவண்டுகள் ஆரவாரிக்கும்படி அவிழ்ந்தபூவை நாழியிடத்தே கொண்டுபோன நெல்லுடனே தூவி,

கைதொழுது விரிச்சி நிற்ப - தெய்வத்தை வணங்கி நற்சொற்கேட்டு நிற்க,

நல்லோர் (18) போகித் (7) தூஉய்த் தொழுது நிற்பவென்க.

என்றது:—ஒருவேந்தன் ஒருவேந்தனோடு இகல்கருதினாற் போர்செய்ய வேண்டுதலின், அவனாட்டந்தணர்முதலியோரைத் தன்னாட்டின்கண்ணே அழைத்தற்கும், அதனையறியாத ஆவைக் கொண்டுபோந்து தான் காத்தற்குமாகத் தன்படைத்தலைவரை நோக்கி அரசன் நிரையடித்தற்கேவியவழி அவர் அவனூரினின்றும்போய் ஒருபாக்கத்துவிட்டிருந்து அரசனுக்கு மேல்வரும் ஆக்கத்தையறிதற்கு விரிசசியோர்த்தல் வேண்டுமென்று புறத்திணையியலுட் கூறினமையான், ஈண்டும் அவ்வாறே கூறினார். அது, ‡“வேந்துவிடு முனைஞர் வேறுப்புலக் களவி, னாரந் தோமபன் மேவற் றாகும்,” §“படையியங் கரவம் பாக்கத்து விரிசசி” என்னுஞ்சூத்திரங்களானும், “திரைகவுள் வெள்வாய்த் திரிந்துவீழ் தாடி. நரைமுதியோ னின்றுரைத்த நற்சொ - னிரையன்றி, யெல்லைநீர் வைய மிறையோற் களிக்குமால், வல்லையே சென்மின் வழி” என்னும் உதாரணத்தானுமுணர்க. இவர் இதுகேட்டு நிரைகொண்டால் அரசன் வஞ்சிகுடி மண்ணசையால் மேற்செல்வனென்பது. ஆண்டு ¶“எஞ்சாமண்ணசை” என்னுஞ்சூத்திரத்திற் கூறியவாறே ஈண்டுக் கூறினார். அது மேல் “முனை கவர்ந்து” (19) என்பதனானுணர்க.

12 - 8. [சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றி, னுறுதுய ரலமர னோக்கி யாய்மக. ணடுங்குசுவ லசைத்த கையன் கைய, கொடுங்கோற் கோவலர் பின்

---

* “காரு மாலையு முல்லை குறிஞ்சி. கூதிர் யாம மென்மனார் புலவர்” என்பது தொல்காப்பியம், அகத்திணையியல், 6.

† பெருமுதுபெண்டிரென்பதற்கு ஒருபிரதியிலும் உரையிலது; பெரிய முதிர்ந்தபெண்டிரென்க.

‡ தொல்காப்பியம், புறத்திணையியல், 2.

§ ,, ,, 3.

¶ ,, ,, 7.

னின் நுய்த்தர, வின்னே வருகுவா தாய ரென்போ, ணன்னர் நன்மொழி கேட்டன மதனா, னல்ல நல்லோர் வாய்ப்புள் :]

நன்னர் வாய்ப்புள்—அவர்கேட்ட நன்றாகிய நற்சொல்,

ஆய் மகள் நடுங்கு சுவல் அசைத்த கையள்—இடைச்சாதியின்மகள் குளிரால் நடுங்குகின்ற தோளின்மேலே கட்டின கையளாய்நின்று,

சிறு தாம்பு தொடுத்த பசலை கன்றின் உறு துயர் அலமரல் நோக்கி—சிறிய தாம்பாலே காலிலே கட்டப்பட்ட வருத்தத்தையுடைத்தாகிய கன்றினுடைய முலையுண்ணாமலுறுகின்ற துயராலே தாய்வருமென்று சுழலுகின்ற தன்மையைப்பார்த்து,

கைய கொடு கோல் கோவலர் பின் நின்று உய்த்தர—கையிடத்தனவாகிய கொடிய கோலையுடைய இடையர் பின்னேநின்று செலுத்துதலைசெய்கையினாலே,

தாயர் இன்னே வருகுவர் என்போள் நன்மொழி கேட்டனம்—நிரம்ப மேய்ந்து நும்முடைய தாய்மார் இப்பொழுதேவருவரென்று கூறுகின்றோளுடைய நன்றாகிய வார்த்தையாக யாங்கள்கேட்டோம்;

அதனால்—அவள்கூறிய நற்சொல்லின் கருத்தால்,

18 - 20. [தெவ்வர், முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து, வருத றலைவர் வாய்வது :] தலைவர் தெவ்வர் முனை கவர்ந்து கொண்ட திறையர் வினை முடித்து வருதல் வாய்வது—நம் தலைவர் வஞ்சிசூடிச் சென்று பகைவர் மண்ணைக்கொண்டு பின் அவரிடத்தேவாங்கிக்கொண்ட திறையினையுமுடையராய் இங்ஙனந் தாமெடுத்துக்கொண்ட வினையை முடித்துவருவாரென்று நாம் கருதிய தன்மையிலே அவர்நிற்றல் உண்மை,

நல்ல—அவர் அங்ஙனம் வினைமுடித்துவருதல் நமக்கு இல்லறம் நிகழ்தற்குக்காரணமாகலின் நல்லகாரியம்;

20 - 21. [நீ நின், பருவர லெவ்வம் களைமா யோயென :] மாயோய் நீ நின் பருவரல் எவ்வம் களை என—*மாமைநிறத்தையுடையோளே, நீ நின் மனத்தடுமாற்றத்தான் உளதான வருத்தத்தைப் போக்கென்றுகூற, அதுகேட்டு,

செலவுக்குறிப்பறிந்து வேறுபட்டதுணர்ந்தமையின். மனத்தடுமாற்றமென்றார்.

பெருமுதுபெண்டிர் (11), நல்லோர் (18) போகித் (7) தூஉய்த தொழுது (10) விரிச்சிநிற்ப (11) அவர்கேட்ட நன்னர் (17) வாய்ப்புள் (18) ஆய் மகள் (13) கையளாகிக் (14) கன்றின் (12) அலமரனோக்கித் (13) தாயர் இன்னே வருகுவரென்போளுடைய (16) நன்மொழியாக யாங்கள் கேட்டனம்; அதன் கருத்தால் (17) தலைவர் வருதல் வாய்வது (20); நல்லகாரியம் (18); மாயோய் (21)

* மாமைநிறம் - நாருரித்த ஆம்பற்றண்டுபோன்றநிறம்; "நீர்வள ராம்பற் றாம்புடைத் திரள்கா, னாருரித் தன்ன மதனின் மாமை" (நற். 6.)

நின் (20) பருவரலெவ்வம் களையென்று கூற (21) அதுகேட்டு நீடு நினைந்து (82) என்க.

இங்ஙனம்பொருள்கூறாமல் தலைவியது இரக்கமிகுதிகண்டு பெருமுது பெண்டிர் விரிச்சிகேட்டுவந்து தலைவர் வருவாராதல் வாய்வது; நின்னெவ்வங் களையென்று பல்காலும் ஆற்றுவிக்கவும் ஆற்றாளாய்த் துயருழந்து (80) புலம் பொடு (81) தேற்றியும் திருத்தியும் (82) மையல்கொண்டும் உயிர்த்தும் (83) நடுங்கிநெகிழ்ந்து (84) கிடந்தோள் (88) எனப் பொருள்கூறியக்கால் நெய்தற் குரிய இரங்கற்பொருட்டன்றி முல்லைக்குரிய இருத்தற்பொருட்டாகாமை யுணர்க. அன்றியும் தலைவன் காலங் குறித்தல்லது பிரியானென்பதூஉம் அவன்குறித்தகாலங்கண்டால் தலைவிக்கு வருத்தமிகுமென்பதூஉம், அது பாலையாமென்பதூஉம். அவ்வாற்றாமைக்கு இரங்கல் நிகழ்ந்தால் நெய்தலாமென் பதூஉம் நூற்கருத்தாதலுணர்க.

22. [காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந்து:] காட்டவும் காட்ட வும் *கலுழ்சிறந்து காணாள்—தலைவன் †புகழும் மானமும் எடுத்துக்காட்டி வற்புறுத்தவும் தோன்றல் சான்ற மாற்றார் பெருமைகூறிக்காட்டி வற்புறுத்த வும் அன்புமிகுதியார் கலக்கமிக்கு இவை அரசற்கு வேண்டுமென்று மனத் திற் கருதாதவள்,

23. பூ போல் உண் கண் ‡புலம்பு முத்து உறைப்ப—பூப்போலும் மை யுண்கண்கள் தாரையாகச்சொரியாது தனித்துவீழ்கின்ற முத்துப்போலுந் துளி யைத் துளிப்ப அதுகண்டு,

24. கான் யாறு தழீஇய அகல் நெடு புறவின் — காட்டாறுசூழ்ந்த அகன்ற நெடிய காட்டிடத்தே,

25. சேண் நாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி — தூரியநிலத்தே நாறு கின்ற §பிடவமோடே ஏனைப் பசியதூறுகளையும் வெட்டி,

26. வேடு புழை அருப்பம் மாட்டி—பகைப்புலத்துக்குக் காவலாகவிருக் கும் வேட்டுவச்சாதியினுடைய அரண்களையழித்து,

26 - 7. [காட்ட. விடுமுட் புரிசை யேமுற வளைஇ:] காட்ட முள் இடு புரிசை எமம் உற வளைஇ—காட்டின்கண்ணவாகிய முள்ளாலிடுமதிலைக் காவ லுறும்படி வளைத்து.

28. [படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி:] புணரி படும் நீரின் பரந்த பாடி— திரையொலிக்கின்ற ||கடல்போற்பரந்த பாசறைக்கண்ணே கண்படைபெறாது (67) என்க.

---

* பி - ம். 'கலிழ் சிறந்து'

† "புகழு மானமு மெடுத்துவற் புறுத்தலும் ..... தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்" (தொல். அகத்திணை. சூ. 41.)

‡ "புலம்பே தனிமை" (தொல். உரி. சூ. 33.)

§ இது பிடாவென வழங்கும்.

|| "கடன்மருள் பெரும்படை", "படைநிலா விலங்குங் கடன்மரு டானை" (அகநா. 116, 212.); "கடலென, வானீர்க் கூக்குந் தானை" (புறநா. 17.)

புறவிடத்தே (24) எருக்கி (25) மாட்டி (26) வளைஇப் (27) பரந்த பாடியென்க.

29. உவலை கூரை ஒழுகிய தெருவில்—தழையாலேவேய்ந்த கூரை ஒழுங்குபட்டதெருவிடத்து,

30 - 31. கவலை முற்றம் காவல் நின்ற தேம் படு கவுள சிறு கண் யானை — நாற்சந்தியானமுற்றத்தே காவலாகநின்ற மதம்பாய்கின்ற கதுப்பினையுடையவாகிய சிறியகண்ணையுடைய யானை,

32 - 3. [ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந் தியாத்த, வயல்விளையின்குள குண்ணாது :] ஓங்கு நிலை. கரும்பொடு வயல் விளை கதிர் மிடைந்து யாத்த இன் குளகு உண்ணாது—வளர்கின்ற தன்மையையுடைய கரும்புகளோடே வயலிலேவிளைந்த நெற்கதிரிடையே நெருங்கப்பட்டுக் கட்டிப்போகட்ட சாவியையும் இனிய *அதிமதுரத்தழையையும் தின்னாமல்,

33 - 4. நுதல் துடைத்து அயில் நுனை மருப்பில் தம் கையிடை கொண்டென—அவற்றாலே சுற்நெற்றியைத்துடைத்துக் கூர்மையையுடைய முனைகளையுடைய கொம்பினிடத்தே ஏறட்ட தம் கையிடத்தே கொண்டுநின்றனவாக,

35 - 6. [கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக், கல்லா விளைஞர் கவளங் கைப்ப :] கல்லா இளைஞர் வடமொழி பயிற்றி கவை முள் கருவியின் †கவளம் கைப்ப—வடமொழியை அடியிலேகல்லாத இளைஞர் ‡யானைப்பேச்சான வடமொழிகளைக்கற்றுப் பலகாற்சொல்லிக் கவைத்தமுள்ளையுடைய §பரிக்கோலாலே கவளத்தைத் தின்னும்படி குத்த.

யானைக்குச்செய்யும் தொழில்களொழிய வேறொருதொழிலைக் கல்லாத இளைஞரென்றுமாம்.

37 - 40. [கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான், முக்கோ லசைநிலை ஈடுப்ப நற்போ, ரோடா வல்விற் றூணி நாற்றிக். கூடங் குத்திக் கயிறுவாங்கிருக்கை :]

கூடம் குத்தி கயிறு வாங்கு இருக்கை—கூடமாகக் கால்களைநட்டுக் கயிற்றை வலித்துக்கட்டின இருப்பின்கண்ணே,

என்றது ||படங்குகளை.

கல் தோய்த்து உடுத்த படிவம் பார்ப்பான முக்கோல் அசை நிலை ஈடுப்ப—துகிலைக் காவிக்கல்லைத் தோய்த்துடுத்த விரதங்களையுடைய ¶முக்கோலந்தணன் அம்முக்கோலிலே அந்தஉடையினை இட்டுவைத்த தன்மையையொக்க.

---

* யானைக்கு அதிமதுரத்தழையில் விருப்பமுண்டென்பதை. சீவக. 750 ஆம் செய்யுளாலுமுணர்க. பி - ம். அட்டிமதுரத்தழை.

† பி - ம். 'கவழமகைப்ப'

‡ யானைப்பேச்சான வடமொழிகளாவன, அப்புது அப்புது, ஆது ஆது, ஐ ஐ என்பன. (சீவக. 1834 - உரை.)

§ பரிக்கோல் - குத்துக்கோல்.

|| படங்குகள் - கூடாரங்கள்.

¶ "உரைசான்ற முக்கோல்" (கலி. 9.)

நல் போர் ஓடா வல் வில் தூணி நாற்றி—அறத்தாற்பொருகின்ற போரிற்கு ஓடாமைக்குக் காரணமான வலியவில்லைச் சேரவூன்றி அதிலே தூணிகளைத் தூக்கி,

41. பூ தலை குந்தம் குத்தி—பூத்தொழிலைத் தலையிலேயுடைய எறிகோல்களையுமூன்றி,

பூந்தலை, விகாரம்.

கிடுகு நிரைத்து—கிடுகுகளையும் நிரையாகக் குத்தி,

42. வாங்கு வில் அரணம் அரணம் ஆக—இங்ஙனஞ்சூழும் விற்படையாகிய அரணே தங்களுக்கு அரணாக, இதற்குள்ளேவிட்ட,

கயிறுவாங்கிருக்கைக்கண்ணே (40) நாற்றிக் (39) குத்தி நிரைத்து (41) வாங்குவில்லரணமென்க.

43. வேறு பல் பெரு படை நாப்பண்—பாடைவேறுபட்ட பலவாகிய பெரியபடைக்குநடுவே,

43 - 4. [வேறோர், நெடுங்காழ்க் கண்டங் கோவியக நேர்பு ·]

வேறு ஓர் அகம் நேர்பு—வேறோரிடத்தை அரசனுக்குக் கோயிலாக எல்லாருமுடம்பட்டு,

நெடு காழ் கண்டம் கோவி—நெடிய குத்துக்கோலுடனேபண்ணின பல நிறத்தாற் கூறுபட்ட *மதிட்டிரையைவளைத்து,

கண்டம், ஆகுபெயர்.

45. குறு தொடி முன்கை கூந்தல் அம் சிறு புறத்து மங்கையர் (47)—குறியதொடியையுடைய முன்கையினையும் கூந்தலசைந்துகிடக்கின்ற அழகினையுடைய சிறியமுதுகினையுமுடைய மங்கையர்,

46 - 7. இரவு பகல் செய்யும் திண் பிடி ஒள் வாள் விரவு வரி கச்சின் பூண்ட மங்கையர்—இராப்பொழுதைப் பகற்பொழுதாக்கும் திண்ணிய †ஆசினையுடைய ஒள்ளியவாளை விரவினநிறத்தினையுடைய கச்சினாலேபூண்ட மங்கையர்,

48 - 9. நெய் உமிழ் சுரையர் நெடு திரி கொளீஇ கை அமை விளக்கம நந்துதொறும் மாட்ட—நெய்யைக்காலுகின்ற திரிக்குழாயையுடைய சிற்றாட்கள் நெடிய திரியை எங்குங்கொளுத்தி ஒழுங்காயமைந்த விளக்குக்கள் அவியுந்தோறும் தம்கையிற்பந்தத்தைக்கொளுத்த,

50 நெடு நா ஒள் மணி நிழற்றிய நடு நாள்—நெடிய நாக்கினையுடைய ஒள்ளியமணி எறிந்துவிட்ட நடுயாமத்தும்,

கோயில் ‡பணிமடங்கினால் மணியெறிந்துவிடுதல் இயல்பு.

---

* மதிட்டிரை, கண்டத்திரையெனவும் பல்வண்ணத்திரையெனவும் வழங்கும்; (சீவக. 647, 873.)

† பி - ம். (க) கவிசினையுடைய (உ) வாய்ச்சினையுடைய.

‡ பணி - வேலை.

இவரி யானை குதிரைமுதலியன துயில்கோடலின், அவற்றின் மணி யோசை அடங்கிய நடுநாளென்றுமாம்.

51 - 2. அதிரல் பூத்த ஆடு கொடி படாஅர் சிதர் வரல் அசை வளிக்கு அசைவந்தாங்கு—*புனலிபூத்த அசைகின்ற கொடியினையுடைய சிறுதூறுகள் துவலையோடே வருதலையுடைய அசைந்த காற்றிற்கு அசைந்தாற்போல,

சிதர் - மெத்தெனவுமாம்.

53 - 4. துகில் முடித்து போர்த்த தூங்கல் ஓங்கு நடை †பெரு மூதாளர் ஏமம் சூழ—‡மயிர்க்கட்டுக்கட்டிச் சட்டையிட்ட அனந்தரினையும் பெரிய ஒழுக்கத்தினையுமுடைய மெய்காப்பாளர் காவலாகச சூழ்ந்துதிரிய,

55 - 6. [பொழுதளந் தறியும் பொய்யா மாக்க, டொழுது காண்கையர் தோன்ற வாழ்த்தி:]

மாக்கள் பொழுது அளந்து அறியும பொய்யா காண்கையா - அறிவில்லா தோருடைய வாழ்நாளை இத்துணையென்று அளந்தறியும் பொய்யாத காட்சியை யுடையார்,

தொழுது தோன்ற வாழ்த்தி—அரசனைவணங்கி விளங்க வாழ்த்தி.

57. எறி நீர் வையகம் வெலீஇய செல்வோய்—திரையெறிகின்ற கடல் சூழ்ந்த உலகத்தே பகைவரை வெல்லுதற்குச செல்கின்றவனே,

57 - 8. நின் குறுநீர் கன்னல் இனைதது என்று இசைப்ப—கிடாரதது நீரிலேகாண்கின்ற நினது நாழிகைவட்டிலிற்சென்றநாழிகை இத்துணையென்று சொல்லுகையினாலே,

59. [மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை:]

மத்திகை வளைஇய உடை—புரவியை யடிக்கின்ற சம்மட்டி வளைந்து கிடக்கின்ற உடை,

மறிந்து வீங்கு செறிவு உடை—அச்சமமட்டி மறையும்படி வடிமபுதாழ்ந்து பெருக்குஞ் செறிதலையுடைய §புடைவையுடையினையும,

60. மெய்ப்பை புக்க வெரு வரும தோற்றதது—சட்டையிட்ட அச்சம் வரும் தோற்றரவினையும்,

61. வலி புணர் யாக்கை—இயல்பான வலிகூடின மெய்யினையுமுடைய,

வன்கண் யவனர்—தறுகண்மையினையுடைய சோனகர்,

62. புலி தொடர் விட்ட புனை மாண் நல் இல்—புலிசசங்கிலிவிடப்பட்ட கைசெய்தமாட்சிமைப்பட்ட நன்றாகிய இல்லிலே,

---

* புனலி - மோசிமல்லிகை; (சிலப். 13: 156 - அடியார்.)

† "பெருமூ தாளரே மாகிய வெமக்கே" (புறநா. 243.)

‡ மயிர்க்கட்டு - தலைப்பாகை.

§ ஆணுடையையும் புடைவையென்பது பண்டைக்காலவழக்கு.

63 - 4. திரு மணி விளக்கம் காட்டி நின் ஞான் எழினி வாங்கிய சாந்தம் பள்ளியுள்—அழகினையுடைய மாணிக்கமாகிய விளக்கை எரியவைத்துத் தின்னிய விற்றின்றிரளையை நீக்கிய புறவைக்குள்ளறையிற் படுக்கைக்கண்ணே சென்று,

65 - 6. [உடம்பி னுரைக்கு முரையா ரவிர், படம்புரு மிலேச்சர் குழைய சாக:] உரையா ரவின் உடம்பின் உரைக்கும் படம் புரும் மிலேச்சர் உழையர் ஆக—வார்த்தை சொல்லாத ரவினையுடைய கையாலும் முகத்தாலும் வார்த்தைசொல்லும் சட்டையிடும் *அசாரவாசின் பள்ளிகொள்ளுமிடத்தைச் சூழ்ந்திருக்க,

உரை ரவென்னும், ஐகாரம் சாரியை.

67. மண்டு அமர் கசையொடு கண்படை பெறுஅது—பகைவர் மனமறியாமல் மிக்குச்செல்கின்ற போரை ரச்சதலாலே கண்ணுறக்கம்பெறுமல்,

68 - 9. எடுத்து எறி எக்கம் பாய்தலின் புண் கூர்ந்து பிடி கணம் மறந்த வேழம் உள்ளியும் (72)—ஓசிவெட்டுகின்ற வாளேர்த்தலையிலே புண்மிக்குப் பிடித்திரினமறந்த வேழத்தை உள்ளியும்,

69 - 70. [வேழத்துப், பாம்புபதைப் பன்ன பரூஉக்கை துமிய:] வேழத்து பரூஉ கை பாம்பு பதைப்பன்ன துமிய—யானையினுடைய பரியகைகள் பாம்பினது பதைக்கின்ற தன்மையையொத்த பதைப்பினையுடையவாக அற்று விழும்படி,

71 - 2. தேம் பாய் கண்ணி கல் வலம் திருத்தி சோறு வாய்த்து ஒழிர் தோர் உள்ளியும்—தேன்பரகும் †வஞ்சிமாலைக்கு ரன்றிய வெற்றியை புண்டாக்கிச் செஞ்சோற்றுக்கடனிறுத்துப் பட்ட வீரரினினைத்தும்,

72 - 4. தோல் துமிபு வை தினை பகழி மூழ்கலின் செவி சாய்த்து உண்ணுது உயங்கும் மா சிந்திதும்—பக்கரைகளை யறுத்துக் கரியமுனையினையுடைய அம்புகள்வந்த அழுத்துகையிலுலே செவிசாய்ந்துப் புல்லுண்ணுதே வருந்தும் குதிரைகளினினைத்தும்,

75 - 6. [ஒருகை பள்ளி யொற்றி யொருகை, முடியொடு கடகஞ் சேர்த்தி:] ஒருகை பள்ளி ஒற்றி ஒருகை கடகம் முடியொடு சேர்த்தி—ஒருகையைப் படுக்கையின்மேலேவைத்த ஒருகையிற்கடகத்தை முடியோடேசேரவைத்த,

என்றது, கையிலே தலையைவைத்தென்றராயிற்று.

செடிதகு தினைத்து—இப்படைசொத்தவளவுக்கு ரனை எவ்வாறு பொருமென்று செடிதாகினைத்து,

77. பகைவர் சுட்டிய படை கொள் கோல் விரல்—‡பகைவரைக்கருதிவைத்த வரிவைப்பிடித்த வலியினையுடைய கையாலே வெட்டிவென்ற (89) என்க.

---

* பி - ம். சரவாசென்.

† வஞ்சிமாலை - பகைமேற்செல்வோர்க்குரிய அடையாளமாலை.

‡ "தென்னர்த் தேய்த்த, வேல்" (பட். 299 - 300) என்பதனுரை இங்கே அறியற்பாலது.

78. *கை தாழ் கண்ணி கல் வலம் திருத்தி*—தனக்கு எக்காலமும் இன்னத்தன்மையுடையோனென்று கண்டறிந்த வெற்றியை நிலைபெறுத்தி,

79. *அரச இருத்து பணிக்கும் பாசறை* - பகையரசிருந்து கேட்குதற்குக் காரணமான பாசறை.

பணிக்கும் பாசறை, †சோர்திருமருங்குபோனின்றது.

முரசு முழங்கு பாசறை — வெற்றிக்களிப்புத்தோன்ற முரசமுழக்கும் பாசறை,

80 - 84. [இன்றயில் வதியுநர் காணு மெருழூத்து, நெஞ்சார்ந்துப் படுத்த நிறைதபு புலம்பொடு, நீடினர்த்து தேற்றியு மோடுவனே திருத்தியு, மையல் கொண்டு மொய்யென வுயிர்த்து, மேவுற மஞ்ஞையி னடுவணி யிழைகெழிழ்த்து]

வதியுநன் இன் துயில் காணுள்—தன்னிடத்தேதங்குகின்றவனை இனிய துயில் கொள்ளுதலைக் காணுமாய்,

நெஞ்சு ஆர்ப்படுத்த புலம்பொடு—அவன் தன்னெஞ்சம் தான்போகின்ற வழியிற் செலுத்துதலால் தனக்குண்டான தனிமையாலே,

இது ‡"நிகழ்ந்தது நினைந்தற் கேதுவு மாகும்" என்பதாம்.

நிறை தபு புலம்பு—தனது நிறைகெடுத்ததனிமை,

நீடு நினைந்து—இங்ஙனம் பிரிந்தாலன்றி இவ்வரியல் நிகழாதென்ற நினைத்து,

ஒடு உவா திருத்தியும்—கழலுகின்றவினையைக் கழலாமற் செறித்தும்.

மையல்கொண்டும்—மயக்கங்கொண்டும்,

ஒய்யென உயிர்த்தும்—விரைய நெட்டுயிர்ப்புக்கொண்டும்,

வை உறு மஞ்ஞையின் நடுவணி இழை நெகிழ்த்து—அம்புனைத்த மயில் போல நடுவில் அணிகலங்கள் நெகிழ்ந்து கண் புலம்புமதுதோற்ற (23) எனக் கூட்டுக.

துயர் உழந்து தேற்றியும்—அதனைக்கண்டு தானும் வருத்தமுற்று இவள் ஆற்றியிராளென்று தனித்தும்

85. *பாவை விளக்கில் பரூஉ சுடர் அழல*—பொற்பாவை யெரிகின்ற §தளியிலே பரியவிளக்கு நின்றெரிய,

---

* மேற்சென்றபொருது பகைவரை அவரிடத்தே வெல்ல நினைத்தானென்பது இதன்கருத்து; "நிறபடையான்", "நிறைகலனும்" என்னும் தொடர்க் குறள்களும், "சண்டவ ரடுதலு மொல்லா ஞண்டவர், மாணிழை மகளிர் காணினர் கழியத், தந்தை தம்மூ ராங்கட், டெண்கினை கறங்கச்சென றுண்டட் டனனே" என்னும் புறநானூறும் (78) இதனைவலியுறுத்தும்.

† கலித்தொகை, 60.

‡ தொல்காப்பியம், அகத்திணையியல், 43.

§ *தளி* - அகல்; "வையத் தளியா" (திவ். முதன்றிரு. 1); இப்பெயர் தாளியென்றும் வழங்கும்.

வினக்கு, ஆருபெயர்.

86. இடம் நெய்த உயரிய எழினிலை மாடத்து—தனக்குள்ள இடமெல்லாம் பொன்னாலும் மணியாலும் நெய்யப்பெற்று உயர்ந்த எழினிலையினையுடைய மாடத்திடத்து,

87. முடக்கு இறை சொரிதரும் மா நிரை அருவி—*மூட்டுவாய்களினின்றும் சொரிதலைச்செய்யும் பெருமையையுடைய நிரண்ட அருவிகளையுடைய,

88. இன் பல் இமிழ் இசை ஒப்பனன் கிடந்தோன்—இனிய பலவாகிய முழங்குகின்ற ஓசைக்கண்ணே தலைவன் தான்கூறிய பருவம் பொய்யாமல் வருவனென்னும் கூர்த்தினைமாகலின் அவன்வரவினையே கருதிக்கிடந்தோளுடைய,

89. அஞ்செவி கிறைய ஆலின —அகஞ்செவி நிரம்பும்படி ஆரவாரித்தன:

89 - 91. [வென்றபிறர், வேண்டுபுலம் கவர்ந்த வீண்டுபெருந் தானை யொடு, விசயம்:]

வென்று—வெட்டிவென்று,

பிறர் வேண்டு புலம் கவர்ந்த விசயம்—பகையரசர் எக்காலமும் விரும்பும் நிலங்களைக் கைக்கொண்ட வெற்றியாலே,

ஈண்டு பெரு தானையொடு—நிரளுகின்ற பெரிய படையோடே,

அரசன் வினைமுடித்தகாலத்தே விரைந்துபோந்தாராகலின், அதுகேட்டு வருகின்ற படையெண்பதுதோன்ற ஈண்டுபெருந்தானை யென்றார்.

91. வெல் கொடி உயரி—எக்காலமும் வென்றெடுக்கின்ற கொடியை எடுத்து,

91 - 2. வலன் ஏர்பு வயிரும் வினையும் ஆர்ப்ப—வெற்றிதோன்றிக் கொம்பும் சங்குமுழங்க,

92 - 3. அயிர செறி இலை காயா அஞ்சனம் மலர—நுண்மணலிடத்தனவாகிய நெருங்கின இலைகளையுடைய காயா அஞ்சனம்போல அவிழ,

94. முறி இணர் கொன்றை கல் பொன் கால—தளிரினையும் கொத்தினையுமுடைய கொன்றை கன்றுகிய பொன்னைச்சொரிய,

95. †கோடல் சூலி முகை அங்கை அவிழ—கோடலினது சூலிக்தமுகைகள் அகங்கைபோலவிரிய,

96. ‡தோடு ஆர் தோன்றி குருதி பூப்ப—நிரட்டிறைத்த தோன்றி உதிரம்போலப் பூப்ப,

97. காணம் நந்திய செ நிலம் பெரு வழி—காடுதழைத்த வெள்ளிலத்திற் பெருவழியிலே,

---

* பி - ம். கூடுவாய்.

† கோடல் - வெண்காந்தள்.

‡ தோடு - தொகுதி; (புறநா. 238.)

98 - 100. [வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற், றிரிமருப் பிரலையொடு மடமா னுகள, வெதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின் :]

வானம் வாய்த்த வரகு—மழை வேண்டப் பெய்தவரகு,

எதிர் செல் வெள் மழை பொழியும் திங்களில் வாங்கு கதிர் வரகின்—எதிர்காலத்துக்குப் பெய்யச்செல்கின்ற வெள்ளியமழை சிறுதுவலையைப்பொழியும் முன்பனிதொடங்குந்திங்களிலே வளைகின்ற கதிரையுடைய வரகிடத்தே,

*திரி மருப்பு இரலையொடு மடமான் உகள—முறுக்குண்ட கொம்பினையுடைய புல்வாய்க்கலையோடே மடப்பத்தையுடைய மான்துள்ள,

மழையால் தண்ணீரும் புல்லும் நிறையப்பெற்றுப் புணர்ந்துதிரியுமென்ற கருப்பொருளால், அவற்றைக்கண்ட அரசனுக்கு வேட்கை மிகுதிகூறிற்று.

மலரக் (93) வால (94) அவிழப் (95) பூப்ப (96) உகளக் (99) கானகந்திய பெருவழி (97) யென்க.

இவையெல்லாம் வேட்கைவிளைதற்குக் காரணமாயின.

101. முதிர் காய் †வள்ளி அம் காடு பிறக்கு ஒழிய—தன்பருவம் வந்தால் முதிருங்காயையுடைய வள்ளியங்காடு பின்னாக,

102. துனை பரி துரக்கும் செலவினர்—விரைந்துசெல்லும் பரியை அதனான் அமையாமற் கடிதாகச்செலுத்தும் செலவினையுடையராய் வந்தவருடைய,

என்றது:— ‡"வினைவயிற் பிரிந்தோன் மீண்டுவரு காலை, யிடைச்சுர மருங்கிற் றவிர்த லில்லை, யுள்ளம் போல வுற்றுழி யுதவும், புள்ளியற் கலிமா வுடைமை யான" என்பது தோன்றக் கூறிற்று.

103. வினை விளங்கு நெடு தேர் பூண்ட மாவே—தான் எடுத்துக்கொண்ட வினை எக்காலமும்விளங்கும் நெடிதாகிய தேரைப்பூண்டகுதிரை.

தலைவி தன்னிடத்தே வதிகின்றவனை இன்றுயிலைக்காணாளாய் (80) நெஞ்சாற்றுப்படுத்த புலம்பாலே (81) ஓடுவளை திருகுதியும் (82) மையல்கொண்டும் உயிர்த்தும் (83) நடுங்கி நெகிழ்ந்து (84) பூப்போலுண்கண் புலம்புமுத்துறைப்ப (23) அதுகண்டு துயருழந்து (80) தேற்றியும் (82) வற்புறுத்திப் பிரிதல் வேண்டுமெனக் கருதிக் காட்டவும் காட்டவும் காணாதவள் (22) பெருமுது பெண்டிர் (11) எவ்வம் களையெனக்கூற (21) அதுகேட்டு நீடுநினைந்து (82) பெரும்பெயல்பொழிந்த சிறுபுன்மாலையில் (6) இட்டசுடர் அழலாநிற்க (85) இமிழிசை ஓர்ப்பனள் கிடந்தோளுடைய (88) அஞ்செவிநிறையப் (89) பரந்த பாடியிலே (28) அரசிருந்து (79) ஒருகை பள்ளியொற்றி ஒருகை (75) முடியொடுசேர்த்தி (76) வேழத்தை (69) உள்ளியும் (72) மாவைச்சிந்தித்தும் (74)

---

* "இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பின், ... இரலைதெறிப்ப" (அகநா. 4.)

† வள்ளி - ஒருவகைக்கொடி.

‡ தொல்காப்பியம், கற்பியல், 53.

ஒழிந்தோரை உள்ளியும் (72) நினைந்து (76) நடுங்குதற்குக்காரணமான பாசறையிற் (79) பெரும்படைநாப்பண் வேறோர் (43) அகம் நேர்பு கண்டங்கோலி (44) யவனர் (61) புனித்தொடர்விட்ட நல்லில்லிலே (62) பொழுதளந்தறியும் (55) காண்கையர் (56) கன்னல் இனைத்தென்றிசைக்கையினாலே (58) மங்கையர் (47) திருமணிவிளக்கங்காட்டி (63) எழினிவாங்கிய பள்ளியிலே சென்று (64) இனையர் கவளங் கைப்பச் (36) சுரையர் (48) மாட்டப் (49) பெருமூதாளர் ஏமஞ்சூழ (54) மிலேச்சர் உழையராக (66) வெண்மணிநிழற்றிய நடுநாளினும் (50) மண்டமர்நசையாற் கண்படைபெறாதிருந்து (67) மற்றைநாட்படைகொணோன்விரலாலே (77) வென்று (89) கண்ணிவலந்திருத்திப் (78) பிறர் வேண்டுபுலங்கவர்ந்த (90) விசயத்தாலே வெல்கொடியுயரிக் (91) காடு பிறக்கொழியப் (101) பெருவழியிலே (97) வயிரும் வளையுமார்ப்ப (92) ஈண்டு பெருந்தானையோடே (90) துனைபரிதுரக்குஞ் செலவினையுடையராய் வந்தவருடைய (102) தேர்பூண்டமா (103) ஆவின (89) வென வினைமுடிக்க.

* "செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே, வன்புறை குறித்த றவிர்ச்சி யாகும்" என்பதனால் வற்புறுத்திப்பிரிதல்வேண்டுமென்றுணர்க.

தொல்காப்பியனார் கருத்திற்கேற்ப நப்பூதனார் செய்யுள் செய்தாரென்றுணர்க. இவ்வாறன்றி, ஏனையோர்கூறும்பொருள்கள் இலக்கணத்தோடு பொருந்தாமையுணர்க.

காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார்மகனார் நப்பூதனார் பாடிய முல்லைப்பாட்டிற்கு மதுரைஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்தவுரை முற்றிற்று.

1. வண்டடைந்த கண்ணி வளராய்ச்சி வாணெடுங்கண்
சென்றடைந்த நோக்க மினிப்பெறுவ - தென்றுகொல்
கன்றெடுத் தோச்சிக் கனிவிளவின் காயுகுத்துக்
குன்றெடுத்து நின்ற நிலை.

2. புனையும் பொலம்படைப் பொங்குளைமான் றிண்டேர்
துனையுந் துனைபடைத் துன்னார் - முனையு
ளடன்முகந்த தானை யவர்வரா முன்னங்
கடன்முகந்து வந்தன்று கார்.

(பு - வெ. பொதுவியற். 2.)

* தொல்காப்பியம், கற்பியல், 44.

ஆறாவது

*மதுரைக்காஞ்சி.

ஓங்குதிரை வியன்பரப்பி
னொலிமுந்நீர் வரம்பாகத்
தேன்றாங்கு முயர்சிமைய
மலைநாறிய வியன்ஞாலத்து
வலமாதிரத்தான் வளிகொட்ப
வியனாண்மீ னெறியொழுகப்
பகற்செய்யுஞ் செஞ்ஞாயிறு
மிரவுச்செய்யும் வெண்டிங்களு
மைதீர்ந்து கிளர்ந்துவிளங்க
மழைதொழி லுதவ மாதிரங் கொழுக்கத்
தொடுப்பி னாயிரம் வித்தியது விளைய
நிலனு மானும் பயனெதிர்பு நந்த
நோயிகந்து நோக்குவிளங்க
மேதக மிகப்பொலிந்த

---

*வீடுபேறுநிமித்தமாகச் சான்றோர் பல்வேறுநிலையாமையை அறைந்த மதுரைக்காஞ்சி காஞ்சித்திணைக்கு உதாரணமென்பர்; (தொல். புறத். சூ. 23 - ந.)

1. தொல். செய். சூ. 14 - பேர். ந; ஷை 40 - ந. மேற்.

1 - 2. வழிமோனைக்கு இவ்வடிகள் மேற்கோள். (தொல். செய். சூ. 94 - பேர்.)

4. "மாமலை ஞாறிய ஞாலம்" (பரி. "வானாரெழிலி"); "கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே" (பு - வெ. கரந்தை. 14.)

1 - 4. யா - வி. செய். சூ. 2 - உரையைப்பார்க்க.

3 - 4. இவ்வடிகள் பதினெட்டெழுத்தான் வந்த தென்பர்; (தொல். செய். சூ. 50 - இள.) (3)=பா. தூங்கியவுயர்.

5. "வளிவலங் கொட்கு மாதிரம் வளம்படும்" (மணி. 12: 91.) தொல். செய். சூ. 38 - ந. மேற்.

6 - 10. "மீன்வயி னிற்ப வானம் வாய்ப்ப" (பதிற். 90.).

10 - 11. "வான மின்னு வசிவு பொழிய வானா, திட்ட வெல்லாம் பெட்டாங்கு விளைய" (மலைபடு. 97 - 8.)

12. பா. எதிர்புந்த.

14. பா. மேதகப்பொலிந்த.

வோங்குகிலை வபக்களிறு
கண்டுதண்டாக் கட்கின்பத்
துண்டுதண்டா மிகுவளத்தா
னுயர்பூரிம விழுத்தெருவிற்
பொய்பறியா வாய்மொழியாற்
புகழ்நிறைந்த நன்மாக்தரொடு
நல்லூழி யடிப்படரப்
பல்வெள்ள மீக்கூற
வுலக மாண்ட வுயர்ந்தோர் மருக
பிணக்கோட்ட களிற்றுக்குழும்பி
னிணம்வாய்ப்பெய்த பேய்மகளி
ரிணையொலியிமிழ் துணங்கைச்சீர்ப்
பிணையூப மெழுந்தாட
வஞ்சவந்த போர்க்களத்தா
னுண்டலை யணங்குதடுப்பின்
வயவேந்த ரொண்குருதி
னெனத்தீயிற் பெயர்புபொங்கத்
தெறலருங் கடுந்துப்பின்
விறல்விளங்கிய விழுச்சூர்ப்பிற்
றொடித்தோட்கை தடுப்பாக
வாடுற்ற வூன்சோறு
நெறியறிந்த கடிவாலுவ
னடியொதுங்கிப் பிற்பெயராப்
படையோர்க்கு முருகயர

---

17. பா. தண்டாவிரு.
18. பா. பூரியவிழுத்தெரு.
21. "நல்லூழி யாவர்க்கும் பிழையாது வருதலின்" (கலி. 99); "முந நூழி யின்பம், வரவிப் படிதன்னை வாழ்வித்த வாணன்" (தஞ்சை. 286.)
22. "ஆயிர வெள்ளம் வாழிய பலவே" (பதிற். 21.)
24. பிணக்கோட்ட களிறு: "வேலாண் முகத்த களிறு" (குறள்.500.)
25. பா. பேஎய்.
28. பா. வஞ்ச.
29 - 38. "முடித்தலை யடுப்பிற் பிடர்த்தலைத் தாழித், தொடித்தோட் டுப்பிற் றுழைஇய வூன்சோறு, மதப்பேய் வாலுவன் வயினறிக் தட்ட" (சிலப். 26: 242 - 4.)
37. "பிறக்கடி யொதுக்காப் பூட்கை" (பதிற். 80: அடி 8.)
38. பா. படையோர்முருகயர.

வமர்கடக்கும் வியன்றானைத்
தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
றொன்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந
விழுச்சூழிய விளங்கோடைய
கடுஞ்சினத்த கமழ்கடாஅத
தளறுபட்ட நறுஞ்சென்னிய
வரைமருளு முயர்தோன்றல
வினைநவின்ற பேர்யானை
சினஞ்சிறந்து களனுழக்கவு
மாவெடுத்த மலிகுரூஉத்துக
ளகல்வானத்து வெயில்கரப்பவும்
வாம்பரிய கடுந்திண்டேர்
காற்றென்னக் கடிதுகொட்பவும்
வாண்மிகு மறமைந்தர்
தோண்முறையான் வீறுமுற்றவு
மிருபெரு வேந்தரொடு வேளிர் சாயப்
பொருதவரைச் செருவென்று

---

40 - 42.. "மறைமுது முதல்வன் பின்னர் மேய, பொறையுயர் பொதியிற் பொருப்பன்" (சிலப். 12.)

45. பா. அயம்பட்டாறுஞ்.

48. பா. உழக்க.

44 - 8. "செல்சமந் தொலைத்த வினைநவில் யானை. கடாஅம் வார்ந்து கடுஞ்சினம் பொத்தி, வண்டுபடு சென்னிய பிடிபுணர்ந் தியல" (பதிற். 82 அடி 4 - 6.)

50. பா. வெயிற்கரப்ப.

51. பா. வாய்பரிய.

52. பா. காற்றெனக்.

55 - 6. "கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழிய, ஞலங் கானத் தகன்றலை சிவப்பச், சேரல் செம்பியன் சினங்கெழு திதியன், போர்வல் லியானைப் பொலம்பூ ணெழினி, நாரரி நறவி னெருமை யூரன், தேங்கம ழகலத்துப் புலர்ந்த சாந்தி, னிருங்கோ வேண்மா னியறேர்ப் பொருநனென், றெழுவர் நல்வல மடங்க வொருபகல், முரைசொடு வெண்குடை யகப்படுத் துரைசெலக், கொன்று" (அகநா. 36); "எழுவர் நல்வலங் கடந்தோய்", "புனைகழ லெழுவர் நல்வல மடங்க, வொருதா னாகிப் பொருதுகளத் தடலே" (புறநா. 19, 76.)

மிலங்கருவிய வரைசீக்கிச்
சுரம்போழ்ந்த விகலாற்ற
நுயர்ந்தோங்கிய விழுச்சிறப்பி
னிலைத்தந்த பேருதவிப்
பொலந்தார் மார்பி னெடியோ னும்பன்
மாந்தின்னூட வரையுதிர்க்கு
கரையுருமி னேறணைய
பருங்குழுமினொக் குண்டுடக்கி
நுயர்ந்தோங்கிய நிரைப்புதவி
னெடுமதி னிரைஞாயி
லம்புமி முயிலருப்பங்
தண்டாது தலைச்சென்று
கொண்டுநீங்கிய விழுச்சிறப்பிற்
றென்குமரி வடபெருங்கல்
குணகுடகட லாவெல்லைத்
தொன்றுமொழிந்து தொழில்கேட்ப
வெற்றமொடு வெறுதைதொழுகிய
கொற்றவர்தங் கோனுகுவை
வானிமைக்க விருமுந்நீர்ப்
பேளநிலைஇய விரும்பௌவத்துக்
கொடும்புணரி விலங்குபோழக்
கடுங்காலொடு கரைசேர
நெடுங்கொடிமிசை யிதையெடுத்
தின்னிசைய முரசமுழங்கப்
பொன்மலிந்த விழுப்பண்ட

---

57. பா. மலிசீர்த்தி.

61. தார்: "வண்ணமார்பிற்றார்" (புறநா. 1); நெடியோன்: "முச்சீர் விழவி னெடியோன்" (புறநா. 9 அடி 10.)

64 - 7. "கடிமனைக் குண்டு டிடங்கின், னெடுமதி னிரைஞாயி, லம்புடை யாலெயில்" (பதிற். 20 அடி 17 - 9.)

70 - 72. "வடாஅது பனிபடி நெடுவரை வடக்கும், தெனாஅ தருங்கடி குமரியின் றெற்கும், குணாஅது கலைபொரு தொடுகடற் குணக்கும், குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்", "தென்குமரி வடபெருங்கற், குணகுடகட லாவெல்லை, குன்றமலை காடுகா, டொன்றுபட்டு வழிமொழிய" (புறநா. 6, 17.)

72. மு: (மதுரை. 124; பதிற். 90 அடி 8); "தொன்றுபட்டு வழி மொழிய" (புறநா. 17 அடி 4.)

நாடார நன்கிழிதரு
மாடியற் பெருநாவாய்
மழைமுற்றிய மலைபுரையத்
துறைமுற்றிய துளங்கிருக்கைத்
தெண்கடற் குண்டகழிச்
சீர்சான்ற வுயர்நெல்லி
னூர்கொண்ட வுயர்கொற்றவ
நீர்த்தெவ்வு நிரைத்தொழுவர்
பாடுசிலம்பு மிசையேற்றத்
தோடுவழங்கு மகலாம்பியிற்
கயமகைய வயனிறைக்கு
மென்றொடை வன்கிழாஅ
ரதரி கொள்பவர் பகடுபூண் டெண்மணி
யிரும்பு ளோப்பு மிசையே யென்று
மணிப்பூ முண்டகத்து மணன்மலி கானற்
பரதவர் மகளிர் குரவையொ டொலிப்ப
ஒருசார், விழவுநின்ற வியலாங்கண்
முழவுத்தோண் முரட்பொருநர்க்
குருகெழு பெருஞ்சிறப்பி
னிருபெயர்ப் பேராயமொ
டிலங்கு மருப்பிற் களிறு கொடுத்தும்
பொலந்தாமரைப் பூச்சூட்டியு
நலஞ்சான்ற கலஞ்சிதறும்
பல்குட்டுவர் வெல்கோவே

---

82. பா. நாடாரக் கரைசேர நெடுக்கொடிமிசை நன்கிழிதரும்.

89. தெவ்வு கொள்ளுதலாகிய குறிப்புப்பொருளை உணர்த்துமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; (தொல். உரி. சூ. 49 - சே; ௸ ௸ ௸ 47 - ந; இ - வி. சூ. 290.) பா. நீர்தெவுநிரை.

90. பா. ஏத்தத்.

92. பா. கயனகைய.

89 - 93. கிழார் பூட்டைப்பொறி என்னும் பொருளில் வருமென்பதற்கு இவ்வடிகள் மேற்கோள்; (சிலப். 10: அடி 110 - அடியார்.)

94. பா. அதரிகொள்பவரிசை.

96. சிறுபாண். 148.

98. மதுரை. 328.

கல்காயுங் கடுவேனிலொ
டிருவானம் பெயலொளிப்பினும்
வரும்வைகன் மீன்பிறழினும்
வெள்ளமா ருது விசையுள் பெருக
கெல்லி னெதை யரிநர் கம்பலை
புள்ளிமிழ்ந் தொலிக்கு மிசையே யென்றுஞ்
சலம்புகன்று சுறவுக்கலித்த
புலவுநீர் வியன்பௌவத்து
நிலவுக் கானன் முழவுத் தாழைக்
குளிர்ப்பொதும்பர் நளித்தூவ
னிரைதிமில் வேட்டுவர் கரைசேர் கம்பலை
பிரங்கழிச் செறுவின் வெள்ளுப்புப் பகர்கரொ
டொலியோவாக் கலிபாணர்
முதுவெள்ளிலை மீக்கூறும்
விபன்மேவல் விழுச்செல்வத்
திருவகையா னிசைசான்ற
சிறுகுடிப் பெருந்தொழுவர்
குடிகெழீ இய கானிலவரொடு
தொன்றுமொழிந்து தொழில்கேட்பக்
காலென்னக் கடிதூரா வய்
நாடுகெட வெரிபாய்பி
யாலங்கானத் தஞ்சுவரவிறுத்
தரசபட வமரூழக்கி
முரசுகொண்டு களம்வேட்ட
வடுதிறலுயர் புகழ்வேக்தே

---

115. பா. குளிர்ப்பொதும்பு.

124. மு: மதுரை. 72.

126. "முனையெரி பரப்பிய", "ஊரொரி கவர வுருத்தெழுந் தரைஇப், போர்கடு கமழ்புகை மாதிர மறைப்ப" (பதிற். 15, 71); "வாடுக விறைவின் கண்ணி யொன்னர், நாடுகடு கமழ்புகை பெறித்த லானே", "பகைவ, ரூர்கடு விளக்கத் தழுவிளிக் கம்பலைக், கொன்னே மேவலை", "பெருத்தண்பணை பாழாக, வேம ன்னு டொன்னெரி யூட்டினை" (புறநா. 6, 7, 16.)

127 - 9. மதுரை. 55 - 6 ஆம் அடிகளின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

129. முரைசொடு வெண்குடை யகப்படுத் தரைசெலக், கொன்று களம் வேட்ட ஞான்றை" (அகநா. 36) முருகு. 99 - 100 கீழ்க்குறிப்பைப்பார்க்க.

நட்டவர் குடியுயர்க்குவை
செற்றவ ரரசுபெயர்க்குவை
பேருலகத்து மேளந்தோன்றிச்
சீருடைய விழுச்சிறப்பின்
விளைந்துமுதிர்ந்த விழுமுத்தி
னிலங்குவளை யிருஞ்சேரிக்
கட்கொண்டிக் குடிப்பாக்கத்து
நற்கொற்கையோர் நகைப்பொருந
செற்ற தெவ்வர் கலங்கத் தலைச்சென்
றஞ்சுவரத் தட்கு மணங்குடைத் துப்பிற்
கோழூஉன்குறைக் கொழுவல்சிப்
புலவுவிற் பொலிகூவை
யொன்றுமொழி யொலியிருப்பிற்
றென்பரதவர் போரேறே
யரிய வெல்லா மெளிதி னிற்கொண்
டுரிய வெல்லா மோம்பாது வீசி
நனிபுகன் றுறைது மென்னா தேற்றெழுந்து
பனிவார் சிமையக் கானம் போகி
யகநாடு புக்கவ ரருப்பம் வெளவி

128 - 30. "அரசுபட வமருழக்கி, யுரைசெல முரசு வெளவி, முடித்தலை யடுப்பாகப், புனற்குருதி யுலைக்கொளீஇத், தொடிதோட் டுடுப்பிற் றுழந்த வல்சியி, னடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய" (புறநா. 26.)

131 - 2. "நட்டாரை யாக்கிப் பகைநணித்து" (பழமொழி, 398.)

135. "முதிர்வா ரிப்பி முத்தம்" (புறநா. 53.)

135 - 8. "நகாஅ ரன்ன நனிநீர் முத்தம். வான்வா யெருந்தின் வயிற்றகத் தடக்கித், தோன்புற மறைக்கு நல்கூர் நுசுப்பி. னுளரிய லைம்பா லுமட்டிய ரீன்ற, கிளர்பூட் புதல்வரொடு கிலுகிலி யாடுந். தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்" (சிறுபாண். 57 - 62.)

137 - 8. பாக்கமென்பதற்கு அரசனிருப்பென்று பொருள்கூறி இவ்வடிகளை மேற்கோளாகக் காட்டினர்; (பதிற். 13 - உரை.)

140. பா. அஞ்சுவரக்கடக்கும்.

144. "தென்பரதவர் மிடல்சாய" (புறநா. 378.)

149. அகமென்பதற்குப் பொருள் மருதமென்பதற்கும் (சீவக. 1613-ச.), மதில் பெரும்பான்மையும் மருதத்திடத்ததென்பதற்கும் (தொல். புறத். சூ. 9 - ச.) இவ்வடி மேற்கோள்.

யாண்டுபல கழிய வேண்டுபுலத் திறுத்தி
மேம்பட மரீஇய வெல்போர்க் குந்தி
லுறுசெறுநர் புலம்புக்கவர்
கடிகாவி னிலைதொலைச்சி
யிழிபறியாப் பெருந்தண்பணை
குரூஉக்கொடிய வெரிமேய
நாடெனும்பேர் காடாக
வாசேந்தவழி மாசேப்ப
வூரிருந்தவழி பாழாக
விலங்குவளை மடமங்கையர்
துணங்கையஞ்சீர்த் தழூஉமறப்ப
வலையிருந்த பெரும்பொதியிற்
கவையடிக் கடுநோக்கத்துப்
பேய்மகளிர் பெயர்பாட
வணங்குவழங்கு மகலாங்க
ணில்த்தாற்றுங் குழூஉப்புதவி
ரைந்தைப் பெண்டி ரினைந்தன ரகவக்
கொழும்பதிய குடிதேம்பிச்
செழுங்கேளிர் நிழல்சேர
நெடுநகர் வீழ்ந்த கரிகுதிர்ப் பள்ளிக்
குடுமிக் கூகை குராலொடு முரலக்
கழுநீர் பொலிந்த கண்ணகன் பொய்கைக்
களிறுமாய் செருந்தியொடு கண்பமன் றூர்தர
நலலோர் நடந்த நசைசால் விளைவயற்
பன்மயிர்ப் பிணவொடு கேழலுகள
வாஅ ழாமையின் வழிதவக் கெட்டுப்
பாழா யினநின் பகைவர் தேஎ
மெழாஅத்தோ ளிமிழ்முழக்கின்
மாஅத்தா ளுயர்மருப்பிற்

150. "யாண்டுதலைப் பெயர வேண்டுபுலத் திறுத்து" (பதிற். 15.)

153. பா. கடிகாவு.

154 - 5. "பெருந்தண்பணை பாழாக, வேமான்ஞ டொள்ளெரி யூடினை" (புறநா. 16.)

172. பா. சண்பமன்று.

கடுஞ்சினத்த களிறுபரப்பி
விரிகடல் வியன்றானையொடு
முருகுறழத் தலைச்சென்
றகல்விசும்பி னார்ப்பிமிழப்
பெயலுறழக் கணைசிதறிப்
பலபுரவி நீறுகைப்ப
வளைநரல வயிரார்ப்பப்
பீடழியக் கடந்தட்டவர்
நாடழிய வெயில்வெளவிச்
சுற்றமொடு தூவறுத்தலிற்
செற்ற தெவ்வர் நின்வழி நடப்ப
வியன்கண் முதுபொழின் மண்டில முற்றி
யரசியல் பிழையா தறநெறி காட்டிப்
பெரியோர் சென்ற வடிவழிப் பிழையாது
குடமுதற் றோன்றிய தொன்றுதொழு பிறையின்
வழிவழிச் சிறக்கநின் வலம்படு தொற்றங்
குணமுதற் றோன்றிய வாரிருண் மதியிற்
றேய்வன கெடுகநின் றெவவ ராக்க
முயர்நிலை யுலக மமிழ்தொடு பெறினும்
பொய்சே ணீங்கிய வாய்நட் பினையே
முழங்குகட லேணி மலர்தலை யுலகமொ
டுயர்ந்த தேஎத்து விழுமியோர் வரினும்
பகைவர்க் கஞ்சிப் பணிந்தொழு கலையே
தென்புல மருங்கின விண்டு நிறைப

---

187. பா. நாடுகெடவெயில்.

194 மு: சிலப. 25: அடி 92.

193 - 6. "வளர்பிறை போல வழிவழி பெருகி" (குறுந. 289), "பெரியவர் கேண்மை பிறைபோல நாளும், வரிசை வரிசையா நந்தும் - வரிசையால், வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே, தானே சிறியார் தொடர்பு" (நாலடி. தீவினை. 5); "நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப் பின்னீர பேதையார் நட்பு" (குறள், 782).

195 - 6. "நீள்கதி ரவிர்மதி நிறைவுபோ னிலையாது. நாளினு நெகிழ் போடு நலனுட னிலையுமோ" (கலி. 17.) சிலப. 10 1 - 3 அடியார். மேற்.

201. பா. பகைவரஞ்சி.

202. புலமென்பதற்கு நிலமென்று பொருள்கூறி இவ்வடியை மேற்கோள்காட்டினர்; (தீவக. 28 - ந.)

வாணன் வைத்த விழுநிதி பெறினும்
பழிநமக் கெழுக வென்னுப் விழுநிதி
யீத லுள்ளமொ டிசைவேட் குவையே
யன்னுப் நின்னெடு முன்னிலை பெவினே
கொன்னென்று கிளக்குவ லடுபோ ரண்ணல்
கேட்டிசின் வாழி கெடுகநின் னவலங்
கெடாது நிலிலுயர்நின் சேண்விளங்கு கல்லிசை
தவாப்பெருக்கத் தறுயாண
ரழித்தானைக் கொழுந்திற்றி
யிழித்தானுப் பலசொன்றி
யுண்டானைக் கூர்நவிற்
றின்றுனு வினைவக
னிலனெடுக் கல்லா வொண்பல் வெறுக்கைப்
பயனற வறியா வளங்கெழு திருநகர்
நரம்பின் முரலு நபம்வரு முரற்சி
விறலியர் வறுங்கைக் குறுந்தொடி செறிப்பப்
பாண ருவப்பக் களிறு பலதரீ இக்
கலந்தோ ருவப்ப வெறிற்பல கடைஇ
மறங்கலங்கத் தலீச்சென்று
வாளுமந்ததன் ருள்வாழ்க்கி
நாளீண்டிய நல்லகவர்க்குத்
தேரோடு மாசிதறிச்
சூடுற்ற சுடர்ப்பூவின்
பாடுபுலர்ந்த நறுஞ்சாந்தின்
விழுமிய பெரியோர் சுற்ற மாகக்
கள்ளி னிரும்பைக் கலஞ்செல வுண்டு
பணிக்தோர் தேளந் தம்வழி நடப்பப்
பணியார் தேளம் பணித்துத்திறை கொண்மார்
பருந்துபறக் கல்லாப் பார்வற் பாசறைப்

204. பா. பழிநமக்கொழுக. 208. பெரும்பாண். 38.
215. மலைபடு. 575; "நிலம்பொறுக் கலாத செம்பொ னீணிதி" (சீவக
223 - 4. பு-வெ. பாடாண். 18 - ஆம் செய்யுளோப்பார்க்க. [402.
224. கருத்த: சிறுபாண். 142.
231. "பருந்திருக் தகக்கும் பன்மா ணல்லில்" (மதுரை. 502)
"பருந்துயிர்த், திடைமதிற் சேக்கும் புரிசை" (புறநா. 343); பார்வல்: "பா
வற் பாணை" (பதிற். 84); "பார்வ விருக்கை" (புறநா. 3.)

படுகண் முரசங் காலி யியம்ப
வெடிபடக் கடந்து வேண்டுபுலத் திறுத்த
பணிகெழு பெருந்திறற் பல்வேல் மன்னர்
கரைபொரு திரங்குங் கனியிரு முந்நீர்த்
திரையிடு மணலினும் பலரே யுரைசெல
மலர்தலை யுலக மாண்டுகழிந் தோரே
அதனுல், குணகடல் கொண்டு குடகடன் முற்றி
யிரவு மெல்லியும் விளிவிட னறியா
தவலு மிசையு நீர்த்திரள் பிண்டிக்
கவலையங் குழும்பி னருவி யொலிப்பக்
கழைவளர் சாரற் களிற்றின நடுங்க
வரைமுத லிரங்கு மேறெடு வான்னெமிர்ந்து
சிதாற் பெரும்பெயல் சிறத்தலிற் முங்காது
குணகடற் கிவர்தருங் குரூஉப்புன லுக்தி
நிவந்துசெ னீத்தங் குளங்கொளச் சாற்றிக்
களிறுமாய்க்குங் கதிர்க்கழனி
யொளிறிலஞ்சி யடைநிவந்த
முட்டாள சுடர்த்தாமரை
சுட்சுமழு நறுநெய்தல்
வள்ளித ழுவிழ்நீல
மெல்லிலை யரியாம்பலொடு
வண்டிறை கொண்ட கமழ்தூம் பொய்கைக்

---

232. "தழங்குரன் முரசங் காலி யியம்ப" (ஐங்குறு. 448); "கோயி லிற், காலி முரசங் கனிகுர லியம்பும்" (சிலப். 17.)

235. "கரைகொன் றிரங்குங் கடல்" (சீவக. 1063.)

235 - 7. "தொல்லோன் பிறவி யெண்ணிற் றொடுகடன் மணலு மாற்று" (சீவக. 270.)

244. பா. சிதாற்பெயல்கான்றழிதலிற்.

247. மாய்தல் மறைதலென்பதற்கு இவ்வடி மேற்கோள். (சிலப். 9 : 2 - அடியார்; சீவக. 453); "களிறுமாய் சுழனி", "களிறுமாய் கதிர்ச் செந்தெற் கழனி" (சீவக. 54. 1617); "களிறு மாய்க்குஞ் செந்நெலங்குலை" (நைடதம். சுயம்வர. 138); "யானை மறையக் கதிர்த்தலைச் சாலிநீடி" (பிரபு. மாயையுற். 11); "களிறு மாய்ப்ப கதழ்ந்தெழு பூம்பயிர்" (தணிகை. காட்டு. 114.)

248 - 9 "அடைபிறர் தவிழ்ந்த வள்ளிதழ்த் தாமரை" (பரி. 13.)

249 - 53. முருகு. 73 - 6.

கம்புட் சேவ லின்றுயி ஞிரிய
வள்ளை நீக்கி வயமீன் முகந்து
கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்
வேழப் பழனத்து நாழி லாட்டுக்
கரும்பி னெக்கிரல் கட்பி னேதை
யள்ளற் றங்கிய பகடுறு விழுமம்
கள்ளார் களமர் பெயர்க்கு மார்ப்பே
யொலிந்த பகன்றை விளைந்த சுழனி
வன்கை வினைஞ ரசிப்பறை யிரங்குரற்
றளிமழை பொழியுந் தண்பாற் குன்றிற்
கலிகொள் சும்மை பொலிகொ வாயக்
தளைந்த கோதை தாரொடு பொலியப்
புணர்ந்துட னுடு மிசையே யினைதது
மகலிரு வானத் திமிழ்ந்தினி திசைப்பக்
குருகுநரல மணிமரத்தான்
மீன்சிவும் பாண்சேரிபொடு
மருதஞ் சான்ற தண்பணை சுற்றி யொருசார்ச்
சிறுதினை கொய்யக் கவ்வை கறுப்பக்
கருங்கால் வரகி னிருங்குரல் புலர
வாழ்ந்த குழும்பிற் றிருமணி கிளர
வெழுந்த கடற்றி னன்பொன் கொழிப்பப்

---

255 - 7. நாழில் கொன்றகுலித்தலென்னும் பொருளில் நருமெனப தற்கு இவ்வடிகள் மேற்கோள் ; (தொல். புரத். 17. உ.)

259 - 60. "அன்னற் பட்டுத் தின்னுபு தாப்ப, நல்லெருது முயலு மனற போகு விழுமத்து, சாகாட் டானர் கம்பலே" (பத்தி. 27 அடி 12 - 4); "ஆசை சாகாட் டாழ்ச்சி போக்கு, முாலுடை சோன்பகட் டன்ன வெங்கோன்", "அச சொடு தாக்கிய பாருற் றியங்கிய, பண்டச் சாகாட் டாழ்ச்சி சொலிய, வரி மணன் ஞெமரச் சுற்பக டடக்கும். பெருமிதப பசட்டுக்குத் துறைபு முண் டோ" (புறநா. 60, 90); "மடித்தவா யெல்லாம் பசடன்னுன்" (குறள். 624); "நிரம்பாத நீரியாற் றிடேணயு ளாழ்ந்தி, பெரும்பார வாடவர்போல் ..... புல்லுண்ணு பொன்றும்" (சீவக. 2784); "குண்டுதுறை விடுமணற் தொடுற வழுத்திய, பண்டிதுறை யேற்றம் பகட்டினைப்போல" (பெருங்கதை, மிடிமீழ்ச் சுதி, 53 - 4.)

263 - 4. கலி செருக்கினையுணர்த்துதற்கும் (தொல். உரி. 51. உ), சும்மை அரவமாகிய இசைப்பொருண்மையை உணர்த்துதற்கும் இவ்வடிகள மேற்கோள் ; (தொல். உரி. சூ. 51 - உ ; ஓ - வி. சூ. 285 - 6.)

பெருங்கலின் பெற்ற சிறுதினை கௌவி
மடக்கிட் பிணியொடு மறுகுவன வுகளச்
சுடர்ப்பூங் கொன்றை தாஅய நீழற்
பாஅ யன்ன பாறை யணிர்த்து
நீலத் தன்ன பைம்பயிர் மிசைதொறும்
வெள்ளி யன்ன வொள்வீ யுதிர்த்து
சுரிமுகிழ் முசுண்டையொடு முல்லை தாஅய்
மணிமரு ணெய்த லுறழக் காமர்
துணிநீர் மெல்லவற் றெருப்பியலொடு மலர
வல்லோன் றைஇய வெறிக்களங் கடுப்ப
முல்லை சான்ற புறவணிர் தொறுசார்
நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய
குறுங்கதிர்த் தோரை கெடுங்கா லியவி
யைவன வெண்ணெலொ டரில்கொள்பு நீடி
யிஞ்சி மஞ்சட் பைங்கறி பிறவும்
பல்வேறு தாரமொடு கல்லகத் தீண்டித்
தினைவினை சாரற் கிளிகடி பூசன்
மணிப்பூ வவரைக் குரூஉத்தளிர் மேயு
மாமா கடியுங் கானவர் பூசல்
சேணை னகழ்ந்த மடிவாய்ப் பயம்பின்
வீழ்முகக் கேழ லட்ட பூசல்
கருங்கால் வேங்கை பிரஞ்சினைப் பொங்கர்
நறும்பூக் கொய்யும் பூச லிருங்கே

---

275 - 6. முல்லை. 99; பட். 245.

278. "படுத்துவைத்தன்னபாறை" (மலைபடு. 15.)

279. "நீலத் தன்ன விதைப்புனம்" (மலைபடு. 102.)

281. "சுரிமுகிழ் முசுண்டை" (அகநா. 235.) பா. சுரிமுக.

282. "மணிக்கலத் தன்ன மாயிதழ் செய்தல்" (பதிற். 30.)

279 - 84. "பல்விதழ் தாஅய், வெறிக்களங் கடுக்கும் வியலறை" (மலைபடு. 149 - 50.)

296 - 7. "தலைசாட் பூத்த பொன்னிணர் வேங்கை, மலைமா நீடிய மேட்டுப் பூசல்" (மலைபடு. 305 - 6); "ஒலிசினை வேங்கை கொய்குவஞ் சென்மனிப், புலிபுலி யென்னும் பூச லோன்ற", "இளர்ந்த வேங்கைச் சேணெடும் பொங்கர்ப், பெருங்கேழ் புதுமலர் வேண்டிய மகளிர், பின்னு விசைய பூசல் பயிற்றலின்" (அகநா. 48, 52.)

297 - 8. பா. இருக்கேழிலேனு.

மேறடு வயப்புலிப் பூசலெர் டணைத்து
மிலங்குவெள் ளருவியொடு சிலம்பகத் திரட்டக்
கருங்காற் குறிஞ்சி சான்ற வெற்பணிக்
தருங்கடி மாமலி தழீ இ யொருசா
ரிருவெதிர்ப் பைந்தூறு கூரெரி கைப்ப
நிழத்த யானை மேய்புலம் படரக்
கலித்த வியவ ரியங்தொட் டன்ன
கண்விடு புடையூடத் தட்டை கவினழிக்
தருவி யான்ற வணியின் மாமலை
வைகண் டன்ன புன்முளி யங்காட்டுக்
கமஞ்சூழ் கோடை விடாக முகந்து
காலுறு கடலி னெலிக்குஞ் சும்மை
யிலேவேப் குரம்பை யுழையதட் பள்ளி
யுவலைக் கண்ணி வன்சொ லிளைஞர்
சிலையுடைக் கையர் கவலை காப்ப
நிழலுரு விழுந்த வேனிற்சுன் றத்துப்
பாலை சான்ற சுரஞ்சேர்ந் தொருசார்
முழங்குகட நந்த விளங்குகதிர் முத்த
மரம்போழ்ந் தறுத்த கண்ணை நிலவ்குவளைப்
பரதர் தந்த பல்வேறு கூல
மிருங்கழிச் செறுவிற் றீம்புளி வெள்ளுப்புப்
பரந்தோங்கு வரைப்பின் வன்கைத் திமிலர்
கொழுமீன் குறைஇய துடிக்கட் டுணியல்
விழுமிய நாவாய் பெருநீ ரோச்சுநர்
கணந்தலைத் தேளத்து கன்கல னுப்பம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவியொ டணைத்தும்
வைக ரேறும் வழிவழிச் சிறப்ப
நெய்தல் சான்ற வளம்பல பயின்றுங்

300. தொல். அகத். சூ. 5 - ந. மேற்.

303. நிழத்தலென்பது தனுக்கமாகிய குறிப்பை யுணர்த்துமென்றற்கு இவ்வடி மேற்கோள். (தொல். உரி. சூ. 31, 32. சே. ந; இ - வி. சூ. 281.)

310. உழையதட்பள்ளி: "மான்றேர்ப் பள்ளி மகவொடு முடங்கி" (பெரும்பாண். 89.)

314. பாலைத்திணைக்கும் நிலமுண்டெனபதற்கு இவ்வடி மேற்கோள்; (நம்பி. சூ. 6 - உரை; இ - வி. சூ. 382.)

கைம்பாற் றிணையுங் கவினி யமைவர
முழவிமிழு மகலாங்கண்
விழவுநின்ற வியன்மறுகிற்
றுணங்கையந் தழூஉவின் மணங்கமழ் சேரி
யின்கலி யாணர்க் குழூஉப்பல பயின்றாங்குப்
பாடல் சான்ற நன்னாட்டு நடுவட்
கலைதாய வுயர்சிமையத்து
மயிலகவு மலைபொங்கர்.
மந்தி யாட மாவிசும் புகந்து
முழங்குகால் பொருத மரம்பயில் காவி
னியங்குபுனல் கொழித்த வெண்டலைக் குவவுமணற்
கான்பொழி றழீஇய வடைகரை தோறுந்
தாதுசூழ் கோங்கின் பூமலர் தாஅய்க்
கோதையி னொழுகும் விரிநீர் நல்வர
லவிரறல் வையைத் துறைதுறை தோறும்
பல்வேறு பூத்திரட் டண்டலை சுற்றி
யழுந்துபட் டிருந்த பெரும்பா ணிருக்கையு
நிலனும் வளனுங் கண்டமை கல்லா
விளங்குபெருந் திருவின் மான விறல்வே
ளழும்பி லன்ன நாடிழந் தனருங்
கொழும்பல் பதிய குடியிழந் தனருந்
தொன்றுகறுத் துறைபுந் துப்புத்தர வந்த
வண்ணல் யானை யடுபோர் வேந்த
ரின்னிசை முரச மிடைப்புலத் தொழியப்

328. மதுரை. 98.

339 - 40. "கோதைபோற் கிடந்த கோதாவிரி" (கம்ப. ஆறுசெல். 27.)

342. "அழுந்துபட் டலமரும்" (மலைபடு. 219.)

341. மானவிறல்வேள் (மலைபடு. 161.) பா. வானவிறல்வேள்.

345. அழும்பில்—'பெரும்பூட் சென்னி. யழும்பி லன்ன வறாஅ யாணர்" (அகநா. 44); "அறைபறை யென்றே யழும்பில்வே ளுரைப்ப" (சிலப். 25 : 177.) பா. அழும்பி னன்ன.

349. (மதுரை. 129.) பகைவருடையமுரசை வெளவல்: "வேந்தரை, யணஙகரும் பறந்தலை யுணங்கப் பண்ணிப். பிணியுறு முரசங் கொண்ட காலை", "அரசுபட வமருழக்கி, யுரைசெல முரசுவெளவி", "சிறுசொற் சொல்லிய சினஙகெழு வேந்தரை, யருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ, டொருங் ககப் படேஎ னாயின்", "மலைந்தோர், விசிபிணி முரசமொடு மண்பல தந்த ..... பாண்டியன்" (புற்நா. 25, 26, 72, 179.)

பன்மா ரோட்டிப் பெயர்புறம் பெற்று
மண்ணுற வாழ்ந்த மணிநீர்க் கிடங்கின்
விண்ணுற வோங்கிய பல்படைப் புரிசைத்
தொல்வலி நிலைஇய வணங்குடை நெடுநிலை
நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்
மழையாடு மலையி னிவந்த மாடமொடு
வையை யன்ன வழக்குடை வாயில்
வகைபெற வெழுந்து வான மூழ்கிச்
சில்காற் றிசைக்கும் பல்புழை நல்லில்
யாறுகிடந் தன்ன வகனெடுந் தெருவிற்
பல்வேறு குழாஅத் திசையெழுந் தொலிப்ப
மாகா லெடுத்த முந்நீர் போல
முழங்கிசை நன்பணை யறைவனர் துவலக்
கயங்குடைந் தன்ன வியந்தொட் டிமிழிசை
மகிழ்ந்தோ ராடுங் கலிகொள் கம்மை
யோவுக்கண் டன்ன விருபெரு நியமத்துச்
சாறயர்ந் தெடுத்த வுருவப் பல்கொடி
வேறுபல் பெயர வாரெயில் கொளக்கொள
நாடோ றெடுத்த நலம்பெறு புனைகொடி
நீரொலித தன்ன நிலவுவேற் றானையொடு
புலவுப்படக் கொன்று மிடைதோ லோட்டிப்
புகழ்செய் தெடுத்த விறல்சா னன்கொடி

---

351. "மணிமரு டெண்ணீர்" (மலைபடு. 250.)

353-4. "புரைதீர்ந், தையவி யப்பிய நெய்யணி நெடுநிலை" (நெடுநல். 86), 'நெய்யோ டிமைக்கு மையவித் திரள்காழ், விளங்குநகர் விளங்க" (நற். 370.)

354. போர்க்கதவு: (பட். 40.)

355. மலைபுரைமாடத்து (மதுரை. 406)

358. பா சில்காற்றசைக்கும்.

359. மு. நெடுநல். 30; நற். 200; "யாறெனக் கிடந்த தெரு" (மலைபடு. 481); "நீத்தியாற் றன்ன நெடுங்கண் வீதி" (பெருங்கதை. 5.7.23.)

363. "குடைதொறுந், தெரியிமிழ் கொண்டதும் மியம்போ லின்னிசை" (மலைபடு. 295 - 6); "தண்ணுமை முழவ மொந்தை தகுணிச்சம் பிறவு மோசை, யெண்ணிய விரலோ டங்கை புறங்கையி னிசைய வாக்கித், திண்ணிதிற் றெறித்து, மோவார் கொட்டியுங் குடைந்து மாடி" (சீவக. 965.)

369 - 71. "வேண்டுபுலங் கவர்ந்த வீண்டுபெருந் தானையொடு, விசயம் வெல்கொடி யுயரி" (முல்லை. 90 - 91.)

கள்ளின் களிநவில் கொடியொடு நன்பல
பல்வேறு குழூஉக்கொடி பதாகை நிலைஇப்
பெருவரை மருங்கி னருவியி னுடங்கப்
பனைமீன் வழங்கும் வளைமேய் பரப்பின்
வீங்கு நோன்கயி றரீஇயிதை புடையூக்
கூம்புமுதன் முருங்க வெற்றிக் காய்ந்துடன்
கடுங்காற் றெடுப்பக் கல்பொரு துரைஇ
நெடுஞ்சுழிப் பட்ட நாவாய் போல
விருதலைப் பணில மார்ப்பச் சினஞ்சிறந்து
கோலோர்க் கொன்று மேலோர் வீசி
மென்பிணி வன்றொடர் பேணாது காழ்சாய்ததுக்
கந்துநீத் துழிதருங் கடாஅ யானையு
மங்கண்மால் விசும்பு புதைப வளிபோழ்ந்
தொண்கதிர் ஞாயிற் றூறளவாத் திரிதருஞ்
செங்கா லன்னத்துச் சேவ லன்ன
குரூஉமயிர்ப் புரவி யுராலிற் பரிநிமிர்ந்து
கரலெனக் கடுக்குங் கவின்பெறு தேருங்
கொண்ட கோலன் கொள்கை நவிற்றலி
னடிபடு மண்டிலத் தாதி போகிய
கொடிபடு சுவல விடுமயிர்ப் புரவியும்
வேழத் தன்ன வெருவரு செலவிற்
கள்ளார் களம ரிருஞ்செரு மயக்கமு
மரியவும் பெரியவும் வருவன பெயர்தலிற்
றீம்புழல் வல்சிக் கழற்கான் மழவர்
பூந்தலை முழவி னோன்றலை கடுப்பப்
பிடகைப் பெய்த கமழ்நறும் பூவினர்
பலவகை விரித்த வெதிர்பூங் கோதையர்
பலர்தொகு பிடித்த தாதுகு சுண்ணத்தர்
தகைசெய் தீஞ்சேற் றின்னீர்ப் பசுங்காய்

372. பெரும்பாண். 337 - ஆம் அடி உரையின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.
373 - 4. "வேறுபஃறுகிலி னுடங்கி ..... இழிதருமருவி" (முருகு. [296 - 316.)
376. பா. வீக்குபிணிநோன்கயிறு.
360 - 83. பொருந. 171 - 2 - ஆம் அடிகளின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.
385. பா. ஞாயிறுளவா.
398 - 9. "சாந்தினர் புகையினர் தயங்கு கோதையர், ... இடித்த சுண்ணத்தர்" (சிலப். மங்கலவாழ்த்து.)
400. சீவக. 31 - ந. மேற்கோள்.

நீடுகொடி யிலையினர் கோடுசுடு நூற்றின
ரிருதலை வந்த பகைமுனை கடுப்ப
வின்னுயி ரஞ்சி யின்னா வெய்துயிர்த்
தேங்குவன ரிருந்தவை நீங்கிய பின்றைப்
பல்வேறு பண்ணியந் தழீஇத்திரி விலைஞர்
மலைபுரை மாடத்துக் கொழுநிழ லிருத்தர
விருங்கடல் வான்கோடு புரைய வாருற்றுப்
பெரும்பின் னிட்ட வானரைக் கூந்தலர்
நன்னர் நலத்தர் தொன்முது பெண்டிர்
செந்நீர்ப் பசும்பொன் புனைந்த பாவை
செல்சுடர்ப் பசுவெயிற் றோன்றி யன்ன
செய்யர் செயிர்த்த நோக்கினர் மடக்க
ணைஇய கலுழு மாமையர் வையெயிற்று
வார்ந்த வாயர் வணங்கிறைப் பணைத்தோட்
சோர்ந்துகு வன்ன வபக்குறு வந்திகைத்
தொய்யில் பொறித்த சுணங்கெதி ரிளமுலை
மையுக் கன்ன மொய்யிருங் கூந்தன் .
மயிலிய லோரு மடமொழி யோருங்
கைஇ மெல்லிதி னொதுங்கிக் கையெறிந்து
கல்லா மாந்தரொடு நகுவனர் திளைப்பப்
புடையமை பொலிந்த வகையமை செப்பிற்
காம ருருவிற் றாம்வேண்டும் பண்ணியங்
கமழ்நறும் பூவொடு மனைமனை மறுக
மழைகொளக் குறையாது புனல்புக மிகாது
கரைபொரு திரங்கு முந்நீர் போலக்
கொளக்கொளக் குறையாது நரந்தர மிகாது
கழுநீர் கொண்ட வெழுநா ளந்தி
யாடுதுவன்று விழவி னாடார்த் தன்றே
மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூட
னாளங் காடி நனந்தலைக் கம்பலை
வெயிற்கதிர் மழுங்கிய படர்கூர் ஞாயிற்றுச்

---

406 - 7. "வலம்புரி புரையும் வானரை முடியினர்" (முருகு. 127.)
410. "செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த" (புறநா. 9 அடி 9.)
411. சிலப். 4: 5 - 8. அடியார். மேற்.
419. பா. தைஇமெல்லிதின்.

செக்க ரன்ன சிவந்துநுணங் குருவிற்
கண்பொரு புகூஉ மொண்பூங் கலிங்கம்
பொன்புனை, வாளொடு பொலியக் கட்டித்
திண்டேர்ப் பிரம்பிற் புரளுந் தானைக்
கச்சந் தின்ற கழறபங்கு திருந்தடி
மொய்ம்பிறந்து திரிதரு மொருபெருந் தெரியன்
மணிதொடர்ந் தன்ன வொண்பூங் கோதை
யணிகிளர் மார்பி னாரிடை டளைஇக்
காலியக் கன்ன கதழ்பரி கடைஇக்
காலோர் காப்பக் காலெனக் கழியும்
வான வண்கை வளங்கெழு செல்வர்
நாண்மகி ழிருக்கை காண்மார் பூணொடு
தெள்ளரிப் பொற்சிலம் பொலிப்ப வொள்ளழற்
றாவற விளங்கிய வாப்பொ னவிரிழை
யணங்குவீழ் வன்ன பூந்தொடி மகளிர்
மணங்கமழ் நாற்றந் தெருவுடன் கமழ
வொண்குழை திகழு மொளிகெழு திருமுகந்
திண்கா ழேற்ற விபலிரு விலோதந்
தெண்கடற் றிரையி னரைவளி புடைப்ப
நிரைநிலை மாடத் தரமியந் தோறு
மழைமாய் மதியிற் றோன்றுபு மறைய
நீரு நிலனுந் தீயும் வளியு
மாக விகம்போ டைந்துட னிபற்றிய
மழுவா ணெடியோன் றலைவ னாக
மாசற விளங்கிய யாக்கையர் நூற்கடர்
வாடாப் பூவி னிமைபா நாட்டத்து
நாற்ற வுணவி னுருகெழு பெரியோர்க்கு
மாற்றரு மரபி னுயர்பலி சொடுமா
ரந்தி விழவிற் றாரியங் சறங்கத்
திண்கதிர் மதாணி பொண்குறு மாக்களை
யோம்பினர்த தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித்
தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத

448. பா. குழையிருந்தவொளிகெழு
456. "மாசற விமைக்கு முருவினா" (புறநா. 128.)
461 - 3. குழந்தைகளுக்குத் தாமரைப்போது: "நீரு, னடைமறை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட, குடைநிழற் றோன்றுமின் செம்மலை" (கலி. 84); "பொய்கையுண் மலரென வளர்ந்து" (சீவக. 2756.)

தாமு மவரு மோராங்கு விளங்கக்
காமர் கவினிய பேரிளம் பெண்டிர்
பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச்
சிறந்துபுறங் காக்குங் கடவுட் பள்ளியுஞ்
சிறந்த வேதம் விளங்கப் பாடி
விழுச்சீ ரெய்திய வொழுக்கமொடு புணர்ந்து
நிலமமர் வையத் தொருதா மாகி
யுயர்நிலை யுலக மிவணின் றெய்து
மறநெறி பிழைபா வன்புடை நெஞ்சிற்
பெரியோர் மேஎ யினிதி னுறைபுங்
குன்றுகுயின் றன்ன வந்தணர் பள்ளியும்
வண்டுபடப் பழுநிய தேனார் தோற்றத்துப்
பூவும் புகையுஞ் சாவகர் பழிச்சச்
சென்ற காலமும் வரூஉ மமயமு
மின்றிவட் டோன்றிய வொழுக்கமொடு நன்குணர்ந்து
வானமு நிலனுந் தாமுழு துணருஞ்
சான்ற கொள்கைச் சாயா யாக்கை
யான்றடங் கறிஞர் செறிந்தனர் நோன்மார்
கல்பொளிந் தன்ன விட்டுவாய்க் கரண்டைப்
பல்புரிச் சிமிலி நாற்றி நல்குவரக்
கயங்கண் டன்ன வயங்குடை நகரத்துச்
செம்பியன் றன்ன செஞ்சுவர் புனைந்து
நோக்குவிசை தவிர்ப்ப மேக்குபர்ந் தோங்கி
யிறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையுங்
குன்றுபல குழீஇப் பொலிவன தோன்ற

---

470. பா. ஒருதிரமாகி.

455 - 74. "நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலு, முவணச் சேவ லுயர்த்தோ னியமமு, மேழிவல னுயர்த்த வெள்ளை நகரமுங், கோழிச் சேவற் கொடியோன் கோட்டமு, மறத்துறை விளங்கிய வறவோர் பள்ளியும்" (சிலப் 14 : 7 - 11); "நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப், பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீ றாக" (மணி. 1 : 54 - 5.)

485. "செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்" (நெடுநல். 112); "செம்புறழ் புரிசை" (அகநா. 375); செம்புறழ் புரிசை", "செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை" (புறநா. 37, 201); "செம்பைச்சேரிஞ்சி" (தே. பிரம. ஞான.)

வச்சமு மவலமு மார்வமு நீக்கிச்
செற்றமு முவகையுஞ் செய்யாது காத்து
ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை யறங்கூ ரவையமு
நறுஞசாந்து நீவிய கேழ்கிள ரகலத்
தாவுதி மண்ணி யவிர்துகின் முடித்து
மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல
நன்றுந் தீதுங் கண்டாய்ந் தடக்கி
யன்பு மறனு மொழியாது காத்துப்
பழியொரீஇ யுயர்ந்து பாய்புகழ் நிறைந்த
செம்மை சான்ற காவிதி மாக்களு
மறநெறி பிழையா தாற்றி னொழுகிக்
குறும்பல் குழுவிற் குன்றுகண் டன்ன
பருந்திருந் துகக்கும் பன்மா ணல்லிற்
பல்வேறு பண்டமோ டூண்மலிந்து கவினி
மலையவு நிலத்தவு நீரவும் பிறவும்
பல்வேறு திருமணி முத்தமொடு பொன்கொண்டு
சிறந்த தேஎத்துப் பண்ணியம் பகர்நரு
மழையொழுக் கறாஅப் பிழையா விளையுட்
பழையன் மோகூ ரவையகம் விளங்க
நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன
தாமேஎந் தோன்றிய நாற்பெருங் குழுவுங்
கோடுபோழ் கடைநருந் திருமணி குயினருஞ
சூடுறு நன்பொன் சுடரிழை புனைநரும்
பொன்னுரை காண்மருங் கலிங்கம் பகர்நருஞ
செம்புநிறை கொண்மரும் வம்புநிறை முடிநரும்
பூவும் புகையு மாயு மாக்களு

---

489 - 92. "காய்த லுவத்த லகற்றி யொருபொருட்க. ணாய்த லறி வுடையார் கண்ணதே - காய்வதன்க, ணுற்றகுணந் தோன்றா தாகு முவப்ப தன்கட், குற்றமுந் தோன்றா கெடும்" (அறநெறி. 22.)

493. கெழுவென்னும் உரிச்சொல் நிறப்பண்பை உணர்த்துமென்ப தற்கு இவ்வடி மேற்கோள். (தொல் உரி. சூ. 5 - ந; இ - வி. சூ. 283.)

494. மண்ணுதல் என்பதற்குப் பண்ணுதல் எனப் பொருள்கூறி இவ் வடியை மேற்கோளாகக்காட்டினர்; (சீவக. 202, 735, 1808.)

502. இந்நூல் 231 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

மெவ்வகைச் செய்தியு முவமங் காட்டி
நுண்ணிதி னுணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் வினைஞரும் பிறருங் கூடித்
தெண்டிரை யவிரறல் கடுப்ப வொண்பல்
குறியவு நெடியவு மடிதரூஉ விரித்துச்
சிறியரும் பெரியருங் கம்மியர் குழீஇ
நால்வேறு தெருவினுங் காலுற நிற்றரக்
கொடும்பறைக் கோடியர் கடும்புடன் வாழ்த்துந்
தண்கட னாட னொண்பூங் கோதை
பெருநா ளிருக்கை விழுமியோர் குழீஇ
விழைவுகொள் கம்பலை கடுப்பப் பலவுடன்
சேறு நாற்றமும் பலவின் சுளையும்
வேறுபடக் கவினிய தேமாங் கனியும்
பல்வே றுருவிற் காயும் பழனுங்
கொண்டல் வளர்ப்பக் கொடிவிடுபு கவினி
மென்பிணி யவிழ்ந்த குறுமுறி யடகு
மமிர்தியன் றன்ன தீஞ்சேற்றுக் கடிகையும்
புகழ்படப் பண்ணிய பேரூன் சோறுங்
கீழ்செல வீழ்ந்த கிழங்கொடு பிறவு
மின்சோறு தருநர் பல்வயி னுகர
வாலிதை யெடுத்த வளிதரு வங்கம்
பல்வேறு பண்ட மிழிதரும் பட்டினத்
தொல்லெ னிமிழிசை மானக் கல்லென
நனந்தலை வினைஞர் கலங்கொண்டு மறுகப்
பெருங்கடற் குட்டத்துப் புலவுத்திரை யோத
மிருங்கழி மருவிப் பாயப் பெரிதெழுந்
துருகெழு பானாள் வருவன பெயர்தலிற்
பல்வேறு புள்ளி னிசையெழுந் தற்றே
யல்லங் காடி யழிதரு கம்பலை
யொண்சுட ருருப்பொளி மழுங்கச் சினந்தணிந்து
சென்ற ஞாயிறு நன்பகற் கொண்டு

---

516. பா. எண்வகைச்செய்தியும்.

524. பா. தெண்கடனாடன்.

531. பா. குறுமுறியடரும்.

குடமுதற் குன்றஞ் சேரக் குணமுத
ஞண்முதிர் மதியந் தோன்றி நிலாவிரிபு
பகலுரு வுற்ற விரவுவர நயந்தோர்
காத லின்றுணை புணர்மா ராயிதழ்த
தண்ணறுங் கழுநீர் துணைப்ப விழைபுனையூஉ
நன்னெடுங் கூந்த னறுவிரை குடைய
நரந்த மரைப்ப நறுஞ்சாந்து மறுக
மென்னூற் கலிங்கங் சம்ழ்புகை மடுப்பப்
பெண்மகிழ் வுற்ற பிணைநோக்கு மகளிர்
நெடுஞ்சுடா விளக்கங் கொளீஇ நெடுநக
ரெல்லை யெல்லா நோபொடு புகுந்து
கல்லென் மாலை நீங்க நாணுக்கொள
வேழ்புணர் சிறப்பி னின்றொடைச் சீறியாழ்
தாழ்பெயற் கனைகுரல் கடிப்பப் பண்ணுப்பெயர்தது
வீழ்துணை தழீஇ விபல்விசும்பு கமழ
நீர்திரண் டன்ன கோதை பிறக்கிட்
டாய்கோ லவிந்தொடி விளங்க வீசிப்
போதவிழ் புதுமலர் தெருவுடன் கமழ
மேதகு தகைய மிருநல மெய்திப்
பெரும்பல் குவளை சுருப்புபடு பன்மலர்
திறந்துமோந் தன்ன சிறந்துகமழ் நாற்றத்துக்
கொண்டன் மலர்ப்புதன் மானப்பூ வேய்ந்து
நுண்பூ ணாகம் வடுக்கொள முயங்கி
மாயப் பொய்பல கூட்டிக் கவவுக்கரந்து
சேயரு நணியரு நலனயந்து வந்த
விளம்பல் செல்வர் வளந்தப வாங்கி
நுண்டா துண்டு வறும்பூத் துறக்கு
மென்சிறை வண்டின மானப் புணர்ந்தோர்
நெஞ்சே மாப்ப வின்றுயி றுறந்து

560. "திருமழை தலைஇய விருணிற விசும்பின், விண்ணதிரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்து" (மலைபடு. 1-2; நோக்கு புள்ளி. கு 11. ந. மேற்.) பா. தாழ்பயல்.

562. "மார்விற்றார்கோலிமழை" (பு - வெ பாடாண். 16.)

572 - 5. "நறுந்தா துண்டு நயனில் காலை, வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம்", "பயன்பல வாங்கி வண்டிற் றுறக்குங், கொண்டி மகளிரை" (மணி. 18 : 19 - 20, 108 - 9.)

பழந்தேர் வாழ்க்கைப் பறவை போலக்
கொழுங்குடிச் செல்வரும் பிறரு மேஎய
மணம்புணர்ந் தோங்கிய வணங்குடை நல்லி
லாய்பொன் னவிர்தொடிப் பாசிழை மகளி
ரொண்சுடர் விளக்கத்துப் பலருடன் றுவன்றி
நீனிற விசும்பி லமர்ந்தன ராடும்
வானவ மகளிர் மானக் கண்டோர்
நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர்
யாம நல்யாழ் நாப்ப ணின்ற
முழவின் மகிழ்ந்தன ராடிக் குண்டுநீர்ப்
பனிததுறைக் குவவுமணன் முனைஇ மென்றளிர்க்
கொழுங்கொம்பு கொழுதி நீர்நனை மேவர
நெடுந்தொடர்க் குவளை வடிம்புற வடைச்சி
மணங்கமழ் மனைதொறும் பொய்த லயரக்
கணங்கொ ளவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய வோண நன்னாட்
கோணந் தின்ற வடுவாழ் முகத்த
சாணந் தின்ற சமந்தாங்கு தடக்கை
மறங்கொள் சேரி மாறுபொரு செருவின்
மாறா துற்ற வடுப்படு நெற்றிச்
சுரும்பார் கண்ணிப் பெரும்புகன் மறவர்
கடுங்களி றோட்டலிற் காணுந ரிட்ட
நெடுங்கரைக் காழக நிலம்பர லுருப்பக்
கடுங்கட் டேறன் மகிழ்சிறந்து திரிதரக
கணவ ருவப்பப் புதல்வர்ப பயந்து
பணைத்தேந் திளமுலை யமுத மூறப்
புலவுப்புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு
வளமனை மகளிர் குளநீ ரயரத்

---

576. பொருந. 64 - ஆம் அடியின் கீழ்க் குறிப்பைப்பார்க்க. "வள்ளி யோர்ப்படர்ந்துபுள்ளிற்போகி" (புறநா. 47.)

584. யாமநல்யாழ்: "விரல்கவர்ந் துழந்த கவர்வி னல்யாழ், யாமமுய யாமை" (நற். 335; பரி. 14.) "யாமயாழ் மழலையாள்" (கம்ப. நாடவிட்ட. 34)

602 - 3. "புதல்வரைப் பயந்த புனிறுதீர் கயக்கர், தீர்வினை மகளிர் குளனா டாவமும்" (மணி. 7 : 75 - 6 - ஆம் அடிகளையும் அவற்றின்குறிப் பையும் பார்க்க.)

திவவுமெப்ந் நிறுத்துச் செல்வழி பண்ணிக்
குரல்புணர் நல்பாழ் முழவோ டொன்றி
தண்ணீ ராகுளி யிரட்டப் பலவுட
ணெண்சுடர் விளக்க முந்துற மடையொடு
நன்மா மயிலின் மென்மெல விபலிக்
கடுஞ்சூன் மகளிர் பேணிக் கைதொழுது
பெருக்கோட் சாலினி மடுப்ப வொருசா
ரருங்கடி வேலல் முருகொடு வீளை
யரிக்கூ டின்னியம் கறங்கநேர் நிறுத்துக்
கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின்
சீர்மிகு நெடுவேட் பேணித் தழூஉப்பிணையூ
மன்றுதொறு நின்ற குரவை சேரிதொறு
முரையும் பாட்டு மாட்டும் விரைஇ
வேறுவேறு கம்பலி வெறிகொள்பு மயங்கிப்
பேரிசை நன்னன் பெறும்பெயர் நன்னாட்
சேரி விழவி னுரப்பெழுந் தாங்கு
முந்தை யாமஞ் சென்ற பின்றைப்
பணிலங் கலியவிக் கடங்கக் காழ்சாய்த்து
கொடைநவி னெடுங்கடை யடைத்து மடமத
ரொள்ளிழை மகளிர் பள்ளி யயர
நல்லரி யிறுஅல் புரையு மெல்லடை
யயிருருப் புற்ற வாடமை விசயங்
கவவொடு பிடித்த வரைபமை மோதகங்
நீஞ்சேற்றுக் கூவியர் தூங்குவன முறங்க
விழவி னடும் வயிரியர் மடியப்
பாடான் றணிந்த பனிக்கடல் புரையப்
பாயல் வளர்வோர் கண்ணினிது மடுப்பப்
பாலுட் கொண்ட கங்கு விடையத
பேயு மணங்கு முருவுகொண் டாப்கோற்

---

604. புறநா. 149 - ஆம் பாடல் பார்க்க.
605 - 6 "நல்யா ழாகுளி பதலியொடு கருக்கி" (புறநா. 64.)
608. முருது. 205 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.
618. பா. பெரும்பெயர்.
624. அடைக்கு இருல்: "தேனி முலன நீஞ்சலை யின்னடை" (சீவக. 2674.)

கூற்றக் கொஃறேர் கழுதொடு கொட்ப
விரும்பிடி மேஎந்தோ லன்ன விருள்சேர்பு
கல்லு மரனுந் துணிக்குங் கூர்மைத்
தொடலை வாளர் தொடுதோ லடியர்
குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடிச்
சிறந்த கருமை நுண்வினை நுணங்கற
னிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர்
மென்னூ லேணிப் பன்மாண் சுற்றினர்
நிலனக ழுளியர் கலனசைஇக் கொட்குங்
கண்மா றாடவ ரொடுக்க மொற்றி
வயக்களிறு பார்க்கும் வயப்புலி போலத்
துஞ்சாக் கண்ண ரஞ்சாக் கொள்கைய
ரறிந்தோர் புகழ்ந்த வாண்மையர் செறிந்த
நூல்வழிப் பிழையா நுணங்குநுண் டேர்ச்சி
யூர்காப் பாள ரூக்கருங் கணையினர்
தேர்வழங்கு தெருவி னீர்திரண் டொழுக
மழையமைந் துற்ற வரைநா ளமயமு
மசைவில ரெழுந்து நயம்வந்து வழங்கலிற்
கடவுள் வழங்குங் கையறு கங்குலு
மச்ச மறியா தேம மாகிய
மற்றை யாமம் பகலுறக் கழிப்பிப்
போதுபிணி விட்ட கமழ்நறும் பொய்கைத்
தாதுண் டும்பி போது முரன்றாங்
கோத லந்தணர் வேதம் பாடச்
சீரினிது கொண்டு நரம்பினி தியக்கி

---

635 - 6. "குன்று துகளாக்குங் கூர்ங்கணையான்" என்பது பாபகம்; (தொல். புறத். சூ 21 - ந. மேற்); "வேறிரண் டனவும் வில்லு மிடைந்தவும் வெற்பென் றாலுங், கூறிரண் டாக்கும் வாட்டைக் குழுவையுங் குணிக்க வாற்றேம்" (கம்ப சுந்தர. பாச. 6.)

639 - 42. "நிலனக ழுளிய னீலந் தானையன், கலனசை வேட்கையிற் கடும்புலி போன்று" (சிலப். 16: 204 - 5 அடியார். மேற்.)

653. பகலென்பதற்கு, அரையாமம் எனப் பொருள்கொண்டு இவ்வடியை மேற்கோள் காட்டினர்; (சிலப். 4: 81 - அரும்பத. அடியார்.)

655. சீவக. 893 - ந. மேற்.

யாழோர் மருதம் பண்ணக் காழோர்
கடுங்களிறு கவளங் கைப்ப நெடுந்தேர்ப்
பணைநிலைப் புரவி புல்லுணாக் தெவிட்டப்
பல்வேறு பண்ணியக் கடைமெழுக் குறுப்பக்
கள்ளோர் களிநொடை நுவல வில்லோர்
நயந்த காதலர் கவவுப்பிணித் துஞ்சிப்
புலர்ந்துவிரி விடிய லெய்த விரும்பிக்
கண்பொரா வெறிக்கு மின்னுக்கொடி புரைய
வொண்பொ னவிரிழை தெழிப்ப வியலித்
திண்கவர் நல்லிற் கதவங் கரைய
வுண்டுமகிழ் தட்ட மழலை நாவிந்
பழஞ்செருக் காளர் நழங்குகுர றோன்றச்
சூதர் வாழ்த்த மாகதர் நுவல
வேதா ளிகரொடு நாழிகை யிசைப்ப
விமிழ்முர சிரங்க வேறுமாறு சிலைப்பப்
பொறிமயிர் வாரணம் வைகறை யியம்ப
யானையங் குருகின் சேவலொடு காம
ரன்னங் கரைய வணிமயி லாவப்
பிடிபுணர் பெருங்களிறு முழங்க முழுவலிக்
கூட்டுறை வயமாப் புலியொடு குழும
வான நீங்கிய நீனிற விரும்பின்
மின்னுநிமிர்ந் தனைய ராகி நறவுமகிழ்ந்து
மாணிழை மகளிர் புலந்தனர் பரிந்த
பரூஉக்கா முரஞ் சொரிந்த முத்தமொடு
பொன்கடு நெருப்பி னிலமுக் கென்ன
வம்மென் குரும்பைக் காப்படுபு பிறவுந்

---

658. புறநா. 119 - ஆம் பாடல் பார்க்க
659. "கல்லா விளைஞர் கவளங் கைப்ப" (முல்லை 36.)
666. பா. தெளிர்ப்பவியலி. 670. பா. சூதரேத்த.
671. பா. வேதாளியர்
670 - 71. சிலப் 5 · 19. அடியார் மேற்
673 - 4. "யானையங் குருகின் கானலம் பெருந்தோடு" (குறுந். 34); "களிமயில், குஞ்சரக் குரல குருகொ டாலும்" (அகநா 115); "நீசுநீசென் றெங்குயானைச்சாத்தங்கலந்து" (திருப்பாவை. 7.)
678. நீனிறவிசும்பு: (மதுரை. 581.)

தருமணன் முற்றத் தரிஞிமி றார்ப்ப
மென்பூஞ் செம்மலொடு நன்கலஞ் சிப்ப
விரவுத்தலைப் பெயரு மேம வைகறை
மைபடு பெருந்தோண் மழவ ரோட்டி
யிடைப்புலத் தொழிந்த வேந்துகோட் டியானை
பகைப்புலங் கவர்ந்த பாய்பரிப் புரவி
வேல்கோ லாக வாள்செல நூறிக்
காய்சின முன்பிற் கடுங்கட் கூளிய
ரூர்சுடு விளக்கிற் றந்த வாயமு
நாடுடை நல்லெயி லணங்குடைத் தோட்டி
நாடொறும் விளங்கக் கைதொழுஉப் பழிச்சி
நாடா வந்த விழுக்கல மனைத்துங்
கங்கையம் பேரியாறு கடற்படர்ந் தாஅங்
களந்துகடை யறியா வளங்கெழு தாரமொடு
புத்தே ளுலகங் கவினிக் காண்வர
மிக்குப்புக ழெப்திய பெரும்பெயர் மதுரைச்
சினைதலை மணந்த சுரும்புபடு செந்தீ
யொண்பூம் பிண்டி யவிழ்ந்த காவிற்
சுடர்பொழிந் தேறிய விளங்குகதிர் ஞாயிற்
றிலங்குகதி ரிளவெயிற் றோன்றி யன்ன
தமனியம் வளைஇய தாவில் விளங்கிழை
நிலம்விளக் குறுப்ப மேதகப் பொலிந்து
மயிலோ ரன்ன சாயன் மாவின்
தளிரே ரன்ன மேனித தளிர்ப்புறத்
தீர்க்கி னரும்பிய திதலையர் கூரெயிற்
றொண்குழை புணரிய வண்டாழ் காதிற்
கடவுட்கயத் தமன்ற சுடரிதழ்த் தாமரைத்
தாதுபடும் பெரும்போது புரையும் வாண்முகத்
தாப்தொடி மகளிர் நறுந்தோள் புணர்ந்து
கோதையிற் பொலிந்த சேக்கைத் துஞ்சித்
திருந்துதுயி லெடுப்ப வினிதி னெழுந்து

---

695 - 7. மலைபடு. 526 - 9.
706. பா. மயிலோடன்ன.
707 - 9. "ஈன்றவ டிதலைபோ லீர்பெய்யுந் தளிரொடு" (கலி. 32.)

திண்கா ழார நீவிக் கதிர்விடு
மொண்கா ழாரங் கவைஇய மார்பின்
வரிக்கடைப் பிரச மூசுவன மொய்ப்ப
வெருக்கந் தாழ்ந்த விரவுப்பூங் கெரியற்
பொலஞ்சூப் பொலிந்த கலம்பெறு விளக்கம்
வலிகெழு தடக்கைத் தொடியொடு சுடர்வரச்
சோறமை வுற்ற நீருடைக் கலிங்க
மூடையணி பொலியக் குறைவின்று கவைஇ
வல்லோன் றைஇய வரிப்புனை பாவை
முருகியன் றன்ன வுருவின் பாஇ
வருபுனற் கற்சிறை கடுப்ப விடையறுத்
தொன்னு ரோட்டிய செருப்புகன் மறவர்
வாள்வலம் புணர்ந்தின் றுள்வலம் வாழ்த்த
வில்லிக் கவைஇக் கணைதாங்கு மார்பின்
மாதரான் கெறுழ்த்தோள் மறவர்த தம்மின்
கல்லிடைத் தியற்றிய விட்டுவாய்க் கிடங்கி
னல்லெயி னுழ்ந்த செல்வர்த் தம்மின்
கொல்லேற்றுப் பைந்தோல் சிவாது போர்த்த
மாக்கண் முரச மோவில கறங்க
வெரிநிமிர்ந் தன்ன தாணி நாப்பட்
பெருநல் யானை போர்க்களத் தொழிய
விழுமிய வீழ்ந்த குரிசிலர்த் தம்மின்
புரையோர்க்குத் தொடுத்த பொலம்பூந் தும்பை
நீர்யா ரென்னது முறைகருதுபு சூட்டிக்
காழ்மண் டெஃகமொடு கணையலைக் கலங்கிப்
பிரிபிணை யரிந்த நிறஞ்சிதை கவயத்து

---

715 - 6. "இருபே ராமு மெழில்பெற வணியுங். திருவீழ் மார்பிற் றென்னவர்." (அகநா. 13.)

727. பா. தாள்வலம்பழிச்ச.

726 - 7. சிறுபாண். 211 - 2

731. கலி. 92; சீவக. 906 - ஆ மேற்.

732 - 3. "ஓடாஅல் வேற்றானை தைஇய, பாடுகொண் முரசம்" (அகநா. 334); "வாளுங் குடையு மயிர்க்கண் முரசும்" (சிலப். 5 - 91.)

734. பா. (க) எரிபரந்தன்ன (உ) எரிசிதழ்ந்தன்ன.

வானத் தன்ன வளநகர் பொற்ப
கோன்குடட் டன்ன வூன்சாப் மார்பி
னுயர்ந்த வுதவி யூக்கலர்த் தம்மி
னிவந்த யாணைக் கணிரை கவர்ந்த
புலர்ந்த சாந்தின் விரவுப்பூச் தெரியற்
டெருளுசெ யாடவர்த தம்மின் பிறரும்
யாவரும் வருக வேனைருந தம்மென
வரையா வாயிற் செறுஅ திருத்து
பாணர் வருக பாட்டியர் வருக
யாணர்ப் புலவரொடு வயிரியர் வருகென
விருங்களே புரகு மிரவலர்க் கெலலாம
கொடிஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் விசெ
களந்தோறும் கள்ளரிப்ப
மாநதோறு மைவி ழ்ப்ப
நினவுன்சூட் டுருக்கமைய
நெய்கனிந்து வறைபார்ப்பக்
குரூஉக்குய்ப்புகை மழைமஙகுலிற்
பரந்துதோன்று வியனகராற்
பல்சாலை முதகுடுமிரி
னல்வேள்வித துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால சிறபபி
னிலநதரு திருவி னெடியோன் போல
வியப்புஞ சால்புஞ செமமை சானறோர்
பலர்வாய்ப் புகாறு சிறப்பிற் றோன்றி
யரியதகது குடியகற்றிப்
பெரியகற் றிசைவிளகி
முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்

---

742. "எஃகா னேவ கடுபபமெய் சிதைத்து" (பதிற். 67 17.)

747. பொருந. 101 - அடி மேற்.

760. "பரந்தகேள்விததுறைபோய பைந்தா மாபண" (சீவக. 717)

760 - 761. பட். 169 - 170.

763. "விலந்தரு திருவிற் பாண்டியன்" (தொல். பாயிரம்.)

பண்மீ னடுவட் டிங்கள் போலவும்
பூத்த சுற்றமொடு பொலிந்தினிது விளங்கிப்
பொய்யா நல்லிசை நிறுத்த புனைதார்ப்
பெரும்பெயர் மாறன் வலிவ ணுகக்
கடந்தடு வாய்வா ளிளம்பல் கோச
ரியனெறி மரபினின் வாய்மொழி கேட்பப்
பொலம்பூ ணேவ ருட்படப் புகழ்ந்த
மறமிகு சிறப்பிற் குறுநில் மன்ன
ரவரும் பிறருந் தவன்றிப்
பொற்புவிளங்கு புகழவை நிற்புகழ்ந் தேத்த
விலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
மணங்கமழ் தேறன் மடுப்ப வாஅங்
மகிழ்ந்தினி துறைமதி பெரும
வரைந்துநீ பெற்ற நல்லா ழியையே.

இதன்பொருள்.

இப்பாட்டிற்கு மாங்குடிமருதனார் மதுரைக்காஞ்சியென்று மதுரைப்பெயரான்றித் தினைப்பெயராற் பெயர்கூறினர். இத்தினைப்பெயர் பன்னிருபடல முதலிய நூல்களாற்கூறிய தினைப்பெயரன்று; தொல்காப்பியனார்கூறிய தினைப்பெயர்ப்பொருளே இப்பாட்டிற்குப் பொருளாகக் கோடலின். வஞ்சி பாடிச்சென்ற நாளிலும், காஞ்சி எஞ்சாதெதிர்சென்றான்றலாலும் "வஞ்சியுங் காஞ்சியுந் தம்முண் மாறே" எனப் பன்னிருபடலத்திற்கூறிய தினைப்பெயர் இப்பாட்டிற்குப் பொருளன்மையுணர்க. அவர் முதுமொழிக்காஞ்சிமுதலியவற்றைப் பொதுவியலென்று ஒருபடலமாக்கிக்கூறலின், அவை தினைப்பெயராகாமையுணர்க.

இனி, மதுரைக்காஞ்சியென்றதற்கு மதுரையிடத்து அரசற்குக் கூறிய காஞ்சியென விரிக்க. இஃது உருபும்பொருளும் உடன்தொக்கது. *"காஞ்சி யாமே பெருந்தினைப் புறனே" என்பதனுற் காஞ்சி பெருந்தினைக்குப் புறனு

769 - 70. சிறுபாண். 219 - 20 ஆம் அடிகளின் கீழ்க்குறிப்பைப்பார்க்க. "பன்மீ னுப்பட் டிங்கள் போலப், பூத்த சுற்றமொடு பொலிந்து தோன்றலே" (பத்.பா. 90: 17 - 8.)

775. பா. உனப்பட.

779 - 81. பொநந. 85 - 7 ஆம் அடிகளின் கீழ்க்குறிப்பைப்பார்க்க; "பொன்னொடி மகளிர் பொலங்கலத் தேந்திய, தண்கமழ் தேறல் மடுப்ப மகிழ்ந்து, தாங்கினி தொழுகுமதி பெரும." (புறநா. 24.)

* தொல்காப்பியம், புறத்திணையியல், 22.

பிற்று. அது, *"பாக்கருஞ் சிறப்பிற் பல்லாற் றாணு, நில்லா வுலகம் புல்லிய நெறித்தே." என்பதாம். இதன்பொருள்: பாக்கு அரு சிறப்பின் - தனக்குத் தானேயில்லாத வீடுபேறுநிமித்தமாக, பல் ஆற்றானும் - அநேக பொருள் இன்பமென்னும் பொருட்பகுதியானும், அவற்று உட்பகுதியாகிய உயிரும் யாக்கையும் செல்வமும் இளமையுமுதலியவற்றானும், நில்லா உலகம் புல்லிய நெறித்து - நிலைபேறில்லாத உலகியற்கையைப்பொருந்திய தன்னெறியினே உடைத்து அக்காஞ்சியென்றவாறு. எனவே வீடுபேறு நிமித்தமாகப் பல்வேற நிலையாமை சால்றோரையுங்குறிப்பினது காஞ்சித்தினேயென்பதுபொருளாயிற்று.

இச்செய்யுட்புலவர் இப்பொருளேகோடலின், யாம் இப்பொருளேநு உரைகூறுகின்றும்.

1 - 2. [ஓங்குநிரை வியன்பரப்பி, ஞெலிமுன்னீர் வரம்பாக:] வியல் பரப்பின் ஓங்கு நிரை ஒலி முன்னீர் வரம்பு ஆக—அகலத்தையுடைத்தாகிய நீர்ப்பரப்பின்கண்ணே ஓங்குநிரையொலிக்குங்கடல் எல்லையாக,

3 - 4. தேன் தூங்கும் உயர் சிமையம் மலை சாறிய வியல் ஞாலத்து—தேனிருல் தூங்கும் உயர்ந்த உச்சியையுடைய மலைகள்தோன்றிய அகலதையுடைய ஞாலத்தின்கண்ணே,

5. வலம் மாநிரத்தான் வளி கொட்ப—வலமாக ஆகாயத்தின்கண்ணே காற்றுச்சுழல,

6. வியல் ஞாண்மீன் நெறி ஒழுக—அகலத்தையுடைய ஞாண்மீன்களாம் வடக்கு நெறியில்கண்ணே வடக்க,

7. பகல் செய்யும் செ ஞாயிறும்—பகற்பொழுதை உண்டாக்கும் செவ்வ பகலோனும்,

8. இரவு செய்யும் வெள் நிலவும்—இராப்பொழுதை உண்டாக்கு வெள்ளிய மதியும்,

9. மை தீர்ந்து இளர்ந்து விளங்க—குற்றமற்றுத் தோன்றிவிளங்க,

10. மழை தொழில் உதவ—மேகம் தானே பெய்தற்றொழிலே வேண்டுங்காலத்தேதர,

†உழவுத்தொழிற்கு உதவவென்றுமாம்.

மாநிரம் கொழுக்க—நிலைகளெல்லாம் தழைப்ப,

மலைகள் வினைத்தகொழுக்கவென்றுமாம்.

11. [தொடுப்பி ஞாயிரம் விற்றியது வினைய:] தொடுப்பின் விற்றியது ஞாயிரம் வினைய—ஒருவிதைப்பின்கண்ணே விதைத்தவிதை ஞாயிரமாக விளைய,

12. நிலனும்—விளைநிலங்களும்,

---

* தொல்காப்பியம், புறத்திணையியல், 23.

† "காலைமாரிபெய்துதொழிலாற்றி" (பதிற். 84.)

மரனும்—மாக்களும்,

பயன் எதிர்பு ஈத்த — பல்லுயிர்க்கும் தம்பயன்கொடுத்தலே ஏறட்டுக் கொண்டு தழைப்ப,

13. *நோய் இகந்து நோக்கு விளங்க—மக்கட்குப் பியும்பினியுநீங்கி அழகுவினங்,

14 - 5. [மேதக மிகப்பொலிந்த, நோன்குலே வயக்களிறு:] மிக பொலிந்த நுங்கு கிலே வய களிறு மே தக—அறவும்பொலிவுபெற்ற உலகத்தைத்தாங் குதல் வளருர்த்தன்மையையுடைய வலியையுடையவாகிய நிக்கயங்கள் இவர் தாங்குதலின் வருத்தமற்று மேம்பாடுதக.

சுருளும் படியுமாகப் பண்ணினவிடத்துப் பண்ணிநிற்கும் யானையென் றுரைப்பாருமுனர்.

16 - 7. [கண்டதண்டாக் கட்கின்பத், துண்டதண்டா மிகுவளத்தான்:]

உண்டு தண்டா மிகு வளத்தான்—உண்டு அமையாத உணவுமிகுகின்ற செல்வத்தோடே.

கண்டு தண்டா கட்கு இன்பத்து—நோக்கியமையாத †கட்கு இனிமை யினையும்,

18. உயர் பூரிமம் விழு தெருவில்—உயர்ந்த ‡நிறகுகளையுமுடைய சிறந்தருவிலிருக்குமாத்தர் (20).

பூரிமம் - சார்த்திட்ட தொட்டிகளென்பாருமுனர்.

19 - 20. [பொய்யறியா வாய்மொழியாற், புகழ்நிறைந்த நன்மாந்தரொடு:] வாய் மொழியால் புகழ் நிறைந்த பொய் அறியா §நல் மாந்தரொடு - §மெய்ம் மொழியே எக்காலமும் கூறுதலாற்பெற்ற புகழ்நிறைந்த ||பொய்யைக் கேட்டறி யாத நல்ல அமைச்சருடனே,

21. நல் ஊழி அடி படர—நன்குகிய ஊழிக்காலமெல்லாம் நமக்கு அடிப் பட்டுவடக்க,

22. பல் வெள்ளம் மீ கூற—பல¶வெள்ளமென்னும் எண்ணுப்பெற்ற காலமெலலாம் அரசாண்டதன்மையை மேலாகச்சொல்லும்படி,

---

* "நோடொடு பகியிகந்து", "நோயிகந்தொரீஇய ... ... நாடு" (பத்தி. 13, 15.) "பியும் பினியும் பனையு நீங்கி" (சிலப். 5: 72; மணி. 1: 70.)

† கட்கு - கண்ணுக்கு.

‡ நிறகு - தெருவின் இருபுறத்தும்முள்ள வீடுகளின் வரிசை; வழக்கு.

§ "பொய்யாமை யன்ன புகழில்லை" (குறள். 296.)

|| "பொய்ச்சொற் கோ வாய்மொழி மன்னன்" (கம்ப. கைகேயி சூழ்வினை. 31.)

¶ வெள்ளம் - ஒருபேரெண்.

28. உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக—உலகத்தையாண்ட உயர்ச்சி பெற்றோர் குடியிலுள்ளவனே,

மாதிரம் கொழுக்க (10) வித்தியதுவிளைய (11) நிலனும் மரனும் நந்த (12) வளிகொட்கையினாலே (5) மழை தொழிலுதவ (10) ஏனமுடிக்க.

வியன்ஞாலத்திடத்தே (4) மழைதொழிலுதவ (10) நாண்மீன் நெறி யொழுக (6) ஞாயிறும் (7) திங்களும் (8) விளங்க (9) நோக்குவிளங்கக் (13) களிறு (15) மேதக (14) நன்மாந்தரோடே (20) ஊழி அடிப்பட்டு நடக்கும் படி (21) மீக்கூற (22) முந்நீர்வரம்பாக (2) உலகமாண்ட உயர்ந்தோர்மருக (23) ஏனமுடிக்க.

*இவர்கள் தருமத்தில் தப்பாமல் நடத்தவே இக்கூறியவையும் நெறிதப்பாமல் நடக்குமென்றார்.

24 - 5. பிணம் கோட்ட களிறு குழும்பின் நிணம் வாய்ப்பெய்த பேய்மகளிர்—பிணங்களையுடைய கொம்புகளையுடையனவாய்ப் பட்ட ஆனையினுடைய திரளின் நிணத்தைத்தின்ற பேய்மகளிருடைய துணங்கை (26),

26. இணை ஒலி இமிழ் †துணங்கை சீர்—இணைத்த ஆரவாரம் முழங்குகின்ற துணங்கைக்கூத்தின் சீர்க்கு,

27. பிணை யூபம் எழுந்து ஆட—செறிந்த குறைத நலைப்பிணம் எழுந்து நின்று ஆடுகையினாலே,

28. அஞ்சு வந்த போர்க்களத்தான்—அஞ்சுதலுண்டான போர்க்களத்திடத்தே,

29. ஆண் தலை அணங்கு அடுப்பின்—ஆண்மக்கள்தலையாகிய நோக்கினாரைவருத்தும் அடுப்பின்கண்ணே,

30 - 31. வய வேந்தர் ஒள் குருதி சினம் தீயின் பெயர்பு பொங்க—வலியினையுடையவேந்தருடைய ஒள்ளிய குருதியாகிய உலை சினமாகிய தீயின் மறுகிப் பொங்குகையினாலே,

32 - 8. [தெறலருங் கடுந்துப்பின். விறல்விளங்கிய விழுச்சூர்ப்பிற, றொடித்தோட்கை துடுப்பாக, வாடுற்ற ஊன்சோறு. நெறியறிந்த கடிவாலுவன், னடியொதுங்கிப் பிற்பெயராப், படையோர்க்கு முருகயர்.]

தொடி தோள் கை துடுப்பு ஆக ஆடு உற்ற ஊன் சோறு—வீரவளையை உடையவாகிய தோளையுடையகைகள் துடுப்பாகக்கொண்டு துழாவி அடுதலுற்ற ஊனினாகியசோற்றை,

நெறி அறிந்த கடி வாலுவன்—இடுமுறைமையறிந்த பேய்‡மடையன்.

---

* "இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட, பெயலும் விளையுளுந் தொக்கு" (குறள். 545.) மணி. 7 : 8 - 10; சீவக. 255 பார்க்க.

† துணங்கையினியல்பு இப்புத்தகம் 26 - ஆம் பக்கத்தால் அறியலாகும்

‡ மடையன் - சோறாக்குவோன்.

தெறல் அரு கடு துப்பின் விறல் வினங்கிய விழு குர்ப்பின் அடி ஒதுங்கி பின் பெயரா படையோர்க்கு முருகு அயர—பகைவராற் கோபித்தற்கு அரிய கடிய வலியினையும் வெற்றிவினங்கிய சிரிய கொடுந்தொழிலினையுமுடையராய் இட்ட அடிவாங்கிப் பின்போகாத வீரர்க்கு வேள்விசெய்யும்படி,

39. அமர் கடக்கும் வியல் தானை—போரைவெல்லும் அகலத்தையுடைய படையினையுடைய,

போர்க்களத்தே (28) ஆடுற்றசோர்வை (35) வாலுவன் (36) அடிபெயரா (37) வீரர்க்கு முருகயரச் (38) கடக்குந்தானையென்க.

40 ஞ 42. [தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற், றொன்முது கடவுட் பின்னர் மேய, வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந:]

வரை தாழ் அருவி பொருப்பின் கடவுன்—பக்கமலையிலே விழுகின்ற அருவியினையுடைய பொதியின்மலையிலிருக்கும் கடவுன்,

தென்னவன் பெயரிய துன் அரு துப்பின் தொல் முது கடவுள் பின்னர் மேய பொருந—*இராவணனைத் தமிழ்நாட்டையானதபடிபோக்கின கிட்டுதற்கரிய வலியினையுடைய பழமைமுதிர்ந்த அகத்தியன்பின்னே எண்ணப்பட்டுச் சான்றோனுயிருத்தற்கு மேவின ஒப்பற்றதனே,

† நிசைநிலைக் கினவியி னுஅ குரவும்' என்றதனுல், இராவணன் தென் நிசையாண்டமைபற்றித் ‡தென்னவனென்றார்; இப்பெயர் பாண்டியற்கும் கூற்றுவற்கும் வந்துள்ளதற்போல. அகத்தியனைத் தென்திசையுயர்ந்த சொய்ம்மைபோக இறைவனுக்குச் சிரொப்பநிற்ப்ராென்பதுபற்றிக் கடவுளென்றார். இராவணனுறுதல் பாயிரச்சூத்திரத்து உரையாசிரியர்கூறிய உரையானு முணர்க.

இனி, §"முத்தேர் முறுவலாய் காமணம் புக்கக்கா, லிப்போழ்துபோழ் தென்றதனுலாய்ப்பக் கூறிய, வெக்கடவுண் மற்றக் கடவுன்" என ||இருடிகளையும் கடவுளென்று கூறியவாற்றானும் காண்க.

---

* அகத்தியமுனிவர், பொதியின்மலை உருகும்படி இசைபாடி இராவணனைவென்றுபோக்கினரென்பது பனைடைகலாற்; அவர் இசையில் வல்லராகென்பது முதலியவற்றைப் பின்னுள்ளவற்றானும். இசையிலக்கணநூலாசிரியரென்பதனைதுமுணர்க;—"மன்னு மகத்தியன் யாழ்வா சிப்ப"(குறுந்தொகைலாயநானவுலா), 'இராவணனைக் கத்தருவத்தாற்பிணித்த' (தொல். பாயிரம், உரையாசிரியநூரை), "இனிய வைந்தமிழின் பொதியமால் வரைபோ லிசைக்குரு காது", (சோணைசல. 26), "மலை, முன்ன ருருக்கு முனிவிகர்வை - இன்னான், அசையா தடுத்த பழமலையை யன்ன, மிசையா லுருக்குவா யென்ன" (வெங்கையுலா, 319), 'இசைக்குருகப்படுதலை - இராவணனைப்பிணிக்கக் குறமுனிபாடும் இசைக்கு உருகிய பொதியின்மலை' (தஞ்சை. 345 - உரை.)

† தொல்காப்பியம், எச்சவியல், 53.

‡ "தென்னவன் மலையை டுக்கச் சேனைழ நடுங்கக் கண்டு, மன்னவன் சிலை தூன்ற ... ... .மேற் தளியி னரே" என்புழியும் தென்னவன் இராவணனுறுதல்காண்க; (குறுக்கைச்சிமேற்றளி. திருஞா. தே.)

§ கலித்தொகை, 93.

|| "கந்தன் பள்ளிக் கடவுளர்க் கெல்லாம்" (சிலப். 11: 5) என்பதும் இதனை வலியுறுத்தும்.

இதனால், அகத்தியனுடன் நிலைச்சங்கத்துப் பாண்டியனிருந்து தமிழாராய்ந்த நெட்டிமையாரென்பது கூறப்பட்டது.

கூற்றுவனேயுதைத்தகடவுளென்று இறைவனுக்கு, அவன்பின்னரென்றது அகத்தியனேயென்று பொருள்கூறின், இறைவனுக்குத் தம்பியென்றல் சாலாமையானும், அப்பொருடருங்காலத்து, முன்னவன் பின்னவன், முன்னோன் பின்னோனென்றல்லது அச்சொல் நில்லாமையானும் அது பொருந்தாது. *"முன்னரே சாரான் முனிதக்க மூப்புள. பின்னரும் பீடழிக்கு நோயுள" எனப் பிறாண்டும் முன்னர் பின்னரென்பன இடமுணர்த்தினே நிற்குமென்றணர்க.

பொருளென்றது †தான் பிறர்க்கு உலமிக்கப்படுவானெல்லும்பொருட்டு.

43. விழு சுழிய—சிறப்புமுகபடாத்தையுடையவாய்,

விளக்கு ஒடைய—விளக்குகின்ற பட்டத்தையுடையவாய்,

44. கடு னெத்த—கடிய னெத்தையுடையவாய்,

44-5. கமழ் கடாத்து அனை பட்ட நறு சென்னிய—‡மதமுழுகின்ற மதத்தாலே சேறுண்டான நறிய நலையினையுடையவாய்,

46 வரை மருளும் உயர் தோன்றல்—வரையென்றுமருளும் உயர்ந்த தோற்றத்தினையுடையவாய்,

47. வினை கவின்ற பேர் யானை—§போர்த்தொழிலிலேயின்ற பெரிய யானை,

இச் செய்தியைச்சக்குறிப்பாகிய வினையெச்சமுற்றுக்கள் அடுக்கிவந்தவற்றை கவின்றவென்னும் பெயரெச்சத்தோடு முடிக்க.

48. வினர் நெரித்தனன் உழக்கவும்—வினமிக்குக் களந்துவீரரைச் சொன்றழிக்கவும்,

49-50. மா எடுத்த மலி குருதி துகள் அல் வானத்து வெயில் கரப்பவும் குரைத்திரள் பகுவாய்ப்போத செல்லு நலம் நுண்டாள மிக்க நிறத்தையுடைவாயினதூளி ‖அதனுற்குக் காரணமான ஆகாயத்திடத்தே வெயிலைமறைக்கவும்,

51-2. வாம் பரிய கடு நிண் தேர் காற்று என்ன கடிது கொட்பவும்—தாவும் குதிரைகளையுடைய செலவுகடிய நிண்ணியதேர் காற்றுச்சுற்றியடிப்ப தென்னக் கடிதாகச்சுழலவும்,

---

* நாலடியார், சுகை, 2.

† "பிறர்க்குரி வாயி னல்லது தினக்குப், பிறருவம மாகா வொருபெரு வேந்தே" (பதிற். 73.)

‡ யானைமதம்கமழுதல், "தண்ணருந்திறற் கமழ்கடாஅத்து", "மிஞிறுசூழ்க்கும் கமழ்கடாஅத், தயறு சோறு மிருஞ் சென்னிய .... களிறு" (புறநா. 3, 23) என்பவற்றாலுணர்க, காஞ்சிப் புராணம், கடவுள்வாழ்த்து, 7-ஆம் செய்யுள் முதலியவற்றாலும் அறியலாகும்.

"தொழினவில் யானை" (பதிற். 84.)

"அலரிருவிசும்பு" (பெரும்பாண். 1) என்பதன்பொருள் பார்க்க.

53 - 4. [வாண்மிகு மறமைக்தர், தோண்முறையான் வீறுமுற்றவும்:] வாள் மிகு மறம் மைக்தர் தோள் வீறு முறையான் முற்றவும் – வாட்போரான் மிகுகின்ற மறத்தையுடைய வீரருடையதோள் வெற்றி முறையாகவெட்டுதலான் முற்றப்பெறவும்,

* "விருத்தாயினை யெறிதியென விசைமார்பகங் கொடுத்தாற், கருப்பூணாத வெறித்தாங்கவினை தழினி யெனவே" என்றார் பிறரும்.

55 - 6. இரு பெரு வேந்தரொடு வேளிர் சாய பொருது அவரை செருவென்றும்—சேரன்சோழனுமிய இருவராகிய பெரிய அரசருடனே †குறுநில மன்னரீரும் இனைந்தும்படி பொருது அவரைப் போரைவென்றும் அமையாமல்,

உம்மை சிறப்புமும்மை.

57 - 9. [இலங்கருவிய வரைகேந்திச், சரம்போழ்ந்த விசலாற்ற, லுயர்ந் தோங்கிய விழுச்சிறப்பின்:]

உயர்ந்து இலங்கு அருவிய வரை கேந்தி ஒங்கிய விழு சிறப்பின்—உயர்ந்து விளங்குகின்ற அருவிகளையுடைய மலையிற் குறிஞ்சிநிலமன்னரையெல்லாம் வென்று உயர்ந்த சிரிய தலைமையினாலே,

இகல் ஆற்றல் சரம் போழ்ந்த சிறப்பின்—மாறுபாட்டை கடத்துதலை யுடைய பகைவர்காடுகளைப் பலவழியாகப்பிளந்த சிறப்பினாலே,

60. நிலம் தந்த பெரு உதவி—காட்டிலிருக்கின்ற அரசர்நிலங்களையெல் லாம்கொண்ட பெரிய உதவியையும்,

‡மலையும் காடும் அரணாகஇருந்தஅரசரை அழித்தவெலியாலே காட்டிலிருக் கின்ற அரசர் தந்தம் நாடுகளைவிட்டாரென்றதாம்.

61. பொலந்தார் மார்பின் செடியோன் உம்பல் — பொன்னாற்செய்த தாரையணிந்தமார்பினையுமுடைய §வடிம்பலம்பநின்றபாண்டியன் வழியில் வந்தோனே,

யானை (47) களைழக்கவும் (48) தேன் (49) வெயில்சரப்பவும் (50) தேர் (51) கொட்பவும் (52) மைந்தர் (53) முற்றவும் (54) பொருது செருவென் றும் அமையாமல் (56) விழுச்சிறப்பின் (59) நிலந்தந்த உதவியினையும் (60) மார்பினையுமுடைய செடியோனென்க.

---

* சீவகசிந்தாமணி, 2265.

† குறுநிலமன்னர் - திதியன்முதலானோர்; இந்நூல் 128 - 9 ஆம் அடி களின் விசேடவுரையைப்பார்க்க.

‡ "உண்டாகிய வுயர்மண்ணுஞ், சென்றபட்ட விழுக்கலனும், பெறல் கடுமிவ ளெஞ்சுறப்பெறின்" (புறநா. 17) என்பதன்கருத்து இவ்விசேடவுரை யுடன் ஒப்புநோக்கற்பாலது.

§ "அடியிற் றன்னை வரசர்க் குணர்தரி" (சிலப். 11 · 17), "ஆழிவடிம் பலம்பின்றாணி" (நள. சுயம். 137) என்பனவும், "வென்றிபட", "மாலை முடியோன்" (திருவால. 21: 6 - 7) என்னும் செய்யுட்களும், "கடல்வடிம் பலம்ப நின்ற கைதவன்" (வி - பாரதம். 15 - ஆம் போர். 18) என்பதும் இங்கே அறியத்தக்கன.

62 - 3. மரம் நின்னூடு வரை உதிர்க்கும் வரை உருமின் ஏறு அனையை—மரங்களைச்சுட்டு மலைகளைஉருக்கும் பெருமையினையுடைய உருமேற்றை ஒப்பை,

*"கருவரைகல்லேறு" என்றுரைப்பாரும். இன். அசை.

64. அரு குழு மினை—பகைவர்சேர்தற்கரிய நிரட்சியையுடைய காவற் காட்டினையும்,

குண்டு கிடங்கின்—ஆழத்தினையுடைய கிடங்கினையும்,

65. உயர்ந்து ஓங்கிய கிரை புதவின்—உயர்ந்துவளர்ந்த கோபுரங்களிடத்து வாயில்களையும்,

கிரை, ஆகுபெயர். உயர்ச்சி ஒக்குதலைவிசேடித்துநின்றது.

66. செடி மதில்—செடிய மதிலினையும்,

கிரை ஞாயில்—கிரைதத சூட்டினையுமுடைய,

அஃது எய்தால்மறைதற்கு உயரப்படுப்பது.

67. [அம்புமி ழுயிலருப்பம்:] அயில் †அம்பு உமிழ் ‡அருப்பம்—கூர்மையையுடைய அம்புகளையுமிழும் அரண்களை,

மினை (64) முதலியவற்றையுடைய அருப்பமென்க.

68 - 9. தண்டாத தலை சென்று கொண்டு கிடங்கின விழு சிறப்பின்—அமையாமல் அவ்விடங்களிலேசென்று கைக்கொண்டு அவ்விடங்களினின்றும் போன சிரிய தலைமையினையுடைய கொற்றவர் (71),

70 - 71. [தென்குமரி வடபெருங்கல், குணகுடகடலாவெல்லை:] தென் குமரி எல்லை ஆ வட பெரு கல் எல்லை ஆ குண குட கடல் எல்லை ஆ—தென்திசைக்குக் குமரி எல்லையாக வடதிசைக்குப் பெரியமேரு எல்லையாகக் கிழக்குத் திசைக்கும் மேற்றிசைக்கும் கடல் எல்லையாக இடையிலுள்ளோரெல்லாம்,

72. தொன்று மொழிந்து தொழில் கேட்ப—தம்முடன் பழமையைச் சொல்லி ஏவல்கேட்கும்படி,

73. வெற்றமொடு வெறுத்து ஒழுகிய—வெற்றியோடே செறிந்தொடர்ந்து,

74. கொற்றவர்தம் கோன் ஆகுவை—வெற்றியுடையோர்தம்முடைய தலைவனாக தன்னமையையுடையை,

75 - 6. வான் இயைந்த இரு §முந்நீர் பேணம் நிலைஇய இரு பௌவத்து—மேகம்படிந்த பெரிதாகிய மூன்றுநீர்மையையுடைய அச்சம்நிலைபெற்ற கரியகடலிடத்து,

---

* குறுந்தொகை, 317.

† "அம்புமிழ்வ வேலுமிழ்வ" (சீவக. 103.)

‡ "அவரருப்பம் வெளவி" (மதுரை. 149.)

§ 'முந்நீர்' என்பதன்பொருள், "முந்நீர்ப்பிறந்த" (சீவக. 5) என்பதன விசேடவுரையாலும், புறநானூறு, 9 - ஆம் செய்யுளுரையாலும், "முந்நீர் வுள்புக்கு" (சிலப். ஆய்ச்சியர்) என்பதனுரையாலும் விளங்க அறியலாகும்.

77 - 9. [கொடும்புணரி விலங்குபோழக், கடுங்காலொடு கரைசேர, நெடுங்கொடிமிசை யிதையெடுத்து:]

கடு காலொடு கொடு புணரி விலங்கு போழ இதை எடுத்து—கடிய காற்றாலே வளைகின்ற திரையைக் குறுக்கே பிளந்தோடும்படி பாய்விரிக்கப்பட்டு.

80. இன்னிசைய *முரசம் முழங்க—இனிய ஓசையையுடைய முரசம் முழங்காநிற்க,

81 - 2. பொன் மலிந்த விழு பண்டம் நாடு ஆர—பொன்மிகுதற்குக் காரணமாகிய சீரிய சரக்குக்களை நாட்டிலுள்ளார் நுகரும்படியாக,

[நன்கிழிதரும்:] கரை சேர (78) நன்கு இழிதரும் — கரையைச்சேர வாணிகம்வாய்த்துவந்து இழிதலைச்செய்யும்.

83. [ஆடியற் பெருநாவாய்] நெடு கொடி மிசை (79) ஆடு இயல் பெரு நாவாய்—நெடியகொடி பாய்மரத்தின்மேலே ஆடும் இயல்பினையுடைய பெரிய மரக்கலம்.

இதையெடுத்து (79) முழங்க (80) ஆர இழிதரும் (82) நாவாயென்க.

84 - 5. மழை முற்றிய மலை புரைய துறை முற்றிய துளங்கு இருக்கை—கருமேகஞ்சூழ்ந்த மலைபோலக் கடல்சூழ்ந்த அசைகின்ற இருப்பினையும்,

துறை ஆகுபெயர். சரக்குப்பறித்தற்குக் கடலினின்றமரக்கலங்கள் அக்கடல்சூழநின்றதற்கு மழைமுற்றியமலை உவமமாயிற்று.

நாவாய் துளங்கிருக்கையென்க.

86 தென் கடல் குண்டு அகழி—தெளிந்த கடலாகிய ஆழத்தையுடைய கிடங்கினையுமுடைய,

87 - 8. சீர் சான்ற உயர் நெல்லின் ஊர் கொண்ட உயர் கொற்றவ—தலைமையமைந்த உயர்ந்த நெல்லின்பெயரைப்பெற்ற சாலியூரைக்கொண்ட உயர்ந்த வெற்றியையுடையவனே,

இதனால், தனக்குநடவாததோர் ஊர்கொண்டானென்றார்.

இன்னை அசையாக்கி நெல்லூரென்பாருமுளர்.

இருக்கையினையும் (85) கிடங்கினையும் (86) உடைய ஊரென்க.

89 - 92. [நீர்த்தெவ்வு நிரைத்தொழுவர், பாடுசிலம்பு மிசையேற்றத், தோடுவழங்கு மகலாம்பியிற், கயமகைய வயனிறைக்கும்:]

வயல் அகைய நிறைக்கும் கயம் நீர் †தெவ்வும் நிரை ‡தொழுவர் பாடு சிலம்பும் இசை — வயல்தழைக்கும்படி நீரை நிறைத்தற்குக்காரணமான குளங்களில்

---

* "கோடுபறையாரப்ப" (சீவக. 501.)

† 'தெவ்வு' என்றபாடமே சேரானது; 'எடுத்தல் படுத்தல்" (பிரயோக. 10) என்பதன் உரையைப்பார்க்க; "சோணாடுதெவ்வுதலும்" என்றார், ஸ்ரீ கச்சியப்பமுனிவரும்; (காஞ்சி. நகரேற்று. 142.)

‡ தொழில் செய்வாரென்னும் பொருளில் தொழுவரென்பது, (மது. 122.) "நெல்லரியு மிருந்தொழுவர்", "நெல்லரிதொழுவர்" (புறநா. 24, 209) என்புழியும் வந்துள்ளது.

நீரை *இடாவான்முகந்துகொள்ளும் நிரையாகநின்றுதொழில்செய்வாரிடத்தே ஒலிக்குமோசை,

ஏற்றத்தோடு வழங்கும் அகல் ஆம்பியின் இசை—ஏற்றத்துடனே உலாவும் அகன்ற பன்றிப்பத்தலின்ஓசை,

93. மெல் தொடை வல் கிழாஅர் இசை (95)—மெத்தென்ற கட்டுக்களையுடைய வலிய †பூட்டைப்பொறியினோசை,

94. அதரி கொள்பவர் இசை (95)—கடாவிடுகின்றவரோசை,

பகடு பூண் தெள் மணி இசை (95)—எருதுகள்பூண்ட தெள்ளிய மணியினோசை,

95. இரு புள் ஒப்பும் இசையே—பயிர்களிற் பெரியகிளிமுதலியவற்றை ஓட்டுமோசை,

ஏகாரம் ஈற்றசை.

என்றும்—எந்நாளும்.

96 - 7. மணி பூ முண்டகதது மணல் மலி கானல் பரதவர் மகளிர் குரவையொடு ஒலிப்ப—நீலமணிபோலும் பூக்களையுடையவாகிய கழிமுள்ளிகளையுடைய மணற்குன்றுகள்மிக்க கடற்கரையிலிருக்கும் பரதவருடைய மகளிராடும் குரவைக்கூத்தின் ஓசையோடேகூடி ஆரவாரியாநிற்ப,

98. ஒருசார் விழவு நின்ற வியல் ஆங்கண்—ஒருபக்கம் விழாக்கொண்டாடுதலாற் பிறந்த ஓசைகள் மாறாமனின்ற அகலத்தையுடைய ஊர்களிடத்தேயிருந்து,

பாடுசிலம்புமிசை (90) முதலியன குரவையொடு (97) என்றும் (95) ஒலிப்ப ஒருசார் விழவுநின்ற ஊரென்க.

99. முழவு தோள் முரண் பொருநர்க்கு—முழவுபோலும் தோளினையுடையராய்க் கல்வியால் மாறுபடுதலையுடைய ‡தடாரிப்பொருநர்க்கு,

100 - 102. உரு கெழு பெரு சிறப்பின் இரு பெயர் பெரு ஆயமொடு இலங்கு மருப்பின் களிறு கொடுத்தும்—அச்சம்பொருந்திய பெரிய தலைமையையுடைய §கன்றும்பிடியுமென்னும் இரண்டுபெயரையுடைய பெரியதிரளுடனே விளங்குகின்ற கொம்பினையுடைய களிறுகளைக்கொடுத்தும்.

---

* இடா - இறைகூடை; "பேரிடாக்கொள்ளமுன்கவிதது" (பெரிய இளையான்குடி. 17.)

† "காலை யங்கதிற் பூட்டையங் கடமதொன் றமிழ, மேலெழுந்துசெல்கின்றதோர் கடமென மேலை, வேலை வெங்கதி ரமிழ்ந்துற முழுமதி விண்ணின், பாலெழுந்தது விரிகதி ருலசெலாம் பரப்பி" (சீகாளத்தி. கன்னியா 119.) என்பதனால், பூட்டைப்பொறியினியல்பை அறிந்துகொள்க. இது காஞ்சிபுரத்தின் பக்கத்துள்ள ஊர்களிற் பெரும்பாலும் காணப்படும்.

‡ தடாரி - கிணைப்பறை. (பு - வெ.)

§ "கன்றொடு, கறையடி யானை யிரியல் போக்கும், ... ஆய்" (புறநா. 135), "கன்று டைப்பிடி நீக்கிக் களிற்றினம், வன்றொடர்ப் படுக்கும் வனவாரி" (கம்ப. நாட்டு. 32) என்பன இங்கே ஆராயத்தக்கவை.

இருபெயர்க்கு ஆடும் மாடுமென்பாருமுளர்.

103. பொலந்தாமரை பூ சூட்டியும் — பொன்னாற்செய்த தாமரைப் பூவைச் சூட்டியும்,

104 - 5. [கலஞ்சான்ற கலஞ்சிதறும். பல்குட்டுவர் வெல்கோவே.]

கலம் சான்ற கலம் சிதறும் கோவே—நன்மையமைந்த பேரணிகலங்களை எல்லார்க்குங்கொடுக்குங்கோவே,

ஊர்களிடத்தே யிருந்து (98) பொருநர்க்குக் (99) கொடுத்தும் (102) சூட்டியும் (103) அமையாது கலஞ்சிதறுங்கோவேயென்க.

பல் குட்டுவர் வெல் கோவே—பலவாகிய குட்டநாட்டிலுள்ளாரை வெல்லுங்கோவே.

என்பது. அடை.

இதனால், தன்னாட்டிலூர்களிலிருந்து கொடுக்கின்ற சிறப்புக்கூறினார்.

106. கல் காயும் கடு வேனிலொடு—*மலைகள் காய்தற்குக்காரணமாகிய கடிய முதுவேனிலாலே,

107. இரு வானம் பெயல் ஒளிப்பினும்- பெரியமேகம் மழையைத் தன்னிடத்தே மறைத்துக்கொள்ளினும்,

108. [வரும்வைகன் மீன்பிறழினும் :] வைகல் வரும் மீன் பிறழினும்—தான் தோன்றுதற்குரிய நாளிலேதோன்றும் †வெள்ளி தென்றிசையிலே எழினும்,

109. வெள்ளம் மாறாது விளையுள் பெருக—யாறுகள் வெள்ளமாறாமல் வந்து விளைதல் பெருகுகையினாலே.

110. நெல்லின் ஓதை—முற்றினநெல்லுக் காற்றடித்து அசைதலாலே எழுந்த ஓசை,

அரிகர் கம்பலை—அதனை அறுப்பாருடைய ஓசை

111. புள் இமிழ்ந்து ஒலிக்கும் இசை—புறவைகள் கத்துகையினாலே ஆரவாரிக்கும் ஆரவாரம்,

---

* "மலைவெம்ப" (கலி. 13.)

† வெள்ளிக்கோள் தென்றிசையில் எழுதல் தியநிமித்தம்; இது, "வசையில்புகழ் வயங்குவெண்மீன், றிசைதிரிந்து தெற்றேகினுந், தற்பாடிய தளியுணவிற், புட்டேம்பப் புயன்மாறி, வானபொய்ப்பினுந் தானபொய்யா, மலைத்தலைய கடற்காவிரி" (பட். 1 - 6), "வறிதுவடக் கிறைஞ்சிய சீர்சால் வெள்ளி, பயங்கெழு பொழுதோ டாகிய நிற்ப", "நிலம்பயம் பொழியச் சுடர்சினந் தணியப், பயங்கெழு வெள்ளி யாகிய நிற்ப" (பதிற். 24, 69), "மைமீன் புகையினுந் தூமந் தோன்றினுந். தென்றிசை மருங்கின வெள்ளி யோடினும், ... பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே". "வெள்ளி தென்புலத் துறைய விளைவயற், பள்ளம் வாடிய பயனில் காலை" (புறநா. 117, 388), "கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும், விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும், ... சாவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை" (சிலப். 10: 102 - 8.) என்பனவற்றால் அறியலாகும்.

என்றும்—எக்காலும்,

112 - 3. சலம் புகன்ற சுறவு கலித்த புலவு நீர் வியல் பௌவத்து—தம்மூன் மாறுபாட்டைவிரும்பிச் சருக்கள் செருக்கித்திரிகின்ற புலாஞ்சுற்றத் தையுடையதாகிய நீரையுடைய அகற்சியையுடைய கடலிடத்துத் துவலை(113),

114 - 5. நிலவு கானல் முழவு தாழை குளிர் பொதும்பர் களி தூவல்—*நிலாப்போலும் மணலையுடையகரையினிற் குடமுழாப்போலுந் †காயையுடை யதாழையை வேலியாகவுடைய குளிர்ச்சியையுடைய இளமரக்காலின்கண்ணே வந்து செறிதலையுடைய துவலையினையை,.

116. நிரை ‡நிமில் வேட்டுவர் கரை சேர் கம்பலை—நிரைத்த மீன்பட காலே வேட்டையாடுவார்வந்து கரையைச்சேரும் ஆரவாரம்,

117. இரு கழி செறுவின் வெள் உப்பு பகர்நரொடு—பெரியகழியிடத்த உப்புப்பாத்தியிலே வெள்ளிய உப்பைவிற்கும் §அளவரொலியோடே,

118 - 24. [ஒலியோவாக் கலியாணர், முதுவெள்ளிலை மீக்கூறும், வியன் மேவல் விழுச்செல்வத், திருவகையா ளிசைசான்ற, சிறுகுடிப் பெருந்தொழு வர், குடிகெழீஇய நானிலவகொடு. தொன்றுமொழிந்து தொழில் கேட்ப :]

சிறு குடி பெரு தொழுவர் ஒலி ஓவா கலி யாணர் முதுவெண் ணிலை—சிறிய குடிகளாய்ப் பெரியதொழில்களைச் செய்வாருடைய ஆரவாரமும் ஒழியாத பெருக்கினையுடைத்தாகிய புதுவருவாயினையுடைய முதுவெள்ளிலையென்னு மூர்,

இது குறுநிலமன்னரிருப்பு

பகர்நரொலியோடே (117) செல்லினையை (110) முதலியவொலி என்றும் (111) ஓவாத முதுவெள்ளிலையென்க,

1 மீ கூறும் இரு வகையான் வியல் மேவல் விழு செல்வத்து இசை சான்ற குடி கெழீஇய நானிலவகொடு—உலகத்துத்தொழில்களில் மேலாகச்சொல்லும் உழவு வாணிகமென்கின்ற இரண்டுகூற்றுலே அகலம்பொருந்துதலையுடைய சிரியசெல்வத்தாலே புகழ்நிறைந்த குடிமக்கள் பொருந்தின நான்குநிலத்து வாழ்வாருடனே,

தொன்று மொழிந்து தொழில் கேட்ப—பழமைகூறின்று எவ்வகைக்கேட் கும்படியாக,

125 - 7. கால் என்ன கடிது ஓராஅய் காடு கெட எரி பரப்பி ஆலங்கா னத்து அஞ்சுவர இறுத்து—காற்றென்னும்படி விடிதாகப்பரந்துசென்று பகை

---

* "நிலவுக்குவித்தன்ன வெண்மணல்" (குறுந். 123); "நிலாவினிலவ்வு மணல்" (அகநா. 200.)

† பி - ம். தாளையுடைய.

‡ "பண்மீன் வேட்டத் தென்னையர் நிமிலே", "கொடுந்திமிற்பரதவர்" (குறுந். 123, 304.) "நிமில்வாழ்நர்" (சிலப். 7 : 11.)

§ அளவர் - செய்தனிலமாக்களுள் ஒருவகையார்.

வர்நாடுகெடும்படி நெருப்பைப்பரப்பித் *தலையாலங்கானமென்கின்ற ஊரிலே பகைவர்க்கு அச்சந்தோன்றும்படி †விட்டு.

‡"எரிபரந்தெடுத்தல்" என்னுந் துறைகூறிற்று.

128 - 9. அரசு பட அமர் உழக்கி முரசுகொண்டு களம் வேட்ட—நெடு நிலமன்னரிருவரும் குறுநிலமன்னரைவரும் படும்படி போரிலேவென்று அவர் முரசைக் கைக்கொண்டு களவேள்விவேட்ட;

எழுவராவார்:—§சேரன், செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநனெனபார்

130. அடு திறல் உயர் புகழ் வேந்தே—||கொல்லுகின்ற வலியுயர்ந்த புகழையுடைய வேந்தனே.

நானிலவரோடே (123) முதுவெள்ளிலை (119) தொழில் கேட்பத் (124) திறலுயர்ந்த வேந்தேயென்க.

இது ¶தலையாலங்கானத்து வென்றமைகூறிற்று.

131. $நட்டவர் குடி உயர்க்குவை நின்னுடனே நட்புக்கொண்டவருடையகுடியை உயர்த்தலைச்செய்வை,

132. செற்றவர் அரசு பெயர்க்குவை நீசெறப்பட்டவர் அரசுரிமையை வாங்கிக்கோடலைச் செய்வை,

133 - 4. பெரு உலகத்து மேஎந்தோன்றி சீர் உடைய விழு சிறப்பின்—பெரிய நன்மக்களிடத்தே மேலாய்த்தோன்றுகையினாலே புகழையுடைய விழுமிய தலைமையினையும்,

---

* இவ்வூர் தலையாலங்காடென்று வழங்கும்; இது தேவாரம்பெற்ற ஒரு சிவதலம்; சோழநாட்டிலுள்ளது; இவ்வூரிற் பகைவரெழுவரையும் வென்றது பற்றியே தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனென்று இப்பாண்டியன் கூறப்படுவான்; சிலப்பதிகாரத்திற் கூறப்படுபவன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்.

† விட்டு - தங்கி; விடுதலெனபது பகைமேற்சென்றோர்தங்குவதற்கே பெரும்பாலும் வழங்கும்; (பு - வெ.)

‡ தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 8.

§ இந்நூல் 55, 56 - ஆம் அடிகளின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

|| "மறம்வீங்குபல்புகழ்" (பதிற். 12 - 8) என்பதும் அதனுரையும் ஈண்டு அறிதற்பாலன.

¶ நெடுஞ்செழியன் தலையாலங்கானத்துச் செருவென்றமை பின்னுள்ள செய்யுட்களாலும் விளங்கும். "காலிய னெடுந்தேர்க் கைவண் செழிய, னாலங்கானத் தமர்கடந் துயர்த்த, வேலினும் பல்லூழ் மின்னி", "தென்னர் கோமா, னெழுவுறழ் திணிதோ ளியறேர்ச செழிய, னேரா வெழுவ ரடிபபடக் கடந்த, வாலங் கானத் தார்ப்பினும் பெரிது" (அகநா. 175, 209.)

$ (பெரும்பாண். 423 - 4); "செற்றோரை வழிதபுத்தன, னட்டோரை யுயர்புகூறினன்" (புறநா. 239); "நட்டாரை யாக்கிப் பகைநணித்து" (சிறுபஞ்ச. 18.)

135. விளைந்து முதிர்ந்த விழு முத்தின்—சூல்முற்றி ஒளிமுதிர்ந்த சீரிய முத்தினையு

136. ளை இரு சேரி—விளங்குகின்ற சங்கினையுமுடைய பெரிய சங்குகுளிப்பாரிருப்பினையும்,

முத்தினையும் சங்கினையுமுடைய சேரியென்க.

137. கள் கொண்டி குடி பாக்கத்து—கள்ளாகிய உணவினையுடைத்தாகிய இழிந்த குடிகளையுடைய சீறூர்களையுமுடைய,

கொண்டி - கொள்ளப்படுதலின் உண்வாயிற்று; கொள்ளையுமென்ப.

138. நல் கொற்கையோர் நசை பொருந—நன்றாகிய கொற்கையெனனும் ஊரிலுள்ளோர் நச்சுதலைச்செய்யும் பொருநனே.

இதனாற் கொற்கைக்குரியோனென்றார்.

சிறப்பினையும் (134) சேரியினையும் (136) பாக்கத்தினையு (137) முடைய கொற்கை.

139 - 40. செற்ற தெவ்வர் கலங்க தலை சென்று *அஞ்சு வர தட்கும் அணங்கு உடை துப்பின்—தாங்கள்செறப்பட்ட பகைவர்மனங்கலங்கும்படி அவர்களிடத்தேசென்று அவர்க்கு அச்சந்தோன்றத்தங்கும் வருத்தத்தையுடைத்தாகிய வலியினையும்.

141. கொழு ஊன்குறை கொழு வல்சி—கொழுத்த †இறைச்சியையுடைய கொழுத்திருக்கின்ற சோற்றினையும்,

இதனைக் கூடவிட்டு ஆக்குதலிற் கொழுவல்சியென்றார். கொழுவல்சி—கொழுவினாலாகிய வல்சியென்றுமாம்; இஃது ஆகுபெயர்.

142. புலவு வில்—எய்த அம்புதன்னை மீண்டும் தொடுத்தலிற் புலாலாற்றத்தையுடைய வில்லினையும்,

பொலி கூவை—பொலிந்த ‡கூவைக்கிழங்கினையும்,

கூவை - திரளுமாம்.

143. §ஒன்றுமொழி—வஞ்சினங்கூறுதலையும்,

ஒலி இருப்பின்—ஆரவாரத்தையுடைய குடியிருப்பினையுமுடைய,

144. தென்பரதவர் போர் ஏறே—தென்றிசைக்கண்வாழும் பரதவர்க்குப் போர்த்தொழிலைச்செய்யும் ஏறாயவனே,

இதனாற் பரதவரைத் தனக்குப் படையாக அடிப்படுத்தினமை கூறினார்.

---

* அஞ்சு - அஞ்சுதல்; (மதுரை. 28)

† "ஊன்சோற்றமலை", "பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் ஏமலை" (புறநா. 33, 177), "ஊன்களோடவைபதஞ்செய்ய" (கந்த. நகர்புகு. 29.)

‡ மலைபடு. 137; புறநா. 29.

§ "ஒன்றுமொழிக்கோசர்" (குறுந். 73.)

துப்பு (140) முதலியவற்றையுடைய பரதவரென்க

பரதவர் - தென்றிசைக்கட்குறுநிலமன்னர். அது * "தென்பரதவர் மிடல் சாய, வடவடுகர் வாளோட்டிய" என்னும் புறப்பாட்டானுமுணர்க.

145. அரிய எல்லாம் எளிதினின் கொண்டு—பிறர்க்கு அரிய நுகர்பொருள்களெல்லாம் எளிதாக நின்னூரிடத்தேயிருந்து †மனத்தாற்கைக்கொண்டு,

146. உரிய எல்லாம் ஓம்பாது வீசி—அப்பொருளையெல்லாம் நினக்கெனறு பாதுகாவாது ஊரிடத்தேயிருந்து பிறர்க்குக்கொடுத்து,

என்றது:—‡ "கொள்ளார் தேஎங் குறித்த கொற்றம்" கூறிற்று.

147. நனி புகன்று உறைதும் என்னாது ஏற்று எழுந்து—மிகவிரும்பி ஊரின்கண்ணேயிருந்து உறையக்கடவேமென்றுகருதாதே பகைவர்மேற்செல்லுதலை §ஏறட்டுக்கொண்டு போக்கிலே ஒருப்பட்டு,

இது ||வஞ்சிகூறிற்று.

148. பனி வார் சிமையம் கானம் போகி—பனியொழுகுகின்ற மலையிடத்தனவாகிய காடுகளைக்கடந்து,

சிமையம் - ஆகுபெயர்.

149. அகம் நாடு புக்கு—அவர்களுணணாடுகளிலே புகுந்து,

இதனால் ¶"தொல்லெயிற்கிவர்தல்" கூறினார்.

அவர் அருப்பம் வெளவி—அப்பகைவரரண்களைக் கைக்கொண்டு அதனாலுமமையாமல்,

இது $குடுமிகொண்ட மண்ணுமங்கலங் கூறிற்று. இதனால் அரசரரண்களை அழித்தமை கூறினார்.

150. [யாண்டுபல கழிய வேண்டுபுலத் திறுத்து:] வேண்டு புலத்து பலயாண்டு கழிய இறுத்து—நீஅழித்தநாடுகளிற் கொள்ளவேண்டும் நிலங்களிலே பலயாண்டுகளும் போம்படி தங்கி,

151. மேம்பட மரீஇய வெல் போர் குரிசில்—அந்நிலங்கள் பண்டையின் மேலாதற்கு அடிப்படவிருந்த வெல்லும்போரினையுடைய தலைவனே,

இது பகைவர்நாட்டைத் தன்னாடாக்கினமைகூறிற்று.

---

* புறநானூறு, 378.

† "ஒன்னா, ராரெயி லவர்கட் டாகவு நுமதெனப், பாண்கட னிறுக்கும் வள்ளியோய்" (புறநா. 203.)

‡ தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 12.

§ ஏறட்டுக்கொள்ளல் - மேற்கொள்ளல்.

|| வஞ்சி - மண்ணசையாற் பகைமேற்சேறல்.

¶ தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 12.

$,, ,, ,, 13.

152. உறு செறுநர் புலம் புக்கு—தொன்றுதொட்டுவந்த பகைவர்நிலத் தே விட்டு.

152 - 3. அவர் *கடி காவின் நிலை தொலைச்சி—அவர் காவலிலுடைய பொழில்களின் நிற்கின்ற நிலைகளைக் கெடுத்து,

என்றது வெட்டியென்றவாறு.

154 - 5. இழிபு அறியா பெரு தண் பணை குரூஉ கொடிய எரி மேய— வளப்பங்குன்றுதலே ஒருகாலத்துமறியாத பெரிய மருதநிலங்களை நிறத்தை யுடைய ஒழுங்கினையுடைய நெருப்புண்ண,

156. காடு எனும் பேர் காடு ஆக—காடென்னும்பெயர்போய்க் காடென் னும் பெயரைப்பெற,

157. ஆ சேர்ந்த வழி மா சேப்ப—பசுத்திரள் தங்கின இடமெல்லாம் புலி முதலியனதங்க,

158. ஊர் இருந்த வழி பாழ் ஆக—ஊராயிருந்த இடங்களெல்லாம் பாழாய்க்கிடக்க,

ஊராயிருந்த இடமென்றுமாம்.

159 - 160. இலங்கு வளை மடம் மங்கையர் துணங்கை அம் சீர் தழூஉ மறப்ப—விளங்குகின்ற வளையினையும் மடப்பத்தினையுமுடையமகளிர் துண கைக்கூத்தினையும், அழகினையுடைய தாளதாளினையுடைய †குரவைக்கூத் தினையுமறப்ப,

தழூஉ, ஆகுபெயர்.

161 - 3. அவை இருந்த பெரு ‡பொதியில் §கவை அடி கடு சோக்கத பேய் மகளிர் பெயர்பு ஆட — ‖சான்றோரிருந்த பெரிய அம்பலங்களிலே இரட் டையான அடிகளையும் கடியபார்வைகளையுமுடைய பேயாயமகளிர் உலாவி யாட,

164. அணங்கு வழங்கும் அகல் ஆங்கண்—இல்லுறைதெய்வங்கள் உள வும் அகன்ற ஊரிடத்து,

---

* "காவுதொறும், கடிமரக் கடியு மோசை", "கடிமரந்தடிதலோம்பு" (புறநா. 36, 57.)

† குரவை - மகளிர் ஒருவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கையினைக்கோத்தாடுங்கூத்து, (சிலப 3: 12 - உரை.)

‡ திருமுருகாற்றுப்படை, 226.

§ (சிறுபாண். 197) "கவையடி பெயர்த்துத், தண்டாக் களிப்பி னாடு கூத்து" (மணி. 6: 125 - 6.)

‖ சான்றோர் - குடிப்பிறப்புமுதலிய எண்குணங்களையமைந்தோர்; "எட்டி வகை நூலிய அவையத் தானும்" (தொல். புறத்திணை. சூ 21) எனப தனுரையாலும், "குடிப்பிறப்புக்கல்வி" (பு - வெ. வாகை. 19 - மேற்) எனப தனாலும் அறியலாகும்.

165. நிலத்து ஆற்றும் குழூஉ புதவின்—நிலத்திலுள்ளாரையெல்லாம் போக்கும் வாசல்காப்பாரையுடைய வாசலின்கண்ணேயிருந்து,

குழூஉ. ஆகுபெயர். இனிக் *குடுமிதேய்ந்துபோதலின் மண்ணைக் கொழி ததுவருமென்பாருமுளர்.

166. அரந்தை பெண்டிர் இனைந்தனர் அகவ—மனக்கவற்சியையுடைய பெண்டிர் வருந்திக் கூப்பிட,

167 - 8. கொழு பதிய குடி தேம்பி செழு தேளிர் நிழல் சேர—வளவிய ஊர்களிடத்தனவாகிய குடிகளெல்லாம் பசியாலுலர்ந்து புறநாட்டிலிருக்கும் வளவியு சுற்றத்தார் தமக்குப் பாதுகாவலாகச் சென்றுசேர,

169 - 70. நெடு நகர் வீழ்ந்த கரி குதிர் பள்ளி †குடுமி கூகை குரா லொடு முரல—பெரியயானிகைகளிலே வெந்துவீழ்ந்த கரிந்த குதிரிடங்களிலே சூட்டினையுடைய கூகைச்சேவல் பேட்டுடனேயிருந்து கதற,

171 - 2. கழுநீர் பொலிந்த கண் அகல் பொய்கை ‡களிறு மாய் செருந்தி யொடு §கண்பு அமன்று ஊர்தர—செங்கழுநீர்மிக்க இடமகன்ற பொய்கைகளிட த்தே யானைநின்றால்மறையும் வாட்கோரையுடனே சண்பங்கோரையும் நெருங் கிவளர,

செருந்தி - நெட்டிக்கோரையுமாம.

173 - 4. நல் ஏர் நடந்த நசை சால் விளை வயல் பல் மயிர் பிணவொடு கேழல் உகள—நன்றாகிய எருதுகளுழுத நச்சுதலமைந்த விளைகின்ற வயலிட த்தே பலமயிரினையுடைய பெண்பன்றியுடனே ஆண்பன்றி ஓடித்திரிய,

பிணவென்னும் அகரவீற்றுச்சொல் வகரவுடம்படுமெய்பெற்றது; ||"பன்றி புல்வாய் நாயென மூன்று, மொன்றிய வென்ப பிணவென் பெயர்க்கொடை" என்றார்.

175. [வாழா மையின் வழிதவக் கெட்டு:] தவ வழி வாழாமையின கெட்டு—மிக ¶நின் ஏவல்செய்து வாழாமையினாலே கெட்டு,

இனித் தவக்கெட்டெனக்கூட்டி மிககெட்டென்றலுமாம்.

176. பாழ் ஆயின—பாழாய்விட்டன,

நின் பகைவர் தேஎம்—நின்னொடு பகைத்தலைச்செய்தவருடைய நாடுகள்,

---

* குடுமி - கதவைத்தாங்கிநிற்பதாயுள்ள ஒருறுப்பு; "திருகுங் குடுமி விடி வுந் தேயுங் கபாடம்" (கலிங்க. கடைதிறப்பு, 49.)

† "துய்த்தலைக் கூகை, கவலை கவற்றுங் குராலம் பறந்தலை" (பதிற். 44.)

‡ மதுரை. 247.

§ கண்பு: (பேரும்பாண். 220; மலைபடு. 454); "கண்பகத்தின் வார மே" (திருத்தோணிபுரம், திருஞான. தே.)

|| தொல்காப்பியம், மரபியல், சூ. 58.

¶ "தொன்று மொழிந்து தொழில்கேட்ப" (மதுரை. 72) என்பது இங்கே ஒத்தற்பாலது.

177 - 9. [எழாஅத்தோ ளிமிழ்முழக்கின், மாஅத்தா னுவர்மருப்பிற், கடுஞ்சினத்த களிறுபரப்பி:]

இமிழ் முழக்கின் மா தான் உயர் மருப்பின் *கடு னெத்த களிறு பரப்பி—முழங்குகின்ற ஓசையையும் பெருமையையுடைய சால்வினையும் நிலைகோள்ளை கொம்புகளையுமுடைய வடியினத்தவாகிய யானைகளை எங்கும்பரப்பி,

180. [விரிகடல் வியன்ருணையொடு:] †எழா தோள் (177) விரி கடல் வியல் தாணையொடு—முதுகிட்டார்மேற் செல்லாத தோளினையுடைய விரிகின்ற ‡கடல்போலும் அகற்சியையுடைய படையோடே,

181. முருகு உறழ பகை தலை சென்று—முருகன் பகைவர்மேற் செல்லுமாறுபோலத் தடையறப் பகைவரிடத்தே சென்று,

முருகு - தெய்வத்தன்மை; ஆகுபெயராய்நின்றது.

182. அகல் விசும்பின் ஆர்ப்பு இமிழ—அகன்ற ஆகாயத்திற்கண்ணே படையெழுந்த ஆரவாரமொலிப்ப,

விசும்பெனவே ஆகுபெயராய்த் தேவருலகையுணர்த்திற்று.

183. பெயல் உறழ கணை தெறி—§மழையோடே மாறுபடும்படி அம்பு னெய்தலி,

184. பல புரவி நீறு உகைப்ப—‖பலகுதிரைத்திரள் ஓடுகின்ற விசையால் தன்னே லெழுப்ப,

185. வளை ஏல—சங்கமுழங்க,

வயிர் ஆர்ப்ப—கொம்பு ஒலிப்ப,

186. பீடு அழிய கடந்து அட்டு—பெருமைகெடும்படி வென்று கொன்று.

186 - 7. அவர் நாடு அழிய எயில் வளவி—அவருடைய நாடுனெழியும் படியாக அவரிருக்கின்ற மதிலேக்கொண்டு,

188. சுற்றமொடு தா அறுத்தலின்—அவர்களுக்கு உதவிசெய்யும் சுற்றத் தாரோடேகூட அவர்வன்வலியைப் போக்குதலாலே,

189. செற்ற தெவ்வர் தின்வழி சுடப்ப—நின்னுற் றிதுசெறப்பட்ட பகைவர் நின் வெல்கேட்டு சுடக்கையினுலே,

---

* "கடுவ்ணை கொல்களிறு", "கடுஞ்சினத்த கொல்களிறு" (புறநா. 14, 55.)

† "எழாஅத் தோணத்தோள்" (பதிற். 90 - 27) என்பதும் அதனுரையும் இதனேடு ஒப்பிடத்தக்கன.

‡ "தெவ்வர்தேஎத்துக், கடற்படைதுளிப்பமண்டி" (புறநா. 6.)

§ "ஓடுகள ருடன்றவன் ருணை வில்லினை, விடுக்கணை யொப்பிற் கற முறை தெறுஉ" (பரி. 22: 5 - 6); சிலத. 451 - ஆம் செய்யுளும் இதனுடன் ஒப்புநோக்கற்பாலது.

‖ "மலைவெற்ற மலிருருத்தல்" (மதுரை. 49.)

190. வியல் கண் முது பொழில் மண்டிலம் முற்றி—அகலத்தை இடத்தேயுடைய பழைய நாவலந்தீவின் கணுளவாகிய சோழமண்டலம் தொண்டை மண்டல மென்கின்றமண்டலங்களை நினவாக வளைத்துக்கொண்டு.

மண்டலம் மண்டிலமென மருவிற்று.

191. அரசு இயல் பிழையாது — நூல்களிற்கூறிய அரசிலக்கணத்தில் தப்பாமல்,

191 - 2. [அறநெறி காட்டிப், பெரியோர் சென்ற வடிவழிப் பிழையாது:] பெரியோர் சென்ற அடி வழி பிழையாது அறநெறி காட்டி—நின்குலத்திற் *பெரியோர்நடந்த அடிப்பாட்டின்வழியைத் தப்பாமல் அறநெறியிருக்கும்படி இதுவென்று அவர்களுக்கு விளக்கி,

நனிபுகன்றுறைதுமென்னாது எற்றெழுந்து (147) களிறுபரப்பித் (179) தானையோடே (180) தலைச்சென்று (181) அரசமண்டிலமுற்றிச் (190) செற்ற தெவ்வர் நின்வழிநடக்கையினாலே (189) நீ நட்டவர்குடியையுயர்க்குவை (131) யாகையினாலே அவர்களுக்கு அறநெறிகாட்டிப் (191) பின்னர் அம்மண்டலங்களைச் சூழவிருந்த குறுநிலமன்னர் அரண்களிலுள்ளனவற்றை எளிதிற்கொண்டு (145) வீசிப் (146) போகிப் (148) புக்கு அவரகுப்பங்களைவெளவிப் (149) பின்னர் உறுசெறுநர் (152) நின்வழிவாழாமையினாலே (175) அவர்புலம் புக்கு (152) நீநரையுருமேறனையை (63) யாகையினாலே அரசியல் பிழையாமல் (191) ஆர்ப்பிமிழ (182) நீறுகைப்ப (184) நரல ஆர்ப்பக் (185) கணைசிதறித் (183) தொலைச்சி (153) அவரைக்கடந்து அட்டு (186) அவரெயிலைவெளவி (187) அவரைத் தூவறுத்தலின் (188) அப்பகைவர்தேஎம் (176) எரிமேயக் (155) காடாக (156) மா சேப்பப் (157) பாழாக (158) மறப்ப (161) ஆட (163) அகவச் (166) சேர (168) முரல (170) ஊர்தர (172) உகளக் (174) கெட்டுப் (175) பாழாயின (176); அங்ஙனம் பாழாயினபின்பு நீ செற்றவரரசு பெயர்க்குவை (132) யாகையினாலே வேண்டுபுலத்திறுத்து (150) அந்நாடுகள் மேம்படுதற்குமருவின குருசில் (151) என வினைமுடிக்க.

193 - 4. [குடமுதற் றோன்றிய தொன்றுதொழு பிறையின், வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றம்:] குடமுதல் தோன்றிய தொன்று தொழு பிறையின் நின் வலம் படு கொற்றம் வழிவழி சிறக்க—மேற்றிசைக்கட்டோன்றிய நின்குலத்திற்குப் பழை தாகிய எல்லாரும் தொழும்பிறை நாடோறுஞ்சிறக்குமாபோல நின்னுடைய வெற்றியாலே நின்பின்னுள்ளோர்க்குண்டாங்கொற்றம் அவர்கள் வழிவழியாக மிகுவதாக;

195 - 6. [குணமுதற் றோன்றிய வாரிருண் மதியிற், றேய்வன கெடுக நின் றெவ்வ ராக்கம்:] குணமுதல் தோன்றிய ஆர் இருள் மதியின் நின் தெவ்வர் ஆக்கம் தேய்வன கெடுக—கீழ்த்திசைக்கட்டோன்றிய நிறைந்த †இருளைத்தரு

* "முன்றிணை முதல்வர்போலநின்று" (பதிற். 85), "தொல்லோர் சென்ற நெறிய போலவும்" (புறநா. 58.)

† "குறைமதிக் கதிரென மாய்க வென்றவம்" (கந்த. மார்க்கண்டேய. 59.)

மதி நாடோறும் தேயுமாறுபோல நின்பகைவருடையஆக்கம் நாடோறும் தேய்வனவாய்க் கெடுவனவாக;

197 - 8. உயர் நிலை உலகம் அமிழ்தொடு பெறினும் பொய் சேண் நீங்கிய வாய் நட்பினையே—*ஒருபொய்யாலே உயர்ந்தநிலைமையையுடைய தேவருலகை அவர்நுகரும் அமுதத்தோடே பெறுவையாயினும் அவற்றைத்தருகின்றபொய் நின்னைக்கைவிட்டுநீங்க மெய்யுடனே நட்புச்செய்தலையுடையை;

இனி, 'பொய்சே ணீங்கிய வாய்நடப் பினையே' என்று பாடமாயின், மெய்யை நடத்தலைச் செய்தனையென்ச.

199 - 201. முழங்கு கடல் எணி மலர் தலை உலகமொடு உயர்ந்த தேஎத்து விழுமியோர் வரினும் பகைவர்க்கு அஞ்சி பணிந்து ஒழுகலையே—முழங்குகடலாகிய எல்லையையுடைய அகன்றஇடத்தையுடைய உலகத்துள்ளாருடனே உயர்ந்த தேவருலகத்துத்தேவரும் பகைவராய்வரினும் †பகைவர்க்கு அஞ்சித் தாழ்ந்து ஒழுகலைச்செய்யாய்;

202 - 4. தென்புலம் மருங்கின் விண்டு நிறைய வாணன் வைத்த விழு நிதி பெறினும் பழி நமக்கு எழுக என்னாய்—தென்றிசைநிலத்தின் மலைகளெல்லாம் நிறையும்படி வாணனென்னுஞ்சூரன்வைத்த ‡சீரிய பொருட்டிரள்களினைப் பெறுவையாயினும் பிறர்கூறும்பழி நமக்கு வருவதாகவென்று கருதாய்;

204 - 5. §விழு நிதி ஈதல் உள்ளமொடு இசை வேட்குவையே—சீரிதாகியபொருளைக் கொடுத்தலையுடைத்தாகிய நெஞ்சடனே புகழை விரும்புவை;

206. அன்னாய்—அத்தன்மையையுடையாய்.

[நின்னொடு முன்னிலை யெவனோ] முன்னிலை நின்னொடு எவனோ—ஐம்பொறிகளுக்கும் நுகரப்படுவனவாய் முன்னிற்கப்படுவனவாகிய இந்நாள் பொருள்கட்கு நின்னோடு என்ன உறவுண்டு;

நின்னென்றது சீவான்மாவை. முன்னிலை ஆகுபெயர்.

207 - 8. [கொனனொன்று கிளக்குவ லடுபோ ரண்ணல், கேட்டிசின் வாழி கெடுகநின் னவலம்:]

நின் அவலம் கெடுக—நினனிடத்துண்டாகியமாயை இனிக்கெடுவதாக;

அடு போர் அண்ணல் அம்மாயையைக்கொல்கின்ற போர்த்தொழில்வல்ல தலைவனே,

கொன் ஒன்று கிளக்குவல் -பெரிதாயிருப்பதொருபொருளை யான் கூறுவன்; அஃது என்னாற்காட்டுதற்கரிது;

---

* நாலடி. பொறையுடைமை, 10.

† "வலியரென வழிமொழியலன்" (புறநா. 239.)

‡ "புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி, னுலகுடன் பெறினுங் கொள்ளலர்" (புறநா 182); "வங்கம்போழ் முந்நீர் வளம்பெறினும் வேருமோ, சங்கம்போல் வான்மையார் சால்பு" (பு - வெ. வாகை. 31.)

§ திருக்குறள், 231.

என்றது *கந்தழியினை.

கேட்டிசின்—அதனைத் †தொல்லாணை நல்லாசிரியரிடத்தே கேட்பாயாக;

வாழியென்பதனைச் சுற்றமொடுவிளங்கி (770) என்பதன்பின்னே கூட்டுக.

209. [கெடாது நிலைஇயர்நின் ‡சேண்விளங்கு நல்லிசை·] சேண் விளங்கு நின் நல் இசை கெடாது நிலைஇயர்—சேட்புலமெல்லாம் சென்றுவிளங்கும் நின்னுடைய நல்லபுகழ் ஒருகாலமும் கெடாதே நிலைபெறுவதாக;

210 - 216. [தவாப்பெருக்கத் தறாயாண, ரழித்தானாக் கொழுந்திற்றி, யிழித்தானாப் பலசொன்றி, யுண்டானாக் கூர்நறவிற், றின்றானா வினவைக, னில னெடுக் கல்லா வொண்பல் வெறுக்கைப், பயனற வறியா வளங்கெழு திருநகர்:]

தவா பெருக்கத்து §அறா யாணர் வளம் கெழு திருநகர்—கெடாத பெருக்கத்தினையுடைய நீங்காத புதுவருவாயாலே செல்வம்பொருந்தின திருமகளையுடைய நகர்,

அழித்து ஆனா கொழு திற்றி தின்று அழிக்கப்பட்டு விருப்பு அமையாத கொழுவிய தசையைத்தின்று,

"ஆடழிக்க" என்ப.

ஆனா பல சொன்றி இழித்து ஆனா கூர் நறவின் உண்டு - விருப்பமையாத பலவகைப்பட்ட சோற்றைத் தீதென்றுகூறிக் களிப்பமையாத மிக்க கள்ளை உண்டு.

ஆனா இனம் பாணர் (219)—அவ்விரண்டிலும் விருப்பமையாத திரட்சியையுடைய பாணரென்க.

தின்று உண்டு ஆனா இனப் பாணரென்க.

வைகல்—நாடோறும்.

நிலன் எடுக்கல்லா ஒள் பல் வெறுக்கை—நிலஞ்சுமக்கமாட்டாத ஒள்ளிய பலவாகிய பொருட்டிரள்களையும்.

என்றது பூண்களையும் பொன்னையும்.

பயன் அறவு அறியா நகர் - எக்காலமும் பயன்கெடுதலறியாத நகர்,

217 - 8. நரம்பின் முரலும் நயம் வரும் முரற்சி விறலியர் வறு கை குறு தொடி செறிப்ப — யாழ்வாசித்தாற்போலப் பாடும் நயப்பாடுதோன்றும் ||பாட்டினையுடைய விறல்பட ஆடுதலையுடையார் தம்முடைய பூணணியாத கைகளிலே குறிய தொடிகளையிட,

¶"நரம்பொடு வீணை நாவி னவின்றதோ வென்று நைந்தார்" என்றார் பிறரும்

---

* இப்புத்தகம் 56 - ம் பக்கம்பார்க்க.

† மதுரை. 761; பட். 170.

‡ "சேணார் நல்லிசைச் சேயிழை கணவ" (பதிற். 88); "விண்பொரு புகழ்" (புறநா. 11), "வானேற நீண்ட புகழான்" (சீவக. 6.)

§ பொருந. 1.

|| "பாடனல் விறலியர்" (பரி. 17: 15.)

¶ சீவகசிந்தாமணி, 658.

219. பாணர் உவப்ப களிறு பல தரீஇ—பாணர்மகிழும்படி யானைகள் பலவற்றையுங்கொடுத்து,

நகரிலே யிருந்து (216) நாடோறும் (214) விரலியர் தொடிசெறியாநிற்பப் (218) பாணருவப்ப (219) வெறுக்கையையும் (215) யானையையுங் கொடுத்தென்க.

தரீஇ' என்றதனைச் *"செலவினும் வரவினும்" என்னும் பொதுச்சூத்திரத்தாற்கொள்க.

220. கலந்தோர் உவப்ப எயில் பல கடைஇ—தம்முடன் நட்புக்கொண்டோர் மனமகிழும்படி அழித்த †அரண்களிற்கொண்ட பலபொருள்களையும் அவர்க்குச் செலுத்திக்கொடுத்து,

என்றது - அவர் ‡வேண்டாவென்றுமறுக்கவும் தாம் வலியப்போகவிட்டென்றவாறு.

221. மறம் கலங்க தலை சென்று—பகைவர்மறம் நிலைகுலையும்படி அவர்களிடத்தேசென்று,

222. வாள் உழந்து அதன் தாள் வாழ்த்தி—அவர்க்கு வாட்போரிலே வருந்தினபடியாலே அவ்வருத்தத்தினாற் பின்பும் அதன்கட்பிறக்கின்ற முயற்சியைவாழ்த்தி,

என்றது, வாட்போரின்கட்பெற்ற இனிமையைப் பின்னும்விரும்பி அதிலேமுயல்கின்றாரென வீரச்சிறப்புக்கூறிற்றாம்.

உழந்தென்னுஞ் செய்தெனெச்சம் காரணப்பொருட்டு. §"விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள், வைக்குந்தன் னாளை யெடுத்து." என்றாபிறரும்.

உழந்த தன்னெனப் பெயரெச்சமாயின், தன்னென்னுமொருமை மேல் வருகின்ற மன்னர் (234) என்னும் பன்மைக்காகாமையுணர்க.

223 - 4. நாள் ஈண்டிய நல் அகவர்க்கு ||தேரோடு மா சிதறி—விடியற்காலத்தே வந்துதிரண்ட அரசர்விரும்பப்பட்ட சூதர்க்குத் தேருடனே குதிரைகளையும் பலவாகக் கொடுத்து,

என்றது, ¶"தாவி னல்லிசை கருதிய கிடந்தோர்க்குச் - சூத ரேத்திய துயிலெடை நிலையும்" என்னும்விதியாற் சூதர் இருசுடர்தொடங்கி இன்றுகாறு

---

* தொல்காப்பியம், கிளவியாக்கம், சூ. 28.

† "அவ்வெயிற் கொண்ட செய்வுறு நன்கலம், பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கி" (புறநா. 6.)

‡ "கொள்ளே னென்ற லதனி னுயர்ந்தன்று" (புறநா. 204.)

§ திருக்குறள், 776.

|| "தேர்வீ சிருக்கை நெடியோன்" (புறநா. 114), "மாசித நிருக்கை" (பதிற். 76.)

¶ தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 36.

வருகின்ற தம்குலத்துள்ளோர்புகழை அரசர் கேட்டற்குவிரும்புவரென்றுகருதி விடியற்காலத்தே பாசறைக்கண்வந்து துயிலெடைபாடுவரென்பது ஈண்டுக் கூறிற்றாம்.

அகவரென்றார், குலத்தோரெல்லாரையும் அழைத்துப் புகழ்வரென்பது பற்றி; ஆகுபெயர்; *"அகவல்" போல.

இனி வைகறைபாடும் பாணரென்பாருமுளர்.

வாழ்த்தித் திரண்டஅகவரென்க.

225 - 8. [சூடுற்ற சுடர்ப்பூவின், பாடுபுலர்ந்த நறுஞ்சாந்தின், விழுமிய பெரியோர் சுற்றமாகக், கள்ளி னிரும்பைக் கலஞ்செல வுண்டு:] கள்ளின் இரு பைக்கலம செல உண்டு சூடு உற்ற சுடர் பூவின் பாடு புலர்ந்த நறு சாந்தின் விழுமிய பெரியோர் சுற்றம் ஆக — கள்ளினையுடைத்தாகிய பெருமையினை யுடைய குப்பிகள் வற்றும்படியாகக் †கள்ளினையுண்டு சூடுதலுற்ற விளக்கத்தை யுடைத்தாகிய ‡வஞ்சியினையும் பூசினபடியே புலர்ந்த நறிய சந்தனத்தினையு முடைய சீரியபடைத்தலைவரைத் தமக்குச் சுற்றத்தாராகக்கொண்டு,

உண்டென்னுஞ் செய்தெனெசசம உடையவென்னும் வினைக்குறிப்போடு முடிந்தது.

229. பணிந்தோர் தேஎம் தம் வழி நடப்ப தம்மைவழிபட்டோருடைய தேசங்கள் தம் ஏவலைக்கேட்டு நடக்கையினாலே,

230. பணியார் தேஎம் பணித்து திறை கொண்மார்—தம்மை வழிபடா தோருடைய தேசங்களைத் தம்மேவல் கேட்கும்படிபண்ணி அவர்களைத் திறை வாங்குதற்கு,

231. பருந்து பறக்கல்லா பார்வல் பாசறை—உயரப்பறக்கும் பருந்து களும் பறத்தலாற்றாத உயர்ச்சியையுடைய அரண்களையுடைய பாசறைக் கண்ணே,

§பார்வல், ஆகுபெயர்.

232. படு கண் முரசம் காலை இயம்ப—ஒலிக்கின்ற கண்ணையுடைய பள்ளியெழுச்சிமுரசம் நாட்காலத்தே ஒலிப்பவிருந்து,

233. வெடி பட கடந்து— பகைவர்படைக்குக் கேடுண்டாக வென்று,

வெடி - ஓசையுமாம்.

||வேண்டு புலத்து இறுத்த—பின்னும் அழிக்கவேண்டுமென்ற நிலங் களிலே சென்றுவிட்ட,

---

* தொல்காப்பியம், செய்யுளியல், சூ. 81.

† கள்ளுணல் இங்கே வீரபானம்; (சீவக. 1874.)

‡ வஞ்சி - வஞ்சிப்பூ - அல்லது வஞ்சிமாலை; இது பகைமேற்செல்வோர் அணிதற்கு உரியது.

§ பார்வல் - அரசர், தம்பகைவர் செய்மைக்கண்வருதலைப் பார்த்திருத்தற் குரிய உயர்ச்சியையுடைய அரண்.

|| "யாண்டு தலைப்பெயர வேண்டு புலத்திறுத்து" (பதிற்றுப்பத்து, 15.)

234. பனை கெழு பெரு திறல் பல் வேல் மன்னர் — வெற்றிமுரசு பொருந்தின பெரியவலியினையும் பலவேற்படையினையுமுடைய அரசர்கள்,

235 - 6. [கரைபொரு திரங்கு கனையிரு முந்நீர்த், திரையிடு மணலிலும் பலரே:] கனை இரு முந்நீர் கரை பொருது இரங்கும் திரை இடு மணலிலும் பலரே—செறிதலையுடைய கரிய கடலிற் கரையைப் பொருது ஒலிக்கும் திரைகுவிக்கின்ற மணலிலும் பலரே.

எகாரம், பிரிநிலை.

236 - 7. உரை செல மலர் தலை உலகம் ஆண்டு கழிந்தோரே—புகழ் எங்கும்பரக்கும்படி அகன்ற இடத்தையுடைய உலகங்களைத் தமது ஏவல்களை நடத்தி மக்கட்குரிய மனவுணர்வின்மையிற் பிறப்பறமுயலாது பயனின்றி மாண்டோர்,

எகாரம், ஈற்றசை. *"மக்க டாமே யாறறி வுயிரே" என்றதனால், மனவுணர்வின்மையினென்றும்.

தீஇத் (219) கடைஇச் (220) சிதறிப் (221) பணிந்தோர்தேஎம் தம்வழி நடக்கையினாலே (229) பணியார்தேஎம் பணித்துத் நிறைகொள்ளுதற்குப் (230) பெரியோர் சுற்றமாகக்கொண்டு (227) பாசறையிலே (231) முரசியம்ப இருந்து (232) நடந்து இறுத்த (233) மன்னர் (234) உலகமாண்டுகழிந்தோர் (237) திரையிடுமணலினும்பலர் (236) எனமுடிக்க.

இது †"மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமை" அன்றிப் பிறவியறுமுயலாமையிற் கழிந்தமைகூறிற்று.

238. அதனால்—பயனின்மையாலே,

238 - 44. [குணகடல் கொண்டு குடகடன் முற்றி, பிரவு மெல்லையும் விளிவிட னறியா, தவலு மிசையு நீர்த்திரள் பீண்டிக், கவலையங் குழும்பி னருவி யொலிப்பக். கழைவளர் சாரற் களிற்றின நடுங்க, வரைமுத லிரங்கு மேலெழு வான்னெமிர்ந்து, சிதரற் பெரும்பெயல் சிறந்தலின்:]

வான் குணகடல் கொண்டு ‡குடகடல் வரைமுதல் முற்றி—மேகம் கீழ்த் திசைக் கடலிடத்தே நீரைமுகந்து மேற்றிசைக் கடலருகின் மலையிடத்தே தங்கி,

இரவும் எல்லையும் விளிவு இடன் அறியாது—இரவும்பகலும் ஒழிந்தஇடத்தை அறியாது.

அவலும் மிசையும் நீர் நிரம்பு ஈண்டி கவலை அம் குழும்பின் அருவி ஒலிப்ப—பள்ளமும் மேடுமாகிய பலநிலத்தண்டாகிய நீரிலுலே நிரண்டு சேர்ந்து கவலைக்கிழக்கு கல்லின அழகியகுழியிலேவீழ்ந்த அருவியொலிக்கும்படி,

---

* தொல்காப்பியம், மரபியல், சூ. 33.
† ,, புறத்திணையியல், சூ. 24.
‡ "மேன்மலைமுற்றி" (பரி. 12.)

கழை வளர் சாரல் களிறு இனம் எடுக்க இரங்கும் எறழ் ஞெமிர்ந்து—மூங்கில்வளர்ந்த மலைப்பக்கத்திலே யானைத்திரள் எடுக்கும்படி ஒலிக்கும் உரு மேற்றோடே பரந்து,

தொல் பெரு பெயல்—தொறுதலையுடைய பெருமழை,

நெத்தலின்—மிகுகையிலுலே,

வான் முற்றி ஞெமிர்ந்து அருவிபொலிக்கும்படி பெரும்பெயல் விளிவிடனறியாது நெத்தலினைனமுடிக்க.

244 - 6. [தாங்காது, குணகட்டற் கிவர்தரும் குரூஉப்புன லுள்நி, கிவர்து செவீத்தங் குளங்கொளச் சாற்றி.] தாங்காது உள்நி கிவர்து செல் நீத்தம் குளம் கொள சாற்றி குணகடற்கு இவர்தரும் குரூஉ புனல்—யாறுகள் தாங்காமல் யாற்றிடைக்குறையிலே ஒங்கிசெல்கின்றபெருக்கைக் குளங்கள்கொள்ளும்படி கிறைத்துக் கீழ்த்திசைக் கடலுக்குப் பாய்துசெல்லும் கிறத்தையுடைய சோலே.

217. களிறு மாய்க்கும் கதிர் கழனி—யானைகள் கின்ரல் அவற்றை மறைக்கும்படிவினைந்த கதிரையுடைய கழனியிலும்,

218. ஒளிறு இலஞ்சி—விளக்கும் மடுக்களிலும்,

218 - 9. அடை கிவர்த்த முன் தாள் சுடர் தாமரை—இலைக்குமேலான முன்னையுடைய தாள்களையுடையவாகிய ஒளியினையுடைய தாமரைப்பூவினையும்,

250. கள் கமழ் நறு செய்தல்—தேனுறும் நறிய செய்தற்பூவினையும்.

251. வள் இதழ் அவிழ் நீலம்—பெருமையையுடைய இதழ்விரிந்த நீலப்பூவினையும்.

252. மெல் இலை அரி ஆம்பலொடு—மெல்லிய இலையினையும் வண்டுகளையுமுடைய ஆம்பற்பூவோடே.

அரி - மென்மையுமாம்.

253. வண்டு இறை கொண்ட கமழ் பூ பொய்கை—வண்டுகள் தங்குதல் கொண்ட மணமாறும் பிறபூக்களையுமுடைய பொய்கைகளிலும்,

254 - 5. கம்புள் சேவல் இன் துயில் இரிய வள்ளை கீக்கி *வய மீன் முகந்து — †கம்புட்கோழி இனிய உறக்கங்கெடும்படி வள்ளைக்கொடிகளைத் தள்ளி வலியையுடையமீன்களை முகந்துகொண்டு,

256 ‡கொள்ளை சாற்றிய கொடு முடி வலைஞர்—விலைகூறிவிற்ற கொடிய முடிகளையுடைய வலையான்மீன்பிடிப்பார்,

கழனியிலும் (247) இலஞ்சியிலும் (248) பொய்கைகளிலும் (253) மீன் முகர்துசாற்றிய வலைஞரென்க.

---

* "வயவலியாகும்" (தொல். உரி. 68.)

† கம்புட்கோழி - சம்பங்கோழி.

‡ "பாதமாக்கள் ..... கொள்ளைசாற்றி" (அகநா. 30.)

257. வேழம் பழனத்து நாழிலாட்டு ஓதை (258)—*கொறுக்கைச்சியை யுடைய மருதநிலத்துமீனைக் கொன்றருவித்தலாற் பிறந்த ஓசை,

258. கரும்பின் எந்திரம் ஓதை—கரும்பிற்கு இட்ட ஆலையிடத்து ஓசை,

கப்பின் ஓதை—ஈரைபறிப்பிடத்தோசை,

259 - 260 அள்ளல் தங்கிய பகடு உறு விழுமம் கள் ஆர் களமர் பெயர்க்கும் ஆர்ப்பே—மூத்தவான் அள்ளலிலே வலியற்றுத்தங்கிய எருதுற்றவருத்தத்தைக் கள்ளையுண்ணுங்களமர் பெயர்க்குமாரவாரம்,

261 - 2. ஒலித்த பகன்றை வினைக்த கழனி வல் கை·வினைஞர் அரி பறை—தழைத்த பகன்றையினையுடைய செல்லுமுற்றியகழனியில் அச்செல்லை வலியகையினாலே அறுப்பாருடைய அரிக்தெழுகின்ற பறையோசை,

262 - 4. இன் குரல் தளி மழை பொழியும் தண் பாங்குன்றில் கலி கொள் கம்மை — இனியதுளையினையுடைய துளியினையுடைய மேகத்தக்குக் குளிர்ந்த திருப்பாங்குன்றில் விழாக்கொண்டாடுமாரவாரம்,

†"வயிரியர், முழவதிர்க் தன்ன முழக்கத் தேரோடு" என்றுர்பிறரும்.

264 - 6. ஒலி கொள் ஆயம் தழைத்த கோதை தாரொடு பொலிய புனர்க்து உடன் ஆடும் இளையே—புதிர்கிழமின் ஆரவாரத்தைத் தம்மிடத்தே கொண்ட ‡மகளிர்நிரள் தம்மிடத்து நெருங்கினகோதை தம்கணவர்மார்பின் மாலையுடனே அழகுபெறக் கூடி அவர்களுடனே சோடுமோசை,

266 - 7. அனைத்தும் அகல் இரு வானத்து இமிழ்த்து இனிது இசைப்ப—அவ்வோசைமுழுவதையும் தன்னையொழிந்தபூதங்கள் விரிதற்குக்காரணமாகிய பெருமையையுடைய ஆகாயத்தேசென்று முழங்கி ஆண்டுவாழ்வார்க்கு இனிதாக ஒலிப்ப,

268 - 9. குருகு உல மனை மரத்தான் மீன் வேம் பாண் சேரியொடு—குருகெல்லும்பறவைகள் கூப்பிடும்படி மனையிடத்து மரங்களோறும் மீனைத் திருத்தும் பாணர்குடியிருப்பிற் பாடலாடலால் எழுந்த ஓசையோடே,

270. மருதம் சான்ற—ஆடலாகிய உரிப்பொருளமைந்த,

தண்பணை சுற்றி—மருதநிலஞ் சூழப்பட்டு,

ஒருசார்—ஒருபக்கம்,

ஒருசார் (270) சேரியோசையோடே (269) ஓதை (258) ஆர்ப்பு (260) பறையோசை (262) கம்மை (264) இசையாகிய அவ்வோசைமுழுவதும் (266) இசைக்கும்படி (267) தண்பணை சுற்றப்பட்டு (270) என்க.

271. நெறி நினை கொய்ய—நெறியதினிலையைப்போக்க,

---

* கொறுக்கைச்சி - கொறுக்காத்தட்டை

† அகநானூறு, 328; "முழவுகார்கொள" (பெரிய. திருக்குறிப்பு. 10)

‡ "மகளிர் கோதை மைந்தர் புனையவு, மைந்தர் தண்டார் மகளிர் பெய்யவும்" (பரி. 20.)

கவலை கறுப்ப—எள்ளிளங்காய் முற்ற,

272. கரு கால் வரகின் இரு குரல் புலர—கரியதாளினையுடைய வரகினது கரிதாகியகதிர் முற்ற,

273. ஆழ்ந்த குழும்பில் திரு மணி கிளர—ஆழ்ந்தகுழியிலே திருவினையுடையமணிகிடந்துவிளங்க,

274 - 6. [எழுந்த கடற்றி னன்பொன் கொழிப்பப், பெருங்கவின் பெற்ற சிறுதலை நௌவி, மடக்கட் பிணையொடு மறுகுவன வுகள:] பெருகவின் பெற்ற சிறு தலை நௌவி எழுந்த கடற்றில் நல் பொன் கொழிப்ப மடம் கண் பிணையொடு மறுகுவன உகள—பெரிய அழகைப்பெற்ற சிறியதலையினையுடைய நௌவிமான் வகர்ந்தகாட்டில் மாற்றற்றபொன் மேலேயாம்படி மடப்பத்தையுடைத்தாகிய கண்ணினையுடைய பிணையோடே சுழல்வனவாய்த் துள்ள,

277 சுடர் பூ கொன்றை தாஅய நீழல்—ஒளியினையுடையவாகிய பூக்களையுடைய கொன்றைபரந்த நிழலிடத்தே,

278. பாஅயன்ன பாறை அணிந்து—பரப்பினாலொத்த பாறை அழகு பெற்று,

279 - 81. [நீலத் தன்ன பைம்பயிர் மிசைதொறும். வெள்ளி யன்ன வொள்வீ புதிர்ந்து, சுரிமுகிழ் முசுண்டையொடு முல்லை தாஅய்:] நீலத்து அன்ன பைம்பயிர் மிசைதொறும் சுரி முகிழ் முசுண்டையொடு முல்லை வெள்ளி அன்ன ஒள் வீ உதிர்ந்து தாய்—நீலமணியையொத்த பசியபயிர்களினிடங்கடோறும் முறுக்குண்ட அரும்புகளையுடைய முசுண்டையுடனே முல்லையினுடையவெள்ளியினிறத்தையொத்த ஒள்ளியபூக்கள் உதிர்ந்து பரந்து,

282 - 4. [மணிமரு ணெய்த லுறழக் காமர், துணிநீர் மெல்லவற் றொய்யிலொடு மலர, வல்லோன் றைஇய வெறிக்களங் கடுப்ப:] வல்லோன் தைஇய வெறி களம் கடுப்ப காமர் துணி நீர் மெல் அவல் மணி மருள் நெய்தல் தொய்யிலொடு உறழ மலர—இழைத்தல்வல்லவன் இழைத்த கூத்தினையுடைய களத்தையொப்ப விருப்பத்தையுடைய தெளிந்த நீரையுடைத்தாகிய நெகிழ்ந்த பள்ளத்திலே நீலமணியென்றுமருளும் நெய்தல் தொய்யிற்கொடியோடே மாறுபட மலர,

285. முல்லை சான்ற புறவு அணிந்து ஒருசார்—இருத்தலாகிய உரிப்பொருளமைந்த காடுசூழ்ந்து ஒருபக்கம்,

ஒருசார் (285) அணிந்து (278) தாஅய்க் (281) கொய்யக் கறுப்பப் (271) புலரக் (272) கிளர (273) உகள (276) மலரப் (283) புறவுசூழப்பட்டு (285) எனமுடிக்க.

*"பன்முறையானும்" என்பதனாற் பலவினையெச்சம் விராஅய் அடுக்கி அணிந்தென்னும்வினைகொண்டன.

---

* தொல்காப்பியம், வினையியல், சூ. 36.

286 - 7. நறு காழ் கொன்று கோட்டின் வித்திய குறு கதிர் தோரை—நறியஅகிலையும் சந்தனத்தையும்வெட்டி மேட்டுநிலத்தேவிதைத்த குறியகதிர்களையுடைய தோரைநெல்லும்,

287. நெடு கால் ஐயவி—நெடியதாளினையுடைய வெண்சிறுகடுகும்,

288. ஐவனம் வெள் நெல்லொடு அரில் கொள்பு நீடி—*ஐவனநெல்லென்னும் வெள்ளியநெல்லோடே பிணக்கங்கொண்டு வளரப்பட்டு,

289 - 90. இஞ்சி மஞ்சள் பைங்கறி பிறவும் பல் வேறு தாரமொடு கல் அகத்து ஈண்டி — இஞ்சியும் மஞ்சளும் பசுத்தமிளகுகொடியும் ஒழிந்த பல வாய் வேறுபட்டபண்டங்களும் கற்றரையிடத்தே குவியப்பட்டு,

291. †தினை விளை சாரல் கிளி கடி பூசல்—தினையும்விளையப்படுகின்ற மலைப்பக்கத்திற் படியும் கிளியைஓட்டும் ஆரவாரம்,

நீடி ஈண்டியென்னுஞ் செய்தெனெச்சங்கள் விளையுமென்னும் பிறவினை கொண்டன; ‡"அம்முக் கிளவி" என்னுஞ் சூத்திரவிதியால்.

292 - 3. மணி பூ அவரை §குரூஉ தளிர் மேயும் ஆமா கடியும் கானவா பூசல்—பன்மணிபோலும்பூவினையுடைய அவரையினது நிறவியதளிரைத் தினனும் ஆமாவையோட்டுங் கானவருடையஆரவாரம்,

294 - 5. சேணோன் அகழ்ந்த மடி வாய் பயம்பின் ||வீழ் முகம் கேழல் அட்ட பூசல்—மலைமிசையுறையுங்குறவன் சல்லப்பட்ட மூடினவாயையுடைய பொய்க்குழியிலேவிழும்பக்குவத்தினையுடைய ஆண்பன்றியைக் கொன்றதனாலுண்டான ஆரவாரம்,

சேணோன் அகழ்ந்த பயம்பு, இழிகுலத்தோனாகியவன் அகழ்ந்தபயம் பென்பாருமுளர்.

296 - 7. கரு கால் வேங்கை ¶இரு சினை பொங்கர் நறு பூ கொய்யும் கானவர் (293) பூசல்—கரியதாளினையுடைய வேங்கையிடத்துப் பெரிய கவடுகளிற் றோன்றிய சிறியகொம்புகளிற்பூத்த நறியபூவைப்பறிக்குமகளிர் புலிபுலியென்றுகூறுமாரவாரம்,

297 - 8. இரு கேழ் ஏறு அடு வய புலி பூசலொடு—கரியநிறத்தையுடைய பன்றியைக்கொல்லுகின்ற வலியினையுடைய புலியினது ஆரவாரத்தோடே,

ஏறு $ - ஆனேறுமாம்.

298. அனைத்தும்—முழுவதும்,

299 - 301. [இலங்குவெள் எருவியொடு சிலம்பகத் திரட்டக், **கருங்காற் குறிஞ்சி சான்ற வெற்பணிர். தருங்கடி மாமலை தழீஇ:]

---

* "வெண்ணெ லருந்திய வரிநுதல் யானை" (நற். 7.)
† பி - ம். தினைவளர். || பி - ம். விழுமுகக்.
‡ தொல்காப்பியம், வினையியல், சூ. 34. ¶ பி - ம். பெருஞ்சினைப்.
§ பி - ம். குரூஉத்திரள். $ பி - ம். ஆனையுமாம்.
** பி - ம். கருங்கோற்குறிஞ்சி.

*இலங்கு வெள் அருவியொடு கரு கால் வெற்பு அணிந்து—விளங்குகின்ற வெள்ளிய அருவிவீழ்கின்றவாற்றாலே கரிய நீரோடுங்கால்களையுடைய பக்கமலைகள்சூழ்ந்து,

சிலம்பு அகத்து இரட்ட—மலையிடத்தே மாறிமாறியொலிப்ப,

குறிஞ்சி சான்ற—புணர்ச்சியாகிய உரிப்பொருளமைந்த,

அரு கடி மா மலை தழீஇ—பெறுதற்கரிய சிறப்பினையுடைய பெரியமலை தழுவப்பட்டு,

301. ஒருசார்—ஒருபக்கம்.

ஒருசார் (301), அருவியாற் (299) கருங்காலையுடையவெற்பணிதலாலே (300) நீடி (288) ஈண்டி (290) விளையுஞ் சாரலிற் கிளிகடி பூசல் (291), கானவர்பூசல் (293), அட்டபூசல் (295), கொய்யும்பூசலாகிய (297) அனைத்துப்பூசலும் புலிப்பூசலோடே (298) சிலம்பகத்து இரட்டக் (299) குறிஞ்சிசான்ற (300) அருங்கடியினையுடைய மலைதழுவப்பட்டு (301) எனமுடிக்க.

302. [இருவெதிர்ப் பைந்தூறு கூரெரி நைப்ப:] இரு வெதிர் கூர் எரி பைந்தூறு †நைப்ப—பெரியமூங்கிலிற்பிறந்த மிக்கநெருப்புப் பசியதூறுகளைச் சுடுகையினாலே.

303. நிழத்த யானை மேய் புலம் படர—ஓய்ந்தயானைகள் தமக்கு மேயலாமிடங்களிலே போக,

304. கலித்த இயவர் இயம் ‡தொட்டன்ன—மகிழ்ந்த வாச்சியக்காரர் தம்வாச்சியத்தை வாசித்தாலொத்த.

305. கண் விடுபு உடையூ தட்டை கவின் அழிந்து—மூங்கிலின் §கண் திறக்கப்பட்டு உடைந்து ‖இயந்தொட்டன்ன (304) ஓசையையுடைய தட்டை அழகழிகையினாலே,

தட்டப்படுதலிற் றட்டையென்றார்.

நெருப்பு நைக்கையினாலே (302) பயிரின்றித் தட்டை கவினழிகையினாலே (305) ஓய்ந்தயானை மேய்புலம் படரும்படி (303) அருவியான்ற மலை (306) யென்க.

கவினழியவெனத் திரித்துமுடித்தலுமாம்.

306. அருவி ஆன்ற அணி இல் மா மலை—அருவிகளில்லையான அழகில்லாத பெரியமலையிடத்து விடரகம் (308.)

---

* "இலங்கு மருவித் திலங்கு மருவித்தே.....மலை" (கலி. 41.)

† "கோடெரிநைப்பவும்" (பொருந. 234.)

‡ பி - ம். தொட்டென்ன.

§ கண் - கணுக்கள்.

‖ இயம் - வாத்தியம்.

307. வை கண்டன்ன புல் முளரி அம் சாட்டு—வைக்கோலைக்கண்டாற் போன்ற *ஊகம்புல்லுலர்ந்த அழகியகாட்டிடத்தில்,

308. கம சூழ் †கோடை வீடர் அகம் முகந்து—நிறைவினையுடைய ‡சுழலுவளியை முழைஞ்சிடங்கள் முகந்துகொள்கையினாலே,

309. கால் உறு கடலின் ஒலிக்கும் சும்மை—காற்றுமிகுந்த கடல்போல் ஒலிக்கும் ஆரவாரத்தையுடைய வேனிற்குன்றம் (313).

310 - 11. இலை வேய் குரம்பை உழை அதர் பன்னி உவலை கண்ணி உல் சொல் §இனைஞர்—குழையாலேவேய்ந்த குடிலிலிருக்கும் மான்றோலாகிய படுக்கையினையும், தழைசினகண்ணியினையும். கடியசொல்லினையுமுடைய இனையோர்,

312. சிலை உடை கையர் கவலை சாப்ப—வில்லையுடைய கையையுடையராய்ப் பலவழிகளில் ஆறலைகள்வரைக் காக்கும்படி சாஞ்சோர்ந்து (314) என்க.

313. கிழல் உரு இழந்த வேனில் குன்றத்து—‖கிழல் தன்வடிவையிழந்ததற்குக்காரணமான முதுவேனிற்காலத்தையுடைய மலையிடத்துச் சுரம (314).

314. பாலை சான்ற—பிரிவாகிய உரிப்பொருளமைந்த.

சுரம் சோர்ந்த—அருகிலுஞ் சேரப்பட்ட.

ஒருசார்—ஒருபக்கம்,

ஒருசார் (314). மலை (306) விடரகம் கோடையைமுகக்கையினாலே (309) கடலினெலிக்குஞ் சும்மையையுடைய (309) வேனிற்குன்றத்துப் (313) பாலை சான்ற சாஞ்சேரப்பட்ட (314) என்க.

பாலைக்கு ¶கடுவனென்னும் பெயர்கூறியதனால், அது தத்தற்பொருளானும் இ" முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து, நல்லியல் பழித்து கடுங்குதிய ருறத்துப். பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்" என **முதற்பொருண்மயக்கத்தைப் பாலினிழந்தனவும் பாலையையும் வேறோர்நிலமாக்கினர்.

---

* "ஊகம் வேய்ந்த வுயர்நிலை" (பெரும்பாண். 122.)

† பி - ம். கொட்டை.

‡ சுருவளி - சுழல்காற்று.

§ பி - ம் இனையர்.

‖ "முருகு சாறுபொன் னிதழியார் முண்டகப் பதத்தி, னெருவு மாருயிர் பருவத்தின் மீளவுற் றிடல்போற், பருதி வானவ னுச்சமாம் பதத்துமென் மலர்ப்பூ, தருவி னீங்கிய தீழலெனத் தருமடி யடைந்த" (காஞ்சி. பல்லிருசமய. 340.)

¶ கடுவனென்னும்பெயர் பாலைக்குண்மையையும் அப்பெயர்க்காரணத்தையும் "அவற்றுள், கடுவனது" (தொல். அகத்திணை. 2) என்னும் சூத்திர உரையாலுணர்க.

§ சிலப்பதிகாரம், காடுகொண்காதை, 64 - 6.

** முதற்பொருளென்றது கண்டு கிலமுதற்பொருள்களை.

315. முழங்கு கடல் தந்த விளங்கு கதிர் முத்தம்—ஒலிக்குங்கடல்தந்த விளங்குகின்ற ஒளியினையுடையமுத்து,

316. *அரம் போழ்ந்து அறுத்த கண் நேர் இலங்கு வளை—வாளரம் நீறியறுத்த இடம் நேரிதாகிய விளங்கும்வளை,

நேர்ந்தவளையுமாம்.

317. பரதர் தந்த பல் வேறு கூலம்—செட்டிகள் கொண்டுவருதலால் மிக்க பலவாய் வேறுபட்ட பண்டங்கள்,

தந்ததென்றும் பாடம்.

318. [இருங்கழிச் செறுவிற் நீம்புளி வெள்ளுப்பு.]

இரு கழி செறுவின் வெள் உப்பு—கரிய கழியிடத்துப் பாத்தியில்விளைந்த வெள்ளிய உப்பு.

நீ புளி— †கருப்புக்கட்டி கூட்டிப் பொரிததபுளி,

319. பரந்து ஓங்கு வரைப்பின் — மணற்குன்று பரந்துயருங் கான லிடத்தே,

319 - 20. வல் கை திமிலர் ‡கொழு மீன் குறைஇய துடி கண் துணி யல்—வலியகையினையுடைய திமிலர் கொழுவிய மீன்களையறுத்த §துடியின் கண்போலுருண்ட துணிகள்,

என்றது கருவாடுகளை.

நீம்புளியினையும், உப்பினையும், ‖கருவாட்டினையுமேற்றின நாவா (321) யென்க.

321. விழுமிய நாவாய்—சீரியமரக்கலம்.

பெருநீர் ஓச்சுநர்—மரக்கலமீகாமர்,

322. நன தலை தேஎத்து—அகன்ற இடத்தையுடைய யவனமுதலிய தேயத்தினின்றும்,

நல் கலன் உய்ம்மார்—இவ்விடத்துண்டாகிய பேரணிகலங்களை ஆண்டுச் செலுத்துதற்கு,

323. புணர்ந்து பலருங்கூடி,

உடன் கொணர்ந்த புரவியொடு—சேரக்கொண்டுவந்த குதிரைகளோடே,

அனைத்தும்—முழுவதும்,

---

* "அரம்போழவ்வளை" (அகநா. 6, 125.)

† கருப்புக்கட்டி - கரும்பின்வெல்லம்.

‡ கொழுமீனென்றே ஒருவகை மீனுண்டென்பர்; "செய்த்தலைக் கொழு மீன்", "கொழுமீன் சுடுபுகை" (நற். 291, 311.); "நளையர்கள் கொடுப்பன கொழுமீன்" (பெரிய. திருக்குறிப்பு. 35.)

§ "வராற்றுடிக்கட்கொழுங்குறை" (அகநா. 196.)

‖ கருவாடு - உலர்ந்தமீன்.

324. வைகல் தோறும் *வழி வழி சிறப்ப—நாடோறும் முறைமையே முறைமையே மிகுகையினாலே வளம்பல பயின்று (325) என்க.

325. நெய்தல் சான்ற—இரங்கலாகிய உரிப்பொருளமைந்த.

வளம் பல பயின்று—பலசெல்வமும் நெருங்கப்பட்டு.

ஒருசார், பெருநீரோசசுநா (321) கலனுய்ம்மார் தேஎத்துக் (322) கொணர்ந்த புரவியோடே (323) முத்தம் (315) வளை (316) கூலமானவை (317) அனைத்தும் (323) வழிவழிசசிறப்ப (324) வளம்பல பயிலப்பட்டு (325) என்க

நெய்தல்சான்ற (325) பரந்தோங்குவரைப்பின்கண்ணே (319) வளம்பல பயிலப்பட்டு (325) எனமுடிக்க.

325 - 6 ஆங்கு ஐம்பால் திணையும் கவினி—அம்மண்டலத்தின்கண்ணே ஐந்துகூற்றினையுடைய நிலங்களும் அழகுபெற்று,

அமை வர - பொருந்துதல்தோன்ற,

327 - 8 [முழவிமிழு மகலாங்கண் †விழவுநின்ற வியனமறுகிற்]

முழவு இமிழும் விழவு நின்ற வியல் மறுகின—முழவுமுழங்குந் திருநாள் நிலைபெற்ற அகற்சியையுடைய தெருவினையும்,

329. துணங்கை—துணங்கைக்கூத்தினையும்,

அம் தழூஉவின—அழகினையுடைய குரவைக்கூத்தினையும்,

மணம் கமழ் சேரி—மணநாறுகின்ற பரத்தையாசேரியினையும்,

330. ‡இன் கலி யாணர்—இனிய செருக்கினையுடைத்தாகிய புதுவருவாயினையுமுடைய,

327 அகல் ஆங்கண்—அகன்ற ஊரிடத்தே,

330 [குழூஉப்பல பயின்று] பல குழூஉ பயின்று—பலகுடித்திரள் நெருங்கி,

ஆங்கு—அந்நாட்டில்

331. பாடல் சான்ற நல் நாட்டு நடுவண்—புலவராற் பாடுதல் முற்றுப் பெற்ற நல்லநாட்டிற்கு நடுவணதாய,

ஒருசார் தண்பணை சுற்றப்பட்டு (270) ஒருசார் மலைதழுவப்பட்டு (301) ஒருசார் காடுதழுவப்பட்டு (285) ஒருசார் சுரஞ்சேரப்பட்டு (314) ஒருசார் நெய்தல்சான்ற (325) வரைப்பின்கண்ணே (319) வளம்பல பயிலப்பட்டு ஆங்கு (325) ஐம்பாற்றிணையுங்கவினி (326) அந்நாட்டிடத்து (330) அகலாங்கட் (327) குழூஉப்பலபயின்று (330) அமைவரப் (326) பாடல்சான்ற நன்னாட்டு நடுவணதாய் (331) என்க

---

* வழிவழிசசிறக்க: (மதுரை. 194.)

† (மதுரை. 98.) ‡ பி - ம். இன்கண்.

332 - 7. [கலைதாய வுயர்சிமையத்து, மயிலகவு மலிபொங்கர், மந்தியாட மாவிசும்புகந்து, முழங்குகால் பொருத மரம்பயில் காவி. னியங்குபுனல் கொழித்த வெண்டலைக் குவவுமணற், கான்பொழில் :]

கலை தாய மலி பொங்கர் மந்தி ஆட மரம் பயில் கா—முசுக்கலைகள்தாவின மிக்கொம்புகளிலே அவற்றின்மந்திகள் விளையாடும்படி மரம்நெருங்கினசோலை,

மா விசும்பு உகந்து—பெரிய ஆகாயத்தேசெல்ல உயர்கையினாலே,

முழங்கு கால் பொருத மரம்—முழங்குகின்ற பெருங்காற்றடித்த மரம்.

மயில் அகவும் காவின்—மயில் ஆரவாரிக்கும் காவோடே,

உயர் சிமையத்து இயங்கு புனல் கொழித்த வெள் தலை குவவு மணல் கான் பொழில்—உயர்ந்த மலையுச்சியிடத்துநின்றும் வீழ்ந்தோடுகின்ற நீர் கொழிக்கு ஏறட்ட வெள்ளிய தலையினையுடைத்தாகிய திரட்சியையுடைய மணற்குன்றிடத்து மணத்தையுடைய பொழில்,

337. தழீஇய அடை கரை தோறும்—காவோடே பொழில்சூழ்ந்த நீரடையும் கரைகடோறும்,

338 - 42. [தாதுசூழ் கோங்கின் பூமலர் தாஅய்க், கோதையி னொழுகும் *விரிநீர் நல்வர, லவிரறல் வையைத் துறைதுறை தோறும், பல்வேறு †பூத்திரட் டண்டலை சுற்றி, யழுந்துபட் டிருந்த பெரும்பா ணிருக்கையும் :]

தாது சூழ் கோங்கின் பூ மலர் தாஅய் கோதையின் ஒழுகும் விரிநீர் நல்வரல் வையை—தாதுக்கள்சூழ்ந்த கோங்கினுடைய பூவும் ஏனைமலர்களும்பரந்து மாலையொழுகினாற்போல ஓடும் பெருநீர் நன்றாகிவருதலையுடைய வையையிடத்து,

அவிர் அறல் துறை துறை தோறும் பல் வேறு பூ திரள் தண்டலை சுற்றி அழுந்து பட்டு இருந்த ‡பெரும்பாண் இருக்கையும்—விளங்குகின்ற அறலையுடைய துறைகடோறும் துறைகடோறும் பலவாய்வேறுபட்ட பூத்திரளையுடைய பூந்தோட்டங்கள் சூழப்பட்டு நெடுங்காலம் அடிப்பட்டிருந்த பெரிய பாண்சாதியின் குடியிருப்பினையும்,

343 - 5. நிலனும் வளனும் கண்டு அமைகல்லா விளங்கு பெரு திருவின் மானவிறல்வேள் அழும்பில் அன்ன நாடு இழந்தனரும்—நிலத்தையும் அதிற் பயிர்களையும் பார்த்தபார்வை மாறுதலமையாத விளங்கும் பெரியசெல்வத்தினையுடைய மானவிறல்வேளென்னுங் குறுநிலமன்னனுடைய அழும்பிலென்னும் ஊரையொத்த நாடுகளையிழந்தவர்களும்,

346. கொழு பல் பதிய குடி இழந்தனரும்—செல்வத்தினையுடைய பலனார்களிடத்தனவாகிய குடிகளையிழந்தவர்களும்,

---

* பி - ம். விரிநீ ரவிரற னல்வரல் வையை.

† பி - ம். பூவின்றண்டலை

‡ பெரும்பாணச்சாதியினிலக்கணத்தை இப்புத்தகம் 129 - ஆம் பக்கத்திற் காண்க.

324. வைகல் தோறும் *வழி வழி சிறப்ப—நாடோறும் முறைமையே முறைமையே மிகுகையினாலே வளம்பல பயின்று (325) என்க.

325. நெய்தல் சான்ற—இரங்கலாகிய உரிப்பொருளமைந்த.

வளம் பல பயின்று—பலசெல்வமும் நெருங்கப்பட்டு.

ஒருசார், பெருநீரோச்சுநர் (321) கலனுய்ம்மார் தேஎத்துக் (322) கொணர்ந்த புரவியோடே (323) முத்தம் (315) வளை (316) கூலமானவை (317) அனைத்தும் (323) வழிவழிச்சிறப்ப (324) வளம்பல பயிலப்பட்டு (325) என்க.

நெய்தல்சான்ற (325) பரந்தோங்குவரைப்பின்கண்ணே (319) வளம்பல பயிலப்பட்டு (325) எனமுடிக்க.

325 - 6. ஆங்கு ஐம்பால் திணையும் கவினி—அம்மண்டலத்தின்கண்ணே ஐந்துகூற்றினையுடைய நிலங்களும் அழகுபெற்று,

அமை வர—பொருந்துதல்தோன்ற,

327 - 8. [முழவிமிழு மகலாங்கண். †விழவுநின்ற வியன்மறுகிற்:]

முழவு இமிழும் விழவு நின்ற வியல் மறுகின்—முழவுமுழங்குந் திருநாள் நிலைபெற்ற அகற்சியையுடைய தெருவினையும்,

329. துணங்கை—துணங்கைக்கூத்தினையும்,

அம் தழூஉவின்—அழகினையுடைய குரவைக்கூத்தினையும்,

மணம் கமழ் சேரி—மணநாறுகின்ற பரத்தையர்சேரியினையும்,

330. ‡இன் கலி யாணர்—இனிய செருக்கினையுடைத்தாகிய புதுவருவாயினையுமுடைய,

327. அகல் ஆங்கண்—அகன்ற ஊரிடத்தே,

330 [குழூஉப்பல பயின்று:] பல குழூஉ பயின்று—பலகுடித்திரள் நெருங்கி,

ஆங்கு—அந்நாட்டில்,

331. பாடல் சான்ற நல் நாட்டு நடுவண்—புலவராற் பாடுதல் முற்றுப் பெற்ற நல்லநாட்டிற்கு நடுவணதாய்,

ஒருசார் தண்பணை சுற்றப்பட்டு (270) ஒருசார் மலைதழுவப்பட்டு (301) ஒருசார் காடுதழுவப்பட்டு (285) ஒருசார் சுரஞ்சேரப்பட்டு (314) ஒருசார் நெய்தல்சான்ற (325) வரைப்பின்கண்ணே (319) வளம்பல பயிலப்பட்டு ஆங்கு (325) ஐம்பாற்றிணையுங்கவினி (326) அந்நாட்டிடத்து (330) அகலாங்கட் (327) குழூஉப்பலபயின்று (330) அமைவரப் (326) பாடல்சான்ற நன்னாட்டு நடுவணதாய் (331) என்க.

---

* வழிவழிச்சிறக்க: (மதுரை. 194.)

† (மதுரை. 98.) ‡ பி - ம். இன்கண்.

332 - 7. [கலைதாய வுயர்சிமையத்து, மயிலகவு மலிபொங்கர், மந்தியாட மாவிசும்புகந்து, முழங்குகால் பொருத மரம்பயில் காவி, னியங்குபுனல் கொழித்த வெண்டலைக் குவவுமணற், கான்பொழில் :]

கலை தாய மலி பொங்கர் மந்தி ஆட மரம் பயில் கா—முசக்கலைகள்தாவின மிக்கொம்புகளிலே அவற்றின்மந்திகள் விளையாடும்படி மரம்நெருங்கினசோலை,

மா விசும்பு உகந்து—பெரிய ஆகாயத்தேசெல்ல உயர்கையினாலே,

முழங்கு கால் பொருத மரம்—முழங்குகின்ற பெருங்காற்றடித்த மரம்.

மயில் அகவும் காவின்—மயில் ஆரவாரிக்கும் காவோடே,

உயர் சிமையத்து இயங்கு புனல் கொழித்த வெள் தலை குவவு மணல் கான் பொழில்—உயர்ந்த மலையுச்சியிடத்துநின்றும் வீழ்ந்தோடுகின்ற நீர் கொழித்து ஏறட்ட வெள்ளிய தலையினையுடைத்தாகிய திரட்சியையுடைய மணற்குன்றிடத்து மணத்தையுடைய பொழில்,

337. தழீஇய அடை கரை தோறும்—காவோடே பொழில்சூழ்ந்த நீரடையும் கரைகடோறும்,

338 - 42. [தாதுசூழ் கோங்கின் பூமலர் தாஅய்க், கோதையி னொழுகும் *விரிநீர் நல்வர, லவிரறல் வையைத் துறைதுறை தோறும், பல்வேறு †பூத்திரட் டண்டலை சுற்றி, யழுந்துபட் டிருந்த பெரும்பா ணிருக்கையும் :]

தாது சூழ் கோங்கின் பூ மலர் தாஅய் கோதையின் ஒழுகும் விரிநீர் நல்வரல் வையை—தாதுக்கள்சூழ்ந்த கோங்கினுடையபூவும் ஏனைமலர்களும்பரந்து மாலையொழுகினாற்போல ஓடும் பெருநீர் நன்றாகிவருதலையுடைய வையையிடத்து,

அவிர் அறல் துறை துறை தோறும் பல் வேறு பூ திரள் தண்டலை சுற்றி அழுந்து பட்டு இருந்த ‡பெரும்பாண் இருக்கையும்—விளங்குகின்ற அறலையுடைய துறைகடோறும் துறைகடோறும் பலவாய்வேறுபட்ட பூத்திரளையுடைய பூந்தோட்டங்கள் சூழப்பட்டு நெடுங்காலம் அடிப்பட்டிருந்த பெரிய பாண்சாதியின் குடியிருப்பினையும்,

343 - 5. நிலனும் வளனும் கண்டு அமைகல்லா விளங்கு பெரு திருவின் மானவிறல்வேள் அழும்பில் அன்ன நாடு இழந்தனரும்—நிலத்தையும் அதிற் பயிர்களையும் பார்த்தபார்வை மாறுதலமையாத விளங்கும் பெரியசெல்வத்தினையுடைய மானவிறல்வேளென்னுங் குறுநிலமன்னனுடைய அழும்பிலென்னும் ஊரையொத்த நாடுகளையிழந்தவர்களும்,

346. கொழு பல் பதிய குடி இழந்தனரும்—செல்வத்தினையுடைய பலவார்களிடத்தனவாகிய குடிகளையிழந்தவர்களும்,

---

* பி - ம். விரிநீ ரவிரற னல்வரல் வையை.

† பி - ம். பூவின்றண்டலை

‡ பெரும்பாணச்சாதியினிலக்கணத்தை இப்புத்தகம் 129 - ஆம் பக்கத்திற் காண்க.

347. தொன்று கறுத்து உறையும் துப்பு தர வந்த—பழையதாய *செற்றங்கொண்டு தக்கும்வலி தம்மைக்கொண்டுவருகையினாலே எதிராய்வந்த,

348. அண்ணல் யானை அடு போர் வேந்தர்—தலைமையினையுடைய யானையினையும் பகைவரைக்கொல்லும் போர்த்தொழிலையுமுடைய வேந்தரை.

பல் மாறு ஓட்டி (350)—பலவாய் சென்றிடைந்த மாறுபாடுகளை முதற் போக்கிப் பின்னர்.

349 - 50. [இன்னிசை முரசம் இடைப்புலத் தொழியப், பன்மா ரோட்டிப் பெயர்புறம் பெற்று:]

இன் இசை †முரசம் இடைப்புலத்து ஒழிய பெயர் புறம் பெற்று—இனிய ஓசையினையுடைய முரசம் ‡உழிஞைப்போர்க்கு இடையே இடக்கும்படி மீளுகையினாலுண்டான முதுகைப்பெற்று.

என்றது: உழிஞைப்போர்செய்யவந்த அரசர் §ருடுமிகொண்ட மண்ணு மங்கலமெய்தாது இடையேமீளும்படி காத்தவிடத்து (351) என்றவாறு

351. ‖மண்ணுற ஆழ்ந்த மணி நீர் இடங்கின்— ¶மண்ணுள்ளவளவுமாழ்ந்த நீலமணிபோலும் நீரையுடைய இடங்களையும்.

352. விண் உற ஓங்கிய பல் இடை புரிசை—தேவருலகிலே செல்லும் படியுயர்ந்த பல கற்படைகளையுடைய மதிலினையும்,

353. தொல் வலி கிளேஇய வாயில் (356)—பழைதாகிய வலி கிளேபெற்ற வாயில்,

அணங்கு உடை நெடு நிலை—தெய்வத்தையுடைத்தாகிய நெடிய நிலையினையும்,

354. செய் பட கரிந்த நிண் போர் கதவின்—செய் பலகாலுமிடுதலாற் கருகின நிண்ணிய செறிவினையுடைய கதவினையும்.

வாயிலில் தெய்வமுறையுமாகலின், அதற்கு அணியுசெய்யுமாம்; **"ஐவகை யப்பிய செய்பணி நெடுநிலை" என்பதனானுணர்க.

---

* செற்றம் - பகைமை நெடுங்காலம் நிகழ்வது; (புறத். 132 - உரை)

† "இரங்கிசை முரசமொழியப் பரந்தவ, ரோடுபுறங் கண்ட ஞான்றை" (அகநா. 116.)

‡ உழிஞைப்போரென்றது இங்கே புறத்துழிஞைப்போரை; (தொல். புறத்திணை. சூ. 10.)

§ தொல். புறத்திணை. சூ. 13 - பார்க்க.

‖ பி - ம். மண்ணுறவீழ்ந்த.

¶ "நிலவரையிறந்தருண்டெண்ணகழி" (புறநா. 21.)

$ "படையார்புரிசைப்பட்டினம்" (பல்லவனீச்சரம். ஞான. தே), "படைமதில்" (பெருங்கதை, 3. மகதகாண்டம், 4: 3.)

** நெடுநல்வாடை, 86.

355. மழை ஆடும் *மலையின் இவர்ந்த மாடமொடு—மேகமூளாவுமலை போலே ஓங்கினமாடத்தோடே,

கோபுரமன்றி வாசலே மாடமாகவுஞ் சமைத்தலின், மாடமென்றார்.

356. வையை அன்ன வழக்கு உடை வாயில்—வையையாறு இடைவிடாது ஓடுமாறுபோன்ற மாக்தரும் மாவும் இடையறாமல் வழங்குதலையுடைய வாயில்,

மாடத்தோடே (355) சிலையினையும் (353) கதவினையும் (354) வழக்கினையுமுடைய வாயில் (356.)

பெரும்பாணிருக்கையினையும் (342) இடங்கினையும் (351) புரிசையினையும் (352) வாயிலினையு (356) முடைய மதுரை (69) என்க.

357 - 8. வகை பெற எழுந்து வானம் மூழ்கி நில் காற்று இசைக்கும் பல் புழை கல் இல்—கூறுபாடாகியபெயர்களைத் தாம்பெறும்படியுயர்ந்து தேவருலகிலேசென்று தென்றற்காற்று ஒலிக்கும் பலசாளரங்களையுடைய கன்முகில அகங்களையும்.

மண்டபம் கூடம் †தாய்க்கட்டு அடுக்களையென்றாற்போலும் பெயர்களைப் பெறுதலின். வகைபெறவெழுந்தென்றார்.

359. யாறு கிடந்தன்ன அகல் நெடு தெருவில்—யாறுகிடந்தாற்போன்ற அகன்ற நெடிய தெருக்களிலே,

இருகரையும் மாறும்போன்றன, இரண்டுபக்கத்தின்மனைகளும் தெருவுகளும்.

360. பல் வேறு குழாஅத்து இசை எழுந்து ஒலிப்ப— ‡சாளக்காடியிற் பண்டங்களைக்கொள்ளும் பலசாதியாகிய பாடைவேறுபாட்டையுடைய மாக்கள் நிரளிடத்து ஓசைமிக்கொலிக்கும்படி இருந்தார் (406) என்க.

361 - 2. மா கால் எடுத்த முற்றீர் போல முழங்கு இசை கல் பிணை அறைவனர் நுவல—பெருமையையுடைய காற்றெடுத்த கடலொலிபோல முழங்கும் ஓசையையுடைய கன்முகில முரசைச் சாற்றினராய் விழவினை காட்டிலுள்ளார்க்குச் சொல்லுகையினாலே காடார்த்தன்றே (428) என்க.

'அறைவன நுவல' என்றுபாடமாயின், அறையப்படுவனவாய் விழாவைச் சொல்லவென்க.

363 - 4. கயம் குடைந்தன்ன இயம் தொட்டு இமிழ் இசை மகிழ்ந்தோர் ஆடும் கலி கொள் சும்மை—கயத்தைக் கையாற்குடைந்தாலினையாடுந் தன்மையாக வாச்சியங்களைச் சாற்றலான் முழங்கின ஓசையைக்கேட்டு மகிழ்ந்தவர்களாடுஞ் செருக்கினைக்கொண்ட ஆரவாரத்தினையுமுடைய தெரு (359) என்க.

---

* "மலையுரைமாடத்து" (மதுரை. 406.)

† தாய்க்கட்டு - தாய்மனை.

‡ சாளக்காடி - காலைக்கடை. (மதுரை. 430.)

365. *ஓவு கண்டன்ன இரு பெரு நியமத்து—சித்திரத்தைக் கண்டாற் போன்ற கட்கு இனிமையையுடைய இரண்டாகிய பெரிய அங்காடித்தெருவில்,

நாளங்காடி, †அல்லங்காடியாகிய இரண்டுகூற்றையுடைத்தென்றார்.

366. சாறு அயர்ந்து எடுத்த உருவம் பல் கொடி—கோயில்களுக்கு விழாக்களை நடத்திக் கட்டின அழகினையுடைய பலகொடிகளும்.

இதனால் அறங்கூறினார்.

367 - 8. வேறு பல் பெயர ஆர் எயில் கொள கொள நாள் தோறு எடுத்த நலம் பெறு புனை கொடி—வேறுபட்ட பலபெயர்களையுடையவாகிய அழித்தற்கரிய அரணகளைத் ‡தண்டத்தலைவர் அரசனேவலாற்சென்று கைக்கொள்ளக் கைக்கொள்ள அவர்கள் அவ்வெற்றிக்கு நாடோறுமெடுத்த நன்மையைப்பெற்ற சயக்கொடியும்,

இதனாற் §புறத்துழிஞைப்போர்கூறினார்.

369 - 71. நீர் ஒலித்தன்ன நிலவு வேல் தானையொடு புலவு பட கொன்று மிடை தோல் ஓட்டி புகழ் செய்து எடுத்த விறல் சால் நல் கொடி—நடலொலித்தாற்போன்ற நிலைபெறுதலையுடைய வேற்படையோடே சென்று பகைவரைப் புலானாற்றமுண்டாகக்கொன்று பின்னர் அணியாய்நின்ற யானைத்திரளையுங் கெடுத்துத் தமக்குப் புகழையுண்டாக்கி எடுத்த வெற்றியமைந்த நன்றாகிய கொடியும்,

இது தும்பைப்போர்கூறிற்று.

372. கள்ளின் களி ||நவில் கொடியொடு கள்ளினது களிப்புமிகுதி யைச் சாற்றுகின்ற கொடியும்,

372 - 3. நல் பல பல் வேறு குழூஉ கொடி- நன்றாகிய பலவற்றினாலே பலவாய் வேறுபட்ட திரட்சியையுடைய கொடிகளும்,

நன்பலவென்றார், கல்வி கொடை தவம் முதலியவற்றை.

373 - 4. பதாகை ¶நிலைஇ பெரு வரை மருங்கின் அருவியின் நுடங்க- பெருங்கொடிகளும் நிலைபெற்றுப் பெரிய மலையிடத்து அருவியசையுமாறு போல அசைய.

இக்கொடிகள் அருவியினுடங்கும்படி வகைபெறவெழுந்து (357) என முன்னேகூட்டுக.

---

* ஓவு - ஓவியம்; "ஓவுக்கண் டன்னவில்" (நற். 268), "ஓவுறழ் நெடுஞ்சுவர்" (பதிற். 68.)

† அல்லங்காடி - மாலைக்கடை. (மதுரை. 544.)

‡ தண்டத்தலைவர் - சேனைத்தலைவர்.

§ புறத்துழிஞைப்போர் - வேற்றுவேந்தருடைய மதிலின்புறத்தைச்சூழ்ந்துசெய்யும்போர்.

|| பி - ம். நுவல், நுவல்.

¶ பி - ம். நிலைஇய.

375. பிணர்மீன் வழங்கும் கயம் பல் உபயப்பின்—†பிணர்மீன்களுஞ் சாதியுளவுஞ் சஞ்சரிக்கின்ற கடவிடத்தே,

376 - 7. வீங்கு பிணி சோன் மயிற - அரிஇ இதை புடையூ கம்பு முதல் முருக்க எற்றி—இறகும் பிணிப்பினையுடைய வலியினையுடைய ப்ரம் கட்டினையிற்றையறுத்துப் பாயையும்பீறிப் பாய்மரம் அடியிலேமுறியும்படி அடித்து,

377 - 8. [காய்த்துடன், வெங்காற் றெறுப்ப:] வெ காற்ற உடன் காய்த்த எறுப்ப—கடியகாற்று காற்றினையினும் சேரக் கோபித்தெடுக்கையினாலே,

378. கல் பொருத உரவு—சங்குகற்கல் மலிற்றடனேகின்ற பொருத உலாவி,

379. செவ் சுழி பட்ட காவாய் போல - செடியசுழியிலேயகப்பட்டுச் சுழலாகின்ற மரக்கலத்தையொக்க.

380 இருதலை பணிலம் ஆர்ப்ப - முன்னும்பின்னுஞ் சங்கொலிப்ப.

யானைமீன்டாற் பின்னின்றவன் ஊதுதற்குப் பின்னுஞ் சங்குசெல்லும்.

380 - 81. வினம் சிதைத்து ‡கோலோர் கொன்று மேலோர் வீசி—இனமிக்குப் §பரிக்கோற்காரரைக்கொன்று பாகரைவீசிப் போட்டு,

382. மெல் பிணி வல் தொடர் பேணுது காழ் சாய்த்து—மெல்லிய பிணிப்பினையுடைய வலிய ?நீர்வாரியென்று காலிற்கட்டுஞ் சங்கிலியை மேக்குக் காவலென்று பேணுதே அதகட்டின தறியைமுறித்து,

383. கத்து நீத்து உழிதரும் கடாஅ யானையும் - கம்பத்தைக் கைவிட்டசுழலும் கடாத்தையுடைய யானையும்,

தெறுத்து (380) கொன்று வீசி (381) சாய்த்து (382) நீத்து (383) ஆர்ப்ப (380) உழிதருங்கடாமெனக் கடாத்தின்றொழிலாகவுரைக்க.

காற்றிற்குக் கடாம் உவமிக்கப்படும்பொருள்.

384. ‖அம் கண் மால் விசும்பு புதைய வளி போழ்ந்து - அழகிய இடங்களைத் தன்னிடத்தேயுடைய பெரிய ஆகாயமறையக் காற்றைப்பிளந்து,

தேவருலகமுதலியவற்றைத் தன்னிடத்தேயுடைமையின், அங்கண்மால் விசும்பென்றார்.

385 - 6. ஒன் கதிர் ஞாயிறு ஊற அளவா நிரிதரும் செ கால் அன்னத்து சேவல் அன்ன - ஒள்ளிய கிரணங்களையுடைய ஞாயிற்றைத் தாம்சேர்

---

* பி - ம். பரம்பின்.

† "உள்வினைச் தலைய தென்னை யொண்சுரப் பணைமீ னூறை, தெள் விளித் திருக்கை தாக்கி நிமிங்கில மிரிந்து பாய்த" (கந்த. கடல்பாய். 11) இம்மீன், பினைய னென்றும் வழங்கும்: "பினையன்றெளி, யினையிருக்கப்பணி தியின்றுன்" (அநுணைக்கலம்பகம், 45.)

‡ பி - ம். காலோர்.

§ பரிக்கோல் - குத்துக்கோல்.

‖ "அங்கண்விசும்பின்" (நாலடி. மெய்ம்மை, 1.)

தலை நெஞ்சாலே கருதிக்கொண்டுபறக்குஞ் சிவந்தகாலையுடைய அன்னத்தினது சேவலையொத்த,

387 - 8. குரூஉ மயிர் புரவி உராலின் பரி கிமிர்ந்து கால் என கடுக்கும் கவின் பெறு தேரும்—நிறவிய பலமயிர்களையுடைய குதிரைகளோடுதலிற் செலவுமிக்குக் காற்றெனக் கடுக ஓடும் அழகினைப்பெறுகின்றதேரும்,

389. கொண்ட கோலன் கொள்கை நவிற்றலின்—கையிலேயெடுத்த மத்திகையையுடைய *வாசிவாரியன் †ஐந்துகதியையும் பதினெட்டுச்சாரியையும் பயிற்றுகையினாலே,

390. அடி படு மண்டிலத்து ஆதி போகிய—குரங்களழுந்தின வட்டமான இடத்திலும் ‡ஆதியென்னுங் கதியிலும் ஓடின,

391. கொடி படு சுவல இடு மயிர் புரவியும்—ஒழுங்குபடும் §கேசாரியையுடையனவாகிய இட்டவாசங்களையுடைய குதிரைகளும்,

392 - 3. [வேழத் தன்ன வெருவரு செலவிற், கள்ளார் களமரிருஞ் செரு மயக்கமும்;] வெரு வரு வேழத்து அன்ன செலவின் கள் ஆர் களமர் இரு செரு மயக்கமும்—அச்சந்தோன்றுகின்ற யானையையொத்த போக்கினையுடைய கள்ளினை யுண்ணும் வீரர் தம்மிற் பெரியபோரைச்செய்யும் கலக்கமும்.

களத்தேசேறலிற் களமரென்றார்.

394. அரியவும் பெரியவும்—ஈண்டுப் பெறுதற்கரியனவுமாய் அவை தாஞ் சிறிதின்றி மிகவுள்ளனவுமாய்ப் பலவாய் வேறுபட்ட பண்ணியம் (405) என மேலேகூட்டுக.

வருவன பெயர்தலின்—யானையும் (383) தேரும் (388) புரவியும் (391) களமர் செருமயக்கமும் (393) பல்காலும் வருவனவாய் மீளுகையினாலே.

395 - 6. [தீம்புழல் வல்சிக் கழற்கான் மழவர், பூந்தலை முழவி னோன் றலை கடுப்ப:] ||தீ புழல் வல்சி பூ தலை சழல் கால் மழவர் முழவின் நோன் தலை கடுப்ப—இனிய பண்ணியாரங்களாகிய உணவினையும் பொற்பூக்களையுடைய தலையினையும் வீரக்கழலணிந்த காலினையுமுடைய மழவர் முன்கொட்டும் வீர மத்தளத்தினது வலியகண்ணையொக்க உருண்ட.

¶தீம்புழல் - இருப்பைப்பூவுமாம். பூத்தலை - விகாரம். ❀மழவர் - சிலவீரர். **"உருவக் குதிரை மழவ ரோட்டிய" என்றார் பிறரும். கடுப்பவென்னுஞ் செயவெனெச்ச வுவமவுருபிற்கு உருண்டவென ஒருசொல்வருவிக்க.

---

* வாசிவாரியன் - குதிரையைத் தன்வயப்படுத்தி நடத்துவோன்.

† "ஐந்துகதியும்பதினெட்டுச்சாரியையும்"(பு-வெ. வென்றிப்பெருந். 13.)

‡ ஆதி - நெடுஞ்செலவு; (கலி. 96.)

§ இப்பெயர் கேதாரியென்றும் வழங்கும்; (கலி. 96 - ந.)

|| பி - ம். தீம்புலவல்சி.

¶ "இருப்பை, ... இழுதி னன்ன தீம்புழல்", "தீம்புழ லுணீஇய. கருங்கோட் டிருப்பை யூரும், பெருங்கை யெண்கு" (அகநா. 9. 171.)

❀ (மதுரை. 687 - உரை.)

** அகநானூறு, 1.

397. *பிடகை பெய்த கமழ் சுற பூவினர்—பூக்தட்டிலே இட்டுவைத்த மிகவும்சாறுன்ற சறிய பூவினையுடையாரும்,

398. பல் வகை †விரித்த எதிர் பூ கோதையர்—பலவகையாக விரித்து வைத்த ஒன்றற்கொன்றமாறுபட்ட பூமாலைகளையுடையாரும்,

399. பலர் தொகுபு இடித்த நாது உகு சுண்ணத்தர்—இடிக்கவல்லார் பலரும் திரண்டு இடித்த பூந்தாதுக்கள்போலப் பரக்குஞ் சுண்ணத்தையுடை யாரும்,

நாது - நீறுமாம். ரவமணிகளும், பொன்னும், சர்தனமும், கருப்பூரமுதலி யனவும் புழுகிலும் பனிநீரிலும் கலையவைத்திடித்தலின். இடிக்கவல்லவர் பல ரும் வேண்டிற்று.

400 - 401. தகை செய் ‡நீ சேறு இன் நீர் பசு காய் நீடு கொடி இலை யினர்—உடம்பிற்கு அழகைக்கொடுக்கும் இனிய §கருங்காலிசிகிக்காய்ச்சினை களிக்கலக்க இனிய நீரினையுடைய பசியபாக்குடனே வளர்ந்தகொடியின்ற வெற்றிலையினையுடையாரும்,

‖"அங்கருங் காலி சிலி பூறலை நமைக்கப் பட்ட, செங்களி விராய காயும்" என்றார். இளங்களியனனம் நீராயிருத்தலின் இன்னீரென்றார்.

401. கோடு சுடு நூற்றினர் -- சங்குசுடுதலாலுண்டான சுண்ணம்பை யுடையாரும்.

402 - 4. [இருதலை ¶வந்த பகைமுனை கடுப்ப, வின்னுயி ரஞ்சி யின்ன வெய்துயிர்த், தேங்குவன நிருத்தவை நீங்கிய பின்றை:]

இரு தலை வந்த பகை முனை கடுப்ப இன் உயிர் அஞ்சி ஏங்குவனர் இருத்து—இரண்டுபக்கத்தானும் படைவந்த பகைப்புலத்தையொக்கத் தம்மு டைய இனியவுயிருக்கு அஞ்சி ஏங்குவாராயிருந்து,

அவை நீங்கிய பின்றை இன்ன வெய்துயிர்த்து — அச்சாற்படையும் போனபின்னர் அவற்றுனெய்திய பொல்லாவெப்பத்தைப்போக்கி,

எனவே அச்சத்தால் நெஞ்சிற்பிறந்த வருத்தத்தைப்போக்கியென்றார்.

405. பல் வேறு பண்ணியம் ஈதழீஇ நிரி விலைஞர்—பலவாய்வேறுபட்ட பண்டங்களைத் தம்மிடத்தே சேர்த்துக்கொண்டு நிரிஇனர விற்பாரும,

கொள்ளக்கொள்ளக் குறையாமல் நாத்தர மிகாமல் (426) அரியவும் பெரி யவுமாய்ப் (394) பலவாய் வேறுபட்ட பண்ணியமெனக்கூட்டுக.

---

* நெடுநல், 39.
† பி - ம். விரித்த வெதிர்ப்பூங்கோதையர்.
‡ பி - ம். நிஞ்சோற்று.
§ "பைங்கருங் காலிச் செங்களி யினிஇ, கன்பகற் கமைந்த வந்துவர்க் காயும்" (பெருங்கதை, கலனாய்ச்சி. 81 - 2.)
‖ சிவகசிந்தாமணி, 2473.
¶ பி - ம். வேந்தர்.
$ பி - ம். நரீஇயநிரிவினைஞர்.

406. மலை புரை மாடத்து கொழு நிழல் இருத்தர—மலையைவொக்கும் மாடங்களிடத்துக் குளிர்ந்தநிழலிலே இருத்தலைச்செய்ய,

பூவினரும் (397) கோதையரும் (398) சுண்ணத்தினரும் (399) இலையினரும் நூற்றினரும் (401) பண்ணியர்தழீஇத்திரிவிலைஞரும் (405) யானையும் (383) தேரும் (388) புரவியும் (391) களமர்மயக்கமும் (393) வருவனபெயர்தலிற் (394) பகைமுனைகடுப்ப (402) அஞ்சி (403) ஏங்குவனரிருந்து அவை நீங்கியபின்றை (404) இன்னாவெய்துயிர்த்து (403) மாடநிழலிலே (406) இசையெழுந்தொலிப்ப (360) இருத்தர (406) எனக்கூட்டுக.

407. இரு கடல் வான் கோடு புரைய—கரியகடலில் வெள்ளிய சங்கையொக்க,

407 - 9. [வாருற்றுப், பெரும்பின் னிட்ட வானரைக் கூந்தலர், நன்னர் நலத்தர் தொன்முது பெண்டிர்:]

வாருற்று பின்னிட்ட வால் பெரு நரை கூந்தலர் தொல் முது பெண்டிர்—கோதிப் பின்னேமுடித்துப்போகட்ட வெள்ளிய பெரிய நரைமயிரினையுடையராகிய பழமைமூத்த பெண்டிர்,

நன்னர் நலத்தர்—நன்றாகிய வனப்பினையுடையராய்,

410 - 12. செ நீர் பசு பொன் புனைந்த பாவை செல் சுடர் பசு வெயில் தோன்றியன்ன செய்யர்—சிவந்த நீர்மையினையுடைய கிளிச்சிறையென்னும் பொன்னாற்செய்த பாவை வீழ்கின்றகிரணங்களிடத்துப் பசியவெயிலிடத்தே தோன்றினாற்போன்ற சிவந்தநிறத்தினையுடையராய்,

412. [செயிர்த்த நோக்கினர் மடக்கண்:] மட கண் செயிர்த்த நோக்கினர்—மடப்பத்தினையுடையகண்கள் ஆடவர்க்கு வருத்தத்தைச்செய்த பார்வையினையுடையராய்.

413. ஐஇய கலுழும் மாமையர்—வியப்பினையுடையவாய் நோக்கினார் கலங்குதற்குக் காரணமான *மாமைநிறத்தினையுடையராய்,

கலுழ்தல் - ஒழுகுதலுமாம்.

413 - 4 [வையெயிற்று, †வார்ந்த வாயர்:] ‡வார்ந்த வை எயிறு வாயர்—நேரிதாகிய கூரிய எயிற்றினையுடைய வாயினையுடையராய்,

414 - 6. [வணங்கிறைப் பணைத்தோட், சோர்ந்துகு வன்ன வயக்குறு வந்திகைத், தொய்யில் பொறித்த §சுணங்கெதி ரிளமுலை:]

வணங்கு இறை பணை தோள் வயக்குறு வந்திகை—வளைந்த சந்தினையுடைய மூங்கில்போலும்தோளினையும் விளக்கமுற்றிய ||கைவந்தியினையும்,

---

* இப்புத்தகம் 201 - ஆம் பக்கத்தின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

† பி - ம். வாய்ந்த.

‡ "வார்ந்திலங்குவையெயிற்றுச்சின்மொழியரிவை" (குறுந். 14.)

§ பி - ம். தொழிலெழுதினமுலை

|| கைவந்தி - கையில் தோளின்கீழ் அணியப்படும் ஆபரணம்; இப்பெயர் வழக்கிலுமுள்ளது.

தொய்யில் பொறித்த சோர்ந்து உகுவன்ன சுணங்கு எதிர் இள முலை—தொய்யிலால் வல்லியாக எழுதின நெகிழ்ந்துசிந்துமாறுபோன்ற சுணங்குதோற்றிய இளையமுலையினையும்.

தொய்யில் - எழுதுங்குழம்பு.

417. மை உக்கன்ன *மொய் இரு கூந்தல் - மையொழுகினாற்போன்ற செறிந்த கரியமயிரினையுமுடைய,

418. மயில் இயலோரும் மடமொழியோரும் - மயிலின்றன்மையையுடையோரும் மடப்பத்தையுடைய வார்த்தையினையுடையோரும்.

419. †கைஇ மெல்லிதின் ஒதுங்கி கைபெறிந்து - தம்மைக்கோலஞ் செய்து மெத்தெனநடந்து கையைத்தட்டி,

420. கல்லா மாந்தரொடு நகுவனர் திளைப்ப—காமநுகர்ச்சியினையன்றி வேறொன்றையுங்கல்லாத இளையோருடனே மகிழ்ந்தனராய்ப் புணரும்படி.

421. [புடையமை பொலிந்த ‡வகையமை செப்பிற்:]

புடை அமை செப்பில்—புடைபடுதலமைந்த செப்பிடத்தில்.

பொலிந்த வகை அமை செப்பில் —பொலிவுபெற்ற கூறுபாடமைந்த செப்பிடத்திற் பண்ணியம் (422) என்க.

422. §காமர் உருவின் தாம் வேண்டும் பண்ணியம் - விருப்பமருவிய வடிவினையுடைய நுகர்வார் தாம்விரும்பும் நுகர்பொருள்களை,

423. நமழ் நறு பூவொடு மனை மனை மறுக - மிகவுநாறும் நறியபூவுடனேயேந்தி ||மனைகடோறும் உலாவிநிற்க.

நலத்தராய்ச் (409) செய்யராய் நோக்கினராய் (412) மாமையராய் (413) வாயராய்த் தோளினையும் (414) வந்திகையினையும் (415) முலையினையும் (416) கூந்தலினையுமுடைய (417) மயிலியலோரும் மடமொழியோரும் (418) கைஇ ஒதுங்கி எறிந்து (419) மாந்தரொடு திளைக்கும்படி (420) தொன்முதுபெண்டிர் (409) பண்ணியத்தைப் (422) பூவோடே ஏந்தி மனைமனைமறுக (423) எனக்கூட்டுக

424-5. மழை கொள குறையாது புனல் புக ¶மிகாது கரை பொருது இரங்கும் முந்நீர் போல—மேகம் முகக்கக் குறைவுபடாமல் யாறுகள்பாய்தலின் மிகுதலைச்செய்யாமற் கரையைப் பொருது ஒலிக்கும் கடல்போல,

---

* பி - ம். ஐம்பாற்கூந்தல்.

† பி - ம் தைஇ.

‡ பி - ம் மடையமைசெப்பிற்காமவுருவிற்.

§ காமர் மருவும் உருவென விரிக்க; "காமருநோக்கினை" (கலி. 80) என்பதன் விசேடவுரையைப்பார்க்க; "காமரு குவளை" (சிலப 4: 4) என்புழி, 'காமம் வருமென்பது விகாரத்தாற் காமருவென நின்று கண்டார்க்கு விருப்பம்வருமென்பதாயிற்று' என்பர், அடியார்க்குநல்லார்.

|| பி - ம். மனைகடோறுமனைகடோறும்.

¶ பி - ம். நிறையாது.

426 - *கொள கொள குறையாது தா தா மிகாது—பலரும்வந்து கொள்ளக்கொள்ளக் குறையாமற் பலரும் மேன்மேலுங் கொண்டுவரக் கொண்டுவர மிகாமல்,

427 - 8. [கழுநீர் கொண்ட வெழுநா ளந்தி, யாடுதுவன்று விழவி னாடார்த் தன்றே :]

கழுநீர் கொண்ட அந்தி - தீவினையைக் கழுவுதற்குக்காரணமான தீர்த்த நீரைத் தன்னிடத்தேகொண்ட அந்திக்காலம்,

ஆடு துவன்று விழவின் எழுநாள் அந்தி—வேறொரிடத்தில்லாத வெற்றி நெருங்குந் திருநாளினைத் தன்னிடத்தேயுடைய ஏழாநாளந்தியில்,

†கால்கொள்ளத்தொடங்கிய ஏழாநாளந்தியிலே தீர்த்தமாடுதல் மரபு.

நாடு—அவ்விழவிற்குத்திரண்ட நாட்டிலுள்ளார்,

ஆர்த்தன்றே—ஆர்த்தஆரவாரம்.

அற்றேயென்பது அன்றேயென மெலிந்ததாக்கி உவமவுருபாக்கலு மொன்று.

429. [மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்:] பிறங்கிய மாடம் மலி புகழ் கூடல்—பெரிய ‡நான்மாடத்தாலே மலிந்தபுகழைக் கூடுதலையுடைய மதுரை (699) என மேலேகூட்டுக.

430. [நாளங் காடி நனந்தலை:] நன தலை நாள் அங்காடி—அகற்சியை யுடைத்தாகிய இடத்தினையுடைய நாட்காலத்துக் கடையில்,

கம்பலை—ஆரவாரம்,

---

* "மழைகொளக் குறையாது புனல்புக மிகாது", "கொளக்கொளக குறையாச்செல்வத்து" (பதிற். 45, 82), "கொளக்குறைபடாஅக் கோடுவளா குட்டத்து" (அகநா. 162), "கொளக்கொளக் குறைபடாஅக் கூழுடை வியனகர்" (புறநா. 70.)

† ஏழுநாளிற் செய்யப்பெறுந் திருவிழா, 'கணம்' எனப்படும்; திருப பெருந்துறைப்புராணம் புரூரவன் திருவிழாச்செய்த படலம், 50 - ஆம் பாடல் பார்க்க; "ஆத்தமா மயனு மாலு மனறிமற் றொழிந்த தேவர், சோத்தமெம பெருமா னென்று தொழுதுதோத் திரங்கள் சொல்லத், தீர்த்தமா மட்டமிழுன சீருடை யேழு நாளுங், கூத்தராய் வீதி போந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே" (திருக்குறுக்கை. திருநா. தே.) என்பதும் ஈண்டு ஆராயததக்கது.

‡ "நான் மாடக் கூடன் மகளிரு மைந்தரும" (கலி. 92) என்பதும், 'நான்குமாடம் கூடலின் நான்மாடக்கூடலென்றாயிற்று; அவை திருவாலவாய் திருநள்ளாறு, திருமுடங்கை. திருநடுவூர்; இனி, கன்னி, கரியமால், காளி, ஆலவாயென்றுமாம்' என்னும அதன் விசேடவுரையும், "அம்புத நால்களா னீடுகூடல்" (திருநள்ளாறும் திருவாலவாயும்; திருஞான. தே) என்னும் திருவாக்கும், "ஈசனார் மகிழ்ந்ததானம்" (திருவாலா. நகர. 12) என்பது முதலிய திருவிருத்தங்கள நான்கும், "கன்னிதிரு மால் காளி யீசன் காக்குங் கடிமதில சூழ் மாமதுரை" (ஷை பயன்முதலியன, 5) என்பதும் நான்மாடங்கள் இனன வென்பதைப் புலப்படுத்தும்,

உருவப்பல்கொடியும் (366) புனைகொடியும் (368) நன்கொடியும் (371) களிநவில்கொடியும் (372) குழூஉக்கொடியும் பதாகையும் நிலைஇ (373) அருவி யினுடங்கும்படி (374) வகைபெறவெழுந்து மூழ்கி (357) இசைக்கும் பல் புழையையுடைய நல்ல இல்லினையும் (358) சும்மையினையுமுடைய (364) தெருவுகளில் (359) பெருநியமித்து (365) நாளங்காடியிலே (430) பூவினர் (397) முதலியோர் இருத்தருகையினால் (406) மறுகுதலினால் (423) எழுந்த கம்பலை (430) நன்பணையறைவனர் நவலுகையினாலே (362) அதற்குத் திரண்டநாடு (428) அந்தியில் (427) ஆர்த்ததேயென வினைமுடிக்க.

'ஆர்த்தன்று' என்னுமுற்றுச்சொல் படுத்தலோசையாற் பெயர்த்தன்மை யாய்த் தேற்றேகாரம் பெற்றுநின்றது

431 - 2. வெயில் கதிர் *மழுங்கிய படர் கூர் ஞாயிறு செக்கர் அன்ன— வெயிலையுடைய கிரணங்கள் ஒளிமழுங்கிய செலவுமிக்க ஞாயிற்றையுடைய செக்கர்வானத்தையொத்த.

432 - 3. சிவந்து நுணங்கு உருவின் கண் பொருபு †உகூஉம் ஒள் சவிங் கம—சிவந்து நுண்ணிதாகும் வடிவாலே கண்களை ‡வெறியோடப்பண்ணிச் சிந்திவிழுமாறுபோன்ற ஒள்ளிய பூத்தொழிலையுடைய சேலைகளை,

434. பொன் புனை வாளொடு பொலிய கட்டி—பொன்னிட்ட உடைவா ளோடே அழகுபெறக் கட்டி,

435 - 40. [§திண்டேர்ப் பிரம்பிற் புரளுந் தானைக் கச்சந் தின்ற கழ தயங்கு திருந்தடி, மொய்ம்பிறந்து திரிதரு மொருபெருந் தெரியன், மணிதொ டாந தன்ன வொண்பூங் கோதை, யணிகிளர் மார்பி னாரமொ டளைஇக். காலியக் கனன கதழ்பரி கடைஇ :]

புரளும் தானை—தோளிலேகிடந்தசையும் ||ஒலியலினையும்,

கச்சம் தின்ற கழல் தயங்கு திருந்து அடி—கோத்துக்கட்டிய கச்சுக்கிடந்து தழும்பிருந்த வீரக்கழலசையும் ¶பிறக்கிடாத அடியினையும்,

மொய்ம்பு இறந்து திரிதரும் ஒரு பெரு தெரியல் - உலகத்துள்ளார்வலி களைக்கடந்து புகழ்ச்சியால் எங்குந்திரியும் ஒன்றாகிய பெரிய வேப்பமாலை யினையும்.

அணி கிளர் மாபின ஆரமொடு அளைஇ மணி தொடர்ந்தன்ன ஒள் பூ கோதை—அழகுவிளங்கும் மார்பிற்கிடக்கின்ற ஆரத்தோடேகலந்து மாணிக்க மொழுகினாலொத்த ஒள்ளிய செங்கழுநீர்மாலையினையுமுடையராய்,

---

* பி - ம். மழுகிய.
† பி - ம். கூடும்.
‡ வெறியோடப்பண்ணி - மயக்கி.
§ பி - ம். திண்டேரப்பிற்.
|| ஒலியல் - இங்கே மேலாடை; "உடையு மொலியலுஞ் செய்யை" (பா. 19: 97.)
¶ பிறக்கு - பின்.

பிரம்பின் நிண் தேர் கால் இயக்கன்ன. கதழ் பரி கடைஇ—விளிம்பிலே வைத்த பிரம்பினையுடைய நிண்ணிய தேரிற்பூண்ட காற்றினுடைய செலவினை யொத்த விரைந்த குதிரைகளைச் செலுத்தி,

441. காலோர் காப்ப காலென கழியும்—காலாட்கள் சூழ்ந்துகாப்பக் காற்றென்னும்படி கடிதிற்செல்லும்,

442 - 3. [வான வண்கை வளங்கெழு செல்வர், காண்மதி முருக்கை:] கான் மலிழ் இருக்கை வானம் வன் கை வளம் செழு செல்வர்—காட்காலத்து மலிழ்ந்திருக்கின்ற இருப்பிலே மேகம்போலே வரையாமற்கொடுக்கும் வளிய கையினையுடையராகிய வளப்பம்பொருந்தின செல்வர்.

தானை (135) முதலியவற்றையுடையராய்க் கட்டிக் (434) கடைஇ (440) கழியும் (441) செல்வரென்க.

443 - 4. காண்மார் பூணுறு தெள் அரி பொன் செம்பு ஒலிப்ப—விழா வைக்காண்டற்குப் பூண்களோடே தெள்ளிய உள்ளின்மணிகளையுடைய பொன் னாற்செய்த சிலம்புகளொலிக்கும்படி மேனிலத்துள்ளின்றுமிழிதலால்,

செம்பொலிப்பவென்பதனால் இழிதல்பெற்றும்.

444 - 6. [ஒள்ளழற். முறை விளங்கிய காப்பொ னவிரிமை, யணங்கு *வீழ் வள்ள பூந்தொடி மகளிர்.] அணங்கு வீழ்வு அன்ன ஒள் அழல் நா அர வினையிய ஆய் பொன் அவிர் இமை பூ தொடி மகளிர்—வானுறைதெய்வங் களின் வீழ்ச்சியையொத்த ஒள்ளியதெருப்பிலே வலியதனிளங்கிய அழகிய பொன்னாற்செய்த விளக்குப்பூண்களையும் பூத்தொழிலையுடைய தொடியினை முடைய மகளிர்.

இவர் காயன்மார் கோயில்களிற் சேவிக்குமகளிர்.

447. மணம் கமழ் காற்றம் தெரு உடன் கமழ—புழுகுமுதலியன காறு கின்றநாற்றம் தெருவுகளெல்லாமணக்க,

மணம், ஆகுபெயர்.

448. ஒள் †குழை சுடரும் ஒளி செழு திருமுகம்—ஒள்ளிய மகரக்குழை யை உள்ளடக்கிக்கொண்ட ஒளிபொருந்திய அழகினையுடையமுகம்,

449 - 50. [நிண்கா ழேற்ற வியலிரு விலோதர், தெண்கடற் றிரையி னசைவளி புடைப்ப:] நிண் காழ் ஏற்ற வியல் இரு விலோதம் அசை வளி தெள் கடல் திரையின் புடைப்ப - நிரணிய கொடித்தண்டுகளிலேற்ற அகலத் தினையுடைய பெருங்கொடிகளே அசைகின்ற காற்றுத் தெளிந்த கடற்றிரை போல எழுந்துவிழும்படி அடிக்கையிலே,

451. நிரை நிலை மாடத்து அரமியம் நோறும்—ஒழுங்குபட்ட நிலைமை யினையுடைய மாடங்களின் நிலாமுற்றங்களோறும்,

---

* பி - ம். வீழ்பன்ன.

† பி - ம். குழையிருந்த.

452. மழை மாய் மதியின் தோன்றுபு மறைய—மஞ்சிலேமறைதலுற் றிங் கனைப்போல ஒருகாற்றோன்றி ஒருகால்மறைய,

அரமியந்தோறுமிருந்து (451) விழாக்கோணுமகளிர் முகம் (448) விலோ தத்தை (449) வளிபுடைக்கையினுலே (450) தோன்றுபுமறையவென்க.

சாயன்மார் எழுந்தருளுங்காற் கொடியெடுத்தல் இயல்பு.

453 - 5. [சீரு நிலனுந் தீயும் வளியு, மாக விசும்போ டைந்துட னியற் றிய, மழுவாணெடியோன் தலைவ னஞ்:] மாகம் விசும்போடு வளியும் தீயும் நீரும் நிலனும் ஐந்து உடன் இயற்றிய *மழுவாள் நெடியோன் தலைவனஞ்— திக்குக்களையுடைய ஆகாயத்துடனே காற்றுத் தெருப்புந் நீரும் நிலனுமாகிய ஐந்தினையும் சேரப்படைத்த மழுவாகிய வாளையுடைய பெரியோன் எனுமோ ரின் முதல்வனுகக்கொண்டு.

456. †மாசு அற விளங்கிய யாக்கையர்—தீர்த்தமாடிய வழியினையுடைய ராய்.

456 - 8. ‡சூழ் சுடர் §வாடா பூவின் இமையா காட்டத்து ‖காற்றம் உணவின் உரு கெழு பெரியோர்க்கு—தெய்வத்தன்மையாற்சூழ்ந்த ஒளியினையுடைய வாடாதபூக்களையும் இதழ்குவியாத கண்ணியினையும் அமிழ்தமாகிய உணவினையு முடைய அச்சம்பொருந்திய மாயோன் முருகன்முதலாகிய தெய்வங்கட்கு,

459. மாற்றரு மரபின் உயர் பலி கொடுமார்—விலக்குதற்கரிய முறை மையினையுடைய உயர்ந்த பலிகளைக் கொடுத்தற்கு.

460. அந்தி விழவில்—அந்திக்காலத்துக்கு முன்னர் எடுத்த விழாவிலே.

தூரியம் சதங்க—வாச்சியங்களொலிப்ப.

செல்வர் (442) மாசறவினங்கிய யாக்கையராய்க் (456) கமழ (447) மறைய (452) நெடியோன் தலைவனுகப் (455) பெரியோர்க்குப் (458) பலி கொடுக்கைக்கு (459) அந்திவிழாவிலே தூரியங்சதங்கவென்க.

461 - 5. [நின்கதிர் மதாணி யொண்குறு மாக்கோ, யோம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித், தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத், தாமு மவரு மோராங்கு வினங்கக், காமர் கவினிய பேரிளம் பெண்டிர்:]

நின் கதிர் மதாணி காமர் கவினிய பெரு இள பெண்டிர்—நிண்ணிய ஒளியினையுடைய பேரணிகலங்களையுடையராய் விருப்பம் அழகுபெற்ற பெரிய இளமையினையுடைய பெண்டிர்,

---

* மழுவாணெடியோனென்றது சிவபிரானை; இச்சூத்திரத்து, "எற்றுவல லுயரிய" (புறநா. 56) என்னும் செய்யுள் வலியுறுத்தும்.

† "மாசற விளைக்கு முருவினர்" (முருகு. 128.)

‡ பி - ம். தூசுடை.

§ "வாடாப் பூவி னிமையா காட்டத்து, சாற்ற வுணவி னெருமை" (புறநா. 62.)

‖ பி - ம். கொற்றவுணவின்.

தாம் முயன்றி புணர்த்து ஓம்பினர் தழீஇ—தாம் முயன்றுசெலவுசெய்து கூடிப் பாதுகாக்கும் கணவரையும் கூட்டிக்கொண்டு,

*தாது அணி தாமரை போது பிடித்தாங்கு ஒன் குறு மாக்கோல் தழீஇ—தாதுசேர்ந்த செவ்வித்தாமரைப்பூவைப் பிடித்தாற்போல் ஒள்ளிய சிறுபிள்ளையையும் எடுத்துக்கொண்டு,

தாமும் அவரும் ஓராங்கு விளங்க—தாமும் கணவரும் பிள்ளைகளும் சேர்ந்திலேவிளங்கும்படியாக,

463 7. [பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சி, நெய்த :] பூவினர் புகையினர் தொழுவனர் நெய்த பழிச்சி—பூசைக்குவேண்டும் பூவினையுடைய ராய்த் தூபங்களையுடையராய் வணங்கினராய் மிருந்தத்துதித்து.

467. புறங்காக்கும் கடவுள் பள்ளியும்—பாதுகாத்தலைத்தம் பௌத்த பள்ளியும்,

468. நெய்த வேதம் விளங்க பாடி—அதர்வவேதமொழிந்த முதன்மைப் பட்ட வேதங்களைத் தமக்குப் பொருடெரியும்படியோதி,

அதர்வம் தலையாயவோத்தன்மை †பொருளிற்கூறினும்.

469 விழு சீர் எய்திய ஒழுக்கமொடு புணர்ந்து—விழுமிய தலைமை யோடுபொருந்தின யாகங்கண்முதலிய தொழில்களோடே நிலகாலம்பொருந்தி,

470 நிலம் அமர் வையத்து—நால்வகைநிலங்களமர்ந்த உலகத்தே,

ஒரு நாம் ஆகி—ஒன்றுமெயபிசமம் தாங்களேயாய்,

471. உயர் நிலை உலகம் இவண் நின்று எய்தும்—உயர்ந்த நிலைமையை யுடைய தேவருலகத்தை இவ்வுலகிலேயின்றுசேரும்,

472, அறம் செறி பிழையா அன்பு உடை நெஞ்சின்—தருமத்தின்வழி ஒருவாலமுந்தப்பாத பல்லுயிர்கட்கும் அன்புடைத்தாகிய நெஞ்சாலே,

473. பெரியோர் மேஎய்—வேண்முத்தராயிருப்பாரிடத்தே நிலகாலம் பொருந்தின்று.

‡இனிதின் உறையும்—ஆண்டுப்பெற்ற வீட்டின்பத்தாலே இனிதாகத் தங்கும் பள்ளி (474),

474. [குன்று குயின்றன்ன வட்டணைப் பள்ளியும் :]

குன்று குயின்றன்ன பள்ளியும்—மலையை உள்வெளியாகவாங்கி இரு பிடமாகினுற்போன்ற பிரமவித்துக்களிருப்பிடமும்,

§அட்டணர்—வேதார்த்தத்தை எக்காலமும்பார்ப்பார்,

---

* பி - ம். தாதவிழ்.

† தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 20 - ச. உரைபார்க்க; பி - ம். பொருளியலிற்.

‡ பி - ம் இனிதினிது.

§ "அட்டதை அணவுவார் அட்டணர்; என்றது வேதார்த்தத்தையே பொருளென்றுமேற்கொண்டு பார்ப்பாரென்றவாறு" (கலி. கடவுள். உ.)

அந்தணர் (474) பாடி (468) அன்புடைநெஞ்சாலே (472) தேவருலகத் தையெய்தும் (471) ஒழுக்கத்தோடே நிலகாலின்று (469) பின்னர் வேதாந் தத்தையுணர்ந்து பெரியோரை மேவல் (473) வையத்தே ஒருதாமாகி (470) உறையும் (473) பள்ளியும் (474) எனமுடிக்க.

475 - 6 வண்டு படபழுகிய தேன் ஆர் தோற்றத்து பூவும் புகையும் *சாவகர் பழிச்ச—வண்டுகள்படியும்படி பருவமுதிர்ந்த தேனிருந்த தோற்றத் தையுடைய பூக்களையும் புகையினையுமேற்றி விரதங்கொண்டோர் தழிக்க,

477 - 83. [சென்ற காலமும் †வருஉ நிமயமும் மின்றிவட் டோன்றிய வொழுக்கமொடு கண்குணர்ந்து, வானமு நிலனுஞ் தாமுமு துணருஞ், சான்ற கொள்கைச் சாயா யாக்கை, யான்றடங் கறிஞர் செறித்தனர் கோண்மார், கல் பொளிர் தன்ன வீட்டுவாய்க் கரண்டைப், பல்புரிச் சிலிவி காற்றி கல்குவர்:]

சென்ற காலமும் வருஉம் அமயமும் இன்று இவண் தோன்றிய ஒழுக்க மொடு கண்கு உணர்ந்து கல்குவர—சென்றகாலத்தையும் வருகின்றகாலத்தை யும் இன்று இவ்வுலகில் தோன்றிடக்கின்ற ஒழுக்கத்தோடே மிகவுணர்ந்து உலகத்தார்க்குச் சொல்லுதல்வரும்படி,

வானமும் நிலனும் தாம் முழுது உணரும் அறிஞர்—தேவருலகையும் அதன்செய்கைகளையும் எல்லாநிலங்களின் செய்திகளையும் தாம் நெஞ்சாலறிதற் குக்காரணமான அறிஞர்,

இஃது எதிர்காலங்கூறிற்று.

சான்ற கொள்கை—தமக்கமைந்த விரதங்களையும்.

சாயா யாக்கை—அவ்விரதங்களுக்கு இளையாத மெய்யினையுமுடைய அறி ஞர் (481),

ஆன்ற அடங்கு அறிஞர்—கல்விகளெல்லாவிறைத்து களிப்பின்றியடங்கின அறிவினையுடையார்,

‡செறித்தனர்—நெருங்கினவருடைய சேக்கை (487) என்க.

கோண்மார்—கோற்கைக்கு,

கல் பொளித்தன்ன இட்டு வாய் §கரண்டை பல் புரி சிலிவி காற்றி—கல்லைப்பொளித்தாற்போன்ற ||இட்டியவாயையுடைய குண்டிகையைப் பல வடங்களையுடைய தாழ்நிபிலே தாங்கி செறித்தன (481) என்க.

484. கயம் கண்டன்ன—குளிர்ச்சியொற் கயத்தைக் கண்டாற்போன்ற,

வயங்கு உடை நகரத்து—விளங்குதலையுடைய கோயிலிடத்துச் சேக்கை (487) என்க.

---

* சாவகர் - சைனரில் துறவாது விரதங்காக்கும் இல்லறத்தார்.
† பி - ம். வருஉஞ்சமயமும்.
‡ பி - ம். செறிவர்.
§ "சிலிக்கரண்டையன்" (மணி. 3: 86.)
|| இட்டிய - தெரிய.

485. செம்பு இயன்றன்ன செ சுவர் புனைந்து—செம்பாற்செய்தாலொத்த செவ்விய சுவர்களைச் சித்திரமெழுதி,

486. நோக்கு விசை தவிர்ப்ப மேக்கு உயர்ந்து—கண் பார்க்கும்விசையைத் தவிர்க்கும்படி மேல்நிலமுயர்ந்து,

486 - 8 [ஓங்கி, யிறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையும், குன்றுபல குழீஇப் பொலிவன தோன்ற:]

குன்று பல குழீஇ பொலிவன தோன்ற ஓங்கி—மலைகள்பலவுந்திரண்டு பொலிவனபோலத் தோன்ற உயர்ந்து வயங்குடைநகரம் (484) என்க.

இறும்பூது சான்ற நறு பூ சேக்கையும்—அதிசயமமைந்த நறியபூக்களைச் சூழவுடைய அமணப்பள்ளியும்,

சேக்கப்படுமிடத்தைச் சேக்கையென்றார். இவர்கள் வருத்தமறப் பறித்து வழிபடுதற்குப் பலபூக்களைச் சூழவாக்குதலின், நறும்பூஞ்சேக்கை யென்றார்.

புனைந்து (485) உயர்ந்து (486) தோன்ற (488) ஓங்கிச் (486) சாவகர் பழிச்ச (476), வயங்குதலையுடைய நகரத்திடத்துக் (484) கொள்கையினையும் யாக்கையினையுமுடைய (480) அறிஞர் (481) உணர்ந்து (478) நல்குவர (483) நோன்மார் (481) சிமிலியிலோற்றிச் (483) செறிந்தனருடைய (481) சேக்கையுமெனக்கூட்டுக.

489. அசசமும்—நடுவாகக்கூறுவரோ கூறாரோவென்று அஞ்சிவந்த அச்சத்தையும்,

அவலமும்—அவர்க்குத் தோல்வியால் நெஞ்சிற்றோன்றும் வருத்தத்தையும்.

ஆர்வமும் நீக்கி—அவர் தம்நெஞ்சுகருதின பொருள்கண்மேற்றோன்றின பற்றுள்ளத்தினையும் போக்கி,

என்றது - அவர்கள் நெஞ்சுகொள்ள விளக்கியென்றவாறு.

490. செற்றமும் உவகையும் செய்யாது காத்து—ஒருகூற்றிற் செற்றஞ் செய்யாமல் ஒருகூற்றில் உவகைசெய்யாமல் நெஞ்சினைப்பாதுகாத்து,

491. ஞெமன் கோல் அன்ன செம்மைத்தாகி—துலாக்கோலையொத்த நடுவுநிலைமையையுடைத்தாய்.

492. சிறந்த சொன்கை அறம் கூறு அவையமும்—இக்குணங்களாற் சிறந்த விரதங்களையுடைய தருமநூலைச் சொல்லுந்திரளும்.

493. நறு சாந்து நீவிய சேழ் கிளர் அகலத்து பெரியோர் (495) - சரிய சந்தனத்தைப்பூசிய நிறம் விளங்குமார்பினையுடைய பெரியோர்.

யாகத்திற்குச் சந்தனம்பூசுதல் மரபு.

494 - 8. [ஆவுதி மண்ணி யவிர்துகின் முடித்து, மாவிசும்பு வழங்கும் பெரியோர்போல. நன்றுந் தீதுங் கண்டாய்ந் தடக்கி, யன்பு மறனு மொழியாது காத்துப், பழியொரீஇ யுயர்ந்து பாய்புகழ் நிறைந்த :]

ஆவுதி மண்ணி மா விசும்பு வழங்கும் பெரியோர் போல—*யாகங்களைப் பண்ணிப் பெரிய சுவர்க்கத்து ஏறப்போம் அந்தணர் அரசனை அடக்குமாறு போல,

நன்றும் தீதும் கண்டு ஆய்ந்து அடக்கி—அரசனிடத்துள்ள நன்மையும் தீமையும் நெஞ்சத்தாலேகண்டு அத்தீங்குகளையாராய்ந்து அவற்றிலே ஒழுகாமலடக்கி,

அன்பும் அறனும் ஒழியாது காத்து—சுற்றத்திடத்துச்செல்லுமன்பும் எவ்வுயிர்க்கண்ணும் நிகழுந்தருமமும் ஒருகாலமும்போகாமல் தம்மிடத்தே பரிசரித்து,

பழி ஓரீஇ உயர்ந்து—பழி தம்மிடத்துவாராமல் நீக்கி அதனானே ஏனையோரினும் உயர்ச்சியெய்தி,

பாய் புகழ் நிறைந்த—பரந்த புகழ்நிறைந்த,

அவிர் துகில் முடித்து—விளங்குகின்ற †மயிர்க்கட்டுக் கட்டி,

499. செம்மை சான்ற காவிதி மாக்களும்—தலைமையமைந்த காவிதிப் பட்டங்கட்டின அமைச்சரும்,

500. அறன் நெறி பிழையாது ஆற்றின் ஒழுகி—இல்லறத்திற்குக் கூறிய வழியைத்தப்பாமல் இல்லறத்திலேநடந்து.

501. குறு பல் குழுவின் குன்று கண்டன்ன—அண்ணிய பல திரட்சியையுடையமலைகளைக் கண்டாற்போன்ற.

502. பருந்து இருந்து உகக்கும் பல் மாண் நல் இல்—பருந்து இளைப்பாறியிருந்து பின்பு உயரப்பறக்கும் பலதொழிலினமாட்சிமைப்பட்ட நல்ல இல்லில்.

503 பல் வேறு பண்டமோடு ஊண் மலிந்து கவினி—பலவாய்வேறுபட்ட பண்டங்களோடே பலவுணவுகளுமிக்கு அழகுபெற்று.

504. மலையவும் நிலத்தவும் நீரவும் பிறவும்—மலையிடத்தனவும் நிலத்திடத்தனவும் நீரிடத்தனவும் பிற இடத்தனவுமாகிய பண்ணியம் (506).

505. பல் வேறு திரு மணி முத்தமொடு பொன் கொண்டு—பலவாய் வேறுபட்ட அழகினையுடைய மணிகளையும் முத்தினையும் பொன்னையும் வாங்கிக்கொண்டு,

506. சிறந்த தேஎத்து—மணிகளும் முத்தும் பொன்னும் பிறத்தற்குச் சிறந்த தேசத்தினின்றும்வந்த,

பண்ணியம் பகர்நரும்—பண்டங்களைவிற்கும் வணிகரும்.

ஊண்மலிந்து கவினிக் (503) குன்றுகண்டன்ன (501) நல்லஇல்லிலேயிருந்து (502) ஆற்றினொழுகிச் (500) சிறந்ததேஎத்துவந்த (506) திருமணி முத்தமொடு பொன்கொண்டு (505) பிறவுமாகிய (506) பண்டங்களை விற்பாருமென்க

---

* யாகஞ்செய்து சுவர்க்கமடைதல்: (பழ. 316; சிலப. 28: 137 - 8)

† முல்லை. 53.

507. [மழையொழுக் கறாஅப் பிழையா விளையுள்:] அறாஅ ஒழுக்கு மழை பிழையா விளையுள்—இடைவிடாமற் பெய்கின்ற மழையால் தவறாத விளைதலையுடையதாகிய மோகூர் (508),

508. பழையன் மோகூர் — பழையனென்னுங் குறுநிலமன்னனுடைய மோகூரிடத்து,

508 - 9. [அவையகம் விளங்க, நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன:] அவை அகம் விளங்க நாற்கோசர் மொழி தோன்றி அன்ன —நன்மக்கள் திரளிடத்தே விளங்கும்படி அறியக்கூறிய நான்குவகையாகியகோசர் வஞ்சின மொழியாலே விளங்கினாற்போன்ற,

510. தாம் மேஎந்தோன்றிய நால் பெரு குழுவும்—தமதுமொழியால் தாம் மேலாய்விளங்கிய நால்வகைப்பட்ட பெரியதிரளும்,

ஐம்பெருங்குழுவில் அமைச்சரைப்பிரித்து முற்கூறினமையின். ஈண்டு எனை நாற்பெருங்குழுவையுங்கூறினார். ஐம்பெருங்குழுவாவன: "அமைச்சர் புரோகிதர் சேனா பதியர், தூத ரொற்ற ரிவரென மொழிப."; இளங்கோவடிகளும், *"ஐம்பெருங் குழுவு மெண்பே ராயமும்" என்றார்.

511. [கோடுபோழ் கடைநரும்:] போழ் கோடு கடைநரும்—அறுத்த சங்கை வளைமுதலியனவாகக் கடைவாரும்,

திரு மணி குயினரும்—அழகிய மணிகளைத் துளையிடுவாரும்,

512. சூடு உறு நல் பொன் சுடர் இழை புனைநரும்—சுடுதலுற்ற நன்றாகிய பொன்னை விளங்கும்பணிகளாகப்பண்ணுந் தட்டாரும்,

513. பொன் உரை காண்மரும்—பொன்னையுரைத்தவுரையை அறுதியிடும் பொன்வாணிகரும்,

கலிங்கம் பகர்நரும்—புடைவைகளை விற்பாரும்,

514. செம்பு நிறை கொண்மரும்—செம்பு நிறுக்கப்பட்டதனை வாங்கிக் கொள்வோரும்,

வம்பு நிறை முடிநரும்—கச்சுக்களைத் தம் தொழின்முற்றுப்பட முடிவாரும்,

515. பூவும் புகையும் ஆயும் மாக்களும்—பூக்களையும் (?) சாந்தையும் நன்றாக ஆராய்ந்து விற்பாரும்,

516 - 7. [எவ்வகைச் செய்தியு முவமங் காட்டி. நுண்ணிதி னுணர்ந்த:] எவ்வகை நுண்ணிதின் உணர்ந்த செய்தியும் உவமம் காட்டி—பலவகைப்பட்ட கூரிதாகவுணர்ந்ததொழில்களையும் ஒப்புக்காட்டி,

சித்திரமெழுதுவார்க்கு வடிவின்றொழில்கடோன்ற எழுதுதற்கரிதென பதுபற்றிச் செய்தியுமென்றார்.

517 - 8. †நுழைந்த நோக்கின் கண்ணுள் வினைஞரும்—கூரிய அறிவினையுடைய சித்திரகாரிகளும்,

---

* சிலபபதிகாரம், இந்திரவிழவூரெடுத்தகாதை, 157.

† "நுழைபுலம்" (திருக்குறள், 407.)

நோக்கினார்கண்ணிடத்தே தம் தொழிலைநிறுத்துதலிற் கண்ணுள்வினைஞரென்றார்.

பிறரும் கூடி—யான் கூறப்படாதோரும் திரண்டு.

519 - 20. தெள் திரை அவிர் அறல் கடுப்ப ஒள் பல் குறியவும் நெடியவும் மடி தருஉ விரித்து—தெளிந்த திரையில்விளங்குகின்ற அறலையொப்ப ஒள்ளிய பலவாகிய சிறியனவும் நெடியனவுமாகிய மடிப்புடை வைகளைக் கொண்டுவந்து விரித்து,

மடித்தது அறலுக்குவமை.

521. சிறியரும் பெரியரும் கம்மியர் குழீஇ—சிறியோரும் பெரியோருமாகிய நெய்தற்றொழிலைச்செய்வார் திரண்டு,

522. நால் வேறு தெருவினும் நால் உற நிற்றர—நான்காய்வேறுபட்ட தெருவுகடோறும் ஒருவர்காலோடு ஒருவர்கால் நெருங்க நிற்றலைச்செய்ய,

கம்மியர் (521) விரித்துக் (520) குழீஇ (521) நிற்றலைச்செய்ய.

இஃது அந்திக்கடையில் தெருவிற் புடைவைவிற்பாரைக் கூறிற்று.

கோயிலைச்சூழ்ந்த ஆடவர்தெரு நான்காதலின், நால்வேறுதெருவென்றார். இனிப் பொன்னும் மணியும் புடைவைகளும் *கருஞ்சரக்கும்விற்கும் நால் வகைப்பட்ட வாணிகர்தெருவென்றுமாம.

523 - 5. கொடு பறை கோடியர் கடும்பு உடன் வாழ்ததும் தண் கடல் நாடன் ஒள் பூ கோதை பெரு நாள் இருக்கை—கண்கள்வளைந்த பறையினையுடைய கூத்தருடையசுற்றம் சேரவாழ்த்தும் குளிர்ந்த கடல்சேர்ந்த நாட்டையுடையவனாகிய ஒள்ளிய பனந்தாரையுடைய சேரனுடைய பெரிய நாளோலக்க இருப்பிலே,

525 - 6. †விழுமியோர் குழீஇ விழைவு கொள் கம்பலை கடுப்ப கல்லென (538)—எல்லாக்கலைகளையுமுணர்ந்த சீரியோர் திரண்டு அவனகேட்பத் தருக்கங்களைக்கூறி விரும்புதல்கொண்ட ஆரவாரததையொப்பக் கல்லென்ற ஓசை நடக்க,

பலசமயத்தோரும் தம்மிற்றாம மாறுபட்டுக்கூறுந் தருக்கத்தைச் சேரக் கூறக் கேட்டிருக்கின்ற கம்பலைபோலவென்றார்.

526. பலவுடன்—கூறாதன பலவற்றுடனே,

527. சேறும் நாற்றமும் பலவின் சுளையும்—தேனும் நாற்றமும் உடையவாகிய பலாப்பழத்தின் சுளையும்,

சேறென்றார், சுளையிலிருக்கின்ற தேனை.

528. வேறுபட கவினிய தேம் மா கனியும்—வடிவுவேறுபட அழகு பெற்ற இனிய மாவிற்பழங்களையும்.

---

* கருஞ்சரக்கு - நெல்முதலியகூலங்கள்; (சில. 5: 23 - அரும்பத)

† சேரனவையும் தருக்கமும்: (மணி. 26: 63 - 4.)

"சேறு நாற்றமும் வேறுபடக் கவினிய, பலவின் சுளையுந் தேமாங் கனியும்" என்றும் பாடம்.

529. பல் வேறு உருவிற் காயும்—பலவாய் வேறுபட்ட வடிவினையுடைய பாகற்காய் வாழைக்காய் *வழுதுணங்காய் முதலியகாய்களையும்,

பழனும்—வாழைப்பழம் முந்திரிகைப்பழமுதலிய பழங்களையும்,

530 - 31. கொண்டல் வளர்ப்ப கொடி விடுபு கவினி மெல் பிணி அவிழ்ந்த குறு முறி அடகும்—மழை பருவத்தேபெய்துவளர்க்கையினாலே கொடி கள்விட்டு அழகுபெற்று மெல்லிய சுருள்விரிந்த சிறிய இலைகளையுடைய இலைக கறிகளையும்,

கொடியென்றார், ஒழுங்குபட விடுகின்ற கிளைகளை.

532. [அமிர்தியன் றன்ன நீஞ்சேற்றுக் கடிகையும்:] நீ சேறு அமிர்து இயன்றன்ன கடிகையும்—இனிய பாகினாற்கட்டின அமிர்தம் தேறாகநீண்டார் போன்ற †கண்டசருக்கரைத்தேற்றையும்.

533. புகழ் பட பண்ணிய பெரு ஊன் சோறும் - புகழ்ச்சிகள் உண்டாகச்சமைத்த பெரிய இறைச்சிகளையுடைய சோற்றையும்,

534. கீழ் செல வீழ்ந்த கிழங்கொடு—பாரளவாகவீழ்ந்த கிழங்குடனே,

534 - 5. [பிறவு, மின்சோறு தருநர் பல்வயி னுகர:] பல் வயின் நுகர இன் சோறு பிறவும் தருநர்—பலவிடங்களினும் அநுப்பிக்க இனிய பாற்சோறு பால் முதலியவற்றையுங் கொண்டுவந்து இடுவாரிடத்து எழுந்த ஓசையும்,

என்றது, சோறிடுஞ்சாலைகளை.

536 - 44. [வாலிதை யெடுத்த வளிதரு வங்கம், பல்வேறு பண்ட மிழி தரும் பட்டினத், தொல்லெ னிமிழிசை மானக் கல்லென, நனந்தலை வினைஞர் கலங்கொண்டு மறுகப், பெருங்கடற் குட்டத்துப் புலவுத்திரை யோத, மிருங்கழி மருவிப் பாயப் பெரிதெழுந், துருகெழு பாறுள் வருவன பெயர்தலிற், பல்வேறு புள்ளி னிசையெழுந் தற்றே, யல்லங் காடி யழிதரு கம்பலை:]

நன தலை வினைஞர் கலம் கொண்டு மறுக—அகன்ற இடத்தையுடைய தேசங்களின்வாணிகர் ஈண்டுச்செய்த பேரணிகலங்களைக் கொண்டுபோதல் காரணமாக,

வால் இதை எடுத்த வளி தரு வங்கம்—நன்றாகிய பாய்விரித்த காற்றுக் கொண்டு வருகின்ற மரக்கலம்.

பெரு கடல் குட்டத்து புலவு திரை ஓதம் இரு கழி மருவி பாய பெரிது எழுந்து உரு கெழு பால்காள் வருவன—பெரிய கடல்சூழ்ந்த இடத்தினின்றும் புலானாறுந் திரையையுடையஓதம் கரியகழியிற் புகார்முகத்தேயேறிப் பரக்கின்ற அளவிலே மிக்கெழுந்து அச்சம்பொருந்திய நடுவியாமத்தே வருகின்றவற்றின் பண்டம் (537) என்க.

---

* கத்தரிக்காய். † கற்கண்டு.

பெரிதெழுந்தென்றார், பாயும்வாங்கிச் சரக்கும்பறியாமல் வருகின்றமை தோன்ற. ஓதமருவிப்பாயவென்றார், அவ்வோதம் ஏற்றத்திலே கழியிலேவரு மென்பதுணர்த்தற்கு.

பல் வேறு பண்டம் இழிதரும் பட்டினத்து ஒல்லென் இமிழ் இசை மான—வங்கம்வருகின்றவற்றிற் பலவாய் வேறுபட்ட சரக்கு இறங்குதலைச் செய்யும் பட்டினத்து ஒல்லெனமுழங்குகின்ற ஓசையையொக்க,

மறுகுதற்குவந்த வங்கம் குட்டத்தினின்றும் வருவனவற்றிற் பண்டமிழி யும் பட்டினத்து ஓசைமானவென்க.

பெயர்தலின் பல் வேறு புள்ளின் இசை எழுந்தற்று—இரையை நிறைய மேய்ந்து பார்ப்பிற்கு இரைகொண்டு அந்திக்காலத்துமீளுதலிற் பலசாதியாய் வேறுபட்ட பறவைகளினோசை எழுந்த கன்மைத்து;

அல் அங்காடி அழி தரு கம்பலை—அந்திக்காலததுக் கடையில் மிகுதி யைத்தருகின்ற ஓசை,

கடவுட்பள்ளியிடத்தும் (467) அந்தணர்பள்ளியிடத்தும் (474) சேக்கை யிடத்தும் (487) அவையத்திடத்தும் (492) நாவிதிமாக்களிடத்தும் எழுகின்ற வோசை (499) கோதை (524) யிருக்கையில் (525) விழைவுகொள்கம்பலைகடுப் பக் (526) கல்லென (538) எனமுடிக்க.

பண்ணியம்பகர்நரிடத்தோசையும் (506) நாற்பெருங்குழுவிடத்தோசை யும் (510) பல்வயினுகர இன்சோறு (535) பிறவும் (534) தருநரிடததெழுந்த வோசையும் (535) கோடுபோழ்கடைநர் (511) முதலாகக் கண்ணுள்ளினைஞ ரீறாகவுள்ளாரும் பிறருங்கூடிக் (518) கம்மியருங்குழீஇ (521) நிற்றர (522) எழுந்தவோசையும் பட்டினத்து (537) ஒல்லெனிமிழிசைமானக்கல்லென (538) எனமுடிக்க.

இங்ஙனமுடித்தபின், நியமதது (365) அல்லங்காடியில் அழிதருகம்பலை (544) தூரியங்கறங்குகையினாலும் (460) கம்பலைகடுப்பக் (526) கல்லென கையினாலும் (538) ஒல்லெனிமிழிசைமானக்கல்லென்கையினாலும (539) பல் வேறுபுள்ளின்இசையெழுந்தற்றே (543) எனச்சேரவினைமுடிக்க

கல்லெனவென்பதனை இரண்டிடத்திற்குங்கூட்டுக.

*இவ்வோசைகளின் வேறுபாடுகளைநோக்கிப் பல்வேறுபுள்ளோசைகளை உவமங்கூறினார்.

545 - 6. [ஒண்சுட ருருப்பொளி மழுங்கச் சினந்தணிந்து சென்ற ஞாயிறு:] ஒள் சுடர் உருப்பு ஒளி சினம் தணிந்து மழுங்க சென்ற ஞாயிறு—ஒள்ளிய கிரணங்களையுடைய வெப்பத்தையுடைய ஒளி சினமாறிக் குறையும் படி ஒழுகப்போன ஞாயிறு.

546 - 7. நல் பகல் கொண்டு குடமுதல் குன்றம் சேர பின்னர் நன் றாகிய பாற்பொழுதைச் சேரக்கொண்டு மேற்றிசையிடத்து அந்தகிரியைச் சேருகையினாலே,

---

* சீவக. 93, 828; மணி. 14: 24 - 7.

547 - 9. குணமுதல் நாள் முதிர் மதியம் தோன்றி நிலா வீரிபு பகல் உரு உற்ற இரவு வர—கீழ்த்திசையிடத்தே பதினாறுநாட்சென்றுமுதிர்ந்த நிறைமதி எழுந்து நிலாப்பரக்கையினாலே பகலின்வடிவையொத்த இராக்காலம் வரும்படி,

549. நயந்தோர்—கணவர்பிரிதலிற் கூட்டத்தை விரும்பியிருந்தார்க்கு,

550. காதல் இன் துணை புணர்மார்—தம்மேற் காதலையுடைய தமக்கு இனிய கணவரைக்கூடுதற்கு.

550 - 51. ஆய் இதழ் தண் நறு கழுநீர் துணைப்ப — ஆராய்ந்த இதழ்களையுடைய குளிர்ந்த நறிய செங்கழுநீர்களை மாலைகட்டும்படியாக

551. இழை புனையூஉ— ஈணிகளை யணிந்து,

552. நல் நெடு கூந்தல் நறு விரை குடைய—நன்றாகிய நெடிய மயிரிற பூசின நறிய மயிர்ச்சந்தனத்தை அலைத்து நீக்கும்படியாக,

553. நரந்தம் அரைப்ப—கத்தூரியை அரைக்கும்படியாக.

நறு சாந்து மறுக—நறியசந்தனம் அரைக்கும்படியாக,

554. *மெல் நூல் கலிங்கம் கமழ் புகை மடுப்ப—மெல்லிய நூலாற்செய்த கலிங்கங்களுக்கு மணக்கின்ற அகிற்புகையை ஊட்டும்படியாக.

555 - 6. பெண் மகிழ்வு உற்ற பிணை நோக்கு மகளிர் நெடு கூடர் விளக்கம் கொளீஇ—குணச்சிறப்பால் †உலகத்துப்பெண்சாதி விருப்பமுற்ற மான்பிணை போலும் நோக்கினையுடையமகளிர் நெடியஒளியினையுடைய விளக்கினையேற்றி,

556 - 8. [நெடுநக. ரெல்லை யெல்லா நோயொடு புகுந்து, கல்லென் மாலை நீங்க:]

நெடு நகர் எல்லை எல்லாம்—பெரிய ஊரினெல்லையாகிய இடமெல்லாம்,

கல்லென் மாலை நோயொடு புகுந்து நீங்க—கல்லென்னுமோசையையுடைய மாலை நயந்தோர்க்கு (549) நோயைச்செய்தலோடே புகுந்துபோகையினாலே முந்தையாமஞ்சென்றபின்றை (620) என்க.

நெடுநக (556) ரெல்லையெல்லாம் (557) மகளிர் (555) விளக்கங்கொளீஇக் (556) காதலின்றுணைபுணர்தற்குப் (550) புனையூஉத் துணைப்பக் (551) குடைய (552) அரைப்ப மறுக (553) மடுப்ப (554) இரவுவரும்படி (549) ஞாயிறு (546) குன்றஞ்சேருகையினாலே (547) மாலை (558) நயந்தோர்க்கு (549) நோயொடு புகுந்து (557) பின்னர் நீங்க (558) முந்தையாமஞ்சென்றபின்றை (620) எனக்கூட்டுக

558 நாணு ‡கொள—புணர்ச்சிநீங்கிற்றாகத் தமக்கு §உயிரினுஞ்சிறந்த நாணைத் தம்மிடத்தே தடுத்துக்கொள்ள,

559 - 61. [ஏழ்புணர் சிறப்பி னின்றொடைச் சீறியாழ், தாழ்பெயர் கனைகுரல் கடுப்பப் பண்ணுப்பெயர்த்து, வீழ்துணை தழீஇ:]

---

* சீவக. 71. † சீவக. 587. 2417; பரி. 21: 22 - உரை.

‡ பி - ம். கொளீஇ.

§ "உயிரினுஞ்சிறந்தன்றுநாணே" (தொல். கள. 22.)

ஏழ் புணர் சிறப்பின் இன் தொடை சிறு யாழ் பண்ணு பெயர்த்து — இசை யேழும் தன்னிடத்தேகூடின தலைமையினையுடைய இனிய நரம்பினையுடைய சிறிய யாழைப் பண்களை மாறிவாசித்து,

வீழ் துணை தழீஇ — தம்மைவிரும்பின கணவரைப் புணர்ந்து நாணுக் கொள (568),

பாட்டுக் காமத்தை விளைவித்தலின, யாழைவாசித்து வீழ்துணைதழீஇ யென்றார்.

561 - 2. [வியல்விசும்பு கமழ, நீர்திரண் டன்ன கோதை பிறக்கிட்டு:] நீர் திரண்டன்ன கோதை வியல் விசும்பு கமழ பிறக்கிட்டு — நீர்திரண்டாற் போன்ற வெள்ளியபூக்களாற்செய்த மாலைகளை அகற்சியையுடைய விசும்பிலே சென்றுநாறும்படி கொண்டையிலே முடிதது,

563. ஆய் கோல் அவிர் தொடி விளங்க வீசி — அழகிய திரட்சியை யுடைய விளங்குகின்ற தொடி மிகவிளங்கும்படி கையை வீசி மனைதொறுஞ் சென்று பொய்தலயர (589) என்க.

564. போது அவிழ் புது மலர் தெரு உடன் கமழ — அலரும்பருவமாக மலர்ந்த புதிய விடுபூக்கள் தெருவுகளெங்கும் நாற.

565. மே தகு தகைய மிகு நலம் எய்தி — முற்படப் பலருடன் புணர்ந்த புணர்ச்சியாற்குலைந்த ஒப்பனைகளைப் பினனும் பெருமைதருகின்ற அழகினை யுடைய மிகுகின்ற நன்மையுண்டாக ஒப்பித்து.

566 - 7. [பெரும்பல் குவளைச் சுரும்புபடு பன்மலர், திறந்துமோந் தன்ன சிறந்துகமழ் நாற்றத்து:]

திறந்து மோந்தன்ன சிறந்து கமழ் நாற்றத்து — அலர்கின்றபருவத்தே கை யாலலர்த்தி மோந்துபார்த்தாலொத்த மிக்குநாறுகின்ற நாற்றத்தினையுடைய,

பெரு பல் குவளை சுரும்பு படு பல் மலர — பெரிய பலவாகிய செங்கழுநீரிற் சுரும்புகளுக்கு அலர்கின்ற பலபூக்களையும்,

568. [கொண்டன் மலர்ப்புதன் மானப் பூவேய்ந்து;]

கொண்டல் மலர் புதல் மான வேய்ந்து — மழைக்குமலர்ந்த மலரையுடைய சிறுதூற்றையொக்கச் சூடி,

பூ — ஏனைப்பூக்களையும,

பலநிறத்துப்பூக்களை நெருங்கப்புனைதல்பற்றிச் *சிறுதூற்றை உவமை கூறினார்,

569 - 72. [நுண்பூ ணாகம் வடுக்கொள முயங்கி, மாயப் பொய்பல கூட்டிக் †கவவுக் கரந்து, சேயரு நணியரு நலனயந்து வந்த விளம்பல் செல்வர் வளந்தப வாங்கி:]

---

* சிறுதூறு மெய்காப்பாளர்க்கு உவமை கூறப்பெற்றது; (முல்லை. 51 - 4.)

† பி - ம். கவவுக்கவர்ந்து.

சேயரும் கணியரும் கலன் நயந்து வந்த இள பல் செல்வர்—புறமண்டலத்தாரும் உள்ளூரிலுள்ளாருமாய்த் தம்முடைய வடிவழகைவிரும்பிவந்த இளையராகிய பலசெல்வத்தையுடையாரை,

பல மாயம் பொய் கூட்டி நுண் பூண் ஆகம் வடு கொள முயங்கி—பல வஞ்சனைகளையுடைய பொய்வார்த்தைகளாலே முதற்கூட்டிக்கொண்டு அவருடைய நுண்ணிய பூண்களையுடைய மார்பைத் தம்மார்பிலே வடுப்படும்படியாக முயங்கிப் பின்னர்,

கவவு கரந்து வளம் தப வாங்கி—அங்ஙனம் அன்புடையார்போலே முயங்கினமுயக்கத்தை அவர் பொருள்தருமளவும்றைத்து அவருடைய செல்வமெல்லாம் கெடும்படியாக வாங்கிக்கொண்டு,

573 - 4. நுண் தாது உண்டு வறு பூ துறக்கும் மெல் சிறை வண்டு இனம் மான—பூ அலருங்காலமறிந்து அதன் நுண்ணிய தாதையுண்டு தாதற்ற வறுவியபூவைப் பின்னர் நினையாமல் துறந்துபோம் மெல்லிய சிறகையுடைய வண்டின்றிரளையொப்ப,

இது, தொழிலுவமம்.

574 - 5. புணர்ந்தோர் நெஞ்சு ஏமாப்ப இன் துயில் துறந்து—தம்மை நுகர்ந்தோருடைய நெஞ்சு கலக்கமுறும்படி அவரிடத்து இனியகூட்டத்தை நேராகக்கைவிட்டு,

576. பழம் தேர் வாழ்க்கை பறவை போல—பறுமரமுள்ள இடந்தேடிச் சென்று, அவற்றின் பழத்தையே ஆராய்ந்து வாங்கி நுகர்தலைத் தமக்குத் தொழிலாகவுடைய புள்ளினம்போல,

தம்முயிரைப் பாதுகாக்கின்ற வாழ்க்கைத்தொழிலை வாழ்க்கையென்றார்.

577 - 8. [கொழுங்குடிச் செல்வரும் பிறரு மேஎய, மணம்புணர்ந் தோங்கிய வணங்குடை நல்லில்:]

கொழு குடி செல்வரும் பிறரும் மேஎய அணங்கு உடை நல் இல்—வளவிய குடியிற்பிறந்த செல்வரும் அவர்களாற்றோன்றிய பிறசெல்வரும் மேவப்பட்ட இல்லுறை தெய்வங்களையுடைய நன்றாகிய அகங்களில்,

*குடிச்செல்வரென்றார், நான்குவருணத்தை; பிறரென்றார், அவர்களாற்றோன்றிய ஏனைச்சாதிகளை.

578 - 9. மணம் புணர்ந்து ஓங்கிய ஆய் பொன் அவிர் தொடி பசு இழை மகளிர்—வரைந்துகொள்ளப்பட்டு உயர்ச்சிபெற்ற ஓடவைத்தபொன்னாற்செய்த விளங்குகின்ற தொடியினையும் பசியபூணினையுமுடைய மகளிர்,

580. ஒள் சுடர் விளக்கத்து—ஒள்ளிய விளக்கினுடைய ஒளியிலே,

பலர் உடன் துவன்றி - பலருஞ் சேரநெருங்கி.

581 - 2. நீல் நிற விசும்பில் அமர்ந்தனர் ஆடும் †வானவமகளிர் மான நீலநிறத்தையுடைய ஆகாயத்தே நெஞ்சமர்ந்துவினையாடும் தெய்வமகளிர் வருத்துமாறுபோல.

---

* திருவிளை. திருநகரங்கண்ட. 45 - பார்க்க. † பி - ம். வானரமகளிர்.

582 - 3. கண்டோர் *நெஞ்சு நடுக்குறூஉ கொண்டி மகளிர்—தம்மைக் கண்டோருடைய நெஞ்சை வருத்தமுறுவித்துப் பொருள்வாங்குதலையுடைய பரத்தையர்,

584 - 5. [யாம நல்யாழ் நாப்ப ணின்ற, முழவின் மகிழ்ந்தன ராடி:] யாமம் நல் யாழ் நாப்பண் நாழ்பு அயல் கணை குரல் கடுப்ப நின்ற முழவின் மகிழ்ந்தனர் ஆடி—முதற்சாமத்தில் வாசித்தற்குரிய நன்றிய யாழ்களுக்குடனே அவற்றிற்கேற்பத்தாழ்ந்து தம்மயிற்செறிந்த ஒளையையொக்கின்ற முழவாலே மனமகிழ்ந்தாடி,

நாழ்பெயற் கணைகுரல் கடுப்ப (560) என்று முன்னர்வந்ததனை இவ்விடத்துக்கூட்டுக.

585 - 6. குண்டு நீர் பனி நுறை குவவு மணல்—ஆழ்ந்த நீரினையுடைய குளிர்ந்த நுறையிடத்துக் குவிந்த மணலிலே,

முணை இ—வெறுத்து.

586 - 7. [மென்றளிர்க், கொழுங்கொம்பு கொழுதி:] கொழு கொம்பு மெல் தளிர் கொழுதி—கொழுவிய கொம்புகளினின்ற மெல்லிய தளிர்களைப் பறித்து,

587 - 8. [நீர்நணை மேவர, நெடுந்தொடர்க் குவணை வடிம்புற வடைச்சி:] குவணை நீர் நணை மேவர நெடு தொடர் வடிம்பு உற அடைச்சி—குவணையை நீர்க் கிழமும்புகளோடே பொருந்துதல்வரக் கட்டின நெடியதொடர்ச்சியை வடிம்பி லேயிழும்படி உடுத்து.

589. மணம் கமழ் மனை தொறும் பொய்தல் அயர—மணநாறுகின்ற மனைதோறும் சென்று பொருடருதற்குரிய இவ்வியசோடு விளையாடுதலைச்செய்ய,

அங்ஙனம் விளையாடிவகுசரித்து உறவுகொண்டு பொருள்வாங்குதல் அவர்க்கு இயல்பு.

வானமகளிர்மான (582) நெஞ்சுநடுக்குறூஉக் கொண்டிமகளிர் (583) பல ருடன்றுவன்றிக் (580) குவவுமணலிலே (586) முழவின் மகிழ்ந்தனராடி (585) அதனைமுணைஇக் (586) குவணையையடைச்சிக் (588) கோதையை (562) விசும்புகமழப் (561) பிறக்கிட்டு (562) இளம்பல்செல்வரைக் (572) கூட்டி (570) முயங்கிப் (569) பின்னர்க் கவவுக்கரத்து (570) வளர்தபவாங்கித் (572) தாதுண்டுதுறக்கும் (573) வண்டினமான (574) இன்றுயில்துறந்து (575) பின னரும் மிகுகலிமெய்திச் (565) சுரும்புபடுபன்மலரையும் (566). எனப்புக்கோ யும் புதன்மாலைவேய்ந்து (568) புதுமலர் தெருவுடன் கமழத் (564) தொடியை வீசி (563) மணங்கமழ் மனைதொறும் (589) பறவைபோலச் (576) சென்று பொய்தலயர (589) எனக்கூட்டுக.

செல்வரும் பிறரும் மேவப்பட்ட (577) அணங்குடைநல்ல இல்லிலே மணம்புணர்ச்சேர்ந்திய (578) பாசிழைமகளிர் (579) ஒண்சுடர்விளக்கத்தே

* பி - ம். நெஞ்சு நடுக்குறூஉங் கொண்டி மகளிர்.

(580) சீதியாழைப் (559) பண்ணுப்பெயர்த்து (560) வீழ்துணைதழீஇ (561) காணுக்கொள (558) எனக்கூட்டுக.

590 - 91. கணம் கொள் அவுணர் கடந்த பொலம் தார் மாயோன் மேய ஓணம் நல் நாள்—திரட்சியைக்கொண்ட அவுணரைவென்ற பொன்னாற்செய்த மாலையினையுடைய மாமையையுடையோன் பிறந்த ஓணமாகியநன்னாளில் ஊரி லுள்ளாரெடுத்த விழவிடத்தே,

592 - 5. [கோணர் தின்ற வடுவாழ் முகத்த, சாணர் தின்ற சமந்தாங்கு தடக்கை, மறங்கொள் சேரி மாறுபொரு செருவின், மாறு துற்ற வடுப்படு நெற்றி:]

மறம் கொள் சேரி மாறு பொரு செருவில் மாறாது உற்ற வடு படு நெற்றி—இற்றைநாட் போர்செய்துமென்றுகருதி மறத்தைக்கொண்டிருக்கின்ற தெருவு களில் தம்மிற்றாம் மாறாய்ப்பொருகின்ற போரின்கண்ணே நின்ற அடிமாறாமை யாற்பட்ட வடுவழுந்தின நெற்றியினையும்,

596. சுரும்பு ஆர் கண்ணி பெரு புகல் மறவர்—சுரும்புகள்நிறைந்த *போர்ப்பூவினையும் பெரியவிருப்பத்தினையுமுடைய மறவர்,

அத்திருநாளிற்பொரும் †சேரிப்போர்கூறினார், அவ்வூர்க்கு இயல்பென்று.

597. [கடுங்களிறோட்டலின்:] கோணம் தின்ற வடு ஆழ் முகத்த (592) சாணம் தின்ற சமம் தாங்கு தட கை (593) கடு களிறு ஓட்டலின்—தோட்டி வெட்டின வடு அழுந்தின முகத்தையுடையவாய்க் கொலைபழக்கும் போர்யானை பலகாலுமெடுத்தலால் தழும்பிருந்த போரைத்தாங்கும் பெரியகையினையுடைய கடியகளிற்றை ஓட்டுகையினாலே,

597 - 8. [காணுந ரிட்ட, நெடுங்கரைக் காழக நிலம்பர லுறுப்ப:] காணுநர் நெடு கரை காழகம் இட்ட பரல் நிலம் உறுப்ப—அவ்வியானைக்குமுன னேயோடி அதன்விசையைக்காணும் பரிக்காரர் அவ்வியானை பிடித்துக்கொள் ளுங்காலத்து மேல்வாராமல் அஞ்சி மீளுதற்குச் சமைப்பித்து நெடிய கரையை யுடைய நீலநிறத்தையுடையபுடைவைகளிலே வைத்துச் சிந்தினகப்பணம் நிலத தேகிடந்து கால்களைப் ‡பொதுக்கும்படி,

நெருஞ்சிமுள்ளுப்போல முனைபட இரும்பால் திரளச்சமைத்துத் தூவற்கு யானையஞ்சுமென்று அவர்மடியிலேவைத்த கப்பணத்தைப் பரல்போறலிற் பர லென்றார்; §"வேழங், காய்ந்தனன் கடுகவுந்திக் கப்பணஞ் சிதறினானே" என்றார்பிறரும்.

---

* போர்ப்பூ - தும்பைப்பூ; (பு - வெ. பொதுவியற். 2.)

† "கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனிற், கார்தரு சோலைக் கபாலீச் சரமமர்ந்தா, னாதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்" (தரு மயிலை. திருஞான. தே. 4.)

‡ பொதுத்தல் - துளைத்தல்; "அண்டத் தைப்பொதுத் தப்புறத் தப்பினா லாடும்" (கம்ப. இரணியன். 4); இது பொதிர்த்தலெனவும் வழங்கும்; "கழைபொதிர்ப்பத் தேன்சொரிந்து" (சீவக. 2778.)

§ சீவகசிந்தாமணி, 285.

599. கடு கள் தேறல் மகிழ் சிறந்து திரிதர—கடியகட்டெளிவையுண்டு மகிழ்ச்சிமிக்குத் திரிதலைச்செய்ய,

ஓணநாளிற் (591) பொருது வடுப்படும் நெற்றி (595) முதலியவற்றை யுடைய மறவர் (596) மகிழ்சிறந்து (599) பரலுறுப்பத் (598) திரிதர (599) எனக்கூட்டுக.

600. கணவர் உவப்ப புதல்வர் பயந்து—தம்கணவர் இம்மைமறுமையிற் பெறும்பயன்பெற்றேமென்று மகிழும்படி பிள்ளைகளைப்பெற்று,

601. பணைத்து ஏந்து இள முலை அமுதம் ஊற—பாலால்இடங்கொண் டேந்திய இளையமுலை பால்சுரக்கும்படி,

602 - 8. [புலவுப்புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு, வளமனை மக ளிர் குளநீ ரயர:]

புலவு புனிறு தீர்ந்து குளம் நீர் அயர—புலானாற்றத்தையுடைய ஈன்றணி மைநீங்கித் தெய்வத்தினருளால் ஓரிடுக்கணுமற்றுக் குளத்துநீரிலே குளிக்கையி னாலே,

கடு சூல் மகளிர் பேணி (609)—முதற்சூல்கொண்டமகளிர் இவ்வாறே இடுக்கணின்றிப் புதல்வர்ப்பயத்தல்வேண்டுமென்று தெய்வத்தைப்பரவிக் குறை தீர்ந்தபின்,

பொலிந்த சுற்றமொடு—மிக்க சுற்றத்தாருடனே,

வளம் மனை மகளிர்—செல்வத்தையுடைய மனைமகளிர்,

இல்லிருக்கும் குடிப்பிறந்த மகளிர்.

604. திவவு மெய் நிறுத்து செவ்வழி பண்ணி—வலிக்கட்டினை யாழிற் றண்டிலேகட்டிச் செவ்வழியென்னும் பண்ணைவாசித்து,

திவவுக் கூறவே அதினரம்பும் கூறினார்.

605. குரல் புணர் நல் யாழ் முழவோடு ஒன்றி — குரலென்னுநரம்பு கூடின வன்னம் நன்றாகிய யாழுடனே முழவும்பொருந்தி,

606 நுண் நீர் ஆகுளி இரட்ட—மெல்லியநீர்மையினையுடைய சிறுபறை யொலிப்ப,

பலவுடன்—பூசைக்குவேண்டும் பொருள்கள் பலவற்றுடனே,

607. ஒள் சுடர் விளக்கம் முந்துற—ஒள்ளிய சுடர்விளக்கம் முற்பட,

மடையொடு—பாற்போனகமுதலிய சோறுகளை,

608. நல் மா மயிலின் மென்மெல இயலி—நன்றாகிய பெருமையை யுடைய மயில்போலே மெத்தென மெத்தென நடந்து,

609. [கடுஞ்சூன் மகளிர் பேணிக் கைதொழுது:]

கை தொழுது—கையாற்றொழுது,

610. [பெருந்தோட் சாலினி மடுப்ப வொருசார்:]

பெரு தோள் சாலினி மடுப்ப—பெரிய தோளினையுடைய *தேவராட்டி யோடே மடுப்ப,

வளமனைமகளிர் சிலர் (603) புதல்வர்ப்பயந்து (600) புனிறுநீர்ந்து (602) குளகோடுதலாலே (603) அதுகண்டு கடுஞ்சுன்மகளிர் பேணிக் (609) குறை நீர்த்துபின் பொலிந்தசுற்றத்தோடே (602) பலவுடன் (606) சாலினியோடே (610) பண்ணி (604) ஒன்றி (605) இட்ட (606) இயலிச்சென்று (608) கைதொழுது (609) மடையை (607) மடுப்ப (610) எனக்கூட்டுக.

610. ஒருசார்—ஒருபக்கம்,

611. அரு கடி வேலன் முருகொடு வினை இ—அரிய அச்சத்தைச்செய்யும் வேலன் இவ்விடுக்கண் முருகனல்வந்ததெனத் தான்கூறிய சொல்லின்கண்ணே கேட்டோரை வினைத்துக்கொண்டு,

†பின்னையார்வேலெடுத்தலின், வேலனென்றார். என்றது - ‡கழங்கு வைத்துப் பின்னையாரால்வந்ததென முர்கூறிப் பின் வெறியாடுவனென்று ஆடு முறைமை கூறிற்று.

611. அரி கூடு இன் இயம் கறங்க — அரித்தெழும்ஓசையையுடைய சல்லி கரடிமுதலியவற்றோடேகூடின இனிய வினைவாச்சியங்கள் ஒலியாகிற்க,

612 - 4. [சேர்நிறத்துக், கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின், சீர்மிகு செருவேட் பேணி:]

கார் மலர் குறிஞ்சி சூடி—கார்காலத்தான் மலரையுடையவாகிய §குறிஞ்சி யைச்சூடி,

கடம்பின் சீர் மிகு செருவேல் சேர் நிறுத்து பேணி—கடம்புருடுதலால் அழகுமிகுகின்ற முருகனைச் செவ்விதாகத் தன்மெய்க்கண்ணேகிறுத்தி வழிபடு கையினாலே,

‖தழூஉ பிணையூஉ—மகளிர் தம்மூட்டழுவிக் கைசோத்து,

---

* தேவராட்டி - தெய்வமேறப்பெற்றவள்; "காடுபலி மலிழ வூட்டத், தேவ மாபின் வழிவந்த தேவ ராட்டி தினையழைமின்" (பெரிய. கண்ணப்ப. 47.)

† பின்னையாரென்றது, முருகக்கடவுளை; இப்புத்தகம் 39 - ஆம் பக்கம் பார்க்க.

‡ கழங்குவைத்து - கழற்கொடிக்காயைவைத்து; வேலன் கழங்குவைத் துப்பார்த்தலை, "சுட்டினும் கழங்கினும்" (தொல். களவு. சூ. 24) என்பத னுரையாலும், "பெய்ம்மணல் முற்றம்" (ஐங்குறு. 248) என்பதனாலுமுணர்க.

§ குறிஞ்சி - குறிஞ்சிப்பூ.

‖ "மாதர் மகளிரு மைந்தரு மைந்துற்றுத், தாதெரு மன்றத் தயர்வர் தழூஉ" (கலி. 103.)

615. *மன்றுதொறும் நின்ற குரவை—மன்றங்கடோறும்நின்ற குரவைக் கூத்தும்,

சேரிதொறும்—சேரிகடோறுநின்ற,

616. உரையும்—புனைந்துரைகளும்,

பாட்டும்—பாட்டுக்களும்,

ஆட்டும்—பலவகைப்பட்ட கூத்துக்களும்.

விரவு—தம்மிற் கலக்கையினாலே

617. வேறு வேறு கர்பலே—வேறுவேறுகிய ஆரவாரம்,

வெறி கொள்பு மயங்கி—ஒழுங்குகொண்டு மயங்கப்பட்டு,

618. பேர் இசை †கன்னன் பெறும் பெயர் கன்னல்—பெரியபுகழை யுடைய கன்னன்கொண்டாடுகின்ற பிறந்தகாளிடத்து,

அவன்பெயரை அர்கான் பெறுதலின், பெயரைப்பெற்ற கன்னனென்னும்.

619. சேரி விழவின் ஆர்ப்பு எழுந்தாங்கு—சேரிகளிலுள்ளார் கொண் டாடுகின்ற விழாவாலே ஆரவாரமெழுந்தாற்போல.

620. முந்தை யாமம் சென்ற பின்றை—முற்பட்டசாமம் கடந்தபின்பு,

ஒ ர் (583) பொய்தலையாப் (589) பாசிழைமகளிர் (579) வீழ் தினைதழுவு (591) காணுக்கொள (578) மதவர் (596) மலிழிதற்துறைதரச் (599) உடுஞ்சுன்மகளிர் கைதொழுது (609) மடுப்ப ஒருசார் (610) செருவேட் பேணுகையினாலே (614) மன்றுதொறுநின்ற குரவையும் சேரிதொறுநின்ற (615) உரையும் பாட்டும் ஆட்டும் விரவுகையினாலே (616) வேறுவேறுபட்ட கம்பலி (617) சேரிவிழவின் ஆர்ப்பெழுந்தாங்கு (619) வெறிகொள்புமயங்கப் பட்டு (617) முந்தையாமஞ்சென்றபின்றை (620) எனக்கூட்டுக.

ஒருசார் (610) விரவு (616) என்க.

621. பணிலம் கலி அறிந்து அடங்க—சங்குகள் ஆரவாரமொழிந்து அடங்கியிடக்க,

621 - 2. காழ் சாய்த்து கொடை கமில் செடு கடை அடைத்து—சட்டக் காலைவாங்கிப் பண்டங்களுக்கு விலைகூறும் செடியகடையையடைத்து.

622 - 3. மட மதர் ஒண் இழை மகளிர் பள்ளி அயர—மடப்பத்தினையும் செருக்கினையும் ஒள்ளிய அணிகலங்களையுமுடைய மகளிர் துயிலுதலைச்செய்ய,

624 - 6. [கல்வரி பிறழல் புரையு மெல்லடை, யயிருருப் புற்ற வாடமை விசயம், கவலொடு பிடித்த வகையமை மோதகம்:]

விசயம் ஆடு அமை கல் வரி இறழல் புரையும் மெல் அடை—பாலிலே சமைத்தலமைத்த கல்லரிகளையுடைய தேனிறாலையொக்கும் மெல்லிய அடை யினையும்,

* "எருமன்றத்தி, மாயவனுடன் நம்முனுழிய, பாலசரிதை யாடக்களில், வேனிலுக்கூட் பிற்ஞையொடாடிய, குரவையாதுமும்" (சிலப். 17); "இனியா சொமென்றிற் குரவைபினைத்தமால்" (பெரியதிருமொழி, 11. 2. 1.)

† கன்னன் - ஒரு குறுநிலமன்னன்.

கவவொடு அயிர் பிடித்த வகை அமை உருப்பு உற்ற மோதகம்—பருப்பும் தேங்காயுமாகிய *உள்ளீடுகளோடே †கண்டசருக்கரைகூட்டிப்பிடித்த வகுப்பமைந்த வெம்மைபொருந்தின அப்பங்களையும்,

627. நீ சேறு கூவியர் தூங்குவனர் உறங்க—இனிய பாகோடு சேர்த்துக்கரைத்த மாவினையுமுடைய அப்பவாணிகரும் அவற்றோடேயிருந்து தூங்குவனராயுறங்க,

628. விழவின் ஆடும் வயிரியர் மடிய—திருநாளின்கண்ணே கூத்தாடுவ கூத்தர் அதனையொழிந்து துயில்கொள்ள,

629. பாடு ஆன்று அவிந்த பனி கடல் புரைய—ஒலிநிறைந்தடங்கின குளிர்ந்த கடலையொக்க,

630. பாயல் வளர்வோர் கண் இனிது மடுப்ப—படுக்கையிலே துயில் கொள்ளுவோர் கண் இனிதாகத் துயில்கொள்ள,

631. [பானாட் கொண்ட சங்கு விடையது:]

பால் நாள் கொண்ட கங்குல்—பதினைந்தாநாழிகையை முடிவாகக்கொண்ட கங்குல்.

632 - 3 [பேயு மணங்கு முருவுகொண் டாய்கோற், கூற்றக் கொஃறேர் கழுதொடு கொட்ப:]

பேயும் அணங்கும் உருவுகொண்டு கழுதொடு கொட்ப—பேய்களும் வருத்துந்தெய்வங்களும் வடிவுகொண்டு கழுதுடனே சுழன்றுதிரிய,

கழுது, பேயில் ஒருசாதி.

ஆய் கோல் கூற்றம் கொல் தேர் அச்சம் அறியாது ஏமமாகிய (652) மதுரை (699) யெனக்கூட்டி, யாக்கைநிலையாதென்றறிந்து மறுமைக்குவேண்டுவன செய்துகொண்டமையின, அழகிய கோலையுடைய கூற்றத்தின் கொலைக்கு அஞ்சாமற் காவலுண்டாயிருக்கின்ற மதுரையென்க

‡"கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார், துரும்பெழுந்து வேங்காற் றுயராண் டுழவார், வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம், வருங்காற் பரிவ திலர்" என்றார் பிறரும். கொஃறேர் - காலசக்கரம்.

634. இரு பிடி மேஎந்தோல் அன்ன இருள் சேர்பு—கரியபிடியின்கண்ணேமேவின தோலையொத்த கருமை தமக்கு இயல்பாகச்சேரப்பட்டு,

இருள் - கருஞ்சட்டையுமாம்.

635. கல்லும் மரனும் துணிக்கும் கூர்மை நிலன் அகழ் உளியர் (641)—கல்லையும் மரத்தையுமறுக்கும் கூர்மையையுடைய நிலத்தையகழும் உளியையுடையராய்,

---

* உள்ளீடு - உள்ளேஇடப்பெற்றபொருள்கள்.

† கண்டசருக்கரை - கற்கண்டு; ஒருவகைச்சருக்கரையுமாம்.

‡ நாலடியார், அறன்வலியுறுத்தல், 5.

நிலத்தை அகழுங்காலத்து இடைப்பட்ட கற்களுக்கும் மரங்களுக்கும் வாய் மடியாதென்றார்.

636. தொடலை வாளர்—தூக்கிட்ட வாளினையுடையராய்,

தொடுதோல் அடியர்—செருப்புக்கோத்த அடியினையுடையராய்

637 - 41. [குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடிச், சிறந்த கருமை நுண்வினை நுணங்கற, னிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர், மென்னூ லேணிப் பன்மாண் சுற்றினர், நிலனக ழுளியர் :]

சிறந்த கருமை நுண் வினை நுணங்கு அறல்—மிக்ககருமையினையுடைய நுண்ணிய தொழில்களையுடைய நுண்மை தன்னிடத்தே பற்றுதலையுடையது,

என்றது இறைமுடிந்த சேலையென்றவாறு ; ஆகுபெயர்.

குறங்கிடை பதித்த கூர் நுனை குறு பிடி—அச்சேலைகட்டின மருங்கிற் குறங்கிடைத் தெரியாமற் கிடக்கும்படியழுத்தின கூரிய முனையினையுடைய *சிலசொட்டை,

நிறம் கவர்பு புனைந்த நீலம் கச்சினர்—பலநிறங்களைத் தன்னிடத்தே கைக் கொண்டு கைசெய்யப்பட்ட நீலநிறத்தையுடைய கச்சினையுடையராய்,

என்றது :—கட்டின சேலையிடத்தே செருகித் துடையுடனேசேர்ந்து கிடக்குஞ் சொட்டையின்மேலே கட்டின நீலக்கச்சினரென்றவாறு. அதுதெரியாமல் துடையுடனே சேர்ந்துகிடத்தலிற் குறங்கிடைப்பதித்தவென்றார்.

மெல் நூல் ஏணி பல் மாண் சுற்றினர்—மெல்லிய நூலாற்செய்த ஏணியை அரையிலே பலவாய் மாட்சிமைப்படச்சுற்றிய சுற்றினையுடையராய்,

மதிற்றலையிலே உள்ளேவிழவெறிந்தாற் கைபோல மதிலைப்பிடித்துக்கொள்ளும்படி இரும்பாற்சமைத்ததனைத் தலையிலேயுடைய நூற்கயிற்றை உள்ளே விழவெறிந்து அதனைப் புறம்பேநின்று பிடித்துக்கொண்டு அம்மதிலை ஏறுவராகலின், ஏணியென்றார்.

641. கலன் நசைஇ கொட்கும்—பேரணிகலங்களை நச்சுதலாலே அவற்றை எடுத்தற்கு இடம்பார்த்துச் சுழன்றுதிரியும்,

642. கண் மாறு ஆடவர் ஒடுக்கம் ஒற்றி—விழித்தகண்இமைக்குமளவிலே மறைகின்ற கள்வர் ஒதுங்கியிருக்கின்ற இடத்தை †வேய்த்து.

செருப்பைத்தொட்டுக் கச்சைக்கட்டி நூலேணியைச்சுற்றி உளியையெடுத்து வானைப்பிடித்துக்கொட்குங்கள்வரென வினையெச்சவினைக்குறிப்புமுற்று வினையெச்சமாய் நிற்குமாறு, ‡"முன்னத்தி னுணருங் கிளவியுமுளவே" என்னுஞ்சூத்திரத்தானுணர்க.

---

* சிலசொட்டை - ஒருவகைவளைவுக்கத்தி; உடைவாளுமாம்; "சொட்டைவாள் பரிசை" (வி - பாரதம். திருட்டின. 101)

† வேய்த்து - பிறர்தெரிந்து கொள்ளாதபடி அறிந்து.

‡ தொல்காப்பியம், எச்சவியல், 63.

643. வய களிறு பார்க்கும் வய புலி போல ஒற்றி (642) —வலியகளிற்றை இரையாகப்பார்க்கும் வலியபுலியைப்போலே வேய்க்கையினாலே,

644. துஞ்சா கண்ணர்—துயில்கொள்ளாத கண்ணையுடையராய்,

அஞ்சா கொள்கையர்—பேய்முதலியவற்றிற்கு அஞ்சாத கோட்பாட்டையுடையராய்.

645. அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர்—களவிற்றொழிலையறிந்தவர்களாலே புகழப்பட்ட களவிற்றொழிலை ஆளுந்தன்மையையுடையராய்,

645 - 7. [*செறிந்த, நூல்வழிப் பிழையா நுணங்குநுண் டேர்ச்சி, யூர் காப் பாளர் :] நுணங்கு செறிந்த நூல் வழி பிழையா நுண் தேர்ச்சி ஊர் காப் பாளர் – நுண்மைசெறிந்த நூலின்வழியைத்தப்பாத நுண்ணிய ஆராய்ச்சியையுடைய ஊரைக் காத்தற்றொழிலை ஆளுதலையுடையராய்.

†களவுகாண்டற்கும் காத்தற்குங்கூறிய நூல்கள்போவாரென்றார்.

நூல்வழிப்பிழையா ஊரெனக்கூட்டி நூலிற்சொன்னபடி சமைந்தவூரென்றுமாம்.

ஊக்க அரு கணையினர்—தப்பக்கருதிமுயல்வார்க்குத் தப்புதற்கரிய அம்பினையுடையராய்.

648 - 9. தேர் வழங்கு தெருவில் நீர் திரண்டு ஒழுக மழை அமைந்துற்ற அரை நாள் அமயமும்—தேரோடுந்தெருவின்கண்ணே நீர்திரண்டொழுகும்படி மழைமிகப்பெய்த நடுநாளாகிய பொழுதிலும்,

650. அசைவிலர் எழுந்து நயம்வந்து வழங்கலின்—காவலில் தப்பிலராய்ப்போந்து விருப்பந்தோன்றி உலாவுகையினாலே,

651. [கடவுள் வழங்குங் கை அறு கங்குலும் :] இடையது (631) கடவுள் வழங்கும் கை அறு கங்குல் - இரண்டாஞ் சாமத்திற்கும் நான்காஞ் சாமத்திற்கும் நடுவிடத்ததாகிய தெய்வங்களுலாவுஞ்செயலற்றகங்குல்,

உம்மையை யாமமுமெனப் பின்னேகூட்டுக.

652 - 3. [அச்ச மறியா தேம மாகிய, மற்றை யாமம் பகலுறக் கழிப்பி :]

மற்றையென்பதனை முந்தையாமஞ் சென்றபின்றை யென்பதன்பின்னும் மூன்றாஞ்சாமத்தினோடுங் கூட்டுக.

அச்சமறியாதேமமாகிய என்றும், மற்றையென்றும் யாமமென்றும் பிரித்து முன்னே கூட்டுக.

பகல் உற கழிப்பி – இங்ஙனம் பகுத்தலுறும்படி போக்கி,

---

* பி - ம். சிறந்த.

† களவுகாண்டற்குரியநூல் - கரவடநூலெனவழங்கும்; இதனைக்கூறுநூல் ஸ்தேயசாஸ்திரமெனப் பெயர்பெறுமென்றும், அந்நூலைச்செய்தவர் கசரென்பவரின் ஆசிரியராகிய கர்ணீஸுதரென்பவரென்றும் வடமொழியாளர் கூறுவர்.

முந்தை யாமஞ் சென்ற பின்றை (620) மற்றைப் (653) பானாட்கொண்ட கங்குல் (631) யாமத்தையும் மற்றை (653) இடையதாகிய (631) கடவுள்வழங்குங் கங்குல் (651) யாமத்தையும் (653) கலியவிந்தடங்கப் (621) பள்ளியயர (623) உறங்க (627) வயிரியர்மடியப் (628) பேயும் அணங்கும் உருவுகொண்டு (632) கழுதொடுகொட்ப (633) ஊர்காப்பாளர் (647) புலிபோலக் (643) கண்மாறாடவர் ஒடுக்கம் ஒற்றுகையினாலே (642) கண்ணராய்க் கொள்கையராய் (644) ஆண்மையராய்க் (645) கணையராய் (647) அரைநாளமயமும் (649) எழுந்து நயம்வந்துவழங்கலிற் (650) பனிக்கடல்புரையப் (629) பாயலில்வளர்வோர் கண்இனிதுமடுப்பப் (630) பகலுறக்கழிப்பி (653) ஏனமுடிக்க

இங்ஙனம் கழிக்கின்றது, இராப்பொழுதென்றுணர்க.

654. [போதுபிணி விட்ட கமழ்நறும் பொய்கை:] பிணி விட்ட போது கமழ் நறு பொய்கை—தனையவிழ்ந்த பூக்கள்நாறும் நறிய *பொய்கைகளிலே,

655. [தாதுண் டும்பி போதுமுரன் றாங்கு:] போது தாது உண் தும்பி முரன்றாங்கு—அப்பூக்களில் தாதையுண்ணுந் தும்பிகள் பாடினாற்போல,

656. [ஓத லந்தணர் வேதம் பாட:] †வேதம் ஓதல் அந்தணர் பாட—வேதத்தை முற்ற ஓதுதலையுடைய அந்தணர் வேதத்தில் தெய்வங்களைத் துதித்தவற்றைச் சொல்ல,

657 - 8. [சீரினிது கொண்டு நரம்பினி தியக்கி. யாழோர் மருதம் பண்ண:] யாழோர் சீர் இனிது கொண்டு நரம்பு இனிது இயக்கி மருதம் பண்ண—யாழோர் தாளவறுதியை இனிதாக உட்கொண்டு நரம்பை இனிதாகத்தெறித்து மருதத்தைவாசிக்க,

658 - 9. காழோர் கடு களிறு ‡கவளம் கைப்ப—பரிக்காரர் கடியகளிற்றைக் கவளத்தைத்§தீற்ற,

659 - 60. நெடு தேர் பணை நிலை புரவி புல் உணா ||தெவிட்ட—நெடிய தேரிலேபூணும் பந்தியில் நிற்றலையுடைய குதிரைகள் புல்லாகிய உணவைக் ¶குதட்ட,

661. பல் வேறு பண்ணியம் கடை மெழுக்கு உறுப்ப—பண்டம்விற்பார் பலவாய் வேறுபட்ட பண்டங்களையுடைய கடைகளை மெழுகுதலைச்செய்ய,

---

* பொய்கை - மானிடராக்காத நீர்நிலை.

† மதுரையிற் பண்டைக்காலத்திலேவிடியலில் அந்தணர் வேதமோதிவந்தனரென்பதைப் பின்னுள்ள பரிபாடலுறுப்பும் வலியுறுத்தும்: "பூவினுட் பிறந்தோ னாவினுட் பிறந்த, நான்மறைக் கேள்வி நவில்குர லெடுப்ப, வேம வின்றுயி லெழுத லல்லதை, வாழிய வஞ்சியுங் கோழியும் போலக், கோழியி னெழாதெம் பேரூர் துயிலே." பரிபாடல், பக்கம், 174 - 5.

‡ பி - ம். கவழமகைப்ப.

§ தீற்ற - உண்பிக்க; "தீற்றாதோ நாய்நட்டா னல்ல முயல்" (பழ. 128.)

|| பி - ம். தெவிட்டி. ¶ குதட்ட - மெல்ல.

662. கள்ளோர் *களி கொடை தவல—கள்ளைவிற்போர் களிப்பினை யுடைய கள்ளிற்கு விலைசொல்ல,

களி, ஆகுபெயர்.

662 - 3. †இல்லோர் செய்த காதலர் சுவறு பிணி தணீஇ—கற்புடை மகளிர் தாங்கள் விரும்பின கணவருடைய முயக்கத்திற் பிணிப்பாலே தூயில் கொண்டு,

664. புலர்ந்து விரி விடியல் எய்த விரும்பி—இருள்மாய்ந்து கதிர்விரி கின்ற விடியற்காலத்தைப் பெறுகையினாலே அக்காலத்து இல்லத்திற்செய்ய தகுவனவற்றைச் செய்தற்குவிரும்பி,

665. ‡கண் பொரா எறிக்கும் மின்னு கொடி புரைய—கண்ணை வெறி யோடப்பண்ணினாலுங்கும் மின்னெழுங்கை யொப்ப,

666. §ஞெள் பொன் அவிர் இழை தெழிப்ப இயலி—ஒள்ளிய பொன்னை செய்தவினங்குஞ் சிலம்புமுதலியன ஒலிப்பப் புதம்போதலையினாலே,

667. நிண சுவர் கல் இல் கதவம் கரைய—நிண்ணியசுவர்களையுடைய கல்ல அகங்களிற் கதவுகளொலிப்ப,

668 - 9. உண்டு மகிழ் தட்ட மழலை காவில் பழ செருக்காளர் தழவு குரல் தோன்ற—கள்ளையுண்டு களிப்பினைத் தம்மிடத்தேதடுத்துக்கொண்ட மழ லையார்த்தையையுடைய காவினையுடைய பழையகளிப்பினையுடையாருடைய முழங்குகின்ற குரல்கள் தோன்ற,

670. சூதர் வாழ்த்த மாகதர் தவல—தின்றேத்துவார்வாழ்த்த இருந்தே தவார் புகழைச்சொல்ல,

671. வேதாளிகரொடு காழிகை இசைப்ப—வைதாளிகர் சுத்தம் தரைக குரியனவற்றையிசைப்ப காழிகைசொல்லுவார் காழிகைசொல்ல,

காழிகை, ஆகுபெயர்.

672. இமிழ் முரசு இரங்க—ஒலிக்கின்ற பள்ளியெழுச்சிமுரசு ஒலிப்ப,

ஏறு மாறு சிலைப்ப—ஏறுகள் தம்முன்மாறுபட்டு முழங்க,

673. பொறி மயிர் வாரணம் வைகறை இயம்ப—பொறியினையுடைய மயிரினையுடைய கோழிசேவல் விடியற்காலத்தை அறிந்துகூவ,

674 - 5. யானைபுகுருகின் சேவலொடு சாமர் அன்னம் கரைய—வான டாழ்ந்குருகினுடைய சேவல்களோடே விருப்பத்தையுடைய அன்னசேவல் களும் தமக்குரிய பேடைகளை யழைக்க,

அணி மயில் அகவ—அழகியமயில்கள் பேடைகளையழைக்க,

676. பிடி புணர் பெரு களிறு முழங்க—பிடியோடேகூடின பெரிய யானைகள் முழங்க,

---

* பி - ம். கள்கொடை ‡ பி - ர். கண்பொருபெறிக்கும்.
† பி - ம். கல்லோர்செய்த. § பி - ம். ஞெண்ப லவிரிழை.

676 -7. [முழுவலிக், கூட்டுறை வயமாப் புலியொடு குழும:] ஐய மா கூடு உறை முழு வலி புலியொடு குழும—காடிமுதலிய வலியவிலங்குகள் கூட்டிலேயுறைகின்ற மிக்கவலியையுடைய புலியுடனே முழங்க,

678. வானம் வீங்கிய நீல் நிறம் விசும்பின்—ஆகாயத்தனக்குவடிவின் றென்னும் தன்மைபீங்குதற்கு மேகபடலத்தால் நீலநிறத்தையுடைய ஆகாயத் தின்கண்ணே,

இனிச் செக்கர்வானம்போன விசும்பென்பாருமுளர்.

679. மின்னு மிமிர்த்தனையர் ஆகி — மின்னுநடக்கின தன்மையினை யுடையராய்,

கறவு மறிந்து—மதுவையுண்டு,

680 - 81. மாண் இழை மகளிர் புலர்த்தனர் பரிந்த பரூஉ காழ் ஆரம் சோரிந்த முத்தமொடு—மாட்சிமைப்பட்ட பேரணிகலங்களையுடைய மகளிர் கணவரோடேபுலர்த்தனராயறுத்த பருத்தலையுடைய வடமாகிய ஆரஞ்சோரிந்த முத்தத்தோடே,

மகளிர் மறிந்து புலர்த்தனராய்ப் பரிந்த முத்தமென்க.

682. [பொன்கடு கொருப்பி *னிலமுக் கென்ன:] பொன் கடு கொருப்பு டீக்க நிலம் என்ன—பொன்னையுருக்குகின்ற கொருப்புச்சிந்தின நிலம்போல.

என்றது - கரியும் தழலும் பொன்னுஞ் சிந்திக்கிடந்தாற்போல வென்ற தாம்.

683. [அம்மென் †குரும்பைக் காய்படுபு பிறவும்:]

பிறவும்—முத்தொழிந்த மாணிக்கமும் மரகதமும் பொன்னும் மணிகளும்.

அம் மென் குரும்பை காய்—அழகிய மெத்தென்ற இளநாகிய பச்சைப் பாக்கும்.

படுபு—விழுந்து,

684. தரு மணல் முற்றத்து—கொண்டுவந்திட்ட மணலையுடைய முற் றத்தே,

அரி ஞிமிறு ஆர்ப்ப—வண்டுகளும் மிஞிறுகளும் ஆரவாரிப்ப.

685. மெல் பூ செம்மலொடு கல் கலம் சிப்ப—மெல்லிய பூவாடல்களுட னே கல்ல பூண்களையும் பெருக்கிப்போகடுப்படி.

முத்தத்தோடே பிறவும் காயும் முற்றத்தேவிழுகையினாலே அவற்றையும் செம்மலோடே கலங்களையும் அரிமிஞிறார்ப்பச் சிப்பவென்க.

686. இரவு தலை பெயரும் ஏமம் வைகறை—இராக்காலம் தன்னிடத் தில்நின்றும்போகின்ற எல்லாவுயிர்க்கும் பாதுகாவலாகிய விடியற்காலத்திலே,

---

* பி - ம். நிலம்படுத்த. † பி - ம். குருப்பைக்காயும்.

பாடப் (656) பண்ணைக் (658) கைப்பத் (659) தெவிட்ட (660) உறுப்ப (661) நுவலக் (662) கரையத் (667) தோன்ற (669) வாழ்த்த நுவல (670) இசைப்ப (671) இரங்கச் சிலைப்ப (672) இயம்பக் (673) கரைய அகவ (675) முழங்கக் (676) குழுமச் (677) சிப்பத் (685) தலைப்பெயருமெனமுடிக்க.

687 - 8. மை படு பெரு தோள் மழவர் ஓட்டி இடைப்புலத்து ஒழிந்த ஏந்து கோடு யானை — பிறர்தோள் குற்றப்படுதற்குக்காரணமான பெரிய தோளையுடைய மழவரைக்கெடுத்து அவர்விட்டுப்போகையினாலே போர்க்களத் தேகின்ற ஏந்தினகொம்பினையுடைய யானைகளும்,

*மழவர் - சிலவீரர்.

689. பகை புலம் கவர்ந்த பாய் பரி புரவி—பகைவர்நாட்டிலே கைக் கொண்டுவந்த பாய்ந்துசெல்லும் செலவினையுடைய குதிரைகளும்.

690 - 92. [வேல்கோ லாக வான்செல நூறிக், சாய்சின முன்பிற் கடுவ துட் கூளிய, ரூர்சுடு விளக்கிற் றந்த வாயமும்:] காய் சினம் முன்பின் கடுக கண் கூளியர் ஊர் சுடு விளக்கின் ஆள் செல நூறி வேல் கோல் ஆக தந்த ஆய மும் — எரிகின்ற சினத்தையுடைத்தாகிய வலியினையும் தறுகண்மையினையு முடையவாயக்கரையிலிருந்த வேட்டுவர் பகைவரூரைச்சுடுகின்ற விளக்கிலே நிரைகாத்திருந்தவீரரை மாளவெட்டி வேல்கோலாக அடித்துக்கொண்டுவந்த பசுத்திரளும்,

693. நாடு உடை நல் எயில் அணங்கு உடை தோட்டி— அகநாட்டைச் சூழவுடைத்தாகிய †முழுவரண்களிலிட்ட வருத்தத்தையுடைய கதவுகளும்,

694 - 5. நாள் தொறும் விளங்க கைதொழூஉ பழிச்சி நாள் தர வந்த விழு கலம்—நாடொறும் தமக்குச்செல்வமிகும்படியாகக் கையாற்றொழுதுவாழ் த்தி நாட்காலத்தே திறையாகக்கொண்டுவர வந்த சீரியகலங்களும்,

அனைத்தும்—அத்தன்மையனபிறவும்,

696 - 7. கங்கை அம் பெரு யாறு கடல் படர்ந்தாங்கு அளந்து கடை அறியா மதுரை (699)—கங்கையாகிய அழகிய பெரியயாறு ‡ஆயிரமுகமாகக் கடலிலேசென்றாற்போல அளந்து முடிவறியாத மதுரை.

வளம் கெழு தாரமொடு—வளப்பம்பொருந்தின அரும்பண்டங்களோடே,

698. [புத்தே ளுலகங் கவினிக் காண்வர:] புத்தேள் உலகம் காணவர கவினி—தேவருலகம்வந்து காணுதலுண்டாகத் தான் அழகைப்பெற்று,

கூற்றக் கொஃறேர் (633) அச்சமறியாதேமமாகிய (652) மிக்குப்புகழெய திய மதுரையென்க.

---

* மதுரை. 395 - உரை.

† முழுவரண் - முழுமுதலரணம்; தொல். புறத்திணை. 10 - சூ. விசேட வுரையைப்பார்க்க.

‡ "கங்கை, துறைகொ ளாயிர முகமுஞ் சுழல" (கல். "உழைநின றீரும்")

பாடல்சான்ற நன்னாட்டு நடுவணதாய் (331) இருபெருநியமத்து (365) நாளங்காடிக்கம்பலை (430) நாடார்த்தன்றேயாய் (428) அல்லங்காடி அழிதருகம்பலை (544) புள்ளினிசையெழுந்தற்றேயாய் (543) ஞாயிறு (546) குன்றஞ்சேருகையினாலே (547) மாலை (558) புகுந்து (557) பின்னர்ரீங்க (558) முந்தையாமஞ்சென்றபின்றை (620) மற்றைப் (653) பானாட்கொண்டகங்குல் (631) யாமத்தையும் மற்றை (653) யிடையதாகிய (631) கடவுள் வழங்குங்கங்குல் (651) யாமத்தையும் பகலுறக்கழிப்பிச் (653) சீப்ப (685) இராக்காலந் தன்னிடத்தினின்றும் போகின்றவைகறையிலே (686) வளங்கெழுதாரத்தோடே (697) யானையும் (688) புரவியும் (689) ஆயமும் (692) தோட்டியும் (693) கலமும் அனைத்துங் (695) சங்கையாறுகடற்படர்ந்தாற்போல (696) அளந்து முடிவறியாத (697) மதுரை (699) என்க

கவினிப் (698) புகழெய்திய (699) பெரும்பாணிருக்கை (342) முதலியவற்றையுடைய மதுரை (699) என்க.

699. மிக்கு புகழ் எய்திய பெரு பெயர் மதுரை—மிகுத்துப் புகழைப் பெற்ற பெரும்பொருளையுடைய மதுரை,

பெரும்பொருளென்றது, வீட்டினை: *"பெற்ற பெரும்பெயர் பலர்கை யிரீஇய" என்றார் பிறரும்.

700 - 701. [சினைதலை மணந்த சுரும்புபடு செந்தீ, யொண்பூம் பிண்டி யவிழ்ந்த காவில்:] சினை தலை மணந்த பிண்டி சுரும்பு படு செ தீ ஒள் பூ அவிழ்ந்த காவில்—கொம்புகள் தம்மிற்றலைகூடின அசோகினுடைய சுரும்புகளுண்டாஞ் செந்தீப்போலும் ஒள்ளியபூவிரிந்த பொழிலிடத்தே,

702 - 3. சுடர் பொழிந்து எறிய விளங்கு கதிர் ஞாயிறு இலங்கு கதிர் இள வெயில் தோன்றி அன்ன—ஒளியைச்சொரிந்து அத்தகிரியிலே போக விளங்குகின்ற கிரணங்களையுடைய ஞாயிற்றினுடைய விளங்குங்கிரணங்களின் இளவெயில் தோன்றினாலொத்த மகளிர் (712),

என்றது, பூத்த அசோகம்பொழிலிடத்தே இளவெயில் எறித்தாற்போலப் †புணர்ச்சியாற்பெற்ற நிறத்தையுடைய மகளிரென்க.

704. [தமனியம் வளைஇய தாவில் விளங்கிழை:] தாவு இல் தமனியம் வளைஇய விளங்கு இழை—ஓட்டற்ற பொன் நடுஅழுத்தினமணிகளைச்சூழ்ந்த விளங்குகின்ற பேரணிகலங்களையும்,

705. நிலம் விளக்கு உறுப்ப மேதக பொலிந்து—நிலத்தையெல்லாம் விளக்கமுறுத்தும்படி கற்புமேம்படப் பொலிவுபெற்று,

706. மயில் ஓர் அன்ன சாயல்—மயிலோடு ஒருதன்மைத்தாகிய மென்மையினையும்,

---

* பத்துப்பத்து, 90.

† "தேசு மொளியுந் திகழ நோக்கி" (பரி. 12: 21) என்பதன் உரையை பார்க்க.

706 - 7. மாலின் தளிர் எர் அன்ன மேனி—மாலின் தளிரினது அழகை யொத்த நிறத்தினையும்,

707 - 8. தளிர் புறத்து ஈர்க்கின் அருப்பிய நிலையர்—தளிரினது புறத்தில் ஈர்க்குப்போலத் தோன்றிய நிலையையுடையராய்,

கூர் எயிறு—கூரிய எயிற்றினையும்,

709. ஒள் குழை புணரிய வள் தாழ் காதின்—ஒள்ளிய மகரக்குழை பொருந்திய வளைய தாழ்ந்த காதினையும்.

710 - 11. [கடவுட்கயத் தமன்ற சுடரிதழ்த் தாமரைத், தாதுபடு பெரும்போது புரையும்வாண் முகத்து:] கயத்து அமன்ற கடவுள் *சுடர் இதழ் தாமரை தாது படும் பெரு போது புரையும் வாள் முகத்து—குளத்திலே தெருள் இன †தெய்வங்கட்குரிய தெருட்புப்போலுமிதழ்களையுடைய தாமரையினது தா தண்டாம்பெரியபூவை ஒக்கும் ஒளியினையுடைய முகத்தினையும்,

712. ஆய் தொடி மகளிர்—நன்றாக ஆராய்ந்த தொடியினையுமுடைய மகளிருடைய,

பொலிந்து (705) நிலையராய் (708) இழையினையும் (704) சாயலினையும் (706) சேனியினையும் (707) எயிற்றினையும் (708) காதினையும் (709) முகத்தினையும் (711) தொடியினையுமுடைய மகளிர் (712) என்க.

712. நறு தோள் புணர்த்து—நறிய தோளோடுபுணர்ந்து,

713. சோதையின் பொலிந்த சேக்கை துஞ்சி—தாக்குமாலைகளா பொலிவுபெற்றபடுக்கையிலே துயில்கொண்டு.

புணர்ந்து பின்னைத் துயிலுங்காலத்துத் தனியேதுயிலுதல் இயல்பென பதுதோன்றப் புணர்ந்து துஞ்சியென்றார்.

‡"ஐந்திழை றடுத்த செல்வத் தமளியி னியற்றி" என்றார் பிறரும்.

714. திருத்த துயில் எடுப்ப இனிதின் எழுந்து—செல்வத்தைவினைத்து இன்புறுகின்ற பற்றுள்ளம், உறக்கத்தையுணர்த்துகையினாலே அதனினைத்து இனிதாகப் பின் எழுந்து,

என்றது. தன்செல்வம் இடையறுதொழுகுதற்கு வேண்டுங் காரியங்களை விடியற்காலத்தே மனத்தானாராயவேண்டுதலின், துயிலெடுப்புக்கு இது காரண மாயிற்று: §"வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யு, நல்லறனு மொண் பொருளுஞ் சிந்தித்து" என்றார் ஆசாரக்கோவையில்.

இனி நன்றாகிய துயிலென்றுமாம்.

715 - 24. [இன்கா ழார மீவிச் ‖கதிர்விடு, மொண்கா ழாரங் கவைஇய மார்பின், வரிக்கடைப் பிரச மூசுவண மொய்ப்ப, வெருத்தர் தாழ்ந்த விரவுப்பூ

---

* "சுடர்த்தாமரை" (மதுரை, 249.)
† "கடவு ணொண்பூ" (பெரும்பாண். 290.)
‡ சிவகசிந்தாமணி, 838.
§ ஆசாரக்கோவை, 5. ‖ பி - ம். கதிர்விடுபொன் காழ்.

தெரியற், பொலஞ்செயப் பொலிந்த நலம்பெறு விளக்கம், வலிகெழு தடக்கைத் தொடியொடு *சுடர்வரச், சோறமை வுற்ற நீருடைக் கலிங்க, முடையணி பொலியக் குறைவின்று கவைஇ, வல்லோன் றைஇய வரிப்புனை பாவை, முருகியன் றன்ன வுருவினை யாகி:]

வல்லோன் தைஇய வரி புனை பாவை முருகு இயன்றன்ன உருவினை ஆகி—சித்திரகாரி பண்ணப்பட்ட எழுதிக்கைசெய்த பாவையிடத்தே தெய்வத் தன்மை நிகழ்ந்தாற்போன்ற வடிவினையுடையையாய்,

என்றதனால், நாட்காலையில் அரசர்க்குரிய கடன்கள்கழித்துத் தெய்வவழி பாட்டோடிருந்தமை கூறினார்.

திண் காழ் ஆரம் நீவி கதிர் விடும் ஒள் காழ் ஆரம் கவைஇய மார்பின்—திண்ணிய வயிரத்தையுடைய சந்தனத்தைப்பூசி ஒளிவிடும் ஒள்ளியவடமாகிய முத்துச்சூழ்ந்த மார்பிலே,

நீவியென்னுஞ் செய்தெனெச்சம் பிறவினைகொண்டது.

வரி கடை பிரசம் மூசுவன மொய்ப்ப—வரியையுடைத்தாகிய பின்னையுடைய தேனினமும் மற்றும் மொய்க்கப்படுவனவாகிய வண்டுமுதலியனவும் மொய்ப்ப,

எருத்தம் தாழ்ந்த விரவு பூ தெரியல்—கழுத்திடத்தினின்றுந்தாழ்ந்த விரவுதலையுடைய பூமாலையையுடைத்தாகிய மார்பென (716) முன்னே கூட்டுக,

பொலம் செய பொலிந்த நலம் பெறு விளக்கம் வலி கெழு தட கை தொடியொடு சுடர் வர—பொன்னாற்செய்கையினாலே பொலிவுபெற்ற மணிகளழுத்தின மோதிரம் வலிபொருந்தின பெரியகையில் வீரவளையோடு விளக்கம்வர,

சோறு அமைவு உற்ற நீர் உடை கலிங்கம்—சோறு தன்னிடத்தே பொருந்துதலுற்ற நீரையுடைய துகில்,

என்றது †கஞ்சியிட்டதுகிலை.

உடை அணி பொலிய குறைவு இன்று கவைஇ—உடைக்குமேலணியும் அணிகலங்களாலே அதுபொலிவுபெறும்படி தாழ்வின்றாகவுடுத்து,

புணர்ந்து துஞ்சி எழுந்து உருவினையாகி மார்பிலே பிரசமும் மூசுவனவும் மொய்ப்ப விளக்கம் தொடியொடுசுடர்வரக் கலிங்கத்தைக் கவைஇயெனமுடிக்க

725 - 6 ‡வரு புனல் கல் சிறை கடுப்ப இடை அறுத்து ஒன்னார் ஓட்டிய செரு புகல் மறவர்—மிக்குவருகின்ற யாற்றுநீரிடத்துக் கல்லணைநின்று தாங்கினாற்போலத் தம்படையைக்கெடுத்து மிக்குவருகின்ற பகைவர்படையை நடுவேதவிர்த்து அவரைக்கெடுத்த போரைவிரும்பும் படைத்தலைவர்,

* பி - ம். சுடர வுறையமைவுற்ற சோறுடைக்கலிங்கம்.

† "காடி கொண்ட கழுவுறு கலிங்கத்து" (நெடுநல். 134); "காடியுண்ட பூந்துகில்" (சீவக. 71); "காடி கலந்த கோடிக் கலிங்கம்" (பெருங்கதை, வயந்தகனகன்றது, 9.)

‡ பு - வெ. வஞ்சி. 19.

*"வருகின்ற புனலைத் தடுக்கிறை போல, வொருவன் ஞான்ற பெருமை யாளும்" என்னும் வஞ்சித்துறை கூறினர். இதுகூறவே முன்னர் †மாராயம் பெற்றவர்களே இப்போரைச்செய்வரென்பது தூண்டப் பெற்றுமாகலின், இவர்கள் எனுதிப்பட்டமுதலிய றெப்புப்பெற்ற படைத்தலைவரென்பது பெற்றும்.

727. ‡வாள் வலம் புணர்த்த பின் தாள் வலம் வாழ்த்த—வாள்வெற்றியைப் பொருந்தின தனது முயற்சியின்வெற்றியை வாழ்த்த.

728 - 9. வில்லே வையகு தினை தாங்கும் மார்பின் மா தாங்கு எறுழ்த் தோள் மறவர் தம்மின்—வில்லே நிரம்பவுவிக்கையினுலே தன்னுள்ளேயடக்கிக் கொண்ட அம்பின் நிசையைத்தாங்கும் மார்பினையும் குதிரையைச்செலுத்தி வேண்டுமனவிலேபிடிக்கும் வலியையுடைய தோளினையுமுடைய வீரரைக்கொணர்மின்;

தம்மின், முன்னிலை முற்றுவினைத்திரிசொல். இது தும்பையிற் §குதிரைமேலேகூறிற்று. தினைதாங்குமார்பு கூறவே ||தினை தினைபுறமொய்த்தலுங் கூறிற்று.

730 - 31. கல் இடித்து இயற்றிய இட்டு வாய் இடங்கின் கல் எயில் உழுத்த செல்வர் தம்மின்—¶கற்றரையைப் பொளித்துபண்ணின இட்டிதாகிய நீர்வரும்வாயையுடைய இடங்கினையுடைய முழுமுதலரணத்தினின்று வருந்தின வீரச்செல்வத்தையுடையாரைக் கொணர்மின்;

இஃது §"ஊர்ச்சென்ற வீழ்ச்சி மற்றதன் மறனும்" என்னும் புறத்திரிலைத்துறை கூறிற்று.

732 - 3. கொல் ஏறு பைந்தோல் வோது போர்த்த **மா கண் முரசம் ஓவு இல கறங்க—மாறுபாட்டையேற்றுக் கோறற்றொழிலையுடைய எற்றினதுசெவ்வித்தோலே மயிர் வோமற்போர்த்த பெரிய கண்ணையுடையமுரசம் ஓரும்மினின்று ஒலியாநிற்க.

734 - 6. எரி திமிர்த்தன்ன தாள் நாப்பண் பெரு கல் யானை போர்க்களத்து ஒழிய விழுமிய வீழ்ந்த குரிசில் தம்மின் - தெருப்புடைத்தாற்போன்ற பகைவர்படைக்குடலேசென்று பெரிய கல்ல யானையைப் போர்க்களத்தே படவெட்டிச் சிரிய புண்ணிலுல்வீழ்ந்த தலைவரைக் கொணர்மின்;

---

* தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 8.

† மாராயம் - அரசனுற்செய்யப்படும் றெப்பு.

‡ வாள்வெற்றியைவாழ்த்துதற்கு வீரரே உரியரென்பது, சிறுபாணாற்றுப்படை 210 - 12 ஆம் அடிகளாலும் அறியப்படும்.

§ தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 17.

|| " " " 16.

¶ "தோட்பத னமைத்த சுருக்கை யாடவர், தினைபொறி பிறப்ப நாற்றி வினையடர்த்து, கல்லதற் நியற்றிய வல்லுவர்ப் படுகின்" (அகநா. 79.)

§ தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 18.

** பி - ம். மயிர்க்கண் முரச மோவாது றெப்ப.

இது *"களிறெதிர்ந் தெறிந்தோர் பாடு" என்னும் தும்பைத்துறை கூறிற்று. பாடு, பெருமையாகலின் அதுதோன்ற ஈண்டுக் குரிசிலென்றார்.

முறைகருதுபு (738)—முன்னுளோர் காத்தமுறைமையை நாளும் உட்கொண்டு,

737. புரையோர்க்கு—நட்பிற் குற்றந்தீர்ந்தோர்பொருட்டு,

737 - 8. [தொடுத்த பொலம்பூந் தும்பை, சீர்யா ரென்னாது முறைகருதுபு சூட்டி :]

தொடுத்த பொலம் பூ தும்பை சூட்டி—கட்டப்பட்ட பொன்னாற்செய்த பூவினையுடைய தும்பையைச்சூட்டி எவுகையினாலே,

நான்காமுருபு ஈண்டு †அதற்பொருட்டு.

739. காழ் மண்டு எஃகமொடு கணை அலை கலங்கி—காம்பு குழைச்சினுள்ளே செருகின வேல்களுடனே அம்புகளுஞ்சென்று நிலைகுலைத்தலின் நிலைகலங்கி.

740 - 43. [பிரிபிணை யரிந்த நிறஞ்சிதை கவயத்து, வானத் தன்ன ‡வளநகர் பொற்ப, நோனகுறட் டன்ன ஊன்சாய் மார்பி, னுயர்ந்த வுதவி யூக்கலர்த் தம்மின் :]

பிரிபு இணை அரிந்த நிறம் சிதை கவயத்து ஊன் சாய்—பலவாய்ப் பிரிந்து இணைந்த சந்துவாய்களற்ற பழையநிறங்கெட்ட §கவயதோடே ஊன்கெட்ட.

நோன் ||குறடு அன்ன மார்பின்—வலிய சகடையிற்குறட்டையொத்த மார்பினையுடையராகிய ஊசகல (713) ரென்க.

வேலும்அம்பும்பட்டு எங்கும் உருவிநிற்றலிற் குறடும் அதிற்றைத்த ¶ஆர்களும் போன்றன மார்புகள்; குறடு பட்டடைமரமுமாம

வானத்து அன்ன வளம் நகா பொற்ப உயர்ந்த உதவி ஊக்கலர் தம்மின்—தேவருலகையொத்த செல்வத்தையுடைய ஊர்கள் முன்புபோலே நட்புக்கொண்ட அகத்துழிஞையோராளும்படி உயர்ந்த உதவியைச்செய்த முயற்சியையுடையாரைக் கொணர்மின்;

என்றது, தமக்குநட்பாய் முற்றகப்பட்டோரை முற்றுவிடுவித்தற்குத் தாமே உதவலின், மைந்துபொருளாகச்சென்று அம்முற்றுவிடுவித்து அவ்வூரை அவர்க்கு மீட்டுக்கொடுத்தமை கூறிற்று. இதனானே உழிஞைப்புறத்துத்

* தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 17.

† ,, வேற்றுமையியல், 15 - ஆம் சூத்திரம்பார்க்க.

‡ பா. வளங்கெழுநகாநோன்.

§ கவயம் கவசம்.

|| வேலும் அம்பும் உருவிநிற்கும் வீரர்மார்பிற்குக் குறடு உவமையாதலைப் புறநானூறு, 283, 290 - ஆம் பாடல்களாலுமுணர்க.

¶ பி - ம். உருளிகளும்.

தும்பைகூறினார்; என்னை? "கணையும் வேலுந் துணையுற மொய்த்தலிற, சென்ற வுயிரி னின்ற யாக்கை" கூறுதலானும் வளரகர் பெரும்படி உயர்ந்த உதவிசெய்தமை கூறுதலானும்.

744 - 6. நிவந்த யானை கணம் நிரை கவர்ந்த புலர்ந்த சாந்தின் விரவு பூ தெரியல் பெரு செய் ஆடவர் தம்மின்—உயர்ந்த யானைத்திரளினொழுங்குகளைக் கைக்கொண்ட பூசிப்புலர்ந்த சாந்தினையும, விரவுதலையுடைய வியன்பூமாலையினையும், பெரியசெய்கைகளையுமுடைய மண்டலங்களையாள்கின்றவரைக் கொணர்மின்

74. - 8. [பிறரும், யாவரும் வருக வேனோருந் தம்மென, வரையா வாயிற் செறாஅது :]

ஏனோரும் தம்மென வரையா—மண்டபத்தாரையும், அறங்கூறவையத்தாரையுங் கொணர்மினென வரைந்துகூறி,

வாயில் செறாது பிறரும் யாவரும் வருக என—வாயிலிடத்துத் தகையாமல இவர்களைப்போல்வாரும் படையாளர்முதலியோரும் வருவாராகவெனக்கூறி,

748. இருந்து—இஙஙனம் எளியையாயிருந்து.

749 - 50. [பாணர் வருக பாட்டியர் வருக, யாணர்ப் புலவரொடு வயிரியர் வருகென] யாணர் புலவரொடு பாணர் வருக பாட்டியர் வருக வயிரியா வருக என—கவியாகிய புதுவருவாயினையுடைய புலவரோடே பாணர் வருவாராக, பாணிச்சியர் வருவாராக, கூதர் வருவாராகவென அழைத்து,

751 - 2. [இருஙகிளை புரக்கு மிரவலர்க் கெல்லாங், கொடிஞ்சி நெடுந்தோ களிற்றொடும் வீசி]

இரு கிளை புரக்கும் இரவலர்க்கு எல்லாம் நீர் யார் என்னாது (738) கொடிஞ்சி நெடு தேர் களிற்றொடும் வீசி—அவர்கள் சுற்றத்தாராய் அவர்கள்பாதுகாக்கும் பெரிய இரவலர்க்கெல்லாம் நீர்யாவரென்று அவர்களைக்கேளாதே அவர்கள் காட்டின அளவைக்கொண்டு கொடிஞ்சியையுடைய நெடியதேர்களை யானைகளோடுங் கொடுத்து,

கொடிஞ்சி - தாமரைப்பூவாகப்பண்ணித் தேர்த்தட்டின்முன்னே நடுவது

753. களம் தோறும் கள் அரிப்ப—இடந்தோறுங் கள்ளையரிப்ப,

754. மரம் தோறும் மை வீழ்ப்ப — மரத்தடிகள்தோறும் செம்மறிக்கிடாய்படுப்ப,

755. நிணம் ஊன சூட்டு உருக்கு அமைய—நிணத்தையுடைய தசைகள் சுடுதலாலே அந்நிணம் உருகுதல்பொருந்த,

756. நெய் கனிந்து வறை ஆர்ப்ப—நெய் நிறையப்பெற்றுப் பொரிக்கறிகளாரவாரிப்ப,

---

* தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 16.

757. மூரல் ஞாயிறு மழை மங்குலின் பரந்த *தோன்ற—இறத்தையுடைய நிலாப்பிழிலெழுந்த புகை மழையையுடைய நிலைகள்போலே பரந்து தோன்றப்பட்டு,

758. †வியல் ஈரால் — அகற்சியையுடைய வீடுகளாலே ‡மிக்குப்புழெழுந்திய மதுரை (699) என முன்னேகூட்டுக.

ஈரல் - வீடுகள்.

அரிப்ப வீழ்ப்ப அமைய ஆர்ப்பத் தோன்றப்பட்டு அகற்சியையுடைய என உடைமையொடு முடிக்க.

759 - 62. [பல்சாலை §முதுகுடுமியி, னல்வேள்வித் துறைபோகிய, தொல்லாணை நல்லாசிரியர், புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின் :]

நல் வேள்வி துறை போகிய—நல்ல யாகங்கட்குக்கூறிய துறைகளெல்லாம் முன்னர் முற்றமுடித்துவிட்ட,

தொல் ஆணை நல் ஆசிரியர் புணர் கூட்டு உண்ட—பழைய ஆணைகளையுடைய நல்ல ஆசிரியர் தாங்கள் பின்புகுடின சுத்தழியாகிய கொள்ளையை அவரிடத்தே பெற்று அனுபவித்த,

புகழ் சால் சிறப்பின் பல்சாலைமுதுகுடுமியின்—புகழ்ச்சியமைந்த தலைமையினையுடைய ‖பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதியைப்போலே நீயும் நல்லாசிரியரிடத்தே கேட்டினின் (408) என முன்னேகூட்டுக.

என்றது, அந்தணர்க்குக்கூறியமுறையே முன்னுள்ள கருமங்களைமுடித்துப் பின்னர்த் தத்துவங்களையாராய்ந்து மெய்ப்பொருளுணர்ந்து வீட்டின்பமெய்திய ஆசிரியரிடத்தே தானும் அம்முறையேசென்று வீட்டின்பத்தைப் பெற்ற குடுமியென்றவாறு.

763. நிலம் தரு திருவின் நெடியோன் போல—எல்லாவுலகங்களையும் தன்னிடத்தே காட்டின பெருஞ்செல்வத்தையுடைய மாயோனைப்போலத் தொல்லாணையையுடைய நல்லாசிரியர் (761) என முன்னேகூட்டுக.

என்றது, கண்ணன் எப்பொருளும் தானுயிருக்கின்றபடியைக் காட்டிஸ்ரீ கீதையருளிச்செய்து எல்லாரையும் போதித்தாற்போல எல்லாரையும் போதிக்கவல்லராகிய ஆசிரியரென்றவாறு.

ஆணை - ஆக்கினை.

764 - 5. [வியப்புஞ் சால்புஞ் செம்மை சான்றோர், பல்லாப்புகழ் நிறைந்த பெரும்பி :]

---

* பா. தோன்றிய. † பா. வியன்சாலை.

‡ "நின்று நிலவிப் புகழ்பூத்த வல்லது, குன்றத் தூண்டோ மதுரை" (பரிபாடல், பக்கம், 175.)

§ பா. முதுகுடுமிகல்.

‖ இப்பாண்டியன் பலயாகங்களைச்செய்து முடித்தவனென்பது, "எடுத்தேர்குழித்த" (15) என்னும் புறப்பாட்டால் அறியலாகும்.

வியப்பும்—நீ அவ்வாசிரியரிடத்துப்பெற்ற கந்தழியின் அதிசயமும்,

சால்பும்—பின்பு பெற்றமைந்த அமைதியும்,

புகர் அறு சிறப்பின் செம்மை சான்றோர் பலர் வாய் தோன்றி—குற்றமற்ற சிறப்புக்களையுடைய தலைமைகளெல்லாம் அமைந்தோர்பலரும் தம்மிலிருந்து சொல்லப்பட்டு,

பலர்வாயென்பதனோடும் பின்வரும் புகரறுசிறப்பைக் கூட்டுக. புகரறு சிறப்பிற் செம்மையாவன :— *"நாலிரு வழக்கிற் றாபத பக்கமும்" என்புழிக் கூறப்பட்டவை.

766. அரிய தந்து—இவ்விடத்திற்கு அரியவாய் வேற்றுப்புலத்திலுள்ள பொருள்களைக்கொணர்ந்து எல்லார்க்குங்கொடுத்து,

குடி அகற்றி—நின்னாட்டில்வாழுங் குடிமக்களைப் பெருக்கி,

என்றது, செல்வமுண்டாக்கியென்றதாம்.

767. பெரிய கற்று—நற்பொருள்களை விளங்கக்கூறிய நூல்களைக் கற்று.

இசை விளக்கி—நினபுகழே எவ்வுலகத்தும் நிறுத்தி,

768. முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும் - கடனடுவேதோன்றுகின்ற ஞாயிற்றையொக்கவும்.

769. பல் மீன் நடுவண் திங்கள் போலவும்—பலமீன்களுக்குநடுவே தோன்றுகின்ற நிறைமதியைப்போலவும்,

770. பூத்த சுற்றமொடு பொலிந்து இனிது விளங்கி—நீ பொலிவுபெற்ற சுற்றத்தாருடனே பொலிவுபெற்று இனிதாகவிளங்கி,

மண்டிலமாக்கள் தண்டத்தலைவர் முதலிய சுற்றத்தோர்க்குநடுவே ஞாயிறு போலவிளங்கி, பலகலைகளைக் கற்றோரிடத்தே மதிபோலவிளங்கியென்க.

771 - 2. பொய்யா நல் இசை நிறுத்த புனை தார் பெரு பெயர் மாறன தலைவனாக—உண்மையான நல்லபுகழை உலகிலேநிறுத்தின கைசெய்த மாலையினையும் பெரிய பெயரினையுமுடைய மாறன்முதலாக,

மாறன் - இவன்குடியிலுள்ளபாண்டியன்; அன்றி ஒரு குறுநிலமன்னனென்றலுமொன்று.

773. கடந்து அடு வாய் வாள் இள பல் கோசர்—பகைவரை வென்று கொல்லும் தப்பாதவாளினையுடைய இளைய பலராகிய கோசரும்,

774 - 7. [இயனெறி மரபினின் வாய்மொழி கேட்பப், பொலம்பூ ணைவருட்படப் புகழ்ந்த, மறமிகு சிறப்பிற் குறுநில மன்ன, ரவரும் பிறரும் :]

புகழ்ந்த பொலம் பூண் ஐவர் உட்பட—எல்லாராலும் புகழப்பட்ட பொன்னாற்செய்த பேரணிகலங்களையுடைய ஐம்பெருங்கேளிருமுட்பட.

மறம் மிகு சிறப்பின் குறுநிலமன்னர் அவரும்—மறமிக்க நிலைமையினையுடைய குறுநிலமன்னராகிய அவரும்,

---

* தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 20.

பிறரும்—கூறுதொழிற்றோரும்,

இயல் தெரி மரபின் கின் வாய் மொழி கேட்ப—நடக்கின்ற நெறிமுறை மையிலுலே கின்னுடைய உண்மையானமொழியைக் கேட்டு அதன்வழியே நடக்க,

777 - 8. [துவன்றிப், பொற்பு விளக்கு புகழவை சிற்புகழ்ச் தேத்த:] பொற்பு விளக்கு புகழ் அலை துவன்றி கின் புகழ்த்து எத்த — பொலிவு விளக்குகின்ற புகழினையுடைய அறங்கூறவையத்தார் நெருங்கி கின்னுடைய அறத்தின்தன்மையைப் ழ்த்த,

779 - 81. [இலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்தி, மணங்கமழ் தேறல் மடுப்ப காளு, மகிழ்த்து:]

இலங்கு இழை மகளிர் பொலம் கலத்து ஏந்திய மணம் கமழ் தேறல் மடுப்ப மகிழ்த்து—விளங்குகின்ற பூணினையுடையமகளிர் பொன்னுற்செய்த வட்டில்களிலேயெடுத்த மணங்காறுகின்ற காமபான முதைத்தர அதனையுண்டு மகிழ்ச்சியெய்தி மகளிர்தோன்புணர்த்து (712) என முனவேகூட்டுக.

காளுமென்பதனைப் பின்னேகூட்டுக.

மணங்கமழ்தேறலென்றதனுற் காமபானமாயிற்று.

781 - 2. [இனிதுறைமதி பெருமை, வரைத்தீ பெற்ற கல்லா ழியை யே:] பெரும கல் ஞாழியை வரைத்து நீ பெற்ற காளும் இனிது உறைமதி பெருமானே! கன்முகிய ஞாழிக்காலத்தை இத்தனைக்காலமிருத்தியெனப பால் வரைதெய்வத்தாலே வரையப்பட்டு நீ அறநிடாகப்பெற்ற சான்முழுதும் இனி தாக இருப்பாயென்க.

*கல்லாழியென்றுர், கலியாழியல்லாத ஞாழியை.

உம்மை, முற்றும்மை.

உயர்ந்தோர் மருகனே (23) செடியோனும்பலே (61) பொருகனே (42) கொற்றவனே (88) வெல்கோவே (105) புகழ்வேந்தே (130) கைப்பொரு னே (138) போசேறே (144) குருசிலே (151) நீகொற்றவர்தக்கோலுகுவை (74) வாய்சட்பினே (198) பணிந்தொழுகலே (201) பழிநமக்கொழுவெல்லுய் (204) இசைவேட்குவை (205) அன்னுய் (206) கின்கொற்றம் (194) பிறை யிற் (193) நிறக்க (194) கின்தெவ்வாக்கம் (196) மதியிற் (195) செடுக (196) கின்கல்லிசை கெடாதுகிலேஇயர் (209) இனி நீ பாடல்சான்ற கன்னாட்டு நடவணாய் (331) இருபெருங்யமத்து (365) காளங்காடிக்கம்பலே (430) காடார்த்தன்றேயாய் (428) அல்லங்காடி அழிதருகம்பலே (514) புள்ளினிசை யெழுந்தற்றேயாய் (543) ஞாயிற (546) குனறஞ்சேருகையினுலே (547) மாலே (558) புகுந்து (557) பின்னர்நீக்க (558) மூன்றையாமஞ் சென்றபின்றை (620) மற்றைப் (653) பானுட்கொண்டகங்குல் (631) யாமத்தையும் மற்றை (653) இடையதாகிய (631) கடவுள்வழங்குகங்குல் (651) யாமத்தையும் பகலுதக்கழிப்பிப் (653) பாடப் (656) பண்ணைச் (658) கைப்பத் (659) தெளிட்ட (660) உறப்ப (661) நவலச் (662) கரையத் (667) தோன்ற (669) வாழ்

த்த நுவல (670) இசைப்ப (671) இரங்கச் சிலைப்ப (672) இயம்பக் (673) கறைப அசை (675) முழங்கக் (676) குழுமச் (677) சீப்ப (685) இராக்காலம் நன்னிடத்தினின்றும்போகின்ற வைகறையிலே (686) வளங்கெழு தாரத் தோடே (697) யானையும் (688) புரவியும் (689) ஆயமும் (692) தோட்டியும் (693) கலமுமனைத்தும் (695) கங்கையாறுகடற்படர்ந்தாங்கு (696) அளந்து கடையறியாத (697) கவினிப் (698) புகழெய்திய (699) பெரும்பாணிருக்கை யினையும் (342) கிடங்கினையும் (351) புரிசையினையும் (352) வாயிலினையு (356) முடைய நான்மாடத்தான் மலிந்தபுகழைக்கூடுதலையுடைய (429) மது ரையிலே (699) மகளிர் தேறன்மடுப்ப (780) மகிழ்ந்து (781) மகளிர்நறுந் தோளைப்புணர்ந்து (712) சேக்கைத்துஞ்சி (713) எழுந்து (714) உருவினை யாகி (724) மார்பிலே (716) பிரசமும் மூசுவனவுமொய்ப்ப (717) விளக்கம் (719) தொடியொடுசுடர்வரக் (720) கலிங்கத்தைக் (721) கவைஇ (722) மற வர் (726) தாள்வலம் வாழ்த்த (727) மாறன்முதலாகக் (772) கோசரும் (773) ஐவருமுட்படக் (775) குறுநிலமன்னராகிய (776) அவரும்பிறரும் (777) நின வாய்மொழிகேட்ப (774) நிற்புகழ்ந்தேத்த (778) மறவர்த்தம்மின் (729), செல் வர்த்தம்மின் (731), குரிசிலர்த்தம்மின் (736). ஊக்கலர்த்தம்மின் (743), பெருஞ்செயாடவர்த்தம்மின் (746), ஏனோருந் தம்மெனச் சிலரை வரைந் துகூறி (747) வாயிலிடத்துத் தகையாமற் (748) பிறரும் (746) யாவரும வருகவெனப் பொதுப்படக்கூறி (747) நாளோலக்கமிருக்குமண்டபத்தேயிரு ந்து (748) புலவரொடு (750) பாணர்வருக, பாட்டியர்வருக (749), வயிரியா வருகவெனவழைத்து (750) அவர்காட்டின இரவலர்க்கெல்லாம் (751) நீர்யா ரென்னாதே (738) தேரைக் களிற்றொடும்வீசி (752) அரியதந்து குடியகற்றிப (766) பெரியகற்று இசைவிளக்கி (767) ஞாயிறுபோலவுந் (768) திங்கள்போல வுஞ் (769) சுற்றமொடு பொலிந்து விளங்கி (770) வாழி (208); அங்ஙனம் வாழ்ந்து பிறப்பற முயலாது பயனின்றிக்கழிந்தோர் (237) நிரையிடுமணலி னும் பலரேகாண் (236), அப்பயனின்மையாலே (238) அண்ணலே (207) நீயும் அவ்வாறுகழியலாகாதென்று இவ்வாழ்விற்பெரிதாயிருப்பதொரு பொருளை யான்கூறுவேன் (207); அஃது என்னாற்காட்டுதலரிது; அதனை நெடியோன போலத் (763) தொல்லாணையினையுடைய நல்லாசிரியர் (761) புணர்கூட்டுண்ட சிறப்பினையுடைய (762) பல்யாகசாலைமுதுகுடுமியைப்போல (759) நல்லாசி ரியரிடத்தே கேட்டிசின் (208); கேட்டு அதனைநீகண்டவியப்பும் சால்பும் (764) புகாறுசிறப்பிற் (765) செம்மைசான்றோர் (764) பலர் தம்மிலிருந்து சொல்லப் பட்டுப் (765) பெருமானே (781), நன்றாகிய ஊழிக்காலத்தை இத்துணைக்கா மிருத்தியெனப் பால்வரைதெய்வத்தாலே வரையப்பட்டு நீ அறுதியாகப்பெற் (782) நாண்முழுதும் (780) இனிதாகப் பேரின்பத்தை நுகர்ந்திருப்ப (781); அதனை நுகராது ஐம்பொறிகட்கும் முன்னிற்கப்படுவனவாகிய இந்நா பொருள்கட்கு நின்னொடு என்ன உறவுண்டு (206); இனி நின்னிடத்துண்ட கிய மாயைகெடுவதாக (208) என மாட்டுறுப்பானும் எச்சவுறுப்பானும் வி முடிக்க.

*"அகன்றுபொருள் கிடப்பினு மணுகிய நிலையினு, மியன்றுபொருள் முடியத் தந்தன ருணர்த்தன், மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்", †"சொல்லொடுங் குறிப்பொடு முடிவுகொ ளியற்கை, புல்லிய கிளவி யெச்ச மாகும்." ஏன்னுஞ்சூத்திரங்களாற் கூறிய இலக்கணம் ‡"நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பு" எனத் தொல்காப்பியனார் கூறினமையின், இவரும் நல்லிசைப்புலவராதலின், இங்ஙனம் செய்யுள்செய்தாரென்றுணர்க.

§தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடிமருதனார்பாடிய மதுரைக்காஞ்சிக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்தவுரை முற்றிற்று.

வெண்பா.

1 பைங்க ணிளம்||பகட்டின் மேலானைப் பான்மதிபோற்
றிங்க ணெடுங்குடையின் கீழானை—¶யங்கிரந்து
$நாம்வேண்ட நன்னெஞ்சே நாடுதிபோய் நானிலத்தோர்
தாம்வேண்டுங் கூடற் றமிழ்

2 சொல்லென்னும் பூம்போது தோற்றிப் பொருளென்னு
நல்லிருந் தீந்தாது நாறுதலான்—மல்லிகையின்
வண்டார் கமழ்தாம மன்றே மலையாத
தண்டாரான் கூடற் றமிழ்.

---

* தொல்காப்பியம், செய்யுளியல், சூ. 211.
† ,, ,, ,, 207.
‡ ,, ,, ,, 1
§ பி-ம். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன்.
|| பி-ம். பகட்டுமேலானை.
¶ பி-ம். தங்காது.
$ பி-ம். நாம்வேண்டு.

ஏழாவது

நெடுநல்வாடை.



வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇ,
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
வார்கலி முன்னிய கொடுங்கோற் கோவல
ரேறுடை யினநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோட
லீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி கலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
மாமேயல் மறப்ப மன்றி கூரப்
பறவை படிவன வீழ்க் கறவை
கன்றுகோ ளொழியக் கடிய விசிக்
குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாட்
புன்கொடி முசுண்டைப் பொறிப்புற வான்பூப்
பொன்போற் பிரமொடு புகற்புதன் மலரப்
பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி
யிருங்களி பரந்த வீர வெண்மணற்
செவ்வரி நாரையோ டெவ்வாயுள் கவரக்
கயலற லெதிரக் கடும்புனற் சாஅய்ப்
பெயலுலந் தெழுந்த பொங்கல் வெண்மழை

---

1. வலனேர்பு: (முல்லை. 4.)
5. பி - ம். புலம்பிற்கலக்கி.
9. சிவக. 1158 - ஏ. மேற்கோள்.
14. பிரென்னுஞ்சொல் அம்முச்சாரியை பெற்றவருவதற்கு இவ்வடி மேற்கோள்; (தொல். புள்ளிமயங். சூ. 70. உ.)
18. சாயென்பது குணுங்குமாகிய குறிப்பை உணர்த்துமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; (தொல். உரி. சூ. 34 - சே. உ; இ - வி. சூ. 281); இவ்வடி பெயரின்பின் உரிச்சொல் வந்ததற்கு முதாரணம்; (இ - வி. சூ - 280.)
19. "எதிர்செல் வெண்மழை பொழிபுற் நிற்கன்" (முல்லை. 100); "பெய்து புறந்தந்து பொங்கலாடி, விண்டுச் சேர்ந்த வெண்மழை" (பதிற். 55: 14 - 5); "பெய்துபுறந் தந்த பொங்கல் வெண்மழை" (அகநா. 217). பா. பெயலுழந்து.

யகலிரு விசும்பிற் றுவலை கற்ப
வங்க ணகல்வய லார்பெயற் கலித்த
வண்டோட்டு நெல்லின் வருகதிர் வணங்க
முழுமுதற் கமுகின் மணியுற ழெருத்திற்
கொழுமட லவிழ்ந்த குழூஉக்கொள் பெருங்குலை
நுண்ணீர் தெவிள வீங்கிப் புடைதிரண்டு
தெண்ணீர்ப் பசுங்காய் சேறுகொள முற்ற
நளிகொள் சிமைய விரவுமலர் வியன்காக்
குளிர்கொள் சினைய குரூஉத்துளி தூங்க
மாட மோங்கிய மல்லன் மூதூ
ராறுகிடந் தன்ன வகனெடுந் தெருவிற்
படலைக் கண்ணிப் பரேரெறுழ்த் திணிதோண்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
வண்டுமூசு தேறன் மாந்தி மகிழ்சிறந்து
துவலைத் தண்டுளி பேணார் பகலிறந்
திருகோட் டறுவையர் வேண்டுவயிற் றிரிதர
வெள்ளி வள்ளி வீங்கிறைப் பணைத்தோண்
மெத்தென் சாயன் முத்துறழ் முறுவற்
பூங்குழைக் கமர்ந்த வேந்தெழின் மழைக்கண்
மடவரன் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி யரும்பின் பைங்காற் பிததிகத்
தவ்வித ழவிழ்பதங் கமழப் பொழுதறிந்
திரும்புசெய் விளக்கி னீர்ந்திரிக் கொளீஇ
நெல்லு மலருந் தூஉய்க்கை தொழுது
மல்ல லாவண மாலை யயர

---

20. "மாரி கற்பான் றுவலைநாட் செய்வ தேபோல்" (சீவக. 2070.)

30. மதுரை. 359 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

31 - 2. மு. பெரும்பாண். 60 - 61.

36. "வெள்ளிவள்ளியின் விளங்குதோள்" (சீவக. 420.)

36 - 7. வழிமோனைக்கு இவ்வடிகள் மேற்கோள்; (தொல். செய். சூ. 94 - பேர்.)

39. மதுரை. 397.

39 - 40. செந்தொடையாவதன்றி மோனைத்தொடைப்பாடின்றென்பதற்கு இவ்வடிகள் மேற்கோள்; (தொல். செய். சூ. 94 - பேர்.)

43 - 4. "அகனக ரெல்லா மரும்பவிழ் முல்லை, நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் - பகன்மாய்ந்த, மாலை" (சிலப. 9 : 1 - 2 அடியார். மேற்.)

மீன்யுறை புறவின் செங்காற் சேவ
லின்புறு பெடையொடு மன்றுதேர்ந் தண்ணை
நிரவும் பகலு மயங்கிக் கையற்று
மதலைப் பள்ளி மாறுவன விருப்பக்
கடியுடை வியனகர்ச் சிறுகுறுந் தொழுவர்
கொள்ளுறழ் கறங்கற் பலகூட்டு மறுக
வடவர் தந்த வான்கேழ் வட்டக்
தென்புல மருங்கிற் சான்றொடு துறப்பக்
கூந்தன் மகளிர் கோதை புனையார்
பல்லிருங் கூந்தற் சின்மலர் பெய்ம்மார்
தண்ணறுந் தகர முளரி நெருப்பமைத்
திருங்கா ழகிலொடு வெள்ளெயிர் புகைப்பக்
கைவல் கம்மியன் கனிவ்பெறப் புனைந்த
செங்கேழ் வட்டஞ் சுருக்கிக் கொடுந்தறிச்
சிலம்பி வாலூல் வலந்தன தூங்க
வானுற நிவந்த மேனிலை மருங்கின்
வேனிற் பள்ளித் தென்வளி தருஉம்
நேர்வாய்க் கட்டளை திரியாது திண்ணிலைப்
போர்வாய் கதவந் தாழொடு துறப்பக்
கல்லென் றுவலை தூவலின் யாவருந்
தொகுவாய்க் கன்னற் றண்ணீ ருண்ணூர்
பகுவாய்த் தடவிற் செந்நெருப் பார
வாடன் மகளிர் பாடல்கொளப் புணர்மார்
தண்மையிற் றிரிந்த வின்குரற் றீந்தொடை
கொம்மை வருமுலை வெம்மையிற் றடைஇக்

---

49. "கடியுடை வியனகரவ்வே" (புறநா. 95.)

51. "வடவர் தந்த வான்கேழ் வட்டம்" (அகநா. 340), "வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துந், தென்மலைப் பிறந்த சந்தன மறுகை" (சிலப். 4: 37 - 8.)

56. "குடதிசை மருங்கின் வெள்ளெயிர் தன்னெடு. குணதிசை மருங்கிற் காரகி றறத்து" (சிலப். 4: 35 - 6.)

57. "கைவல் கம்மியன்" (நெடுநல். 85.)

66. "வடபான் முனிவன் றடவிலுட் டோன்றி" (புறநா. 201.) "தட்டோர் முழங்கு செச்சி" (சீவக. 2373.)

68. பா. தண்மையிற் றிரிந்த. 69. சிலப். 28: 16.

கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்பக்
காதலர்ப் பிரிந்தோர் புலம்பப் பெயல்களைந்து
கூதிர்நின் றன்றாற் போதே மாதிரம்
விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டில
மிருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்
பொருதிறஞ் சாரா வரைநா ளமயத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்
தொருங்குடன் வளைஇ யோங்குநிலை வரைப்பிற்
பருவிரும்பு பிணிததுச் செவ்வரக் குரீஇத
துணைமாண் கதவம் பொருத்தி யிணைமாண்டு
நாளொடு பெயரிய கோளமை விழுமரததுப்
போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துத்
தாழொடு குயின்ற போரமை புணர்ப்பிற்
கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்
தையவி யப்பிய நெய்யணி நெடுநிலை
வென்றெழு கொடியொடு வேழஞ் சென்றுபுகக்
குன்றுகுயின் றன்ன வோங்குநிலை வாயிற்
றிருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பிற்
றருமணன் ஞெமிரிய திருநகர் முற்றதது
நெடுமயி ரெகினத தூநிற வேற்றை
குறுங்கா லன்னமோ டுகளு முன்கடைப்
பணைநிலை முனைஇய பல்லுளைப் புரவி
புல்லுணாத தெவிட்டும் புலம்புவிடு குரலொடு
நிலவுப்பயன் கொள்ளு நெடுவெண் மற்றத்துக்

---

70. கருங்கோட்டுச்சீறியாழ்: (புறநா. 127, 145.)

82. "நாளொடு பெயரிய நவையி லாமரம்" (வாயு. பார்ப்பதி திருமணம். 9.)

86. முருகு. 228 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

88. குன்றுகுயின்றன்ன: (மதுரை. 474.)

90. ஞெமிர்தலென்பதற்குப்பொருள் பரத்தலெனக்கூறி இவ்வடியை மேற்கோளாகக் காட்டினர்; (தொல் உரி. சூ. 65 - சே. ந; இ - வி. சூ. 281) பா. ஞெமரிய.

95. "வெண்ணிலவின் பயன்றுய்த்தும்" (பட். 114); "பொங்கிணர்க் காவு தோறும் புதுமணற் குன்று தோறும், பங்கயச் செங்க ணெம்மான் பானி லாப் பயன்கொண்டு" (பாகவத. 10: கோவியரை. 22.)

கிம்புரிப் பகுவா யம்பண நிறையக்
கதுழ்ந்துவீ ழருவிப் பாடுவிறந் தயல
வொலிநெடும் பீலி யொல்க மெல்லியற்
கலிமயி லகவும் வயிர்மரு ளின்னிசை
நளிமலைச் சிலம்பிற் சிலம்புங் கோயில்
யவன ரியற்றிய வினைமாண் பாவை
கையேந் தையக னிறையநெய் சொரிந்து
பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிரெரி
யறுவறு காலைதோ றமைவரப் பண்ணிப்
பல்வேறு பள்ளிதொறும் பாயிரு ணீங்கப்
பீடுகெழு சிறப்பிற் பெருந்தகை யல்ல
தாடவர் குறுகா வருங்கடி வரைப்பின்
வரைகண் டன்ன தோன்றல வரைசேர்பு
வில்கிடந் தன்ன கொடிய பல்வயின்
வெள்ளி யன்ன விளங்குஞ் சுதையுரீஇ
மணிகண் டன்ன மாத்திரட் டிண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவ
ருருவப் பல்பூ வொருகொடி வளைஇக்
கருவொடு பெயரிய காண்பி னல்லிற்
றசநான் கெய்திய பணைமரு ணோன்றா
ளிகன்மீக் கூறு மேந்தெழில் வரிநுதற்
பொருதொழி நாக மொழியெயி றருகெறிந்து
சீருஞ் செம்மையு மொப்ப வல்லோன்
கூருளிக் குயின்ற வீரிலை யிடையிடுபு
தூங்கியன் மகளிர் வீங்குமுலை கடுப்பப்
புடைதிரண் டிருந்த குடத்த விடைதிரண்

---

99. பா. களிமயில்.

101 - 3. முல்லை. 85 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

107. "குழைமுகப்புரிசை" (சீவக. 275) என்பதற்கு இவ்வடி மேற்கோள்; 'ஆடவர்குறுகா அருங்கடிவரைப்பினுள்ளேவைத்தால்' (சீவக. 1713 - உரை.)

109. பா. விற்கிடந்தன்ன ..... பலவயின்.

112. மதுரைக்காஞ்சி, 485 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க; செப்புவொண் டன்ன விஞ்சித் திருநகர்" (சீவக. 439.)

115. (தொல். எச்ச சூ. 6 - சே. ந; இ - வி. சூ - 175, 635; தக்க. 628 - மேற்.)

டுள்ளி நோன்முதல் பொருத்தி யடியமைத்துப்
பேரள வெய்திய பெரும்பெயர்ப் பாண்டில்
மடைமா ணுண்ணிழை பொலியத் தொடைமாண்டு
முத்துடைச் சாலேக நாற்றிக் குத்துறுத்துப்
புலிப்பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத்
தகடுகண் புதையக் கொளீஇத் துகடீர்ந்
தாட்டுறு பன்மயிர் விரைஇ வயமான்
வேட்டம் பொறித்து வியன்கட் காணத்து
முல்லைப் பல்போ துறழுப் பூநிரைத்து
மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத்
தூணிபுண ரன்னத் தூநிறத் தூவி
யிணையணை மேம்படப் பாயணை யிட்டுக்
காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத
தோடமை தூமடி விரித்த சேக்கை
யாரந் தாங்கிய வலர்முலை யாகத்துப்
பின்னமை கெடுவீழ் தாழத் தணைதுறந்து
நன்னுத லுலறிய சின்மெல் லோதி
நெடுநீர் வார்குழை களைந்தெனக் குறுங்கண்
வாயுறை பழுத்திய வறிதுவீழ் காதிற்
பொலந்தொடி நின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகைதூல் யாத்து
வாளைப் பகுவாய் கடுப்ப வணக்குறுத்துச்
செல்லிரற் கொளீஇய செங்கேழ் விளக்கத்துப்
பூந்துகின் மறீஇய வேந்துகோட் டல்கு
லம்மா சூர்ந்த வலிர்நூற் கலிங்கமொடு
புனையா வோவியங் கடுப்பப் புனைவி
னலிரேர் மேனித தாய சுணங்கி
னம்பணைத் தடைஇய மென்றோண் முகிழ்முலை
வம்புவிரித் தியாத்த வாங்குசாய் தாகப்பின்
மெல்லியன் மகளிர் நல்லடி வருட

134. மதுரை. 721 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க; பக். 311 'பலசிரற் புலைத்தி நெடிதுபிசைந் தட்டிய, பூந்துகில்" (அகநா 387.)

140. பா. வாயறை.

147. "புனையா வோவியம் போல சிற்றலும்", "புனையா வோவிய புறம்போச் தென்ன" (மணி. 16: 131; 22: 88.)

நரைவிர வுற்ற நறுமென் கூந்தற்
செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவு நெடியவு முரைபல பயிற்றி
யின்னே வருகுவ ரின்றுணை யோரென
வுகத்தவை மொழியவு மொல்லாண் மிகக்கலுழ்ந்து
நுண்சேறு வழித்த நோனிலைத் திரள்கா
லூறா வறுமுலை கொளீஇய காறிருத்திப்
புதுவ தியன்ற மெழுகுசெப் படமிசைத்
திண்ணிலை மருப்பி னாடுதலை யாக
விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலன் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய
வுரோகிணி நினைவன ணோக்கி நெடிதுயிரா
மாயித ழேந்திய மலிந்துவீ ழரிப்பனி
செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியாப்
புலம்பொடு வதியு நலங்கிள ரரிவைக்
கின்னா வரும்படர் தீர விறறந்
தின்னே முடிகதில் லம்ம மின்னவி
ரோடையொடு பொலிந்த வினைநவில் யானை
நீடிர டடக்கை நிலமிசைப் புரளக்
களிறுகளம் படுத்த பெருஞ்செய் யாடவ
ரொளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து
வடந்தைத் தண்வளி யெறிதொறு நுடங்கித்
தெற்கேர் பிறைஞ்சிய தலைய நற்பல்
பாண்டில் விளக்கிற் பரூஉச்சுட ரமுல
வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்டப் பின்னர்
மணிபுறத் திட்ட மாத்தாட் பிடியொடு

---

152. பா நறைவிரவுற்ற.

155. "இன்னே வருகுவர்" (முல்லை. 16.)

156. "காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ் சிறந்து" (முல்லை. 22.) பா. முகைத்தவை.

169. "தாரொடு பொலிந்த வினைநவில் யானை" (மலைபடு. 227), "செல்சமந் தொலைத்த வினைநவில் யானை" (பதிற். 82.)

175. முல்லைப்பாட்டு, 85 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க,

பருமல் ஸனையாப் பாய்பரிக் கலிமா
விருஞ்சேற்றுத் தெருவி னெறிதுளி விதிர்ப்பப்
புடைவீ ழந்துகி லிடவயிற் றழீஇ
வாடோட் கோத்த வன்கட் காளை
சுவன்மிசை யமைத்த கையன் முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே.

இதன்பொருள்.

இப்பாட்டிற்கு நெடுநல்வாடையென்று பெயர் கூறினார், இப்பெயர் நெடிதாகிய நல்ல வாடையெனவிரிதலிற் பண்புத்தொகையாயிற்று. வாடையென, வாடைக்காற்றிற் றோன்றின கூதிர்ப்பாசறையை யுணர்த்தலிற் பிறந்தவழிக் கூறலென்னும் ஆகுபெயராய் நின்றது. இப்பாட்டினுட் "கூதிர்நின் றன்றாற் போதே" (72) எனவும், "கூதிர்ப் பானாள்" (12) எனவுங் கூறுகின்றாராதலின், இது *"வாகை தானே பாலையது புறனே" எனப் பாலைக்குப்புறனாகக் கூறிய வாகைத்திணையாய் அதனுள், †"கூதிர் வேனி லென்றிரு பாசறைக், காதலி னொன்றிக் கண்ணிய மரபினும்" எனக்கூறிய கூதிர்ப்பாசறையே யாயிற்று. தலைவனைப் பிரிந்திருந்து வருந்துந்தலைவிக்கு ஒருபொழுது ஓரூழி போல நெடிதாகியவாடையாய்ப் பாலையாகிய உரிப்பொருளுணர்த்திற்று. அகத்தொடுங்கிப் போகம்நுகர்வார்க்குச் சிறந்தகாலமாயினும் அரசன் ‡போகம்வேண்டிப் பொதுச்சொற்பொறானாய் அப் போகத்தின்மனமற்று வேற்றுப்புலத்துப்

185. "ஊதையுந். தாதுளர் கானற் றவ்வென் றன்றே" (நற். 319), "தவ்வெனக் குடித்தி" (குறுந். 356); தவ்வென்பது குறிப்புமொழியென்று கூறி, இவ்வடிகளை மேற்கோளாகக்காட்டினர்; (குறள். 1144 - பரி.) பா. பரம புதுளி.

186. "ஒலியவிர் தடங்கி யாம நள்ளென" (நற். 303.) "நள்ளென் றன்றேயாமம்" (குறுந். 6); பா. யாமத்துப்பள்ளி.

186 - 8. தொல். கற். சூ 34. ந. மேற்.

176 - 88. "அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇ" என்பதற்கு இவ்வடிகள் மேற்கோள்; (தொல். புறத். சூ. 8 - ந.)

* தொல்காப்பியம், புறத்திணையியல், சூ 18.

† " " " 21.

‡ "போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅன்" (புறநா, 8); "பொது மொழி பிறர்க்கின்றி முழுதாளுஞ் செல்வர்க்கு" (கலி. 68.)

போந்திருக்கின்ற இருப்பாகலின், அவற்கு நல்லதாகிய வாடையாயிற்று. எனவே காமத்திடத்து வெற்றியெய்தலின், வாகைத்திணையாயிற்று; இப்பாட்டுச் சுட்டி ஒருவர்பெயர்கொள்ளாமையின் அகப்பொருளாமேனும் "வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகம்" (176) என அடையாளப்பூக்கூறினமையின், அகமாகாதாயிற்று.

1 - 2. [வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப், பொய்யா வானம் புதுப் பெயல் பொழிந்தென:] பொய்யா வானம் வையகம் பனிப்ப வலன் வளைஇ ஏர்பு புது பெயல் பொழிந்தென—பருவம்பொய்யாதமேகம் உலகெல்லாங்குளிரும்படியாகத் தான்கிடந்தமலையை வலமாகவளைந்து எழுந்திருந்து கார்காலத்து மழையைப் பெய்ததாக,

3. ஆர்கலி முனைஇய கொடு கோல் கோவலர்—வெள்ளத்தைவெறுத்த கொடிய கோலினையுடைய இடையர்,

4. ஏறு உடை இனம் நிரை வேறு புலம் பரப்பி—எற்றையுடைய இனங்களையும் பசுக்களையும் மேட்டுநிலமாகிய முல்லைநிலத்தே மேயவிட்டு,

*எருமையையும் ஆட்டையும் இனமென்றார்.

5. புலம் பெயர் புலம்பொடு கலங்கி—தாம் பயின்ற நிலத்தைக் கைவிட்டுப்போம் தனிமையினாலே வருத்தமெய்தி,

ஊர்க்கு அண்ணியவிடத்தேமேய்த்து ஊரிற்றங்காமையிற் புலம்பெயர் புலம்பென்றார்.

5 - 6. கோடல் நீடு இதழ் கண்ணி நீர் அலை கலாவ—காந்தளினது நீண்ட இதழ்களாற்கட்டின கண்ணி நீரலைத்தலாலே கலக்கமெய்த,

7 - 8. மெய் கொள் பெரு பனி நலிய பலருடன் கை கொள் கொள்ளியர் சவுள் புடையூஉ நடுங்க—தம் உடம்பிடத்தேகொண்ட பெரியகுளிர்ச்சி வருத்துகையினாலே பலருங்கூடிக் கையிடத்திலேகொண்ட நெருப்பினையுடையராய்ப் பற்பறைகொட்டி நடுங்க,

கையை நெருப்பிலேகாய்த்தி அதிற்கொண்ட வெம்மையைக் கவுளிலே அடுத்தலிற் கைக்கொள்கொள்ளியரென்றார்.

கோவலர் (3) பலருடன் (7) பரப்பிக் (4) கலங்கிக் (5) கலாவக் (6) கொள்ளியராய்க் சவுள்புடையூஉ நடுங்க (8) என்க

9. மா மேயல் மறப்ப—விலங்குகள் மேய்தற்றொழிலை மறந்தொடுங்க,

மந்தி கூர—குரங்கு குளிர்ச்சிமிக.

குன்னாக்கவென்பாருமுளர்.

10. [பறவை படிவன வீழ:] படிவன பறவை வீழ—மரங்களிலே தங்குவனவாகிய புள்ளுக்கள் காற்றுமிகுதியால் நிலத்தேவீழ,

---

* பசுத்திரள், எருமைத்திரள், ஆட்டின்திரள் இவை முந்நிரையெனவழங்கும்; "முந்நிரையு முடையேன் றாழ்விங் கெனக்கில்லை" (பெரிய. சிறுத்தொண்டர். 49.)

10 - 11. [கறவை, கன்றுகோ ளொழியக் கடிய வீசி:] கறவை கடிய வீசி கன்று கோள் ஒழிய—பசுக்கள் குளிரின் மிகுதியாற் கடியவாய் உதைத்துக் கன்றை ஏற்றுக்கோடலைத் தகிர,

12. குன்று குளிர்ப்பன்ன கூதிர் பால் நாள்—மலையைக் குளிர்ச்சிசெய்யு மாறுபோன்ற கூதிர்க்காலத்து நடுயாமத்தே புலம்பொடுவதியுமரிவைக்கு (166) என மேலே கூட்டுக.

13 - 4. புல் கொடி முசுண்டை பொறி புறம் வால் பூ பொன் போல் பீர மொடு ட ;ற்புதல் மலர—புல்லிய கொடியினையுடைய முசுட்டையில் திரண்ட புறத்தையுடைய வெள்ளிய பூப் பொன்போன்ற நிறத்தையுடைய பீர்க்குடனே சிறுதூறுகடோறும் விரிய,

15 - 9. [பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி, யிருங்களி பரந்த வீர வெண்மணற், செவ்வரி நாரையோ டெவ்வாயுங் கவரக், கயலறலெதிரக் கடும்புனற் சாஅய்ப், பெயலுலந் தெழுந்த:]

கடு புனல் சாஅய் கயல் அறல் எதிர - கடிதாயோடினநீரினின்றும் ஒரு கால் பற்றிக் கயல்கள் அற்றநீர்க்கு எதிரேவருகையினாலே,

பெயல் உலந்து எழுந்த பைங்கால் கொக்கின் மெல் பறை தொழுதி—மழையாலேவருந்தி அதுசிறிதுவிட்டவளவிலே எழுந்த பசியகாலையுடைய கொக்கினது மெல்லிய சிறகரையுடைய திரள்,

செவரி நாரையோடு இரு களி பரந்த ஈரம் வெள் மணல் எவ்வாயும் கவர—சிவந்த வரியினையுடைய நாரைகளோடே கரியவண்டலிட்ட சேறுபரந்த ஈரத்தினையுடைய வெள்ளிய மணலாகிய எவ்விடங்களிலுமிருந்து அக்கயலைத்தின்ன,

19 - 20. பொங்கல் வெள் மழை அகல் இரு விசும்பில் துவலை கற்ப—பொங்குதலையுடைய வெள்ளியமேகம் அகன்ற பெரியஆகாயத்தே சிறுதுவலையாகத்தூவ மேற் கற்கும்படியாகக் கூதிர் ஈண்டுநின்றது (72) எனமேலே கூட்டுக.

கற்பவென்னுஞ் செயவெனெச்சம் ஈண்டு எதிர்காலமுணர்த்திற்று.

துவலைகற்பவென்றார், மிகப்பெய்தலே தனக்கு இயல்பென்பது தோன்ற

21 - 2. அம் கண் அகல் வயல் ஆர் பெயல் கலித்த வள் தோடு நெல்லின் வரு கதிர் வணங்க—அழகியஇடத்தையுடைய அகன்ற வயனிறைந்த நீராலே மிக்கெழுந்த வளவிய இலையினையுடைய நெல்லினின்றும் புறப்பட்ட கதிர் முற்றிவளைய,

புல்லாதலின் தோடென்றார்.

23 - 4. முழு முதல் கமுகின் மணி உறழ் எருத்தின் கொழு மடல் அவிழ்ந்த குழூஉ கொள் பெரு குலை—பெரிய அடியினையுடைய கமுகினது நீலமணியையொத்த கழுத்திற் கொழுவிய மடலிடத்துப் பானைவிரிந்த திரட்சியைக்கொண்ட தாறுகளில்,

25 - 6. [நுண்ணீர் தெவிள வீங்கிப் புடைதிரண்டு, தெண்ணீர்ப் பசுங் காய் சேறுகொள முற்ற:] தெள் நீர் *பசு காய் நுண் நீர் தெவிள வீங்கி புடை திரண்டு சேறு கொள முற்ற—தெளிந்தநீரை உள்ளேயுடைய பசியகாய் நுண்ணிய நீர்தான் திரளும்படியாகவீங்கிப் பக்கந்திரண்டு இனிமைகொள்ளும்படி முற்ற,

27. [களிகொள் சிமைய விரவுமலர் வியன்கா:] விரவு மலர் களி கொள் சிமையம் வியல் கா—முன்புவிரவினபூக்கள்செறிதலைத் தன்னிடத்தேகொண்ட உச்சியினையுடையவாகிய அகன்றபொழில்கள்,

28. குளிர் கொள் சினைய குரூஉ துளி தூங்க--குளிர்ச்சியைத் தம்மிடத்தேகொண்ட கொம்புகளையுடையவாகி அவற்றில் ஏற்றுநின்ற நிறத்தையுடைய மழைத்துளி மாறாமல்வீழ,

29 - 30. மாடம் ஓங்கிய மல்லல் மூதூர் ஆறு கிடந்தன்ன அகல் நெடு தெருவில்—மாடங்களுயர்ந்த வளப்பத்தையுடைய பழையவூரில் யாறுகிடந்தாற் போன்ற அகன்றநெடியதெருவிலே திரிதர (35) என்க.

31 - 2. படலை கண்ணி பரு ஏர் எறுழ் திணி தோள் முடலை யாக்கை முழு வலி மாக்கள்—தழைவிரவின மாலையினையும் பருத்த அழகினையுடையவாகிய வலியினையுடைய இறுகினதோளினையும் முறுக்குண்ட உடம்பினையும் நிரம்பின மெய்வலியினையுமுடைய மிலேச்சர்,

33. வண்டு மூசு தேறல் மாந்தி மகிழ் சிறந்து—வண்டுகள்மொய்க்கும் கள்ளையுண்டு மகிழ்ச்சிமிக்கு,

34 - 5. [துவலைத் தண்டுளி பேணார் பகலிறந், திருகோட் டறுவையர் வேண்டுவயிற் றிரிதர:]

துவலை தண் துளி பேணார் இரு கோடு அறுவையர் வேண்டு வயின் திரிதர—சிறுதுவலையாகிய தண்ணியதுளியை அஞ்சாராய் முன்னும்பின்னுந் தொங்கலாக நாலவிட்ட துகிலினையுடையராய்த் தமக்கு வேண்டின இடத்தே திரிதலைச்செய்ய,

'பகலிறந்து' என்பதனை மேலேகூட்டுக.

36 - 7. [வெள்ளி வள்ளி வீங்கிறைப் பணைத்தோண், மெத்தென்:] வெள்ளி வள்ளி வீங்கு இறை மெத்தென் பணை தோள்—வெளுக்கப்பட்டதாகிய சங்குவளை இறுகின இறையினையுடைய மெத்தென்ற பணைபோலுந் தோளினையும்,

37. மெத்தென் சாயல்—மெய்ம்முழுதும் கட்புலனாய்த்தோன்றுகின்ற மெத்தென்ற சாயலினையும்,

முத்து உறழ் முறுவல்—முத்தையொத்த பல்லினையும்,

---

* (மதுரை. 400.)

38. பூ குழைக்கு அமர்ந்த எந்து எழில் மழை கண்—பொலிவினையுடைய மகரக்குழையிட்ட அழகிற்குப் பொருந்தின உயர்ந்துதோன்றுகின்ற அழகினையுடைய குளிர்ச்சியையுடைய கண்ணினையும்,

இனி உருபுமயக்கமாக்கிக் குழையிடத்தேசென்றமர்ந்த கண்ணென்று முரைப்ப.

39. எந்து (38) மடவரல் மகளிர்—உயர்ந்துதோன்றுகின்ற மடப்பத்தினையுடையமகளிர்,

தோள்முதலியவற்றையுடைய மகளிரென்க.

39 - 41. [பிடகைப் பெய்த, செவ்வி யரும்பின் பைங்காற் பித்திகத் தவ்வித ழவிழ்பதங்கமழ:] பிடகை பெய்த, பைங்கால் பித்திகத்து செவ்வி அரும்பின் அ இதழ் பகல் இறந்து (31) அவிழ் பதம் கமழ – பூந்தட்டிலேயிட்டு வைத்த பசிய காலினையுடைய பிச்சியினுடைய அலருஞ்செவ்வியையுடைய அரும்பினது அழகிய இதழ்கள் பகற்பொழுதைக்கடந்து விரியுஞ் செவ்வி மணக்கையினாலே,

செவ்வரியரும்பு பாடமாயிற் சிவந்த வரியினையுடைய அரும்பென்க.

41. பொழுது அறிந்து – அந்திக்காலமென்றறிந்து,

என்றதனாற் கூதிரால் இரவும்பகலுந் தெரியாவென்றார்.

42. இரும்பு செய் விளக்கின் ஈர்ந்திரி கொளீஇ—இரும்பாற்செய்த தகளியிலே நெய்தோய்ந்த திரியைக்கொளுத்தி,

விளக்கு, ஆகுபெயர்.

43. நெல்லும் மலரும் தூஉய் கைதொழுது—நெல்லையுமலரையுஞ்சிதறி இல்லுறை தெய்வத்தைவணங்கி,

44. மல்லல் ஆவணம் மாலை அயர—வளப்பத்தையுடைய *அங்காடித் தெருவெல்லாம் மாலைக்காலத்தைக்கொண்டாட,

மகளிர் (39) கமழுகையினாலே பொழுதறிந்து (41) திரிக்கொளீஇத் (42) தூவித்தொழுது (43) அயரவென்க.

45 - 8. [மனையுறை புறவின் செங்காற் சேவ, லின்புறு பெடையொடு மன்றுதேர்ந்துண்ணா, இரவும் பகலு மயங்கிக் கையற்று, மதலைப் பள்ளி மாறவன விருப்ப:]

இரவும் பகலும் மயங்கி—இராக்காலமும் பகற்காலமும் தெரியாமல் மயங்குகையினாலே,

மனை உறை புறவின் செ கால் சேவல் இன்பு உறு பெடையொடு மன்றுதேர்ந்து உண்ணாது — மனையின்கண்ணேயிருக்கும் புறவினுடைய சிவந்த காலினையுடைய சேவல் தான் இன்பறுகரும் பெடையோடு மன்றிலேசென்று இரைதேடியுண்ணாமல்,

---

* அங்காடித்தெரு - கடைத்தெரு.

கை அற்று மதலை பள்ளி மாறுவன இருப்ப—செயலற்றுக் கொடுங்கையைத் தாங்குதலுடைய பலகைகளிலே பறவாதிருந்து கடுத்தகால் ஆறும்படி மாறிமாறி இருக்க,

இனித் தலைமாறியிருப்பவென்பாருமுளர். மதலைப்பள்ளி-*கபோதகத்தலை.

இறையுறைபுறவும் பாடம்.

49 - 50. கடி உடை வியல் நகர் சிறு குறு தொழுவர் கொள் உறழ் நறுகல் பல கூட்டு மறுக—காவலையுடைய அகன்ற மனைகளில் சிறியராகிய குற்றேவல்வினைஞர் †கருங்கொள்ளின் நிறத்தையொத்த நறிய ‡சாத்தம்மியிலே கத்தூரிமுதலிய பகங்கூட்டரைக்க,

51 - 2. வடவர் கந்தவான் கேழ் வட்டம் தென்புலம் மருங்கில் சாந்தொடு துறப்ப—வடநாட்டிலுள்ளார் கொண்டுவந்த வெள்ளியநிறத்தையுடைய §சிலாவட்டம் தென்றிசையிடத்திற் சந்தனத்தோடே பயன்படாமற்கிடப்ப,

53. [கூந்தன் மகளிர் கோதை புனையார்:] மகளிர் கூந்தல் கோதை புனையார்—மகளிர் குளிர்ச்சிமிகுதியால் தம்மயிரிடத்து மாலையிட்டு முடியாரரய்,

54. பல் இரு கூந்தல் சில்மலர் பெய்மார்—தம் பலவாகிய கரிய மயிரிடத்தே ||மங்கலமாகச் சிலமலரிட்டு முடித்தலைவேண்டி,

55 - 6. தண் நறு தகரம் முளரி நெருப்பு அமைத்து இரு காழ் அகிலொடு வெள் அயிர் புகைப்ப—தண்ணிய நறிய மயிர்ச்சந்தனமாகிய விறகிலே நெருப்பையுண்டாக்கி அதிலே கரிதாகிய வயிரத்தையுடைய அகிலோடே வெள்ளிய ¶கண்டசருக்கரையையுங் கூட்டிப்புகைப்ப,

57 - 8. கை வல் கம்மியன் கவின் பெற புனைந்த செ கேழ் வட்டம் சுருக்கி—கையாற்புனைதல்வல்ல உருக்குத்துகின்றவனாலே அழகுபெறப்பண்ணின சிவந்தநிறத்தையுடைய $ஆலவட்டம் உறையிடப்பட்டு,

58 - 9. [கொடுந்தறிச். சிலம்பி வானூல் வலந்தன தூங்க:] சிலம்பி வால் நூல் வலந்தன கொடு தறி தூங்க—சிலந்தியினது வெள்ளிய நூலாற் சூழப்பட்டனவாய் வளைந்த முனைக்கோலிலேதூங்க,

60 வான் உற நிவந்த மேல் நிலை மருங்கின்—தேவரூரைத் தீண்டும்படி உயர்ந்த மேலாம்நிலத்திடத்து,

---

* கபோதகத்தலை - வீட்டின் ஒருறுப்பு

† கருங்கொள்: (நாலடி. கற்புடை. 7.)

‡ சாத்தம்மி=சாந்து அம்மி.

§ சிலாவட்டம் - சந்தனக்கல்.

|| "மங்கலமாகி ..... பூவே" (நன். பொது. 30.)

¶ பி - ம். கண்டுசருக்கரை.

$ ஆலவட்டம் - விசிறி.

61 - 2. வேனில் பள்ளி தென் வளி தருஉம் நேர் வாய் கட்டளை திரியாது—இளவேனிற்காலத்துத் துயிலும் படுக்கைக்குத் தென்றற்காற்றைத்தரும் சாலேகத்திலேநின்று உலாவாதே,

நேர்வாய்க்கட்டளையென்றது மாடத்தின்கட்சாலேகத்தை; கட்டளைதெரியாதென்று பாடமாயின், திறவாதென்க,

62 - 3. திண் நிலை போர் வாய் கதவம் தாழொடு துறப்ப—சிக்கென்ற நிலையினையுடைய இரண்டுகதவும் தம்முட்பொருதல்வாய்த்தகதவு தாழிட்டுக கிடக்க,

64 - 6. கல்லென துவலை தூவலின் யாவரும் தொகு வாய் கன்னல் தண்ணீர் உண்ணார் பகு வாய் தடவில் செ நெருப்பு ஆர—கல்லென்கின்ற ஓசையினையுடைய சிறுதுவலையை வாடைக்காற்று எங்கும் பரப்புகையினாலே இளையோரும் முதியோரும் குவிந்தவாயையுடைய *கரகத்திற்றண்ணீரைக் குடியாராய்ப் பகுத்தாற்போன்ற வாயையுடைய †இந்தளத்திலிட்ட சிவந்த நெருப்பின வெம்மையை நுகர,

67. ஆடல் மகளிர் பாடல் கொள புணர்மார்—ஆடற்றொழிலையுடைய மகளிர் தாம்பாடுகின்றபாட்டினை யாழ் தன்னிடத்தேகொள்ளும்படி நரம்பைக் கூட்டுதற்கு,

68 - 9. தண்மையின் திரிந்த இன் குரல் தீ தொடை கொம்மை வருமுலை வெம்மையில் தடைஇ—குளிர்ச்சியாலே தன் நிலைகுலைந்த இனியகுரலாகிய நரம்பைப் பெரிய எழுகின்ற முலையின்வெப்பத்தே தடவி,

தீந்தொடை, ஆகுபெயர்.

70. கரு கோடு சிறு யாழ் பண்ணு முறை நிறுப்ப—கரியதண்டினையுடைய சிறியயாழைப் பண் நிற்குமுறையிலே நிறுத்த,

71. காதலர் பிரிந்தோர் புலம்ப—கணவரைப்பிரிந்தமகளிர் வருந்த

71 - 2. பெயல் கனைந்து கூதிர் நின்றன்றால் — காலமழைசெறிந்து கூதிர்க்காலமாய்நிலைபெற்றது; அவ்விடத்து,

72 போது—பின்னர் நிகழ்ந்தபொழுது,

வானம் கார்காலத்து மழையைப் பெய்ததாகப் (2) பின்னர் நிகழ்ந்த பொழுது (72) கோவலர் (3) நடுங்க (8) மறப்பக் கூர (9) வீழ (10) ஒழிய (11) மலரக் (14) கவரக் (17) கற்ப (20) வணங்க (22) முற்றத் (26) தூங்கத் (28) திரிதர (35) அயர (44) இருப்ப (48) மறுகத் (50) துறப்பப் (52) புகைப்பத (56) தூங்கத் (59) துறப்ப (63) ஆர (66) நிறுப்பப் (70) புலம்பப் பெயல செறிந்து (71) கூதிர்க்காலமாய்நிலைபெற்றது; அவ்விடத்தெனமுடிக்க.

---

* "எரிசுடர் நெருப்பைநீ ரென்ன வேட்டனர், தருகுளிர் நீரினைத் தழலி னஞ்சினார்" (சீகாளத்தி, பொன்முகரி. 45.)

† இந்தளம் - தூபமுட்டி.

72 - 5. [மாதிரம், விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டில, மிருகோற் குறிநிலை வழுக்காது குடக்கோர், பொருதிறஞ் சாரா வரைநா ளமயத்து :]

மாதிரம் விரி கதிர் பரப்பிய வியல் வாய் மண்டிலம் குடக்கு ஏர்பு—திசைகளிலே விரிந்த கிரணங்களைப் பரப்பின அகன்ற இடத்தையுடைய ஞாயிறு மேற்றிசைக்கட் சேறற்கெழுந்து,

இரு கோல் குறிநிலை வழுக்காது ஒரு திறம் சாரா அமயத்து அரைநாள்—இரண்டிடத்துநாட்டின இரண்டுகோலிடத்துஞ் சாயாநிழலால் தாரைபோக ஓடுகின்றநிலையைக் குறித்துக்கொள்ளுந்தன்மை தப்பாதபடி தான் ஒருபக்கத்தைச் சாரப்போகாத சித்திரைத்திங்களின் நடுவிற் பத்தினின்ற யாதோர்நாளிற் பதினைந்தாநாழிகையிலே அங்குரார்ப்பணம்பண்ணி.

76. நூல் அறி புலவர் துணணிதின் கயிறு இட்டு—சிற்பநூலையறிந்த தச்சர் கூரிதாக நூலை நேரேபிடித்து,

77. தேஎம் கொண்டு தெய்வம் நோக்கி—திசைகளைக்குறித்துக்கொண்டு அத்திசைகளில் நிற்குந் தெய்வங்களையும் குறைவறப்பார்த்து,

78 - 9. [பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து, ஒருங்கு:] பெரு பெயர் மன்னர்ககு ஒப்ப ஒருங்கு மனை வகுத்து—பெரிய பெயரினையுடைய அரசர்க்கொப்ப மனைகளையும் வாயில்களையும் மண்டபங்கள் முதலியவற்றையுங் கூறுபடுத்தி.

79. உடன் வளைஇ ஓங்கு நிலை வரைப்பின்—இவ்விடங்களையெல்லாம் சேரவளைத்து உயர்ந்த மதிலின் வாயி (88) லென்க.

80. பரு இரும்பு பிணித்து—ஆணிகளும் பட்டங்களுமாகிய பரிய இரும்பாலேகட்டி,

செவ்வரக்கு உரீஇ—சாதிலிங்கம்வழித்து,

81 - 5. [துணைமாண் கதவம் பொருத்தி யிணைமாண்டு, நாளொடும் பெயரிய கோளமை விழுமரத்துப், போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துத், தாழொடு குயின்ற போரமை புணர்ப்பிற், கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்து:]

தாழொடு குயின்ற துணை மாண் கதவம் பொருத்தி—தாழோடே சேரப் பண்ணின இரண்டாய் மாட்சிமைப்பட்ட கதவைச்சேர்த்தி,

இணை மாண்டு புது போது அவிழ் குவளை பிடி கால் அமைத்து—இணைதல் மாட்சிமைபபட்டுப் புதியபோதாய் அவிழ்ந்த குவளைப்பூவோடே பிடிகளையும் தன்னிடத்தேபண்ணி,

என்றது, *நடுவேதிருவும் இரண்டுபுறததும் இரண்டுசெங்கழுநீர்ப்பூவும் இரண்டு பிடியுமாகவகுத்த உத்தரக்கற்கவி.

---

* இரண்டு யானைகளின் இடையே திருமகள் வீற்றிருத்தல், இக்காலத்துங் காணப்படும் சிற்பங்களாலும், கலித்தொகை, 44 - ஆம் செய்யுளாலும் அறியலாகும்.

சானொடும் பெயரிய விழுமரத்து கோள் அமை செடிலே (86)—உத்தர மென்னும் நாளின்பெயர்பெற்ற உத்தரக்கர்கவியிலே செருகுதல் பொருத்தின செடிலேயென்க.

அமைத்தென்னுமெச்சம் பெயரியவென்பதனோடு முடிந்தது.

கை வல் கம்மியன் முடுக்கவின் புரை தீர்ந்து போர் அமை புணர்ப்பின் செடிலே (86)—கைத்தொழில்வல்லதச்சன் கடாவுகையினாலே வெளியற்றுப் பலமரங்களும் தம்மிற்கிட்டு தலமைக்க கூட்டத்தினையுடைய செடிலேயென்க.

86. ஐயவி அப்பிய செய் அணி செடி கிலை — வெண்சிறகடுகு அப்பி வைத்த செய்யணிக்க செடியகிலையினையுடைய,

அதிற்றெய்வத்திற்கு வெண்சிறகடுகும் செய்யுமணிக்கது.

87. வென்று எழு கொடியொடு வேழம் சென்று புக—வென்றிகொண் டெழும் கொடிகளோடே யானைகள் சென்றுபுகு தும்படி யுயர்ந்த,

88. குன்று குயின்றன்ன ஓங்கு கிலை வாயில்—மலையை வெடுவே வெளி யாகத்திறந்தாற்போன்ற கோபுரவாயில்களையும்,

ஓங்கின கிலைபையுடைய கோபுரத்தை ஓங்குகிலையென்றார்; ஆகுபெயர்.

வரைப்பின் (79) வாயிலென்க.

கதவுபொருத்திக் கோளமைத்த புண்ர்ப்பினையுடைய செடிலையினை யுடைய வாயிலென்க.

89 - 92. [திருகிலை பெற்ற நீறுநீர் நிறப்பிர், நருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து, நெடுமயி னெனைத் தூகிற வேற்றை, குறுங்கா லன்னமோ டுகளு முன்கடை:]

நெடு மயிர் எனம் தூகிறம் ஏற்றை குறு கால் அன்னமொடு உகளும் முன்கடை—நெடிய மயிரினையுடைய கவரிமாவில் தூயகிறத்தையுடைய ஏற்றை குறியகாலினையுடைய அன்னத்தோடே தாவித்திரியும் வாசல்முன்பினையும்.

கடைமுன், முன்கடையென மரூஉமுடிபு. அன்னமும் தாவிப்பறத்தலின், உகளுமென்று கவரிமாவோடே ஒருவினைகூறினார்.

* நரு மணல் ஞெமிரிய நிரு நகர் முற்றத்து.

†நிரு கிலைபெற்ற நிறு நீர் நிறப்பின—நிருமகன் கிலைபெற்ற குற்றமற்ற தலைமையினையும்,

வாயிலினையும் முன்கடையினையும் முற்றத்தினையும் நிறப்பினையுமுடைய கோயிலென முடிக்க,

93 - 4. பணை கிலை முனைஇய பல்உளை புரவி புல் உணு செவிட்டு புலப்பு விடு குரலொடு—பற்றியிலேறிற்றலைவெறுத்த பலவாகிய ‡சோரியை யுடைய குதிரைகள் புல்லாகிய உணவைக் குதட்டுச் தனிமைதோற்று நிக்கின்ற குரலோடே.

---

* இந்தப்பாடத்திற்கு உரைகிடைத்திலது; கொண்டுவந்திட்ட மணல் பரந்த அழகிய லீட்டின் முன்னிடத்தையுமென்க.

† முருகு. 70. ‡ சோரி - குதிரையின் பிடரி மயிர்.

95 - 7. நிலவு பயன்கொள்ளும் நெடு வெள் முற்றத்து கிம்புரி பகுவாய் அம்பணம் நிறைய கலுழ்ந்து வீழ் அருவி பாடு விறந்து—நிலாவின்பயனை அரசன் நுகரும் நெடிய வெள்ளிய நிலாமுற்றத்திலுள்ள நீர்வந்துவீழும் மகரவாயாகப் பகுத்த வாயினையுடைய பந்தநிறைகையினாலே கலங்கிவிழுகின்ற அருவியினோசைசெறிந்து,

97 - 9. அயல ஒலி நெடு பீலி ஒல்க மெல் இயல் கலி மயில் அகவும் *வயிர் மருள் இன் இசை—அதற்கு அயலிடத்தனவாகிய தழைத்த நெடிய பீலி ஒதுங்க மெல்லிய இயல்பினையுடைய செருக்கின மயில் ஆரவாரிக்கும் கொம்பென்று மருளும் இனியவோசை,

100. களி மலை சிலம்பின் சிலம்புற் கோயில்—செறிந்தமலையின் ஆரவாரம் போல ஆரவாரிக்கும் கோயில்,

புலம்புவிடுகுரலோடே அருவிப்பாடும் வயிர்மருளின்னிசையும் விறந்து மலைச்சிலம்பிற் சிலம்புங்கோயிலென முடிக்க.

அருவியும் மயிலும் மலைக்கும் உள்ளனவாகலின், உவமைகொண்டார். புலம்புவிடுகுரல் மழை மெத்தெனமுழங்கினாற் போன்றிருத்தலின், உவமை கொண்டார்.

இனி அவற்றின் எதிரொலியெழுகின்ற கோயிலென்றுமாம்.

101 - 2. யவனர் இயற்றிய வினை மாண் பாவை கை ஏந்து ஐ அகல் நிறைய நெய் சொரிந்து—சோனகர்பண்ணின தொழில்மாட்சிமைப்பட்டபாவை தன்கையிலே ஏந்தியிருக்கின்ற வியப்பையுடைய தகளிநிறையும்படி நெய்வார்க்கப்பட்டு,

103. பரூஉ திரி கொளீஇய குரூஉ தலை நிமிர் எரி—பருந்திரிகளைப் பந்தங்களிலே கொளுத்திவைத்த நிறத்தையுடைத்தாகிய தலையினையுடைய மேனோக்கியெரிகின்ற விளக்கை.

104. அறு அறு காலை தோறு அமைவு பண்ணி—நெய்வற்றினகாலந் தோறும் ஒளிமழுங்கின காலந்தோறும் நெய்வார்த்துத் தூண்டி,

105. பல் வேறு பள்ளி தொறும் பாய் இருள் நீங்க—பலவாய்வேறுபட்ட இடங்கடோறும் பரந்த இருள்நீங்கும்படி,

106 - 7. பீடு கெழு சிறப்பின் பெருந்தகை அல்லது ஆடவர் குறுகா அரு கடி வரைப்பின்—பெருமைபொருந்தின தலைமையினையுடைய பாண்டியனல்லது சிறுகுறுந்தொழில்செய்யும் ஆண்மக்களும் அணுகவாராத அரியகாவலையுடைய கட்டுக்களின்,

108. வரை கண்டன்ன தோன்றல—மலைகளைக் கண்டாற்போன்ற உயர்ச்சியையுடையவாய்,

108 - 9. வரை சேர்பு வில் கிடந்தன்ன கொடிய—மலைகளைச்சேர்ந்து இந்திரவிற்கிடந்தாற்போன்ற பலநிறமாய் வீழ்ந்துகிடந்த கொடிகளையுடையவாய்,

இது மேலேகட்டினகொடி.

109. பல் வயின்—பலவிடங்கடோறும்,

---

* வயிரிசை அன்றிலினோசைக்கும் உவமைகூறப்படும்; (குறிஞ்சி. 219.)

110. வெள்ளி அன்ன விளங்கும் சுதை உரீஇ—வெள்ளியையொத்த விளங்குகின்ற சாந்தை வாரி,

111. மணி கண்டன்ன மா திரள் திண் காழ்—நீலமணியைக்கண்டாற் போன்ற கருமையினையும் திரட்சியினையுமுடைய திண்ணிய தூண்களையுடைய வாய்.

112. செம்பு இயன்றன்ன செய்வு உறு நெடு சுவர்—செம்பினாலே பண்ணினாலொத்த தொழில்கள்செய்தலுற்ற நெடியசுவரிலே,

113. உருவம் பல் பூ ஒரு கொடி வளைஇ—வடிவழகினையுடைத்தாகிய பலபூக்களையுடைய வல்லிசாதியாகிய ஒப்பில்லாத கொடியையெழுதி,

114. கருவொடு பெயரிய காண்பு இன் நல் இல்—புதைத்தகருவோடே பெயர்பெற்ற காட்சிக்கினிய நன்றாகிய இல்,

என்றது - கருப்பக்கிருகமென்றவாறு.

திண்காழையுடையவாய்ச் (111) செய்வுறுநெடுஞ்சுவரிலே (112) விளங்குஞ் சுதையுரீஇப் (110) பல்வயின் (109) ஒருகொடிவளைஇ (113) வரைகண்டன்ன தோன்றலவாய்க் (108) கொடியவாய்ப் (109) பாயிருணீங்க (105) எரி (103) அளமவரப்பண்ணிக் (104) காட்சிக்கினியவாகிய நல்லில் (114) என முடிக்க.

கோயில் (100) வரைப்பின் (107) காண்பினல்லி (114) லெனமுடிக்க.

115. [தசநான் கெய்திய:] நான்கு தசம் எய்திய—நாற்பதிற்றியாண்டு சென்ற,

பணை மருள் நோன் தாள்—முரசென்றுமருளும் வலியகால்களையும்,

116. [இகன்மீக் கூறு மேந்தெழில் வரிநுதல்:]

எந்து எழில் வரி நுதல்—உயர்ந்த அழகினையும் புகர்நிறைந்த மத்தகத்தினையுமுடைய நாகம் (117),

இகல் மீ கூறும் நாகம் (117)—போரில் மேலாகச்சொல்லும் நாகம்,

117. பொருது ஒழி நாகம்—பொருதுபட்ட யானையினுடைய,

117 - 8. [ஒழியெயி றருகெறிந்து, சீருஞ் செம்மையு மொப்ப:] ஒழி எயிறு சீரும் செம்மையும் ஒப்ப அருகு எறிந்து—தானேவீழ்ந்தகொம்பைக் கனமும் செம்மையுமொப்ப இரண்டுபுறத்தையுஞ்செத்தி,

118 - 9. வல்லோன் கூர் உளி குயின்ற—தச்சன் கூரிய சிற்றுளியாலே பண்ணின,

119. ஈரிலை இடை இடுபு—பெரிய இலைத்தொழிலை இடையேஇட்டு,

120 - 30. [தூங்கியன் மகளிர் வீங்குமுலை கடுப்பப், புடைதிரண் டிருந்த குடத்த விடைதிரண், டுள்ளி நோன்முதல் பொருத்தி யடியமைத்துப், பேரன வெய்திய பெரும்பெயர்ப் பாண்டின், மடைமா ணுண்ணிழை பொலியத் தொடைமாண்டு, முத்துடைச் சாலேக நாற்றிக் குத்துறுத்துப், புலிப்பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத், தகடுகண் புதையக் கொளீஇத் துகடீர்ந், தூட்டுறு பன்மயிர் விரைஇ வயமான், வேட்டம் பொறித்து வியன்கட் கானத்து, முல்லைப் பல்போ துறழப் பூநிரைத்து:]

ஊட்டுறு பல் மயிர் விரைஇ—பலநிறம்பிடித்த மயிர்களை உள்ளேவைத்து அதன்மேலே,

வயமான் வேட்டம் பொறித்து—சிங்கமுதலியவற்றைவேட்டையாடுகின்ற தொழில்களைப் பொறித்த தகடுகளைவைத்து,

புலிமுதலியவற்றின் வரிகள்தோன்ற உள்ளே மயிர் விரவின.

வியல் கண் கானத்து முல்லை போது உறழ பல் பூ நிரைத்து—அகற்சியை இடத்தேயுடைய காட்டிடத்து முல்லைப்போதுடனே மாறுபடும்படி ஏனைப் பல பூக்களையும் நிரைத்து,

சாலேகம் தகடு குத்துறுத்து—சாளரங்களாகத்திறந்த தகடுகளை ஆணிகளாலே தைத்து,

மடை மாண் பாண்டில்—ஏட்டுவாய் மாட்சிமைப்பட்ட வட்டக்கட்டில்,

கொம்பைச்செத்தி உளியாற்குயின்ற இலையை இடையிட்டுப் பொறித்து நிரைத்துச் சாலேகத்தகடுகளைக் குத்துறுத்து மடைமாண்பாண்டிலெனமுடிக்க.

முத்து உடை நுண் இழை பொலிய நாற்றி தொடை மாண்டு பெரு அளவு எய்திய பாண்டில்—முத்தைத் தன்னிடத்தேயுடைய மெல்லியநூல் அழகு பெறும்படி கட்டிலின்கீழேநீழ நாலுபுறமும்நாற்றி அதனைத் தன்னிடத்தேகட்டுதல்மாட்சிமைப்பட்டுப் பெரிய எல்லையைப்பெற்ற பாண்டிலெனக்கூட்டுக

என்றதனால், தந்தத்தாற்சமைத்த கட்டிலைச்சூழ முத்துவடநாற்றியென்றார்

புலி பொறி கொண்ட பூ கேழ் தட்டத்து கண் பதைய கொளீஇ துகள் தீர்ந்து பெரு பெயர் பாண்டில்—புலியினதுவரியைத் தன்னிடத்தேகொண்ட பொலிவுபெற்ற நிறத்தையுடைய கச்சாலே நடுவுவெளியான இடமறையும்படி கோக்கப்பட்டுக் குற்றமற்றுக் கச்சுக்கட்டிலென்னும் பெரிய பெயரையுடைய பாண்டிலெனக்கூட்டுக.

தூங்கு இயல் மகளிர் வீங்கு முலை கடுப்ப புடை திரண்டு இருந்த குடத்த அடி—சூல்முற்றி அசைந்த இயல்பினையுடையராகிய மகளிரது பால்கட்டி வீங்கின முலையையொப்பப் பக்கமுருண்டிருந்த குடத்தையுடையவாயஅடி,

இஃது உருட்சிக்கு உவமைகூறிற்று.

இடை திரண்டு உள்ளிமுதல் நோன் அடி பொருத்தி அமைத்து—குடத்திற்கும் கட்டிற்குநடுவாகியஇடம் ஒழுகமெல்லிதாய்த்திரண்டு உள்ளிமுதல்போலும் வலியினையுடையகால்களைத் தன்னிடத்தேதைத்துச்சமைத்துப் பேரளவெய்தியபாண்டிலென்க.

உள்ளிப்புட்டில்போல்வதனை உள்ளிமுதலென்றார்.

131 - 3. [மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத், துணைபுண ரன்னத் தூநிறத் தூவி, யிணை யணை மேம்படப் பாயணை யிட்டு:]

மெல்லிதின் விரிந்த இணை அணை சேக்கை—மெல்லிதாகவிரிந்த இணைதலணைந்த படுக்கையென்க.

மேம்பட துணை புணர் அன்னம் தூ நிறம் தூவி பாய்—அச்சேக்கைக்கு மேலாகத் தம்பேட்டைப்புணர்ந்த அன்னச்சேவலின் தூயநிறத்தையுடைய சூட்டாகியமயிர் பரக்கப்பட்டு,

"சிறுபூளை செம்பஞ்சு வெண்பஞ்சு சேண, முறுதூவி சேக்கையோ ரைந்து." என்ற ஐந்தினையும்படுத்ததென்பதுதோன்ற இணையணையென்றார். என்புருகி மிக்க அன்போடுபுணர்தலிற் சூட்டிற்கு மென்மைபிறக்குமென்பது தோன்றத் துணைபுண ரன்னத் தூநிறத் தூவி யென்றார். பிறரும், இக்கருத்தே பற்றி *"ஆதரம் பெருகுகின்ற வன்பினா லன்ன மொத்தும்" என்றார்.

134 - 5. [காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத், தோடமை தூமடி விரித்த சேக்கை.] மேம்பட அணையிட்டு (133) காடி கொண்ட கழுவுறு கலிங்கத்து தூமடி விரித்த தோடு அமை சேக்கை—அத்தூவிக்குமேலாக அணைகளு மிட்டுவைத்துக் கஞ்சியைத் தன்னிடத்தேகொண்ட கழுவுதலுற்றதுகிலின தூய மடித்ததுவிரித்த செங்கழுநீர்முதலியவற்றின் இதழ்கள்பொருந்தின படுக்கை,

இணையணை சேக்கை மேம்படத் தூவிபாய் அத்தூவிக்கு மேம்பட அணையிட்டுத் தூமடிவிரித்த சேக்கையென்க.

136 - 7. ஆரம் தாங்கிய அலர் முலை ஆகத்து பின் அமை நெடு வீழ் தாழ—முன்பு முததாற்செய்த கச்சுச்சுமந்த பருத்தமுலையினையுடைய மார்பிடத்தே இப்பொழுது குத்துதலமைந்த நெடிய தாலிநாணொன்றுமே தூங்க,

வீழ்ந்துகிடத்தலின் வீழென்றார் இனிப் பின்னுதலமைந்த நெடியவீழ், மயிரென்பாருமுளர்.

137. துணை துறந்து—அரசன் பிரிகையினாலே,

138 நல் நுதல் †உலறிய சில் மெல் ஓதி—நன்றாகிய நுதலிடத்தே கை செய்யாமல் உலறிக்கிடந்த சிலவாகிய மெத்தென்ற மயிரினையும்

இனித் துணை துறந்துலறிய ஓதியெனக்கூட்டிக் கூடிக்கிடந்த தன்மைநீங்கி உலறிய ஓதியென்றுரைப்பாருமுளர்.

139 - 40. [நெடுநீர் வார்குழை களைந்தெனக் குறுங்கண், வாயுறை யழுத்திய வறிதுவீழ் காதின்:]

நெடு நீர் வார் குழை களைந்தென வறிது வீழ் காதின்—பெரிய ஒளி யொழுகின மகரக்குழையைவாங்கிற்றாகச் சிறிதேதாழ்ந்த காதினையும்,

நீர்மை, ஒளி.

குறு கண் வாயுறை அழுத்திய காது—சிறிய இடத்தையுடைய தாளுருவி அழுத்தியகாது,

வாயுறவென்றுபாடமாயின், கடுக்கனைவாயுறும்படியழுத்தினகாதென்க.

141 - 2. பொலம் தொடி தின்ற மயிர் வார் முன்கை வலம்புரி வளையொடு ‡கடிகைநூல் யாத்து—முன்பு பொன்னாற்செய்த தொடிகிடந்து தழும்பிருந்த மயிர் ஒழுங்குபட்டுக்கிடந்த முன்கையிலே வலம்புரியையறுத்துப்பண்ணின வளையைஇட்டுக் காப்புநாணைக்கட்டி,

ஒடு, வேறுவினையொடு.

143 - 4. §வாளை பகு வாய் கடுப்ப வணக்குறுத்து செ விரல் கொளீஇய செ கேழ் விளக்கத்து—வாளையினது பகுத்தவாயையொக்க முடக்கத்தையுண்

* சீவகசிந்தாமணி, 189. † உலறிய: சிறுபாண். 18. ‡ குறுந். 218.
§ "வாளைப்பகுவாய் வணக்குறுமோதிரம்" (சிலப். 6: 95.)

பாய்ந்து இவ்வ விரலிடத்தெய்ட்ட வெற்றிற்றையுடைய மூக்கென்று மோதிரத்தையும்,

145 - 6. பூ துகில் மீ இய எற்ற கோடு அல்குல் அ மாக மர்ந்த அவிர் நூல் கலிங்கமொடு—முன்பு பூத்தொழிலையுடைய *துகில்கிடந்த உயர்ந்த வினை வினையுடையவல்குலில் இக்காலத்துதந்த அழகிய மாசேறிய கிளக்குகின்ற நூலாற்செய்த புடைவையுடனே,

147. [புனையா ஓவியம் கடுப்பப் புனைவில்:]

புனையா ஓவியம் கடுப்ப – வண்ணங்களைக்கொண்டெழுதாத வடிவைக் கோட்டின செந்திரத்தையொப்ப.

புனைவில் கல்லடி (151) என மேல்வருவதனைக்கூட்டி, கழுவிச்செப்பஞ் செய்துப் பூண்சனனியாத கன்றிய அடியென்க.

148. தளிர் ஏர் மேனி—மார்தளிரையொத்த நிறத்தினையும்.

தாய சனங்கின் – பரந்த சணங்கினையும்,

149. அம் பின தடைஇய மெல் தோள் – அழகினையுடைய மூங்கில் போலத்திரண்ட மெல்லியதோளினையும்.

149 - 50. [முழுமுலை, வடிவுறுதியொத்த] வம்பு விரித்து வாத்த முழுமுலை—ரச்சை கலித்துக்கட்டின தாமரைமுகைபோலும் முலையினையும்,

150. கொங்கு சாய் நுசுப்பின் வினையும் நடக்குமிடையினையும்,

151. மெல் இயல் மகளிர் – மெத்தென்ற தன்மையினையுமுடைய செடியர்,

கல் அடி வருட—துயிலுண்டாருமோவென்று அடியைத நடவ,

மேனி (148) முதலியவற்றையுடையமகளிர் (151) புனைவில் (147) கல்லடி வருடவென்க.

152 - 3. கரை விரவுற்ற நறு மெல் கூந்தல் செ முக செவிலியர் கை மிக முழுஇ—கரை கலந்தலுற்ற நறிய மெல்லியமயிரினையுடைய வெற்றமுகத் தையுடைய செவிலித்தாயர் இவளாற்ற வாழ்க்கமிகுகையினாலே நிரம்பி,

154. குறியவும் செடியவும் உரை பல பயிற்றி – பொருளொடுபுணராப் பொய்ம்மொழியும் மெய்ம்மொழியுமாகிய உரைகள் பலவற்றையும் பலகாற் சொல்லி,

†"ஒன்றே மற்றுஞ் செயிலிச் குரித்தே" என்பது இலக்கணம்.

155 - 6. இன்னே வருகுவர் இன் துணையோர் என உசத்தவை மொழி யவும் நல்லான் மிக கழுஉற்று—இப்பொழுதேவருகுவர் கினக்கினிய தினையாள் தன்மையையுடையோரென்று அவன்மனத்துக்கு இனியவார்த்தைகளைக்கூறவும் அதற்குப்பொருந்தாளாய் மிகக்கலங்கி,

157 - 8. [நண்சேற வழித்த சோளிலைத் தொன்கா. ஓரு வறுமுலை கொளீஇய:] ஊரு வறுமுலை கொளீஇய நண் சேற வழித்த சோன் கிலை

* துகில் - துடைவகையுள் உயர்ந்தது; "புடைவீழ்துகில்" (181) என் பர் பின்னும்; "வாழ்வாரே, பட்டுத்துகிலுமுடுத்து" (நாலடி. சன்றியில். 4.)

† தொல்காப்பியம், செய்யுளியல், 176.

திரள் கால்—குடங்களைக் கடைந்துதைத்த சாதிலிங்கம்பூசின வலியநிலையினை யுடைய மேற்கட்டியிற் றிரண்டகால்களை,

158. கால் திருத்தி — கட்டிற்கால்களுக்கு அருகாகநிற்கும்படிபண்ணி அதனிடத்தேகட்டி,

ஊறுவறுமுலை, குடத்திற்கு வெளிப்படை; முலைபோறலின் முலையென்றார்.

159. [புதுவ தியன்ற மெழுகுசெய் படமிசை:] மெழுகு செய் படமிசை புதுவது இயன்ற — மெழுகுவழித்த மேற்கட்டியின்மேலே புதிதாக எழுதின,

160 - 61. [திண்ணிலை மருப்பினாடுதலை யாக. விண்ணூர்பு திரிதரும்:]

விண் — ஆகாயத்திடத்தே.

திண் நிலை மருப்பின் ஆடு தலையாக ஊர்பு திரிதரும்—திண்ணியநிலையினை யுடைய கொம்பினையுடைய மேடராசிமுதலாக எனை இராசிகளிற் சென்று திரியும்.

161 - 2. வீங்கு செலல் மண்டிலத்து முரண் மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய - மிக்க செலவினையுடைய ஞாயிற்றோடே மாறுபாடுமிகுந்த தலைமையினையுடைய திங்களோடு *திரியாமனின்ற,

163. உரோகிணி நினைவனள் நோக்கி - உரோகிணியைப்போல யாமும் பிரிவின்றியிருத்தலைப் பெற்றிலேமேயென்று நினைத்து அவற்றைப்பார்த்து.

ஞாயிறு, ஈண்டெழுதிய தன்று; திங்களிற்கு அடைகூறிற்று.

நெடிது உயிரா—நெட்டுயிர்ப்புக்கொண்டு,

164 - 5. [மாயித ழேந்திய மலிந்துவீ ழரிப்பனி, செவ்விரல் கடைக்கண் சேர்த்திச சிலதெறியா:] மா இதழ் வீழ் கண் கடை மலிந்து எந்திய அரி பனி சில செவிரல் சேர்த்தி தெறியா—சீலப்பூவிரும்பினகண் தன்கடைக்கண்ணிடத்தேவர மிக்குச்சுமந்த ஐதாகிய சீரித்சிலவற்றைச் சிவந்த விரலைச்சேர்த்தித் தெறித்து.

என்றது - மிகவுமழாமல் மல்கினநீரைத் தெறித்தென்றார்.

166. புலமபொடு வதியும் நலம் கிளா அரிவைக்கு—தனிமையோடு கிடக்கும் அன்பு மிகுகின்ற அரிவைக்கு,

அரசன் பிரிகையினாலே, நெடுவீழ்தாழ (137) நூல்யாதது (142) மாகுர்ந்த கலிங்கத்தோடே (146) ஓதியினையும் (138) காதினையும் (140) விளக்கத்தினையும் உடையளாய் (141) மிகக்கலங்கி (156) உரோகிணி நினைவனளோக்கி நெடிதுயிர்த்துத் (163) தெறித்து (165) மகளிர் நல்லடிவருட (151) ஓவியங் கடுப்ப (147) வதியுமரிவைக்கு (166) என வினைமுடிக்க.

166 - 7. அரிவைக்கு இன்னா அரு படர் தீர—அரிவைக்குத் தீதாயிருக்கின்ற ஆற்றுதற்கரிய நினைவு தீரும்படி,

பாசறைத் தொழில் (188) விறல் தந்து (167) இன்னே முடிக தில் (168) - வேந்தன் பாசறையிடத்திருந்து பொருகின்ற போர்த்தொழில் அவனுக்கு வெற்றியைக்கொடுத்து இப்பொழுதே முடிவதாக, இஃது எனக்குவிருப்பம் என முடிக்க.

---

* பி - ம். தெரியாமனின்ற.

168. அம்ம கேட்பாயாக;

இஃது, இவள்வருத்தமிகுதி தீரவேண்டிக் கொற்றவையைநோக்கிப்பரவு கின்றவள் கூற்றாயிற்று. கேட்பாயாகவென்றது கொற்றவையைநோக்கி. முடிக வென்ற வியங்கோள், வேண்டுகோடற் பொருண்மைக்கண் வந்தது. தில், விழைவின்கண் வந்தது

168 - 71. மின் அவிர் ஓடையொடு பொலிந்த வினை நவில் *யானை நீள் திரள் தட கை நிலமிசை புரள களிறு களம் படுத்த பெரு செய் ஆடவர்—ஒளி விளங்குகின்ற பட்டத்தோடே பொலிவுபெற்ற போர்த்தொழிலைப்பயின்ற யானையினுடைய நீண்டகிரண்ட பெருமையினையுடையகை அற்று நிலத்தே புரளும்படி யானையை முன்னர்க்கொன்ற பெரியசெயலையுடைய வீரருடைய,

செயலென்னும் வினைப்பெயர் செய்யென முதனிலையாய் நின்றது.

172. ஒளிறு வாள் விழு புண் நாணிய புறம் போந்து—விளங்கும் வாளி னாற் போழ்ந்த சீரியபுண்ணைக் கண்டுபரிகரித்தற்கு தானிருக்கின்ற இடத்திற் குப் புறம்பேபோந்து திரிதரும்வேந்தன் (187) என்க.

173. †வடந்தை தண் வளி—வடதிசைக்கண்ணதாகிய குளிர்ந்தகாற்று, என்றது வாடையை

173 - 5. [தணவளி யெறிதொறு துடங்கித, தெற்கேர் பிறைஞ்சிய தலைய *நற்பல், பாண்டில் விளக்கிற் பரூஉச்சுட ரழல] நல் பல்பாண்டில் விளக்கில் பரூஉ சுடர் தண் வளி எறிதொறும் நடங்கி தெற்கு ஏர்பு இறைஞ் சிய தலைய அழல—நன்றாகிய பலகால்விளக்கிலெரிகின்ற பருத்தகொழுந்து வாடைக்காற்று அடிக்குந்தோறும் அசைந்து தெற்குநோக்கியெழுந்து சாய்ந்த தலையினையுடையவாய் எரிய.

விளக்கு ஆகுபெயர்.

176 - 7. வேர்பு தலை யாத்த நோன்காழ் எஃகமொடு முன்னோன் முறைமுறை காட்ட—வேப்பந்தாளாத தலையிலேகட்டின வலிய காம்பினை யுடைய வேலோடே முன்செல்கின்ற சேனாபதி புண்பட்டவீரரை அடைவே அடைவேகாட்ட,

177 - 80. பின்னர் மணி புறந்து இட்ட மா தாள் பிடியொடு பருமம் களையா பாய் பரி கலி மா இரு சேறு தெருவின் எறி துளி விகிர்ப்ப—பின்னாக மணிகளைத் தன்னிடத்தேயிட்ட பெருமையையுடைய தாளினையுடைய குசை யோடே பக்கரைவாங்காத பாய்ந்துசெல்லுஞ் செலவினையுடைய செருக்கின குதிரைகள் கரிய சேற்றையுடைய தெருவிலே தம்மேலேவீசும் துளிகளையுதற,

தானென்றது வாய்க்கருவியிற் கோத்துமுடியும குசையிற்றலையை.

181 புடை வீழ் அம் துகில் இடவயின் தழீஇ—இடத்தோளினின்றும் முழுவிவீழ்ந்த அழகினையுடைய ‡ஒலியலை இடப்பக்கத்தேயணைத்துக்கொண்டு,

182 - 3. வாள் தோள் கோத்த வன்கண் காளை சுவல் மிசை அமைத்த கையன்—வாளைத்தோளிலேகோத்த தறுகண்மையையையுடைய வாளெடுப் பான்றோளிலே வைத்த வலக்கையையுடையனாய்,

---

* புறநா. 19 : 9 - 11.

† இப்பாட்டிற்கு "வடந்தைத்தண்வளி" என்னும் இந்தப்பகுதி உயிர் போன்றது.

‡ ஒலியல் - உத்தரீயம்.

183. *முகன் அமர்ந்து—புண்பட்டவீரர்க்கு அகமலர்ச்சிதோன்ற முகம் பொருந்தி,

184. நூல் கால்யாத்த மாலை வெண்குடை—நூலாலே சட்டத்தைக்கட்டின முத்தமாலையினையுடைய கொற்றக்குடை,

185. தவ்வென்று அசைஇ தா துளி மறைப்ப—தவ்வென்னுமோசை பட்டு அசைந்து பரக்கின்ற துளியைக் கரக்க,

தாழ்துளியும்பாடம்.

186 - 7. நள்ளென் யாமத்தும் பள்ளிகொள்ளான் சிலரொடு திரிதரும் வேந்தன்—நள்ளென்னுமோசையையுடைய நடுவியாமத்தும் பள்ளிகொள்ளானாய்ச் சிலவீரரோடே புண்பட்டோரைப் பரிகரித்துத் திரிதலைச்செய்யுமரசன்,

188. பலரொடு முரணிய பாசறை தொழில்—சேரன் செம்பியன்முதலிய †எழுவரோடே மாறுபட்டுப் பொருகின்ற பாசறையிடத்துப் போர்த்தொழில.

புண்காணிய புறம்போந்து (172) கூடாழலக் (175) காட்ட (177) விதிர்ப்பத் (180) தழீஇக் (181) கையனாய் அமர்ந்து (183) மறைப்பப் (185) பள்ளிகொள்ளானாய்த் (186) திரியும்வேந்தன் (187) என்க.

அம்ம (168) வானம் சார்காலத்து மழையைப்பெய்ததாகப் (2) பின்னாகிகழ்ந்தபொழுது கூதிர்க்காலமாய் நிலைபெற்றது (72); அக்கூதிர்க்காலத்து நடுவியாமத்தே (12) வாயிலினையும் (88) முன்கடையினையும் (92) முற்றத்தினையும் (90) சிறப்பினையுமுடைய (89) கோயில் (100) வரைப்புக்களிற் (107) காண்பினல்லிலிற் (114) பாண்டிலிற் (123) சேக்கையிலே (135) வதியுமரிவைக்குப் (166) படர்தீரும்படி (167) வேந்தன் (187) பலரொடுமுரணிய பாசறைத்தொழில் (188) விறறந்து (167) இன்னேமுடிவதாக; இஃது எனக்கு விருப்பம் (168) எனக் கொற்றவையைப்பரவிற்றாக வினைமுடிக்க.

இப்பாட்டுத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மண்ணசையாற்சென்று பொருதலின், இப்போர் வஞ்சியாகலின், ‡வஞ்சிக்குக்கொற்றவைநிலையுண்மையின், கொற்றவையை வெற்றிப்பொருட்டுப் பரவுதல் கூறினார்; அது பாலைத்திணைக்கேற்றலின்.

பாண்டியன் நெடுஞ்செழியனை மதுரைக்கணக்காயனார்மகனார் நக்கீரனார்பாடிய நெடுநல்வாடைக்கு மதுரைஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த உரை முற்றிற்று.

வெண்பா.

வாடை நலிய வடிக்கண்ணா டோணசைஇ
யோடை மழகளிற்றா னுள்ளான்கொல்—கோடன்
முகையோ டலமர முற்றெரிபோற் பொங்கிப்
பகையோடு பாசறையு ளான்.

---

* திருக்குறள், 84.

† எழுவர்பெயரையும் இப்புத்தகத்தின் 213 - ஆம் பக்கங்களின் கீழ்க் குறிப்புக்களாலுணர்க.

‡ பு - வெ. வஞ்சி. 5.

எட்டாவது

*குறிஞ்சிப்பாட்டு.

அன்னாய் வாழிவேண் டன்னை யொண்ணுத
லொளிமென் கூந்தலென் றோழி மேனி
விறலிழை நெகிழ்த்த வீவருங் கடுநோ
யகலு ளாங்க ணறியுநர் வினையும்
பரவியுந் தொழுதும் விரவுமலர் தூயும்
வேறுபல் லுருவிற் கடவுட் பேணி
நறையும் விரையு மோச்சியு மலவுற்
றெய்யா மையலை நீயும் வருந்துதி
நற்கவின் றொலையவு நறுந்தோ ணெகிழவும்
புட்பிற ரறியவும் புலம்புவந் தலைப்பவு
முட்கரந் துறையு முப்யா வருப்படர்
செப்பல் வன்மையிற் செறித்திபான் கடவலின்
முத்தினு மணியினும் பொன்னினு மத்துணை
நோவருங் குரைய கலங்கெடிற் புணருஞ்
சால்பும் வியப்பு மியல்புங் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்த
லாசறு காட்சி யையர்க்கு மந்நிலை
யெளிய வென்னார் தொன்மருங் கறிஞர்
மாதரு மடனு மோராங்குத் தணப்ப
நெடுங்கே ரெந்தை யருங்கடி நீவி

* இது பெருங்குறிஞ்சியெனவும் வழங்கும்; "எருவையென்பது. 'எருவை ..... கருவிளை' எனக் கபிலர்பாடிய பெருங்குறிஞ்சியினும் வந்தது" (பரிபாடல். 19: 77 - பரி. உரை); "கபிலர்பாடிய பெருங்குறிஞ்சியில் வரையின்றிப் பூமயங்கியவாறு காண்க" — (தொல் அகத். சூ - 19 - ச. உரை)

1. அன்னாய்வாழிவேண்டன்னை: ஐங்குறு. 201 - 10; அகநா. 48.

6. வேறுபல்லுருவிற்கடவுள்: (முருகு. 282); பல்வேறுருவின்: (குறிஞ்சி. 103); "மனக்கோ ணினக்கென வடிவுவே றிலையே" (பரி. 4: 56.)

8. எய்யாமையென்னுமுரிச்சொல் அறியாமையென்னுங் குறிப்புணர்த்துமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; (தொல். உரி. சூ. 41. இள. சேனா. ச்; இ - வி. சூ - 290.)

13 - 4. "பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகும்" (முதுரை, 18.)

யிருவே மாய்ந்த மன்ற லிதுவென
நாமறி வுறாலிற் பழியு முண்டோ
வாற்றின் வாரா ராயினு மாற்ற
வேனையுல கத்து மியைவதா னமக்கென
மானமர் நோக்கங் கலங்கிக் கையற்
றானாச் சிறுமைய னிவனாந் தேம்பு
மிகன்மீக் கடவு மிருபெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல
விருபே ரச்சமோ டியானு மாற்றலேன்
கொடுப்பினன் குடைமையுங் குடிநிர லுடைமையும்
வண்ணமுந் துணையும் பொரீஇ யெண்ணா
தெமியேந் துணிந்த வேமஞ்சா லருவினை
நிகழ்ந்த வண்ண நீநனி யுணரச்
செப்ப லான்றிசிற் சினவா தீமோ
நெற்கொ ணெடுவெதிர்க் கணந்த யானை
முத்தார் மருப்பி னிறங்குகை கடுப்பத்
துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குர
னற்கோட் சிறுதினைப் படுபு ளோப்பி
யெற்பட வருதிய ரெனநீ விடுத்தலிற்
கலிகெழு மரமிசைச் சேணோ னிழைத்த
புலியஞ் சிதண மேறி யவண
சாரற் சூரற் றகைபெற வலந்த
தழலுந் தட்டையுங் குளிரும் பிறவுங்
கிளிகடி மரபின வூழூழ் வாங்கி

---

23. பா. வாராதாயினும்.

31. வண்ணமென்பது இயற்சொ லென்பதற்கு இவ்வடி மேற்கோள்; (தொல். புறத். சூ - 27. ச. உரை). பா. வண்ணமுந் தொடையும்.

35 - 7. முத்தார் மருப்பு: (முருகு. 305; மலைபடு, 518.) தினைக்கதிர்க்கு யானைக்கை: "செந்தினை, மடப்பிடித் தடக்கை யன்ன ..... குரல்", "பிடிக்கை யன்ன பெருங்குர லேனல்" (குறுந். 198, 360); "ஒருத்த லேந்துகை கடுப்பத், தோடுதலை வாங்கிய நீடுகுரற் பைந்தினை" (நற். 317.)

40. பா. மீமிசை.

43 - 4. "வெதிர்புனை தட்டையேன்" (நற். 147); "தழலுந் தட்டையு முறியுந் தந்து", "படுகிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே" (குறுந். 223. 291;) "தழலை வாங்கியுந் தட்டை யோச்சியும்" (அகநா. 188); குளிரும் குளிரியு மொக்குமெனக் கூறி இவற்றை மேற்கோள் காட்டுவர்: (கஞ்சை. 73 - உரை.)

யுரவுக்கதிர் தெறாஉ முருப்பவி ரமயத்து
விசும்பாடு பறவை வீழ்பதிப் படர
நிறையிரும் பௌவங் குறைபட முகந்துகொண்
டகலிரு வானத்து வீசுவளி கலாவலின்
முரசதிர்ந் தன்ன வின்குர லேற்றொடு
நிரைசெல னிவப்பிற் கொண்மூ மயங்கி
யின்னிசை முரசிற் சுடர்ப்பூட் சேஎ
யொன்னார்க் கேந்திய விலங்கிலை யெஃகின்
மின்மயங்கு கருவிய கன்மிசைப் பொழிந்தென
வண்ண னெடுங்கோட் டிழிதரு தெண்ணீ
ரவிர்துகில் புரையு மவ்வெள் ளருவித்
தவிர்வில் வேட்கையேந் தண்டா தாடிப்
பளிங்குசெரரி வன்ன பாய்சுனை குடைவுழி
நளிபடு சிலம்பிற் பாயம் பாடிப்
பொன்னெறி மணியிற் சிறுபுறந் தாழ்ந்தவெம்
பின்னிருங் கூந்தல் பிழிவனந் துவரி
யுள்ளகஞ் சிவந்த கண்ணேம் வள்ளித
ழொண்செங் காந்த ளாம்ப லனிச்சந்
தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி
செங்கொடு வேரி தேமா மணிச்சிகை
யுரிதுநா றவிழ்தொத் துந்தூழ் கூவிள
மெரிபுரை யெறுழஞ் சுள்ளி கூவிரம்
வடவனம் வாகை வான்பூங் குடச
மெருவை செருவிளை மணிப்பூங் கருவிளை
பயினி வானி பல்லிணர்க் குரவம்
பசும்பிடி வகுளம் பல்லிணர்க் காயா

---

49. "முரசதிர் பவைபோன் முழங்கிடி பயிற்றி" (பரி. 22).

51 - 3. "செல்வக் கடம்பமர்ந்தான் வேன்மின்னி" (ஐந். 50: 1.) "கண்ணொளி ரெஃகிற் கடிய மின்னி" (பரி. 22: 7.)

57. "குழ்ந்த பேரொளி துளும்பிய நிலனைநீ ரென்னாத், தாழ்ந்த வந்துகி விடைவயிற் றழீஇயினன் பளிங்கு, போழ்ந்தி யற்றிய நிலனெனப் பூம்புன விடைப்போய், வீழ்ந்த னன்பெரு வேத்தவை முகிழ்நகை விளைப்ப" (பாக வதம், 10: சிசுபாலனைக்கொன்ற. 118)

68. இவ்வடி, ஏருவை, மலர்விசேடமென்பதற்கு மேற்கோள்; (பரி 19: 77 - பரி.)

விரிமல ராவிரை வேரல் சூரல்
குரீஇப் பூளை குறுகதுங் கண்ணி
குருகிலை மருதம் விரிபூங் கோங்கம்
போங்கந் திலகந் தேங்கமழ் பாதிரி
செருந்தி யதிரல் பெருந்தண் சண்பகங்
காரந்தை குளவி கடிகமழ் கலிமாத்
தில்லி பாலி கல்லிவர் முல்லை
குல்லை பிடவஞ் சிறுமா ரோடம்
வாழை வள்ளி நீணறு நெய்த
முழை தளவ முட்டாட் டாமரை
ஞாழன் மௌவ னறுந்தண் கொகுடி
சேடல் செம்மல் சிறுசெங் குரலி
கோடல் கைதை கொங்குமுதிர் நறுவழை
காஞ்சி மணிக்குலைக் கட்கமழ் நெய்தல்
பாங்கர் மராஅம் பல்பூந் தணக்க
மீங்கை யிலவந் தூங்கிணர்க் கொன்றை
படும்பம ராத்தி நெடுங்கொடி யவரை
பகன்றை பலாசம் பல்பூம் பிண்டி
வஞ்சி பித்திகஞ் சிந்து வாரக்
தும்பை துழாஅய் சுடர்ப்பூந் தோன்றி
நந்தி நறவ நறும்புன் னாகம்
பாரம் பீரம் பைங்குருக் கத்தி
யாரங் காழ்வை கடிகிரும் புன்னை
கரந்த நாக நள்ளிரு ணெறி
மாயிருங் குருந்தும் வேங்கையும் பிறவு
மரக்குவிரித் தன்ன பரேரம் புழைகுடன்
மாலங் குடைய மலிவன மறுகி
வான்கண் கழீஇய வகலறைக் குவைஇப்

---

84. "சட்கமழ் செய்தலாதி" (முருகு. 74.)

87. 'அடும்பு' என்னும்பாடம் சேர்; (கலி. 132; பதிற். 30; திணைமா. 51) பா. அடம்பமர்.

62 - 96. இவ்வடிகளிற் குறிஞ்சிநிலத்திற்கும் கூதிர்க்காலத்திற்கும் யாம் நித்குமுரியபூக்களேயன்றி வேறுநிலத்திற்கும் வேறுகாலத்திற்குமுரியபூக்கள் மயங்கிவந்தமை "எங்கில மருங்கிற் பூவும் புள்ளும்" (தொல். அகத். 14) என்னும் சூத்திரத்தாலமையும்.

புள்ளா ரியத்த விலங்குமலைச் சிலம்பின்
வள்ளுயிர்த் தெள்விளி யிடைமிடைப் பயிற்றிக்
கின்னோ ரோப்பியுங் கிளையிதழ் பறியாப்
பைவிரி யல்குற் கொய்தழை தைஇப்
பல்வே றுருவின் வனப்பமை கோதையெம்
மெல்லிரு முச்சிக் கவின்பெறக் கட்டி
யெரியவி ருருவி னங்குழைச் செவிலித்
தாதுபடு தண்ணிழ லிருந்தன மாக
வெண்ணெய் வீசிய சுரிலளர் நறுங்காழ்த்
தண்ணறுந் தகரங் கமழ மண்ணி
யீரம் புலர விரலுளர்ப் பவிழாக்
காழகி லம்புகை கொளீஇ யாழிசை
யணிமிகு வரிமிஞி றார்ப்பத தேங்கலந்து
மணிநிறங் கொண்ட மாயிருங் குஞ்சியில்
மலையவு நிலத்தவுஞ் சினையவுஞ் சுனையவும்
வண்ண வண்ணத்த மலராப்பு விரைஇய
தண்ணறுந் தொடையல் வெண்போழ்க் கண்ணி
நலம்பெறு சென்னி நாமுற மிலைச்சிப்
பைங்காற் பிதஹிகத் தாயித ழலரி
யந்தொடை யொருகாழ் வளைஇச் செறீஇ
யொண்பூம் பிண்டி யொருகாது செரீஇ
யந்தளிர்க் குவவுமொய்ம் பலைப்பச் சாந்தருந்தி
மைந்நிறை கொண்ட மலர்ந்தேந் தகலகதுத
தொன்றுபடு நறுந்தார் பூணெடு பொலியச்
செம்பொறிக் கேற்ற விங்கிறைத் தடக்கையின்
வண்ண வரிவில் லேந்தி யம்புதெரிந்து
துண்ணிணைக் கச்சைத் தயக்கறக் கட்டி
யியலணிப் பொலிந்தவீகை வான்கழ
றுயல்வருந் தோறுந் திருந்தடிக் கலாவ
முனைபாழ் படுக்குந் தன்னருந் தப்பிற்

---

101. பா. பரியா.

118 - 9. அசோகம்பூவிற்கு வெருப்பு (மதுரை. 700 - 701.) அசோகத் தளிரைக் காதிற்செருகல்; முருகு. 31 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

128. மு. மலைபடு. 59.

பகைபுறம் வண்ட பல்வேலினளுி.
தாவுச்சினஞ் செருக்கித் தன்னதொ ழிற்றிலனை
முனைவா னொலிக்க வள்ளுகிர் ஞமலி
நினையாக் கண்ண வினாருபு கெளிதா
நடுங்குவன மெழுந்து கல்லடி தாரக்கியா
மிடும்பைகூர் மனத்தே மருண்டுபுலம் படா
மாறுபொரு தோட்டிய புகல்லின் வேறுபுலத்
தாகாண் விடையி னணிபெற வந்தெம்
மலமர லாயிடை வெரூஉத லஞ்சி
மெல்லிய வினிய மேவாக் கிளக்தெம்
மைம்பா லாய்கவி னேத்தி யொண்டொடி
யசைமென் சாய லவ்வாக் குக்தி
மடமதர் மழைக்க ணினோயீ நிறந்த
கெடுதியு முடையே னென்றன னதனெதிர்
சொல்லே மாதவி னல்லாந்து கலங்கித்
கெடுதியும் விடஇ ராயி னெம்மொடு
சொல்லலும் பழியோ மெல்லிய லீரென
வைவளம் பழுதிய பாலி வல்லோன்
கைதவர் கரம்பி னிமமென விமிரு
மாதர் வண்டொடு சுரும்புகயர் நிறுத்த
நாதவி முலரித் தாதினை பிளந்து
தாறடு களிற்றின் வீறுபெற வோச்சித்
கல்லென் சுற்றக் கடுங்கூ லவிந்தெஞ்
சொல்லற் பாணி சின்றன னுக
விருவி லேய்ந்த குறுங்காற் குரம்பைப்
பிணையோர் நோக்கின் மணியோன் மடுப்பத்
தேம்பிழி தேறன் மாந்தி மகிழ்நிறத்து
சேம மடிந்த பொழுதின் வாய்மடுத்

---

132. பா நினையாக்.

138. "மெல்லிய வினிய மேவரு தகுக, வினவுமொழி யுரைமனச் சொல்லினும்" (தொகை. 366); "செவ்விய தீவியசொல்லி" (கலி. 19.)

130 - 42 இவ்வடிகள், தலைவன் காய்கார்த்தலைவற்கிற்கு மேற்கோள், (தொல். பொருளியல், சூ. 18. உ.)

146 சிறுபாண். 96.

152. இவ்வடி, தலைவன்புதல் பிரிவிலைதலிலையாயிற்கற்கு மேற்கோள், (தொல். இடை. சூ. 32 - உ.)

திரும்புன நிழத்தலிற் சிறுமை நோனா
தாவுற மஞ்சிலை கொளீஇ நோய்மிக்
குரவுச்சின முன்பா லுடல்சினஞ் செருக்கிக்
கணைவிடு புடையூக் கானங் கல்லென
மடிவிடு வீளையர் வெடிபடுத் தெதிரக்
கார்ப்பெய லுருமிற் பிளிறிச் சீர்த்தக
விரும்பிணர்த் தடக்கை யிருநிலஞ் சேர்த்திச்
சினந்திகழ் கடாஅஞ் செருக்கி மாங்கொல்பு
மையல் வேழ மடங்கலி னெதிர்தர
வுய்விட மறியே மாகி யொய்யெனத
திருந்துகோ லெல்வளை தெழிப்ப நாணுமறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்திச்
சூருறு மஞ்ஞையி னடுங்க வார்கோ
லுடுவுறும் பகழி வாங்கிக் கடுவிசை
யண்ணல் யானை யணிமுகத தழுத்தலிற்
புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதரப்
புள்ளி வரிநுதல் சிதைய நில்லா
தயர்ந்து புறங்கொடுத்த பின்னர் நெடுவே
ளணங்குறு மகளி ராடுகளங் கடுப்பத்
திணிநிலைக் கடம்பின் றிரளரை வளை இய
துணையறை மாலையிற் கைபிணி விடே
நுரையுடைக் கலுழி பாய்தலி னுரவுத்திரை
யருங்கரை வாழையி னடுங்கப் பெருந்தகை
யஞ்சி லோதி யசைபல் யாவது
மஞ்ச லோம்புநின் னணிநல நுகர்கென
மாசறு சுடர்நுத னீவி நீடுநினைந்
தென்முக நோக்கி நக்கன னந்நிலை

---

161. பெரும்பாண். 166 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

162 - 5. யானைமுழக்கிற்கு இடி: பரிபாடல். 8: 17 - 8.

167. பா. வனைதெளிர்ப்ப.

170 - 71. "செந்தொடைப் பகழி வாங்கிச் சினஞ்சிறந்து, கருங்கைக் கானவன் களிற்றுநிறத் தழுத்தலின்" (தொல். செய் சூ. 95 - பேர். மேற்)

172. பாய்தல், பரத்தலென்னுங் குறிப்புப்பொருண்மையை யுணர்த்து மென்பதற்கு இவ்வடி மேற்கோள்; (தொல். உரிச். சூ. 63. ந; இ - வி. சூ. 281 - உரை.)

176 - 7. "கடம்பு சூடிய கன்னி மாலைபோற், றொடர்ந்து கைவிடாத் தோழி மாரொடும்" (சீவக. 990)

160 - 88. இவ்வடிகள், தலைவன் களிறுகாத்தவாற்றிற்கும் புனலின் எடுத்தவாற்றிற்கும் மேற்கோள்; (தொல். பொருளியல். சூ. 13 - ந. உரை.)

நானு முட்கு ணண்ணுவழி யடைதர
வொய்யெனப் பிரியவும் விடாஅன் கலைஇ
யாக மடைய முயங்கலி னவ்வழிப்
பழுமிள குக்க பாறை நெடுஞ்சுனை
முழுமுதற் கொக்கின் றீங்கனி யுதிர்ந்தெனப்
புள்ளெறி பிரசமொ டுண்டிப் பலவி
னெகிழ்ந்துகு நறும்பழம் விளைந்த தேற
னீர்செத் தயின்ற தோகை வியலூர்ச்
சாறுகொ ளாங்கண் விழவுக்கள நந்தி
யரிக்கூட் டின்னியங் கறங்க வாடுமகள்
கயிறூர் பாணியிற் றளருஞ் சாரல்
வரையர மகளிரிற் சாஅய் விழைதக
விண்பொருஞ் சென்னிக் கிளைஇய காந்தட்
டண்கம ழலரி தாஅய் நன்பல
வம்புவிரி களத்திற் கவின்பெறப் பொலிந்த
குன்றுகெழு நாடனெம் விழைதரு பெருவிற
ளுள்ளத் தன்மை யுள்ளினன் கொண்டு
சாறயர்ந் தன்ன மிடாஅச் சொன்றி
வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப
மலரத் திறந்த வாயில் பலருணப்
பைங்ணை மொழுகிய நெய்ம்மலி யடிசில்
வசையில் வான்றிணைப் புரையோர் கடும்பொடு
விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னே டுண்டலும் புரைவ தென்றுங்
கறம்புணை யாகத் தேற்றிப் பிறங்குமலை
மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழு
தேமுறு வஞ்சினம் வாய்மையிற் றேற்றி
யந்தீந் தெண்ணீர் குடித்தலி னெஞ்சமர்ந்
தருவிட ரமைந்த களிறுதரு புணர்ச்சி
வானுரி யுறையுள் வயங்கியோ ரவாவும்
பூமலி சோலை யப்பகல் கழிப்பி
யெல்லி செல்ல வேழூர் பிறைஞ்சிப்
பல்கதிர் மண்டிலன் கல்சேர்பு மறைய

184. குறிஞ்சி. 21 - ஆம் அடியின் உரையைப்பார்க்க.
193 - 4. நறவுவெண். சுயம், 148.

மான்கண மரமுதற் றெவிட்ட வான்கணங்
கன்றுபயிர் குரல மன்றுறை புகுதர
வேங்குவயி ரிசைய கொடுவா யன்றி
லோங்கிரும் பெண்ணை யகமட லகவப்
பாம்புமணி யுமிழப் பல்வயிற் கோவல
ராம்பலந் தீங்குழற் றெள்ளிளி பயிற்ற
வாம்ப லாயிதழ் கூம்புவிட வளமனைப்
பூந்தொடி மகளிர் கடர்தலைக் கொளுவி
யந்தி யந்தண ரயரக் கானவர்
விண்டோய் பணவை மிசையெரிழி பொத்த
வான மாமலை வாய்சூழ்பு கதுப்பக் காணங்
கல்லென் றிரட்டப் புள்ளின மொலிப்பச்
சினைஇய வேந்தன் செல்சமங் கடுப்பத்
தினைஇய மாலை துன்னுதல் காணூஉ
நேரிறை முன்கை பற்றி நமர்கா
ணாடறி கன்மண மயர்கஞ் சின்னட்
கலங்க லோம்புமி னிலங்கிழை மீரென
வீர நல்மொழி நீரக் கூறித்
தினைபுண ரேற்றி னெம்மொடு வந்து
தஞ்சா முழவின் மூதூர் வாயி
லுண்டுறை நிறுத்துப் பெயர்ந்தன னதற்கொண்
டன்றை யன்ன விருப்போ டென்று

219. வயிரிசை மயிலுக்கு; (நெடுநல். 99.)

221. "காம நல்லராக் கதிர்பட வுமிழ்ந்த, வாய்மணி விளக்கின்" (அகநா. 72.)

217 - 22. "அன்னஞ் வாழிவேண் டன்னை யென்னுஞ் தூரிஞ்சிப்பாட்டி னுள், 'மான்கண மரமுதற் றெவிட்ட ..... தெள்விளி பயிற்ற' என்புழி முல்லைக்குரிய கருப்பொருளாகிய ஆன்கணமும் பாம்பும் கோவலரும் ஆம்பற் குழலும் அதற்குரிய முதற்பொருளாகிய மாலையும் செய்தற்குரிய கருப்பொரு ளாகிய அந்திநீரும் பிணையும் வந்தவாறுகண்டுகொள்க" — (நாற். ஒழிபு. சூ. 42 - உரை.)

215 - 30. மாலைவருணனை.

235. "மடாஅ குடஞ்சே செல்லு மழவிடைபோற் செம்மாந்து" (நள வெண். சுயம். 156.)

238. "தலைநா ளன்ன பேணலன்" (நற். 332), "இன்றை யன்ன சட்பின்", "பெருவரை யடுக்கத்துச் சிழவ னென்ற. ன்றை யன்ன சட் பினன்" (குறுந். 193, 385), "தண்டாச் காதலுந் தலைநாட் போன்மே" (அகநா. 332), "இன்றே போல்தரும் புணர்ச்சி" (புறநா. 58.)

மிரவன் மாலிய னேவரு தோன்றல்
காவலர் கடுகிலுங் கதவாப் குரைப்பிலு
நீதுயி லெழிலு நிலவுவெளிப் படிலும்
வேப்புரை மென்றே ளின்றுயி லென்றும்
பெருஅன் பெயரிலு முளிய துருஅ
னிளமையி னிகந்தன் றிலனே வளமையிற்
றண்ணில நீர்த்தன் றிலனே கொண்ணூர்
மாய வரவி னியல்புகினை இத் தேற்றி
நீரொறி மலரிற் சாஅ யிதழ்சோரா
வீரிய கலுழுமிவள் பெருமதர் மழைக்க
ணுகத் தரிப்பனி யுறைப்ப நாளும்
வலிப்படு மஞ்ஞையி னலஞ்செலச் சாஅய்
நினைத்தொறுங் கலுழுமா லிவளே கண்கு
லினைச்செறி யுழுவையு மாளியு முளியமும்
புழற்கோட் டாமான் புகல்வியுங் களிறும்
வலியிற் றப்பும் வன்கண் வெஞ்சினத்
தருமுஞ் குரு மிரைதே ராவமு
மொடுங்கிருள் குட்டத் தருஞ்சுழி வழங்குங்
கொடுந்தாண் முதலையு மிடங்கருங் காமு
நாழிரு மிழுக்கு மூழடி முட்டமும்
பழுவும் பாக்தரு முளப்படப் பிறவும்
வழுவின் வழாஅ விழுமமவர்
குழுமலி விடாக முடையவா லெனவே.

---

239. மாலை, இயல்பென்னுங்குறிப்பையுணர்த்துமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; (தொல். உரி. சூ. 16 - இளம். சே. ந. உரை; இ - வி. சூ. 290 - உரை.)

231 - 44. உண்மைசெப்பற்கு இவ்வடிகள் மேற்கோள்; (தொல். பொருளியல், சூ. 13 - ந. உரை.)

245. பா. நிரிச்தன்றுமிலன்.

251 - 61. இவ்வடிகளுடன், "நிலமகன் இரவுக்குறி நுழைவின்ற நிலைமைக்கண், எம்பெருமான் வரும்வழி, எல்லும் வெஞ்சோட்டியானையும் அரவும் உருமும் புலியும் வரையாமகளிருமுடைத்து; மற்றும் தெய்வங்கள் வெலவும் வல்லைத்தன; ஏதம் நிகழ்வது கொல்லோவென வேறுபடும்' (இறை. சூ. 23 - உரை) என்பது ஒப்பிடற்பாலது.

இதன்பொருள்.

இதற்குக் குறிஞ்சியென்று பெயர்கூறினார்; இயற்கைப்புணர்ச்சியும் பின்னர் நிகழும் புணர்ச்சிகளுக்குநிமித்தங்களும் கூறுதலின். அன்றியும் முதலானும் கருவானும் குறிஞ்சிக்குரியனவே கூறுதலானும் அப்பெயர் கூறினார். *"அறத்தொடு நிற்குங் காலத் தன்றி. யறத்தியன் மரபில டோழி யென்ப." என்பதனால், தோழி அறத்தொடு நிற்குங்காலம்வந்து செவிலிக்கு அறத்தொடு நின்றவழி அதற்கிலக்கணங்கூறிய †"எளித்த லேத்தல் வேட்கை யுரைத்தல், கூறுத லுசாத லேதீடு தலைப்பா, டுண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ, யவ்வேழு வகைய தென்மனார் புலவர்." என்னுஞ் சூத்திரத்தேழனுள், கூறுத லுசாதலொழிந்த ஆறுங்கூறி அறத்தொடுநிற்கின்றாளென்றுணர்க.

1. அன்னாய் வாழி—தாயே வாழ்வாயாக

[வேண் டன்னை :] அன்னை வேண்டு—தாயே யான்கூறுகின்றவார்த்தையை விரும்புவாயாக ;

1 - 12. [ஒண்ணுத, லொவிமென் கூந்தலென றோழி மேனி, விறலிழை நெகிழ்த்த வீவருங் கடுநோ, யகலு ளாங்க ணறியுநர் வினாயும், பரவியுந்தொழுதும் விரவுமலர் தூயும், வேறுபல் லுருவிற் கடவுட் பேணி, நறையும் விரையு மோச்சியு மலவுற், றெய்யாமையலை நீயும் வருந்துதி, நற்கவின் றொலையவு நறுந்தோ ணெகிழவும், புட்பிற ரறியவும் புலம்புவந் தலைப்பவு, முட்கரந் துறையு முய்யா வரும்படர், செப்பல் வன்மையிற் செறித்தியான் கடவலின் :]

ஒள் நுதல் ஒலி மெல் கூந்தல் ‡விறல் மேனி என் தோழி உள் கரந்து உறையும் உய்யா அரு படர்—ஒள்ளிய நுதலினையும் தழைக்கும் மெல்லிய மயிரினையும் பிறர் நிறத்தினைவென்ற வெற்றியினையுடைய நிறத்தினையுமுடைய என்னுடைய தோழி தன்மனத்துள்ளே மறைத்திருக்கும் தன்னுயிரைத் தான் தாங்கியிராமைக்குக் காரணமாகிய ஆற்றுதற்கரிய நினைவு,

இழை நெகிழ்த்த வீவு அரு கடு நோய் செப்பல் வன்மையின் யான் செறித்து—தானணிந்தகலன்களை நெகிழப்பண்ணின மருந்துகளாற் கெடுத்தற்கரிய கடிய நோய் நினக்குச்சொல்லுதற்கு எளிதன்றி வலியதன்மையையுடைமையினாலே யான் அதனை என்னுள்ளேயடக்கி,

நல் கவின் தொலையவும் நறு §தோள் நெகிழவும் புள் பிறர் அறியவும் புலம்பு வந்து அலைப்பவும் கடவலின்—அவளுடைய நன்றாகிய அழகுகெடவும் நறியதோள் மெலியவும் வளைகழலுதலைப் பிறரறியவும் தனிமை மேன்மேலே வந்து வருத்தவும் நினக்கு அறிவுறாமற் செலுத்துகையினாலே,

---

* தொல்காப்பியம், பொருளியல், சூ. 12.

† " " " 13.

‡ "விறனலன்" (கலி. 3) என்பதன் உரையைப்பார்க்க.

நீயும் அலவுற்று அகல் உள் ஆங்கண் அறியுநர் வினாய்—நீயும் அலம்வந்து அகன்றஇடத்தையுடைய ஊரிடத்துக் *கட்டினாலும் †கழங்கினாலும் எண்ணியறிவாரைவினாவி அவர் தெய்வத்தான்வந்த வருத்தமென்றலின்,

வினாயுமென்றவிடத்தும்மையைப் பேணியென்பதன் பின்னே கூட்டுக.

வேறு உருவின் பல் கடவுள் நறையும் விரையும் ஓச்சியும் பரவியும் தொழுதும் விரவு மலர் தூயும் பேணியும்—வேறுபட்ட வடிவினையுடைய பலதெய்வங்களைத் தூபங்களும் சந்தனமுதலியனவுங்கொடுத்தும் பரவியும் வணங்கியும் கலந்தபூக்களைச்சிதறியும் வழிபட்டும் அதனால் தீராமையின்,

பேணியுமென்னுமும்மை சிறப்பு; ஏனைய எண்ணும்மை.

எய்யா மையலை வருந்துதி—இந்நோயையறியாத மயக்கத்தையுடையையாய் வருந்தாநின்றாய்;

என் தோழி படர்இழைநெகிழ்த்தநோய் நினக்குச் செப்பல்வன்மையின் யான் செறித்துத் தொலையவும் நெகிழவும் அறியவும் அலைப்பவும் கடவலின் நீயும் அலவுற்று வினாய்க் கடவுளைப்பேணியும் எய்யாமையலையாய் வருந்துதியெனமுடிக்க.

13 - 4. [முத்தினு மணியினும் பொன்னினு மத்துணை, நேர்வருங் குரைய கலங்கெடிற் புணரும்:] அத்துணை முத்தினும் மணியினும் பொன்னினும் நேர் வரும் கலம் கெடின் புணரும்—அவ்வளவாகிய முத்தானும் மாணிக்கத்தானும் பொன்னானும் பொருந்துதல்வரும் பூண் கெட்டதாயிற் பின்னும் வந்துகூடும்; அதுபோலன்றி,

முத்துமுதலியவற்றிற்குக்கூறிய இலக்கணங்களை அத்துணையென்றார்.

குரைய அசை.

15 - 8. [சால்பும் வியப்பு மியல்புங் குன்றின், மாசறக் கழீஇ வயங்கு புகழ் நிறுத்த, லாசறு காட்சி யையர்க்கு மந்நிலை, யெளிய வென்னார் தொன்மருங் கறிஞர்:]

சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின் மாசு அற கழீஇ வயங்கு புகழ் அந்நிலை நிறுத்தல் — தத்தங்குலத்திற்கேற்ற குணங்களினமைதியும் மேம்பாடும் ஒழுக்கமும் பழையதன்மைகெட்டாற் பிறந்தஅழுக்கைப் போம்படிகழுவி விளங்கும்புகழை முன்புபோலே நிற்கும்படி நிறுத்தல்,

---

* கட்டு - சிறுமுறத்திற் பரப்பிய நெல்லிற்பார்க்கும் ஒருவகைக்குறி; இங்ஙனம் குறிபார்ப்பவள், கட்டுவித்தியெனப் படுவாள்; இதனைத் திருக்கோவையார், 285 - ஆம் செய்யுளாலும் அதனுரையாலும், "கட்டுவிச்சி கட்டேறிச் சீரார் களகிற் சிலநெல் பிடித்தெறியா, வேரா விதிர்விதிரா மெய்சிலிராக் கை மோவாப், பேரா யிரமுடையா னென்றாள்" (20 - 22) என்னுஞ் சிறியதிருமடலாலும் உணர்க.

† கழங்கு - கழற்கொடிக்காய்.

தொல் மருங்கு அறிஞர் ஆசு அறு காட்சி ஐயர்க்கும் எளிய என்னார்—பழைதாகிய நூலையறிவார் குற்றமற்ற அறிவினையுடைய தெய்வ இருடிகளுக்கும் எளியகாரிய மென்னார்;

*"ஐயர் பாங்கினு மமரர்ச் சுட்டியும்" என்றாராகலின் ஐயர் தேவராகார்.

19 - 20. [மாதரு மடனு மோராங்குத் தணப்ப, நெடுந்தே ரெந்தை யருங்கடி நீவி:]

நெடு தேர் எந்தை அரு கடி நீவி—நெடியதேரையுடைய என் தந்தையது அரிய காவலைக் கடந்து,

மாதரும் மடனும் ஓராங்கு தணப்ப—†இருமுதுகுரவரும் தமக்கு இயைந்தோர்க்குக் கொடுப்பேமென்றிருக்கின்றகாதலும் எனதுமடனும் சேரப்போக,

21. [இருவே மாய்ந்த மன்ற விதுவென:] இது இருவேம் ஆய்ந்த மன்றல் என—இந்தமணம் தலைவனும் யானும் ‡பெருமையும் உரனும் அச்சமும் நாணும் நுணுகியநிலையாற்பிறந்த கந்தருவமணமென்று,

22. நாம் அறிவுறாலின் பழியும் உண்டோ—நாம் யாய்க்கு அறிவுறுத்தலான் நமக்குப் புகழேயன்றி வருவதோர்பழியுமுண்டோ? அஃதில்லை;

உம்மை எச்சவும்மை. ஓகாரம் எதிர்மறை; §இது மறைநூல் விதித்ததாகலின்.

23. ஆற்றின் வாரார் ஆயினும்—இங்ஙனம் அறத்தொடுநின்றபின் தலைவர்க்கே நம்மை அடை நேர்ந்திலராயினும்.

ஆற்ற—நாம் உயிர்போந்துணையும் இவ்வருத்தத்தைப் பொறுத்திருக்க,

24. [ஏனை யுலகத்து மியைவதா னமக்கென:] நமக்கு ஏனை உலகத்தும் இயைவதால் என—நமக்கு மறுபிறப்பினும் இக்கூட்டம் கூடுவதொன்றாயிருந்ததெனக்கூறி,

25 - 6. [மானமர் நோக்கங் கலங்கிக் கையற், றானாச் சிறுமைய ளிவளுந் தேம்பும்:] ஆனா சிறுமையள் மான் அமர் நோக்கங்கலங்கி கையற்று இவளும் தேம்பும் — ஆற்றுந்தன்மைத்தல்லாத நோயினையுடையளாய் மான்நோக்கமமர்ந்த நோக்கமின்றி மையனோக்கங்கொண்டு வினையொழிந்து அயர்ந்து இவளும் மெலியும்;

---

* தொல்காப்பியம், கற்பியல் சூ. 5.

† இருமுதுகுரவர் - தாய்தந்தையர்.

‡ பெருமையும் உரனும் தலைவன் குணங்கள்; அச்சமும் நாணும் தலைவியின் குணங்கள்; (தொல். களவு. சூ. 7, 8.)

§ இது வென்றது கந்தருவ மணத்தை; அது மறைநூல்விதியென்றதை, "மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுட். டுறையமை நல்யாழ்த் துணைமையோ ரியல்பே" (தொல். களவு. 1), "அருமறை மன்ற லெட்டினுட், கந்தருவ வழக்கம்" (இறை. 1.) "காந்தர்ப்ப மென்பதுண்டாற் காதலிற்கலந்த சிந்தை, மாந்தர்க்கு மடந்தை மார்க்கு மறைகளே வகுத்த கூட்டம்" (கம்ப. சூர்ப்பநகை. 54.) என்பவற்றாலுணர்க.

இவளும் (26), கலங்கிக் (25) கெடிற் புணரும் (14); அதுபோலன்றிச் சால்பு முதலியனகுன்றின் (15) கிறுத்தல் (16) எளியவென்னார் (18) ஆகலின், இஃது இருவேமாய்ந்தமன்றலென (21) அறிவுறாலிற் பழியுமில்லை (22); ஆற்றின்வாராராயினும் ஆற்ற (23) ஏனையுலகத்தும் இயைவதாலெனக்கூறி (24) மெலியும் (26) எனமுடிக்க.

*"வரைவிடை வைத்த காலத்து வருந்தினும், வரையா நாளிடை வந்தோன் முட்டினு. முரையெனத் தோழிக் குரைத்தற் கண்ணுந், தானேகூறுங் காலமு முளவே" என்பதனுள், 'தானே கூறுங் காலமு முளவே' என்றதனால் உடையளாயெனத் தலைவிகூற்றினைக் கொண்டுகூறினாளென்றுணர்க. †"செறிவு நிறையுஞ் செம்மையுஞ் செப்பு, மறிவு மருமையும் பெண்பா லான" என்பதனால் மறை புலப்படுத்தலாகாதென்றாராயினும், ‡"உற்றுழி யல்லது சொல்ல லின்மையி, னப்பொருள் வேட்கை கிழவியி னுணர்ப" என்பதனால் மறைபுலப்படுத்தலுமாமென வழுவமைத்தலின் இங்ஙனம் தலைவிகூறினாள்.

இதனால் தோழி §தலைப்பாடுகூறினாள்.

27 - 8. இகல் மீ கடவும் இரு பெரு வேந்தர் வினை இடை நின்ற சான்றோர் போல—மாறுபாட்டின்மிகுதியைச்செலுத்தும் இருவராகிய பெரிய அரசரைச் ||சந்துசெய்விக்குந் தொழிலிடத்தேநின்ற அறிவுடையோரைப்போல,

29. இரு பெரு அச்சமோடு யானும் ஆற்றலேன்—நினக்கும் இவள் வருத்தத்திற்குமஞ்சும் இரண்டு பெரிய அச்சத்தாலே யானும் வருந்தாநின்றேன்;

30. கொடுப்பின் நன்கு உடைமையும்—கொடுத்தபின்பு எல்லாவற்றானும் நன்றாகிமுடிதலையும்,

குடி நிரல் உடைமையும்—ஒருகுடியாகாமல் இரண்டுகுடியும் ஒத்தலுடைமையையும்,

31. வண்ணமும்—குணத்தையும்,

துணையும்—சுற்றத்து உதவிகளையும்,

பொரீஇ எண்ணாது—ஒப்பித்துப்பார்த்துப் பின்னரும் பலருடன் உசாவாதே,

¶"செந்துறை, வண்ணப் பருதி வரைவின் றாங்கே" என்பதனால் வண்ணம் குணமென்றுணர்க.

---

* தொல்காப்பியம், களவியல், சூ. 21.

† ,, பொருளியல், சூ. 15.

‡ ,, ,, 14.

§ தலைப்பாடு கூறல் - தலைவனும தலைவியும் தாமே எதிர்ப்பட்டார், யான் அறிந்திலேனெனக்கூறல்.

|| சந்துசெய்வித்தல் - சந்திசெய்வித்தல்.

¶ தொல்காப்பியம், புறத்திணையியல், சூ. 27.

32. எமியேம் துணிந்த ஏமம் சால் அரு வினை—நும்மையின்றித் தமியே மாய் யாங்களே துணிந்த உயிர்க்குப் பாதுகாவலமைந்த செய்தற்கரிய இக்கந்தரு வமணம்,

தானும் புணர்ச்சிக்குப்பின் உடம்படுதலின், எமியேந் துணிந்தவென்றாள்.

33. நிகழ்ந்த வண்ணம்—முன்புநடந்தபடியை,

33 - 4. நீ நனி உணர செப்பல் ஆன்றிசின் —நீ மிகவுமறியும்படி சொல்லுதலையமைந்தேன்,

34. சினவாதீமோ—அதுகேட்டுச்சினவாதிருப்பாயாக,

35. நெல் கொள் நெடு வெதிர்க்கு அணந்த யானை—நெல்லைத் தன்னிடத்தேகொண்ட நெடிய மூங்கிலைத்தின்றற்கு மேனோக்கிநின்றுவருந்தின யானை அவ்வருத்தந்தீரும்படி,

36. முத்து ஆர் மருப்பின் இறங்கு கை கடுப்ப—முத்துநிறைந்த கொம்பிலே ஏறட்டுநான்ற கையையொப்ப,

37 - 8. துய் தலை வாங்கிய புனிறு தீர் பெரு குரல் நல் கோள் சிறு தினை படு புள் ஒப்பி—துய்யையுடைய தலைவளைந்த ஈன்றணிமைதீர்ந்த பெரிய கதிர்களை நன்றாகத் தன்னிடத்தேகொள்ளுதலையுடைய சிறிய தினையிலேவீழ்கின்ற கிளிகளையோட்டி,

துய்—இளைதாணபருவத்துப் பஞ்சுநுனைபோன்றிருப்பது.

கடுப்ப வளைந்த வென்க.

39. எல் பட வருதியர் என நீ விடுத்தலின்—பகற்பொழுதுகழியாநிற்க நீர்வருவீராகவென்றுகூறி நீ போகவிடுகையினாலே யாங்களும்போய்,

வருதியர், வியங்கோண்முற்று.

40 - 41. கவி கெழு மரம் மிசை சேணோன் இழைத்த புலி அஞ்சு இதணம்—ஆரவாரம் பொருந்தின மரத்தினுச்சியிலே இராக்காலம் ஆகாயத்திருப்போன்பண்ணின புலி அஞ்சுகைக்குக்காரணமான பரண்,

*" சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி " என்றார்பிறரும்.

41 - 2. [ஏறி யவண, சாரற் சூரற் றகைபெற வலந்த:] அவண சாரல் சூரல் தகை பெற வலந்த இதணம் (41) ஏறி—அவ்விடத்தனவாகிய மலைப்பக்கத்துப்பிரம்பாலே அழகுபெறத் †தெற்றின இதணத்தேயேறி,

இனிச் சூரலாலேபிணித்த தழலென்றுமாம் சூரல் - சூரற்கொடியுமாம்.

43. தழலும்—தழலும்,

தழலாவது கையாற்சுற்றினகாலத்துத் தன்னிடத்துப் பிறக்குமோசையாற் கிளிமுதலியவற்றை ஓட்டுங்கருவி; கவணென்பாருமுளர்.

தட்டையும்—தட்டையும்,

---

* குறுந்தொகை, 150. † தெற்றின - பின்னின.

தட்டையாவது மூங்கிலைக் கண்ணுக்கண் உள்ளாகநறுக்கிப் பலவாகப் பிளந்து ஓசையுண்டாக ஒன்றிலே தட்டுவதோர் கருவி.

குளிரும்—குளிரும்,

குளிராவது இவைபோல்வதோா கிளிகடி *கருவி,

பிறவும்—ஏனையவும,

பிறவென்றது கவண்முதலியவற்றை.

44. கிளி கடி மரபின ஊழ் ஊழ் வாங்கி—கழலும் தட்டையும் குளிரும பிறவுமாகிய கிளியோட்டுமுறைமையினையுடையவற்றை முறையேமுறையே கையிலேவாங்கி ஓட்டி,

45. உரவு கதிா தெறூஉம் உருப்பு அவிா அமயத்து—மிகுதலையுடைய ஞாயிற்றின்கிரணஙகள்சுடும் வெமமைவிளஙகுகின்ற பொழுதிலே ஊழூழ்வாஙகி (44) எனக.

46. விசும்பு ஆடு பறவை வீழ் பதி படா—ஆகாயததேபறக்கும் பறவைக ளெல்லாம் தாமவிருமபுஞ் †சேக்கைகளிலே செல்லுமபடியாக,

47 - 53. [நிறையிரும பௌவஙகுறைபட முகந்துகொண், டகலிரு வானத்து வீசுவளி கலாவலின, முரசதிர்ந் தன்ன வினகுர லேற்றொடு, நிரை செல னிவப்பிற் கொணமூ மயஙகி, யினனிசை முரசிற் சுடர்ப்பூட் சேஎ, யொன்னார்க் கேந்திய விலஙகிலை யெஃகின், மின்மயங்கு கருவிய:]

நிறை இரு பௌவம குறைபட முகந்துகொணடு முரசு அதிர்ந்தனன இன் குரல் ஏற்றொடு நிரை செலல் நிவப்பின் கொண்மூ—நிறைநத கரியகடலைக குறையுண்டாம்படிமுகந்துகொண்டு முரசு சிறிதுமுழஙகினாற்போனற இனிய குரலையுடைய உருமேற்றோடே நிரைததுசசெல்லுதலையுடைய ஓக்கததினை யுடையமேகம,

இன இசை முரசின சுடர் பூண் சேஎய ஒன்னாக்கு ஏந்திய இலஙகு இலை எஃகின மின் மயஙகு கருவிய—இனிய ஓசையையுடைததாகிய முரசினை யும், ஒளியினையுடைததாகிய அணிகலஙகளையுமுடையமுருகன அசுரரைக கொல்லுதற்கெடுதத விளஙகுகின்ற இலைததொழிலையுடைய வேல்போல மின னுமயங்குகின்ற தொகுதிகளையுடையவாய்

அகல் இரு வானத்து வீசு வளி கலாவலின மயஙகி—ஏனைப்பூதஙகள விரிதற்குக்காரணமான கரியஆகாயததிடததே வீசுகின்ற காற்றுத தனனிடத தே கூடுகையினாலே நிரைதத நிரைபோய்க் கலஙகி,

53. கல் மிசை பொழிந்தென—மலைமேலே பெய்தவாக,

---

* தினைப்புனததிற் கிளியோப்புவோர் மூஙகிலை வீணைபோற் கட்டித தெறிக்குஙகருவியென்பர்.

† சேக்கை - கூடு; "சேக்கை மரனொழியச் சேணீஙகு புள்" (நாலடி யாக்கை. 10.)

கொண்மூக் (50) கருவியவாய் (53) மயங்கிப் (50) பறவை பதிப்படரப் (46) பொழிந்தென (53) என்க.

54 - 6. அண்ணல் நெடு கோடு இழிதரு தெள் நீர் அவிர் துகில் புரையும் அ வெள் அருவி தவிர்வு இல் வேட்கையேம் தண்டாது ஆடி—தலைவனுடைய நெடிய மலைச்சிகரத்தினின்றும் குதிக்கின்ற தெளிந்த நீரையுடைய விளங்குகின்ற வெள்ளிய துகிலையொக்கும் அழகிய வெள்ளிதாகிய அருவியிலே நீங்குதலில்லாத விருப்பையுடையேமாய் அமையாமல் விளையாடி,

அண்ணன் மலையில் அருவியென்றே நிலமொன்றென்றாள்.

57 - 8. [பளிங்குசொரி வன்ன பாய்சுனை குடைவுழி, நளிபடு சிலம்பில்:] நளி படு சிலம்பில் பளிங்கு சொரிவு அன்ன பாய் சுனை குடைவுழி—செறிவுண்டானமலையிடத்துப் பளிங்கைக்கரைத்துச் சொரிந்துவைத்தாற்போன்ற பரந்த சுனையைக் குடைந்துவிளையாடுகின்றவிடத்தே

58. *பாயம் பாடி—எங்கள்மனத்துக்கு விருப்பமானவற்றைப் பாடி,

59 - 60. பொன் எறி மணியின் சிறு புறம் தாழ்ந்த எம் பின் இரு கூந்தல் பிழிவனம் †துவரி - பொன்னிலேயழுத்தின சிலமணிபோலே சிறிய முதுகிடத்தே தாழ்ந்துகிடந்த எம்முடைய பின்னுதலையுடைய கரியகூந்தலை நீரைப் பிழிந்து ஈரத்தைப்புலர்த்தி,

61. உள் அகம் சிவந்த கண்ணோம் – உள்ளாகிய இடமெல்லாஞ் சிவந்த கண்ணோமாய்,

61 - 2. வள் இதழ் ஒள் செ காந்தள் —பெரிய இதழையுடைய ஒள்ளிய சிவந்த கோடற்பூ,

62. ஆம்பல் அனிச்சம் – ஆம்பற்பூ அனிசசப்பூ,

63. தண் கயம் குவளை —குளிர்ந்த குளத்திற்பூத்த செங்கழுநீர்ப்பூ,

குறிஞ்சி – குறிஞ்சிப்பூ,

வெட்சி—வெட்சிப்பூ.

64. செங்கொடுவேரி— செங்கொடுவேரிப்பூ,

‡தேமா - தேமாம்பூ,

மணிச்சிகை—செம்மணிப்பூ,

65. உரிது நாறு அவிழ் தொத்து உந்தூழ் – தனக்கு உரித்தாக நாறும் விரிந்த கொத்தினையுடைய பெருமூங்கிற்பூ,

கூவிளம்—§வில்லப்பூ,

---

* பாயம் - மனவிருப்பம் (பெரும்பாண். 342.)

† துவர்தல் - உலர்தல்; "கண்ணும்வாயுந் துவர்ந்து" (திருவாய். 8 5: 2.)

‡ 'தேமா' என்பதுமுதல் 'பெருமூங்கிற்பூ' என்பதிறுதியாகவுள்ளவை கள் தருமபுரவாதீனமடத்திலிருந்துகிடைத்த ஒரு பழைய எட்டுப்புத்தகத்தில் மட்டும் இருந்தன.

§ வில்லம் - வில்வம்.

66. எரி புரை எறுழம்—நெருப்பையொத்த எறுழம்பூ,
சுள்ளி—மராமரப்பூ,
கூவிரம்—கூவிரப்பூ,
67. வடவனம்—வடவனப்பூ,
வாகை—வாகைப்பூ,
வால் பூ குடசம்—வெள்ளிய பூவினையுடைய வெட்பாலைப்பூ,
68. எருவை—பஞ்சாய்க்கோரை,
கொறுக்கச்சியுமாம்.
செருவிளை—வெண்காக்கணம்பூ,
மணி பூ கருவிளை—நீலமணிபோலும் பூக்களையுடைய கருவிளம்பூ.
69. பயினி பயினிப்பூ,
வானி—வானிப்பூ,
பல் இணர் குரவம்—பல இதழ்களையுடைய குரவம்பூ,
70. *பசும்பிடி—பச்சிலைப்பூ,
வகுளம்—மகிழம்பூ,
பல் இணர் காயா—பல கொத்துக்களையுடைய காயாம்பூ,
71. விரி மலர் ஆவிரை—விரிந்த பூக்களையுடைய ஆவிரம்பூ,
வோல்—சிறுமூங்கிற்பூ,
சூரல்—சூரைப்பூ.
72. குரீஇப்பூளை—சிறுபூளை,
குறுநறுங்கண்ணி—குன்றிப்பூ,
73. குருகிலை—முருக்கிலை,
மருதம்—மருதப்பூ,
விரி பூ கோங்கம்—விரிந்த பூக்களையுடைய கோங்கம்பூ,
74. போங்கம்—மஞ்சாடிப்பூ,
திலகம்—மஞ்சாடிமரத்தின்பூ,
தேன் கமழ் பாதிரி—தேனாறும் பாதிரிப்பூ,
75. செருந்தி—செருந்திப்பூ,
அதிரல்—புனலிப்பூ,
பெரு தண் சண்பகம்—பெரிய குளிர்ந்த சண்பகப்பூ,
76. கரந்தை—நாறுகரந்தை.
குளவி—காட்டுமல்லிகைப்பூ,
கடி கமழ் கலி மா—விரைகமழும் தழைத்த மாம்பூ,
77. தில்லை—தில்லைப்பூ,
பாலை—பாலைப்பூ,
கல் இவர் முல்லை—கல்லிலேபடர்ந்த முல்லைப்பூ,

---

* பரிபாடல், 19 : 75.

78. குன்று—கருங்கற்குன்றுப்பு,
பிடவம்—பிடவம்பு,
பெருமரோடம்—செங்கருங்காலிப்பு,
79. வாழை—வாழைப்பு,
வள்ளி—வள்ளிப்பு,
நீள் நறு செய்தல்—நீண்ட நறிய செய்தற்பு.
80. தாழை—தெங்கிற்பா ன,
†தளவம்—செம்முல்லைப்பு,
முள் தாள் தாமரை—முள்ளையுடைத்தாகிய தாளையுடைய தாமரைப்பு,
81. ‡ஞாழல்—ஞாழற்பு,
மௌவல்—மௌவற்பு.
நறு தண் - §கொகுடி—நறிய குளிர்ந்த கொகுடிப்பு.
82. சேடல்—பலழக்கான் மல்லிகைப்பு.
செம்மல்—சாதிப்பு.
பெருசெங்குரலி—கருந்தாமக்கொடிப்பு,
83. கோடல்—வெண்கோடற்பு,
கைதை—தாழம்பு,
கொக்கு முதிர் நறு வழை—தாதுமுதிர்ந்த நறிய சரபுன்னைப்பு.
84. காஞ்சி—ஆஞ்சிப்பு,
மணி குலை கள் கமழ் செய்தல்—நீலமணிபோலுங் கொத்துக்களையுடைய தேனுமம் கருங்குவளை,
85. பாங்கர்—||ஓமை.
மராஅம்—மரவம்பு,
பல் பூ தணக்கம்—பல பூக்களையுடைய தணக்கம்பு.
86. சிங்கை—இண்டம்பு.
இலவம்—இலவம்பு,
தாம்பு இணர் கொன்றை—தாம்புபோன்ற பூங்கொத்தினையுடைய கொன்றைப்பு,
87. அடும்பு—அடும்பம்பு.
அமர் ஆத்தி—பொருந்தின ஆத்திப்பு,
செஞ் சொடி அவரை—செய்ய கொடியினையுடைய அவரைப்பு,
88. பசன்றை—பசன்றைப்பு,

---

* கருங்கருல்லை - கருசா.
† ஐங்குறு. 447; அகநா. 23.
‡ ஞாழல் - புலிகாக்கொன்றை.
§ கொகுடி - ஒருவகைமுல்லை; "கொகுடி முல்லை" (வட்டாங்காடு துறை, ஞான. தே. 1.)
|| ஓமை - ஒருவகைமரம்

இது வெண்டை; *"பல்லரைப்பூ வுறின்மை பாலிதழ் நிலை" என்பதனி வெள்ளிவட்டில் வகைமைகோடலின், இது கொடிவகுப்பதன்று.

பலாசம்—பலாசம்பூ,

பல் பூ பிண்டி—பலபூக்களையுடைய அசோகம்பூ,

89. வஞ்சி—வஞ்சிப்பூ,

பித்திகம்—பிச்சிப்பூ,

சித்தாரம்—கருநொச்சிப்பூ,

90. தும்பை—தும்பைப்பூ,

தழாஅய்—திருத தழாய்ப்பூ,

சுடர் பூ தோன்றி—விளக்குப்போலும் பூவினையுடைய தோன்றிப்பூ.

91. கத்தி—கத்தியாவட்டப்பூ,

கறவம்—கறைக்கொடி,

கற புன்னகம்—இது புன்னையின்விசேடம்,

92. பாரம்—பருத்திப்பூ,

பீரம்—பீர்க்கம்பூ,

பைங்குருக்கத்தி—பசிய குருக்கத்திப்பூ,

93. ஆரம்—சந்தனப்பூ,

காழ்வை—அகிற்பூ,

கடி இரு புனை—மணத்தையுடைய பெரிய புனைபபூ.

94. காந்தம்—காசத்தம்பூ,

காசம்—காசப்பூ,

கள்ளிருணறி—†இருவாட்சிப்பூ,

95. மா இரு குருந்தம்—கரிய பெரிய குருந்தம்பூவும்

வேங்கையும்—வேங்கைப்பூவும்,

95-7. [பிறவு. மாகுவிரித தன்ன பிரசம் ‡புழுகுடன், மாலை குடைய:] அங்கு மால் உடைய அரக்கு விரிதனன பிறவும் பிரசமபுழு குடன—அச்சாலிடத்துத் தம்மில் மயக்கமுடையவாய்ச் சாதிலிங்கதனைப் பரப பினற்போனற பிறபூக்களையும் பருத்த அழகினையுடைய மலையெருக்கமபூவு டனே,

பிரசம்புழுகு - §செம்பூவுமாம; புனமுருங்கையுமென்ப.

97. மலிவனம் மறவி—பூக்களிடததே மனவேட்கைமிக்குப் பலகாலும் நிரம்பறித்து,

98. வான் கண் கழீஇய அகல் அறை குவைஇ—மழை பெய்து தன னிடத்தைக்கழுவித் தூய்தாக்கின அகன்ற பாறையிலே குவித்து,

---

* கலித்தொகை, 78.

† இருள்வாயியென்பது இருவாட்சியென்ற வழங்குகின்றதுபோலும்.

‡ "அழகமைந்திப்புழை" (திருமுரு. 36: 12.)

§ "செறிவினைப் பொலிந்த செம்பூ கள்ளின்" (பரிபாடல், 22: 21.)

வெண்சேவலும் (61) மலிவணமதலைப் (97) பசுஞ்புழலுடனே (96) ஒண் செங்கோற்றன் (62) முதலியவற்றையும் பிறவற்றையும் (95) பாறையிலேகுவித்த (98) வாழ்முதல்க.

செங்கோற்றன் (62) முதலியவற்றிற்கெல்லாம இரண்டாமுருபும் உம்மையும் விரிக்க. குருத்தும் வேங்கையும் பிறவும் (95) எனற மூன்றற்குரு உருபுவிரிக்க.

90. ஏழ் அர் இயத்த—பதலைகளின ஓசையாகிய கிறைந்த வாச்சியங் களையுடைய,

விண்டு மலி செம்பின—ஒன்றற்றொன்ற குறுகவிடுத்திடங்கின்ற மலைப் பக்கத்திற்புனத்தே

100 - 101 வள் உயிர் தெள விளி இடையிடை பயிறறி கினை ஒப்பி யும—பெரிய ஓசையினையுடைய தெளிந்தசொறகளை மடலோடுவேசொல்லித் தெளிய ஓட்டுதலைசெய்தும் தழை தைஇ (102) யெனக

சொல் - *தெளியையொட்டுஞ்சொல்

தெளியையுமோப்பியெனச் சிறப்புமுமை

101 கினை இதழ பறியா—புறவிதழ்களை வாங்கிப்போகட்டு,

102. பை விரி அல்குல் நொய தழை தைஇ—பாம்பினபடதனைப் போலே பரந்த அல்குலுக்குத தழையைகட்டியுடுத்து,

நொய்தழை - மிக்தவிடைகளை நெகினதழை

103 - 4. பல் வேறு உருவின வனபு அமை கோதை எம் மெல் இரு முசி கவின் பெற கட்டி—†பலவாய வேறபட்ட நிறதனையுடைய அழகமைந்த மாலைகளை எம்முடைய மெல்லிய கரியமுடியிலே அழகுபெறசசுற்றி.

105 - 6. வரி அவிர் உருவின அம குழை சொலில தாது படி எண் கிழல் இருந்தணமாக- நெருப்புப்போலினறகும நிறதனையுடைய அழகிய தளிரை யுடைய அசோகினது நாதுவிழுகின்ற குளிர்ந்த நிழலிலே இருந்த அளவிலே,

107. [எண்ணெய் நீவிய கரிவளர நறுகொழ]

கரிவளர்நறுங்கூழ், பினைகூட்டுதம்

எண்ணெய் நீவிய கலம பெறு சினனி (116)—பலதாலும எண்ணெய் வார்ந்த கன்மையைப்பெற்ற தலையிற குஞசி (112) எனக.

108. தண் நற தகரம் கமழ மணணி—குளிரந்த நறிய மயிர்ச்சாந் தனதை சாதம்படியாகப்பூசி,

---

* இக்கு ஆயோவென்பது; "ஆயோவெனவு மணலுமலையாரை" (நாண. 9த.), "ஆயோவெனப்போகா" (திருப்பரங்குபபதம், சுச்சர), இளியுமென்கு மாயோவதற்கொண்டையோ" (தீவ் திருவிருத்தம், 10); புனைகாவல்கொண், டாயோ வெனமொழியு மம்மழலை யினனிசையால்" (தூனா. சுயம 104.)

† பலவகைப்பட்ட மலைகளினியல்புப் பினபுகுறிதத இடங்களிலுள்ள செய்யுட்களைநோக்குக: — பரிபாடல், 19: 80 - 82, 20 29 - 30; சிலப். 2856, 2919; பெரிய முருக. 9.

109. ஈரம் புலர விரல் உளர்ப்பு அவிழா—அந்த ஈரம்புலரும்படி விரலாலளைத்துப் புலர்த்துதற்றொழிலாலே பிணிப்பையிடுத்து,

110. நறு காழ் (107) காழ் அகில் அம் புகை கொளீஇ—அதனை நறிய கரிய வயிரத்தினையுடைய அகிலினது அழகிய புகையூட்டுகையினாலே,

இதில் நறுங்காழ் கூட்டிற்று.

110 - 11. யாழ் இசை அணி மிகு வரி மிஞிறு ஆர்ப்ப தேங்கலந்து—யாழோசையினது அழகுமிகுகின்ற பாட்டினையுடைய மிஞிறுகள் ஆரவாரிக்கும்படி அகிலினது நெய்கலந்து.

112. [மணிநிறங் கொண்ட மாயிருங் குஞ்சியின :]

மணி நிறம் கொண்ட சுரி வளர் (107) மா இரு குஞ்சியின்—*நீலமணியினதுநிறத்தைத் தன்னிடத்தேகொண்ட கடைகுழன்றுவளர்ந்த கரிய பெரிய மயிரின் கண்ணே,

இதிற் சுரிவளர் கூட்டிற்று.

மண்ணி (108) அவிழாப் (109) புகைகொளுவுகையினாலே (110) தேங்கலந்து (111) ஒருகாழ்வளைஇ (118) மணிநிறங்கொண்ட குஞ்சி (112) என்க.

113. மலையவும் நிலத்தவும் சினையவும் சுனையவும்—மலையிடத்தனவும் நிலத்திடத்தனவும் கொம்புகளிற் பூத்தனவும் சுனைகளிற்பூத்தனவுமாகிய,

114. வண்ணம் வண்ணத்த மலர்—பலநிறங்களையுமுடையமலர், பல சாதிகளையுமுடையமலர்,

என ஒன்று நிறமும் ஒன்று சாதிவேறுபாடுங் கூறினார்.

114 - 5. ஆய்பு விரைஇய தண் நறு தொடையல் வெள் போழ் கண்ணி—அம்மலரை ஆராய்ந்துதொடுத்த தண்ணிய நறிய தொடையலினையும் வெள்ளிய தாழைமடலிலேயுடைத்தாகிய கண்ணியினையும்,

116. [நலம்பெறு சென்னி நாமுற மிலைச்சி :]

நாம் உற மிலைச்சி முருகனென்றச்சமுறும்படி சூடி,

குஞ்சியின் கண்ணே (112) மிலைச்சியென்க.

நலம்பெறுசென்னி, முன்னேகூட்டிற்று.

117 - 8. பைங்கால் பித்திகத்து ஆயிதழ் அலரி அம் தொடை ஒருகாழ் வளைஇ — பசியகாம்பினையுடைய பிச்சியினுடைய அழகியஇதழ்களையுடைய பூவைத்தொடுத்த அழகினையுடைய தொடையாகிய ஒருவடத்தைச் சுற்றி,

இஃது அந்திக்காலத்துமலரும் பூவாதலின், அதனைத் தேங்கலந்து (111) ஒருகாழ்வளைஇ (118) மணிநிறங்கொண்டகுஞ்சி (112) எனக் குஞ்சிக்கு இயல்பாக்கி முன்னேகூட்டுக.

118 - 20. [செந்தீ, யொண்பூம் பிண்டி யொருகாது செரீஇ, யந்தளிர்க் குவவுமொய்ம் பலைப்ப :] குவவு மொய்ம்பு அலைப்ப செ தீ ஒள் பூ பிண்டி அம்

* "இந்திர நீலமொத் திருண்ட குஞ்சியும்" (கம்ப. மிதிலை. 56.)

தனிர் ஒருகாது செரீஇ—திரளுதலையுடைய தோளிலேவீழ்ந்து அலைக்கும்படி சிவந்த நெருப்புப்போலும் ஒள்ளிய பூக்களையுடைய அசோகினது அழகிய தளிரை ஒருகாதிலே செருகி,

120 - 22. சாந்து அருந்தி மைந்து இறைகொண்ட மலர்ந்து ஏந்து அகலத்து தொன்று படு பூணொடு நறு தார் பொலிய—சந்தனத்தை உள்ளடக்கி வலிதங்குதல்கொண்ட அகன்றுயர்ந்த மார்பிடத்தே தொன்றுபட்டுவருகின்ற பேரணிகலங்களோடே நறியமாலை பொலிவுபெற.

123. செம்பொறிக்கு ஏற்ற — *மூன்றுவரியாகிய உத்தமவிலக்கணத்திற்குப் பொருந்தின மார்பு (121) என்க.

123 - 4. வீங்கு இறை தட கையின் வண்ணம் வரி வில் ஏந்தி அம்பு தெரிந்து—பூண் இறுகின முன்கையையுடைய பெரியகையிலே வண்ணத்தையுடைய வரிந்த வில்லையெடுத்து அம்புகளைத்தெரிந்துபிடித்து.

125. நுண் வினை கச்சை தயக்கு அற கட்டி—நுண்ணிய தொழில்களையுடைய கச்சைக் கட்டினசேலை துளக்கமறக்கட்டி,

126 - 7. [இயலணிப் பொலிந்த வீகை வான் கழ, நுயல்வருந் தோறுந் திருந்தடிக் கலாவ:] ஈகை இயல் அணி பொலிந்த வான் கழல் துயல்வருந் தோறும் திருந்து அடி கலாவ—பொன்னாற்செய்யப்பட்ட பூண்களிற்பொலிவு பெற்ற நன்றாகிய வீரக்கழல் பெயரும்பொழுதெல்லாம் பிறக்கிடாத அடியிலே ஏற்றிழிவுசெய்ய,

128 - 9. முனை பாழ் படுக்கும் துன் அரு துப்பின் பகை புரம் கண்ட பல் வேல் இளைஞரின்—பகைப்புலத்தைப் பாழாக்கும் கிட்டுதற்கரிய வலியையுடைய பகைகளை முதுகுகண்ட பலவேலினையுடைய வீரரைப்போலே,

130 - 31. உரவு சினம் செருக்கி துன்னுதொறும் வெகுளும் முளை வாள் எயிற்ற வள் உகிர் ஞமலி—பரக்கின்ற சினத்தாலே செருக்கித் தம்மே லொன்று நெருங்குந்தோறும் சோபிக்கும் மூங்கில்முளைபோலும் ஒளியையுடைத்தாகிய பல்லினையுடையவாகிய பெரிய உகிரையுடைய நாய்,

132. தினையா கண்ண வளைகுபு நெரிதர—இமையாக்கண்களையுடைய வாய் எம்மை வளைத்துக்கொண்டு மேலேமேலே வருகையினாலே,

133 - 4. [நடுங்குவன மெழுந்து நல்லடி தளர்ந்தியா, மிடும்பைகூர் மனத்தே மருண்டு புலம் படர:] யாம் நடுங்குவனம் எழுந்து நல் அடி தளர்ந்து இடும்பை கூர் மனத்தேம் மருண்டு புலம் படர—யாங்களஞ்சி அவ்விருப்புக்குலைந்து கடிதிற்செல்லுதலாற்றாது வருத்தமிக்க மனத்தையுடையேமாய் மயங்கி வேற்றுப் புலத்து ஏறச்செல்லாநிற்க,

135 - 6. மாறு பொருது ஓட்டிய புகல்வின் வேறு புலத்து ஆ சாண் விடையின் அணி பெற வந்து—தனக்குமாறாகியவிடைகளையெல்லாம் பொருது கெடுத்த மனச்செருக்கினையுடைய தானறியாதநிலத்திற் புதிய ஆவைக்காணும் ஏறுபோலே அழகுபெற வந்து,

---

* முருகு. 104 - 6 ஆம் அடிகளின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

வேட்கைநிகுதிகூறுதற்கு வேறுபுலத்து ஆவென்றார்.

இத்துணையும் ஏத்தல் கூறினார்.

136 - 8. [எம், மலமர லாயிடை வெரூஉத லஞ்சி, மெல்லிய வினிய மேவரக் கிளந்து:] அ இடை எம் அலமரல் வெரூஉதல் அஞ்சி மெல்லிய இனிய மேவர கிளந்து—யாங்கள்போகின்றபொழுது எம்மனத்திற் சுழற்சியாலே வெருவுதற்குத் தானஞ்சி மெல்லியவாய் இனியவாயிருக்கின்ற சொற்களை எமக்குப் பொருந்துதல்வரச் சொல்லி,

இதனால் *எதீடுகூறினான்.

138 - 9. எம் ஐம்பால் ஆய் கவின் ஏத்தி—எம் †ஐவகைப்பட்ட மயிரினையுடைய பலரும் ஆராய்ந்த அழகைப்புகழ்ந்து அசைகின்ற (140) இளையீ (141) ரென்க.

139. ஒள் தொடி—ஒள்ளிய தொடியினையும்,

140. அசை, வேறுகூட்டிற்று.

மெல் சாயல்—மெல்லிய மென்மையினையும்,

அ வாங்கு உந்தி—அழகிய வளைந்த கொப்பூழினையும்,

141. மடம் மதர் மழை கண் இளையீர்—மடப்பத்தையுடைய மதர்த்த குளிர்ந்த கண்ணினையுமுடைய இளையீரே,

141 - 2. இறந்த கெடுதியும் உடையேன் என்றனன்—இவ்விடத்தே போந்த கெடுதிகள் பலவுமுடையேனென்றுகூறினான்;

என்றது, அவை யானை கலை பன்றிமுதலியன கெடுத்தனனாக வினாயினான

குஞ்சியின்கண்ணே (112) மிலைச்சிச் (116) செரீஇப் (119) பொலியக் (122) கலாவக் (127) கட்டி (125) ஏந்தித் தெரிந்து (124) விடையின் அணி பெறவந்து (136) தான்கொண்டுவந்த ஞமலி (131) நெரிதருகையினாலே (132) எழுந்து தளர்ந்து (133) மருண்டு வேறுபுலம்படராநிற்க (134) ஆயிடை (137) எம் (136) அலமரல் வெரூஉதலஞ்சிக் (137) கிளந்து (138) ஏத்தி (13) இளையீர், இறந்த (141) கெடுதியுமுடையே னென்றன (142) னெனக் கூட்டுக.

142 - 3. [அதனெதிர், சொல்லே மாதலி னல்லாந்து கலங்கி:] அல்லாந்து அதன் எதிர் சொல்லேமாதலின் கலங்கி—அவன்கூற்றிற்கு யாங்கள மகிழ்ந்து அதற்கு மறுமொழி கொடேமாகையினாலே நெஞ்சழிந்து,

144 - 5. [கெடுதியும் விடீஇ ராயி னெம்மொடு, சொல்லலும் பழியோ மெல்லிய லீரென:] மெல் இயலீர் கெடுதியும் விடீராயின் எம்மொடு சொல்லலும் பழியோ என—மெல்லிய இயல்பினையுடையீர், கெட்டனவும் காட்டித் தாரீராயின் எம்முடன் ஒருவார்த்தை சொல்லுதலும் நுமக்குப் பழியாமோ வெனச் சொல்லி,

---

* எதீடு - காரணமிட்டுரைத்தல்.

† "நெய்யிடை நீவி மணியொளிவிட் டன்ன, வைவகை பாராட்டி னாய் மற்றெங் கூந்தற், செய்வினை பாராட்டினையோவைய" (கலி: 22.)

146 - 8. [நைவளம் பழுநிய பாலை வல்லோன, கைகவா நரம்பி னிம்மென விமிரு, மாதா வண்டொடு சுருமபுநயந் திறுதத] நைவளம பழுநிய பாலை வல்லோன கை கவா நரமபின இம்மென இமிரும மாதா வணடொடு நயந்து இறுதத சுரும்பு—*நட்டராகம முறறுப்பெறற பாலையாழை வாசிக்க வல்லவன தன்கையாலே வாசிததநரமபுபோலே இமமெனனும ஓசைபட ஒலிக்கும காதலையுடைய வணடினததோடே தனனிடதது மணததைவிருமபிததங்கின சுரும்பினஙகளை,

149. தாது அவிழ் அலரி தா சினை பிளந்து—தாதுவிரிநத பூக்களையுடைய தழைபரநததோர்கொமபை முறிதது,

150 தாறு அடு களிறறின வீறு பெற ஓசசி—தனனைச செலுததுகினற பரிக்கோலைக கைகடந்த மதககளிறுபோலே வெறறியுணடாக ஓடடி,

தனககுக்காவலாகிய †பெருமையினையு உரனையும கைகடநது வேட்கை மீதூரநது நிற்றலால தாறடுகளிறறை உவமஙகூறினா மதககளிறறிறகு அஙஙனம ஓசசிநிற்றல் இயல்பு

151 கலலென சுறறம கடு குரல அவிதது—கல்லெனனும ஓசைபடக கத்தும வேட்டைநாயகளுடைய கடிய குரல்களை அடிததுமாறறி,

151 - 2 எம சொல்லல் பாணி நினறனனாக—யாஙகள வாாததைசொலலுதலையுடையதோா காலததைப பாாததுநினறானாக

கெடுதியுமுடையேனெனறனன, அதனெதிர (112) யாஙகள சொலலே மாதலிற கலஙகி (143) மெலலியலீர, சொலலலுமபழியோவெனசசொலலி (145) ஓசசி (150) அவிததுச (151) சொலலா பாணி நினறனனாக (152) எனக கூட்டுக

இததுணையும வேடகை கூறினாள

153 - 4 இருவி வேயநத குறு கால குரமபை பிணை ஏா நோககின மனையோள மடுப்ப—நினையரிநத தாளாலேவேயநத குறியகாலகளையுடைய குடிலிலிருககும மானபிணையையொதத பாாவையினையுடைய மனைவி எடுததுக் கொடுபப

155 - 6 தேன பிழி தேறல மாநகி மகிழ சிறநது சேமம மடிநத பொழுதின—தேனாறசமைதத கடடெளிவையுணடு மகிழசசிமிககுக காவறறொழிலை மறநதகாலததே,

156 - 8 [வாயமடுத, திருமபுன நிழததலிற சிறுமை நோனா, தரவுற ழஞசிலை கொளீஇ நோயமிககு :]

இரு புனம வாயமடுதது நிழததலின சிறுமை நோனாது நோய மிககு—பெரியபுனததை வேழநதினறு நொககிவிடுகையினாலே தபபிநினறது விளையும சிறுமையைப்பொறாதே வருததமிககு,

---

* நட்டராகம - பகற்பண்களுள ஒனறு

† இப்புததகம, 357 - ஆம பககம (‡) பாாகக

159. [உரவுச் சினம்.]

உரவு சினம் அரவு உறழ் அம் சிலை கொளீஇ—பரக்கின்ற சினத்தை யுடைய பாம்பையொத்த அழகினையுடைய வில்லைநாணேற்றி,

உரவுச்சின (159) அரவுற ழஞ்சிலை கொளீஇ (158) எனப் பின்னே கூட்டுக. பாம்பு வடிவிற்கும் கொலைத்தொழிலுக்குமுவமை.

159 - 60. முன்பால் உடல் சினம் செருக்கி கணை விடுபு—மெய்வலி யோடே கோபித்தலாற்பிறந்த சினத்தாலே மயங்கி அம்பையெய்து,

விடுபு, விகாரம்.

புடையூ—தட்டையைப் புடைத்து,

160 - 61. கானம் கல்லென மடி விடு வீளையர் வெடி படுத்து எதிர—காடெல்லாம் கல்லென்னும் ஓசைபிறக்கும்படி வாயை மடித்துவிடுகின்ற *சீழ்க்கையராய் மிக்க ஓசையையுண்டாக்கி அக்களிற்றைப் புனத்தினின்றும் ஓட்டு கையினாலே,

வெடிபடுத்தார்த்தெனவும் பாடம்.

162 - 5. [கார்ப்பெய லுருமிற் பிளிறிச் சீர்த்தக, விரும்பிணர்த் தடக்கை யிருநிலஞ் சேர்த்திச், சினந்திகழ் கடாஅஞ் செருக்கி மரங்கொல்பு, மையல் வேழ மடங்கலி னெதிர்தர :]

சினம் திகழ் கடாம் செருக்கி மையல் வேழம்—சினம் விளங்குதற்குக் காரணமாகிய மதத்தாலே மனஞ்செருக்கி மயக்கத்தையுடைத்தாகிய யானை,

மரம் கொல்பு—மரங்களை முறிதது,

கார் பெயல் உருமின் பிளிறி—கார்காலத்துமழையின் உருமேறுபோல முழக்கத்தையுண்டாக்கி,

சீர் தக இரு பிணர் தட கை இரு நிலம் சேர்த்தி ஒய்யென (166) மடங்கலின் எதிர்தர—தன்தலைமைக்குத் தக்கதாகக் கரிய சருச்சரையையுடைத்தாகிய பெரிய கையைச்சுருட்டி நிலத்தேயெறிந்து கடுகக் கூற்றுவனைப்போலே எங்கள்மேலே வருகையினாலே,

166 - 8. [உய்விட மறியே மாகி யொய்யெனத், திருந்துகோ லெல் வளை தெழிப்ப நாணுமறந்து, விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்தி :]

ஒய்யென, முன்னேகூட்டிற்று.

உய்வு இடம் அறியேமாகி விதுப்பு உறு மனத்தேம்—உயிர்கொண்டு பிழைப்பதோரிடத்தை ஆண்டு வேறுணரேமாகி நடுக்கமுற்ற மனத்தையுடைய யாங்கள்,

நாணு மறந்து திருந்து கோல் எல் வளை தெழிப்ப விரைந்து அவன் பொருந்தி—†உயிரினுஞ் சிறந்த நாணைக்காத்தலை மறந்து திருந்திய திரட்

* சீழ்க்கை - நாவினது நுனியைமடித்துச்செய்யும் ஒலி; "நாத்தலைமடி விளி" (சீவக. 120.)

† "உயிரினுஞ் சிறந்தன்று நாணே" (தொல். களவு. 22.)

சிலையுடைத்தாகிய ஒளியினையுடைய வளையொலிப்ப விரைந்துசென்று அவளைச்சேர்ந்து,

169. சூர் உறு மஞ்ஞையின் நடுங்க—தெய்வமேறின மயில்போலெ நடுங்காநிற்க,

169 - 71. [வார்கோ, லுடுவுறும் பகழி வாங்கிக் கடுவிசை, யண்ணல் யானை யணிமுகத் தழுத்தலின்:] வார் கோல் உடு உறும் கடு விசை பகழி வாங்கி அண்ணல் யானை அணி முகத்து அழுத்தலின்—நெடிய கோலையுடைய உடுச்சேர்ந்த கடியவிசையினையுடைய அம்பை நிரம்பவலித்துத் தலைமையினையுடைய யானையினது அழகியமுகத்தே எய்கையினாலே,

உடு - நாணைக்கொள்ளுமிடம்.

172 - 5. [புண்ணுமிழ் குருதி முகமபாய்ந் திழிதரப், புளளி வரிநுதல் சிதைய நில்லா, தயர்ந்துபுறங் கொடுத்த பினனர் நெடுவே, எணங்குறு மகளிராடுகளங் கடுப்ப:]

புள்ளி வரி நுதல் சிதைய புண் உமிழ் குருதி முகம பாய்ந்து நெடு வேள் அணங்கு உறு மகளிர் ஆடு களம் கடுப்ப இழிதர—புள்ளியினையும் புகரினையுமுடைய மத்தகம் அழகழியும்படி அம்புபட்டு உருவின புண்களால் உமிழப்படுங் குருதி முகத்தேபரந்து *முருகனால்வருத்தலுற்ற மகளிர்க்கு †மறியறுத்தாடுங் களத்திற் குருதி குதிக்குமாறுபோலக் குதிக்கையினாலே,

அயர்ந்து நில்லாது புறம் கொடுத்த பினனர்—தன்னைமறந்து ஆண்டுநிற்றலாற்றாது முதுகிட்டுப்போன பின்பு,

இதனாலும் ஏதிடுகூறினாள்.

மகளிராடுங்களம் கடப்பமாலைவளைத்தாற்போல மிகவும் கடப்பமாலைவளைத்தவென்பாருமுளர்.

176 - 7. ‡திணி நிலை கடம்பின் திரள் அரை வளைஇய துணை அறை மாலையின் கை பிணி விடேம — திண்ணிய நிலையினையுடைய கடம்பினது திரண்டமுதலை நெருங்கச்சூழ்ந்த மகளிரொழுங்கிற்கு ஒப்புசசாற்றுதலையுடைய மாலைபோலே கைகோத்தலை விடேமாய்,

178. நுரை உடை கலுழி பாய்தலின் — யாற்றின் நுரையையுடைய பெருக்கிலே குதிக்கையினாலே,

178 - 9. உரவு திரை அடும் கரை வாழையின நடுங்க—அதனிடத்துப் பரக்கின்ற திரைமோதி இடிகரையினின்ற வாழைபோலே சால்தளர்ந்து பின்னர் ஒழுகினேமாக, அதுகண்டு,

179 - 81. [பெருந்தகை, யஞ்சி லோதி யசையல் யாவது மஞ்ச லோம்பு நின் னணிநல நுகர்கென:] பெருந்தகை அம் சில் ஓதி அசையல் நின் அணி நலம் நுகர்கு யாவதும் அஞ்சல் ஓம்பு என—பெரிய தகுதிப்பாடுடையவன்,

* நஞ்சை. 132. † மறி - ஆடு. ‡ பா. திண்ணிலை.

அழகிய சிலவான மயிரினையுடையாய், இங்ஙனம் காதனர்ந்தொழுகாதேயென்றெடுத்து யான் நின் அழகியநலத்தை நுகர்வேன்; நின்னைநீங்குவேனென்று சிறிதும் அஞ்சுதலைப்பரிகரியெனச் சொல்லி,

182. மாசு அறு சுடர் நுதல் நீவி—குற்றமற்ற ஒளியினையுடைய நுதலைத் துடைத்து,

182 - 3. நீடு நினைந்து என் முகம் நோக்கி நக்கனன்—நெடுநாள் இக்கள வொழுக்கம் நிகழவேண்டுமென்று நினைந்து என்முகத்தைப்பார்த்துச் சிரித்தான்;

183 - 5. [அந்நிலை, நாணு முட்கு நண்ணுவழி யடைதர, வொய்யெனப் பிரியவும் விடாஅன்:]

அந்நிலை, பின்னே கூட்டிற்று.

நண்ணு வழி *நாணும் உட்கும் அடைதர ஒய்யென பிரியவும் விடான்—அங்ஙனம் அவன் அணுகாநின்றவிடத்துத் தனக்கு இயல்பாகியநாணமும் அச்சமும் அவ்விடத்தேவந்து தோன்றுகையினாலே விரையத் தன்னிடத்து நின்றும் இவள் நீங்கவும் விடானாய்,

185 - 6. [கவைஇ, யாக மடைய முயங்கலின்:] அ நிலை (183) கவைஇ ஆகம் அடைய முயங்கலின்—அங்ஙனம் நின்றநிலையிலே கையாலேயணைத்து இவன் மார்பு தன்மார்பிலே ஒடுங்கும்படி தழுவுகையினாலே,

இதனால் எதிடும் வேட்கையுரைத்தலும் கூறினாள்.

186 - 7. [அவ்வழிப், பழுமிள குக்க பாறை நெடுஞ்சுனை:]

பழு மிளகு உக்க பாறை நெடு சுனை—பழுத்தமிளகு சிந்திக்கிடக்கின்ற கற்பாறையிடத்து நீண்டசுனையிலே,

188. முழு முதல் கொக்கின் தீ கனி உதிர்ந்தென—பெரிய அடியினையுடைய மாவினுடைய இனியபழங்கள் உதிர்ந்தனவாக அப்பழத்தாலும்,

189 - 90. [புள்ளெறி பிரசமொ டீண்டிப் பலவி, னெகிழ்ந்துகு நறும் பழம் விளைந்த தேறல்:]

பலவின் நெகிழ்ந்து உகு நறு பழம்—பலவினுடைய விரிந்து தேன்பரக்கின்ற நறியபழத்தாலும்,

விளைந்த தேறல்—உண்டான கட்டெளிவு,

புள் எறி பிரசமொடு ஈண்டி—நிரம்புதலால் தன்னை நுகர்கின்ற ஈயினைத் தள்ளியுகுத்த தேனாலே வந்துதிரளுகையினாலே.

191. நீர் செத்து அயின்ற தோகை—தனக்கு எளிய நீராகக்கருதி அத்தேறலையுண்ட மயில்,

191 - 2. [வியலூர்ச், சாறுகொ ளாங்கண் விழவுக்கள நந்தி:] சாறு கொள் ஆங்கண் வியல் ஊர் விழவு களம் நந்தி—விழாக்கொள்ளுதற்குரிய அவ்விடங்களையுடைய அகற்சியையுடைய ஊர்களில் விழாக்கொள்ளுதலையுடைய களத்தே மிக்கு,

---

* இப்புத்தகம், 357 - ஆம் பக்கம் (‡) பார்க்க.

ஆங்கணென்றது கோயில்களை.

193. அரி கூட்டு இன் இயம் கறங்க ஆடும் மகள்—அரித்தெழுகின்ற ஓசையைக்கூட்டுதலையுடைய இனிய வாச்சியங்களொலிப்ப ஆடுகின்றமகள்,

194. கயிறு ஊர் பாணியின் தளரும் சாரல்—கழாய்க்கயிற்றிலே ஏறி ஆடுகின்ற தாளத்தினால் தான் ஆற்றாது தளருமாறுபோலத் தளருஞ்சாரல்,

தேறலயின்ற தோகை கூத்தாட ஆற்றாது தளருஞ் சாரலையுடைய குன்றென்க.

இதற்கு *உள்ளுறையுவமங் கொள்ளுமாறு —மிளகு உக்கபாறை அந்நிலத்துமாக்களுறைகின்ற ஊராகவும், நெடுஞ்சுனை தலைவன் குடியாகவும், மாம்பழத்தாலும் பலாப்பழத்தாலும் விளைந்ததேறல் தந்தையாலும் தாயாலுமுளனாகிய தலைவனாகவும், பிரசம் இவரைக்கூட்டின பால்வரைதெய்வமாகவும், அதனையுண்டமயில் உயர்ந்த தலைவனைத் தன்குலத்திற்கு ஒத்தானாகக்கருதி நகர்ந்த தலைவியாகவும் அத்தேறலிற்பிறந்த களிப்புக் களவொழுக்கத்தாற்பிறந்த பேரின்பமாகவும் மயில் ஆடவாற்றாததன்மை வருந்திக்குறைந்த தன்மையாகவும் உள்ளுறையுவமங்கொள்க.

195 - 7. [வரையர மகளிரிற் சாஅய் விழைதக, விண்பொருஞ் சென்னிக் கிளைஇய காந்தட், டண்கம ழலரி தாஅய்] விண் பொரும் சென்னி கிளைஇய காந்தள் தண் கமழ் அலரி வரை அரமகளிரில் சாஅய் விழைதக தாஅய்—விண்ணைத்தீண்டுகின்ற சிகரங்களிலே கிளைத்த செங்காந்தளினுடைய குளிர்ந்த மணக்கின்ற பூக்கள் கீழே வரையரமகளிர் பரந்து விளையாடுதலிற் றங்கலம் சிறிதுகெட்டு விரும்புதல்தகும்படி கீழேவந்து பரந்து.

197 - 9. நல் பல வம்பு விரி களத்தின் கவின் பெற பொலிந்த குன்றுகெழு நாடன்—நன்றாகிய பலவாகிய கசகப்பரந்த களம்போலே அழகுபெறப் பொலிவுபெற்ற மலைபொருந்தின நாடன்,

உயர்ந்தநிலத்தேநின்று மணக்கின்ற காந்தள் வரையரமகளிராற் கீழ்நிலத்தே பரந்து அவ்விடத்தைக் கச்சவிரித்தாற்போல அழகுபெறுத்துமென்றதனால், நம் மிலுயர்ச்சியையுடைய தலைவன் நமது நல்வினையால் தனதுபெருமைகள் தானுமொழிந்து இவ்விடத்தே வந்துகூடி நமக்கும் உயர்ச்சியுளதாக்கி நம்மை அழகு பெறுத்துகின்றானென்று உள்ளுறையுவமமெய்திற்று.

199. எம் விழைதரு பெருவிறல்—எம்மை எப்பொழுதும் விரும்புதலைத் தருகின்ற பெரியவெற்றியையுடையவன்,

200. அவ்வழி (186) உள்ளம் தன்மை யுள்ளினன் கொண்டு—தான் முயங்குகையினாலே அப்பொழுது இவளுள்ளத்து நிகழுந்தன்மை மேல் வரைந்துகொண்டு இல்லறநிகழ்த்துதலாயிருக்குமென்று நினைந்தனனாய் அதனை உட்கொண்டு,

* உள்ளுறையுவமத்தினியல்பை, "உள்ளுறையுவமம்" (தொல். அகத். 46) என்னுஞ் சூத்திரமுதலியவற்றாலுணர்க.

அவ்வழி, இவ்கேட்டிற்று.

201 - 3. [சாறயர்ந் தன்ன மிடாஅச் சொன்றி, வருநர்க்கு வரையா வள நகர் பொற்ப, மலரத் திறந்த வாயில் பலருண:]

பலர் உண மலர திறந்த வாயில் வளம் நகர்—பலரும்வந்து உண்ணும்படி அகலக் கதவு திறந்துகிடக்கின்ற வாசலையுடைய வளநகர்,

மிடா சொன்றி வருநர்க்கு வரையா சாறு அயர்ந்தன்ன வளம் நகர் பொற்ப — மிடாச்சோற்றை *வருவார்க்கெல்லாம் வரையாமலிடுகின்ற விழாக் கொண்டாடினாற்போன், செல்வத்தையுடைய அகம் பொலிவுபெறும்படி,

முன்புள்ள இயல்புகூறிற்று.

204. பைந்நிணம் ஒழுகிய நெய் மலி அடிசில்—பசுத்த நிணமொழுகின நெய்மிக்க அடிசிலை நீ இடுகையினாலே.

205 - 6. வசை இல் வான் திணை புரையோர் கடும்பொடு விருந்து உண்டு எஞ்சிய மிச்சில்—குற்றமில்லாத உயர்ந்தகுலத்திற்பிறந்த உயர்ந்தோர் தமதுசுற்றத்தோடே விருந்துண்டு மிக்க அடிசிலை,

206. பெருந் தகை—பெரிய தகைமைப்பாடுடையவன்,

207 - 8. நின்னோடு உண்டலும் புரைவது என்று ஆங்கு அறம் புணையாக தேற்றி—நீ இடுகையினாலே யானுண்டலும் உயர்ந்ததென்றுசொல்லி அப்பொழுது இல்லறம் தங்களைக்கரையேற்றுவதாகத் தெளிவித்து,

ஓடு ஆலாக்குக.

208 - 10. பிறங்கு மலை மீமிசை கடவுள் வாழ்த்தி கைதொழுது ஏமுறு வஞ்சினம் வாய்மையின் தேற்றி—பெரியமலையில் மிக உயர்ந்தஇடத்தேயுறைகின்ற முருகனையும்வாழ்த்தி வணங்கி அவன்முன்னே இவள் மயக்கமுறுதற்குக் காரணமான வஞ்சினத்தை உண்மையால தெளிவித்து,

வஞ்சினம் - பிரியின் அறனல்லதுசெய்தேனாவேனென்னுமொழி. முன் றேற்றாதலின், ஏமுறுவஞ்சினமென்றார்.

211. அம் தீ தெள் நீர் குடித்தலின் நெஞ்சு அமர்ந்து—அம்மலையில் அழகிய இனிய தெள்ளிய அருவிநீரை அவன்குடிக்கையினாலே இவள்நெஞ்சு சூளுறவிலேபொருந்தி,

நீர்குடித்தலும் ஒருசூளுறவென்று கொள்க.

நெஞ்சமைந்தென்றும் பாடம்.

212 - 4. [அருவிட ரமைந்த களிறுதரு புணர்ச்சி, வானுரி யுறையுள் வயங்கியோ ரவாவும், பூமலி சோலை யப்பகல் கழிப்பி:] வான் உரிய உறையுள் வயங்கியோர் அவாவும் அரு விடர் அமைந்த பூ மலி சோலை களிறு தரு புணர்ச்சி அ பகல் கழிப்பி—ஆகாயத்திடத்தே தமக்குரிய இருப்பினையுடைய விளங்

* பொருந. 1. 2.

மெ தெளிர்த்திருப்பும் அரிய *முழைஞ்சுகளினிடத்தே பொருந்தின பூமிக்
கீழ்மேலே கலிதகுட்டின கூட்டத்தை அன்றைப் பகற்பொழுதெல்லாம்
போக்கி,

உரிய உறைவுள், விகாரம்.

உண்மைசெப்புங்கிளவி கூறினள்.

215 - 6. [எல்லே செல்ல வேழர் பிறைஞ்சிப். பல்கதிர் மண்டிலஞ் சுல்
சேப்பு மறைய:] பல் கதிர் மண்டிலம் எழ் ஊர்பு எல்லே செல்ல இறைஞ்சி கல்
சேர்பு மறைய—பலகிணங்களையுடைய ஞாயிறு எழுகுதிரையூர்ண்ட தேரை
யேறிப் பகற்பொழுதுபோம்படி தாழ்ந்து அத்தகிரியைச்சேர்ந்து மறைகையி
னாலே,

217. மான் கணம் மரம் முதல் தெவிட்ட—மான்றொள் மரத்தடிகளிலே
நிற்ப,

தெவிட்டல் அசையிதலுமாம்.

217 - 8. ஆன் கணம் கன்று பயிர் குரல மன்று நிறை புகுதர—பசுவி
னுடையநிரள் கன்றுகளையழைக்குங் குரலையுடையவாய் மன்றகள்ளிறையப்
புகுதலைச்செய்ய,

219 - 20. எக்கு வயிர் இசைய கொடு வாய் அன்றில் ஒக்கு இரு
பெண்ணை அகம் மடல் அவ—ஊதுகின்ற கொம்புபோன்ற ஓசையையுடைய
வளைந்த வாயையுடைய அன்றில் உயரும் பெரியபனையில் உண்மடலிலேயிரு
ந்து பேட்டையழைக்க,

221. பாம்பு மணி உமிழ—பாம்பு தான்மேய்தல் காரணமாகத் தன்னி
டத்துமாணிக்கத்தை ஈன,

221 - 2. [பல்வயிற் கோவலர், †ஆம்பலந் தீங்குழற் றென்னிளி பயிற்ற:]
கோவலர் பல் வயின் ஆம்பல் அம தீ குழல் தென் னிளி பயிற்ற—இடையர் பல
இடங்களினுமின்று ஆம்பலென்னும் பண்ணினையுடைய அழகிய இனிய குழ
லிடத்துத் தெளிந்த ஓசையைப் பலகாலுமெழுப்ப,

223. ஆம்பல் ஆய் இதழ் கூம்பு விட—ஆம்பலினது அழகியஇதழ்கள்
தனையகிழ,

223 - 5. [வளமனைப், பூந்தொடி மகளிர் சுடர்நுதலைக் கொளுவி, யந்தி
யந்தண ரயர:]

அந்தணர் அந்தி அயர—பார்ப்பார் அந்திக்காலத்துச் செய்யுந்தொழில்களை
கிகழ்த்த,

வளம் மனை பூ தொடி மகளிர் சுடர் நுதலை கொளுவி அந்தி அயர - செல்வத்
தையுடைய மனைகளிற் பொலிவுபெற்ற தொடியினையுடைய மகளிர் விளக்கை
அவ்விடத்தேகொளுத்தி அந்திக்காலத்திற் றொழிலைகிகழ்த்த,

---

* முழைஞ்ச - குகை.

† ஐங்குறு. 215. "ஆம்பலந் தீங்குழல் கோமோ தோழி" (சிலப். ஆய்ச்சியர்.)

225 - 6. கானவர் விண் தோய் பணவைமிசை ஞெகிழி பொத்த—அக் காட்டில்வாழ்வார் விண்ணைத்தீண்டுகின்ற பரணின்மேலே தீக் டைநோலாலே நெருப்பைப்பிறப்பித்து எரிப்ப,

227. வானம் மா மலை வாய் சூழ்பு கறுப்ப—மேகம் பெரிய மலையிடத்தைச்சூழ்ந்து கறுப்ப,

227 - 8. கானம் கல்லென்று இரட்ட—காட்டிலுள்ள விலங்குகளெல்லாம் கல்லென்னுமோசையையுடையவாய் ஒன்றற்கொன்று மாறிக்கூப்பிட,

கானம், ஆகுபெயர்.

228. புள்ளினம் ஒலிப்ப—பறவைகள் குடம்பைக்கண்ணேநின்று ஆரவாரிக்கையினாலே,

229 - 30. *[சினைஇய வேந்தன் செல்சமங் கடுப்பத், துனைஇய மாலை துன்னுதல் காணூஉ:]

தெவிட்டப் (217) புகுதர (218) அகவ (220) உமிழப் (221) பயிற்றக் (222) கூம்புவிட (223) அயரப் (225) பொத்தக் (226) கறுப்ப (227) இரட்ட ஒலிப்பச் (228) செல்சமங்கடுப்ப (229) மாலை துன்னுதல்கண்டு (230) என முடிக்க.

இவ்வெச்சங்கள் எதிர்காலமுணர்த்தின. †"நிலனொருங்கு மயங்குத லின்றென மொழிப." எனவே காலமிரண்டு மயங்குமென்றலிற் குறிஞ்சியின் மாலைக காலங்கூறினார்.

231 - 4. [நேரிறை முன்கை பற்றி நுமாதர, நாடறி நன்மண மயர்கஞ் சின்னாட், கலங்க லோம்புமி னிலங்கிழை யீரென, வீர நன்மொழி தீரக் கூறி.]

இலங்கிழையீர்—விளங்குகின்ற பூணினையுடையீர்,

நுமர் நேர் இறை முன்கை பற்றி தர நாடு அறி நல் மணம் அயர்கம்—நும்முடையசுற்றத்தார் நுமது நேரிய இறையினையுடைய முன்கையைப்பிடித்து எமக்குத்தர நாட்டிலுள்ளாரெல்லாமறியும் நன்றாகியகலியாணத்தினைப் பின்பு நிகழ்த்துவேம்;

சில் நாள் கலங்கல் ஓம்புமின் என ஈரம் நல் மொழி தீர கூறி—யாம் இக்கள வொழுக்கத்தாற்பெறும் பேரின்பம்பெறுதற்குச் சிறிதுநாள் இங்ஙனம் ஒழுகாநின்றேமென்று நெஞ்சுகலங்குதலைப் பாதுகாப்பீராகவென்று அருளுடைத்தாகிய நல்லமார்த்தையை இவள்நெஞ்சில் வருத்தந் தீரும்படி சொல்லி,

235. துணை புணர் ஏற்றின் எம்மொடு வந்து—ஆவைப்புணர்ந்த ஏறு போலே விடாமல் எம்முடனேகூடவந்து,

---

* இதற்கு உரை கிடைத்திலது; சினைஇய - கோபித்த. துனைஇய - விரைந்த.

† தொல்காப்பியம், அகத்திணையியல், சூ. 12.

236 - 7. துஞ்சா முழவின் முது ஊர் வாயில் உண் துறை நிறுத்து பெயர்ந்தனன்—ஓசையை ஒருகாலுமறாத முழவினையுடைய பழைய நம்மூர் வாசலில் பலரும் நீருண்ணுந்துறையிலே எம்மைநிறுத்தி மீண்டுபோனான்;

இதனால் வேட்கையுரைத்தல் கூறினாள்

237 - 9. அதன் கொண்டு அன்றை அன்ன விருப்போடு என்றும் இரவரு மாலையன் — அப்புணர்ச்சிதொடங்கி அம்முதனாள்போன்ற விருப்பத்தோடே எந்நாளும் இரவுக்குறியிலே வருதலை தனக்கு இயல்பாகவுடையன்

ஏகாரம், ஈற்றசை.

239 - 41. வரு தோறும் காவலர் சடுகினும் கதம் நாய் குரைப்பினும் நீ துயிலெழினும் நிலவு வெளிப்படினும்—அங்ஙனம் வரும்போதெல்லாம் ஊர் காவலர் கடுகிக்காத்தாராயினும் கோபத்தையுடைய நாய் குரைத்ததாயினும் நீ துயிலுணர்ந்தாயாயினும் நிலவு வெளியாக எறிததாயினும்.

242. வேய் புரை மெல் தோள் இன் துயில் பெறாஅன் (243)—மூங்கிலை யொத்தமெல்லிய தோளிற்பெறும் இனியதுயிலைப் பெறாதுபோவன்;

243. பெயரினும் முனியல் உறாஅன்—யாங்கள் குறியல்லதனைக் குறியாகக்கருதிச் செல்லாநின்று மீண்டு மனையிடத்தேபுகினும் அதற்கு வெறுத்தலைச்செய்யான்;

244. இளமையின் இகந்தன்றும் இலனே—அவன்றான் இளமைப்பருவத்தைக் கடந்ததுமிலன்;

244 - 5. [வளமையிற், றன்னிலை தீர்ந்தன்று மிலனே] வளமையின் என்றும் (242) தன் நிலை தீர்ந்தன்றும் இலனே—நற்குணங்களைத் திரித்தற்குரிய *செல்வச்செருக்கான் எந்நாளும் தன்குலத்திற்குரிய நற்குணங்களின் நீங்கியதுமிலன்;

ஏகாரங்கள், ஈற்றசை.

245 - 6. கொன் ஊர் மாயம் கரவின் இயல்பு நினைஇ தேற்றி—†அவர் முதலியவற்றான் அச்சத்தையுடைய இவ்வூரின்கண்ணே தனக்குப் பொய்யாயிருக்கின்ற இரவுக்குறியிலே கூடுதற்குவருகின்ற வரவினது தன்மையை இஃது ஒழுக்கமன்றென்று நினைத்து அவன் வரைந்துகொள்ள இல்லறநிகழ்த்துதலே நல்லொழுக்கமென்று துணிகையினாலே.

247 - 8. [நீரெறி மலரிற் சாஅ யிதழ்சோரா, வீரிய கலுழுமிவள் பெரு மதர் மழைக்கண்:] இவள் பெரு மதர் மழை கண் நீர் ஏறி மலரின் சாஅய்

* "அறநி ரம்பிய வருளுடை யருந்தவர்க் கேனும், பெறல ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்" (கம்ப மந்தரை. 70.); 'செல்வம்வந் துற்ற காலைத் தெய்வமுஞ் சிறிது பேணார், சொல்வன வறிந்து சொல்லார் சுற்றமுந் துணையு நோக்கார், வெல்வதே நினைவ தல்லால் வெம்பகை வலிதென் றெண்ணார், வல்வினை நினைவு மோரார் மண்ணின்மேல் வாழு மாந்தர்" (வி - பாரதம், திருட்டினன். 143.)

† அவர் - பலரறிந்துகூறும்பழிமொழி.

இதழ் சோரா ஈரிய கலுழும்—இவளுடைய பெரிய மதர்த்த குளிர்ந்த கண்கள பெருந்துளி எறிந்துபெய்தமலர்போலே அழகுகெட்டு இமைசோர்ந்து ஈரத்தினையுடையவாய்க் கலங்காநிற்கும்;

249 - 61 [ஆகத தரிப்பனி யுறைப்ப நாளும், வலைப்படு மஞ்ஞையி னலஞ்செலச் சாஅய் நினைததொறுங கலுழுமா லிவளே கங்கு, வளைச்செறி யுழுவையு மாளியு முளியமும, புழற்கோட் டாமான் புகல்வியுங் களிறும், வலி யிற் றப்பும் வனகண் வெஞ்சினத, துருமுஞ் சூரு மிரைதே ரரவமு, மொடுங கிருங் குட்டத தருஞ்சுழி வழங்குங, கொடுந்தாண் முதலையு மிடங்கருங் கராமு, நாழிலு மிழுக்கு மூழடி முட்டமும, பழுவும் பாந்தளு முளப்படப் பிறவும, வழுவின் வழாஅ விழுமமவா, குழுமலை விடரக முடையவா லெனவே·]

இவள் நினைத்தொறும வலை படு மஞ்ஞையின நலம் செல சாஅய் அரி பனி நாளும் ஆகதது உறைபப கலுழும் (248)— இவள் அங்ஙனம் கண் அழுகின்ற தற்கு மேலே அவர்வருகின்ற மலை இடுமபையுடையவாயிருக்குமென்று நினைக குந்தோறும வலையிலகப்பட்டமயில்போலே தனனலம்போம்படி நுணுகிக் கண ணில் அரிததுவீழகினறநீர் நாள்தோறும் மார்பிலே துளிப்பக் கலங்காநிற்கும்,

கங்குல்—இராக்காலத்து,

அளை செறி உழுவையும்—முழைஞ்சிடததிலே செறியும புலிகளும்,

யாளியும—யாளிகளும்,

உளியமும்—கரடியும்,

புழல் கோடு ஆமான் புகல்வியும—உள்ளுப்பொய்யான கொம்பையுடைய ஆமானிலேறும்,

களிறும்—யானையும்,

வலியின் தப்பும் வனகண் வெ சினத்து உருமும்—வலியினாற்கெடுக்கும தறுகணமையையுடைத்தாகிய வெவ்விய சினததையுடைய உருமேறும்,

சூரும்— கொடுந்தெய்வமும்,

இரை தேர் அரவமும—இரை தேடி ததிரியும் பாம்பும,

ஒடுங்கு இரு குட்டதது அரு சுழி வழங்கும் கொடு தாள் முதலையும இடங்கரும கராமும—புடைபட்ட கரிய ஆழததிடததுப் போதற்கரிய சுழியிடத தேதிரியும் வளைந்ததாளையுடைய முதலையும இடங்கரும் கராமும்,

இவை மூன்றும் சாதி விசேடம்

நாழிலும்—வழிபறிப்பார கொனறுகுவிக்குமிடங்களும்,

நாழில் - கொடிப்பிணககெனபாருமுளா

இழுக்கும்—வழுக்குநிலமும,

ஊழ் அடி முட்டமும—முறைபடிப்பாடாயப் பினபு வழிமுட்டாயிருக்கும இடங்களும,

பழுவும்—பிசாசும்,

பார்தளும்—பெரும்பாம்பும்,

உளப்பட பிறவும் வழுவின் வழாஅ விழுமம—உழுவைமுதலாக எண்ணப்பட்ட இவையெல்லாமுட்பட வேறும தப்புஞ்செயலிற் றப்பாத இடும்பைதருவனவற்றை,

விழுமஞ்செய்வனவற்றை விழுமமென்றார்; இஃது ஆகுபெயர்.

அவர் குழு மலை விடர் அகம் உடைய ஆல் என—தலைவருடைய கிளையையுடைத்தாகிய மலையின் முழைஞ்சிடம் உடையவாயிருக்குமென்று.

அன்னாய் வாழி; அன்னாய் யான்கூறுகின்றதனை விரும்புவாயாக (1); நீயும் எய்யாமையலையாகி வருந்துதி (8); இவளும் (26) ஏனையுலகத்தும் இயைவதாலெனக்கூறி (24) மெலியும் (26), யானும (29) சானறோர்போல (28) வருந்தாகின்றேன் (29); எண்ணாது (31) எமியேந் துணிந்த அருவினை (32) நிகழ்ந்தவண்ணம் நீயுணரச் (33) செப்புதலையமைந்தேன்; அதுகேட்டுச் சினவாதிமோ (34); நினையிற் படுபுள்ளோப்பி (38) வருதியரென நீ போகவிடுகையினாலே (39) யாங்களும்போய் இதணமேறிக (41) கிளிகடிமரபினவற்றைவாங்கி (44) ஒட்டிக் (101) கொண்மூப் (50) பொழிந்தென (53) நெடுங்கோட்டிழி தருந் தெண்ணீ (54) ரருவி (55) யாடிப (56) பாய்கனைகுடைவுழிப் (57) பாயம்பாடிக் (58) கூந்தலைப்பிழிவனநதுவரிச (60) சிவந்தகணணைமாய் (61) மலிவனமறுகிப் (97) பரேரமபுழகுடனே (96) காந்தள் முதலியவற்றையும் பிறவற்றையும் (62 - 95) பாறையிலேகுவித்துத (98) தெளவிளி பயிற்றி (100) ஒப்பியும் (101) தழைதைஇ உடுத்துக (102) கோதையை (103) முச்சியிலே கட்டிச (104) செயலைத் (105) தணணிழலிலே யிருந்தனமாக (106), குன்றுகெழுநாடனாகிய எம்பெருவிறல (109) அணிபெறவந்து (136) இளையீர், இறந்த (141) கெடுதியுமுடையேனென்றனன, அதனெதிர் (142) சொல்லேமாதலிற் கலங்கி (143) மெல்லியலீர சொல்லலுமபழியோவெனசசொல்லி (145) ஓசசி (150) அவித்துச (151) சொல்லற்பாணிநின்றனனாக (152), வேழம் எதிர்கருகையினாலே (165) விரைநகவற்பொருநதி (168) நடுங்காநிற்கப் (169) பகழியைவாங்கி (170) அணிமுகததழுததலின (171), அது புறங்கொடுததபின (174) கலுழிபாய்தலின் (178) வாழையினடுங்கினமாக, அதுகண்டு பெருந்தகை (179) எடுத்து அஞ்சலோமபெனசசொல்லி (181) நீவி நினைந்து (182) என்முகநோக்கி நக்கனன் (183); அவ்வழி நாணும உட்கும் அடைதருகையினாலே (184) இவள்நீங்கவும் விடானாய் (185) அந்நிலை (183) முயங்கலின், அவ்வழி (186) இவளுள்ளத்தன்மை யுள்ளினனாய அதனையுட்கொண்டு (200) விருந்துண்டெஞ்சிய மிசசிலை (206) நீயிடுகையினாலே யானுண்டலும் புரைவதென்று சொல்லித் (207) தேற்றிப் (208) பெருந்தகை (206) கடவுளும வாழ்ததிக்கைதொழுது (209) வஞ்சினம்வாய்மையிற் றேறறிக (210) தெண்ணீர்குடிததலின் நெஞ்சமர்ந்து (211) சோலையிலே (214) களிறுதருபுணர்ச்சியைக் (212) கழிப்பி (214) மண்டிலம் மறைகையினாலே (216) மாலைதுன்னுதல் கண்டு

(230) இலங்கிழையீர், கலங்கலோம்புமினென (233) ஈரநன்மொழிகூறி (234) எம்மொடுவந்து (235) உண்துறைநிறுத்துப் பெயர்ந்தனன்; அதற்கொண்டு (237) என்றும் (238) இரவில்வருமாலையன்; வருதோறும் (239) கடுகினும் குரைப்பினும் (240) துயிலெழினும வெளிப்படினும் (241) இன்றுயில் (242) பெறாமற் போவன்; அதுவேயன்றிப் பெயரினும் முனியலுறான் (243); இகந்தன்றுமிலன் (244); என்றும் (242) தீர்ந்தன்றுமிலாதவன் (245) மாயவரவினியல்புநினைந்து தேற்றுகையினாலே (246) இவன்கலுழும் (248); அங்ஙனம் அழுகின்றதற்குமேலே அவர்வருகின்ற (260) குழுமலைவிடரகம் (261) விழுமம் (260) உடையவென (261) நினையுந்தோறும் (251) சாஅய் (250) உறைப்பக் (249) கலங்காநிற்கும் (251); இதுகாண் நல்வினை நிகழ்ந்தவண்ணமென்றாளென வினைமுடிக்க.

ஆரியவரசன்பிரகத்தனைத் தமிழறிவித்தற்குக் கபிலர்பாடிய குறிஞ்சிப் பாட்டிற்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்தவுரை முற்றிற்று.

வெண்பா.

1. நின்குற்ற மில்லை நிரைதொடியும் பண்புடைய
ளென்குற்றம் யானு முணர்கலேன் - பொன்குற்
றருவி கொழிக்கு மணிமலை நாடன்
றெரியுங்காற் றீய திலன்.

2. ஆற்றல்சால் கேள்வி யறம்பொரு ளின்பத்தைப்
போற்றிப் புனைந்த பொருளிற்றே - தேற்ற
*மறையோர் மணமெட்டி னைந்தா மணத்திற்
குறையாக் குறிஞ்சிக் குணம்.

* இப்புத்தகம், 357 - ஆம் பக்கம்பார்க்க.

ஒன்பதாவது

*பட்டினப்பாலை.

வசையில்புகழ் வயங்குவெண்மீன்
றிசைதிரிந்து தெற்கேகினுந்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினுந் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்டெழிக்கும்
விளைவறா வியன்கழனிக்
கார்க்கரும்பின் கமழாலைத்
தீத்தெறுவிற் கவின்வாடி
நீர்ச்செறுவி னீணெய்தற்
பூச்சாம்பும் புலத்தாங்கட்
காய்ச்செந்நெற் கதிரருந்து
மோட்டெருமை முழுக்குழவி
கூட்டுநிழற் றுயில்வதியுங்
கோட்டெங்கிற் குலைவாழைக்

---

* "பட்டினப்பாலையென்னும் வஞ்சிநெடும்பாட்டு ஆசிரியவடிவிரவிவந்த ஏந்திசைத்தூங்கல் விரவியற்குறளடிவஞ்சிப்பா" (யா - வி. செய். சூ. 37 - உரை); "பட்டினப்பாலையென்னும் வஞ்சிநெடும்பாட்டினுள் ஆசிரியவடிபயின்றுவந்தன; கலியடியும் வெள்ளடியும் அருகினவெனக்கொள்க" (யா - கா. ஒழிபு. 4-உரை; இ - வி. சூ. 745 - உரை.)

1 - 7. மதுரை. 107 - 9; "இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினு, மந்தண் காவிரி வந்துகவர் பூட்ட", "தென்றிசை மருங்கின வெள்ளி யோடினும், வயலக நிறைய" (புறநா. 35, 117); "விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும், ... கயவாய் நெரிக்குங் காவிரி" (சிலப். 10: 103 - 8.)

13. பா. கதிரருந்தி.

14 - 5. குழவியென்னுமிளமைப்பெயர் எருமைக்குமுரித்தென்பதற்கு இவ்வடிகள் மேற்கோள்; (தொல். மரபு. சூ. 20 - பேர்.)

16. கோள் கொத்தென்பதற்கு இவ்வடி மேற்கோள்; (நஞ்சை. 85 உரை.)

காய்க்கமுகிற் கமழ்மஞ்ச
ளினமாவி னிணர்ப்பெண்ணை
முதற்சேம்பின் முளையிஞ்சி
யகனகர் வியன்முற்றத்துச்
சுடர்நுதன் மடநோக்கி
னேரிழை மகளி ருணங்குணாக் கவரும்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை
பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டு
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்
விலங்குபகை யல்லது கலங்குபகை யறியாக்
கொழும்பல்குடிச் செழும்பாக்கத்துக்
குறும்பல்லூர் நெடுஞ்சோணாட்டு
வெள்ளையுப்பின் கொள்ளைசாற்றி
நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி
பணைநிலைப் புரவியி னணைமுதற் பிணிக்கும்
கழிசூழ்படப்பைக் கலியாணர்ப்
பொழிற்புறவிற் பூந்தண்டலை
மழைநீங்கிய மாவிசும்பின்

---

22. "வஞ்சியுள், நேரிழை ..... கவருமென்ற ஆசிரியவடியினை நாலசைச்சீர்காட்டவேண்டுவார் இருசீரடியாக உரைப்பினும் அவற்றிற்குத் தூங்கலோசையின்றாகலானும் சீர் தம்முட் புணர்ந்திறுதலின்மையானும் வஞ்சிச்சீர் அறுபது காட்டுகின்றவழி யாண்டும் நேர்பசை நிரைபசைகள் அலகுபெறாமையானும் தொல்காப்பியனார் கொள்ளார்" (தொல். செய். சூ. 12 - ந); "பட்டினப்பாலையென்னும் வஞ்சிநெடும்பாட்டினுள், 'நேரிழை ..... கவரும்' என்றித்தொடக்கத்தன ஆசிரியவடி" (யா - வி. அடியோத்து. சூ. 9); நேரிழைமகளிர்: ௸ செய். சூ. 5. மேற்கோள்.

22 - 3. வஞ்சிப்பாவில் ஆசிரியவடியும் வெண்பாவடியும் விரவிவந்ததற்கு முறையே இவ்வடிகள் மேற்கோள்; (தொல். செய். சூ. 111 - இளம்; ௸ ௸ சூ. 71 - பேர்; யா - கா. ஒழிபு, 4 - உரை; இ - வி. சூ. 745 - உரை.)

23. நன். மயிலை. சூ. 407; நன்-வி. சூ. 408; ஆனைக்கா. காட்டு. 122.

24 - 5. பெரும்பாண். 248 - 9; குறுந். 61.

22 - 6. சீவக. 89.

28. "குறும்ப லூரயாஞ் செல்லு மாறே" (நற். 9.)

29. "வெண்க லுப்பின் கொள்ளை சாற்றி" (நற். 4; அகநா. 140.) கொள்ளைசாற்றி: (அகநா. 381.)

29 - 30. "நெல்லி னேரே வெண்க லுப்பென" (அகநா. 140.)

மதிசேர்ந்த மகவெண்மீ
னுருகெழுதிற னுயர்கோட்டத்து
முருகமர்பூ முரண்கிடக்கை
வரியணிசுடர் வான்பொய்கை
யிருநாமத் தினையேரிப்
புலிப்பொறிப் போர்க்கதவிற்
றிருத்துஞ்ஞ் திண்காப்பிற்
புகழ்நிலைஇய பெ ரிவலர
வறநிலைஇய வகனட்டிற்
சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி
யேறுபொரச் சேறுகித்
தேரோடத் துகள்கெழுமி
நீறுடிய களிறுபோல
வேறுபட்ட வினையோவத்து
வெண்கோயின் மாசூட்டுக்
தண்கேணித் தகைமுற்றத்துப்
பகட்டெருத்தின் பலசாலைத்
தவப்பள்ளித் தாழ்காவி
னவிர்சடை முனிவ ரங்கி வேட்கு
மாவுகு நறும்புகை முனைஇக் குயிறம்
மாயிரும் பெடையோ டிரியல் போகிப்
பூதங் காக்கும் புகலருங் கடிநகர்த்
தூதுணம் புறவொடு துச்சிற் சேக்கு
முதுமரத்த முரண்களரி
வரிமண லகன்றிட்டை
யிருங்கேள் வினைலைக்கற்
கருந்தொழிற் சலிமாக்கள்
கடலிறவின் சூடுதின்றும்

---

39. "இருகாமத்தினை வேரிபோலும குளங்களிலும் ..... வினையாடி" (தொல். சூத்பு. சூ. 50 - உ.)

44 - 7. "சோறு ..... ஒழுகியென்பதோவெனின், யாதென்றதனை யானே பேரியாறெனக்கொண்டு உலகிற்றனவாகாமைக்கன்றே எறபொர ..... கெழுமியென்பதாயிற்றென்பது" (தொல். உவம. சூ 10 - பேர்.)

வயலாமைப் புழுக்குண்டும்
வறளடும்பின் மலர்மலைந்தும்
புனலாம்பற் பூச்சூடியு
நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரு
நாண்மீன் விராய கோண்மீன் போல
மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇக்
கையினுங் கலததினு மெய்யுறத் தீண்டிப்
பெருஞ்சினத்தாற் புறக்கொடாஅ
திருஞ்செருவி னிகன்மொய்ம்பினோர்
கல்லெறியுங் கவண்வெரீஇப்
புள்ளிரியும் புகர்ப்போந்தைப்
பறழ்ப்பன்றிப் பல்கோழி
யுறைக்கிணற்றுப் புறச்சேரி
மேழகத் தகரொடு சிவல்விளை யாடக்
கிடுகுநிரைத் தெஃகூன்றி
நடுகல்லி னரண்போல
நெடுந்தூண்டிலிற் காழ்சேர்த்திய
குறுங்கூரைக் குடிநாப்ப
ணிலவடைந்த விருள்போல
வலையுணங்கு மணன்முன்றில்
வீழ்த்தாழைத் தாட்டாழ்ந்த
வெண்கூ தாளத்துத் தண்பூங் கோதையர்
கினைச்சுறவின் கோடுநட்டு
மனைச்சேர்த்திய வல்லணங்கினான்

---

64 - 5. இவ்வடிகள், வஞ்சிப்பாவிற் கலியடிவந்ததற்கு மேற்கோள், (தொல். செய். சூ. 111 - இளம்; யா - வி. அடியோத்து, சூ. 8; யா - கா ஒழிபு. 4 - உரை; இ - வி. சூ. 745 - உரை.)

64 - 5. தொல். செய். சூ. 108 - பேர். மேற்.

67. வலனேர்புதிரிதரு: (முருகு. 1.)

78. "பூந்தலைக் குந்தங் குத்திக் கிடுகுநிரைத்து" (முல்லை 41); "வேலூன்று பலகை" (அகநா. 131.)

82 - 3. "சிலவுக்கானல்" (மதுரை. 114); "சிலாவி னிலங்கு மணன் மலி மறுகு" (அகநா. 200.)

85. தொல். உயிர். சூ. 44. ஈ. மேற்.

86 - 7. "இனி நெய்தனிலத்தில் நுளையர்க்கு வலைவளர்தப்பின், அம்மகளிர் கிளையுடன் குழீஇச் சுறவுக்கோடு நட்டுப் பரவுக்கடன்கொடுத்தலின்

மடற்றாழை மலர்மலைந்தும்
பிணர்ப்பெண்ணைப் பிழிமாந்தியும்
புன்றலை யிரும்பரதவர்
பைந்தழைமா மகளிரொடு
பாயிரும் பனிக்கடல் வேட்டஞ் செல்லா
துவவுமடிந் துண்டாடியும்
புலவுமணற் பூங்கானன்
மாமலை யணைந்த கொண்மூப் போலவுந்
தாய்முலை தழுவிய குழவி போலவுந்
தேறுநீர்ப் புணரியோ டியாறுதலை மணக்கு
மலியோதத் தொலிகூடற்
றீதுநீங்கக் கடலாடியு
மாசுபோகப் புனல்படிந்து
மலவ னாட்டியு முரவுத்திரை யுழக்கியும்
பாவை சூழ்ந்தும் பல்பொறி மருண்டு
மகலாக் காதலொடு பகல்விளை யாடிப்
பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைக்
துணைப்புணர்ந்த மடமங்கையர்
பட்டுநீக்கித் துகிலுடுத்து
மட்டுநீக்கி மதுமகிழ்ந்து
மைந்தர் கண்ணி மகளிர் சூடவு
மகளிர் கோதை மைந்தர் மலையவு
நெடுங்கான் மாடத் தொள்ளெரி நோக்கிக்
கொடுந்திமிற் பரதவர் குரூஉச்சுட ரெண்ணவும்

ஆண்டு வருணன் வெளிப்படு மென்றார்" எனபதற்கு இவை மேற்கோள்; (தொல். அகத்திணை. சூ 5 ந - உரை), சுறவு முண்மருப பணங்கயர் வன கழிச் சூழல்" (பெரிய. திருக்குறிப்பு. 7). திருத்தணிகை. சாட்டு. 136; திருவானைக்கா. சாடு 96 பார்க்க.

95 - 6. "தாய்முலை தழுவிய குழவி போலவு, மாமலை தழுவிய மஞ்ச போலவும்" (சீவக. 100.)

108. மது: சீவக. 190.

109 - 10. மதுரை. 265; பரி. 6 20.

112. "பரதவர் திண்டிமில் விளக்கமெண்ணும்" (நற் 372).

பாட லோர்த்து நாடக நயந்தும்
வெண்ணிலவின் பயன்றுய்த்துங்
கண்ணடைஇய கடைக்கங்குலான்
மாஅகாவிரி மணங்கூட்டுந்
தூஉவெக்கர்த் துயின்மடிந்து
வாலிணர் மடற்றாழை
வேலாழி வியன்றெருவி
னல்லிறைவன் பொருள்காக்குந்
தொல்லிசைத் தொழின்மாக்கள்
காய்சினத்த கதிர்ச்செல்வன்
றேர்பூண்ட மாஅபோல
வைகறொறு மசைவின்றி
யுல்குசெயக் குறைபடாது
வான்முகந்தநீர் மலைப்பொழியவு
மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவு
மாரிபெய்யும் பருவம்போல
நீரினின்று நிலத்தேற்றவு
நிலத்தினின்று நீர்ப்பரப்பவு
மளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
யருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்
பொதிமூடைப் போரேறி
மழைபாடு சிமைய மால்வரைக் கவாஅன்
வரையாடு வருடைத் தோற்றம் போலக்

---

113. "அன்புறு கீதங் கேட்டு நாடகங் கண்ட மர்ந்தும்" (வாயு. காலவியல்பு. 4.)

114. நெடுநல். 95; "நிலவுப்பயன் கொள்ளு நெடுநிலா முற்றத்து" (சிலப். 4: 31.)

125. "உல்குடைப் பெருவழி" (பெரும்பாண் 81.)

129. பா. ஏறவும்.

139. பா. வரைபாய்வருடை.

கூருகிர் ஞமலிக் கொடுங்கா னேற்றை
பேழகத் தகரோ டெனை முன்றிற்
குறுந்தொடை நெடும்படிக்காற்
கொடுந்திண்ணைப் பஃறகைப்பிற்
புழைவாயிற் போகிடைகழி
மழைதோயு முயர்மாடத்துச்
சேவடிச் செறிகுறங்கிற்
பாசிழைப் பகட்டல்குற்
றூசுடைத் துகிர்மேனி
மயிலியன் மாலைக்கிற்
இளிமழலை மென்சாயலோர்
வளிதுழையும் வாய்பொருந்தி
போக்குவரை மருங்கி னுண்டா துறைக்குந்
காந்தளங் துடுப்பிற் கலிகுலி யன்ன
செறிதொடி முன்கை கூப்பிச் செவ்வேள்
வெறியாடு மகளிரொடு செறியத் தாஅய்க்
குழலகவ யாழ்முரல
முழவதிர முரசியம்ப
விழவரு விபலாவணைத்து
மையற விறப்பிற் றெய்வஞ் சேர்த்திய
மலாணி வாயிற் பலர்தொழு கொடியும்
வருபுன றந்த வெண்மணற் கான்யாற்
றுருகெழு கரும்பி னெண்பூப் போலக்
கூழுடைக் கொழுமஞ்சிகைத்
தாழுடைத் தண்பணியத்து
வாலரிசிப் பலிசிதறிப்
பாகுகுத்த பசுமெழுக்கிற்
காழுன்றிய கலிகடுங்கின்
மேலுன்றிய துகிற்கொடியும்
பல்கேள்வித் துவைபோகிய
தொல்லாணை கல்லாசிரிய

167. "பலழத் தின்காழ் கப்பலக் கிடுகி னுன்றி", "பலழக்கா நிழலும் பைம்பொற் பெருங்கிடுகு" (சீவக. 113, 2975); "காழுங் கிடுகும்போ னிற்கும்" (அறநெறி. 84.)

170. மதுரை. 761; கந்தி 208 - உரை.

குறம்குறித் தெடுத்த வுருகெழு கொடியும்
வெளிவிளக்குங் களிறுபோலத்
தீம்புகார்த் திரைமுன் றுறைத்
தூங்குகாவாய் துவன்றிருக்கை
மிசைக்கூம்பி னசைக்கொடியு
மீன்றடிந்து விடக்கறுத
தூன்பொரிக்கு மொலிமுன்றின்
மணற்குவவு மலர்சிதறிப்
பலர்புகுமனைப் பலிப்புதவி
னறவுகொடைக் கொடியோடு
பிறபிறவு மனிவிரைஇப்
பல்வே றுருவிற் பதாகை நீழற்
செல்கதிர் தழையாச் செழுநகர் வரைப்பிற்
செல்லா நல்லிசை யமரர் காப்பி
னீரின் வந்த நிமிர்பரிப் புரவியுங்
காவின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னுங்
குடமலைப் பிறந்த வாரமு மகிலுந்
தென்கடல் முத்துங் குணகடற் றுகிருங்
கங்கை வாரியுங் காவிரிப் பயனு
மீழத் துணவுங் காழகத் தாக்கமு
மரியவும் பெரியவு மெரிய வீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகி
னீர்காப் பண்ணு நிலதத்தின் மேலு
மேமாப்ப வினிதுதுஞ்சிக்
கிளைகலித்துப் பகைபேணாது
வலிஞர்முன்றின் மின்பிறழவும்
வலிஞர்குரம்பை மாவீண்டவுங்

---

178 - 80. பெரும்பாண். 337 - 8.

189. "தென்பௌவத்து முத்துப்பூண்டு" (புறநா. 380); "தென்கடன் முத்தும்" (சிலப். 8: 19); "வெண்டிரைத்தென்கடன்முத்தும்" (தஞ்சை. 93.)

192. பா. வெளியவீண்டி.

185 - 92. இவ்வடிகள், அரும்பொருளிவையென்பதற்கு மேற்கோள்; (சிலப். 2: 5 - அடியார்க்கு. உரை.)

கொலைகடிந்துங் களவுநீக்கியு
மமரர்ப் பேணியு மாவுதி யருத்தியு
நல்லானொடு பகடோம்பியு
நான்மறையோர் புகழ்பரப்பியும்
பண்ணிய மட்டியும் பசும்பதங் கொடுத்தும்
புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்
கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉமிகைகொளாது கொடுப்பதூஉங்குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்துவீசுந்
தொல்கொண்டித் துவன்றிருக்கைப்
பல்லாயமொடு பதிபழகி
வேறுவே றுயர்ந்த முதுவா யொக்கற்
சாறயர் மூதூர் சென்றுதொக் காங்கு
மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையு
முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே கூருகிர்க்
கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர், பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி
யருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு

---

210 - 11. "வணிகர்க்கு உரிய விரதமானன: கொள்வதூஉம் மிகைகொள்ளாது கொடுப்பதூஉங் குறைகொடாது பல்பண்டம் பகர்ந்தீதல் முதலியன" (தொல். அகத்திணை. சூ. 28 - ந. உரை); "கொடுப்பது குறையின்றிக் கொள்வது மிகையின்றி .. .. வணிகர்கண் மற்றறியார்" (விநாயக. ஈகர. 88.)

206 - 10. இவை வணிகர் குலத்திற் குன்றாமைக்கு மேற்கோள்; (சிலப் 2: 8.)

214. முதுவாய்: (முருகு. 284; சிறுபாண். 40; பட். 253; பதிற். 66.)

218. இவ்வடி வல்லிசவண்ணத்திற்கு மேற்கோள்; (தொல். செய். சூ. 217 - பேர்.)

220. "வாரே னெஞ்சம் வாய்க்கநின் வினையே" (அகநா. 131.)

223 - 4. "மாப்பயம்பின் பொறைபோற்றாது, நீடுகுழி யகப்பட்ட. பீடுடைய வெறுழ்முன்பிற், கோடுமுற்றிய கொல்களிறு. நிலைகலங்கக் குழிகொன்று, கிளைபுகவத் தலைக்கூடியாங்கு" (புறநா. 17.)

நுண்ணிதி னுணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண்காப் பேறி வாள்கழித்
துருகெழு தாய மூழி னெய்திப்
பெற்றவை மகிழ்தல் செய்யான் செற்றோர்
கடியரண் டொலைத்த கதவுகொன் மருப்பின்
முடியுடைக் கருந்தலை புரட்டு முன்றா
ளுகிருடை யடிய வோங்கெழில் யானை
வடிமணிப் புரவியொடு வயவர் வீழப்
பெருநல் வானத்துப் பருந்துலாய் நடப்பத்
தூறிவர் துறுகற் போலப் போர்வேட்டு
வேறுபல் பூளையொ டுழிஞை சூடிப்
பேய்க்க ணன்ன பிளிறுகடி முரச
மாக்க ணகலறை யதிர்வன முழங்க
முனைகெடச் சென்று முன்சம முருக்கித்
தலைதவச் சென்று தண்பணை யெடுப்பி
வெண்பூக் கரும்பொடு செந்நெ னீடி
மாயிதழ்க் குவளையொடு நெய்தலு மயங்கிக்
கராஅங் கலிதத கண்ணகன் பொய்கைக்
கொழுங்காற் புதவமொடு செருந்தி நீடிச்
செறுவும் வாவியு மயங்கி நீரற்
றறுகோட் டிரலையொடு மான்பிணை யுகளவுங்
கொண்டி மகளி குண்டுறை மூழ்கி
யந்தி மாட்டிய நந்தா விளக்கின்
மலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ
வம்பலர் சேக்குங் கந்துடைப் பொதியிற்
பருநிலை நெடுந்தூ ணொல்கத் தீண்டிப்
பெருநல் யானையொடு பிடிபுணர்ந் துறையவு
மருவிலை நறும்பூத் தூஉய்த் தெருவின்
முதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த
திரிபுரி நரம்பின் றீந்தொடை யோர்க்கும்
பெருவிழாக் கழிந்த பேஏமுதிர் மன்றத்துச்
சிறுபூ நெருஞ்சியோ டறுகை பம்பி

---

230 - 31. சிறுபாண். 199 - 200.
242. "சராஅங் கலித்த குண்டுகண் ணகழி" (புறநா. 37.)
245. முல்லை. 99 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

யழல்வா போரி யஞ்சுவரக் கதிர்ப்பவு
மழுகுரற் கூகையோ டாண்டலை விளிப்பவும்
கணங்கொள் கூளியொடு கதுப்பிருக் கசைஇப்
பிணந்தின் யாக்கைப் பேய்மக டுவன்றவும்
கொடுங்கான் மாடத்து நெடுங்கடைத் துவன்றி
யிருந்துண் டானைப் பெருஞ்சோற் றட்டி
லொண்சுவர் நல்லி லுயர்நிணை யிருந்து
பைங்களி மிழற்றும் பாலார் செழுநகர்த்
தொடுதோ லடியர் துடிபடக் குழீஇக்
கொடுவி லெயினர் கொள்ளை யுண்ட
வுணவில் வறுங்கூட் டுள்ளகத் திருந்து
வளைவாய்க் கூகை நன்பகற் குழறவு
மருங்கடி வரைப்பி னூர்கவி னழியப்
பெரும்பாழ் செய்து மமையான் மருங்கற
மலியகழ்க் குவனே கடனூர்க் குவனே
வான்வீழ்க் குவனே வளிமாற் றுவனெனத்
தான்முன்னிய துறைபோகலிற்
பல்லொளியர் பணிபொடுங்கத
தொல்லரு வாளர் தொழில்கேட்ப
வடவர் வாடக் குடவர் கூம்பத்
தென்னவன் நிறல்கெடச் சிறி மன்னர்
மன்னெயில் கதவு மதனுடை நோன்ருண்
மாத்தாணை மறமொய்ம்பிற்
செங்கண்ணைச் செயிர்த்துகோக்கிப்
புன்பொதுவர் வழிபொன்ற
விருங்கோவேண் மருங்குசாயக்
காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வனம்பெருக்கிப்

---

269 - 70. மதுரை. 186 - 7.

271 - 3. உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்புரைத்தற்கு இவை மேற்கோள்; (தொல். புறத்திணை. சூ. 12 ச - உரை.)

283. "கிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத், தட்டோ ரம்ம விவட்டட் டோரே" (புறநா. 18); "குளந்தொட்டு .... வனந்தொட்டு" (சிறுபஞ்ச. 66:)

283 - 4. "காடுகொன்று நாடாக்கிக் குளந்தொட்டு" என்றுரைப்போல உழுவசென்றது உழுவிப்பார்மேலும் செல்லும்" (திருக்குறள், 1032 - பரி:)

பிறங்குநிலை மாடத் துறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநீ இ
வாயிலொடு புழையமைத்து
ஞாயிறுறும் புதைநீ இப்
பொருவேமெனப் பெயர்கொடுத்
தொருவேமெனப் புறக்கொடாது
திருநிலை இய பெருமன்னெயின்
மின்னெளி பெறிப்பத் தம்மொளி மழுங்கி
விசிபிணி முழவின் வேந்தர் சூடிய
பசுமணி பொருத பரேரெறுழ்க் கழற்காற்
பொற்றொடிப் புதல்வ ரோடி யாடவு
முற்றிழை மகளிர் முழுமுலை திளைப்பவுஞ்
செஞ்சாந்து நிதைந்த மார்பி னெண்பூ
ணரிமா வன்ன வணங்குடைத் துப்பிற்
றிருமா வளவன் றெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினுந் தண்ணிய தடமென் றோளே.

---

285. "பிறங்குநிலை மாடத் துறந்தை போனே" (புறநா. 69); "..... உறையூரென்பதனைப் பிறங்குநிலைமாடத்துறந்தைபோக்கி யெனவும் மேலையா நிரித்தவகையானே இக்காலத்தும் நிரித்துக்கொள்ளப்படுவனவன" (தொல். செய். சூ. 80 - பேர். ந. உரை.) பா. பிறங்குநிலைவாயில்.

294. பரேரெறுழ்: (பெரும்பாண். 60; நெடுநல். 31.)

298. உவமை உயர்ந்த பொருளாகல் வேண்டுமென்பதற்கும் வலிகாரண மாக உவமம் பிறக்குமென்பதற்கும் இவ்வடி மேற்கோள்; (தொல். உவம. சூ. 3, 4 - இளம். பேர்; இ - வி. சூ. 639.) பொநா. 139 - 40; "ஆளிய மொய்ம்பன்" (சீவக. 517.)

299. திருமாவளவன்: இப்புத்தகம், 92 - ஆம் பக்கம் (†) பார்க்க.

300 - 301. "தென்னன் பறந்தலைக் கோடி வென்ற, வேல்புரை வெம்மைய கான மெனினுமவ் வேந்தன் செய்ய, கோல்புரை தண்மைய வாதும்மோ டெனினுங் கொம்பினுகே" (இறை. மேற். கலி - றை, 171.); மேலே 199, 200 - ஆம் பாடல்களும் பார்க்க; நினைமுதற்பொருள்மேல் உறழ்பொருளில் மயங்கிவந்ததற்கு இவ்வடிகள் மேற்கோள் (தொல். களவி சூ. 16 - சே; இ - வி. சூ. 309 - உரை.)

218 - 301. "மூட்டாச் சிறப்பிற் ..... தெஞ்சேயெனகின்றது, பிரனர் வேலினும் வெய்ய ..... தோளேயெனச் சேய்த்தாகச்சென்ற பொருள கோடலின் அஃது அகன்றபொருள்மேற்பினும் இயன்ற பொருள்முடிய உரைப்பதாம்" (தொல். செய். சூ 210 - பேர்.); "மூட்டாச்சிறப்பின் ..... தோளே - அகன்றுசேர்ந்து மாட்டின்றிவந்தது" (மேலே 211 - உ.)

இதன்பொருள்.

இது பட்டினத்தைச் சிறப்பித்துக்கூறிய பாலைத்திணையாகலின், இதற்குப் பட்டினப்பாலையென்று பெயர்கூறினார்.

பாலையாவது பிரிதலும் பிரிதனிமித்தமும் கூறுவது.

இப்பாட்டு, *வேற்றுநாட்டகல்வயின் விழுமத்துத் தலைவன் செலவழுங்கிக்கூறியது; இது, முதலும்கருவுங்கூறாது உரிப்பொருளே சிறப்பக் கூறியது.

1. வசை இல் புகழ்—குற்றங்கூறுதலில்லாத புகழையுடைய காவிரி (6) என்க.

1 - 2. வயங்கு வெண்மீன் திசை திரிந்து தெற்கு ஏகினும்—விளங்குகின்ற வெள்ளியாகியமீன் தான் நிற்றற்குரிய வடதிசையினில்லாமல் தென்றிசைக்கண்ணே போகினும்.

இதனாற் பெய்யும்பருவததுப் பெய்யாமைக்குக் காரணங்கூறினார்.

3 - 5. [தற்பாடிய தளியுணவிற். புட்டேம்பப் புயன்மாறி, வான்பொய்ப்பினும்:] தளி உணவின் தனபாடிய புள் தேம்ப புயல் மாறி வான் பொய்ப்பினும்—துளிஉணவாகையினாலே தன்னைப்பாடிய வானம்பாடிபுலரும்படி மழையைப்பெய்தலைத்தவிர்ந்து மேகம் பொய்தது வறகடகாலமாயினும்,

5 - 6 தான பொய்யா மலை தலைய கடல் காவிரி †தான் பொய்யாமற் காலந்தோறும் வருகின்ற குடகமலையிடத்தே தலையினையுடைய கடலிடத்தே செல்கின்ற காவிரி,

கடல் - ‡கணவன்.

7. புனல் பரந்து §பொன் கொழிக்கும்—நீர்பரந்து கரையிலே பொன்னைப்போகடும் சோழநாடு (28).

8 விளைவு அறா வியல் கழனி - விளைதற்றொழில்மாறாத அகற்சியையுடைய கழனியிடத்தில்.

9 - 12 கார் கரும்பின் கமழ் ஆலை தீ தெறுவின கவின் வாடி நீர் செறுவின் நீள் நெய்தல் பூ சாம்பும் புலத்து ஆங்கண்—பசிய கரும்பின் கமழும்பாகை அடுகின்ற கொட்டிலில் நெருப்பிறபுகை சுடுகையினாலே அழகுகெட்டு நீரையுடைத்தாகிய செயயின்கணின்ற நீண்ட நெய்தற்பூ வாடும் நிலத்தையுடைய வயலிடத்துக் குறுமபல்லூர் (28),

---

* தொல்காப்பியம், கற்பியல், சூ. 5.

† "காவிரி யென்னத தப்பாக் கருணையான்" (வி - பாரதம். அருச்சுனன்றவநிலை. 24)

‡ கடல் நதிபதியாதலின், அதனைக்கணவனென்றார்.

§ காவிரியைப் பொன்னியென்பது ஈண்டு அறியற்பாலது

13 - 5 காய் செந்நெல் கதிர் அருந்து மோடு எருமை முழு குழவி கூழ் மிழல் தயில் வழியும்—காய்த்த செந்நெற்கதிரைத்தின்ற வயிற்றையுடைய எருமையின்ற முற்பட்ட கன்றுகள் *செழுங்கூட்டினுடைய மிழலிலே உறக்கத் தைக்கொள்ளுங் குறும்பல்லூர் (28),

16. கோள் தெங்கின்—குலைகளையுடைய தெங்கினையும்,

குலை வாழை—குலைகளையுடைய வாழையினையும்,

17. காய் கமுகின்—காயையுடைய கமுகினையும்,

கமழ் மஞ்சள்—மணமாறும் மஞ்சளினையும்,

18. இணம் மாவின்—இனமான மாமரங்களினையும்,

இணர் பெண்ணை—குலைகளையுடைய பனையினையும்,

19. முதல் சேம்பின்—அடிபரந்த சேம்பினையும்,

முளை இஞ்சி—முளையினையுடைய இஞ்சியினையுமுடைய வினைவருகியன கழனி (8) என முன்னேகூட்டுக.

20 - 25. [அகனகர் வியன்முற்றத்துச், சுடர்நுதல் மடநோக்கி, நேரிழை மகளிர் குணகுணுக் கவரும, கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை, பொற்காற் புதல்வர் புரவியின் றருட்டு முக்காற் றெறேர் முன்வழி விலக்கும்:]

சுடர் நுதல் †மடம் நோக்கின் நேர் இழை மகளிர் உணங்கு உளை கவரும கோழி எறிந்த கொடு கால் கனம் குழை—ஒளியையுடையநுதலினையும் மடப்பம் பொருந்தின நோக்கினையும் பொருந்தினபூணினையுமுடையமகளிர் உலருகின்ற நெல்லைத்தின்னும் கோழியையெறிந்த வினைந்த இடத்தையுடைய பொன்னாற் செய்த மகரக்குழை,

பொன் கால் புதல்வர் புரவி இன்று உருட்டும் மூக்கால் றெறேர் முன்வழி விலக்கும் அகல் நகர் வியன் முற்றத்து—பூணணிந்த தாளினையுடைய சிறுர் குதிரை பூட்டாமற் கையாலுருட்டும் மூன்றருளையையுடைய சிறுதேரினது வழியின்முன்பை விலக்கும் செல்வமகன்ற மனையினது அகன்ற முற்றத்தை யுடைய குறும்பல்லூர் (28) என்க.

26 - 7. [விலங்குபகை யல்லது கலங்குபகை யறியாக், கொழும்பல்குடிச் செழும்பாக்கத்து:]

இஃது, இருஞ்செருவின் (72) விலங்குபகையல்லது கலங்குபகையறியாப் பாக்கமென மேலேகூட்டிற்று.

28. குற பல் ஊர் கெடு சோணாட்டு—ஒன்றற்கொன்று அண்ணிதாய்ப் பலவாகிய ஊர்களையுடைய பெரியசோழாநாட்டில்.

---

* பொருந: 182; "பரந்துயர் கெற்கூடுகள்" (பெரிய. திருவாவுக். 10.)

† மடம் - கொளுத்தக்கொண்டு கொண்டது மிடாமை யெனபர்; (தொல். எழுத். சூ. 8 - உ.)

சோழநாடென்பது சோணாடென் மரூஉமுடிபு.

சோழநாட்டுப்பட்டின (218) மென்க.

29 - 30. வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி நெல்லொடு வந்த வல்வாய் பஃறி—வெள்ளிதாகிய உப்பினது விலையைச்சொல்லி விற்ற நெல்லைக் கொண்டுவந்த வலிய இடத்தையுடைய படகை,

பஃறி - ஓடமுமாம்.

31 - 2. பணை நிலை புரவியின் அணை முதல் பிணிக்கும் கழி சூழ் படப்பை—பந்தியிலே நிற்றலையுடைய குதிரைகளைப்பிணிக்குமாறுபோலே சார்ந்த தறிகளிலேபிணிக்கும் கழிசூழ்ந்த பக்கத்தினையும்.

அணைமுதல் - அணையிடத்துத் தறியுமாம். படப்பை - தோட்டமுமாம்.

32 - 3. கலி யாணர் பொழில் புறவின் பூ தண்டலை—மனச்செருக்கு எழுதற்குக் காரணமான புதுவருவாயினையுடைய தோப்புக்களுக்குப் புறம்பாகிய பூஞ்சோலைகளையும்,

34 - 8 [மழைநீங்கிய மாவிசும்பின். மதிசேர்ந்த மகவெண்மீ, னுருகெழுதிற லுயர்கோட்டத்து, முருகமர்பூ முரண்கிடக்கை, வரியணிசுடர் வான் பொய்கை :]

மழை நீங்கிய மா விசும்பில் மதி சேர்ந்த மகம் வெள் மீன் உரு கெழு திறல் உயர் கோட்டத்து வான் பொய்கை—மழைமாசுநீங்கின பெரிய ஆகாயத்திடத்து மதியைச்சேர்ந்த *மகமாகிய வெள்ளியமீனினது வடிவுபொருந்தின வலியையுடைய உயர்ந்த கரையையுடைய நன்றாகிய பொய்கைகளையும்,

மதியும் மீனும் பொய்கைக்கும் கரைக்கும் உவமிக்கும்பொருள்.

இனிஉயர்கோட்டத்தை. எல்லாரும் மதியைச்சேர்ந்த மகவெண்மீனைப் பார்க்கைக்குஇடமாகிய கோயிலாக்கிக் †கோயிலும் பொய்கையுமென எண்ணுதலுமாம். இனிப் பொய்கைக்கரையிலேகோயிலாக்கிக் கோயிலும்பொய்கையும் மதிசேர்ந்தமகவெண்மீனபோன்றவென்றுமாம்

முருகு அமர் பூ முரண் கிடக்கை வரி அணி சுடர் பொய்கை—மணம்பொருந்தின பூக்கள்நிறத்தால் தம்முள் மாறுபட்டபரப்பாலே பலநிறமணிந்த ஒளியினையுடைய பொய்கை,

39. இரு காமத்து இணை ஏரி—இம்மையிலும மறுமையிலுமுண்டாகிய காமவின்பத்தினைக்கொடுத்தற்குரிய இணைந்த ஏரிகளையும்,

அது ‡ "சோமகுண்டஞ் சூரிய குண்டத் துறைமூழ்கிக், காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடுந் தாமின் புறுவ ருலகத்துத் தையலார், போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பர்" என்றதனானுமுணர்க.

---

* மகநாள் முடநுகம் போல்வதாதலின், கரைக்கு உவமம் மையாயிற்று.

† "நிக்கந்தன் கோட்டநிலாக் கோட்டம்புக்கு" (சிலப். கனா. 13) என்பதனாற் புகாரில் மதிக்குக் கோயிலுண்மையை அறிந்துகொள்க.

‡ சிலப்பதிகாரம், 9 : 59 - 62.

(?) இனி *வளகாமரேரி வணிகாமரேரி யென்றும், சங்கிராமகாமம் வணிக்கிராமகாமமென்றுமுரைப்ப.

40 - 41. புலி பொறி போர் கதவின் திரு துஞ்சும் திண் காப்பின்—†புலியாகிய அடையாளத்தினையும் பலகைகள் தம்மிற்சேருதலையுடைய கதவினையுமுடைய திருமகள்தங்கும் திண்ணிய மதிலினையும்,

42 - 50. [புகழ்நிலைஇய மொழிவளர, வறநிலைஇய வகனட்டிற், சோறு வாக்கிய கொழுங்கஞ்சி. யாறுபோலப் பரந்தொழுகி. யேறுபொரச் சேறாகித், தேரோடத் துகள்கெழுமி, நீறாடிய களிறுபோல, வேறுபட்ட வினையோவத்து. வெண்கோயின் மாசூட்டும்:]

சோறு வாக்கிய கொழு கஞ்சி யாறு போல பரந்து ஒழுகி—சோற்றை வடித்தொழுக்கிய கொழுவியகஞ்சி யாறுகள்போலே எங்கும்பரந்தொழுகி,

ஏறு பொர சேறாகி—இடபங்கள் தம்மிற்பொருகையினாலே பின்பு சேறாய்,

தேர் ஓட துகள் கெழுமி — பலதேர்களும் ஓடுகையினாலே தூளியாய்ப் பொருந்தி,

வேறு பட்ட வினை ஓவத்து வெள் கோயில் — வேறுபட்ட தொழில்களையுடைய சித்திரங்களையுடைய வெள்ளிய கோயில்களை,

நீறு ஆடிய களிறு போல மாசு ஊட்டும்—புழுதியைமேலேபூசிக்கொண்ட யானையைப்போல அழுக்கேறப்பண்ணும்,

கஞ்சி ஒழுகிச் சேறாகிக் கெழுமிக் கோயிலை மாசூட்டுதற்குக்காரணமாகிய அட்டிலெனக்கூட்டுக.

புகழ் நிலைஇய மொழி வளர அறம் நிலைஇய அகல் அட்டில் – இம்மைக்குப் புகழ் நிலைபெற்றசொல் எங்கும்பரவாநிற்க மறுமைக்கு அறம்நிலைபெற்ற அகன்ற அட்டில்,

இருமையினும் பெறும் பயனுண்டாகச் சோறிடும் சாலையென்றவாறு.

51 - 2. தண் கேணி தகை முற்றத்து பகடு எருத்தின் பல சாலை—குளிர்ந்த சிறியகுளங்களை உள்ளேயடக்கின முற்றத்தினையுடைய பெரிய எருத்திற்கு வைக்கோலிடும் பலசாலையினையும்,

53. தவம் பள்ளி — தவஞ்செய்யும் அமண்பள்ளி பௌத்தப்பள்ளிகளையும்,

53 - 8. [தாழ்காவி, னவிர்சடை முனிவ ரங்கி வேட்கு, மாவுதி நறும் புகை முனைஇக் குயிறம், மாயிரும் பெடையோ டிரியல் போகிப், பூதங் காக்கும் புகலருங் கடிநகர்த், தூதுணம் புறவொடு துச்சிற் சேக்கும்:]

---

* பா. இனிக் கவளகாமரேரி இனி வணிகாமரேரி.

† புலியடையாளம் சோழனிலச்சினை; (பட். 135); "கொடுவரியேற்றி" (சிலப். 5: 98.)

அவிர் சடை முனிவர் அங்கி வேட்கும் ஆவுதி நறு புகை முனைஇ குயில் தம் மா இரு பெடையோடு இரியல் போகி—விளங்குகின்ற சடையினையுடைய இருடிகள் தீயின்கண்ணே வேட்டலைச்செய்யும் நெய்முதலியவற்றின் நறிய புகையைவெறுத்துக் குயில்கள் தம்முடைய கருமையையும் பெருமையையு முடைய பேடைகளுடனே கெடுதலையுடையவாய் நீங்கிப்போய்,

பூதம் காக்கும் புகல் அரு கடி நகர் தூது உண் அம் புறவொடு துச்சில் சேக்கும் தாழ் காவின்—பூதங்கள் வாசலிலேகாத்திருக்கும் புகற்கரிய அச்சத்தை யுடைய காளிகோட்டத்திடத்திற் *கல்லைத்தின்னும் அழகிய புறவுகளுடனே குடியிருப்பாகத்தங்கும் இளமரக்காவினையும்,

முனிவரைத் தன்னிடத்தேகொண்டிருத்தலிற் காக் காரணமாயிற்று.

59 - 77. [முதுமரத்த முரண்களரி, வரிமண லகன் றிட்டை, யிருங்கினை யினனொக்கற், கருந்தொழிற் கலிமாக்கள். கடலிறவின் சூடுதின்றும். வயலா மைப் புழுக்குண்டும். வறளடும்பின் மலர்மலைந்தும், புனலாம்பற் பூச்சூடியு, நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரு, நாண்மீன் விராய கோண்மீன் போல, மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇக், கையினுங் கலத்தினு மெய்யுறத் தீண்டிப், பெருஞ்சினத்தார் புறக்கொடாஅ, திருஞ்செருவி னிகன்மொய்ம்பி னோர், கல்லெறியுங் கவண்வெரீஇப், புள்ளிரியும் புகர்ப்போந்தைப், பறழ்ப்பன் றிப் பலகோழி, யுறைக்கிணற்றுப் புறச்சேரி, மேழகத் தகரொடு சிவல்விளை யாட:]

புகர் போந்தை புள் வெரீஇ இரியும் கல் எறியும் கவண்—நிறத்தையுடைய †பனையிலிருக்கும பறவைகளஞ்சிக் கெட்டுப்போதற்குக்காரணமான கல்லையெறி யும் கவணையுடைய கலிமாக்கள் (62) என முன்னேகூட்டுக.

இனன் ஒக்கல் கரு தொழில் கலி மாக்கள்—ஓரினச்சுற்றத்தினையும் வலிய தொழிலையுமுடைய செருக்கின ‡பரதவர்பிள்ளைகள்,

கடல் §இறவு இன் சூடு தின்றும் கடலிறாக்களின இனிய சுடப்பட்டத னைத்தின்றும்,

வயல் ஆமை புழுக்கு உண்டும் வயலில் ஆமையைப் புழுக்கின இறைச்சி யைத்தின்றும்,

வறள் ||அடும்பின் மலர் மலைந்தும்—மணலிலேபடர்ந்த அடப்பம்பூவைத் தலையிலேகட்டியும்,

---

* "தூதுணம் புறவெனத் துதைந்தகின் னெழினலம்" (கலி. 56) என் பதனுரையைப்பார்க்க.

† பனையிலிருக்கும்பறவைகள் அன்றில் தூக்கணங்குருவிமுதலியவை.

‡ பரதவர் - நெய்தனிலமாக்களுள் ஒருவகையார்.

§ இறவு - ஒருவகைமீன்; இறாவெனவும் வழங்கும்.

|| அடும்பு அல்லது அடம்பு நெய்தனிலத்திற்கு உரியதொரு கொடி.

புனல் ஆம்பல் பூ சூடியும்—நீரினின்ற ஆம்பற்பூவைப் பறித்துச்சூடியும்,

நீல் நிறம் விசும்பின் வலன் ஏர்பு திரிதரு நாள் மீன் விராய கோள் மீன் போல—நீலநிறத்தையுடைய ஆகாயத்தே வலமாகவெழுந்து திரியும் *நாள்களாகிய மீன்களோடேகலந்த கோள்களாகிய மீன்கள்போல,

மலர் தலை மன்றத்து மேழகம் தகரொடு சிவல் விளையாட பலர் உடன் குழீஇ—அகன்ற இடத்தையுடைய மன்றிலே †மேழகக்கிடாயோடே சிவலையுங்கொண்டு பொருவித்து விளையாடும்படி பலரும் சேரத்திரண்டு,

மாக்கள் தின்றும் உண்டும் மலைந்தும் சூடியும் விளையாடும்படி மீன்போற் குழீஇயென்க.

இகல் மொய்ம்பினோர் பெரு சினத்தால் வரி மணல் அகல் திட்டை இருகிளை முது மரத்த முரண் களரி புறக்கொடாது கையினும் கலத்தினும் மெய் உற நீண்டி இரு செருவின் விலங்கு பகை அல்லது (26) கொழு பல் குடி (27) கலங்கு பகை அறியா (26) செழும்பாக்கத்து (27)—அங்ஙனம்பொருவித்தலிற்றோன்றும் மாறுபாடுசெய்யும் வலியினையுடையராய் ஆண்டுப்பிறந்த பெரிய சினத்தாலே அறலினையுடைத்தாகிய மணலினையுடைய அகன்றமேட்டில் பெரிய கிளைத்தலையுடைய பழையமரத்தையுடையவாகிய பொருதற்குச்சமைந்த போர்க்களத்தேசென்று முதுகுகொடாமர் கையாற்குத்தியும் படைக்கலங்களாலே வெட்டியும் ஒருவர்மெய்யோடு ஒருவாமெய் உறும்படி கலந்துபொரும் பெரிய போரை விலங்குகின்ற பகையல்லது செருக்கினையுடைய பலகுடி ‡கலங்கி எழுந்திருத்தற்குக் காரணமானபகையை அறியாத பாக்கங்களையும்,

பாக்கம் - கடற்கரையிலூர்கள்.

பறழ் பன்றி பல கோழி உறை கிணறு புறம் சேரி—குட்டிகளையுடைய பன்றிகளையும் பலசாதியாகிய கோழிகளையும் உறைவைத்த கிணறுகளையுமுடைய இழிகுலத்தோரிருக்குந்தெருவுகளையும்,

78 - 9. [கிடுகுநிரைத் தெஃகூன்றி, நடுகல்லினரண்போல:] நடு கல்லின் அரண் போல கிடுகு நிரைத்து எஃகு ஊன்றி—§நடுகல்லினிற்கின்ற தெய்வமாயவனும அவனுக்குவைதத கிடுகும் வேலும்போலக் கிடுகைநிரைத்து வேலையூன்றிப் புறக்கொடாது (71) என முன்னேகூட்டுக.

---

* நாள்களாகியமீன்கள் - இருபத்தேழுநக்ஷத்திரங்கள்; கோள்களாகியமீன்கள் - நவக்கிரகங்கள்முதலியவை.

† மேழகக்கிடாய் - ஆட்டுக்கிடாய்; சிவல் - ஒருவகைப்பறவை; இவற்றின் போர்வென்றி தகர்வென்றியெனவும் சிவல்வென்றியெனவும் கூறப்படும்; (பு - வெ. வென்றிப்பெருந்திணை 7, 10 - ஆம் பாடல்களைப்பார்க்க.)

‡ புறநா. 20: 8 - 11.

§ "கைவண் குரிசில்கற் கைதொழூஉச் செல்பாண. தெய்வமாய் நின்றான் நிசைக்கு" (பு - வெ. பொதுவியற். 13)

ஆண்டு, ஆருபெயர்.

80 - 93. [செடித்தண்டிலிற் சாழ்சேர்ந்திய, குறக்கூரைக் குடிசாப்ப, னிலவடைத்த விருள்போல, வலியுணக்கு மணன்முன்றில், வீழ்த்தாழைத் தாட்டாழ்ந்த, வெண்கூ தாளத்துத் தண்பூ கோதையர். வினைச்சுறவின் கோடு சுட்டு, மினைச்சேர்ந்திய வல்லணங்கினுன், மடற்றுதை மலர்மலைந்தும், பிணர்ப் பெண்ணைப் பிழிமார்நியும். புன்றலை யிரும்பாதவர், பைத்தழைமா மகளிரொடு, பாயிரும் பனிக்கடல் வேட்டஞ் செல்லா. துவவுமடிக் தண்டாடியும் :]

புன்றலை இரு பாதவர்— ஒன்ற தலையினையுடைய பெரியபாதவர்,

உவவு—உவாநாளாகையினலே.

பாய் இரு பனி கடல் வேட்டம் செல்லாது மடித்து—பரந்த கருமையையுடைய குளிர்ந்த கடலில் மீன்பிடித்தற்குப்போகாது மனவெழுச்சிதனிர்த்து,

பைத்தழை மா மகளிரொடு—பசிய *தழையினையுடைய கரியகிறத்தினையுடைய தம்மகளிரோடுகூடி,

செடி தண்டிலில் சாழ் சேர்த்திய குற கூரை குடி சாப்பண்—செடியதண்டிலிற்சாம்புகள் சார்த்திவைத்த குறிய இறப்பினையுடைய குடியிருப்புபோல்,

நிலவு அடைத்த இருள் போல வலி உணக்கு மணல் முன்றில் மினை—நிலவுபோலசேர்ந்த இருளைப்போலே வலிகெடத்துலரும் மணலையுடைத்தாகிய முன்றிலினையுடைய மனையிடத்தே,

வினை சுறவின் கோடு சுட்டு சேர்த்திய வல் அணங்கினுல்—வினையையுடைய சுறவின் கொம்பைசுட்டு அதனிடத்தே எற்றிய வலிய தெய்வங்காரணமாக,

வீழ் தாழை தாள் தாழ்ந்த வெண்கூதாளத்து தண் பூ கோதையர்—†விழுதையுடைய தாழையின் அடியிடத்தேயின்ற வெண்டாளியினது தண்ணியபூவாற் செய்த மாலையினையுடையராய்,

மடல் தாழை மலர் மலைந்தும்—மடலையுடைய தாழையினது மலரைச் சூடியும்,

பிணர் பெண்ணை பிழி மார்நியும்—சருச்சரையையுடைய பனையிற் கள்ளை யுண்டும்,

உண்டு ஆடியும்—தெர்கள்ளையுண்டு விளையாடியும்,

94. புலவு மணல் பூ சானல்—புலாலுற்றத்தையுடைய மணலிடத்தே பூக்களையுடைய கடற்கரையிற் குடி (81) என்க.

95. மா மலை அனைத்த கொண்மூ போலவும்—கரியமலையைச்சேர்ந்த செக்கர்மேகம்போலவும்,

இது, கரிய உயர்ந்த நிலையின்மீதே ஒன்ற மாற்றரசர் பாத்தற்கு உவமை.

---

* தழை - தளிர்கள், தழைகள், மலர்கள் இவற்றுளையிய உடைவிசேடம்; (புறநா. 116, 248 - ஆம் பாடல்களோப்பார்க்க.)

† இதனுல், தென்னை, விழுதில்தாழையென்று வழங்கப்படும்.

96. தாய் முலை நழுவிய குழவி போலவும்—தாயுடைய முலையைத்தழுவிய பிள்ளையைப் போலவும்,

இஃது ஒன்றபடுதற்கு உவமை.

97. நேறு நீர் புணரியொடு யாறு நிலைமணக்கும்—தெளிந்த கடலிற் றிரையோடே காவிரி நிலைகலக்கும்,

98. [மலியோதத் தொலிகூடல்:] ஓதத்து ஒலி மலி கூடல்—ஓதத்தினால் ஒலிமலிந்த புனார்முகத்தே,

99. நீது சீங்க கடல் ஆடியும்—நீரினைபோகக் கடலாடியும்,

100. மாசு போக புனல் படிந்தும்—உப்புப்போக நீரிலேகுளித்தும்,

101. அலவன் ஆட்டியும்—ஞெண்டினை ஆட்டியும்,

உரவு திரை உழக்கியும்—பரக்கின்றதிரையிலே விளையாடியும்,

102. பாவை சூழ்ந்தும்—*பாவைசெனப்பண்ணியும்,

பல் பொறி மருண்டும்—ஐம்பொறிகளால்நுகரும்பொருள்களை நுகர்ந்து மயங்கியும்,

103. அகல காதலொடு பகல் விளையாடி—சிலகாதலிருப்பத்துடனே பகற்பொழுதெல்லாம் விளையாடி.

பாதலர் (90) உவமமடித்த (93) மகளிரோடுகூடிக் (91) குடிசாப்பன் (81) மனையிடத்தேசேர்த்திய அணங்கினுற் (87) சோதையராய் (85) மலர்த்தும் (88) மார்பினும் (89) ஆடியும் (93) பின்னர்க் கடலிலே (98) நீதுசீங்க ஆடியும் (99) படிந்தும் (100) ஆட்டியும் உழக்கியும் (101) சூழ்ந்தும் மருண்டும் (102) காதலொடு பகல்விளையாடி (103) எனமுடிக்க.

104 - 17. [பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும், பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைத், தூணைப்புணர்ந்த மடமங்கையர், பட்டுடுத்தித் துகிலுடுத்து, மட்டுடுத்தி மதமெழுப்பி, மைந்தர் கண்ணி மகளிர் சூடவு, மகளிர் சோதை மைந்தர் மிலையவு, செங்கான்மாடத் தொண்ணெரி சோக்கிச், சொடுத்திமிற் பாதவர் குரூஉச்சூட ணெண்ணவும், பாட லோர்த்து காடக மேத்தும், வெண்ணிவலின் பயன்றுய்த்தும், கண்ணடைஇய கடைக்கங்குலான், மாஅகாவிரி மணல் கூட்டுக், தாஉவெக்கர்த் தயின்மடித்து:]

பெறற்கு அரு தொல் சீர் துறக்கம் எய்க்கும் செடு கால் மாடத்து—பெறற்கரிய பழைய நிலைமையினையுடைய சுவர்க்கதையொக்கும் செடிய கால்களையுடைய மாடத்திடத்தேயிருந்து,

பாடல் ஓர்த்து காடகம் மேத்தும் வெள் நிலவின் பயன் துய்த்தும்—பாட்டைக்கேட்டு காடகங்களை விரும்பிக்கண்டும் வெள்ளிய நிலவிற்பெறும்பயனை நுகர்ந்தும்,

* தண்டான்கோரையாற் செய்யப்பட்ட பாவையை வைத்துக்கொண்டு விளையாடல் செய்தனிலத்துமகளிர்தொழில்; "பைஞ்சாய்ப் பாவை யின்ற னென் மானே" (ஐங்குறு. 155.)

மட்டு நீக்கி மது மகிழ்ந்தும் —கள்ளுண்டலைக்கைவிட்டுக் காமபானத்தை உண்டுமகிழ்ந்தும்,

பட்டு நீக்கி துகில் உடுத்தும்—பட்டுடுத்தவற்றைநீக்கிப் புணர்ச்சிக்காலத்துக்கு நொய்யவாகிய வெள்ளியவற்றையுடுத்தும்,

துணை புணர்ந்த மடம் மங்கையர் கண் அடைஇய கடை கங்குலான்—கணவரைக்கூடின மடப்பத்தையுடையமகளிர் பின்பு கண் துயின்ற பிற்பட்ட சாமத்தையுடைய இராக்காலத்தே,

மாடத்தேயிருந்து நயந்தும் துய்த்தும் மகிழ்ந்தும் உடுத்தும் துணைப்புணர்ந்தமடமங்கையர் கண்டுயின்ற கங்குலென்று கங்குற்கு அடைகூறினார்.

மைந்தர் கண்ணி மகளிர் சூடவும் மகளிர் கோதை மைந்தர் மலையவும் மாடத்தேயிருந்து நுகர்ந்து *அனந்தர்மிக்கமையாற் கணவர்சூடிய கண்ணியைத் தமதுகோதையாகநினைத்து மகளிர் சூடிக்கொள்ளும்படியாகவும் மகளிர்சூடிய கோதையைத் தமதுகண்ணியாகநினைத்து மைந்தர்சூடிக்கொள்ளும்படியாகவும் கண்டுயின்றகங்குலென இதுவும் கங்குற்கு அடைகூறினார்.

நெடுங்கால் மாடத்து குரூஉ சுடர் ஒள் எரி நோக்கி கொடு நிமில் பரதவர் எண்ணவும் கண் அடைஇய கடை கங்குல் ஆம்மாடத்திட்ட நிறவிய விளக்குக்களில் விடியற்காலத்து அவியாமல் ஒள்ளியவாய எரிகின்ற அவையிற்றைப் பார்த்து இராக்காலத்தே வளைந்த நுமிலைக்கொண்டு கடலிலேபோன பரதவரெண்ணும்படியாகவும் கண்டுயின்ற கடைக் கங்குலென்றும் கங்குற்கு அடைகூறினார்.

விளக்குக்களிலே எண்ணெயைவார்த்துத் தூண்டுவாரின்றி எல்லாரும் துயில்கோடலிற் சில எரிந்தவற்றை எண்ணினார்.

பொய்யா மரபின் மா காவிரி பூ மலி பெரு துறை மணம் கூட்டும் தூ எக்கர் துயில் மடிந்து —பொய்யாமல் நீர்வருமுறைமையினையுடைய பெரிய காவிரி பூ மிக்க பெரியதுறைகளிற் பூமணங்களைக் கொண்டுவந்துதிரட்டும் தூய இடு மணலிலே துயில்கொண்டுகிடந்து,

பரதவர் (90) பகல்விளையாடி (103) மாடத்திலிருப்பாரெல்லாரும் கண் அடைஇய கடைக்கங்குலிலே (115) தூவெக்கர்த் துயின்மடிந்து (117) மற்றைநாள் மகளிரொடு செறிய (155) எடுத்த விழவறா நியலாவணம் (158) எனக் கூட்டுக.

118 - 41. [வாலிணர் மடற்றாழை. வேலாழி வியன்றெருவி, னல்லிறைவன் பொருள்காக்குந், தொல்லிசைத் தொழின்மாக்கள், காய்சினத்த கதிர்ச்செல்வன். றேர்பூண்ட மாஅபோல, வைகறொறு மசைவின்றி, யுல்குசெயக் குறைபடாது, வான்முகந்தநீர் மலைப்பொழியவு, மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவு, மாரி பெய்யும் பருவம் போல, நீரினின்று நிலத்தேற்றவு, நிலத்தினின்று நீர்ப்பரப்பவு, மளந்தறியாப் பலபண்டம், வரம்பறியாமை வந்தீண்டி, யருங்கடிப்

* அனந்தர் - கள்ளின்மயக்கம்.

பெருங்காப்பின், வலியுடை வல்லணங்கினோன், புலிபொறித்துப் புறம்போக்கி, மதிநிறைந்த மலிபண்டம், பொதிமூடைப் போரேறி, மழையாடு சிமைய மால் வரைக் கவாஅன். வரையாடு வருடைத் தோற்றம் போலக், கூருகிர் ஞமலிக் கொடுந்தா ளேற்றை. யேழகத் தகரோ டுகளு முன்றில்:]

வான் முகந்த நீர் மலை பொழியவும் மலை பொழிந்த நீர் கடல் பரப்பவும் மாரி பெய்யும் பருவம் போல—மேகம் தான்முகந்தநீரை மலையிடத்தே சொரிதற்காகவும் மலையிற்சொரிந்தநீரை மீண்டு கடலிலே பரப்புதற்காகவும் மாரிக் காலத்தே பெய்கின்ற செவ்விபோல,

வான் எழுவாயாய்ப் பெய்யுமென்னும் பயனிலைகொண்டது.

வால் இணர் மடல் தாழை *வேலாழி வியல் தெருவில் அரு கடி பெருகாப்பின்—வெள்ளிய பூங்கொத்துக்களையும் மடலினையுமுடைய தாழையையுடையகரையினையுடைத்தாகிய கடலருகின்கணிருக்கும் பரதவருடைய அகன்றதெருவிடத்து †அரிய காவலையுடைய பண்டசாலையின்கண்ணே.

வரம்பு அறியாமை வந்து ஈண்டி நிலத்தினின்றும் நீர் பரப்பவும்—எல்லையறியாதபடி வந்துதிரண்டு பின்னர் அப்பண்டசாலையிலேநின்றும் கடலிலே ஏற்றுதற்காகவும்,

வல் அணங்கின் நோன் வலி உடை புலி பொறித்து புறம் போக்கி உல்கு செய மதி நிறைந்த மலி பண்டம்—வலிய வருத்துந்தன்மையையுடைய ‡அச்சடையாளமாகிய வலியையுடைய புலியையடையாளமாகஇட்டுப் பண்டசாலைக்குப்புறம்பேபுறப்படவிட்டுச் சுங்கங்கொள்ளுதற்கு மதித்தற்றொழிலிற்குறையற்றமிக்கபண்டங்களையும்,

நீரினின்று நிலத்து ஏற்றவும் புலி பொறித்து புறம்போக்கி உல்கு செய அளந்து அறியா மதி நிறைந்த பல பண்டம்—கடலினின்றும் பண்டசாலையிலே இறக்குதற்காகவும் புலிபொறித்து மரக்கலத்திற்குப்புறம்பே புறப்படவிட்டுச் சுங்கங்கொள்ளுதற்கு நெஞ்சாலே அளந்தறிந்து மதித்தல் நிறைந்த பலபண்டங்களையும்.

பரப்பவும் ஏற்றவுமென்னுமெச்சங்கள் புலிபொறித்தென்னும் வினையொடு முடிந்தன.

பொதி §மூடை போர் ஏறி—பொதிந்த பொதிகளடுக்கின போரிலேயேறி.

நீர் கடற்பரப்பவுமென்ற உவமைக்கு நிலத்தினின்றுநீர்ப்பரப்பவும், நீர் மலைப்பொழியவுமென்ற உவமைக்கு நீரினின்றுநிலத்தேற்றவும் பொருளாகக் கொள்க.

நல் இறைவன் பொருள் காக்கும் தொல் இசை தொழில் மாக்கள் காய் சினத்த கதிர் செல்வன் தேர் பூண்ட மா போல வைகல் தொறும் அசைவு இன்றி குறை படாது உல்கு செயநல்ல அரசனுடைய பொருளைப் பிறர்கொள்

* "வேலாழி சூழுலகில்" (திணைமா. 62.) † பா. அகன்ற.

‡ அச்சு அடையாளம். § மூடை - மூட்டை.

ளாமற்காக்கும் பழையபுகழினையுடைய சங்கங்கொள்வோர் ஏரிகின்ற சினத்தை யுடைய கிரணங்களையுடைய பகலவன் தேர்பூண்ட குதிரைகளைப்போல ஒரு பொழுதும் மடிந்திராது நாடோறும் இளைப்பின்றித் தாழ்வின்றாகச் சங்கங் கொள்ள,

இதனை *இருவகைப்பண்டங்களுக்குங் கூட்டியுரைக்க.

மழை ஆடு சிமையம் மால் வரை கவாஅன் வரை ஆடு வருடை தோற்றம் போல—மழையுலாவும் சிகரத்தையுடையவாகிய பெரிய மூங்கிலையும் பக்கமலை யினையுமுடைய மலையிடத்தேயுலாவும் வருடைமானின் †தோற்றரவுபோல,

கூர் ‡உகிர் ஞமலி கொடு தாள் ஏற்றை ஏழகம் தகரோடு உகளும் முன் றில்—கூரிய உகிரையுடைய நாயில் வளைந்த காலையுடைய ஏறானவை §மேழ கக்கிடாயோடே குதிக்கும் பண்டசாலையின் முற்றத்தினையும்,

ஏற்றை தகரோடே இருவகைப்பண்டங்களையும்பொதிந்த மூடைப்போ ரேறி உகளுமுற்றமென்க.

142 - 3. குறு தொடை நெடு படிககால் கொடு திண்ணை—அணுகின படிகளையுடைய நெடிய ஏணிகள்சார்த்தின சுற்றுத்திண்ணையினையும்,

143. பல் தகைப்பின்—பலகட்டுக்களையும்

144. புழை—சிறுவாசலையும்,

வாயில்—பெரியவாசலையும்,

போகு இடைகழி—பெரிய ||இடைகழிகளையுமுடைய,

145 - 51. [மழைதோயு முயர்மாடத்துச், சேவடிச செறிகுறங்கிற், பாசி ழைப் பசட்டல்குற். றூசுடைத் துகிர்மேனி, மயிலியன் மாநோக்கிற். கிளிமழலை மென்சாயலோர், வளிநுழையும் வாய்பொருந்தி]

மழை தோயும் உயர் மாடத்து வளி நுழையும் வாய் பொருந்தி—மேகஞ் செறியும் உயர்ந்த மாடத்தில் தென்காற்றுவருஞ் சாளரங்களைசசேர்ந்து,

சேவடி—சிவந்த அடியினையும்,

செறி குறங்கின்—செறிந்த ¶குறங்கினையும்.

பாசிழை—பசிய பூணினையும்,

பகடு அல்குல்—பெரியவல்குலினையும்.

தூசு உடை—தூசாகிய உடையினையும்,

துகிர் மேனி—பவளம்போலுநிறத்தினையும்

---

* இருவகைப்பண்டங்கள் - பண்டசாலையிலிருந்து கப்பலில் ஏற்றப்படு வனவும் கப்பலிலிருந்து பண்டசாலையில் இறக்கப்படுவனவும்.

† தோற்றரவு - தோன்றுதல்

‡ உகிர் - நகம்.

§ மேழகக்கிடாய் - ஆட்டுக்கிடாய்.

|| இடைகழி 'ரேழி' எனவழங்கும்.

¶ குறங்கு

மான் நோக்கின் - மான்போலும் பார்வையினையும்,

தேம்பாய் கண்ணித் தேர்வீசு கவிகை
யோம்பா வள்ளற் படர்ந்திகு மெனினே
மேம்பட வெறுத்தவவன் றொஃறிணை மூதூ
ராங்கன மற்றே நம்ம னோர்க்கே
யசைவுழி யசைஇ யஞ்சாது கழிமின்
புலியுற வெறுத்ததன் வீழ்பிணை யுள்ளிக்
கலைநின்று விளிக்குங் கான மூழிறந்து
சிலையொலி வெரீஇய செங்கண் மரைவிடை
தலையிறும்பு கதழு நாறுகொடிப் புறவின்
வேறுபுலம் படர்ந்த வேறுடை யினத்த
வளையான் றீம்பான் மிளைசூழ் கோவலர்
வளையோ ருவப்பத் தருவனர் சொரிதலிற்
பலம்பெறு நசையொடு பதிவயிற் றீர்ந்தநும்
புலம்புசே ணகலப் புதுவி ராகுவிர்
பகர்விரவு நெல்லின் பலவரி யன்ன
தகர்விரவு துருவை வெள்ளையொடு விரைஇக்
கல்லென் கடத்திடைக் கடலி னிரைக்கும்
பல்யாட் டினநிரை யெல்லினிர் புகினே
பாலு மிதவையும் பண்ணாது பெறுகுவிர்
துய்ம்மயி ரடக்கிய சேக்கை யன்ன
மெய்யுரித் தியற்றிய மிதியதட் பள்ளித்
தீத்துணை யாகச் சேந்தனிர் கழிமின்
கூப்பிடு கடக்குங் கூர்நல் லம்பிற்
கொடுவிற் கூளியர் கூவை காணிற்
படியோர்த் தேய்த்த பனிவி லாண்மைக்

399. "தோவீசிருகை" (புறநா. 114.)

400. ஓம்பாவள்ளற்: "ஓம்பாவீகைமின்" (பதிற். 42); "வரையாவீகைக குடவாகோவே" (புறநா. 17); படர்ந்திகு மெனினே: (மலைபடு. 421)

403. அசைவுழியசைஇ: பெரும்பாண். 44 - 5.

417. பா. விதவையும்.

423. "படியோர்த தேய்த்த வாண்மை" (பதிற். 79); "படியோர்த தேய்த்த பகுபுகழத் தடக்கை" (அகநா. 22.)

கொடியோள் கணவற் படர்ந்திகு மெனினே
தடியுங் கிழங்குந் தண்டினர் தரீஇ
யோம்புந ரல்ல துடற்றுந ரில்லை
யாங்குவியங் கொண்மி னதுவதன் பண்பே
தேம்பட மலர்ந்த மராஅ மெல்லிணரு
மும்ப லகைத்த வொண்முறி யாவுந்
தளிரொடு மிடைந்த காமர் கண்ணி
திரங்குமர ஞரிற் பொலியச் சூடி
முரம்பு கண்ணுடைந்த நடவை கண்ணென
வுண்டனி ராடிக் கொண்டனிர் கழிமின்
செவ்வீ வேங்கைப் பூவி னன்ன
வேய்கொ ளரிசி மிதவை சொரிந்த
சுவல்விளை நெல்லி னவரையம் புளிங்கூ
ழாகிடை யுழந்தநும் வருத்தம் வீட
வகலு ளாங்கட் கழிமிடைந் தியற்றிய
புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவிர்
பொன்னறைந் தன்ன நுண்ணே ரரிசி
வெண்ணெறிந் தியற்றிய மாக்க ணமலை
தண்ணெ னுண்ணிழு துள்ளீ டாக
வசையினிர் சேப்பி னல்கலும் பெறுகுவிர்
விசையங் கொழித்த பூழி யன்ன
வுண்ணுநர்த் தடுத்த நுண்ணிடி நுவணை
நொய்ம்மர விறகின் ஞெகிழி மாட்டிப்
பனிசே ணீங்க வினிதுடன் றுஞ்சிப்

424. மலைபடு. 58

429. 'வேமம் மெனிசி', பாஅம் பிரகரு, "யானை யொடித்து வ டெஞ்சிய, யாஅ", "கரி", பாஅம் தொல்பக் குறி" (குறுந். 37, 232, 307)

430 - 31. "மா வகுந்து தொடுத்த செம்பூங்கண்ணி" (புறநா. 264)

435. பா. மிதவை.

434 - 6. பெரும்பாண். 194 - 5.

441. பா. எனொறிந்து.

445. பா. இடிநுண்ணுவனை

புலரி விடியற் புள்ளோர்த்துக் கழிமின்
புல்லரைக் காஞ்சிப் புனல்பொரு புதவின்
மெல்லவ லிருந்த வூர்தொறு நல்லியாழ்ப்
பண்ணுப்பெயர்த் தன்ன காவும் பள்ளியும்
பன்னா ணிற்பினுஞ் சேர்ந்தனிர் செலினு
நன்பல வுடைத்தவன் றண்பணை நாடே
கண்புமலி பழனங் கமழத் துழைஇ
வலையோர் தந்த விருஞ்சுவல் வாளை
நிலையோ ரிட்ட நெடுநாண் டூண்டிற்
பிடிக்கை யன்ன செங்கண் வராஅற்
றுடிக்க ணன்ன குறையொடு விரைஇப்
பகன்றைக் கண்ணிப் பழையர் மகளிர்
ஞெண்டாடு செறுவிற் றராய்க்கண் வைத்த
விலங்க லன்ன போர்முதற் றொலைஇ
வளஞ்செய் வினைஞர் வல்சி நல்கத்
துளங்குதசும்பு வாக்கிய பசும்பொதித் தேற
லிளங்கதிர் ஞாயிற்றுக் களங்கடொறும் பெறுகுவிர்
முள்ளரித் தியற்றிய வெள்ளரி வெண்சோறு
வண்டுபடக் கமழுந் தேம்பாய் கண்ணித்

---

448. பெரும்பாண் 155.

452. "பலநாள் பயின்று பலரொடு செல்லினும்" (புறநா. 101)

450 - 51. "பண்ணுப் பெயர்த்தாங்கு" (பதிற். 65.)

454. பா. சண்புமலிபழனம் ; காண்புமலி.

457 - 8. "மோட்டிரு வாராஅற் றுடிக்கட் கொழுங்குறை" (அகநா 196.)

459. "பகன்றைப் பாங்குடைத் தெரியல" (பதிற் 76.)

461. "தெரிந்திடு போர்கள்... ..மேரு வாயவே" (கந்த. நாடு. 22), "நெடுங்களத் தம்பொற்குன்ற நிகரெனப் பெகும்போர் செயதார" (திரு விளை. நாடு. 27) ; "வரைக ளொப்பன போர்" (சீகாளத்தி. நக்கீர. 14)

463. துளங்கு தசும்பு : "தசும்பு துளங் கிருக்கைத் தீஞ்சேறுவினைந்த மணிநிற மட்டம்" (பதிற். 42.)

463 - 4. "நாட்க ளுண்டு" (புறநா. 123.)

நின்டேர் நன்னற்கு மனினி சான்மெனக்
கன்டோர் மருளக் கடிம்புட னருத்தி
யெருதெறி களம சோதையொடு கல்லாழ்
மருதம் பண்ணி யசைவினிர் கழிமின்
வெண்ணெ லரிநர் தண்ணுமை வெரீஇச்
செங்க ணெருமை வினம்பிரி யொருத்தல்
கனைசெலன் முன்பொடு கதழ்துவரல் போற்றி
வனைகலத் திகிரிவிற் குமிழி சுழலுஞ்
சினைசெலற் றலைவா யோவிறற்து வரிக்குஞ்
காணுநர் வயாஅங் கட்கின் சேயாறதின்
யாண தொருகரைக் கொண்டனிர் கழிமி
னிதியந் துஞ்ச நிவந்தோங்கு வரைப்பிற
பதியெழ வறியாப் பழங்குடி கெழீஇ
வியலிடம் பெறூஅ விழுப்பெரு நியமத்
தியாறெனக் கிடந்த தெருவிற் சாறென
வினமூநர் வெரூஉங் கவலை மறுகிற
கடலெனக் காரென வொலிக்குஞ் சும்மையொடு

467. மலைபடு. 319.

468 பொரு. 97.

469 - 70. மலைபடு. 534 மதுரை. 658.

471 மூ: "வெணனெ லரிஞர் தண்ணுமை வெரீஇ" (நற். 350; புறநா. 348), "வெணெலெ லரிஞரா பிணைதத தகம்பு, தண்ணுமை வெரீஇய தடகதா ணுரை", "வெணனெலெ லரிஞரா மகிவாயத தண்ணுமை... ... பரிபு போபும்" (அகநா. 10, 204)

475. பா. இதனது பனிகுற.

476. கட்கின் சேயாறு. (மலைபடு. 555.)

478. மூ: அகநா 378, மலைபடு. 575, "தந்நீ ணிநியது சாலை" (தொல். காடி. 1), வடசொல லிதைதது வாதறகு இவ்வடி மேற்கோள்; (தொல். எசச. ரு. 6 - இளம்.)

479. "பதியெழுவறியாப பழங்குடி கெழீஇய" (சிலப். மஃலை.)

481. மதுரை. 359 - ஆம் அடிபிற் பிழகுறிபைப் பார்க்க. பா. பாடவிடதத.

483. சீவக. 42.

மலியென மழையென மாட மோங்கித்
துனிதீர் காதலி னினிதமர்ந் துறையும்
பனிவார் காவிற் பல்வண் டிமிரு
நனிசேய்த் தன்றவன் பழனிறன் மூதூர்
பொருந்தாத் தெவ்வ ரிருந்தலை துமியப்
பருந்துபடக் கடக்கு மொள்வாண் மறவர்
கருங்கடை யெஃகஞ் சாத்திய புதவி
னகுங்கடி வாயி லயிராது புகுமின்
மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர்
வெல்போர்ச் சேஎய் பெருவிற லுள்ளி
வந்தோர் மன்ற வளியர் தாமெனக்
கண்டோ ரெல்லா மமர்ந்தினிது நோக்கி
விருந்திறை யவரவ ரெதிர்கொளக் குறுகிப்
பரிபுலம் பலைத்தநும் வருத்தம் வீட
வெரிகான் றன்ன பூஞ்சிறை மராஅத்துத்
தொழுதி போக வலித்தகப் படட
மடநடை யாமான் கயமுனிக் குழவி
யூமை யெண்கின் குடாவடிக் குருளை
மீமிசைக் கொண்ட கவர்பரிக் கொடுக்தாள்
வரைவாழ் வருடை வன்றலை மாத்தக
ரரவுக்குறும் பெறிந்த சிறுகட் டூர்வை
யஞ்சச்செறி யுழுவை கோளுற வெறுத்த
மடக்கண் மரையான் பெருஞ்செவிக் குழவி

---

484. பொருந. 84.

491. "உடையோர் போல விடையிடை குறுகி" (புறநா. 54), "தடைஇய காவி தடையாது துழந்து" (தனிகையாறு. 231.)

492. "வயிரியமாக்கள் மன்ற கண்ணி" (பதிற். 29); "மன்றுபடு பரிசிலர்" (புறநா. 135)

492 - 4. "தன்றொறன் வாழ்க்கை" என்பதன் விசேட உரைக்கு இவ் வடிகள் மேற்கோள்; (சிலப். 15 : 195 - அடியார்.)

498 - 4. முருகு. 284 - 5.

497. "பரிபுலம் பினரென" (சிலப். 10; 226); "பரிபுலம் பினனிவன்" (மணி. 16 : 57.)

498. பா. மராஅத்த.

யரக்குவிரித் தன்ன செங்கல மருங்கிற்
பரற்றவ ழுடும்பின் கொடுந்தா ளேற்றை
வரைப்பொலிந் நியலு மட்கான் மஞ்ஞை
510 கானக் கோழிக் கவர்குரற் சேவல்
கானப் பலவின் முழுவுமருள் பெரும்பழ
மிடிக்கலப் பன்ன நறுவடி மாவின்
வடிச்சேறு விளைந்த நீம்பழத் தாரந்
தூவற் கலித்த விவர்ஞே வளர்கொடி
515 காஅய்க் கொண்ட நுசுமரு ணூறை
பரூஉப்பனிந் குதிர்த்த பலவுறு நிருமணி
குரூஉப்புனி பொருத புண்கூர் யானை
மூத்துடை மருப்பின் முழுவலி மிகுதிரள்
வினையுடைத் தனன வள்ளிதழ்க் காந்த
520 ணுகந் திலக நறுங்கா ழாரந்
கருங்கொடி மிளகின் காய்த்துணர்ப் பசுங்கறி
திருந்தமை விளைந்த தேக்கட் டேறல்
கானிலை யெருமைக் கழைபெய் திந்தயிர்
நீனிற வோரி பாய்ந்தென நெடுவரை
525 நேமியிர் செல்லு நெய்க்க ணிரு அ
லுடம்புணர்பு தழீஇய வாசினி யினைத்துங்
குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி

507. பொநந. 43 - ஆம் அடியின் பழக்குறிப்பைப்பார்க்க, "அக்கத் தன்ன துண்மணை கோள்" (பத்ந். 30)

511. மலை. கு. 143 - 4.

517. "புலியொடு பொருது கொன்றதை வலியோ, நேகுக் கனி நெருங்கிய மருங்கு", "குயவரி விரும்போத நுப பொருத புணைகூர், துயங்கு பிடி தழீஇய மதனழி யானை" (அகநா 291, 398); "வரிவயம் பொருத வயக்களிறு" (புறநா. 100.)

517 - 8. யானை முதலை போரு-பு: (முருகு. 301 - 5. குறிஞ்சி. 85 - 6); "முத்துடை மருப்பின் மழகளிறு (பதிற். 32.)

519. "கோடல் வீயுகு பனைப்பூ, வெப்ப மெ ரவலன்" (கலி. 7) உடைவினை கம்பெ யலாத காதல்" (புறநா. 90.)

524 - 5. முருகு. 299 - 300. "அளிந்த வோரி பரியதலை மீத ழிதை.....தேன் சொரியும்" (புறநா. 109.)

527. பட். 6.

கடன்மண் டழுவத்துக் கயவாய் கடிப்ப
சோனைச் செருவி னெடுங்கடைத் துவன்றி
வானத் தன்ன வளமலி யாணைத்
தாதெருத் ததைந்த மூற்ற மூன்னி
மழையெதிர் படுகண் முழவுக ணிகுப்பக்
கழைவளர் தூம்பின் கண்ணிட ருமிர
மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்
நரம்புமீ றிறவா தடன்புணர்ந் தொன்றிக்
கடவ தறிந்த வின்குரல் விறலியர்
தொன்றெழுகு மரபிற் றம்மியல்பு வழாஅ
தருந்திறற் கடவுட் பழிச்சிய பின்றை
விருந்திற் பாணி கழிப்பி நீண்மொழிக்
குன்று நல்லிசைச் சென்றே ரும்ப
லின்றிவட் செல்லா துலகமொடு நிற்ப
விடைத்தெரிக் துணரும் பெரியோர் மாய்ந்தெனக்
கொடைக்கட னிறுத்த செம்ம லோயென

526 - 9. மதுரை. 695 - 7.

530. மலைபடு. 377; "காள மேகமு நாகமுஞ் தெரிகில" (கம்ப. சித்திரகூட. 2)

530 - 31. "தாதெரு மறுகிற் பாசறை" (புறநா. 33.)

534. மருதம்பண்ணி: மலைபடு. 470. கருங்கோட்டுச்சீறியாழ்: புறநா. 127, 145.

534 - 6. முருகு. 212; "நரம்பொடு வீணை நாவி னவின்றதோ", "சகிர்புரி நரம்பு மேபி, பூழமனிமிடறு மொன்றுப்ப் பனிசெய்தவாறு" (சீவக. 658, 728.)

538. அருந்திறற்கடவுள்: மணி. 6: 60; பொருந. 52; "கடவுட் பழிச்ச" (பதிற். 41.)

542. பெரும்பாண். 445.

543. பெரும்பாண். 446; "பெய்ம்முகி லென்னக் கொடைக்கட னிறுகரு மிக்குவாகு" (கூர்ம. சூரியன்மரபு. 8.)

541 - 3. "கெடாஅ நலலிசை நிலைஇ" (பதிற். 14); "மன்னு வுலகத்தி மன்னுதல் குறிததோர், தம்புகழ் நிறீஇத தாமாய்த் தனரே" (புறநா. 165); "என்று நிற்கு மிருமபுகழ்" (சூளா. அரசிய. 226.)

வென்றிப் பல்புகழ் விறலோ டேத்திச்
சென்றது நொடியவும் விடாஅ னசைதர
வந்தது சாலும் வருத்தமும் பெரிதெனப்
பொருமுர ணெதிரிய வயவரொடு பொலிந்து
திருநகர் முற்ற மணுகல் வேண்டிக்
கல்லெ னொக்க னல்வலத் திரீஇ
யுயர்ந்த கட்டி லுரும்பில் சுற்றத்
தகன்ற தாயத் தஃகிய நுட்பத்
திலமென மலர்ந்த கைய ராகித்
தம்பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர்
நெடுவரை யிழிதரு நீத்தஞ்சா லருவிக்
கடுவரற் கலுழிக் கட்கின் சேயாற்று
வடுவா ழெக்கர் மணலினும் பலரே
அதனால், புகழொடுங் கழிகநம் வரைந்த நாளெனப்
பரந்திடங் கொடுக்கும் விசும்புதோ யுள்ளமொடு
நயந்தனிர் சென்ற நும்மினுந் தான்பெரி
துவந்த வுள்ளமோ டமர்ந்தினிது நோக்கி
யிழைமருங் கறியா நுழைநூற் கலிங்க
மெள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ
முடுவ றந்த பைந்நிணத் தடியொடு
நெடுவெ ணெல்லி னரிசி முட்டாது

544. "மறம்வீங்கு பல்புகழ்" (பதிற். 12, திருவாசகம், பொற்சுண்ணம், 18; பெரிய, திருநீலகண்டயாழ். 5; திருவால. 56: 9.)

549. பெரும்பாண். 21.

550. பெரும்பாண். 417.

553. "மரையிலை போல மாயந்திசிறோர் பலரே" (புறநா. 27); மலைபடு. 70 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப் பார்க்க.

559 - 60. "யாகதன் றறிபுக மாகத் தான்பெரி, தன்புடை மையி னெம்பிரி வஞ்சி" (புறநா. 381.)

561. பொருந. 82 - 3, "நோக்குநுழை கலலாச செய்ய வணங்கர் விலுரியன்ன பட்டாடை" (வாயு. கிரியா. 13.)

563. மலைபடு. 177.

தலைநா ளன்ன புகலொடு வழிசிறந்து
பலநா ணிற்பினும் பெறுகுவிர் நில்லாது
செல்வேந் தில்லவெந் தொல்பதிப் பெயர்ந்தென
மெல்லெனக் கூறி விடுப்பி னும்முட்
டலைவன் றாமரை மலைய விறலியர்
சீர்கெழு சிறப்பின் விளங்கிழை யணிய
நீரியக் கன்ன நிரைசெல னெடுந்தேர்
வாரிக் கொள்ளா வரைமருள் வேழங்
கறங்குமணி துவைக்கு மேறுடைப் பெருநிரை
பொலம்படைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நிலந்தினக் கிடந்த நிதியமோ டனைத்து
மிலம்படு புலவ ரேற்றகைந் நிறையக்
கலம்பெயக் கவிழ்ந்த கழறொடித் தடக்கையின்
வளம்பிழைப் பறியாது வாய்வளம் பழுநிக்
கழைவளர் நவிரத்து மீமிசை ஞெரேரென
மழைசுரந் தன்ன வீகை நல்கித்

---

565. குறிஞ்சி. 238 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க, "தலைநாள் விழைவொடு" (வி - பாரத. குருகுல. 79.)

565 - 6, "பலநாள் பயின்று பலரொடு செல்லினும், தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ" (புறநா. 101) ; நாலடி. மேன்மக்கள், 9-பார்க்க.

567 - 8. பொருந. 121 - 2.

569 - 70. பொருந. 161 - 2; பதிற். 12; புறநா. 11, 364.

571 - 2. மதுரை. 224.

574. "பொலம்படைக் கலிமா", "பொலம்படையமா" (புறநா. 116, 359); "புனையும் பொலம்படைப் பொங்குளைமான்" (பு - வெ. பக்கம், 126.); பொன்னென்பது பொலமெனத் திரிந்து வந்ததற்கு இவ்வடி மேற்கோள்; (தொல். புள்ளி. சூ. 61 - இளம். ந.)

575. "நிலந்தினக் கிடந்த நெடுநிதிச் செலவம்" (தணிகையாறு. 25.)

576. ஏற்றகை : நாலடி. 98 : தொல். புள்ளி. சூ. 41 - இளம். ந. ஷை உரி. சூ. 62 - இளம். சே. ந. மேற்.

576 - 7. "இலம்படு புலவ ரேற்றகை ஞெமரப், பொலஞ் சொரிவ ழுதி" (பரி. 10.)

569 - 80. பொருந. 159 - 73.

தலைநாள் விடுக்கும் பரிசின் மலைநீர்
வென்றெழு கொடியிற் றோன்றுங்
குன்றுசூழிருக்கை நாடுகிழ வோனே.

இதன் பொருள்.

1 - 2. திரு மழை தலைஇய இருள் நிறம் விசும்பின் விண் அதிர் இமிழ் இசை கடுப்ப—* செவ்வத்தையுண்டாக்கும் மழையைப்பெய்த இருண்ட நிறத்தையுடைய மேகத்தினது ஆகாயத்திடத்திலே நின்று முழங்கும் ஓசையையொப்ப,

நடுக்கங்கூறவே மிக்கவொலியென்றாயிற்று.

2 - 3. பண் அமைத்து திண் வார் விசித்த முழவொடு—பண்களைத் தன் † கண்களிலே உண்டாக்கப்பட்டுத் திண்ணிய வாராலே இறுகவலித்த மத்தளத்தோடே,

‡ "இடக்க ணிளியா வலக்கண் குரலா - நடப்பது தோலியற் கருவி யாகும்" என்பதனாற் பண்ணமைத்தென்றார்.

3. ஆகுளி—சிறுபறையும்,

4. நுண் உருக்குற்ற விளங்கு அடர் பாண்டில்—கரைய உருக்குற்ற விளங்கின தகடாகத்தட்டின § கஞ்சதாளமும்,

5. மின் இரு பீலி அணி தழை கோட்டொடு—விளங்குகின்ற கரிய ‖ பீலியாகிய அழகினையுடைய தழையைக்கட்டின கொம்போடே,

6. கண் இடை விடுத்த களிறு உயிர் ஞம்பின்—¶ கண்களினடுவே வெளியாகத் திறந்த யானையின் கைபோலும் நெடுவங்கியத் தோடே,

** உயிர், ஆகுபெயர். இனி யானை நெட்டுயிர்ப்புக் கொண்டாற் போலும் ஓசையை யுடைய வென்றுமாம்.

---

581 - 2. முல்லை. 91; மதுரை. 366 - 74; குறிஞ்சி. 54 - 5; "வரைவிழி யருவியி னொளிறு கொடி நுடங்க", 'வரைமிசை விழிதரு மருவியின் மாடத்து.....கொடி நுடங்கு தெரு". "வான்றோய் வெல்கொடி, வரைமிசை யருவியி.....னுடங்க" (பதிற். 25, 47, 69; அகநா 358.)

583. முருகு 317 - ஆம் அடியின் கீழ்க்குறி மைப் பார்க்க.

* "எடுப்பதூஉ மெல்லாமழை" (குறள் 15.) † கண் - அடிக்கும்பக்கம்.

‡ சீவக. பக்கம். 207, 749. § கஞ்சம் - வெண்கலம்.

‖ பீலி - மயிற்றோகை; ஒருவகை வாச்சியமுமாம். ¶ கண் - கணு.

** உயிர்த்தலையுடைய மூக்காதலின், துதிக்கை இங்கே உயிரெனப் பட்டது; "நெடுமூக்கிற் கரியினாரி மூடிக்கொண்டார்" (தே. தனித்திருத் தாண்டகம்); "கமழ்கந்தங் கையான் மோக்குமண்ணா" (திருவானைக் காப்புராணம், கடவுள் வாழ்த்து.)

7. இளி பயிர் இயிரும் குரற் பசும் தூம்பொடு—இளியென்னும் சுரம் பிறத்தற்குக் காரணமாகிய துளைகளையுடைய மேலாகிய தூம்போடே,

இது குறுந்தூம்பு. பயிர் - தழைத்தல்.

8. * விளிப்பது கவரும் நீ குழல் துளை இ—பாட்டைச் சுருதி குன்றாமற் கைக்கொண்டு நிற்கும் இனிய குழலும் கொடுக்கப்பட்டு,

9. நடுவு நின்று இசைக்கும் அரி குரல் தட்டை—கண்களுக்குநடுவே நின்றெரிக்கும் சுரம்பின் ஓசையையுடைய †கரடிகையும்,

இனித் தாளமானத்திடையே நின்றெரிக்கும் அரித்தெழுகின்ற ஓசையையுடையவென்றுமாம்.

10. கடி கவர்பு ஒலிக்கும் வல் வாய் எல்லரி—விளக்கத்தையுடைத்தாகிய தாளத்தைக் கைக்கொண்டு ஒலிக்கும் வலிய வாயையுடைய சல்லியும்,

11. கொடி தரு பாணிய பதலையும்—மாத்திரையைச் சொல்லும் தாளத்தையுடைய ‡ ஒருகண் மாக்கிணையும்,

பிறவும்—கூறாத வாச்சியங்களும்.

12. கார்கோள் பலவின் காய் துணர் கடுப்ப—கார்காலத்தாலே பழுத்தலையுடைய பலாவினது காயை மிகவுடைய தொத்தை யொப்ப,

13. நேர்சீர் சுருக்கி காய § கலம் பையிர்—தம்மிலொத்த கனத்தையுடையவாகக் கட்டிக் காலின வாச்சிய மூட்டுக்களையுடைய பையையுடையிராய்,

முழவோடே ஆகுளியும் (3) பாண்டிலும் (4) கோட்டோடும் (5) தூம்பொடும் (6) குறுந்தூம்பொடும் (7) தட்டையும் (9) எல்லரியும் (10) பதலையும் பிறவும் (11) சிறுதழலும் தெருக்கப்பட்டு (8) அவற்றைச் சுருக்கிக் காய கலப்பையை (13) ஒக்க,

14. கடி கமழ்ந்து எழுந்த கள் அகல் நெய்தல—நடுவரம்பிற்குவளாத்த இடமகன்ற பக்கமுடையில்,

15. படித்து வைத்தன்ன பரதை மருங்கில்—படித்துவைத்தாற்போன்ற ஒத்தநிலமாகிய கற்பாறையின் பக்கத்தில்.

விளிப்பது - பாடுவது ; நிகண்டு. 11 ; மணி. 4 : 13.

† கரடிகை - கரடிகத்தினுற்போலும் ஓசையையுடைய வாச்சியம். (சிலப். 3 : 27. அடியார்.)

‡ "பதலையொருகண் மாயென விபக்குமின்" (புறநா. 152.)

§ சீவக. 864.

16. எடுத்த சிறுத்தன்ன இட்டு அருஞ் சென்றி - நிலத்தே ஊன்றிய வழியை எடுத்து மேற்கொண்டு நிறுத்தோன்ற இட்டிய அரிய சிறுவழியை,

17. தொடுத்த வாளியர் துணை புணர் கானவர்—தொடுத்த அம்பினை யுடையராய்த் தம்மனைவியரோடு கூடியிருக்கின்ற கானவர்,

18. [இதனை செய்யா நியக்குந நியக்கும்:] இயக்குநர் இதனை செய்யாது இயக்கும்—வழிபோவாரை வருத்துதலைச் செய்யாமல் வழி போக்கும்,

19 - 20. [அடுக்கல் மீமிசை யருப்பம் பேணு, நிடிச்சுர நிலப்பி னியவுக்கொண் டொழுகி:] அடுக்கல் மீமிசை இடிசுரம் நிலப்பின் இயவு அருப்பம் பேணுது கொண்டு ஒழுகி—மலையிடத்து மிக்க உயர்ச்சியிற் கல்லையிடித்த அருநிலத்தில் உயர்ந்த வழியைப் போதற்கு அரிதாகக் கருதாதே போதக்கடவேமென்று நெஞ்சாலே கொண்டுகடத்து,

கல்லையிடித்த ஆகிய வழி.

நெடும்பிற் பாதைமருங்கிற் சிறுதெறியைக் கானவர் போக்கும சரத்தில் இயவுக்கொண்டொழுகியென்க.

21. தொடி நிரை அன்ன தொண்டி பகு நிலவின்—தொடியினது உறழ்ச்சியையொத்த உறழ்ச்சியையுடைய ஞ்பதென்னுமெண் உண்டான வார்க்கட்டிகளையும்,

வலித்தல் மெலித்தல் செய்யவேண்டுதலின், உறழ்ச்சிகூறினார்.

22 - 4. [கடிப்பகை யனைத்தும் கேள்வி போகாக், குரலோர்த்தற் தொடுத்த சுடர்ப்புரி சரம்பி, னரலை நீர வுரீஇ:]

கேள்வி அனைத்தும் போகா—நற்கேள்வி அடைய முற்றுப்பெற்று,

†கடிப்பகை அனைத்தும் அரலை நீர உரீஇ - வெள்ளிதாகவேனவும் ‡கொடும்பு இல்லையாம்படி §நீக்கி.

முடங்கிப் பரந்தன்மையாயிருத்தலிற் கொடும்பை அரலையென்றார்.

அரலை - குற்றமுமாம். இனி, வெளிதாகவேனவும் கேள்விதப்பா தென்பாருமுளர்; அது வழிவிற்கு உவமையாதலிற் பொருந்தாது.

குரல் ஓர்த்த தொடுத்த சுடர் புரி சரம்பினை—ஓசையை ஓர்த்துபார்த் தக் கட்டின வடித்த முறுக்கின சரம்பினையும்,

கேள்விபோகா, உரீஇத தொடுத்த சரம்பென்க.

* அருப்பம் - அருமை.

† பேய்க்குப் பகையாதலின் வெண்டிதகவேனவும் கடிப்பகை யென்றார்.

‡ கொடும்பு - கொடுமுறுக்கு; (கொடிமுறுக்கு.)

§ நீக்கி - உருவி.

24 - 5. வரகின் குரல் வார்ந்தன்ன நுண் துளை இரீஇ—வரகின்கதிர் ஒழுகின தன்மைத்தாக நெருங்கின நுண்ணிய துளைகளையிருத்தி,

இது, * பொல்லம்பொத்துமிடத்திற்றுளை. †"பரியரைக் கழுகின பாளையம் பசும்பூக், கருவிருந் தன்ன கண்கூடு செறிதுளை" என்றார் பிறரும்.

26 - 9. [சிலம்பமை பத்தல் பசையொடு சேர்த்தி, யிலங்குதுளை செறிய வாணி முடுக்கிப், புதுவது புனைந்த வெண்கை யாப்பமைத்துப், புதுவது போர்த்த பொன்போற் பச்சை:]

இலங்கு துளை செறிய ஆணி முடுக்கி—விளங்குகின்ற துளைகள் நிரம்பும்படி சுள்ளாணிகளை இறுகத் தைத்து,

புதுவது வெண்கை புனைந்த யாப்பு அமைத்து—புதிதாக யானைக் கொம்பாற் செய்த யாப்பை அமையப்பண்ணி,

யாப்பு - பத்தலிற் குறுக்கே வலிபெற ஓட்டுவது.

சிலம்பு அமை பத்தல் பசையொடு சேர்த்தி புதுவது போர்த்த பொன்போல் பச்சை—ஒலித்தலமைந்த பத்தலிலே ‡பற்றோடேகூட்டிப் புதிதாகப் போர்த்த பொன்னிறம்போலும் நிறத்தையுடைய தோலினையும்,

இரீஇ முடுக்கி அமைத்துச சிலம்புதலமைந்த பத்தலிலே போர்த்த பச்சையென்க.

30 - 31. [வதுவை நாறும் வண்டுகம ழைம்பான், மடந்தை:]

வண்டு வதுவை நாறும் ஐம்பால் மடந்தை—தன்னிடத்திருந்த வண்டு கலியாணம்செய்தமகளுடைய நாற்றத்தை நாறுதற்குக் காரணமான மயிரினையுடைய மடந்தை,

வதுவைக்கு எல்லாமணமும் உளவாதல்பற்றி வதுவைநாறுமென்றார்.
கமழ ஐம்பால் - §இயலபான மணத்தையுடைய ஐம்பால்,

31 - 2. [மாண்ட நுடங்கெழி லாகத், தடங்குமயி ரொழுகிய வவ்வாய் கடுப்ப:] எழில் நுடங்கு மடந்தை மாண்ட ஆகத்து அடங்கு மயிர் ஒழுகிய அ வாய் கடுப்ப— ‖அழகு கட்புலனாகிநின்றசையும் மடந்தையது மாட்சிமைப்பட்ட மார்பிடத்தே சென்று பின்பு இல்லையான மயிர் ஒழுங்கு பட்டுக்கிடக்கின்ற அழகிய வயிற்றிடத்தையொக்க,

---

* பொல்லம்பொத்தல - இரண்டுதலைப்பையும் கூட்டித்தைத்தல.

† பெரும்பாணாற்றுப்படை, 7 - 8.

‡ பற்று - பிசின்.

§ இயல்பானமணம் - இயற்கைமணம்.

‖ இவ்வழகு இலாவணியமெனப்படும்.

33 - 4. அகடு சேர்பு பொருந்தி அளவின்றி நிரியாது வலி படை வலியுடைய சென்று வாங்கு உந்தி—பொலம்பொத்துதல் கடுவேசேரப் பட்டுக் கட்டு இனிதாய்த் தனக்குக் கூறுகின்ற அளவிலே வேறுபடாமற் பருத்திருண்டாக அகத்திட்டடையர்ந்து வலித்த உந்திபினையும்,

உந்தி - யாழுறுப்பு ஒருறுப்பு.

35 - 7. நுணங்கு அரம் நுவறிய நுண் கீர் மாலை கனங்கனி அன்ன கதம்பத் னெர் உருவின் வளர்ந்து ஏந்து மருப்பின் வள் *உயிர் பேரியாழ்—நுண்ணிய அரத்தாலே அராவின நுண்ணியகீர்மையினையுடைய கரியநிறத் தாலே களம்பழத்தின் நிறத்தை ஒத்தளவாய்க் கடுத்தோன்றுகின்ற நிறத்தையுடைய வலிந்தேற்றின கோட்டினையுமுடைய பெரிய ஓசையினையுடைய பேரியாழ்,

நிலவினையும் (21) கரம்பினையும் (23) பசையினையும் (29) உந்தியினையும் (34) மருப்பினையுமுடைய பேரியாழ (37) என்க.

38. [அமைவரப் பண்ணி பருவரல் நிரியாது :] பேரியாழ் (37) †அருள் நெறி நிரியாது அமைவர பண்ணி—பேரியாழைத் தனக்கு தானித் கூறிய வழிகளைத் தப்பாதபடி பொருந்துதலாகிய சமைத்து,

39 40. இசை பெறு நிருவின் வேத்து அவை ஏற்ப துறை பல முற்றிய—இசையை எக்காலமும் கேட்கின்ற செல்வத்தினையுடைய அரசர்களுடைய அவைக்களத்தே அவர்கள் செவிகொளுமாறு தாம்வார்க்கும் ‡துறைகள் பலவற்றையும் வாசித்துமுடித்த,

40. பை நிர் பானரொடு— பசுமையற்ற பாணரோடே,

என்றது, கல்வி முதிர்ந்தமையின், இளமையற்ற பாணரென்றவாறு.

41. உயர்ந்து ஓங்கு பெரு மலை மாறு இப்பு ஏறலின்—உயர்ந்து வளர்ந்த கற்கள் தம்மிற்றொடரும் பெரியமலைகள் வேறுரிடைபுறின்றும் ஏறி வருகையினாலே,

42 - 3. [மதம்தபு ஞமலி காலினன்ன, தளர்பயன் மெலிந்த கல் பொரு சிறடி:] தனக்கு இயல மெலிந்த மதம் தபு ஞமலி காலின் அன்ன கல பொரு சிறு அடி—தசைகின்ற இயல்பினுள் இளைத்த வலிகெட்ட காலினது காலினையொத்த கல்லுப்பொருகின்ற சிறிய அடியினையும்,

---

* உயிர் - ஒலி ; "வள்ளுயிர்த்த தெள்விளர்" (குறிஞ்சி. 100.)

† அருளுதல் - கூறுதல்.

‡ துறைபலவென்றது, வலிவு மெலிவு சமமென்னும் மூன்று நிலைத் நிலும் ஒவ்வொன்றில் ஏழுதானமுடிதலுடனும் இருபத்தொரு பாடத் தறைகளை; "மூவேழ் துறையு முறையுளிக் கண்ப்பி" (புறநா. 164) என் "தனுளும் அதனுளையாறுமுணர்க.

ஏறலின் மெலிந்த அடியென்க.

44 - 6. [கணங்கொ டோகையிற் கதுப்பிகுத் தசைஇ, விலங்குமலைத் தமர்ந்த சேயரி நாட்டத், திலங்குவளை விறலியர் நிற்புறஞ் சுற்ற:]

விலங்கு மலைத்து அமர்ந்த சேயரி நாட்டத்து—மாறோடு மாறுபட்டுப் பொருந்தின செவ்வரியையுடைய கண்ணினையும்,

இலங்கு வளை விறலியர்—விளங்குகின்ற வளையினையுமுடைய விறலி படப்பாடியாடுவார்,

*கணம் கொள் தோகையின் கதுப்பு இகுத்து அசைஇ நின் புறம் சுற்ற—திரட்சியைக்கொண்ட மயிலபோலே மயிரைத்தாழ்த்து இளைத்து நின்னைப் புறத்தே சூழ,

அடியினையும் (43) நாட்டத்தினையும், (45) வளையினையுமுடைய விறலியர் (46) கதுப்பிகுத்து அசைஇச் (44) சுற்ற (46) என்க

47 - 8. [கயம்புக் கன்ன பயம்படு தண்ணிழற், புனல்கால கழீஇய மணலவார் புறவில:]

புனல் கால் கழீஇய மணல வார் புறவில—பெருகுநீர் †துராலை வாரிக் கொண்டுபோன மணலொழுங்குபட்ட சிறுகாட்டிடத்தில்,

‡கயம் புக்கன்ன பயம் படு தண் நிழல—குளத்திலே புகுந்தாலொத்த பயனைத்தருகின்ற குளிர்ந்த நிழலிலே,

49 - 50. [புலம்புவிட் டிருந்த புனிறில காட்சிக், கலம்பெறு கண்ணுள ரொக்கற் றலைவ:]

புலம்பு விட்டிருந்த காட்சி கலம் பெறு கண்ணுளர் ஒக்கல் தலைவ—வழிவந்த வருத்தத்தைக்கைவிட்டிருந்த அறிவினையுடைய பேரணிகலங்களைப் பெறுங் கூத்தருடைய சுற்றத்திற்குத் தலைவனே,

புனிறு இல ஒக்கல்—ஈன்றணிமையில்லாத சுற்றம்.

என்றது, பிள்ளையைப்பெற்றவர்கள் பிள்ளையைக்கொண்டு கூடவந்தினர்களென்றவாறு.

கலப்பையிராய் (13) இயவுக்கொண்டொழுகி (20) யாழைப் (67) பண்ணித (38) துறைபலமுற்றிய பாணரோடு (40) விறலியர் புறஞ்சுற்றத (46) தண்ணிழலிலே (47) இருந்த (49) கண்ணுளரொக்கற்றலைவனே (50) எனவினைமுடிக்க.

---

* "கணங்கொள் கூளியொடு கதுப்பிகுத் தசைஇ" (பட். 259.)

துராலை - குப்பை.

"கயங்கண்டன்ன ..பெருமரக்குழாமும்" என்பர் பின்னும்; 259 - 65.

லைப்பையிசென்னும் பன்மை தகிலவென்னுமொருமையோடு முடிந்தது; ஈ"ஒருமை சுட்டிய" என்னுஞ்சூத்திரத்தால்.

51 - 3. தாமலர் தலைஇய கரை பொரு கிவப்பின் மீமிசைக் கல்லாது கடல் படர்ந்தாஅங்கு யாம் அவண நின்றும் வருதும்—தாய பூக்கள் தெருவின்கண் கரையையடைந்து மிக்க நீர்ப்பெருக்கையுடைய மலையுச்சியினின்றுமிழிந்த மலையாறு கடலிலேசேர்கின்றாற்போலத் யாம் அவ்விடஞ்சேர்ந்து சென்று நிலை பெற்றுவருகின்றேம்;

இனி, மலையிற்பொருள்களை வாரிக்கொண்டு யாறு கடலிலேசேர்கின்றாற்போலத அவ்விடத்துள்ள பொருள்களை வாரிக்கொண்டு வருகின்றே மென்றுமாம்.

53 - 5. [கீயிருக், கலிபொழி காவம் இனையோ டுணீஇய, தினைபதை கீவக்கும் புள்ளின மான :]

கலி பொழி காவம் இனையோடு உணீஇய தினை பதை கீவக்கும் புள் இனம் மான—பழங்களைச்சொரிகின்ற காட்டிடத்துப் பழங்களைச் சுற்றத்தோடே சென்றுதின்றற்கு விரைதலையுற்ற பறத்தற்றொழிலினையுடைய தம் பறவைத்திரளை யொக்க,

கீயிருமென்பது மேலே (65) கூட்டுதும்.

56. புனை†தார் பொலிந்த வண்டுபடு மார்பின்—கைசெய்த மாலையாற் பொலிவுபெற்ற வண்டுகளை உண்டாகுகின்ற மார்பினையுடைய கணவன் (58) என்க.

57. வனை புனை எழிலி முல—ஒலியாகையிலே முகிலாகப்பண்ணின கைசெய்த அழகைத் தன்னிடத்தேயுடைய முகிலினையும்,

வாக்கு அமை நிரன் தோள்—வளைந்த முன்கையையொத்த நிரண்டதோளினையும்,

58. மலர் போல் மழை கண்‡மங்கையர் கணவன்—பூப்போலும் குளிர்ச்சியையுடைய கண்ணினையுமுடைய கற்புடைமகளிர்க்குக் கணவன்,

59. முனை பாழ் படுக்கும் துன்னரு துப்பின்—பகைப்புலத்தைப் பாழுண்டாக்கும் கிட்டுதற்கரிய வலியினையும்,

---

* தொல்காப்பியம், எச்சவியல், சூ 65.

† தார் - மார்பின்மாலை ; "மார்பிற் றாரும் கொன்றை" (புறநா 1.)

‡ மக்களுட் பெண்பாலாரைப் பாராட்டல் சிறப்பின்மையின், இவ்வாறு கணவரோடு சேர்த்துப்பாடுதன்மரபென்பர்; (தொல்.புறத்திணை. சூ. 26.ந.)

60. [இசை நுவல வித்தி னசையே குழவர்க்கு:] நுவல் இசை வித்தின் நசை ஏர் உழவர்க்கு—தாம் பிறரைக்கூறும் புகழாகிய விதையாலே பிறர்பொருள்களை நச்சுதலாகிய ஏருழவினையுடைய பரிசிலர்க்கு,

என்றது, புகழைவித்திப் பொருளையெடுப்பரென்றவாறு.

61. புது நிறை வந்த புனல் அம் சாயல்—புதுப்பெருக்காய்வந்த நீர் போலும் அழகையுடைய மென்மையினையும்,

என்றது, தண்ணீர் அரியகாலத்தேவந்து பயன்தருமாறுபோல இவனும் பயன்றருவனென்றவாறு.

62. மதி மாறு ஓரா நன்று உணர் ஞழ்ச்சி—தனதறிவு ஆக்கத்திற்கு மாறாகிய கேட்டைநினையாது ஆக்கத்தினையேயுணரும் நினைவினையும்,

63. வில் நவில் தடகை—விற்றொழிலிலேபயின்றபெரிய கையினையும்,

மேவரும் பெரும்பூண்—பொருந்துதல வரும் பேரணிகலங்களையு முடைய,

64. நன்னன் சேய் நன்னன் படர்ந்த கொள்கையொடு—நன்னன் மகனாகிய நன்னனை நினைத்த கோட்பாட்டுடனே,

துப்பினையும் (59) சாயலினையும் (61) சூழ்ச்சியினையும் (62) கையினையும் பூணினையு (63) முடைய நன்னனென்க.

65. உள்ளினிர் சேறிராயின்—அவன் தரும் பரிசில்களிவையென்று அப பரிசில்களை *உள்ளினிராய் நீயிரும் (53) செல்லீராயின்,

65 - 6. [பொழுதெதிர்ந்த, புள்ளினிர் மன்ற வெற்றாக் குறுதலின்:] என் தாக்குறுதலின் எதிர்ந்த பொழுது புள்ளினிர் மன்ற—என்னை எதிர்ப படுகையினாலே நீர் புற படுகின்றபொழுது நுமக்குவரும் ஆக்கத்தை எதிர் கொண்டுநின்ற நன்முகூர்த்தத்தோடே நன்னிமித்தத்தையும் உடையிரா யிருந்தீர்; அறுதியாக,

67. ஆற்றின் அளவும்—வழியினது நன்மையினது அளவும் தீமையின தளவும்,

அசையும் நல் புலமும்—நீர் தங்கும் நன்றாகிய இடங்களும்,

68. வீறு வளம் சாரக்கும் அவன் நாடு படு வல்சியும்—பிறர்நாட்டுக்கு இல்லாத செல்வத்தை மாறாமற்கொடுக்கும் அவன் நாடுவிளைகின்ற உணவு களும்,

நாடெனவே மலைநாடும் காட்டுநாடும் தண்டணைநாடுங்கூறினார்; அது மேற்காண்க.

---

* உள்ளுதல் - நினைத்தல.

69. மலையும்—அவனுட்டின் மலைகளின் தன்மையும்,

சோலையும்—அவனுட்டுச் சோலைகளின்தன்மையும்,

மா புகல் கானமும்—விலங்குகள் விரும்பித்திரியும் காட்டின் தன்மையும்.

ஆற்றினதனது முதலிய ஐந்தினையும் இக்கூறியமுறையே கூறாமல் மயங்கக் கூறுவர்; கூறும்வழிக்கண் ஆண்டுள்ளனவே கூறவேண்டுதலின்.

70 - 72. தொலையா நல் இசை உலகமொடு நிற்ப பலர் புறம் கண்டு அவர் அருங்கலம் புலவோர்க்கு ஈ இ சாக்கும் அவன் ஈகை மாரியும்—கெடாத கலைபுகழ் உலகமுள்ளளவும் நிற்கும்படியாகப் பகைவர்பலரையும் மூதூருகண்டு அவர் நிறையாகத்தாத பெறுதற்கரிய பேரணிகலன்களே மூத்பட அறிவுடையோர்க்குக் கொடுத்துப் பிர் அவர்க்குச்சொரியும் அவன் பொன்மழையும்,

73. இகழுநர் பிணிக்கும் ஆற்றலும்—தன்னை இகழ்ந்திருக்கும் பகைவரை அரசுகொடாமற சுருக்கும் அறிவின்வலியும்,

73 - 6. புகழுநர்க்கு அரசு முழுது கொடுப்பினும் அமரா கோக்கொடு நா துளி பொழிந்த பொய்யா வானின் வியாது சுரக்கும் அவன் கான் மிழ் இருக்கையும்—*சூதர் மாகதர் பாணர் கூத்தர் முதலியோர்க்குத் தான் புறங்கண்ட பகைவரரசை முற்றுங்கொடுப்பினும் அமைதியிறவாத அறிவுடனே தூய துளியை பெருகச்சொரிந்த பருவம்பொய்யாத மேகம் பின்னரும் பெய்யு மாறுபோலப் பின்னரும் மாரிமற்சொரியும் அவனுடைய வானோலக்கமும்,

கோக்கு - †கோக்களேக்கம். "வியாவீண்டும்" என வியாமை அகத்தி மேற்று.

77 - 80 [கல்லோர் குழீஇய ஈரை யலவையதது, வலலா ராயினும்புற மறைததுச் செல்லுரைசர, சொலலல்க் காடடிச் சோர்வின்றி விளக்கி, கல்லிதி னியக்குமவன் சுற்றத் தொழுகுமுறை] ரா கலிய ‡கல்லோர் குழீஇய

---

* சூதர் - நின்றேத்துவார்; மாகதர் - இருந்தேத்துவார். இப்புத்தகம், 306 - ஆம் பக்கம் பார்க்க.

† கோக்கு அல் கோக்கம் - கண்ணுல கோகரும் கோகமென்றி மனத்தால் கோக்குகோக்கம்; அஃதாவது கருதுதல.

‡ கல்லோர்குழீஇய அவை - கலலவையும் நிறையவையும்; "புகழுக் தருமதெறி நின்றேர்பொய் காமு, மிகழுஞ் செஞ்செற்ற மிலலோர்—நிகழ் கலெக, கொலலா முணர்க்தோ நிருக்த விடமன்றே, கலலா யவைக்கு கலம்", "கலனடக்கஞ் செம்மை கடவுளிலை ஞானம், குலனென் நிவையுடையோர் கோதில் - புலனில்லோர், சென்று மொழிதலவும் கேட்போர் செறிக்த விடமன்றே நிறைந்த வவை" (வெண்பாப்பாட். பொது. 9 - 10); "ஆதுட்

அவையத்து சென்றோரை வல்லாராயினும் புறம் மறைத்து சொல்லி காட்டி சோர்வு இன்றி விளக்கி நல்லிதின் இயக்கும் அவன் சுற்றத்து ஒழுக்கமும் —தாம் கற்றவை நாவிடத்தே பயின்ற நல்ல அறிவினையுடையோர் திரண்டதன் அவைக்களத்திடத்தே சென்ற அறிவுடையோரைத் தாம் கற்றவற்றை மனங்கொள்ளக் கூறமாட்டாராயினும் மாட்டாமையை மறைத்துத் தாம் பொருளைச்சொல்லிக்காட்டி அதனைத் தப்பின்றாக எல்லார் மனமுங்கொள்ளும்படி அறிவித்து நன்றாகநடத்தும் அவனுடைய சுற்றத்தாருடைய பேரொழுக்கமும்.

நவிலுதல் - கூறியடிப்படுதல். சுற்றம் - கல்வியுடையோர்.

81 - 3. நீர் அகம் பனிக்கும் அஞ்சு வரு கடு திறல் பெரு இசை நவிரம் மேஎய் உறையும் காரி உண்டி கடவுளது இயற்கையும்—கடல்சூழ்ந்த உலகுநடுங்கும் அஞ்சுதறோன்றுங் கடியவலியையுடைய பெரிய புகழினையுடைய *நவிரமென்னுமலையைப் பொருந்தியிருக்கும் நஞ்சை ஊணாகவுடைய இறைவனது இயல்பும்,

பனிக்குங்காரி, திறலினையுடையகாரி.

84 - 5. பாய் இருள் நீங்க பகல் செய்யா எழுதரும் ஞாயிறு அன்ன அவன் வசை இல சிறப்பும்—பரந்த இருள்நீங்கும்படி பகற்பொழுதைச் செய்து தோன்றும் ஞாயிற்றை யொத்த அவனுடைய பகையாகிய இருளைக் கடிந்த குற்றமில்லாத தலைமையும்,

86 - 9. [இகந்தன வாயினுந் தெவ்வர் தேஎ, நுகம்படக் கடந்து நூழி லாட்டிப், புதைத்தோல் வரைப்பின் வேனிழற் புலவோர்க்கு, கொடைக்கடனிறுத்தவன் றொல்லோர் வரவும்;] தெவ்வர் தேம் இகந்தன ஆயினும் நூழி லாட்டி நுகம் பட கடந்து புரை தோல வரைப்பின் வேல நிழல் புலவோர்க்கு கொடை கடன் இறுத்த அவன் தொல்லோர் வரவும் பகைவர்தேயம் சேணிகந்தனவாயினும் ஆண்டுச்சென்று †நூசிப்படையைக் கொன்றுகுவித்து வலியுண்டாகவென்று பின்னர் உயர்ச்சியையுடைய யானை

பகைசெற் றருங்கலை யோர்ந்து, பாரிற் கீர்த்தி படைத்தோர் வைகுதல், நல்லவை யடக்கம் வாய்மை நடுநிலை, சொல்லு நன்மை யுடையோர் தொகைஇ, வல்லார் மொழியினும் வல்லு நராக்கிக், கேட்போ ருறையலை நிறையமை யாகும்" (இ - வி. சூ. 936)

* நவிரமென்னும் மலை இக்காலத்துத் திரிசூலகிரி யென்றும் பழனி மலை யென்றும் வழங்கப்படுகின்றது ; இதில் காரியுண்டிக் கடவுளுடைய திருக்கோயில் இருக்கின்றது ; இக்காலத்து வழங்கும் அவரது திருநாமம் ஸ்ரீ காளகண்டேசுவரரென்பது. இம்மலை திருவண்ணாமலையின் வாரிதிக்கில் உள்ளது.

† நூசிப்படை - முற்படை.

அணிந்துநிற்கின்ற அணியிலே சென்றுபொருத வேற்போரின் விளக்கத்தை யுடைய அறிவுடையோர்க்குக் கொடுத்தற்குரிய நாடும் ஊருமுதலிய வற்றைக் கொடுத்த அவனுடைய குடியிலுள்ளோர் தோற்றாரவும்,

நாஞ்சிசான்ற வயவராதலின், அவரைப் புலவரென்றார்.

90 - 91. இரை தேர்ந்து இவரும் கொடு தாள் முதலையொடு திரை பட குழிந்த கல் அகழ் கிடங்கின்—இரையைத் தேடியுலாவும் வளைந்தகாலினை யுடைய முதலைகளோடே திரையுண்டாக ஆழ்ந்த கல்லையகழ்ந்த கிடங் கினையும்,

92. வரை புரை நிவப்பின் வான் தோய் இஞ்சி—மலையையொத்த உயர்ச்சியையுடைய வானைத்தீண்டும் மதிலினையுமுடைய,

93 - 4. உரை செல வெறுத்த அவன் மூதூர் மாலையும் கேள்—புகழ் எங்கும் பரக்கும்படி செறிந்த அவனுடைய பழைய ஊரின் சியல்பும் இருக் கும்படி கேட்பாயாக;

ஆற்றினதளவு முதலியவற்றையெண்ணி இன்னதும் இன்னதும் இருக் கும்படி கேட்பாயாகவென முடிக்க.

94. [இனி வேளைநீ முன்னிய திசையே:] இனி நீ வேளை முன்னிய திசையே கேள்—அவற்றில் இப்பொழுது நீ கன்னனைக் கருதிச்செல்கின்ற திசையைக் கேள்;

திசை, ஆற்றினளவையுணர்த்திநிற்றலின் ஆகுபெயராயிற்று; ஏகாரம் பிரிநிலை.

95 - 6. மிகு வளம் பழுநிய யாணர் வைப்பின் புதுவது வந்தன்று—மிகுகின்ற செல்வம் முற்றுப்பெற்ற புதுவருவாயையுடைய ஊர்களாலே புதிதாகிய தன்மை வந்தது;

96. [இதுவதன் பண்பே:] அதன் பண்பு இது—அவ்வழியின் செய்தி இத்தன்மைத்து;

97 - 8. [வானமின்னு வசிவு பொழிய வானா, திட்ட வெல்லாம் பெட் டாங்கு விளைய:] ஆனாது இட்ட எல்லாம் பெட்டாங்கு விளைய வான்ம் மின்னு வசிவு பொழிய—அமையாதே நிலத்தேயிட்ட விதைகளெல்லாம் இன்னவாறே விளையவேண்டுமென்று ஆணடுள்ளார் விரும்பினாற்போலே விளையும்படியாக மேகம் மின்னாகிய பிளந்துவடுப்படுதலோடே பெய்கை யினாலே,

98. பெயலொடு வைகிய வியல் கண் இரு புனத்து—அம்மழையோ டேதங்கின அகன்ற இடங்களையுடைய பெரிய கொல்லைநிலத்தே.

---

* "காஞ்சி சான்ற வயவர் பெரும" (பதிற். 65, 90.)

100 . 101. [அகலிரு விசும்பி னாஅல் போல, வாலிதின் விரிந்த புன் கொடி முசுண்டை:] புல் கொடி முசுண்டை அகல் இரு விசும்பின் ஆல் போல வாலிதின் விரிந்த—புல்லிய கொடியினையுடைய முசுண்டை ஏனைப் பூதங்கள் தோன்றுதற்குக்காரணமான பெரிய ஆகாயத்திற் கார்த்திகையாகிய மீன்போல வெள்ளிதாக மலர்ந்தன;

* ஆரல், ஆலெனவிகாரம்.

102 - -6. [நீலத் தன்ன விதைப்புன மருங்கின், மகுளிபா யாது மலிதுளி தழாலி, னகளத் தன்ன நிறைசுனைப் புறவிற், கௌவை போகிய கருங்காய் பிடியேழ், நெய்கொள வொழுகின பல்கவ ரீரெண்:] பல் கவர் ஈர் எண் நீலத்து அன்ன விதை புனம் மருங்கின் அகளத்து அன்ன நிறை சுனை புறவின் மகுளிபாயாது மலி துளி தழாலின் கௌவை போகிய கரு காய் பிடி ஏழ் நெய் கொள ஒழுகின—பலவாகக் கிளைத்த பசிய எள்ளுத் தோடுகளெல்லாம் நீலமணியையொத்த நிறத்தையுடையவாயெழும்படி அவற்றை விதைத்த கொல்லையின்பக்கத்தில் நீர்ச்சாலையொத்த நிறைந்த சுனைகளையுடைய காட்டிடத்தே அரக்குப்பாயாமல் மிக்கதுளிதழுவுகையினாலே இளங்காயாகிய தன்மைபோன கரியகாய் ஒருபிடியிலே ஏழ்காயாக நெய் உள்ளேகொள்ளும்படியாக வளர்ந்தன ;

107 - 8. [பொய்பொரு கயமுனி முயங்குகை கடுப்பக், கொய்பத முற்றன குவவுக்குர லேனல்:] பொய் பொரு கயமுனி முயங்கு கை கடுப்ப குவவு குரல் ஏனல் கொய் பதம் உற்றன—தம்மில் விளையாடிப்பொருகின்ற யானைக்கன்றுகளின் ஒன்றோடொன்றுசேர்ந்த கைகளையொப்பத் தம்மிற் பிணையுங்கதிர்களையுடைய தினை அறுக்குஞ் செவ்வியாகமுற்றின ;

109 - 10. [விளைதயிர்ப் பிதிர்வின் வீயுக் கிருவிதொறும், குளிர்புரை கொடுங்காய் கொண்டன வவரை:] அவரை இருவிதொறும் விளை தயிர் பிதிர்வின் வீ உக்கு குளிர் புரை கொடு காய் கொண்டன—அவரைகள் தினையரிதாடோறும் முற்றினதயிரினது பிதிர்ச்சிபோலும் பூக்களுதிர்ந்து அடியிலே புரிவாளையொக்கும் வளைந்த காயைக்கொண்டன ;

குளிர் - கிளிகடிகருவியுமென்ப.

111 - 3. [மேதி யன்ன கல்பிறங் கியவின், வாதிகை யன்ன † கவைக் கதி ரிறைஞ்சி, யிரும்பு கவர்வுற்றன பெரும்புன வரகே:] பெரு புனம் வரகு மேதி அன்ன கல பிறங்கு இயவின் வாதி கை அன்ன கவை கதிர் இறைஞ்சி இரும்பு கவர்வுற்றன—பெரியபுனத்தில் வரகுகள் எருமைகிடந்தாற்போன்ற

* "வடவயின் விளங்கா லுறையெழு மகளிருட், கடவு ளொருமீன் சாலினி" என்பதும், 'ஆரலென்னும் பெயர் ஆலெனக் குறைந்து நின்றது' என்னுமதனுரையும் இங்கே அறியற்பாலன ; (பரிபாடல், 5 : 43.)

† "கவைக்கதிர் வரகுங் காய்பயி லெள்ளும்" (பெருங்கதை, முல்லை நிலங்கடந்தது.)

கற்பெருத்த வழியிடத்திலே தருக்கங்கூறுகின்றவன் கையிடத்து இணைந்த விரல்களையொத்த இரட்டித்த கதிர்கள் முற்றி வளைந்து அரிவாளாலே அரிதலுற்றன;

114 - 44. [பால்வார்பு கெழீஇப் பல்கவர் வளிபோழ்பு, வாலிதின் விளைந்தன வைவன்ம் வெண்ணெல், வேலீண்டு தொழுதி யிரிவுற் றென்னக், காலுறு துவைப்பிற் கவிழ்க்கனைத் திறைஞ்சிக், குறையறை வாரா நிவப்பி னறையுற், றாலைக் கலமருந் தீங்கழைக் கரும்பே, புயற்புனிறு போகிய பூமலி புறவி, னவற்பதங் கொண்டன வம்பொதித் தோரை, தொய்யாது வித்திய துளர்படு துடவை, யையவி யமன்ற வெண்காற் செறுவின், மையென விரிந்தன நீணறு நெய்தல், செய்யாப் பாவை வளர்ந்து கவின்முற்றிக, காயங் கொண்டன விஞ்சி மாவிருந்து, வயவுப்பிடி முழந்தாள் கடுப்பக் குழிதொறும், விழுமிதின் வீழ்ந்தன கொழுக்கொடிக் கவலை, காழ்மண் டெஃகங் களிறு முகம் பாய்ந்தென, ஊழ்மல ரொழிமுகை யுயர்முகந் தோயத், துறுகல் சுற்றிய சோலை வாழை, யிறுகுகுலை முறுகப் பழுத்த பயம்புக், கூழுற் றலமரு முந்தூ ழகலறைக், கால மன்றியு மரம்பயன் கொடுத்தலிற், காலி னுதிர்ந்தன கருங்கனி நாவன், மாறுகொள வொழுகின ஆறுநீ ருயவை, நூறொடு குழீஇயின கூவை சேறுசிறந், துண்ணுநர்த் தடுத்தன தேமாப் புண்ணரிந், தரலையுக்கன நெடுந்தா ளாசினி, விரலூன்று படுக ணாகுளி கடுப்பக், குடிஞை யிரட்டு நெடுமலை யடுக்கத்துக், கீழு மேலுங் கார்வாய்த் தெதிரிச், சுரஞ்செல் கோடியர் முழவிற் றூங்கி, முரஞ்சுகொண் டிறைஞ்சின வலங்கு சினைப் பலவே:]

பூ மலி புறவில் புயல் புனிறு போகிய அம் *பொதி †தோரை அவல் பதம் கொண்டன—பூமிக்க காட்டிடத்தே மழையால் ஈன்றணிமைதீர்ந்து முற்றிய அழகிய குலையினையுடைய ‡மூங்கினெல் அவலிடிக்குஞ் செவ்வியைக்கொண்டன;

இது மூங்கில்.

ஐயவி தொய்யாது §துளர் படு துடவை வித்திய அமன்ற—வெண்சிறு கடுகு உழாதே களைக்கொட்டால் அடிவரைந்து கொத்தும் தோட்டங்களிலே விதைக்கப்பட்டனவாய் நெருங்கி விளைந்தன;

இஞ்சி செய்யா பாவை வளர்ந்து கவின் முற்றி ‖காயம் கொண்டன—

---

* பொதி - பொதிந்த குலை.

† தோரை - ஒருவகை நெல்லும் மூங்கினெல்லும்; (மதுரை. 287 - உரை.)

‡ இதனை, "அவலவலென்கின்றன நெல்." (தொல். எச். சூ. 26 - சே. ந.) என்பது விளங்கச் செய்கின்றது.

§ துளர்படுதுடவை: (பெரும்பாண். 201).

‖ காயம் - உறைப்பு; "உப்பொடு நெய்பா றயிர் காயம் பெய்தடினும்" (நாலடி. மெய்ம்மை, 6.)

இஞ்சிமுதல் ஒருவராற் பண்ணப்படாத பாவைகள் மளரப்பட்டு அழகு முதிர்ந்து *காழ்ப்பைக்கொண்டன;

இஞ்சிக்கிழங்கைப் பாவையென்றல் மரபு.

கொழு கொடி கவலை குழிதொறும் வயவு பிடி முழந்தாள் கடுப்ப விழுமிதின் வீழ்ந்தன—கொழுவிய கொடியினையுடைய கவலை குழிகடோறும் வலியபிடியின் மடித்த முழந்தானையொக்கும்படி சீரிதாகக் கீழே வளர்ந்தன;

மா இருந்து வீழ்ந்தன—முற்றி மாவாந்தன்மை தம்மிடத்தேயுளவாய் †வீழ்ந்தன;

காழ் மண்டு எஃகம் களிறு முகம் பாய்ந்தென—காம்பிலேதைத்த வேல் யானையைக் குத்திற்றென்னும்படியாக,

ஊழ் மலர் ஒழி முகை உயர் முகம் தோய துறு கல் சுற்றிய சோலை வாழை—முறைப்பட மலர்தலையொழிந்த முகைகளினுடைய உயர்ந்தமுகங்கள் சென்றுதீண்டும்படியாக நெருங்கின மலைகளைச் சூழ்ந்துநின்ற சோலையாகிய வாழை,

வேல் யானையைக்குத்தினாற்போல வாழைப்பூ மலையைத்தீண்டி நின்றதென்றுணர்க; வாழைப்பூ உதிர்ந்து பின்பு உலராதுநிற்றல் இயல்பு.

இறுகு குலை முறுக பழுத்த—காய்நெருங்கின குலை மிகவுநெகிழும்படி பழுத்தன;

‡உந்தூழ் ஊழுற்று பயம் புக்கு அலமரும்—பெருமூங்கில்நெல்லு முற்றுதலுற்றுப் பயன்படுந்தன்மையிலேபுகுந்து அசையாநிற்கும்;

மரம் காலம் அன்றியும் பயன் கொடுத்தலின்—ஆண்டுள்ளமரங்கடாம் காலமன்றியும் நிலவிசேடத்தாற் பயனைக்கொடுத்தலின்,

நாவல் காலின் கரு கனி அகல அறை உதிர்ந்தன—நாவல் காற்றாலே கரியபழம் அகன்ற பாறையிலே உதிர்ந்தன;

இது சினைவினை முதலொடுமுடிந்தது.

நீர் ஊறு உயவை மாறு கொள் ஒழுகின—விடாய்த்தகாலத்தில் வாய நீரூறுதற்குக்காரணமான உய்வைக்கொடி நீரோடே மாறுபாடுகொள்ளும்படி படர்ந்தன;

என்றது, தண்ணீர் தேடவேண்டாவென்றவாறு.

---

* காழ்ப்பு - உறைப்பு.

† கிழங்குவளர்தலை வீழ்த லென்பர்; "வள்ளிகீழ்வீழா" (கலி. 39), "கொழுங்கொடிவள்ளிக் கிழங்கு வீழ்க் கும்மே" (புறநா 109.)

‡ "உந்தூழ்கூவிளம்" குறிஞ்சி. 65. பா. முந்தூழ்.

கூவை *தானெடு குழீஇயின—கூவைக்கிழங்கு கீழ்த்தன்மையோடே முற்றித்திரண்டன ;

தேமா சேறு சிதத்து †உண்ணுநர் நடுத்தன—பழமாக்கள் சாறு மிக்கு உண்பாரை வேறொன்றிற்‌செல்லவொட்டாமல் தடுத்துக்கொண்டன;

தெடு தாள் ஆசினி புன் புரிந்து அரலை உக்கன—நெடிய அடியையுடைய ஆசினிப்பலாப் புண்ணும்படிதெடித்து உளருள்ள விதைகள் சிந்தின ;

விரல் ஊன்று படு கண் ஆகுளி கடிப்ப குடிஞை இரட்டும் தெடு மலை அடுக்கத்து—விரல்தின்டுகின்ற முழங்குகண்ணையுடைய சிறுபறையை யொக்கப் போர்த்தை பேடுஞ்சிலவும் மாறிக்கூப்பிடும் நெடிய மலைப் பக்கத்தே,

அலங்கு சினை பலவு கார் வாழைத்து எநிரி சுரம் செல் கோடியர் முழவின் கீழும் மேலும் தூங்கி ‡முரஞ்சு கொண்டு இறைஞ்சின—அசைகின்ற கொம்பினையுடையபலாக்கள் மழைமிகப்பெய்யப்பட்டு அதனைத் தாம் ஏற்றுக்கொண்டு வழிபோகின்றவருடைய மதளன்கள்போலே கீழும் மேலுந்தூங்கி முற்றுதல்கொண்டு தாழ்ந்தன ,

வெள் கால செறுவில்—வெள்ளிய அரிதாள்களையுடைய செய்யிலே,

§இவணம் வெண்ணெல் பால வார்பு கெழீஇ பல கவர் வளி போழ்பு வாலிதின் விளைதன—ஐவனநெல்லும் வெண்ணெல்லும் பால்கட்டிச் சிறிது முற்றிப் பலவாய்க் கவர்த்த காறறு ஊடறுக்கப்பட்டு வன்றாக விளைந்தன ;

வார்தல்-ஒழுகுதலாதலிற் கட்டுதலையுணர்த்திற்று. கெழுமுதல் சண்டு முற்றுதலை யுணர்த்திற்று. பல்கவர்வளியெனவே காறுகாற்றுமடித்து முற்றுதல்கூறினர்.

‖கழை கரும்பு கவிழ் கணைத்து—இனிய கோலையகரும்பு நேடு கவிழ்தலோடே தணடுதிரண்டு,

அறை குறைவாரா ஈகப்பரு—பாத்தி குறைபடாதலுடையாகாத வளர்ச்சியோடே,

---

* தூறு - நீர் ; இது கூவை நீறு; கூவைசுண்ணமெனவும் வழங்கும் ; (சிலப். 25 : 42.)

† "உண்ணுநர்த் தடுத்த சாந்தலின் சுணையொடு" (அகநா. 2.)

‡ " முரஞ்சன் முதிர்வே " (தொல். உரி. 35.)

§ இவணம் - நிணையோடுசேர்த்துவிலைக்கப்படும் தருவகை நெல். (புறநா. 159.)

‖ கழைக்கரும்பு ஒருவகைக்கரும்பென்பாருமுளர்.

வேல் சண்டு தொழுதி இரிவு உற்றென்ன கால் உறு தலைப்பின் இறைஞ்சி—வேற்படைநிரண்டதானை கெட்டுப்போதலே உற்றதென்னும் படி காற்று மிகப் படுகின்ற ஆரவாரத்தாலே சாய்த்து,

அறையுற்று ஆலக்கு அலமரும்—வெட்டுதலுற்று ஆலியிலேசென்று பயன்படுதற்கு அசையாநிற்கும்;

கரும்புநிரண்டு நிலப்போடே இறைஞ்சி அலமருமென்க.

நீன் நறு நெய்தல் மை என விரிந்தன—நீண்ட நறியநெய்தல் கருமை தான் வடிவுகொண்டதென்னும்படியாக அலர்ந்தன;

நீ முன்னிய திசையைக்கேள் (94); வானம்பொழிகையினுலே (97), பெயலோடுவையிய புனத்து (99) முசுண்டை மலர்ந்தன (101); எனை ஒழுகின (106); எனல் கொய்பதமுற்றன (108); அவரை கொண்டன (110); வரகு கவர்வுற்றன (113); புதலிலே (120), தோன்றிகொண்டன (121); ஐவனி அமன்றன (123); இஞ்சி காவல்கொண்டன (126), கலை வீழ்த்தன (128); வாழை (131) பழுத்தன (132); உதுழ அலமரும் (133); சாவல் உதிர்த்தன (135); உயவை ஒழுகின (136); கூவை குழீஇயின (137); தேமாத் தடுத்தன (138); ஆலி உக்கன (139); பலவு இறைஞ்சின (144); வெண்காற்செறுவிலே (123), இவனெல்லும் வெண்ணெல்லும் விளைந்தன (115); கரும்பு அலமரும் (119); நெய்தல் விரிந்தன (124); இவ்வாறே மிக்க வளம் முற்றப்பெற்ற புதுவருவாலை புடலை ஊர்களாலே (95) புதிதாகிய தன்மைவந்தது; அவ்வழியின்பண்பு இத்தன்மைத்து (96) எனவினைமுடிக்க.

இஃது ஆற்றினதுள்ளமையின் அளவுகூறிற்று.

145. நீயின் அன்ன ஒள் செ காந்தள்—நெருப்பினையொத்த ஒளிய செங்காந்தளினது,

இதற்கு கன்னனென்னும்பெயர் நீயோடுத்த தன்மையின், *ஆனந்த மாய், பாடினரும் பாட்டுண்டாரும் இறந்தாரென்று ஆளவந்தபிள்ளை யாசிரியர் குற்றங்கூறினராலெனின், அவர் அறியாதுகூறினர்; செய்யுள் செய்த கௌசிகனுர் ஆனந்தக்குற்றமென்னுங் குற்றமறியாமற் செய்யுள் செய்தாரேல், இவர் கலிசைப்புலவராகார்; இவர்செய்த செய்யுளை நல்லிசைப்புலவர்செய்த ஏனைச்செய்யுட்களுடன் சங்கத்தார் கோவாமல் நீக்கு

* ஆனந்தமாய் - ஆனந்தக்குற்றமாகி; ஆனந்தக்குற்றமென்பது எழுத்தானந்தம், சொல்லானந்தம், பொருளானந்தம், யாப்பானந்தம், அலங்காரானந்தம், தொடையானந்தமென அறுவகைப்படும்; அவற்றுள் இவரே சொல்லியது சொல்லானந்தத்திலடக்கு மென்பர்; "இயற்பெயர் மருங்கின் மங்கலமொழியத், தொழிற்சொல் புணர்ப்பினது சொல்லானந்தம்' (யா - வி. ஒழிபு; யா. கா; ஒழிபு. 9 - உரை; இ - வி. சூ. 887.)

வர்; அங்ஙனநீக்காது கோத்தற்குக்காரணம் ஆனந்தக்குற்றமென்பதொரு குற்றம் இச்செய்யுட்கு உறாமையானென்றுணர்க,

இச்சொன்னிலை கோக்குமிடத்து ஒருகுற்றமுமின்று; என்னை? அன்னவென்னும் அகரவீற்றுப் பெயரெச்ச உவமவுருபு நீயென்னும் பெயரைச் சேர்ந்துநின்று இன்சாரியை இடையே அடுத்துநிற்றலின். நன்னனென நகரமுதலும் னகரவொற்றீறுமாய் நிற்குஞ் சொல்லாயினன்றே அக்குற்ற முளதாவதெனமறுக்க. நன்னவென அண்மைவிளியாய்நின்ற முன்னிலைப் பெயரென்று குற்றங்கூறுவார்க்கு இப்பாட்டுப் படர்க்கையேயாய்நிற்றலிற் குற்றமின்றென்க.

நூற்குற்றங்கூறுகின்ற * பத்துவகைக்குற்றத்தே "தன்னானொரு பொருள் கருதிக்கூறல்" என்னுங்குற்றத்தைப் பின்னுள்ளோர் ஆனந்தக்குற்றமென்பதொரு குற்றமென்று நூல்செய்ததன்றி அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் இக்குற்றங்கூறாமையிற் சான்றோர்செய்யுட்கு இக்குற்றமுண்டாயினும் கொள்ளாரெனமறுக்க.

146-7. தூவல் கலித்த புது முகை ஊன் செத்து அறியாது எடுத்த புல் புறம் சேவல்—மழையாலே செருக்கிவளர்ந்த புதிய முகையைத் தசையாகக்கருதி முகையென்றறியாதேயெடுத்த புற்கென்ற முதுகினையுடைய பருந்து,

148. ஊன் அன்மையின் உண்ணாது உகுத்தென—தசையல்லாதபடியாலே தின்னாமல் எவற்றையுஞ் சிந்திப்போகட்டதாக,

149-50. நெருப்பின் அன்ன பல் இதழ் தாஅய் வெறி களம் கடுக்கும் வியல் அறை தோறும்—நெருப்பினையொத்த பல இதழ்கள்பரந்து வெறியாடுகின்ற களத்தையொக்கும் அகன்ற பாறைகடோறும்,

151. மணம் இல் கமழும் மா மலை சாரல்—மணஞ்செய்தமனைபோல மணக்கும் பெரிய மலைப்பக்கத்திற் சிறுகுடி (156) யென்க.

152. தேனிளர் கிழங்கினர் ஊன ஆர் †வட்டியர்—தேனினையுடையராய்க் கிழங்கினையுடையராய்த் தசைநிறைந்த கடகத்தையுடையராய்,

பத்துவகைக்குற்றங்களாவன:—"சிதைவெனப் படுபவை வசையற நாடிற், கூறியது கூறன் மாறுகொளக் கூறல், குன்றக் கூறன் மிகைபடக் கூறல், பொருளில மொழிதல, மயங்கக்கூறல, கேட்போர்க்கின்னாயாப் பிற்றாதல், பழித்த மொழியா னிழுக்கங் கூற, நன்னானொருபொருள் கருதிக் கூற, லென்ன வகையினு மனங்கோ ளின்மை, யன்ன பிறவு மவற்றுவிரியாகும்" (தொல். மரபு. சூ. 108.)

† வட்டி, கடகம் - பனையகணியாற் செய்த பெரிய பெட்டி; "முள்ளெயிற்றுப் பாண்மக ளின்கெடிறு சொரிந்த, வகன்பெரு வட்டி" (ஐங்குறு. 47.)

153. சிறு கண் பன்றி பழுதுளி போக்கி—சிறிய கண்ணையுடைய பன்றியிற் பழுதானவற்றைப்போக்கி (?) அதன் தசையையும்,

பழுதுளி: உளி, பகுதிப்பொருள்விகுதி.

154 - 5. [பொருதுதொலை யானைக் கோடு சீராகத், தூவொடு மலிந்த காய கானவர்:] தூவொடு மலிந்த பொருது தொலை யானை கோடு சீராக காய கானவர்—மற்றுள்ள தசைகளோடேநிறைந்த வட்டிகளையும் தம்மிற் பொருதுபட்ட யானையினது கொம்புகள் காவுமரமாகக் காவிக்கொண்டு வந்த கானவருடைய,

156 - 7. செழு பல் யாணர் சிறுகுடி படினே இரு பெரு ஒக்கலொடு பதம் மிக பெறுகுவிர்—வளவிய பல புதுவருவாயினையுடைய சிறிய ஊரி லேதங்கிற் கரிய பெரிய சுற்றத்தோடே அவ்வுணவுகளை மிகவும் பெறுகுவிர்,

158. [அன்றவ ணசைஇ யற்சேர்ந் தல்கி:] அசைஇ அன்று அல் சேர்ந்து அவண் அல்கி—அவற்றைப்பெற்று இளைப்பாறி அற்றைநாளிராப்பொழுதும் அவர்களுடனே பொருந்தி அவ்விடத்தேதங்கி,

159 - 60. கன்று எரி ஒள் இணர் கடும்பொடு மலைந்து சேந்த செயலை செப்பம் போகி—கன்றின நெருப்புப்போன்ற ஒள்ளிய பூங்கொத்துக்களைச் சுற்றத்தோடேசூடிச் சிவந்த அசோகமரத்தையுடைய செவ்விய வழியைப் போய்,

161 - 2. அலங்கு கழை நரலும் *ஆரி படுகர் சிலம்பு அடைந்திருந்த †பாக்கம் எய்தி—அசைகின்ற மூங்கிலொலிக்கும் அரிதாயிழியும் வழிகளையுடைய சிலம்பைச்சேர்ந்திருந்த சீறூர்களைச்சேர்ந்து,

163 - 4. நோனா செருவின் வலம் படு நோன் தாள் மானம் விறல் வேள் வயிரியம் எனினே—பகைவரைப் பொறாமற் பொரும்போரினையும் வெற்றியுண்டாகும் வலியமுயற்சியினையும் மானத்தையும் வெற்றியையுமுடைய நன்னனுடைய கூத்தரேமென்று கூறுவீராயின்,

165. நும் இல போல நில்லாது புக்கு—நும்முடைய மனைபோல வாசலினில்லாதே உள்ளேசென்று,

166. இழவிர் போல கேளாது கெழீஇ—முன்பே இழமையுடையீர் போலே அவரைக்கேளாதே உறவுகொள்ளுகையினாலே,

167. சேண் புலம்பு அகல இனிய கூறி—சேணிடைவந்த நுமதுவருத்தந்தீரும்படி இனியமொழிகள் அவர்கூறி,

---

* ஆரி - அருமையை யுடையது.

† பாக்கம் - பக்கத்திலுள்ளது.

168. [பருஉக்குறை பொழித்த மொகைகண் மேவையொடு:] பொழிந்த செல்க்கண் பருஉ குறை வேவையொடு—பிகச்சொரிந்த செய்யிடத்தே பருத்த தசைஇடைத்து வெந்த பொரியலோடே,

169. குருஉ கண் இறடி டொம்மன் பெறுகுவிர்—சிறிய வடிகினை யுடைய இனிச்சோற்றைப் பெறுகுவிர்;

170 - 88. [எறிச் தருஉ மிலக்குமறுத் தாரமொடு, வேய்ப்பெயல் விளையுட் டேக்கட் டேறல், குறைவி ற்ற பருகி நறவுமகிழ்ந்து வைகறைப், பழஞ்செருக் குற்றதும் மனத்த நீர, வருவி தக்க மழ்நிலை வெண்காழ், வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை, மூளமாத் தொலிச்சிய வெம்சினப் பிளவை, பிணவுகா முறுக்கிய தடிபொடி விரைஇ, வெண் புடைக் கொளாட துய்த்ததலைப் பழனி, னின்புளிக் கலந்த மாமோ ராகக், கணைவளர் கொலிவரியுலை யூழ்த்து, மலையமை சாரல் கமழத் தழைஇ, நறுமல ரணிந்த காறிரு முச்சிக், குறமக ளாக்கிய வாலமிழ் வல்சி, பகலி யுகைக யார்வமொ டூணி, மகமுறை தருப் மனைதொறும் பெற் றவிர், செருச்செய் முன்பிற் குருசின் மூன்னிய, பரிசில் மதப்ப நீடிய நெறிசி, ரனைய தன்றலர் மலைநிலை வாட்]

அவரம் மலை*நிகை சாரி அயிலாத நாள்ள—அவளாலையுடைய மலை யினது உச்சியினுடி யாவரும்றடிய தன்மைத்தன்று, மிகவும் சிறப்பு மடைத்து;

ஆண்டுப் பெறுவனவற்றைக் கே_ராக,

வினவு காய் மூங்கில்ய தடிபொடி வரு மினை தவிர்த்த கடமான் கொழு குறை மூளவுமா தொலிச்சிய பைங்கிணம் பிளவை விரைஇ—பெண ணுடைய காய் ஓடிகடிந்த உடம்பி.ற்த ந கோடே நழிபருகின்ற விசையைக் கெடித்துக்கொன்ற கடமானிடை கொழுவிய தசையையும் எய்ப்பன்றியைக் கொன்ற பசுத்தினைதையுடைய பிராக்கடாட்ட ஏ சகையும் கலந்து,

வேய் பெயல் விளையுள் தே க ந தேறல குறைவு இன்று பருகி— நங்கிற்குழாய்க்குளோ பெதகையுடைய முதுமை தொலைவர்† கட் டெளிவைத் குறைவின் முக நீரம்பவுண்டு,

தசை மகிழ்ந்து— பின்னர் தெலைந்தமைதத கோ உண்டுமகிழ்ந்து,

முற்படக கூறிய தசைகளோத நின்ற இடையே தேறலைப்பருகி, பின் நறவுமகிழ்ந்தெனக,

வைகறை பழஞ்செருக்கு உற்ற தும் மனதர் நீர—விடியற்காலத் தக்களாருண்டு மகிழ்ச்சியுற்ற தும்முடைய மதத்தீரும்படி,

---

* குறை - குறைக்கப்பட்டது.

† கள் மூங்கிற்குழாய்க்குள் வ கர்பெறுமு முற்றுமென்பதை, "தம் பகம் பழுனிய தீம்பிழி" (பதிற் 81) எ.ன்பதனாலுணர்க.

வைகறையனந்தலென்க.

அருவி தந்த பழம் ஊழ்த்து சிதை வெள் காழ் மா—நீர்கொண்டுவந்த பலாப்பழம் செவ்வியழிந்து உதிர்ந்த வெள்ளிய விதையில மாவையும்,

வெள் புடை கொண்ட நுய் தலை பழனின் இன் புளி உலை மோர் ஆக கலந்து—வெள்ளிய புறத்தைக்கொண்ட ஆரத்தை இடத்தேயுடைய புளியம்பழத்தின் இனியபுளிப்பையும் உலையாகவார்த்த மோருக்கு அளவாகக் கலந்து,

கழை வளர் நெல்லின் அரி வழை * அமை சாரல் கமழ துழைஇ ஆக்கிய—மூங்கிலிலேநின்றுமுற்றிய நெல்லினரிசியைச் சுரபுன்னைநெருங்கிய மலைச்சாரலெல்லாம் நாறும்படியாகத் துழாவியாக்கிய,

வால அவிழ் வல்சி—வெள்ளிய சோறாகிய உணவை,

நறு மலர் அணிந்த நாறு இரு முச்சி குறமகள்—நறியமலரைச் சூடின நாறுகின்ற கரிய மயிர்முடியினையுடைய குறச்சாதியின் மகளாக்கியவென்க.

கள்ளுண்டபின்பு அனந்தல்நீரச் சோற்றைப் பெறுகுவிரென்க.

அகம் மலி உவகை ஆர்வமொடு அளைஇ—நெஞ்சுநிறைந்த மகிழ்ச்சியையுடையராய் விருந்தினரைப்பெற்றேமென்னும் ஆசையோடே நெஞ்சுகலந்து,

மக முறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்—தத்தம்பிள்ளைகளைக் கொண்டு முறை சொல்லித் தடுக்கையினாலே மனைகடோறும் பெறுகுவிர்;

அண்ணன், அம்மானென்றாற் போல்வன முறை.

ஏறி தரூஉம் இலங்கும் மலை தாரமொடு—தாங்கள் உச்சிமலையிலே ஏறிக் கொண்டுவரும் விளங்குகின்ற மலையிற் பண்டங்களோடே,

அவை: சந்தனம், அகில், பொன், மணிமுதலியன

தடுப்ப மனைதொறும் தாரத்தோடே வல்சியைப் பெறுகுவிரென்க.

செரு செய் முன்பின் குருசில் முன்னிய பரிசிலை மறப்ப நீடலும் உரியிர்—ஆண்டுப்பெற்றவற்றாலே போரைச்செய்கின்ற வலியையுடைய நன்னனிடத்துப் பெறக்கருதிய பரிசிலைமறக்கும்படி நீட்டித்திருத்தலுமுரியிர்;

189 - 91. நிரை இதழ் குவளை கடி வீ தொடிலும் வரை அரமகளிர் இருக்கை காணினும் உயிர் செல வெம்பி பனித்தலும் உரியிர்—நிரைத்த இதழையுடைய குவளையில் தெய்வம்விரும்புதலிற் கடியவாகிய பூக்களைக் கிட்டிலும் ஆண்டை வரையரமகளிருடைய இருப்பைக்காணினும் உயிர்போம்படி வெதும்பி நடுக்குதலுமுரியிராகையினாலே பலகாற்றில்லாது நிலனாடு படர்மின் (192) என்னினை முடிக்க.

— இத்துணையும் அசையுநற்புலமும், வல்சியும் சேரக்கூறினார்.

192. † [பலகாணில்லாது நிலநாடு படர்மின்:]

---

* பா. வழையமல்.

† இதற்கு உரை கிடைக்கவில்லை.

193 - 5. [விரோபுர மிழத்தலின் கேழ லஞ்சிட, புழைதொறு மாட்டிய விருங்க ணரும்பொறி, யுடைய வாறே:] ஆந்த கேழல வீரே புரம் கிழத்தலின் அஞ்சி புழைதொறும் மாட்டிய இரு கல் அரு பொறி உடைய—வழிகள், பன்றி முற்றின தினைப்புனதனை *சொக்குகையினுலே இதற்குஞ்சிச் செல்வழி கடோறும் †கொஞ்ந நிலைதந்த பெரிய கற்பாறிகளையுடைய ; அதையி னுலே,

195 - 6. [கள்ளிரு ளலரி, விரிதர விடியல வைகினிர் கழிமின்:] கள் இருள் வைகினிர் அலரி விரிதர விடியல் கழியின்—செறிந்த இருட்காலத் தே தங்கினிராய் ஞாயிற்றின்கதிர் விரிதர விடியற பொழுதிலே போவீர் ;

197. நளிந்து பலர் வழுகா வெப்பம் நுணினின்—செறிந்து பலரும் போகாதவழியைப் போகத்துணிவீராகின், அவ்விடம்,

198 - 9. [முரம்பு கண்ணுடை பரலவர் பொழிற், கராதபாம் பொடுங்கும் பயம்புமா ருளவே.] ‡முரம்பு கண்ணுடை யுலர்ந்த பரல ஆயல போழ் வில் பாம்பு கரந்து ஒடுங்கும் பயம்பும் உளவே—மேட்டுநிலம் தம்மிடத் திலேயிண்ட பரற்களையுடைய பாளைநிலத்திற் பிளவில்லை பாம்பு மறைந்து கிடக்கும் குழிகளுமுள,

உம்மையாற் புலி முதலியவாகுளி குழிகளுமகொள்க. மாரு, அசை.

200. குறிகொணர் மரம்பகர் படி தோகை—அபயவம்மை மனதா லே குறித்தலை யகொண்டு வில் கிறகு தர களிலேபோற்க் கொடிபபார்த்தி,

201. செறி தொடி விதலியா கைதொழுஉ பழ்ஸ— செறிந்த வள யினையுடைய விதலியா அபயாம்பு ரா மகிழ்மையி னகையாற்றொழுது வாழுந்த,

202. [வறிது மெறியார் இ வலுலியாக கழும்:] மறி வறிது ஓரி இ வலம் செயா கழியி:—மிக குதிகொள்ளும்வழ்ப்பு ரா சிறந்தகலப்பாய வலபபகத்து வழியை நமகுவழியாகச் செயதுகொணடு போவீராக,

வலம், ஆகுபெயர்.

203. [புலந்து புனிறு போகிய புனஞ் ழு குறவா:] புனிறு போகிய புனம் குழு குறவர் புலந்து—ச தினைமகர்துழுத்தி நிகிசபபுடைதனைக காத்தற்குச்சூழ்ந்த குறவர் நிகிசயழிய நடந்தகு செயதலி,

புலர்ந்தென்பதுபாட மாயி:, முறையெனக.

204. உயர் நிலை இதணம் ஏறி வகை புடைஇ—உயர்ந்த நிலையிலை யுடைய பரணிலேயேறி வகையைக்கொடி,

---

* சொக்குகை - இவகே உணடு குறையசசெயகை.

† கொஞ்சி - பொருத்தி.

‡ முரம்பு - பருக்கைக்கலைகளையுடைய மேட்டுநிலம்.

205. அகல் மலை இறும்பில் துவன்றிய யானை—அகன்ற மலையிற் குறுங்காட்டிடத்தே நிறைந்த யானைகளினுடைய,

206. பகல் நிலை தளர்க்கும் கவண் உமிழ் கடு கல்—பகற்பொழுதே நிற்கின்ற நிலையைக்கெடுக்கும் கவண் காலுகின்ற கடிய கற்கள்,

பகைநிலைதளர்க்குமென்று பாடமாயின், பகைத்த நிலையென்க.

207 - 10. [இருவெதி ரீர்ங்கழை தத்திக் கல்லெனக், கருவிர லூகம் பார்ப்போ டிரிய, வுயிர்செகு மரபிற் கூற்றத் தன்ன, வரும்விசை தவிராது:]

உயிர் செகு மரபின் கூற்றத்தன்ன—உயிர்களை போக்குமுறையை யாலே கூற்றத்தையொக்கும்; அவைதாம்,

கரு விரல் ஊகம் பார்ப்போடு கல்லென இரிய—கரிய விரலையுடைய குரங்குகள் * பார்ப்போடே கல்லென்னுமோசைபடக் கெடும்படியாக,

இரு வெதிர் ஈர்ங்கழை தத்தி விசை தவிராது வரும்—பெரியமூங்கி லினது பசிய கோலைக்கடந்து வருகின்றவிசை மாறாதுவரும்;

மரம் மறையா கழிமின்—அதற்கு மரங்களிலே ஒதுங்கிநின்று போவீராக,

குறவர் (203) ஏறிக் கைபுடையூஉத் (204) தளர்க்குங்கல் (206) கூற்றத் தன்ன (209); அவை இரியத் (208) தத்தி (207) விசைதவிராதுவரும் அதற்கு மரமறையாக் கழிமின் (210) என்க.

211 - 2. உரவு களிறு கரக்கும் இடங்கர் ,டுங்கி இரவின் அன்ன இருள் தூங்கு வரைப்பின்—வலியயானையை விழுங்குமுதலைகள் தங்கப் பட்டு இராக்காலத்தை யொத்த இருள்செறியு † மிளைகளையும்.

213. குமிழி சுழலும் குண்டு கயம் முடுக்கர்—குமிழிகள் சுழன்று வரும் ஆழ்ந்தநீரறாத மடுக்களையுடைய முடுக்கரையுமுடைய,

முடுக்கர் - நீர்குத்தின இடங்கள். முடுக்கரையுடைய யாறு (214).

214. அகழ் இழிந்தன்ன கான்யாறு நடவை—ஏறுதற்கும் இறங்கு தற்கும் அரியவாகையினாலே அகழிலே இழிந்தாற் போன்ற காட்டாற்றுவழி,

215. ‡ வழூஉம் மருங்கு உடைய—காலோடுமிடங்களையுடைய, அவ் விடத்திற்கு,

215 - 8. [வழாஅ லோம்பிப், பருஉக்கொடி வலந்த மதலை பற்றித், துருவி னன்ன புன்றலை மகாரோ, டொருவி ரொருவி ரோம்பினிர் கழிமின்:]

துருவின் அன்ன புன்றலை மகாரோடு—செம்மறியாட்டினை யொத்த § புற்கென்ற தலையினையுடைய பிள்ளைகளோடே,

---

* பாரப்பு - இங்கே குரங்குக்குட்டி; (தொல். மரபு. சூ. 4-5. பேர்.)

† மிளை - காவற்காடு. ‡ வழூஉம் - வழுக்கும். § புற்கென்ற - சிவந்த.

வலந்த பருஉ கொடி மதலை பற்றி வழாஅல் ஓம்பி—மரங்களிற் சுற்றிக் கிடக்கின்ற பரிய கொடியாகிய பெரிய பற்றுக்கோட்டைப் பிடித்துக் காலோடு தலைப் பரிகரித்து,

ஒருவிர் ஒருவிர், ஓம்பினிர் கழிமின்—ஒருவிரை யொருவிர் பாதுகாத்துப் போவீராக;

219. அழுந்து பட்டு அலமரும் * புழகு அமல சாரல்—கிழங்கு தாழ வீழ்ந்து அசையும் மலையெருக்குநெருங்கின பக்கமலையில்,

220 - 21. [விழுந்தோர் மாய்க்குவ குண்டுகயத் தருகா, வழும்புகண் புதைத்த நுண்ணீர்ப் பாசி:] விழுந்தோர் மாய்க்கும் குண்டு கயத்து அருகா கண் புதைத்த நுண் நீர் பாசி வழும்பு—வீழ்ந்தோரை மறைக்கும் ஆழத்தையுடைய குளங்களுக்கு அருகாக இடமறைதற்குக்காரணமாகிய நுண்ணிய நீர்மையையுடைய பாசியினது குற்றம்,

† "வழும்பறுக்க கில்லாவாந் தேரை - வழும்பில்லீர்" என்றார் பிறரும்.

222. அடி நிலை தளர்க்கும் அருப்பமும் உடைய - அடி ஊன்றியிட்ட நிலையை ஓடப்பண்ணும்; அதுவுமன்றி அவ்விடம் போதற்கு அருமையையுமுடைய; அதற்குப் பரிகாரமாக,

223 - 4. முழுநெறி அணங்கிய நுண் கோல வேரலோடு எருவை மெல் கோல கொண்டனிர் கழிமின்—வழிமுழுதும் பின்னிவளர்ந்த நுண்ணிய கோல்களையுடைய இறுகுங்கிலோடே கேழத்தினது மெல்லிய கோல்களையும் பற்றுக்கோடாகப் பிடித்துப் போவிர்;

இத்துணையும் ஆற்றின் தன்மையினளவு (67) கூறினார்.

225 - 8. [உயர்நிலை மாக்கற புகர்முகம் புதைய, மாரியி னிகுதரு விலலுமிழ் கடுவகனைத், தாரொடு பொலிந்த விளைநவில் யானை குழியிற் பொலிந்த:]

புகர்முகம் புதைய குழியின் பொலிந்த உயர் நிலை மா கல் வினை நவில் யானை—புகரையுடைய முகமறையும்படி முகபடாததாற் பொலிவுபெற்ற உயர்ந்த நிலையினையுடைய பெருமையையுடைய மலைபோலும் போர்த்தொழிலிலே பயின்ற யானையினையும்,

மாரியின் ‡இகுதரு வில உமிழ் கடு கனை—மழைபோலத் தாழ்ந்து விழும் விலலுக்கான் றகடிய அம்பினையுமுடைய,

---

* புழகு : குறிஞ்சி. 96; "பகன்றையும் பலாசு மகன்றலைப் புழகும்" (பெருங்கதை, மாசனமகிழ்ந்தது, 27.)

† நாலடியார், கயமை, 2.

‡ இகுத்தல் - சொரிதல்; "இகுத்த கண்ணீர்" (புறநா. 143.)

நிரோடு பொலிந்த மூத்த புரிசை (229) தூசிப்படையோடே பொலிவுபெற்ற பழைய மதில்.

மதில் - ஆகுபெயராய்த் திருப்பதியையுணர்த்திற்று. என்றது காரியுண்டிக்கடவுளுடைய படைமிகுதிகூறிற்று. அன்றிப் பகைப்புலத்தை அழித்தற்கும் அந்நிலத்தைக் காத்தற்கும் நன்னன்வைத்த படையுமாம்.

228 - 9. [சுடர்ப்பூ விலஞ்சி, யோரியாற் றியவின் மூத்த புரிசை:] சுடர் பூ இலஞ்சி யாறு ஓர் இயவின் மூத்தபுரிசை—ஒளியையுடைய பூக்களையுடைய மடுவினையுடைய யாற்றுக்கரையில் ஒருவழியினையுடையவூர்.

'ஓராற்றியவு' பாடமாயின் ஒருப்பட்ட வழியென்க.

இனி அம்பையுடைய தூசிப்படையோடுபொலிந்த யானையென்று யானைக்கு அடையாக்கி அவ்வியானையினுடைய பூக்களெழுதின முகபடாம் போலே உயர்நிலைமாக்கற புகர்முகம் புதையப் பொலிந்த சுடர்ப்பூவையுடைய புரிசையென்றுமாம்; இன்னும் யானையின் மத்தகம் போலே பொலிந்த சுடர்ப்பூவையுடைய புரிசையென்றுமாம்; இன்னும் யானையின் மத்தகம்போலே பொலிந்த சுடர்ப்பூ விலஞ்சியையுடைய உயர்நிலைமாக்கல்லையுடைய புரிசையென்பாருமுளர். அவர் சுனையிடத்து மேலெழுந்த குவளைமுதலியவற்றினரும்புகள் தலைசாய்ந்து கறபுதையக கிடந்ததற்கு யானையின் மத்தகத்துப் புகரை உவமையென்று கொள்வர்.

230. [பராவரு மரபிற் கடவுட் காணின்:] புரிசை (229) பராவு அரு மரபின் கடவுள் காணின்—கோயிலிற் பராவுதற்கரிய முறைமையினையுடைய கடவுளைக்கண்டீராயின்,

231. [தொழாநிர் கழியி னல்லது:] நீர் தொழா கழியின் அல்லது—நீர் வணங்கிப்போம் அத்தனையல்லது,

நீரென்பது குறுகிநின்றது. இனித், தொழாநிரென்பது * மறையன்றித் தொழுதென்று பொருடருமேனுமுணர்க.

231 - 2 வறிது தும் இயம் தொடுதல ஓம்புமின்—சிறிது தும்முடைய வாச்சியங்களைத் தீண்டுதலைக் காப்பீராக; அதற்குக் காரணமென்னையெனின்,

232 - 3. [மயங்குதுளி, மாரி தலையுமவன் மல்லல் வெற்பே:] அவன் மல்லல் வெற்பு மயங்கு துளி மாரி தலையும்—அவனது வளவிய நவிரமென்னுமலை மயங்கின துளியையுடைய மழையை இடைவிடாமற்பெய்யாநிற்கும்;

---

* மறை - எதிர்மறை.

என்றதனுட்பயன்: வாச்சியங்களும் கூனைத்து முமக்கும் போதலினென் பதாம்.

234 - 5. [அலகை யன்ன வெள்வேர்ப் பீலிக், கலை மருஞ்ஞை கட்சி பித் தளரினும் :]

*அலகை அன்ன வெள் வேர் பீலி மருஞ்ஞை—பலகையையொத்த வெள்ளிய வேரினையுடைய பீலியையுடைய மயில்,

கட்சியில் கலவம் தளரினும்—அக்காட்டிடத்தே ஆடுதற்குவிரித்த தோபத்தினை பாரத்தாலே ஆடமாட்டாது சிற்பினும்,

236 - 7. [கடும்பதைக் கோடியர் மகாஅர் ஆர்ப்ப, நெடுங்கழைக் கொம் பர்க் கடுவ ளுகளினும்:]

நெடு கழை கொம்பர்—நெடிய மூங்கில்கள் வளர்ந்தவிடத்தே,

கடு பறை கோடியர் மகாஅர் ஆர்ப்ப—வெல் உகரினும்—கடிய பறை யினையுடைய கூத்தருடைய பின்னைகளே ஆர்க்க குரவர்பாடியினும்,

238 - 9. [சேர்கொ ணெடுவரை கேமியிற் றெரிந்த, சூர்புக லரிக் கத்துப் பிரசங் காணினும்:]

† சேர் கொள் நெடு வரை சூர் புகல் அருக்கத்து—செவ்வையைத் தன் னிடத்தேகொண்ட நெடியமலையிலே தெய்வம் விரும்பி வந்த பக்கமலையிலே,

கேமியிற் தொடுத்த பிரசம் காணினும்—பற்றருவுள்போல்வைத்த தேனிறுகிக் காணினும்,

240 - 41. [ஞெரேரெ - கோக்க லோம்புமி னுரித்தன்று, நிரை செலன் மெல்லடி நெறிமாறு படுகுவிர்:]

ஞெரேரென கோக்க ளுரித்தற்று—கடுகப்பார்த்தல முமக்குரிய தொழிலன்று ; அதற்குக் காரணமென்னையெனில்

மெல் அடி நிரை செலல் நெறி மாறுபடுகுவிர்—மெல்லிய அடியாலே நிரைத்துச் செல்லுதலுடைய வழிதப்புவிர்,

ஓம்புமின்—ஆதலால அங்ஙனம் கோக்குதலை ஒழிதலோம்புமின்;

இதுவும் ஆற்றினது அருமை கூறினிற்று.

242. மலை சேர் வகுக்கின் காடுதலை படுமே—மலையைச் சேர்ந்த வழியினையுடைய காட்டிடத்தேசெல்லின்,

---

* அலகு - பலகை ; சோழி ; பதையமென்பது பலகையெனைமரு மிந்தென்பர்.

† சேர்கொள் நெடுவரை - செங்குத்தாகமலை.

248.—3. [கழுநீர் சேணோன் கொடு போகி விழுநிணங் கொள்ளு மோசி னஞ் செருக்கி; நிறப்புன் கூர்ந்த நிலத்தின் மருப்பி..தொறித்தெடுத் திகுத விரும்பிணை யெருத்தி. விருடுணிச் தன்ன வேனற் காளின் ..முளிகடை பிழைத்த காடுபடு நீயி, னளிபுகை கமழா நிறையினிர் மிசைத்து :]

† கழுநீர் சேணோன் நிறம் புன் கூர்ந்த வெொடு போகி தெறி தெட இடத்த ஏனம்—பரணின்மேலிருந்த யானைமுதலியவற்றிற்கு எட்டாதவர் எய்த மருமத்தினிற்புண்மிகுதற்குக்காரணமான அம்போடேபோகி தெறிதெட இடத்த பன்றி.

நிலம் நின் மருப்பின் இழுதின் அன்ன வால் நிணம் செருக்கி, இரு பிணர் எருத்தின் இருள் துணிதன்ன ஏனம்—நிழற்குளே அகழ்ந்ததின் கையிலுலே மண் நின்றதெய்த்த கோம்பிலையும் கெய்யிழுதையொத்தவெள் ளியநிணம் செருக்கும்படி கரிய சருச்சரையையுடைத்தாகிய கழுத்தினையு முடைய இருள் அற்றக்கிடந்தாற்போன்ற ஏனம்,

செருக்கெனைத்திரிக்க.

ஏனம் காணின் முளி கழை இழைத்த காடு படு நீயின் களி புக கமழாத ‡ இறையினிர் மிசைதது—ப்நியைசகண்டராயின் உலர்த்தமூங்கி தம்மில இழைத்ததனுற் பிறந்த காடெங்குமுளவாகிய நீயிலுலே செறிந்த புகைநாறுமல § உக்கி மயிர்போகச்சிவித் நின்று,

250 - 51. [தனைதத் தினிதத மணிமரு டெண்ணீர்க், குவளையம பைருஞ்ஞை யசைவிடப பருகி:]குவளை அம் பைஞ்ஞை தகள் அற துளிந்த மணி மருள் தென் நீர் அசைவு விட பருகி—குவளையாம அழகிய பசியநிறத்த வாகிய சுனையில் கலக்கமறத்தெளிந்த பளிக்கென்றமருளுக தெளிந்தநீரை வழியின் இனைப்புதநிரும்படி குடிதது,

அசைவு, விகாரம்.

252. [மிகுத்துப் பதல்கொண்ட பருஉக்கட் பொதியினிர்:] பருஉ கண டதம் மிகுத்து கொண்ட பொதியினிர்—பருத்த இடதையுடைய தசை யாகிய உணவை முழுதுதின்னுமல மிகுத துவைதத்துக டிகொண்ட பொதியின்சுமையினையுடையிராய்,

---

பி - ம். இசைத்த, பிசைதத.

† குறிஞ்சி. 40-41 பார்க்க, பன்றியைபபிடிப்போர் அதுவரும் வழியில குழியை வெட்டிவைத்து அதனை மறைத்துவிட்டுத தாம் பரணின் மேலிருப்பார்; (மதுரை. 294 - 5.)

‡ இறுவுதல் - செருபபிலவாட்டி மயிர்போகச்சிவுதல்

§ வக்குதல்-வாட்டுதல், "வல்பெரும் பன்றிதன்னை யெரியினில வக்கி", "கொழுபபரிதது, வத்தனகொண் டெழுத்தழலில வக்குவன் வக்து மித்த" (பெரிய. கண்ணப்ப. 117, 145.)

253. புன் கை போகிய புன்றலை மகாரோடு—வனை கையினின்றும் போதற்குக் காரணமான சிவந்த தலையினையுடைய பிள்ளைகளோடே,

*பிள்ளையைப்பெற்றால் வனையிடாராகலின், வனைபோதற்குப் பிள்ளைகள் காரணமாயினார்.

254 - 5. [அற்கிடை கழிதலோம்பி யாற்றது, மில்புக் கன்ன கல்லளை வதிமின்:] இடை கழிதல் ஓம்பி ஆற்றதும் இல் புக்கன்ன கல அளை அற்கு வதிமின்—அவ்விடத்துப் போதலைப்பரிகரித்து வழியிடத்தனவாகிய நும் மில்லிலே புக்காலொத்த கன்முழைஞ்சுகளிலே இராக்காலத்துத் தங்குவிர்;

இஃது அசையுநற்புலமும் வல்சியும் சேரக்கூறிற்று.

கானத்துப்படின் (242) மிசைந்து (249) பருகிப் (251) பொதியினிராய் (252) மகாரோடே (253) கழிதலோம்பி அற்கு (254) வதிமின் (255) என்க.

256. அல் சேர்ந்து அல்கி அசைதல் ஓம்பி—இராக்காலத்திற்கு எல்லாருங்கூடித்தங்கி இளைப்பாறி,

257. வான் †கண் விரிந்த விடியல் ஏற்றெழுந்து—வானிடத்தே ஞாயிற்றின் கதிர் விரிந்த விடியற்காலத்தே துயிலுணர்ந்தெழுந்து,

258. கான் அகப்பட்ட செ நெறி கொண்மின்—காட்டிடத்தே கிடந்த செவ்விய நெறியைப் போவீராக;

259 - 65. [சயங்கண் டன்ன வகன்பை யங்கண், மைந்து மலி சினத்த களிறுமத னழிக்குந், துஞ்சுமரங் கடுக்கு மாசுணம் விலங்கி. யிகந்துசேண் கமழும் பூவு முண்டோர், மறந்தமை கல்லாப் பழனு மூழிறந்து, பெரும்பயங் கழியினு மாந்தர் துன்னா, ரிருங்கால் வீயும் பெருமரக் குமாமுந்:]

அகல்பை அம் கண் மைந்து மலி சினத்த களிறு மதன் அழிக்கும் ‡துஞ்சு மரம் கடுக்கும் மாசுணம் விலங்கி—அகன்ற படத்தினையும் அழகிய கண்ணினையுமுடைய வலிமிகுகின்ற சினத்தவாகிய யானைவலியைக் கெடுத்து விழுங்கும் விழுந்துகிடக்கின்ற பெருமரங்களையொக்கும் பெரும் பாம்பு கிடக்கின்ற வழியைவிலங்கி,

பெரு பயம் கழியினும் ஊழ் இறந்து இகந்து சேண் கமழும் பூவும் உண்டோர் மறந்து அமைகல்லா பழனும் மாந்தர் துன்னார்—அவற்றாற்கொள்ளும் பெரியபயன் கொள்ளாமற்போகிலும் முற்காலம் அடிப்பட்டுப் போந்த

---

* பா. பிள்ளைப்பெற்றால்.

† உலகிற்குக் கண்ணாதலின், சூரியனைக் கண்ணென்றார்; "வான்கண் விழியா வைகறை யாமத்து" (சிலப். 10 : 1); "எண்ணுக்கு வரும்புவனம் யாவினுக்குங் கண்ணாவா னிவனே யன்றோ" (வி. பாரதம். அருச்சுனன். 43.)

‡ துஞ்சுதல் தூங்குதலாதலின், அஃது இங்கே விழுந்துகிடத்தலாயிற்று.

முறைமையைக்கடந்து தாம் நிற்கின்ற இடத்தைக்கடந்து* தூரியநிலத்தே சென்றுகாறும் பூவையும் நுகர்ந்தவர் மறந்து உயிர்வாழ்தலாற்றாத பழங்களையும் தெய்வங்களன்றி மானிடர் அணுகாராகையினாலே,

ஊழிறந்து துன்னாரென்க.

இரு கால வீயும் பழனும் கயம் கண்டன்ன பெரு மரம் குழாமும்—நீளுங்காம்பையுடைய அப்பூக்களையும் பழத்தையும் குளத்தைக்கண்டாற் போலும் குளிர்ச்சியையுடைய பெரியமரக்குழாத்தினையும்,

266 - 7. [இடனும் வலனு நினையினிர் நோக்கிக், குறியறிந் தவை யவை குறுகாது கழிமின்:] நினையினிர் குறி அறிந்து இடனும் வலனும் நோக்கி அவை அவை குறுகாது கழிமின்—யான்கூறியதனை நினைத்து அவற்றின் குறிகளையறிந்து இடத்தினும் வலத்தினும் பார்த்து † அவையிற்றை அவையிற்றை அணுகாமற் போவீர்;

விலங்கி நோக்கிக் குறுகாது கழிமினென்க.

இது சோலை (69) கூறிற்று.

268 - 9. கோடு பல முரஞ்சிய கோளி ஆலத்து கூடு இயத்தன்ன குரல் புணர் புள்ளின்—கொம்புகள்பலவுமுற்றிய பழத்தைத் தன்னிடத்தே கொண்டதாகிய ‡ ஆலமரத்திடத்தேகூடின பலவாச்சியங்களையொத்த பல ஓசையுங்கூடின பறவைத்திரளையுடைய,

பறவைத்திரளையுடைய நாடுகாணனந்தலையென்க.

270. நாடு காண நீன தலை மெல்மெல அகன்மின்—நாடுகளை யெல்லாம் காணலாயிருக்கின்ற அகன்ற இடத்தையுடைய மலையை மெல்லமெல்லப் போவீர்;

நனந்தலை, ஆகுபெயர்.

271. மா நிழல் பட்ட மரம் பயில் இறும்பின்—பெரியநிழலுண்டான மரம் நெருங்கின குறுங்காட்டாலே,

272. [ஞாயிறு தெறாஅ மாகநனந்தலை:] மாகம் ஞாயிறு தெறாஅ நனந்தலை—ஆகாயத்தில் திரியும் ஞாயிற்றாற் சுடப்படாத அகன்ற இடத்தையுடைய குன்றம் (271).

---

* மலைபடு. 282 - 3. † அவையிற்றை - அவற்றை.

‡ ஆலமரத்திற்கூடின பறவைகளின் பலவகை ஒலியைப் பிறரும், இப்படியே பாராட்டிக் கூறினர்; (சீவக. 93, 828; திருவிளை. நகர. 67.)

§ நன் அகரவீற்றுரிச்சொல்; (தொல். உரி. சூ. 78.)

273 - 5. தேஎம் மருளும் அமையமாயினும் *இரு வெள் நிலவுமா தேர்பு கொட்கும் குறவரும் மருளும் குன்றத்து படிவே—நிசைதெறி யாமலமயங்கும் இராக்காலமாயினும் முறியாத வலியமில்லையுடையராய் விலங்குதேர்ந்துநின்று சுழன்றதிரியும் குறவருமுட்படமயங்குங் குன்றத்தே நீங்கள்செலலின்,

276 - 7. [அகன்கட் ரறைத அருவிக கலைன, விரைக லோம்பி தும் மியங்க டொடுமின் :] இயலகல ரும்பி அலை கண பாலறை அகன்றிகல லென தும் இயங்கல் தொடுமின்—அவ்வழியைப போதலேப் பரிகரித்த அகன்ற இடத்தையுடைய பாறையிலே குளிறு கல்லென்னும் ஓசைபட நும்முடைய வாச்சியங்களை வாசிப்பீராக ;

278 - 9. பாடு இன் அருவி பயம் கெழு நீலிசை காமர் காத்து உலறும் காசவர் உளரே—ஓசையினிதாகிய அருவியின்பயன் பொருந்திய உசிமலையிலே காட்டைக காதலிருக்குங் காசவர் பலருமுளர் ;

ஏகாரம், ஈற்றசை.

280 - 81. நீலி துறை வரீஇய மதவு அழி மாக்க புலை படு பூசலின்—நிலையாய்ப்பிடிப்போம்துணையைத்தப் ! ஆயுதிலிலபுகை வலியழிந்த ! மாக்கள் புலலிலே யழுந்துகின்ற வருத்தங்கண் விலக்கெதிர்ப்பாரைப் போல,

281 - 6. [விரைகதுவல லெய்தி, யுலடதகினிய பழனும் கண்டோர், மலிதற் கினிய பூவுங் காடியு, மூற நிரம்பிய வாதவா முகுதற, தும்மி லொஞ்சத் தவலம்வீட, விம்மெ ன கடும்போ டினிசி ராகுவிர்:]

கெஞ்சத்து அவலம் வீட விரைத்து வ ளைந்து—நுசை பயக்கத்தாற் கலங்கி அறிவழிந்த கெஞ்சிற கேடி போம்படி ஓடிக கடுக வருதலோல,

! உணடற்கு இனிய பழனும் கண்டோர் மலிதற்கு இனிய பூவும் காடியு—எலலாரும் உணடறகு இனியவாகிய பழங்களையுங் கலடவர்கள நுகிதற்கு இனியவாகிய பூக்களோடும் துயகுகுகாடி,

கீர் அவற்றை நுகாதத பின்பு.

அவர் வாறு நிரம்பிய ஆறு முகுதற—அகனமயவர் இலடிநுறு மிக்கவழி யை நுமக்குமுற்படப போலகிறலே,

---

"பூட்டுஞ்சே பிறவிறுடி" (சீவக. 1788) என்பதிற இருமீறனுக்கு விலலே உவமைகூறியிருததலால, இங்கே இருவஞ்சிலையென்புதற்கு இருமீனைப்போன்ற வலியவஞ்சிலையுடையவெனறு பொருள் கூறினும் பொருந்தும்.

† மாக்கள் - இயறகினையுடையார். ! உணடற்கினிய : மலைபடு. 358.

நும்மின் *இம்மென் கடும்போடு இனியிராகுவிர்—நும்முடைய இம்மென்னும் ஓசையையுடைய சுற்றத்தோடே மனமகிழ்வீர்;

287. அறிஞர் கூறிய மாதிரம் கைக்கொள்பு—திசைமயக்கம் காடியறிவார் கூறிய திசையையுட் கொண்டு,

288 - 9. [குறியவு நெடியவு மூழிழிபு புதுவோர்; நோக்கினும் பனிக்கு நோய்கூ ரடுக்கத்து:]

† புதுவோர் நோக்கினும் பனிக்கும் நோய் கூர் அடுக்கத்து—புதிய மாந்தர் கண்ணால் நோக்கினும் தலைநடுக்கும் நோய்மிக்க பக்கமலையிடத்து,

குறியவும் நெடியவும் ஊழ் இழிபு—குறியனவும் நெடியனவுமாகிய குவடுகளை முறைமைப்பட இழிந்து,

290. அலர் தாய ‡ வரி நிழல் அசையினிர் இருப்பின்—பூப்பரந்த பல வரிகளையுடையவாகிய நிழலிலே இளைத்திருப்பின்,

291. பல திறம் பெயர்பவை கேட்குவிர்—பலகூறுபாடுகளையுடையவாய் எழுகின்ற ஓசைகளைக் கேட்பீர்;

மாதோ, அசை.

292. கலை தொடு பெரு பழம் புண் கூர்ந்து ஊறலின்— முசுக்கலை தோண்டின பெரிய பலாப்பழம் புண்மிக்குத் தேனூறுகையினாலே,

293. மலைமுழுதும் கமழும் மாதிரந்தோறும்—மலைமுழுதும் அத்தேன் நாறுந் திசைகடோறும்,

294 - 6. [அருவி நுகரும வானர மகளிர், வருவிசை தவிராது வாங்குபு குடைதொறுந, தெரியிமிழ் கொண்டநும் மியம்போ லின்னிசை:] வாங்குபு வரு விசை தவிராது இமிழ் கொண்ட அருவி நுகரும் வானர மகளிர் குடைதொறும் நும் இயம் போல் தெரி இன் இசை—உள்ளபண்டங்களை வாங்கிக்கொண்டு வருகின்ற விசைதவிராது ஒலித்தலைக்கொண்ட ‖ அருவியை ஆடும் தெய்வமகளிர் அதனைக் ¶ கையாற்குடையுந்தோறும் நும்முடைய வாச்சியங்களைப்போல் தாளந்தெரிகின்ற இனியவோசையும்,

297 - 9. [இலங்கேந்து மருப்பி னினம்பிரி யொருத்தல், விலங்கன் மீமிசைட் பணவைக் காளவர், புலம்புக் குண்ணும் புரிவளைப் பூசல்:]

---

* சுற்றத்தார் இசைப்புலவராதலால், இம்மென்கடும்பென்றார்.

† மலைபடு. 398.

‡ இடையிடையே வெய்யிலும் கலந்திருத்தலின் தாயவரிநிழலென்றார்.

§ முசு - குரங்கின்சாதியிலொன்று; கலை - அதன் ஆண்.

‖ "தண்டா ழருவி யரமகளி ராடுபவே" (கலி. 40.)

¶ நீராடுவோர் அதிற்கையாற் பலவகையான வாச்சிய ஓசையைப்பிறப்பிப்பர்; (மதுரை: 363 ஆம் அடியின்கீழ்க்குறிப்பைப்பார்க்க.)

இலங்கல் மீமிசை பணவை கானவர் புலம் புக்கு உண்ணும்—மலையின் மேலிட்டபரணிற் கானவர் தினைப்புனத்தைப் புகுந்து தின்னும்,

இலங்கு ஏந்து மருப்பின் இனம் பிரி ஒருத்தல் புரி வளை பூசல—விளங்குகின்ற ஏந்தின கொம்பையுடைய தன்னினத்தைப் பிரிந்த *யானைத்தலைவனைப் பிடித்தற்கு விரும்பின வளைத்தலையுடைய ஆரவாரமும்,

300 - 301. [சேயனைப் பள்ளி யெஃகுறு முள்ளி, நெய்தெற விழுக்கிய கானவ ரழுகை:] சேய் அனை பள்ளி எய் எஃகு உறு முள்ளின் தெற இழுக்கிய கானவர் அழுகை—நெடிய முழையாகிய இருப்பிடத்தில் தங்கும் எய்ப்பன்றி தனது கூர்மையுறுகின்ற முள்ளால் எய்துகொலலுகையினாலே பட்ட கானவர் அழுகின்ற அழுகையும்,

302 - 4. [கொடுவரி பாய்ந்தென கொழுநர் மார்பி, னெடுவசி விழுப்புண் டணிமார் காப்பென, வறலவாழ் கூந்தற் கொடிச்சியர் பாடல்:] கொழுநர் மார்பில் கொடுவரி பாய்ந்தென நெடு வசி †விழுப்புண் தணிமார் காப்பென அறல் வாழ் கூந்தல் கொடிச்சியர் பாடல—தம் கணவர்மார்பிலே புலி பாய்ந்ததாகப் பட்ட நெடிய பிளத்தலையுடைய சீரிய ‡ புண்ணை ஆற்றுதற்குக் காவலென்றுகருதி அறலவீற்றிருந்த மயிரினையுடைய கொடிச்சியர்பாடும் பாட்டாலெழுந்த ஓசையும்,

305 - 6. தலை நாள் பூத்த பொன் இணர் வேங்கை மலைமார் இடூஉம் ஏமம் பூசல்— § முதல் நாளிலேபூத்த பொன்போலுங்கொத்தினையுடைய வேங்கைப்பூவைச்சூடுதற்கு மகளிர் புலிபுலியென்றுகூப்பிடும் ஏமத்தையுடைய ஆரவாரமும்,

வேங்கைவளைந்து பூவைக்கொடுத்தலின், அச்சந்தீர்ந்த பூசலென்றார்.

307. கன்று அரை பட்ட ‖ கய தலை மட பிடி—கன்று வயிற்றிலே யுண்டான மெல்லிய தலையினையுடைய மடப்பத்தையுடையபிடியை.

தலைமைவாய்ந்த ஆண்யானையை யானைத்தலைவனெனக்கூறுதல் மரபு; "ஊதத், தலைவனேயொத்துப் பொலிந்தது சந்திர சைலம்" (கம்ப. வரைக்காட்சி. 7.)

† விழுப்புண் - முகத்திலும் மார்பிலும்பட்ட புண்ணென்றார்; (குறள். 776 - பரி.)

‡ புண்ணை ஆற்றுதற்கு இசைபாடுதல் பாதுகாப்பென்பதை "ஆம் பலூதி, யிசைமணியெறிந்து காஞ்சிபாடி.....காக்கம் வம்மோ.....நெடுந்தகைபுண்ணே" (புறநா. 281) என்பதனாலுமறிக.

§ பழமொழி, 120.

‖ கய மென்மையையுணர்த்தும் உரிச்சொல்; (தொல். உரி. சூ. 24.)

308. வலிக்கு வரம்பாகிய *கணவன் ஓம்பலின்—வலிக்கு ஓரெல்லை யாகிய களிறு கவழந்தேடிக்கொடுத்துப் பாதுகாத்துப் போலகயினாலே,

309. ஒள் கேழ் வயம் புலி பாய்ந்தென—அப்போக்கினைக்குறித்து ஒளித்திருந்து ஒள்ளிய நிறத்தையுடைய வலியபுலி பாய்ந்ததாக,

309 - 10. கிளையொடு நெடு வரை இயம்பும் இடி உமிழ் தழங்கு குரல்—அப்பிடி தன்சுற்றத்தோடே நெடியமலையிடத்தேகூப்பிடும் இடி யோசைபோலும் முழங்குங்குரலும்,

இடியுமிழ்ந்த ஓசையை ஆகுபெயரான் உமிழ் என்றார்.

311. கை கோள் மறந்த கரு விரல் மந்தி—பார்ப்பைத் தன்கையால தழுவிக்கோடலை மறந்த கரியவிரலையுடையமந்தி,

312. அரு விடர் வீழ்ந்த தன் கலலா †பார்ப்பிற்கு—எடுத்தற்கு அரிய ஆழ்ந்த முழையிலேவீழ்ந்திறந்த தன்குட்டிக்கு,

கல்லாமை - ‡தனக்குரியதொழிலைக் கல்லாமை.

313 - 4 முறி மேய் யாக்கை கிளையொடு துவன்றி சிறுமை உற்ற கனையா பூசல்—தளிரைமேய்ந்துவளர்ந்த வடிவினையுடைய சுற்றத்தோடே நெருங்கி நோய்மிக்க விலக்கப்படாத ஆரவாரமும்,

மந்தி பார்ப்பிற்குத் துவன்றிச் சிறுமையுற்ற பூசலென்க.

315 - 6. கலை கை ஆற்ற காண்பு இன் நெடு வரை நிலை பெய்து இட்ட மால்பு நெறியாக—§முசுக்கலை ஏறமுடியாதென்று செயலற்ற காட்சி யினிய உயர்ந்தவரையிலே நிலைபேறுண்டாகக் கூட்டிகட்ட ‖கண்ணேணியே வழியாகச்சென்று,

---

கணவனென்பது அஃறிணையாண்பாற்பொருளிலும்வழங்கும்; "மா யா வேட்டம் போகிய கணவன், பொய்யா மரபிற் பிணவு நினைந்திரங் கும்" (நற். 103); "வங்காக் கிடந்த செங்காற் பேடை, யெழாலுற வீழ்ந் தெனக் கணவற் காணாது" (குறுந் 151.)

† குரங்கின்குட்டியைப்பார்ப்பென்றல், "பார்ப்புடை மந்திய மலை யிறந்தோரே" (குறுந். 278) என்பதனாலும் விளங்கும்.

‡ தனக்குரியதொழிலைக்கல்லாமையாவது தாயின்மார்பை இறுகப்பற் றிக்கொள்ள அறியாமை.

§ முருகு. 42 - ஆம் அடியின் கீழ்க்குறிப்பைப்பார்க்க.

‖ கண்ணேணியாவது கணுக்களிலேயே அடிவைத்து ஏறிச்செல்லும்படி அமைத்துள்ள மூங்கில; உச்சியிலுள்ள தேனிறாலை அழிக்கும்பொருட்டுச் செங்குத்தான மலையிலேறிச்செல்வதற்கு அதன் அயலில் இவ்விரண்டு மூங் கில்களைக்கூட்டியமைப்பது வழக்கம்; "மால்புடை நெடுவரைக் கோடு" (புறநா. 105.)

317. பெரு பயன் தொகுத்த தேம் கொள் கொள்ளை—பெரியபயனுண்டாகத் தேனைத் திரட்டிவைத்ததேனையழித்துக்கொண்ட கொள்ளையாலுண்டான ஆரவாரமும்,

318 - 9. [அருங்குறும்பெறிந்த கானவ ருவகை, திருந்துவே லண்ணற்கு விருந்திறை சான்மென:]

திருந்து வேல் அண்ணற்கு விருந்து இறை சான்மென—திருந்தும் வேலினையுடைய நன்னனுக்குப் புதிதாகக்கொடுத்தற்கு *இவற்றிற் கைக்கொண்டபொருள்கள் அமையுமெனக் கருதிச்சென்று,

அரு குறும்பு எறிந்த கானவர் உவகை—அழித்தற்கு அரிய †குறும்புகளை யழித்த கானவர் மகிழ்ச்சியிலுண்டான ஆரவாரமும்,

320 - 22. நறவு நாட்செய்த குறவர் தம் பெண்டிரொடு மான் தோல் சிறுபறை கலலென கறங்க வான் தோய் மீமிசை அயரும் ‡குரவை—நறவை நாட்காலத்தேகுடித்த குறவர் தம்பெண்டிரோடேகூடி மான்றோல் போர்த்த சிறுபறை கலலென்னும் ஓசைபடவொலிப்ப வானைத்தீண்டும் உச்சி மலையிலே ஆடுங் குரவைக்கூத்தின் ஆரவாரமும்,

323 - 4. [நல்லெழி னெடுந்தே ரியவுவந் தன்ன, கல்யா றொலிக்கும் விடர்முழங் கிரங்கிசை:] நல் எழில் நெடு தேர் இயவு வந்தன்ன ஒலிக்கும் கல் யாறு விடர் முழங்கு இரங்கு இசை—நல்ல அழகினையுடைய நெடிய தேர்கள் வழியிலே ஓடிவந்ததன்மையவாக ஒலிக்கும் கல்லின்மேலாவரும் யாறுகள் முழைஞ்சுகளிலேவீழ்ந்து மாறாதொலிக்கும் ஓசையும்,

325 - 7. நெடு சுழி பட்ட கடுங்கண் வேழத்து உரவு சினம் தணித்து பெரு வெளில பிணிமார் விரவு மொழி பயிற்றும் பாகர் ஓதை—காட்டாற்றின் நெடியசுழியிலே வீழ்ந்து அகப்பட்ட தறுகண்மையையுடைய யானையினது வலிய சினத்தைத் தணியப்பண்ணிப் பெரியகம்பத்திலே சேர்த்தற்குத் தமதேவற்றொழிலைச்செய்தற்குக்காரணமான §பேச்சுக்களைப்பேசி அவற்றிலே பயிலப்பண்ணும் பாகருடைய ஆரவாரமும்,

---

* இவற்றில் - இச்சிற்றரண்களில்.

† குறும்பு - பகைவர்தங்கும் சிற்றரண்.

‡ குரவை, இருபாலாரும் விரவி ஆடப்படுவதாதலின், குறவர் தம் பெண்டிரொடு அயருங்குரவையென்றார்; "மாயவன்றன் முன்னினொடும் வரிவளைக்கைப் பின்னையொடும்.....ஆடுங்குரவையோ தகவுடைத்தே" (சிலப். ஆய்ச்சியர்); "மாமணி வண்ணனுந் தம்முனும் பிஞ்ஞையு, மாடிய குரவையிஃது" (மணி. 19: 65 - 6.)

§ இப்பேச்சுக்கள் இன்னவென்பதை இப்புத்தகம் 203 - ஆம் பக்கத்தின் கீழ்க் (‡) குறிப்பாலுணர்க.

துவன்றுகையினாலே (346) மலைகளாகிய யானைக்குண்டாகின்றவொலி (348) பலதிறம்பெயர்பவை (291) மாதிரத்தியம்ப (348) அவற்றைக் கேட்குவிர் (291) என முடிக்க.

இருப்பிற் (290) கேட்குவிர் (291) என்க.

மலைக்கு யானையையுவமித்து அதன்கட்பிறந்த ஓசையைக் கடாமெனச்சிறப்பித்தவதனால், இப்பாட்டிற்கு மலைபடுகடாமென்று பெயர்கூறினார்.

349 - 51. [குரூஉக்கட் பிணையற் கோதை மகளிர், *முழவுத்துயிலறியா வியலு ளாங்கண், விழவி னற்றவன் வியன்கண் வெற்பே:]

அவன் வியன் கண் வெற்பு—அந்நன்னனுடைய அகன்ற இடத்தையுடையமலை,

குரூஉ கண் பிணையல் கோதை மகளிர்—பலநிறம் பொருந்தின இடத்தையுடையதாகிய பிணைத்தலையுடைய மாலையினையுடையமகளிர் ஆடற்கு ஏற்ற,

முழவு துயில் அறியா வியலுள் ஆங்கண் விழவின் அற்று—முழவு கண்ணுறக்கமறியாத அகன்ற ஊரிடத்துக்கொண்ட திருநாளையொத்துச் சிறந்திருக்கும் ;

352 - 3. கண் தண்ணென கண்டும் கேட்டும் உண்டற்கு இனிய பல பாராட்டியும்—காண்டற்கு இனியவற்றைக் கண்குளிரக்கண்டும் கேட்கப்படுவனவற்றைச் செவிகுளிரக்கேட்டும் உண்டற்கு இனிய பல உணவுகளைக் கொண்டாடியுண்டும்,

354 - 5. [இன்னும் வருவ தாக நமக்கெனத், தொன்முறை மரபினிராகி:] நமக்கு இன்னும் வருவதாக என தொல் முறை மரபினிராகி—நமக்கு மேலும் இந்நுகர்ச்சி உண்டாவதாகவென்று விரும்பிப் பழைய உறவான மக்களைப்போலும் முறைமையினையுடையிராய்ச் சிலநாள் தங்கி,

355 - 6. பல் மாண் செரு மிக்கு புகலும் திரு ஆர் மார்பன்—பலவாய் மாட்சிமைப்பட்ட †வஞ்சிமுதலியபோர்த்தொழில் மிக்குநடத்தலாலே உலகம்புகழுந் திருமகள் நிறைந்திருந்த மார்பினையுடைய நன்னனுடைய,

357. உரும் உரறு கருவிய பெரு மலை பிற்பட - உருமேறுமுழங்குந் தொகுதியையுடைய பெரியமலை நுமக்குப்பின்னாம்படி,

358 - 9. இறும்பூது கஞலிய இன் குரல் விறலியர் நறு கார் அடுக்கத்து குறிஞ்சி பாடி—அதிசயம்நெருங்கின இனிய யாழையுடைய விறல்பட ஆடுமகளிர் நறிய கரிய பக்கமலையிலே குறிஞ்சியென்னும் பண்ணைப்பாட,

---

* மதுரை, 327.

† வஞ்சி - போர்செய்தற்குப் பகைவர்மேற் செல்லுதல்.

குரல், ஆகுபெயர். பாடி, பாடவென்க.

360. கை தொழூஉ பரவி பழிச்சினிர் கழிமின்—நீரும் ஆண்டுறையும் தெய்வங்களைக் கையாலேதொழுது எம் குறை முடித்தால் நுமக்கு இவை தருதுமென்று பரவுக்கடன் பூண்டு வாழ்த்திப் போவீர்;

மரபினிராகிய (355) பாடிப் (359) பழிச்சி (360) மலை பிற்படக் (357) கழிமின் (360) என்க.

361. [மைபடு மாமலைப் பனுவலிற் பொங்கி:] பனுவலின் பொங்கி மை படு மா மலை—சூல் முதிர்வதற்குமுன்பு *எஃகுறு பஞ்சிபோலப் பொங்கிச் சென்று கார்காலம்வருமளவும் மேகம்கிடக்கும் பெரிய மலையிடத்தில்,

362. கை தோய்வு அன்ன கார் மழை தொழுதி—கை சென்றுபிடிக்குந் தன்மையையொத்த அணுகுதலையுடைய கரிய மேகத்திரள்,

363. தூஉய் அன்ன துவலை துவற்றலின்—வலியத் துவினாலொத்த துவலைகளைத் தூவுகையினாலே,

364. தேம் தேறா கடு பரி கடும்பொடு—திசைகளைத் துணிந்து கொள்ளமாட்டாத கடிய செலவினையுடைய சுற்றத்தோடே,

365. காஅய் கொண்ட நும் இயம் தொயபடாமல—காவிக்கொண்ட நும்முடைய வாச்சியங்கள் கனையாதபடி,

366. கூவல் அன்ன விடரகம் புகுமின்—கிணறுகளபோன்ற †முழைஞ்சுகளிடத்தே புகுவீர்,

367. இரு கல இகுடபத்து இறு வரை சேராது—பெரிய கல்லினது திரட்சியினிடத்து முறிந்துநின்ற மலைகளைச்சேராதே,

368 - 72. [குன்றிடம் பட்ட வாரிட ரழுவத்து, நின்று நோக்கினும் கண்வாள் வெளவு, மண்கனை முழவின் றலைகோல கொண்டு, தண்டுகாலாகத் தளர்த லோம்பி, யூன்றினிர் கழிமி னூறுதவப் பலவே:]

நின்று கண் நோக்கினும் வாள் வெளவும் இடம் பட்ட குன்று—நின்று கண்ணாற்பார்க்கினும் கண்ணினொளியைத் தன் அழகாலே வாங்கிக்கொள்ளும் இடமுண்டாகிய மலையில்,

உம்மை, அவற்றை நுகர மனத்தாற்கருதின் அம்மனத்தையும் வாங்கிக் கொள்ளுமென எச்சவும்மை.

அரு இடர் அழுவத்து ஊறு தவ பல—பொறுத்தற்கு அரிய வருத்தத்தைச்செய்யும் குழிகளிடத்துப் பிறக்கும் இடையூறுகள் மிகப்பல; அவற்றை,

மண் கனை முழவின் றலை தண்டு காலாக கொண்டு—மார்ச்சனைசெறிந்த முழவிடத்திற் காமரத்தை நுமக்குக் காலாக வாங்கிக்கொண்டு,

---

* எஃகுறுபஞ்சி - பன்னியபஞ்சு. † முழைஞ்சு - குகை.

தளர்தல் ஓம்பி கோல் ஊன்றினிர் கழிமின்—அடி உள்ளேவிழுதலைப் பரிகரித்து அத்தண்டாகிய கோலை ஊன்றிப்போவிர்;

373. அயில் காய்ந்தன்ன கூர் கல் பாறை—வேல்காய்ந்தாற்போலும் குடுமிக்கூர்ங் கற்களையுடைய பாறையில்,

374. வெயில் புறந்தருஉம் இன்னல் இயக்கத்து—குளிர்ச்சிவாராமல் வெயில் பாதுகாக்கும் இன்னாமைசெய்யும் வழியிடத்திற் போம்பொழுது,

375. கதிர் சினம் தணிந்த அமயத்து கழிமின்—ஞாயிறு சினம் மாறின அந்திப்பொழுதிலே போவீர்;

376 . 8. [உரைசெல வெறுத்தவவ னீங்காச் சுற்றமொடு, புரைதவ வுயரிய மழைமருள் பஃறோ, லரசுநிலை தளர்க்கு மருப்பமு முடைய:]

*உரை செல வெறுத்த அவன் நீங்கா சுற்றமொடு புரை தவ உயரிய †மழை மருள் பல் தோல் அருப்பமும் உடைய—புகழ் பரக்கும்படி செறிந்த கன்னனுடைய நீங்காத படைத்தலைவரோடே உயர்ச்சி மிகவுயர்ந்த மேகமென்றுமருளும் பல யானைத்திரளையுடைய அரண்களையும் அவ்வழியுடைய;

அரசு நிலை தளர்க்கும் அருப்பம்—பொரவந்த அரசர் நிலையுடைமையைக் கெடுக்கும் அரண்,

379. பின்னி அன்ன பிணங்கு அரில் நுழை தொறும்—அவ்வரண்களிற் பின்னிவைத்தாலொத்த கொடிபிணங்கின சிறுகாட்டையுடைய சிறிய வழிகடோறும்,

380 - 83. முன்னோன் வாங்கிய கடு விசை கணை கோல் இன் இசை கல் யாழ் பத்தரும் விசி பிணி மண் ஆர் முழவின் கண்ணும் ஓம்பி கை பிணி விடாது பைபய கழிமின்—முன்போகின்றவன் முகத்திலடியாமல் வாங்கி விட்ட கடியவிசையையுடைய திரண்டகோல இனிய இசையைத் தன்னிடத்தே கொண்ட கல்ல யாழின் பத்தரையும் வலித்துக்கட்டின மார்ச்சனை செறிந்த முழவின்கண்ணையும் கெடாதபடி காத்து அவனைக் கரம்பிடித்துக் கோடலை விடாதே மெல்லமெல்லப் போவீர்;

காடுகாணனந்தலை (270) முதல் இத்துணையும் மலை(69) கூறிற்று. இவ்விடத்து யாற்றின்றன்மையும் சேரக்கூறினார்.

384. களிறு மலைந்தன்ன கண கூடு துறுகல்—யானைகள் தம்மிற் சேர்ந்து பொருதாலொத்த ஒன்றினிடத்தே ஒன்று கூடிநெருங்கின கல்லிடத்தே,

385. தளி பொழி கானம் தலை தவ பலவே—மழைபெய்கின்ற காடுகள் அவ்விடத்து மிகப்பல;

---

* மலைபடு. 93. † "மழைததோற்பழையன்" (அகநா. 186.)

388 - 7. ஒன்னு தெவ்வர் உய்வு இடத்த ஓர்த்தென கல் வழி கொடித்த ஈண் உடை மதவர்—ஏவலபொருந்தாத பகைவர் முதுகிட்ட வழியிலே தமது வெற்றிதோன்ற ஓரவாரித்தாராக, அதபொறுமல் இல் விடம் உயிர்கொடுத்தற்கு நல்லகாலமென்று மீண்டு உயிரைக்கொடுத்த ஈனத்தையுடைய மதவருடைய,

388 - 9. செல்லா கல இசை டெயரோடு கடட கல் ஏக கலங்கு எண்ணுமிக பலவே—கெடாத கல்ல புகழினையுடைய பெயர்களை எழுதி கட்டகற்கள் முதுகிட்டுப்போனவரை இகழும் பலவழிகள் எண்ணுதல் மிகும்படி பலவாயிருக்கும்;

390 - 91. இன்பு உறு மூர்த்தை நும் பாட்டு விருப்பாக தொன்று ஒழுகும் மரபின் நும் மருப்பு இகுத்து நல்கினை—இன்பமிகுகின்ற நாளத் தினையுடைய நும்முடைய பாட்டு அகதேகலில தெய்வத்திற்கு விருப்ப மாகப் பழமைகடக்கின்ற முறைமையினையுடைய நும்முடைய யானைகளை தந்து விரையப் போவிர்;

மருப்பு, ஆகுபெயர்.

392 - 3. பண்டு நற்கு அறியா புலம் பெயர் புதுவிர் சுதை சீலி புல் முடிந்த இடுமின்—முற்காலம் நன்மையறியாத நீசகிலதனை வழியறியா மற்போய் மீண்டுவந்த புதியவர்கள் பின்வருகின்றவர்களும் அவ்வாறு போய் மீளாதபடி பலவழிகளுங்கூடின சந்தியைக கையாலேதடைத்த அடையாளமாக ஈகம்புலகில முடிதிரிட்டு வைப்பீர்,

நற்கு, நன்னின்னிகாரம்.

கானம் பல (385); ஆண்டை கல (389) கட்ட (388) கலங்கு பல (389); அக்கல்லிற்கு மருப்பிகுதலுத நுண்மை (391); அபொழுது புதுவிர் (392), புலமுடிதிடுமின் (393) எனகூட்டுக.

394. செலலும தேளாதது—நீங்கள போம் தேசத்திலே,

394 - 6. [பெயர்மரும் கதிமார், கலலைதை தெழுதிய கல்லரை மராஅத்த, கடவு னோகிய காடகே கலங்கு:]

கல் எதிகத மருங்கு பெயா அத்மார் எழுதிய கடவுள்—கல்லை *இடதுகொணடு அதனிடததே இவ்வாறேபொருதபடட இன்னுனென்று அவன் பெயரை உலகமறியதற்கு எழுதிய கடவுள்,

†கல் அரை மராத்த கடவுள்—கல்ல அரையினையுடைய மராத்தினடத் தனவாயிய கடவுள்.

என்றது, மராமராத்தினிழலிலே கட்ட கல்லென்றவாறு.

---

* இடகத - பெயர்தது.

† "மன்ற·மராஅத்த பொழுதிர் கடவுள்" (குறுந். 87.)

கடவுள் ஓங்கிய காடு ஏசு கவலை—அக்கடவுளின் தெய்வத்தன்மை மிக்க தன்கொடுமையாற் பிறகாடுகளையிகழும் பலவழிகளில்,

397 - 8. [ஒட்டா தகன்ற வொன்னாத் தெவ்வர், சுட்டினும் பனிக்குஞ் சுரந்தவப் பலவே:]

ஒட்டாது அகன்ற ஒன்னா தெவ்வர் சுரம் தவ பலவே—நன்னனைப் பொருந்தாதே நீங்கின அவன் ஏவற்குப் பொருந்தாத பகைவரிருக்கும் அரு நிலங்கள் மிகப்பல;

இதனால் இகழுநர்ப்பிணிக்கும் ஆற்றல் (73) கூறினார்.

சுட்டினும் பனிக்கும் சுரம்—தத்தமூர்களிலேயிருந்து நினைப்பினும் தலைநடுக்குவிக்குஞ் சுரம்,

399 - 400. தேம் பாய் கண்ணி தேர் வீசு கவி கை ஓம்பா வள்ளல் படர்ந்திகுமெனினே—தேன் சொரிகின்ற கண்ணியினையும் தேரைச்சிதறும் கொடுத்துக்கவிந்த கையினையுமுடைய தனக்கென்று ஒருபொருளும் பேணாத நன்னனைநினைத்துச் செலகின்றோமென்று கூறுவீராயின்,

401 - 2. [மேம்பட வெறுத்தவவன் றொஃறிணை மூதூர், ஆங்கன மற்றே நம்ம னோர்க்கே:] நம்மனோர்க்கு ஆங்கனம் மேம்பட வெறுத்த அவன் தொல் திணை மூதூர் அற்று—நம்மையொக்கும் பரிசிலர்க்கு அப்பகைப்புலம் எல்லாவூர்களினும் மேலாம்படி செலவமுண்டான நன்னனுடைய பழைதாகிய உயர்ந்த ஒழுக்கத்தினையுடைய பழையவூர்களையொக்கும்

403. அசைவுழி அசைஇ அஞ்சாது கழிமின்—இளைத்தவிடத்தே யினைப்பாறி அஞ்சாமற் போவீர்;

404 - 5. [புலியுற வெறுத்ததன் வீழ்பிணை யுள்ளிக், கலைநின்று விளிக்குங் கான மூழிறந்து:] புலி உற வீழ் தன் பிணை உள்ளி வெறுத்த கலை நின்று விளிக்கும் கானம் ஊழ் இறந்து—புலி பாய்கையினாலேபட்ட தன் பிணையை நினைத்து வெறுத்த கலைநின்றுகூப்பிடும் அக்காட்டை முறைமைப்படப்போய்,

406. சிலை ஒலி வெரீஇய செ கண் மரைவிடை—வில்லின் ஓசைக்கு வெருவின சிவந்தகண்ணையுடைய மரையேறு,

407. தலை இறும்பு கதழும் நாறு கொடி புறவின்—முற்பட்ட குறுங் காட்டிலே விரைந்தோடும் நாறுகின்ற கொடிகளையுடைய காட்டிடத்து,

408 - 9. வேறு புலம் படர்ந்த ஏறு உடை இனத்த வளை ஆன் நீ பால்—வேற்றுப்புலங்களிலே சென்று மேய்ந்த ஏற்றையுடைய நிரையிடத்தனவாகிய சங்குபோல் வெள்ளிய பசுக்களின் இனிய பாலை,

409 - 10. மிளை சூழ் கோவலர் வளையோர் உவப்ப தருவனர் சொரிதலின்—நிரையைக் காவல சூழ்கின்ற இடையர் வளையினையுடைய மகளிர் மனமகிழும்படி கொண்டுவந்து சொரிகையினாலே,

411 - 2. [பலம்பெறு நசையொடு பதிவயிற் றீர்ந்தனும், புலம்புசே ணகலப் புதுவி ராகுவிர்:] பலம் பெறு நசையொடு நும் பதிவயின் நீர்ந்த புலம்பு சேண் அகல புதுவிர் ஆகுவிர்—பலத்தைப்பெறவேண்டுமென்னும் ஆசையுடனே நும்முடைய ஊரினின்றும் போந்தவருத்தம் விட்டு நீங்குகையினாலே, விருந்தாந்தன்மையையுடையிராகுவிர்;

413 - 6. [பகர்விரவு நெல்லின் பலவரி யன்ன, தகர்விரவு துருவை வெள்ளையொடு விரைஇக், கல்லென் கடத்திடைக் கடலி னிரைக்கும், பல்யாட் டினநிரை:] பகர் பல விரவு நெல்லின் அரி அன்ன தகர் விரவு துருவை வெள்ளையொடு விரைஇ கல்லென் கடத்திடை கடலின் இரைக்கும் பல்யாட்டு இனம் நிரை—பண்டம்விற்ற பலவுங்கூடுநெல்லின் அரிசியையொத்தனவாகக் கிடாய்விரவுகின்ற செம்மறித்திரள் வெள்யாட்டுடனேகலந்து கல்லென்கின்ற ஓசையையுடைய காட்டிடத்தே கடல்போலேயொலிக்கும் பலயாட்டினினங்களையுடைய திரள்களிலே,

பகர்நெல், வினைத்தொகை.

416. எல்லினிர் புகினே—இராக்காலத்தையுடையிராய்ச் செல்லின்,

மனத்தே அக்காலத்தைக் கருதுதலின், உடைமையாயிற்று.

417. பாலும் மிதவையும் பண்ணாது பெறுகுவிர்—பாலும் பாற்சோறும் நுமக்கென்று சமையாமல் தமக்குச் சமைத்திருந்தவற்றைப் பெறுகுவிர்;

418. துய் மயிர் அடக்கிய சேக்கை அன்ன—மெல்லிய தலைமயிரினையுடைய சேணமிட்ட படுக்கையையொத்த,

419. மெய் உரித்து இயற்றிய மிதி அதன் பள்ளி—ஆடுகளின் மெய்யையுரித்து ஒன்றாகத்தைத்த வார்மிதித்த தோற்படுக்கையிலே

420. தீ துணையாக சேந்தனிர் கழிமின்—கொடியவிலங்குகள் வாராதபடி இடையர் ஒளித்த நெருப்புத் துணையாகத் தங்கிப் போமிர்;

421 - 2. கூப்பிடு கடக்கும் கூர் நல் அம்பின் கொடு வில் கூளியர் கூவை காணின்—கூப்பிடாத அவ்வெல்லையைக் *கடவாநிற்கும் கூரிய நல்ல அம்பினையும் கொடியவில்லினையுமுடைய நாடுகாக்கும் வேடருடைய திரளைக்கண்டீராயின், அவர்களுக்கு,

423 - 4. படியோர் தேய்த்த பணிவு இல் ஆண்மை கொடியோள் கணவன் படர்ந்திகும் எனினே—தன்னை வணங்காதாரை அழித்த தாழ்ச்சியில்லாத பகைவரையாளுந்தன்மையினையுடைய நன்னனைநினைத்துப் போகின்றோமென்று கூறின்,

---

* பி - ம். கூவாநிற்கும்.

கொடியோள்கணவன் - கொடியினையுடையோள் கணவன்; இதனால் அவன்தேவி கற்புமிகுதி கூறினார். இது நன்னனென்னும் பொருட்டாய நின்றது.

425 - 6. தடியும் கிழங்கும் தண்டினர் தரீஇ ஓம்புநர் அல்லது உடற்றுநர் இல்லை—தசைகளையும் கிழங்குகளையும் நும்மை நலிந்து தின்னப்பண்ணிப் பாதுகாப்பாரல்லது வருத்துவார்களில்லை; அவற்றை நுகர்ந்து,

427. ஆங்கு *வியம் கொண்மின்—அங்கிடத்து அவர் போகச்சொன்னவழியை நுமக்கு வழியாகக் கொண்டுபோவிர்;

அது அதன் பண்பே—அக்காட்டின் தன்மை அத்தன்மைத்தாயிருக்கும்;

428. தேன் பட மலர்ந்த மராஅ மெல் இணரும்—தேனுண்டாக மலர்ந்த மராவினது மெல்லிய பூங்கொத்தும்,

429. உம்பல் அகைத்த ஒள் முறி யாவம்—யானைமுறித்த ஒள்ளிய தளிர்களையுடைய †யாம் பூவும்,

430 - 31. [தளிரொடு மிடைந்த காமர் கண்ணி, திரங்கு மரனாரிற் பொலியச் சூடி:] திரங்கு மரல் நாரில் தளிரொடு மிடைந்த காமர் கண்ணி பொலிய சூடி—உலர்ந்த மரல் நாரிலே தளிர்களோடே நெருங்கக்கட்டின விருப்பம் மருவின கண்ணியை அழகுபெறச் சூடி,

432. முரம்பு கண் உடைந்த நடவை தண்ணென—பருக்கையையுடைய மேட்டுநிலத்திடம் விண்ட சிறுவழி மழைபெய்து குளிருகையினாலே,

433. உண்டனிர் ஆடி கொண்டனிர் கழிமின்—அந்நீரைக்குடித்துக் குளித்து வழிக்குமுகந்துகொண்டு போமின்,

434 - 6. [செவ்வீ வேங்கைப் பூவி னன்ன, வேய்கொ ளரிசி மிதவை சொரிந்த, சுவலவினை நெல்லி னவரையம் புளிங்கூழ்:]

செ வீ வேங்கை பூவின, அன்ன அவரை—சிவந்த பூக்களையுடைய வேங்கைப்பூவினையொத்த நிறத்தையுடைய அவரைவிதை,

வேய் கொ ள அரிசி—மூங்கில் தன்னிடத்தே கொண்ட அரிசி,

சுவல் வினை நெல்லின் அரிசி—மேட்டுநிலத்தேவிளைந்த நெல்லின் அரிசி,

சொரிந்த மிதவை புளியங்கூழ்—இவற்றைப் புளிக்கரைத்த உலையிலே சொரிந்து ஆக்கின குழைந்த புளியங்கூழை,

437. அற்கு இடை உழந்த நும் வருத்தம் வீட—இராக்காலத்துக் காட்டிடத்துப் பகற்பொழுதுவந்த நும்வருத்தம் போம்படி,

---

* வியம் - ஏவல். † பி - ம். ஆச்சாவிற்பூவும்.

438 - 9. [அகலு ளாங்கட் கழிமிடைந் தியற்றிய, புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவிர்:] ஆங்கண் அகலுள் கழி மிடைந்து இயற்றிய புல்வேய் குரம்பை குடிதொறும் பெறுகுவிர்—அவ்விடத்து அகன்ற ஊரிடத்துக் கழிகளால் தெற்றிப்பண்ணின புல்லான்வேய்ந்த குடில்களிலிருக்கும் குடிகளிடந்தோறும் பெறுகுவிர் ;

கூழை அற்குப் பெறுகுவிரென்க.

440-43. [பொன்னறைந் தன்ன நுண்ணே ரரிசி, வெண்ணெறிந் தியற்றிய மாக்க ணமலை, தண்ணெ னுண்ணிழு துள்ளீ டாக, வசையினிர் சேப்பி னல்கலும் பெறுகுவிர்:]

அசையினிர் சேப்பின்—இளைப்பாறி அவ்விடத்தே சிலநாள் தங்குவீராயின்,

பொன் அறைந்தன்ன நுண் நேர் அரிசி வெண்ணெறிந்து இயற்றிய மா கண் அமலை—பொன்னை நறுக்கினாலொத்த நுண்ணிய ஒத்த அரிசியை வெள்ளையெறிந்தாக்கின கரிய இடத்தையுடைய சோற்றுத்தடியை,

தண்ணென் * நுண் இழுது உள்ளீடாக அல்கலும் பெறுகுவிர்—தண்ணென்ற நுண்ணிய நெய்விழுதை உள்ளேயிட்டுண்ணும்படி நாடோறும் பெறுகுவிர்;

444. விசயம் கொழித்த பூழி அன்ன— கருப்புக் கட்டியைக் கொழித்த பொடியையொத்த,

445. உண்ணுநர் தடுத்த இடி நுண் நுவணை—தன்னை நுகர்வாரை வேறொன்றை நுகராமற் றடுத்த இடித்தலால் நுண்ணிதாகிய தினைப †பிண்டியோடு,

சேப்பின் நுவணையோடே அமலையை இழுதுள்ளீடாக அல்கலும்பெறுகுவிரென்க.

நுவணையோடென ஒடு விரிக்க.

446 - 7. நொய் மரம் விறகின் ஞெகிழி மாட்டி பனி ‡ சேண் நீங்க இனிது உடன் துஞ்சி—நொய்ய மரமாகிய விறகாலாக்கின கடைக்கொள்ளியை எரித்துப் பனி விட்டுநீங்கும்படி இனிதாகச் சேரத்துஞ்சி,

448. புலரி விடியல் புள் ஓர்த்து கழிமின்—இராக்காலநீங்குதலையுடைய விடியற்காலத்தே நிமித்தம்பார்த்துப் போவிர்;

புள்ளோர்த்தென்றதற்குப் § புட்களின் குரல்கேட்டுப் போவீரென்றுமாம்.

---

* "நீரினு நுண்ணிது நெய்யென்பர்" (நாலடி. இன்மை, 2.)

† பிண்டி - மா. ‡ மதுரைக்காஞ்சி, 198. § பெரும்பாண். 155.

இத்துணையும் கானமும் கானத்து ஆற்றினது நன்மையும் அசையுநற் புலமும் வல்சியும் சேரக்கூறினார்.

449. புல் அரை காஞ்சி—புற்கென்ற அரையினையுடைய காஞ்சிமரத் தினையும்,

புனல் பொரு புதவின்—நீர்வந்துபொருகின்ற *அறுகுகளையும்,

450. மெல் அவல்—மெல்லிய விளைநிலங்களையும்,

450-53. [இருந்த ஊர்தொறு நல்லியாழ்ப், பண்ணுப்பெயர்த் தன்ன காவும் பள்ளியும், பன்னா ணிற்பினுஞ் சேந்தனிர் செலினு, நன்பல வுடைத்த வன் றண்பணை நாடே:]

காவும்—பொழில்களையும்,

பள்ளியும்—இடைச்சேரிகளையுமுடைய,

அவன் தண் பணை நாடே—நன்னனுடைய குளிர்ந்த மருதநிலத்தை யுடைய நாடு,

பல் நாள் நிற்பினும் சேந்தனிர் செலினும் இருந்த ஊர்தொறும்—பல நாள்நிற்பினும் ஒருநாள் தங்கிப்போகினும் நீர் நுகர்தற்குக் குடிநீங்கா திருந்த ஊர்கள்தோறும்,

நல் யாழ் பண்ணு பெயர்த்தன்ன நல் பல உடைத்து—நல்ல யாழின் பண்ணை மாறிவாசித்ததன்மையவாக நன்றாகிய பலபொருள்களையுடைத்து,

காஞ்சிமுதலியவற்றை உடையநாடு ஊர்தோறும் நன்பலவுடைத் தென்க.

பண் ஒன்றையொன்றொவ்வாது இனிதாயிருக்குமாறுபோல நுகரும் பொருள்களும் ஒன்றையொன்றொவ்வா இனிமையுடையவென்றார்.

454-5. கண்பு அமல் பழனம் கமழ துழைஇ வலையோர் தந்த இரு சுவல வாளை—கண்புநெருங்கின மருதநிலத்தைப் பூக்கள்நாற வளைத்து ஆராய்ந்து வலையைவீசுவார் கொண்டுவந்த பெரிய கழுத்தினையுடைய வாளைத்தடியை,

456 - 8. நிலையோர் இட்ட நெடு நாண் தூண்டில் பிடி கை அன்ன செ கண் வரால் துடி கண் அன்ன குறையொடு விரைஇ—ஓரிடத்தில் நிலை பெற நிற்றலையுடையோரிட்ட நெடிய கயிற்றையுடைய தூண்டிலிற்பட்ட பிடியின் கையையொத்த சிவந்த கண்ணையுடைய வராலினது துடியின் கண்ணை யொத்த தடியோடேகலந்து,

459. பகன்றை கண்ணி பழையர் மகளிர்—பகன்றைப்பூவாற் செய்த கண்ணியையுடைய கள்விற்கும் வலையருடைய மகளிர்,

---

* அறுகு - அறுகம்புல்.

460-62. ஞெண்டு ஆடு செறுவில் தராய்க்கண் வைத்த விலங்கல் அன்ன போர் முதல் தொலைஇ வளம் செய் வினைஞர் வல்சி நல்க—ஞெண்டுகளாடித்திரியும் செய்க்கு அருகில் மேட்டுநிலத்தேயிட்ட மலையையொத்த போர்களை அடியிலேவிழ அழித்துக் கடாவிட்டு வளப்பத்தையுண்டாக்கும் உழவர் நெல்லை முக்கந்துதராநிற்க,

463. ஔங்கு தசும்பு வாக்கிய பசு பொதி தேறல்—களிப்புமிகுதியால் அசையும் மிடாவினின்றும் வார்த்த பசிய முளையாலாக்கின கட்டெளிவை,

464. [இளங்கதிர் ஞாயிற்றுக் களங்கடொறும் பெறுகுவிர்:] ஞாயிறு இள கதிர் களங்கள் தொறும் பெறுகுவிர் - ஞாயிற்றினது இளைய கதிர்களெறிக்குங்காலத்திலே களங்கடோறும் பெறுகுவிர் ;

வினைஞர் வல்சிநல்காநிற்கப் பழையர்மகளிர் விரைஇத் தேறல் நல்காநிற்கப் பெறுகுவிர் என்க.

465 - 8. [முள்ளரித் தியற்றிய வெள்ளரி வெண் சோறு, வண்டு படக் கமழுந் தேம்பாய் கண்ணித், திண்டேர் நன்னற்கு மயினி சான்மெனக், கண்டோர் மருள:]

வண்டு பட கமழும் தேன் பாய் கண்ணி திண் தேர் நன்னற்கும் அயினி சான்மென கண்டோர் மருள—வண்டுபடியும்படி நாறும் தேன்சொரிந்த கண்ணியினையும் திண்ணிய தேரினையுமுடைய நன்னனுக்கும் உணவாதற்கு அமையுமென்று கண்டோர்கள் மருளும்படி,

முள் அரித்து இயற்றிய வெள் அரி வெள சோறு—முள்ளைக் கழித்து ஆக்கின கொழுப்பால் வெள்ளிய நிறத்தையுடைய தடிகளையிட்ட வெள்ளிய சோற்றை,

வெள்ளிய நிறத்தையுடைய தடிகளை வெள்ளரி யென்றார் ; ஆகுபெயராக்கி.

மருள இயற்றிய வென்க.

468. கடும்புடன் அருந்தி—றும் சுற்றத்துடனேயுண்டு,

469 - 70. எருது எறி களமர் ஓதையொடு நல் யாழ் மருதம் பண்ணி அசையினிர் கழிமின்—எருத்தையடிக்கின்ற உழவரோசையோடே கூடும்படி நல்லயாழை மருதத்தை வாசித்து இளைப்பாறிப் போவீர் ;

இத்துணையும் நாடுபடுவல்சியும் அசையுநற்புலமும் சேரக்கூறினார்.

471 - 3. வெள் நெல அரிநர் தண்ணுமை வெரீஇ செ கண் ஈருமை இனம் பிரி ஒருத்தல் கனை செலல முன்பொடு கதழநது வரல் போற்றி—

---

* "தசும்புதுளங்கிருக்கை" என்பதும், 'தன்களிப்பு மிகுதியால் தன்னையுண்டார் உடல்போல அத்தசும்பு இருந்து ஆடும்படியான இருப்பு' என்னும் அதனுரையும் இங்கே அறியற்பாலன ; (பதிற். 42.

வெள்ளிய நெல்லையறுப்பார் கொட்டின பறையோசைக்கு வெருவிச் சிவந்த கண்ணையுடைய எருமைத்திரளைப் பிரிந்தகடா ஆரவாரிக்குஞ் செலவினை யுடைய வலியோடே நும்மேல விரைந்து வருதலைப் பேணி,

474 - 5. வனை கலம் திகிரியின் குமிழி சுழலும் துனை செலல் தீ வாய் ஓவு இறந்து வரிக்கும்—குயவன் வனைகின்ற மட்கலத்திற் சக்கரம் போலக் குமிழி சுழன்று தோன்றும் விரைந்த செலவினையுடைய வாய்த்தலை யின் ஒழிவின்றி ஓடும் யாறு (476),

476 - 7. காணுநர் வயாஅம் கட்கு இன் சேயாற்றின் யாணர் ஒரு கரை கொண்டனிர் கழிமின்—காண்பார் விரும்பும் கட்கு இனிய சேயாற் றினது புதுவருவாயையுடைய ஒருகரையை வழியாகக் கொண்டு போவிர் ;

வயாம், ஈற்றுமிசையுகரம் மெய்யொடுங் கெட்டது. சேயாறு, அவ் வியாற்றின் பெயர்,

478 - 87. [* நிதியந்துஞ்சு நிவந்தோங்கு வரைப்பிற், பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇ, வியலிடம் பெறாஅ விழுப்பெரு நியமத், தியா றெனக் கிடந்த தெருவிற் சாறென, விகழுநர் வெரூஉங் கவலை மறுகிற், கடலெனக் காரென வொலிக்குஞ் சும்மையொடு, மலையென மழையென மாட மோங்கித், துனிதீர் காதலி னினிதமர்ந் துறையும், பனிவார் காவிற் பல்வண் டிமிரு, நனிசேய்த் தன்றவன் பழவிறன் மூதூர்.]

பல் வண்டு இமிரும் பனி வார் காவின்—பலவண்டுக ளொலிக்கும் குளிர்ந்த நெடிய பொழில்களையும்,

இகழுநர் வெரூஉம் நிவந்து ஓங்கு வரைப்பின்—நன்னனை இகழ்ந்திருப் பார் அஞ்சும் மிகவோங்குமதிலையும்,

சாறு என கெழீஇ கடல் என கார் என ஒலிக்கும் சும்மையொடு வியல் இடம் பெறா விழு பெரு நியமத்து—திருநாளென்னும்படி மாந்தர் பொருந்திக் கடலெனக் காரென ஒலிக்கும் ஆரவாரத்தோடே திரிதரற்கு அகன்ற இடம்பெறாத சீரியபெரிய அங்காடித் தெருவினையும்,

கவலை மறுகின்—பல கவர்த்தன்மையையுடைய குறுந்தெருக்களையும்.

பதி எழவு அறியா பழ குடி துனி தீர் காதலின் இனிது அமர்ந்து உறை யும் மாடம் மலை என மழை என ஓங்கி—ஊரினின்றும் பேர்தலையறியாத பழையகுடி வெறுப்பில்லாத விருப்பத்தோடே நன்றாதல் பொருந்தியிருக் கும் மாடங்கள் மலையென மழையென ஓங்குகையினாலே,

யாறு என கிடந்த தெருவின்—யாறென்னும்படி கிடந்த பெருந் தெரு வினையும்,

---

* ஆ - வி. சூ. 635. மேற்.

இரண்டுமருங்கின் மாடமும் தெருவும் யாறும் கரையும் போன்ற வென்றார்.

நிதியம் அஞ்சும் அவன் பழி விதல் முதலா னிரை சென்றத னன்று—காலினையும் மதியினையும் நியமத்தினையும் மறுகினையும் தெருவினையு முடைய பொருட்கிரள் தன்னும் அவன் பழைய வெற்றியையுடைய முதூர் மிகவும் தாரிதன்றென்க.

இது மூதூர்மாலை (93) கூறிற்று.

488 - 9. பொருத்தா தெவ்வர் இரு தலை துமிய பருந்து பட கடக்கும் ஒள் வாள் மதவர் - தன்னோடு பொருந்தாத பகைவருடைய கரிய தலைகள் தணியப் பருந்துகள் படியப் போரைவெல்லும் தன்னிய வாளையுடைய மதவர்,

490 - 91. கரு கடை எஃகம் சாதிய புதவின் அரு கடி வாயில் அதி ராது புகுமின் - தம்முடைய கரிய கூர்மையையுடைய வேலைச் சாத்திவைத் துக் காத்திருக்கின்ற படை தெற்றுவாசல்களையுமுடைய அரிய கோபுரவாயில் களையுமதிப் புகுவிர்;

492 - 5. [மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர், வெல்போர்ச் சேரலர்ப் பெருவிறலுள்ளி, வந்தோர் மன்ற வளியர் தாமெனக்,கண்டோ ரெல்லா மமர்ந்தினி திருக்கை:]

மன்றில் வதியுநர் சேண் புலம் பரிசிலர் கண்டோர் எல்லாம்—அம் பலங்களிலே தங்குவாராகிய தூரிய நிலங்களினின்றும் வந்த கூத்தர் முதலியோராய நும்மைக் கண்டோரெல்லாம்,

அளியர் தாம்; வெல் போர் சேரலர் பெருவிறல மன்ற உள்ளி வந்தோர் என அமர்த்து இனிதின் நோக்கி—இவ்வளிக்கத் தக்கவர்தாம் வெலலும் போரைவலை முருகனைப்போலும் தன்னைப் பரிசிலர்க்குத் தோற்றமாக நினைத்து வந்தோரென்றுகருதி முகம்பொருந்தி இனிதாகநோக்கி,

496 - 7. [விருந்தினை யவரவ ரெதிர்கொளக் குறுகிப், பரிபுலம் பலைத்தலும் வருத்தம்வீட:] பரி புலம்பு அலைத்த வருத்தம் வீட அவர் விருந் தினும் இனை எதிர்கொள அவர் குறுகி—தரித்தலாலுண்டான நிலைமை வருத்தினவருத்தம் போம்படி அவ்விடத்தோர் விருந்தாய் நீங்கள் தங்கு தலை எதிரேற்றுக் கொள்ளையாலே அவர்களைச் சேர்ந்திருந்து,

498 - 500. [எரிகான் றன்ன பூஞ்சினை மராஅத்துத், தொழுதி போக வலித்தகப் பட்ட, மடநடை யாமான் கயமுனிக் குழலி:]

எரி கான்றன்ன பூ சினை மராஅத்து தொழுதி போக வலித்து அகப் பட்ட மடம் நடை ஆமான் குழலி—நெருப்பைக் கான்றாலொத்த பூக்கொம்பு களையுடைய மராமரத்திடத்தே இடைந்த இளமையையுடைய பேடுபோகப் போக

மாட்டாது அகப்பட்ட மடப்பத்தையுடைய கடையையுடைய ஆமானினது குழவி,

கயம் முனி குழவி—யானைக்கன்றினையது,

501. [ஊமை யெண்கின் குடாவடிக் குருளை:] எண்கின் குடாவடி ஊமை குருளை—கரடியின் வளைந்த அடியினையுடைய வாய்திறவாக குட்டி,

502 - 3. மீமிசை கொண்ட கவர் பரி கொடு தாள் *வரை வாழ் வருடை வல தலை மா தகர்—முதுகிடத்தே கொண்ட நிலத்தைக்கைக்கொள்ளும் செலவினையுடைய வளைந்தகாலையுடைய வரையிடத்தேவாழும் † எண் கால்வருடையில் வலிய தலையினையுடைய பெரியகிடாய்,

இனி வருடையும் தகருமென வேறாகக் கூறலுமாம்,

504. அரவு குறும்பு எறிந்த சிறு கண் தீர்வை—பாம்பினது வலிகளை யழித்த சிறிய கண்ணினையுடைய கீரி,

505 - 6. அளை செறி உழுவை கோள் உற வெறுத்த மடம் கண் மரையான பெரு செவி குழவி—முழையிலே செறிந்திருந்தபுலி பாய்தலுறுகையினாலே தன் உடலைவெறுத்த மடப்பத்தையுடையகண்ணினையுடைய மரையானினது பெரிய செவியினையுடைய குழவி,

507 - 8. அரக்கு விரித்தன்ன செ நிலம் மருங்கின் பரல தவழ் உடும்பின் கொடு தாள் ஏற்றை—அரக்கைப் பரப்பினாலொத்த சிவந்தநிலத்திடத்திற சுக்கான்கல்லிலேதவழும் உடும்பினது வளைந்தகாலையுடைய ஏறு,

509. வரை பொலிந்து இயலும் மடம் கண் மஞ்ஞை—மலையிடத்தே அழகுபெற்று ஆடும் மடப்பத்தையுடைய கண்ணினையுடைய மயில,

510. கானம் கோழி கவர் குரல சேவல்—கானத்திடத்துக் கோழியினது பெடையை யழைக்கின்ற குரலையுடைய சேவல்,

511. ‡ கானம் பலவின் முழவு மருள் பெரு பழம்—காட்டிடத்துப் பலாவினுடைய முழவென்றுமருளும் பெரியபழம்.

512 - 3. [இடிக்கலப் பன்ன நறுவடி மாவின், வடிச்சேறு விளைந்த தீம்பழத் தாரம்:] நறு வடி மாவின் இடி கலப்பன்ன வடி சேறு விளைந்த தீ பழம் தாரம்—நறிய வடுக்களையுடைய மாவினது பொடிச்செய்த § கண்டின் கலப்பையொத்த பிழியப்படும் சாறு முற்றின இனிய பழமாகிய பண்டம்,

---

*வரைவாழ வருடைக் கோடுமுற் றிளந்தகர்" (அகநா: 378. 6-7.)

† எண் கால் வருடை - ஒருவகை விலங்கு; "மாவுமாக்களும்" (தொல். மர. சூ. 32. பேர்.) என்பதன் விசேடவுரையைப் பார்க்க

‡ மலைபடு. 143 - 4. § கண்டு - கற்கண்டு.

514. தூவல் கலித்த இவர் நனை வளர் கொடி—மழையாற்செருக்கின பரக்கின்ற அரும்புகளையுடைய மணம்வளருகின்ற *நறைக்கொடி,

515. †காஅய் கொண்ட நுகம் மருள் நூறை—காவிக்கொண்டுவந்த நுகமென்றுமருளும் ‡நூறைக்கிழங்கு,

நூறை - §மலங்கென்பாருமுளர்.

516. [பருஉப்பளிங் குதிர்த்த:] உதிர்த்த பருஉ பளிங்கு—மரத்தினின்றும் சிதறியுதிர்த்த பருத்த நிகரமாகிய ‖ கருப்பூரம்,

பல உறு திரு மணி - பலவிலைபெற்ற அழகிய மாணிக்கம்,

517 - 8. [குருஉப்புலி பொருத புண்கூர் யானை,முத்துடை மருப்பின் முழுவலி மிகுதிரள்:] குருஉ புலி பொருத புண் கூர் முழு வலி ¶ யானை முத்துடை மருப்பின் மிகு திரள்—நிறத்தையுடைய புலிபொரப்பட்ட புண்மிக்க குறைவில்லா வலியையுடைய யானைகளினுடைய முத்துடைய கொம்புகளினுடைய மிக்கதிரள்,

519. **வனை உடைந்தன்ன வள் இதழ் காந்தள்—வனையுடைந்தாற் போன்ற வளவிய இதழையுடைய காந்தட்பூ,

520. நாகம்—புன்னைப்பூ,

திலகம்—திலகப்பூ,

நறு காழ் ஆரம்—நறிய வயிரத்தையுடைய சந்தனம்,

521. [கருங்கொடி மிளகின் காய்த்துணர்ப் பசுங்கறி:] மிளகின் கருகொடி காய் துணர் பசு கறி—மிளகினதுகரிய கொடிகள் காய்த்த கொத்திற் பசியமிளகு.

முன்னர் மிளகென்றது முதலை; கறி, சினை.

522. திருந்து அமை விளைந்த தேன் கள் தேறல்—நன்றாகிய மூங்கிற் குழாயிலே முற்றிய தேனாற்செய்த கட்டெளிவு,

---

* நறைக்கொடி-ஒருவகைக்கொடி;"தண்கமழ் நறைக்கொடி கொண்டு" (ஐங்குறு. 276.) † காஅய், காவி - தோளிற்சுமந்து.

‡ பி - ம். நூற்றைக்கிழங்கு. மலங்கு - ஒருவகைமீன்.

‖ கருப்பூரம் - ஒருவகைமரம்; "இமயச்சாரற் கருப்புரக்கன்று" (சீவக. 1267.)

¶ யானைக்கொம்புளில் முத்திருத்தல்: (முருகு. 304 - 5; குறிஞ்சி 35 - 6.)

** "அலங்கிதழ்க் கோடல் வீயுகு பவைபோ, லிலங்கே ரெல்வளை யிறையூரும்மே" (கலித். 7.) ; "உடைவளை கடுப்ப மலர்ந்த காந்தள்" (புறநா. 90.)

523. கான் கிளை எருமை கழை கெய் நீ தயிர்—காட்டிடத்து நீலமை யினையுடைய எருமையினது மூன்றிற்குழாவிலேதோய்த்த இனிய தயிர்,

524. நீல் நிறம் ஒரி பாய்ந்தென—மூத்துகையினுலே நீலநிறத்தை யுடைய ஒளிநிறம்பரந்ததாக,

524 - 5. நெடு வரை மேயின் செல்லும் நெய் கண் இறுல்—நெடிய வரையில் இறுவிடத்தை விட்டுப்பாயும் தேனைத் தன்னிடத்தேயுடைய இறுல் கள்,

526 - 9. [உடம்புணர்பு தழீஇய வாசினி யனைத்தும், குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி, கடன்மண் டழுவத்துக் கயவாய் கடிப்ப,சோணுச் செருவி னெடுங்கடைத் தலைவர்தி:]

தழீஇய ஆசினி—கன்றொன்று கூட்டிக்கொண்ட ஆனிப்பலா,

குடமலை பிறந்த தண் பெரு காவிரி கடல் மண்டு அழுவத்து கயவாய் கடிப்ப—குடமலையிற்பிறந்த குளிர்ந்த பெரியகாவிரி கடலிலே பிக்குச்செல கின்ற ஆழத்தையுடைய புகார்முகத்தையொப்ப,

சோணு செருவின் நெடு கடை—பகைவர் பொறுத்தலாற்றாத போரினை யுடைய தலைவாசலிலே,

*அனைத்தும் உடம்புணர்பு தலைவர்தி,

530 - 31. * [வானத் தன்ன வளமலி யானைத், தாதெருத் தலைத்த முற்ற முன்னி:]

532. மழை எதிர் படு கண் முழவு கண் இகுப்ப— †மழைமுழக்கத் திற்கு எதிராகமுழங்கும் கண்ணையுடைய முழவில் கண்கள் ஒலியாகிக்க,

533. கழை வளர் நீம்பின் கண் இடம் இமிர—மூங்கிலாகிய இசை வளரும் பெருவங்கியத்தினது இறந்தகண்ணிடம் ஒலியாகிக்க,

534 - 6. [மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ், சாம்புமீ திதவா துடன்புணர்ந் தொன்றிக், கடவ தறிந்த வின்குரல் விறலியர்:]

மருதம் பண்ணிய கரு கோடு சிறு யாழ் சாம்பு மீது இதவாது உடம் புணர்ந்து ஒன்றி இன் குரல் விறலியர்—மருதத்தை வாசித்த கரிய தண் டினையுடைய சிறிய யாழினாரம்பிலேசைக்கு மேற்போகாது அவ்வோசை யுடனேகூடி ஓசையாய் இனிதாகிய பாட்டினையுடைய விறலைபட அறி மகளிர்.

கடவது அறிந்த விறலியர்—தலைவனைக் கண்டாற் செய்யக்கடவ தொழிலை யறிந்த விறலியர்,

---

* இவற்றிற்கு உரைகிடைத்திலது.

† மலைபடு, 2 - 3.

வகையினோடு தொன்று ஒருரு மாயின் தம் இயல்பு வழாவழு—பிறந்தவிடத்துக் கடன்முறைமையினையுடைய தம் இல்லறத்தின் தப்பாமல்,

*532. அரு நிதல் கடவுள் பழிச்சிய பின்றை - * பொறுத்தற்கு அரிய வலியையுடைய கடவுளை முதலில் வாழ்த்தின பின்பு,

மூற்றத்தையீறுஇ (531) இருப்ப (532) விதலியர் (536) தேவாணியைப் பாடினபின்பு (538) என்க.

539. விருத்தின் பாணி கழிப்பி—சென்றுப் புதிதாகப்பாடும் பாடுதற்கினிய பாடி.

†539 - 40. நீண்மொழி குன்று கல் இசை சென்றோர் உம்பல்—மேல் சிறந்த புலவோர்க்குக் (88) கொடுத்தவற்றை வாங்காதபடி தாம் கூறிய வஞ்சினங்களிற் குறையாத கல்லை புகழிலே உடன்தோருடைய வழியில்வந்தவன்,

இதனைக் கொடைக்கடனிறுத்த அவன் தொலைவோர்வாவு (89) கூறினர்.

541 - 3. [இன்றிவட் செலலா தலகமொடு நிற்ப, விடைத்தெரிந் தணரும் பெரியோர் மாய்ந்தெனக், கொடைக்கடன் விறந்த செம்ம லோயெனர்:]

இடைதெரிந்து உணரும் பெரியோர் மாய்ந்தென—என்ற இன்று இவன் இம்மென்று ஓராயும் பெரிய உபகாரிகள் இறந்தார்களாக,

‡ இன்று இவண் செலலாது உலகமொடு நிற்ப கொடை கடன் இறுத்த செம்மலோய் என—நின்போல் இக்காலத்து இவ்வுலகிலே கடன்விடாதே உலகமுள்ளளவும் நிற்கும்படி கொடையாகிய கடனை முடித்த நிலைமையை யுடையோயென்றுகூறி,

544. † வென்றி பல புகழ் விறலோடு ஏத்தி—வெற்றியாலுண்டாகிய பலபுகழ்களை ஐம்பொறிகளாற் தன்வசமாக்கின வெற்றியோடே புகழ்ந்து,

545. சென்றது கொடியவும் விடாஅன் - தம்மனத்திற்சென்ற தீவினைப் புகழ்களை முற்றுகூறவும் அமையானாய்,

545 . 6. கசை நர வாகத் தாளும் வருத்தமும் பெரிது என—என் மேற்றுள்ள கசை கொண்டுவருகையினாலே என்னிடத்துவந்தே அமையும் வழிவந்த வருத்தமும் பெரிதென முகமன்கூறி,

---

* "கலம் பொறுக்கலாத பிண்டி நன்முகன்" (சீவக. 402.)

† "அயன்றலைநெரிந்துசெஞ் சாடலை பாடி யருக்க னெயிறு பறித்தல் பாடிக், கயத்தினைக் கொன்றரி போர்த்தல பாடிக் காலனைக் காலுதை தாளைத்தல் பாடி, யியைதன மும்புர மெய்தல பாடி யேழை படிவேழ மை யான்டு கொண்ட, கயத்தினைப் பாடின் குடி யாடி யீத்தற்கும் சுன்ன மிடித்து நாமே." (திருவாக்கம், திருப்பொற்சுண்ணம், 35.)

547 - 8. பொரு முரண் எதிரிய வயவரொடு பொலிந்து திரு நகர் முற்றம் அணுகல் வேண்டி—பொருகின்ற மாறுபாட்டினை எதிர்கொண்டிருக்கும் படைத்தலைவரோடே பொலிவுபெற்றுச் செல்வத்தையுடைய தன்மனையின் முற்றத்தை நீங்கள் செல்லுதலை விரும்பி,

பொலிந்தென்னுமெச்சத்தை உடையவென்பதனோடு முடிக்க.

549. கல்லென் ஒக்கல் நல் வலத்து இரீஇ—கல்லென்னும் ஆரவாரத்தையுடைய சான்றோரிருக்கின்ற நன்றாகிய * சமயத்திருக்கு மண்டபத்தேயிருந்து,

வலம் - இடம்.

இதனால் நல்லிதினியக்குமவன் சுற்றத்தொழுக்கமும்(80) அவன் நாண் மகிழிருக்கையும் (76) கூறினார்.

550 - 52. உயர்ந்த கட்டில் உரும்பு இல் சுற்றத்து அகன்ற தாயத்து அஃகிய துட்பத்து இலம் என மலர்ந்த கையர் ஆகி—உயர்ந்த அரசவுரிமையினையும், கொடுமையில்லாத அமைச்சர் முதலியோரையும், அகன்ற நாட்டினையும், சுருங்கின அறிவினையுமுடையராய் இரந்துவந்தோர்க்கு யாம் இல்லேமென்று கூறி இல்லையென்று மறித்த கையினையுமுடையராய்,

கட்டில் - சிங்காதனமுமாம். தாயம் - உரிமைகளெல்லாவற்றையும் கூறிற்றுமாம்.

553. தம் பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர்—தம்பெயரை உலகில் நிறுத்தாமல் தம்முடனேகொண்டு பொன்றக் கெட்டுப்போன அரசர்.

554 - 6. நெடு வரை இழிதரு நீத்தம் சால் அருவி கடு வரல் கறுழி கட்கு இன் † சேயாறு வடு வாழ் எக்கர் மணலினும் பலரே—நெடிய மலையினின்றுங்குதிக்கும் பெருக்கு நிறைந்த அருவியினது கடியவரத்தினையுடைத்தாகிய பெருக்கினையுடைய கண்ணுக்கு இனிய சேயாற்றின் அறல் வீற்றிருந்த இடுமணலாகிய மணலினும்பலர்;

557. [அதனால், புகழொடும் கழிகநம் வரைந்த நாளென :] அதனால் நம் வரைந்தநாள் புகழொடும் கழிக என—ஆகையினாலே நமக்குத் தெய்வம் இத்துணைக்காலமிருவென எல்லையிட்டுவிட்ட நாள் புகழோடே கழிந்துபோவதாகவென்றுகருதி,

558. [பரந்திடங் கொடுக்கும் விசும்புதோ யுள்ளமொடு:]

பரந்து இடம் கொடுக்கும் உள்ளமொடு—கொடுத்தற் றொழிலிலே விரிந்து அதற்கே இடங்கொடுக்கும் நெஞ்சுடனே,

---

* சமயத்திருக்குமண்டபம் - யாவரும் காணுதற்கு எளியனாகி வீற்றிருக்குமண்டபம்; "சமயமண்டப நிறைந்திருந்ததிரி சங்குமைந்தன்" (அரிச்சந்திர. வேட்டஞ்செய். 16.) சீவக. 2370 - உரை.

† பன்மைக்கு ஆற்றுமணல்: (புறநா. 9, 43; சிலப். 28 : 126.)

